வந்துவிட்டார்! திகம்பர சாமியார்

# பூர்ண சந்திரோதயம்



3

வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார்

# பூர்ண சந்த்ரோதயம்

மூன்றாம் பாகம்

வடுவூர்

கே. துரைசாமி அய்யங்கார்

ஜெனரல் பப்ளிஷர்ஸ்
244, (ப. எண்.) ராமகிருஷ்ணா மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை – 600 004.

உரிமை பதிப்பு
முதற் பதிப்பு : டிசம்பர், 2004

© பதிப்பாளர்

விலை: ரூ. 130.00

மொத்த பக்கங்கள் 2+330=332

Laser Typeset by: Keerthana Laser, Madurai

Printed at: M/s. Jai Ganesh Offset Printers, Chennai - 600 004.

# பூர்ணசந்திரோதயம்

இரண்டாம் பாகம் தொடர்ச்சி .....

## 24-வது அதிகாரம்

## ஸ்திரீ ஸாகஸம்

அன்றைய பகற்பொழுது எத்தகைய புதிய சம்பவமும் இன்றி சாதாரணமாகக் கழிந்தது. பகல் போஜனம் நடந்த காலத்தில், அன்றையதினம் சாயுங்காலம் பெண்டீர் நால்வரும் வேலைக்காரிகளும் ஒன்றுகூடி அந்த நகரத்திற்குள் போய், எல்லா வேடிக்கைகளையும் பார்த்துவிட்டு, சாயுங்காலம் திரும்பி வருவது என்றும், அவர்கள் வருகிற வரையில் கலியாணசுந்தரம் அவ்விடத்தில் இருந்து, அவர்களது சாமான்களையெல்லாம் காவல் காத்திருப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. பிற்பகல் நான்கு மணி சமயமாயிற்று. பெண்டீர் நால்வரும் தங்களிடத்திருந்த சிறந்த ஆடை ஆபரணங்களை எல்லாம் பொறுக்கி அணிந்து அற்புத அலங்காரத்தோடு ஊரைச் சுற்றிப் பார்க்க ஆயத்தமாயினர். அப்போது மூத்த பெண்ணான அம்மாளு என்பவள் தனக்குத் தலைவலி வந்துவிட்டது ஆகையால் படுத்திருக்க நினைப்பதாகவும், தான் மறுநாள் சாயுங்காலம் ஊரைச் சுற்றிப் பார்க்க எண்ணுவதாகவும் கூறிப் பாசாங்கு செய்து படுத்துக்கொண்டாள். அதை உணர்ந்த கலியாணசுந்தரம் அந்தச் சம்பவத்தைப்பற்றி எவ்வித அபிப்பிராயமும் தெரிவிக்காமல் மௌனம் சாதித்தாலும், அந்த மூன்று பெண்களுள் ஒருத்தியோடு தனியாக இருந்து, தான் சம்பாஷிக்கத் தகுந்த சந்தர்ப்பம் வாய்த்ததைப் பற்றித் தனக்குள் நிரம்பவும் சந்தோஷமும் மனஎழுச்சியும் அடைந்தவனாக

உட்கார்ந்திருந்தான். அம்மாளுவையும் கலியாணசுந்தரத்தையும் தவிர, மற்ற எல்லோரும் புறப்பட்டு வெளியில் போய் விட்டனர். அதன் பிறகு கால்நாழிகை நேரம் கழிந்தது. அம்மாளு எழுந்து மறுபடியும் தன்னைப் புதுமாதிரியான ஆடை ஆபரணங்களினால் அலங்கரித்துக் கொள்ளத் தொடங்கினாள். அவளுக்குச் சுமார் இருபது வயதிருக்கும் என்பதும், அவள் மகா வசீகரமான அழகுடைய அப்ஸர ஸ்திரீபோல இருந்தாள் என்பதும் முன்னரே சொல்லப்பட்ட விஷயம். அவளது உடம்பு மாசு மறுவற்ற தந்தத் தகட்டினால் போர்த்தப் பெற்று பொன்மெருகு ஏற்றப் பெற்றது போல நிரம்பவும் தேஜோமயமாக விளங்கியது. கடலிலும் பெரிய கண்களென்று கவிகளால் சிறப்பித்துக் கூறப்பட்ட மகா அழகான அவளது அற்புத நயனங்களிரண்டிலும் அவள் அஞ்சன மை தீட்டிப் புருவ விற்களுக்கு ஐவ்வாதினால் மினுமினுப் பேற்றி, செஞ்சாந்து திலகம் அணிந்திருந்ததன்றி வாயில் வாசனைத் தாம்பூலம் அணிந்திருந்ததால், அவளது சிவந்த அதரங்கள் கனிந்து நைந்து இளகி அமிர்தரஸம் ஊற்றெடுத்த நிலைமையில் இருந்தன. அவளது அழகிய சிரத்தில் அபாரமாக வளர்ந்து செழித்திருந்த கருங்கூந்தலை அவள் அற்புதமாகப் பின்னித் தேருருளை போலப் பின்புறத்தில் உருட்டி விட்டு அதன்மேல் ரோஜா மலரையும் ஜாதி மலரையும் மிதமாக அணிந்திருந்தாள். ஆனாலும், அந்த அலங்காரம் தேவர்களும் கண்டு காமாந்த காரங்கொண்டு நெடுமூச் செறியத்தக்க மகா விசேஷக் காட்சியாக இருந்தது. அவள் நல்ல பக்குவகாலத்துப் பெண்ணாதலால், அவளது முகம்முதல் நகம் வரையிலுள்ள ஒவ்வோர் அங்கமும் அதிகம் குறைவு என்ற எப்படிப்பட்ட ஏச்சுக்கும் இடமின்றி சாமுத்திரிகா லக்ஷணப்படி அமைந்து செழித்து அழகும் இனிமையும் முதிர்ந்து கனிந்து இன்பக் களஞ்சியமாக விளங்கியது. அவள் அணிந்திருந்த மேகவர்ணப் பட்டாடைகள் மகா துல்லியமான மெல்லிய பட்டும், ஜரிகைப் பூக்களும்

நிறைந்திருந்தன ஆகையாலும், அந்த ஆடைகள் இலேசாக இருந்தமையாலும், ஒட்டியாணம், வங்கி முதலியவற்றின் உதவியாலும், அவளது உடம்போடு உடம்பாக ஒட்டிக் கொண்டிருந்தமையாலும், அவளது அங்கத்தின் அமைப்பும் உயர்வு தாழ்வுகளும், கரவுசரிவுகளும் அப்படியப் படியே எடுப்பாக வெளியில் தெரிந்தன. ஆகவே, அவள் அணிந்திருந்த அற்புத ஆடைகள் அவளது மேனியை மறைப்பதை விட்டு அதன் சிறப்புகளையெல்லாம் நன்றாக வெளியிட்டு விளம்பரப்படுத்துவனபோல் இருந்தன. அவளது ஒவ்வோர் அங்கமும் ஒவ்வோர் அலங்காரமும் காண்போரினது மனதில் ஆயிரம் மோகன அஸ்திரங்களைச் சொரிந்து அவர்கள் மீளா விதத்தில் விரகநோய் கொண்டு அவளை நினைத்து நைந்து உருகித் தவிக்கும்படி செய்தன. அதோடு, அவள் காட்டிய நாணமும், மடமும், கண், புருவம் அதரம் முதலியவற்றின் விஷமங்களும், இதர ஸாகஸங்களும் ஒன்று கூடி, அவளைப் படைத்த கடவுளையும் ஒருநொடியில் வெல்லக் கூடிய அபார மனமோகன சக்தியாக விளங்கின. ஈரேழு பதினான்கு லோகங்களையும் வெல்லத்தக்க மோகன அவதாரமோ எனத் தோன்றிய அம்மாளு என்ற கட்டழகி தாம்பூலம் அணிந்து பழுத்துச் சிவந்து நைந்து இருந்த தனது அதரங்களை மலர்த்திப் புன்னகை செய்தவண்ணம் கலியாணசுந்தரம் இருந்த விடுதிக்குள் நுழைந்து, நிரம்பவும் வசீகரமாக நாணிக் கோணி பயமும், பக்தியும், பணிவும் தோன்ற வந்து நிற்கவே, அதைக்கண்ட நமது கலியாணசுந்தரத்திற்கு ஒரே நொடியில் உண்மை விளங்கி விட்டது. ஈசுவரனால் அளிக்கப்பட்ட அவ்வளவு அருமையான சிறப்புகளையும் கட்டழகையும் அந்தப்பெண் நல்ல வழியில் பயன்படுத்தாமல் தனது கற்பை இழந்து வெட்கத்தை விட்டு அப்படிப்பட்ட இழிசெயலில் இறங்குகிறாளே என்ற வேதனையும் அருவருப்பும் கொண்ட கலியாணசுந்தரம் தனது மனநிலைமையை வெளிப்படுத்தாமல் அடக்கிக்கொண்டு

ஒன்றையும் அறியாத குழந்தைபோல நிச்சலனமான முகத் தோற்றத்தோடு உட்கார்ந்திருந்தான். அவ்வளவுதூரம் துணிவு அடைந்திருந்த அந்தப் பெண்களைத் தான் திருத்தி நல்வழிப்படுத்த நினைப்பது சிறிதும் பலியாத முயற்சி என்ற எண்ணம் அவனது மனதில் தோன்ற ஆரம்பித்தது. ஆகையால் அவ்வளவோடு தான் அவர்களைவிட்டு விலகிக் கொள்ளலாமா என்ற நினைவும் தோன்றியது. ஆனாலும், சிறிது நேரத்தில் அவர்களது விஷயத்தில் தயாளமும் இரக்கமும் தோன்றி, அவனது மனதை இளக்கின ஆகையாலும், தான் அவர்களது சகோதரியான சிவபாக்கியத்திற்குச் செய்திருந்த வாக்குறுதியின் நினைவு தலைகாட்டியது ஆகையாலும், அதற்குமேல் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கலாம் என்று அவன் பொறுமையாக உட்கார்ந்திருந்தான். சிறிது தூரத்தில் நின்றபடி தனது மனத்தின் காம விகாரத்தையும், நெகிழ்வையும் தவிப்பையும் தனது கண்களின் வழியாக வெளிப்படுத்தி, நிரம்பவும் பரிதாபகரமான முகத்தோற்றத்தோடு அவனை உற்றுப் பார்த்தவண்ணம் நாணித் தயங்கி அம்மாளுவும் நிற்க சிறிது நேரம் கழிந்தது. யார் என்ன பேசுவதென்பது நிச்சயப்படாமையால், இருவரும் அரைக்கால் நாழிகை சாவகாசம் வரையில் மௌனம் சாதித்தனர். அதற்குள் கலியாணசுந்தரம் ஒருவாறு துணிவடைந்தவனாய் நிமிர்ந்து மிகுந்த இரக்கத்தோடு அவளைப்பார்த்து, ''அம்மாளு! நீ தலைவலியினால் அவஸ்தைப் படுவதாகக் கேள்வி யுற்றேன். ஆனால், உன்னுடைய முகத்தைப் பார்த்தால், தலைவலி நின்று போய்விட்டதாகத் தோன்றுகிறது. அதைப்பற்றி நான் சந்தோஷம் அடைகிறேன். அதுவுமன்றி, நான் உன்னோடு ஒரு விஷயத்தைப் பற்றித் தனியாக இருந்து பேச நினைத்தேன். அதற்கும் அனுகூலமாக நீயே இப்போது இங்கே வந்ததைப் பற்றி நான் நிரம்பவும் அதிக சந்தோஷம் அடைகிறேன்'' என்றான். எதிர்பாராத அவனது சொற்களைக் கேட்ட அம்மாளு அளவற்ற குதூகலமும் ஆனந்தமும் அடைந்தாள்.

ஆசையினாலும் ஆவலினாலும் அவளது ஹிருதயம் தடதடவென்று அடித்துக் கொண்டது. தான் அவனை நினைத்து விரகவேதனைப்பட்டு உருகிக் கருகுவதைப்போல அவனும் தன்மேல் காதல் கொண்டு தன்னிடம் அதை வெளியிட விரும்புகிறான் என்று நினைத்துக்கொண்ட அம்மாளு தான் எளிதில் வெற்றி பெறுவது நிச்சயம் என்று உடனே எண்ணிக் கொண்டாள். அவளது உடம்பு உச்சி முதல் உள்ளங்கால் வரையில் தென்றல் காற்றில் அசையும் மாந்தளிர் போல நடுங்குகிறது. மார்பு விம்மி விம்மி தணிகிறது. அடிக்கடி நெடுமூச்சு உண்டாகிறது. கைகால்களும் மற்ற அங்கங்களும் கட்டிலடங்காமல் பதறிப் பறக்கின்றன. அந்த நிலைமையிலும் அந்த வடிவழகி, அவனை நோக்கி ''ஆகா! அப்படியானால் என்னுடைய பாக்கியமே பாக்கியம்! கும்பிடப் போன தெய்வம் குறுக்கிட்டு வரம்கொடுத்ததுபோல, என் எண்ணம் வெகுசுலபத்தில் முடிவடையப் போவதைக் காண என் மனம் பூரித்துப் பரவசமடைகிறது. இடமும் சந்தர்ப்பமும் ஏற்றதாகவே இருக்கின்றன. நம்முடைய மனிதர் எல்லோரும் திரும்பிவர சாயுங்காலம் வரையில் பிடிக்கும். அதற்குள் நாம் சுயேச்சையாக இருக்கலாம்'' என்றாள்.

அவளது சொற்கள் ஒவ்வொன்றும் ஆயிரம் ஈட்டிகளால் குத்துவதுபோல அவனது செவிகளில் நுழைந்து அவனது மனதைப் புண்படுத்தின. அவன் நிரம்பவும் விசனித்துக் கலங்கினவனாய் அவளை நோக்கி, ''அம்மாளு! உன் விஷயத்தில் என் மனம் படும்பாட்டை நான் எப்படி வெளியிடப் போகிறேன்!'' என்று கூறிச்சிறிது நிறுத்தினான்.

உடனே அம்மாளு கரைகடந்த மகிழ்ச்சியும் வசீகரமான புன்னகையும் கொண்டு இரண்டோரடி நடந்து அவனிடம் நெருங்கி வந்து, ''பரஸ்பரம் என் மனமும் அப்படியேதான் உங்களைக் கண்ட முதல் இதுவரையில் வதைபட்டுக்கொண்டு இருக்கிறது. நான் இப்போது இங்கே வந்து உங்களோடு

பேசுகிறவரையில் என் மனம் தவித்த தவிப்பும் அடைந்த ஆவலும் இவ்வளவு அவ்வளவென்று சொல்ல முடியாது. இருந்தாலும் பரவாயில்லை. இரண்டு மனசும் ஒத்து ஒன்றுபட்டு போனபிறகு, நாம் இனியும் விசனப் பட்டு நடந்ததை எல்லாம் நினைத்து வருந்தி, இப்போது அனுபவிக்கப் போகும் சந்தோஷத்தை ஏன் குறைத்துக் கொள்ள வேண்டும்? எப்போதும் இப்படிக் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் வஸ்துவினிடத்தில் தான் ருசி அதிகம்'' என்றாள்.

அந்த வார்த்தைகள் நமது உத்தம புருஷனுக்குக் கன்னகடூரமாக இருந்தன. அவன் நிரம்பவும் இரக்கமான பார்வையாக அவளைப் பார்த்து, ''அம்மாளு! நான் சொன்ன வார்த்தைகளின் கருத்தை நீ சரியானபடி தெரிந்து கொண்டிருந்தால் இப்படிப் பேசமாட்டாய்; நான் உங்களோடு பழக்கம் செய்துகொண்ட முதல் இதுவரையில் நான் உங்களிடத்தில் ஒரு விஷயத்தை மறைத்துக் கபடமாக நடந்து வந்திருக்கிறேன். ஆனால், என் உண்மையான நோக்கம் என்னவென்பதை வெளியிட வேண்டிய காலம் சமீபித்து விட்டது என்று நினைக்கிறேன்; நான் வெளியிடப்போகும் விஷயத்தை நீ விளையாட்டாக மதிக்காமல், மகா விபரீதமானதாக எண்ண வேண்டும்'' என்றான்.

அவனது சொல்லின் கருத்தை உள்ளபடி அறிந்து கொள்ள மாட்டாமல் திகைப்பும் கலக்கமும் கொண்டு தத்தளித்த அம்மாளு, ''நமக்குள் அப்படிப்பட்ட விபரீதமான விஷயம் என்ன இருக்கப் போகிறது? அப்படி ஏதாவது இருந்தாலும், அதை வெளியிட இது சரியான சமயமல்ல. இப்போது என் மனம் நாடி இருப்பது எதுவோ அதைத்தவிர, மற்ற எதிலும் என் மனம் இப்போது செல்லத் தயாராக இல்லை'' என்று கூறி, அவனை நோக்கி விஷமமாகக் கண் சிமிட்டினாள்.

**கலியாணசுந்தரம்:-** உன் தங்கை சிவபாக்கியத்தை நான் சந்தித்தேன். அந்தச் சம்பந்தமாக நான் சில வார்த்தைகள்

சொல்லப் பிரியப்படுகிறேன். அதைக்கேட்க, உன் மனமும் ஆசைப்படும் என்பது நிச்சயம்.

அம்மாளு:- (திடுக்கிட்டு அடக்கமுடியாத வியப்படைந்து) என்ன! என்ன!என் தங்கை சிவபாக்கியத்தையா நீங்கள் கண்டீர்கள்?

கலியாண:- ஆம்; உண்மையாகவே நான் அவளைக் கண்டேன். அவள் எல்லா விஷயங்களையும் என்னிடம் வெளியிட்டு விட்டாள். உங்களைப் பற்றிய சகலமான ரகசியங்களும் எனக்குத் தெரியும். நான் செஞ்சிக்கோட்டையில் உங்களைக் கண்டு உங்களோடு பழக்கம் செய்துகொண்டு இந்த ஊர்வரையில் உங்களோடு வந்தது தற்செயலாக நடந்த சம்பவமல்ல. நீயும் உன்னுடைய தங்கைகள் இருவரும் செய்ய உத்தேசித்துப்போகும் விபரீதக் காரியத்தினால், உங்களுக்கு எல்லாம் எப்படிப்பட்ட பெருத்த பாவமும், என்றைக்கும் அழியாத பழிப்பும், இழிவும் ஏற்படும் என்பதை உங்களுக்குத் தெரிவித்து அப்படிப்பட்ட துன்மார்க்கத்தில் நீங்கள் செல்லாமல் தடுத்து எச்சரிக்கும் கருத்தோடு நான் வந்து வேண்டுமென்று உங்களோடு பழக்கம் செய்து கொண்டு இவ்வளவு தூரம் வந்திருக்கிறேனே அன்றி வேறல்ல. உங்கள் விஷயத்தில் எள்ளளவும் தீங்கு நினைக்காத ஒரு பதிவிரதா சிரோன்மணியின் பெயரையும் இல்லற வாழ்க்கையையும் அடியோடு கெடுத்து, ஆயிசுகால பரியந்தம் அந்த லலிதகுமாரி தேவி ஆறாத் துயரத்தில் ஆழ்ந்து அழிந்து போகத்தக்க காரியத்தை நீங்கள் செய்வதற்கு எவ்வித நியாயமும் இல்லை என்பது கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், உனக்கே நன்றாக விளங்கும். நான் அதிகமாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதில்லை'' என்றான்.

அவனது சொற்களைக் கேட்கவே, அம்மாளுவினது உடம்பு உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் கிடுகிடென்று நடுங்கியது. கணக்கிலடங்காத அபரிமிதமான வியப்பும்,

திகைப்பும், திகிலும் எழுந்து, அவளது மனத்தில் அதுவரையில் கொந்தளித்தெழுந்த காமாந்தகாரத்தை ஒரே நொடியில் விலக்கி, அவளது உணர்வைப் பிடித்து வலுவாகக் கவர்ந்து கொண்டன. அவள் தன்னை மறந்துவாய்விட்டு, "என்ன ஆச்சரியம்! அந்த மோசக்காரச் சிறுக்கி ரகசியத்தை எல்லாம் வெளியிட்டு விட்டாளா! அவள் இப்போது எங்கே இருக்கிறாள்? நீங்கள் அவளை எப்போது எவ்விடத்தில் கண்டது?" என்று ஆவலோடு வினவினாள்.

*கலியாண:-* அவள் உங்களுடைய வீட்டைவிட்டுப் புறப்பட்ட தினத்துக்கு மறுநாளைக்கு மறுநாள் இரவில் கருந்தாட்டங் குடியிலிருந்து தஞ்சாவூருக்கு வரும் வழியில் அவளை நான் கண்டேன். அவள் இப்போது பத்திரமான ஓர் இடத்தில் சௌகரியமாகவும், தக்க மனிதர்களுடைய பாதுகாப்பிலும் இருக்கிறாள். நான் இதற்கு முன் உங்களோடு பழகிய மனிதனல்ல. ஆனாலும், நான் உங்களோடு பழகும் இந்த இரண்டு தினமாக, என்னுடைய நாணயத்திலாவது நடத்தையிலாவது ஏதாவது தவறு இருப்பதாக நீ கண்டதுண்டா? இல்லையென்றே நான் துணிந்து சொல்லக் கூடும். நான் உலக அநுபோகம் இல்லாத சிறியவன் என்பது உண்மையானாலும், இந்த விஷயத்தில் எப்படியாவது முயன்று நீங்கள் செய்ய உத்தேசிக்கும் மகா கொடுமையான காரியம் முற்றிலும் அக்கிரமமானது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளச் செய்ய வேண்டும் என்ற எண்ணம், தடுக்கமுடியாமல் என்னைத் தூண்டிக் கொண்டே இருப்பதால், நான் துணிந்து இந்தக் காரியத்தில் இறங்கி இவ்வளவு தூரம் பிரயாணம் செய்து கொண்டு வந்தது. ஆகையால், நீ நன்றாக, ஆற அமர யோசித்துப் பார்க்க வேண்டும். நீங்கள் இந்த அக்கிரமத்தில் இறங்குவது தருமமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த இளவரசியும் உங்களைப் போல ஒரு பெண்பால். அந்த அம்மாளின்மேல் அபாண்டமான பழியை நீங்கள்

கற்பித்து, அவளுடைய வாழ்க்கையைக் கெடுப்பது பரம சண்டாளமான காரியம். இப்போதும் காரியம் கெட்டுப் போகவில்லை. இதிலிருந்து சுலபமாக விலகிக் கொள்ளக் கூடிய நிலைமையிலே தான் நீங்கள் இருக்கிறீர்கள். ஏதடா, யாரோ வழியில் போகிற ஓர் அன்னியன் வந்து நமக்கு இவ்வளவு தூரம் புத்தி புகட்டுகிறானே என்று நீ அலட்சியம் செய்யக் கூடாது'' என்று நிரம்பவும் உருக்கமாகவும் ஆவேசத்தோடும் கூறினான்.

*அம்மாளு:-* (முற்றிலும் குழப்பமடைந்து நடுங்கி) அப்படியானால், நீங்கள் சொல்லும் யோசனைதான் என்ன? நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்?

*கலியாண:-* இந்தச் சதியாலோசனையிலிருந்து நீ விலகிக் கொள்வாயானால், என்னுடைய சொந்தத் தங்கையின் இடத்தில் நான் எவ்வளவு வாஞ்சை வைப்பேனோ, அதைவிட அதிக வாஞ்சை உன்னிடம் வைப்பேன்.

*அம்மாளு:-* (கரைகடந்து இளகிய மனத்தினளாய்) பூ! அவ்வளவுதானா! தங்கையைப் போலத்தானா மதிப்பீர்கள்! அது ஒரு பிரமாதமான காரியமா? உங்களைப் போன்ற தமயனார் ஒருவர் வேண்டுமென்று என் மனம் ஆசைப்பட்டால் அல்லவா, நீங்கள் சொல்வது என் மனசுக்குப் பிடித்ததாக இருக்கும். நான் நாடுவது அதுவல்ல. நமக்குள் வேறுவிதமான உறவு முறைமை உண்டாக்கிக் கொடுப்பதாக நீங்கள் ஒப்புக் கொள்வதாக இருந்தால், ஒருவேளை நான் உங்களுடைய பிரியப்படி நடந்து கொண்டாலும் கொள்வேன். அதைவிட்டுப் பரம ஞானிபோல, நீதி மார்க்கம் போதித்தால், அதற்கு யார்தான் இணங்கி வருவார்கள்?

*கலியாண:-* (அளவற்ற வியப்பும் பிரமிப்பும் அடைந்து) ஆகா! அம்மாளு! இந்த வார்த்தை யெல்லாம் சிறு பெண்ணான உன் வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தையா! உன்னுடைய

தங்கையான சிவபாக்கியம் என்னிடம் நடந்து கொண்ட மாதிரிக்கும், நீ இப்போது என்னிடம் நடந்து கொள்ளும் மாதிரிக்கும் எவ்வளவு பேதம் இருக்கிறது தெரியுமா? அவளைவிட வயசிலும் அனுபவத்திலும் நீ எவ்வளவோ மேலானவளாக இருந்தும், நீ இப்படி நடந்து கொள்வதையும் பேசுவதையும் காண, என் மனம் நிரம்பவும் சங்கடப்படுகிறது. நீ பேசும் வார்த்தைகளினுடைய கருத்தை அறிந்து கொள்ளாதவன் போல இனியும் நான் பாசாங்கு பண்ண முடியாது. அப்படிச் செய்தால், என் மனசு அருவருக்கத்தக்க இந்த விஷயத்தை நீ மேன்மேலும் வாயில் வைத்துப் பேசுவதற்கு நானே காரணமானவன் ஆவேன். ஆகையால், நான் ஒரே வார்த்தையில் விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். அதை மனதில் வைத்துக் கொள். என்னுடைய மனசையும் காதலையும் கவர்ந்துகொண்ட பெண் வேறொருத்தி இருக்கிறாள். அவளை நான் அதிசீக்கிரத்தில் கலியாணம் செய்து கொள்ளப் போகிறேன். அவள்மேல் வைத்த ஆசையை நான் இன்னொருத்தியின்மேல் திருப்ப என்னால் சாத்தியப் படாது. அவளுடைய நினைவும் வடிவமும் சதாகாலமும் என் மனசிலேயே இருந்து வருவதால், வேறு எந்த ஸ்திரீயையும் பார்க்கவும் கண் கூசுகிறது. அன்னிய ஸ்திரீ என்னை ஏறெடுத்துப் பார்த்தாலும் என்னைத் தொட முயன்றாலும், சகிக்க முடியாத லஜ்ஜையும் அருவருப்பும் உண்டாகின்றன. அதுவும் தவிர, நான் யாரைக் கலியாணம் செய்துகொள்ள உத்தேசித்து இருக்கிறேனோ, அவள் மகா அருமையான குணங்கள் வாய்ந்த சுத்த ஸ்வரூபிணி. நான் நற்குணமும் பரிசுத்தமான நடத்தையும் வாய்ந்தவன் என்பதை அறிந்து, அந்தக் காரணத்தினாலேயே அவள் என்னைக் கட்டிக்கொள்ள இணங்கியிருக்கிறாள். ஆகையால், நான் இப்படிப்பட்ட துர்க் குணத்தில் இறங்குகிறேன் என்ற சங்கதி அவளுக்குத் தெரிந்தால், அவளுடைய மனம் புண்படும். அதுவும் அன்றி, என் மனப்போக்கும் இப்படிப்பட்ட ஸ்திரீ நட்பை முற்றிலும்

வெறுத்ததாகவே இருக்கிறது! ஆகையால், நீ என்னிடத்தில், கொண்டுள்ள துன்மார்க்க எண்ணத்தை மாத்திரம் தயைசெய்து விலக்கிவிட வேண்டும். நீ எப்பாடு பட்டாலும் அது பலியாது.

*அம்மாளு:-* (வேடிக்கையாக நகைத்து) ஓகோ! அப்படியா சங்கதி! இது இந்த உலகத்திலேயே இல்லாத அபூர்வமான விஷயமாக இருக்கிறதே அன்றி வேறல்ல. ஸ்திரீகள்தான் பதிவிரதைகளாகவும் ஒரே ஒரு புருஷரிடத்தில் உறுதி உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும் என்று சொல்லுவார்கள். புருஷர்கள் இப்படிப் பதிவிரதா ஸ்திரீகள்போல இவ்வளவு பயபக்தியோடு நடந்து கொண்டதை நான் இதுவரையில் பார்த்ததே இல்லை. நான் உங்களைக் கலியாணம் செய்து கொள்ளவா ஆசைப்படுகிறேன்? அதுவொன்றும் இல்லை. நீங்கள் ஆசைப்படும் பெண்ணினிடத்தில் நீங்கள் உங்களுடைய பிரியத்தை எல்லாம் வைப்பதற்கும் நான் இடையூறாக இருக்கப் போகிறதில்லை. மனிதருடைய பிரியம் என்பது பணமல்ல சாமானல்ல; கொடுக்கக் கொடுக்கக் குறைந்து போகக் கூடிய வஸ்துவல்ல. உங்களுடைய மனசிலுள்ள பிரியத்தில் எனக்குக் கொஞ்சம் கொடுத்தால், அதன் பிறகு உங்களுடைய சம்சாரத்துக்குக் கொடுக்க பிரியம் இல்லாமல் போகுமோ என்று நீங்கள் பயப்படத் தேவையில்லை. ஆகையால், நீங்கள் எனக்கு மாத்திரமல்ல, இன்னும் ஆயிரம் ஸ்திரீகளுக்கு உங்களுடைய பிரியத்தைப் பங்கிட்டுக் கொடுத்தாலும், அப்போதுகூட உங்களுடைய சம்சாரம் பாதிக்கப்பட மாட்டாள். இந்த விஷயம் உங்களுக்குத் தெரியாதது அல்ல. நீங்கள் உங்களுடைய அழகினாலும் நல்ல குணத்தினாலும் என்னுடைய மனம் முழுதையும் கவர்ந்து விட்டீர்கள். நான் இரவு பகல் உங்களுடைய நினைவாகவே இருந்து உருகுகிறேன். உங்களை நான் கண்டமுதல் எனக்குச் சாப்பாடு வேப்பங்காய் ஆகிவிட்டது. தூக்கமே போய்விட்டது. இன்னம் சில தினங்கள் நான் இதே நிலைமையில் இருந்து நரகவேதனை அனுபவிப்பேன்

ஆனால், என்னுடைய பிராணன் போய்விடும் என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம். அப்படி நான் இறக்க நேர்ந்தால், அந்தப் பழிக்கும் பாவத்துக்கும் நீங்கள்தான் பாத்திரராவீர்கள் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. ஆகையால், என்னை உயிரோடு இருக்கச் சொல்வதும் இறந்து போகச் சொல்லுவதும் எல்லாம் இப்போது உங்களுடைய கையிலேதான் இருக்கின்றன. அகோரமான பெரும்புயலில் மகா பயங்கரமாகப் பொங்கி எழுந்து கொந்தளிக்கும் அலைகளில் கிடந்து கரைகாணாது தவிக்கும் ஒரு சிறிய படகு போலத் தங்களின்மீது கொண்ட ஆசையாகிய கடும் புயலில் அகப்பட்டு உழலும் இந்த ஏழைக்கு நீங்கள் அபயஸ்தம் கொடுத்துக் காப்பாற்றுவது உங்களைச் சேர்ந்த பொறுப்பு.

*கலியாண:-* (நிரம்பவும் பரிதாபமும் இரக்கமும் காட்டி அன்பாகப் பேசத் தொடங்கி) அம்மாளு! போதும்; இந்தப் பைத்தியத்தை இவ்வளவோடு மறந்துவிடு. என்னுடைய மன உறுதியை நான் ஏற்கனவே வெளியிட்டுவிட்டேன். சூரியன் தெற்கு வடக்காகப் போனாலும், நான் என்னுடைய கொள்கையிலிருந்து ஒரு நாளும் வழுவி நடக்கமாட்டேன். ஆகையால், நீ மேன்மேலும் அந்த விஷயத்தைப் பற்றிப் பேசி, என் மனதை மாற்ற முயற்சிப்பது எல்லாம் வீண்பாடே அன்றி வேறல்ல. ஆகையால், அந்தச் சங்கதியை இவ்வளவோடு நிறுத்திக் கொண்டு நான் கேட்டுக்கொண்ட விஷயத்துக்கு பதில் தெரிவி. ஒரு வழியில் நீங்கள் துன்மார்க்கத்தில் இறங்குவீர்கள் என்று நினைத்து, அதிலிருந்து உங்களை மீட்க எண்ணி நான் வந்தால், என்னையே நீங்கள் இன்னொரு விதமான துன்மார்க்கத்தில் இறக்கப் பார்ப்பது தருமமா? லலிதகுமாரி தேவியின் விஷயமாக நான் கேட்டுக் கொண்டதற்கு நீ என்ன உத்தரம் சொல்லுகிறாய்? சீக்கிரமாகச் சொல்.

*அம்மாளு:-* (புரளியாக நகைத்து) நான் கேட்டுக்கொண்ட விஷயத்துக்கு நீங்கள் திருப்திகரமான உத்தரம் சொல்லவில்லை.

அப்படி இருக்க, உங்களுடைய வார்த்தைக்கு மாத்திரம் நான் எப்படி சரியான உத்தரம் சொல்லமுடியும்? அது இல்லையானால், இதுவும் இல்லைதான்.

*கலியாண:-* அம்மாளு! நீ விஷயத்தை நன்றாக கிரகித்துக் கொள்ளாமல் அவசரப்பட்டுப் பேசுகிறாய். நீ பிரஸ்தாபிக்கும் துன்மார்க்கத்துக்கு நான் இணங்கிவராவிட்டால், எங்களுடைய சதியாலோசனையை நிறைவேற்றியே தீருவேன் என்கிறாயே? அது சரியான வாதமாகுமா? நீ அப்படிச் சொல்லிவிட்டதனாலேயே உங்களுடைய எண்ணம் பலிதமாகி விடுமா? இந்த விஷயத்தில் எவ்வளவோ பிரயாசை எடுத்துக் கொண்டு இவ்வளவு தூரம் வந்த நான் நீ சொல்வதைக் கேட்டுக்கொண்டு இப்படியே திரும்பி ஊருக்குப் போய் விடுவேன் என்று நினைக்கிறாயா? உங்களுக்கு எவ்வித இழிவாவது, துன்பமாவது நேராமல் இந்தக் காரியத்தை முடிக்க வேண்டுமென்ற தயாள எண்ணத்தோடு நான் முதன் முதலில் வந்து உங்களுக்கு விஷயத்தை எடுத்துச் சொல்ல இங்கே வந்தேனே அன்றி வேறல்ல. நீங்கள் என்னை அலட்சியம் செய்து என் வார்த்தையை உல்லங்கனம் செய்துவிட்டால், அதன்பிறகு நான் உங்களை எவ்விதத்திலும் கட்டாயப்படுத்த எனக்கு அதிகாரமில்லை. நான் உடனே புறப்பட்டு உங்களுக்கு முன்னால் பூனாவுக்குப் போய் எனக்குத் தெரிந்த சில மனிதரைக் கொண்டு லலிதகுமாரி தேவியினிடத்தில் சகலமான விஷயங்களையும் தெரிவித்து, அவளை எச்சரித்து வைக்கப் போகிறேன். அதற்குமேல் நீங்கள் போய் அவ்விடத்தில் கிடைக்கும் மரியாதையைப் பெற்றுக் கொண்டு ஊருக்குத் திரும்பிப் போகப் போகிறீர்கள். அவ்வளவோடும் இந்த விஷயம் நிற்கப் போகிறதில்லை. லலிதகுமாரி தேவி இந்தச் சதியாலோசனையின் விவரங்களை எல்லாம் தஞ்சையிலுள்ள பெரிய ராணிக்கு எழுதி அனுப்பவும் நேரும். அதனால் உன் தாயாருக்கும் உங்களுக்கும் என்னென்ன லாபநஷ்டங்கள் ஏற்படும் என்பது உனக்கே நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட

துன்பங்கள் எல்லாம் உண்டாக வேண்டுமென்ற பிரியம் உனக்கு இருக்குமானால், அதையும் சொல்லிவிடு. நான் இதற்குமேல் ஒரு வார்த்தை கூடப் பேசுகிறதில்லை. உடனே புறப்பட்டுப் போய்விடுகிறேன்.

அம்மாளு:- (திகில்கொண்டு முற்றிலும் கலங்கிக் கலகலத்துப் போய்ச் சிறிது தயங்கி நின்ற பிறகு நயமாகப் பேசத் தொடங்கி) நான் அறியாத பெண்பிள்ளை; ஏதோ தெரியாத் தனத்தினால் ஒரு வார்த்தை சொல்லிவிட்டால், அதை வைத்துக்கொண்டு நீங்கள் என்னை எவ்வளவு தூரம் பயமுறுத்தி விட்டீர்கள்! பரோபகாரம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு வந்த நீங்கள் இவ்வளவோடு திரும்பிப்போய் விடுவீர்கள் என்று நான் நினைத்தால், என்னைப் போன்ற முட்டாள் வேறே யாராவது இருப்பார்களா? அப்படி நான் நினைக்கவில்லை. இவ்வளவு அபாரமான தயாள குணம் நிறைந்த நீங்கள் எங்களுடைய விஷயத்திலும் தயாளமாகவே நடப்பீர்கள். ஆகையால், நீங்கள் பூனாவுக்குப்போய் எங்களைக் காட்டிக்கொடுக்க மாட்டீர்கள் என்ற ஒரு தைரியத்தை வைத்துக் கொண்டு நான் உங்களிடம் உரிமை பாராட்டிப் பேசினேனே அன்றி வேறொன்றுமில்லை. நான் பேசியதை மனசில் வைத்துக் கொள்ள வேண்டாம். நாங்கள் செய்ய உத்தேசித்திருக்கும் சதி ஆலோசனையை நீங்கள் நன்றாக அறிந்து கொண்டி ருக்கிறீர்கள். ஆகையால், இனி எங்களுடைய ஜெபம் சாயப் போகிறதில்லை. இருந்தாலும், நாங்கள் உங்களுக்கு ஓர் உறுதி செய்து கொடுக்கிறோம். அதற்காகவாவது நீங்கள் இணங்க வேண்டும். நாங்கள் இவ்வளவு தூரம் வந்துவிட்டோம். இனிமேலும் நாங்கள் புறப்பட்டுப் பூனாவுக்குப் போய், லலிதகுமாரிதேவியிடம் வேலையிலமர்ந்து நாணயமாக நடந்து கொள்ளுகிறோம். எங்களுடைய சதியாலோசனையை நாங்கள் நிறைவேற்றாமல் இதோடு மறந்துவிடுகிறோம். எல்லா விஷயமும் வெளியாகிவிட்டது. ஆகையால், நம்முடைய ------- நிறைவேற்ற முடியவில்லை என்று நான் என்னுடைய

தாயாருக்குக் கடிதம் எழுதியனுப்பி விடுகிறேன். இது போதுமல்லவா?

*கலியாண:-* அதுகூட என் மனசுக்குப் பிடிக்கவில்லை. நீங்கள் லலிதகுமாரி தேவியினிடம் வேலையிலமர்ந்திருப்பதே சரியல்ல. ஆகையால், நீங்கள் இப்படியே ஊருக்குத் திரும்பி விட வேண்டும்.

*அம்மாளு:-* (முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த பிரமிப்படைந்து) நீங்கள் சொல்வது நிரம்பவும் ஆச்சரியமாக இருக்கிறது! நாங்கள் வேலையில் அமர்ந்து ஒழுங்காக நடந்து கொள்ளுகிறோம் என்று நாங்கள் செய்யும் வாக்குறுதியை நீங்கள் ஒப்புக்கொள்ளாததைப் பார்த்தால் எங்களிடத்தில் உங்களுக்குக் கொஞ்சங்கூட நம்பிக்கையில்லை என்றல்லவா ஏற்படுகிறது. ஊரார் எல்லோரும் அறிய இவ்வளவு தூரம் வந்த நாங்கள் வேலையில் அமராமல் பாதிவழியில் திரும்பி எப்படி ஊருக்குப் போகிறது? ஒரு மகாராஜாவின் பட்டத்து ராணியின் தாதியாக இருப்பது என்றால் அது சாதாரணமாக எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய பதவியா? நாங்கள் எங்கள் தாயாரிடம் போய் வேலையில்லாமல் திரும்பிவந்து விட்டதாகச் சொன்னால், அவள் எங்களை வீட்டுக்குள் நுழைய விடுவாளா? எங்கள் மூவரையும் அவள் அடித்து வைது துரத்திவிடுவாளே! நீங்கள் சொன்ன நியாயங்களை எல்லாம் நாங்கள் எவ்விதமாக எடுத்துச் சொன்னாலும், அவள் அவைகளையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளவே மாட்டாளே! அப்படி அவமானமடைந்து வீட்டை விட்டு போய் நாங்கள் என்ன செய்கிறது? ஊரிலுள்ள ஜனங்கள்தான் என்ன நினைக்கமாட்டார்கள்! நாங்கள் ஏதோ அயோக்கியத் தனமான காரியம் செய்துவிட்டதனால், லலிதகுமாரி தேவி எங்களைக் கிட்டச் சேர்க்காமல் துரத்திவிட்டதாக நினைத்து ஏளனம் செய்து பழித்து விலக்குவார்களே! அதன்பிறகு நாங்கள் விமோசனம் இல்லாமல் அழிந்தல்லவா போய்விட நேரும். இதையெல்லாம் நீங்கள் நன்றாக ஆலோசித்துப் பாருங்கள்.

*கலியாண:-* நீ சொல்வது ஒருவிதத்தில் நியாயமாகத் தோன்றினாலும் நீங்கள் இனி லலிதகுமாரி தேவியிடம் வேலைக்கு அமருவதற்கு மாத்திரம் நான் இடங்கொடுக்க மாட்டேன். நீ சொல்வதைப் பார்த்தால் உன்னுடைய தாயார் மகா குரூரமான மனசுடைய மனிஷி என்பது தெரிகிறது. நீங்கள் வேலையிலமர்ந்த பிறகு, அவளுக்குக் கடிதம் எழுதி, இந்த விஷயத்தை எல்லாம் தெரிவித்து, நீங்கள் ஒழுங்காக நடந்து கொள்ளப் போவதாகவும் எழுதினால், அவள் அதை ஒப்புக் கொள்ளவே மாட்டாள். உடனே அவளே நேரில் புறப்பட்டுப் பூனாவுக்கு வந்து உங்களை அதட்டி விரட்டி வற்புறுத்துவாள். அவளுக்குப் பயந்துகொண்டு நீங்கள் அவளுடைய பிரியப்படி நடந்துகொள்ள வேண்டியிருக்கும். அதற்கெல்லாம் இடங்கொடுக்காமலிருக்க வேண்டுமானால், நீங்கள் லலித குமாரி தேவியின் பக்கத்தில் சேராமலிருப்பதே நல்லது. நீங்கள் திரும்பிப்போய் விஷயம் இப்படி இருக்கிறது என்று பக்குவமாக அவளுக்கு எடுத்துச் சொல்லுவீர்களானால், முதலில் ஒருவேளை அவள் ஆத்திரப்பட்டு உங்களைக் கண்டித்தாலும், இரண்டொரு நாளில் அவளுடைய மனம் நல்ல நிலைமைக்கு வந்துவிடும் என்பதைப் பற்றி சந்தேகமே இல்லை.

*அம்மாளு:-* (எவ்வித மறுமொழியும் சொல்ல மாட்டாதவளாய்த் தத்தளித்து ஆத்திரமடைந்து) என்ன ஐயா இது? உங்கள் விஷயத்தில் எவ்விதத் தீங்கும் நினைக்காதவர்களான எங்களிடத்தில் நீங்கள் இவ்வளவு கொடுமை பாராட்டி எங்களை ஒரு பொருட்டாக எண்ணி எங்களோடு எதிர்த்து யுத்தம் செய்ய முன்வருவது அடுக்குமா?

*கலியாண:-* அம்மாளு! நீ சொல்லும் நியாயம் அந்த லலித குமாரிதேவிக்கும் உண்டல்லவா! உங்கள் விஷயத்தில் அந்தப் பெண்ணரசி கனவில் கூடத் தீங்கு நினைத்திருக்க மாட்டாளே! அந்த அம்மாளின்மேல் நீங்கள் அக்கிரமப்போர் தொடுக்க

*என்ன நியாயம் இருக்கிறது? நீங்கள் செய்ய நினைக்கும் அக்கிரமச் சண்டையைத் தடுப்பதற்காக நான் முன் வருகிறேனே அன்றி உங்களைப்போல யாதொரு காரணமும் இல்லாமல் அநியாயச் சண்டைக்கு வரவில்லையே! - என்று அழுத்தமாகவும் உறுதியாகவும் கூறினான். அதைக்கேட்ட அம்மாளு அதற்குமேல் என்ன செய்வது என்பதையாவது, என்ன சொல்வது என்பதையாவது அறியாதவளாய்த் தத்தளித்து நெருப்பின்மீது இருப்பவள் போலத் துடிதுடித்துக் கண்ணீர்விட்டுக் கலங்கி அழுதவண்ணம் நிரம்பவும் பரிதாபகரமாகத் தனது கையைப் பிசைந்து கொண்டு ''ஐயோ! இந்த தர்மசங்கடத்துக்கு நான் என்ன செய்வேன்! நாங்கள் பூனாவுக்குப் போகக்கூடாது என்கிறீர்கள். வீட்டுக்குத் திரும்பிப் போகவும் மார்க்கம் இல்லாமல் இருக்கிறது. இந்தச் சமயத்தில் என்னுடைய தாயாரே நேரில் இங்கே இருந்தால், எல்லாப் பொறுப்பும் அவளைச் சேர்ந்ததாகிவிடும். எனக்கு இவ்வளவு கஷ்டமிருக்காது. இந்த விஷயத்தில் நான் மாத்திரம் எந்த முடிவையும் செய்வதற்கில்லை. என்னுடைய சிறிய தாயார் ஒருத்தி இருக்கிறாள். அவளும் என் தங்கைமார்களும் எதையும் ஒப்புக் கொள்ள வேண்டும். அவர்களெல்லாரும் வெளியில் போயிருக்கிறார்கள்; சாயுங்காலம் திரும்பி வரப்போகிறார்கள்; எவரும் எதிர்பார்க்காத இந்த விஷயத்தை நான் உடனே அவர்களிடம் தெரிவித்தால் அவர்களுக்கு இது ஒரு பெரிய இடி விழுந்ததுபோல இருக்கும். இருந்தாலும் நான் அவர்களுடன் கலந்து யோசனை செய்து எங்களுடைய முடிவைத் தெரிவிக்கிறேன்.*

*கலியாண:- ஓ! அப்படியே செய்யலாம். எனக்கு அவசரம் ஒன்றுமில்லை. உங்களுக்கு வேண்டிய அளவு அவகாசம் எடுத்துக்கொண்டு நன்றாக ஆழ்ந்து யோசனை செய்து முடிவைச் சொல்லுங்கள். அதுவரையில் நான் தூரவே இருக்கிறேன்; அல்லது இந்த இடத்தைவிட்டே போய்*

வேறே எந்தச் சத்திரத்திலாவது ஜாகை செய்துகொண்டிருக்கிறேன் - என்றான். அதைக்கேட்ட அம்மாளு நிரம்பவும் கிலேசமடைந்து, ''வேண்டாம்; வேண்டாம். நீங்கள் எங்களை விட்டு வேறே இடத்துக்குப் போனால், அது பார்க்கிறவர்கள் சந்தேகப்பட இடம் கொடுக்கும் . இங்கே இருக்கிறவர்கள் அதைப்பற்றி ஏதாவது வம்பு வளர்ப்பார்கள் ஆகையால், நீங்கள் எப்போதும் போல எங்களோடு கூடவே இருங்கள். நாங்கள் யோசித்து முடிவு சொல்வதற்கு நீங்கள் இங்கே இருப்பதனால், எவ்வித இடையூறும் உண்டாகாது'' என்றாள்.

உடனே கலியாணசுந்தரம் உண்மையான அன்போடும் இரக்கத்தோடும் பேசத் தொடங்கி, ''அம்மாளு! அந்த விஷயத்தில் உன்னுடைய பிரியப்படியே நான் நடந்து கொள்ளத் தடையில்லை. ஜனங்கள் உங்களைப்பற்றி வம்பு வளர்க்க, நான் இடங்கொடுக்க இஷ்டப்படவில்லை. சங்கதி இவ்வளவு தூரத்துக்கு வந்தபின்னும், நீங்கள் என்மேல் பகைமை பாராட்டாமல், முன்போல என்னை உங்களுடைய சகாப் பிரயாணியாகவே பாவித்துவர, நீங்கள் பிரியப்படுவீர்கள். ஆனால், அதை நான் சந்தோஷமாகவே ஏற்றுக்கொண்டு உங்களோடு கூடவே இருந்துவரத் தடையில்லை. அது மாத்திரமல்ல; நீங்கள் பெருத்த ஸ்தானங்களில் உத்தியோகத்தில் அமர்வதற்கு நான் இடைஞ்சலாக நிற்கும் விரோதி என்று நீங்கள் நினைக்காமல், நான் சொன்ன நியாயத்தை ஒப்புக்கொள்ளுகிறீர்கள் என்ற நல்லஅபிப்பிராயமும், உங்கள் விஷயத்தில் என் மனசில் உண்டாகும்; நீ இங்கே வந்து அதிகநேரம் ஆகிறது. மற்றவர்கள் இல்லாத காலத்தில் நாம் இவ்வளவு நேரம் இங்கே தனியாக இருப்பதை யாராவது கவனித்தால், நம்மைப்பற்றி ஏதாவது தவறான அபிப்பிராயம் கொள்வார்கள். ஆகையால், நாம் இந்த சம்பாஷணையை இவ்வளவோடு நிறுத்திக்கொள்வோம். இனி நான் வழக்கம்போல உன்னையாவது, உன் தங்கைகளையாவது உன் சின்னம்மாளை

யாவது சந்திக்கும்போது, நீங்கள் என்னிடத்தில் வழக்கம்போல அன்னியோன்னியமாக நடந்துகொள்ள வேண்டுமே அன்றி முகத்தைச் சுளித்தல் முதலிய அருவருப்புச் சின்னங்களைக் காட்டக் கூடாது'' என்றான்.

அதைக்கேட்ட அம்மாளு, அவனது பிரியத்திற்கு இணங்க ஒழுங்காக நடந்து கொள்வதாக உறுதி கூறியபின் அவ்விடத்தை விட்டு வெளிப்பட்டு வெட்கமும், துக்கமும், அழுகையும் பொங்கி எழுந்த பரம சங்கடமான நிலைமையில் தனது விடுதிக்குப் போய்ச் சேர்ந்தாள்.

அதன்பிறகு இரண்டு நாழிகை சாவகாசம் கழிய, மாலை நேரம் வந்தது. ஊர் சுற்றிப் பார்ப்பதற்காகச் சென்றிருந்த தனம், அபிராமி, முத்துலக்ஷ்மி ஆகிய மூவரும் திரும்பிவந்து சேர்ந்தனர். உடனே அம்மாளு அவர்களைத் தனிமையில் வைத்துக் கொண்டு தனக்கும் கலியாணசுந்தரத்திற்கும் நடந்த வாக்குவாதத்தின் சாராம்சத்தை எடுத்து விரிவாகக் கூற, அந்த விபரீதச் செய்தியைக் கேட்ட பெண்டீர் மூவரும் திடுக்கிட்டு திக்பிரமை கொண்டு வாயைத் திறந்து மறுமொழி சொல்ல மாட்டாத ஊமைகள் போலாயினர். அவர்களது மனதில் அபாரமான திகிலும் கலக்கமும் குடிகொள்ளலாயின. எதிர்பார்க்காத அந்தமகா விபரீதமான அபாய சமயத்தில் எப்படி நடந்து கொள்ளுகிறது என்ற குழப்பமும் திகைப்பும் கொண்டு தத்தளிக்க லாயினர். முத்துலக்ஷ்மி தாங்கள் என்ன தந்திரம் செய்யலாம் என்பதைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து விட்டாள். மற்ற இரண்டு சகோதரிகளும் கையைப் பிசைந்து கொண்டு, "இந்தச் சங்கடத்திலிருந்து நாம் எப்படித் தப்புகிறது?'' என்று அச்சத்தோடு கூறினர்.

உடனே அம்மாளு பேசத் தொடங்கி, "நாம் எந்த வழியிலும் போகமுடியாமல் இருக்கிறது. நாம் இவருடைய பேச்சை மீறிப் புறப்பட்டுப் போய்ப் பூனாவில் வேலைக்கமர்ந்தால் இவர் அங்கே வந்து லலிதகுமாரி தேவியினிடத்தில் ரகசியத்தை

வெளியிட்டு விடுவார். அவள் உடனே நம்மை வேலையினின்று விலக்கி அவமானப்படுத்தி அனுப்பிவிடுவாள். பூனாவுக்குப் போகாமல் இப்படியே திரும்பி ஊருக்குப்போனால், நம்முடைய அம்மாள் நம்மை யெல்லாம் சக்கை சக்கையாகப் பிய்த்து எறிந்து விடுவாள். இதற்கு நம்முடைய சின்னம்மாள் தான் ஏதாவது தக்க யோசனை சொல்லவேண்டும்'' என்றாள்.

அதைக்கேட்ட முத்துலக்ஷ்மியம்மாள் அம்மாளுவைக் கபடப் பார்வையாகப் பார்த்து, ''அம்மாளு! நீ சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. இந்த மனிதரோ நல்ல யௌவனப் புருஷர். இவரை வசப்படுத்துவதற்கு வழியில்லாமலா போய்விட்டது. ஆகா! எனக்கு உன்னுடைய யௌவனப் பருவமும் முகத்தின் வசீகரமும் இப்போது உண்டாகுமானால், இந்த மனிதரை ஒரு நொடியில் என்னுடைய வசப்படுத்திவிடு வேன்'' என்று கூறினாள்.

அதைக்கேட்ட அம்மாளு சகிக்க இயலாத லஜ்ஜையும் அவனமானமும் அடைந்தவளாய்க் கீழே குனிந்து, ''அதெல்லாம் இந்த மனிதரிடம் பலிக்கவே இல்லை. நான் இதுவரையில் சும்மா இருந்தேன் என்று நினைக்க வேண்டாம். நான் என்னால் ஆன ஸாகஸங்களை எல்லாம் செய்து பார்த்துவிட்டேன். அவர் கொஞ்சமும் வழிக்கு வருவதாகத் தோன்றவில்லை. நானும் எத்தனையோ ஆண்பிள்ளைகளைக் கண்டிருக்கிறேன். இப்பேர்ப்பட்ட அழுத்தமான மனமுடைய யௌவனப் புருஷரை நான் இதுவரையில் பார்த்ததே இல்லை'' என்றாள்.

அதைக்கேட்ட முத்துலக்ஷ்மி உடனே உண்மையைக் கிரகித்துக் கொண்டவளாய், ''ஓகோ! அப்படியா சங்கதி! இப்போது தான் உண்மை தெரிகிறது! இருக்கட்டும். நாமாக வேறு எந்தக் காரியத்தையும் செய்வது சரியல்ல. நீ ஒரு காரியம் செய். உடனே நீ உங்களுடைய அம்மாளுக்கு ஒரு கடிதம் எழுது. ந்த வர்த்தமானங்களை எல்லாம் அதில் சுருக்கமாகச்

சொல்லி, அவளுடைய யோசனைப்படி நடந்துகொள்ளுவதாகவும், அவளுடைய மறுமொழி வருகிறவரையில் இந்த ஊரிலேயே இருப்பதாகவும் எழுது. அதற்குள் நான்போய் இந்தச் சத்திரத்தின் மணியக்காரரைக் கண்டு உடனே தஞ்சைக்கு ஒரு கடிதம் எடுத்துப்போக ஓர் ஆள் வேண்டுமென்றும், அவன் குதிரை மேல் சவாரி செய்து கொண்டு அதிசீக்கிரமாகப் போய் வரவேண்டுமென்றும் சொல்லி அதற்கு ஏற்பாடு செய்து கொண்டு வருகிறேன்'' என்றாள்.

அம்மாளு:- நாம் தஞ்சைக்கு ஆளை அனுப்புகிறோம் என்று இந்த மனிதருக்குத் தெரிவதைக் காட்டிலும் தெரியாமல் இருப்பது நல்லதென்று நினைக்கிறேன்.

முத்துலக்ஷ்மியம்மாள்:- நாம் ஆளை அனுப்புவது இவருக்குத் தெரியாமல் இருக்கும்படி நான் ஏற்பாடு செய்கிறேன். நீ அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. நான் போய்விட்டு வருவதற்குள் நீ சீக்கிரமாகக் கடிதத்தை மாத்திரம் எழுதிவை- என்று கூறிவிட்டு வெளியில் போய் விட்டாள்.

அவ்வாறு அவள் வெளியில் போனவுடனே தனம் என்பவள் தனது அக்காளை நோக்கி, ''அப்படியானால் உன்னுடைய சாமர்த்தியம் எல்லாம் இவரிடம் பலிக்காமலா போய்விட்டது! இவ்வளவுதானா?'' என்றாள்.

அதைக்கேட்ட அம்மாளு மிகுந்த விசனமும் ஏமாற்றமும் தோற்றுவித்த முகத்தினராய், ''அவருடைய மனம் கல்லினாலே தான் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். இவ்வளவு பாலியப்பருவத்தில் இவர் இவ்வளவு அசாத்திய மான மனவுறுதியோடு இருப்பது மகா அருமையான காரியம். ஆனால், இவர் நம்மையெல்லாம் காதலிக்காவிட்டாலும், வேறே யாரோ ஒரு பெண்ணைக் காதலிக்கிறாராம்; அவளைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகச் சொன்னார். நாம்

எப்பாடு பட்டாலும் இவருடைய மனசைத் திருப்ப முடியாது என்பது எனக்கு நிச்சயமாக விளங்கிவிட்டது. இவர் நம்முடைய இஷ்டத்துக்கு இணங்கி வராவிட்டாலும், இவர் நம்மோடு கூட இருப்பதே ஒருவித ஆனந்தத்தை உண்டாக்குகிறது. ஆகையால், நாம் இவரோடு சண்டை போடாமல் கடைசிவரையில் இவரை நம்மோடு கூடவே அழைத்துக் கொண்டு போகவேண்டும்'' என்றாள்.

அதைக் கேட்ட தனத்தின் மனம் அப்போதும் மோக ஆவேசம் கொண்டு தவித்தது. உடம்பு கட்டிலடங்காமல் துடிதுடித்தது. அவள் தனது அக்காளை நோக்கி, ''அம்மாளு! இந்தக் காரியத்தை முடிக்க உன்னால் கூடாமல் போய்விட்டது அல்லவா? இப்போது முதல் நான் முயற்சி செய்து அவருடைய மனசை ஒருநொடியில் மாற்றி அவர் நம்மிடத்திலேயே சரணாகதியாகக் கிடக்கும்படி செய்து விடுகிறேன். அதன் பிறகு வசிய மருந்து போட்டு இவரை மயக்குவதே கடைசியான தந்திரம்'' என்றாள்.

அதைக் கேட்டும் அம்மாளுவினது மனதில் சிறிதும் நம்பிக்கை பிறக்கவில்லை. அவள் உடனே எழுந்து ஒரு காகிதத்தை எடுத்துத் தனது தாய்க்குக் கடிதம் எழுதத் துவங்கி சுமார் ஒரு நாழிகை சாவகாசத்தில் அதை முடித்தாள். அதன்பிறகு சிறிது நேரத்தில் முத்துலக்ஷ்மியம்மாள் ஒரு தூதுவனை அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தாள். அந்தத் தூதுவன் உடனே புறப்பட ஆயத்தமாய், குதிரை சவாரிக்குரிய உடைகளை அணிந்து வந்தான். அவனிடம் கடிதம் கொடுக்கப்படவே அவன் செலவு பெற்றுக்கொண்டு உடனே வெளியில் போய்விட்டான்.

அதன்பிறகு அன்றைய இராப்போஜனம் செய்து கொள்வதற்காக எல்லோரும் விடுதியை விட்டு வெளிப்பட்ட சமயத்தில் கலியாணசுந்தரம் வழக்கம்போல அவர்களோடு கலந்துகொண்டான். முத்துலக்ஷ்மியும் சகோதரிமார் மூவரும் அதற்குமுன் இருந்ததுபோல, அவ்வளவு கலகலப்பாகவும்

சந்தோஷமாகவும் நடந்துகொள்ளவில்லை. ஆனாலும், அவனிடத்தில் பழையபடி சிநேகபாவமாகவே நடந்து கொண்டனர். மறுநாள் தினமும், அந்தப் பெண்டிர் நால்வரும் சத்திரத்தை விட்டுப் புறப்பட்டு ஊருக்குள் போய், பலவிதமான விநோதக் காட்சிகளை எல்லாம் பார்த்து விட்டுத் திரும்பினர். ஆனால், அவர்களது தகரார் சம்பந்தமாக ஒரு வார்த்தைக்கூடப் பேசவில்லை. ஆனால், கலியாணசுந்தரம் ஒரு விஷயத்தை மாத்திரம் நன்றாகக் கவனித்து வந்தான். அதற்குமுன் அவனுக்குரிய பணிவிடைகளை எல்லாம் அம்மாளுவே செய்து, அவனுடன் கூடவே இருந்து ஸரஸ மொழிகள் கூறி, அவன் எள் என்பதற்குமுன் எண்ணெயாக நடந்துவருவாள். அவள் தனது உற்சாகத்தையும் குதூ கலத்தையும் இழந்து தூர விலகி இருந்தாள். ஆனால், அவளுக்குப் பதிலாக தனம் என்பவளே இப்போது அவனுக்கு அருகில் நெருங்கி அவனுக்குரிய காரியங்களை எல்லாம் நிரம்பவும் பயபக்தியோடும் உல்லாசமாகவும் செய்து கொண்டிருந்தாள். அந்த மாறுபாட்டைக் கலியாணசுந்தரம் கவனித்து, அதன் கருத்து என்னவாக இருக்கலாம் என்று தனக்குள்ளாகவே எண்ணமிட்டுக் கொண்டிருந்தான்.

அதுபோலவே மேலும் இரண்டொரு நாட்கள் கழிந்தன. அப்போதும் அம்மாளு தங்களது முடிவைக் கலியாண சுந்தரத்திற்கு வெளியிடாமலே இருந்து வந்தாள். அவனும் அதைப்பற்றிய பேச்சையே எடுக்காமல் இருந்து வந்தான். இரண்டாவது சகோதரியான தனமே அவனிடம் நெருங்கி மேல் விழுந்து அன்னியோன்னியமாகப் பழகி அவனது காரியங்களை எல்லாம் கவனித்துச் செய்து வந்தாள். மற்ற எல்லோரும் தங்களது இயற்கையான மகிழ்ச்சியையும் உல்லாச வார்த்தைகளையும் அடக்கிக்கொண்டு அதிகமாகப் பேசாமல் அநேகமாக மௌனமே சாதித்து வந்தனர். அவர்கள் தங்களது ரகசியம் அவனுக்குத்தெரிந்து போய்விட்டதே என்பதைப்பற்றி மிகுந்த துக்கமும் ஏக்கமும் கொண்டுவிட்டார்கள் என்பது,

அவர்களது அடக்கமான நடத்தையிலிருந்து தெளிவாக விளங்கியது. ஆனால், அத்தனை நாட்கள் கழிந்தும், அம்மாளு தனது முடிவை ஏன் தெரிவிக்காமல் இருக்கிறாள் என்ற யோசனை மாத்திரம் கலியாணசுந்தரத்தின் மனதிலிருந்து வந்தது. அதன் காரணத்தை அவன் உள்ளபடி தெரிந்துகொள்ள மாட்டாமல் இருந்தாலும், இரண்டாவது பெண்ணான தனம் என்பவள், தன்னை வசியப்படுத்தும் பொருட்டு அவளால் ஏன்ற சாகசக்கியங்களை எல்லாம் உபயோகித்து வருகிறாள் என்பதை மாத்திரம் அவன் உணர்ந்து கொண்டான். ஆனாலும், அவற்றையெல்லாம் அவன் கவனியாதவன்போல இருந்து, அவளது விஷமங்களுக்கு எல்லாம் தான் இடம் கொடுக்கவில்லை என்பதை நன்றாகக் காட்டிவந்தான். அது ஒரு வியாழக்கிழமை; அன்றையதினம் தபால் மூலமாக அவர்களுக்கெல்லாம் கடிதங்கள் வந்தன. கலியாணசுந்தரத் துக்கும் சில கடிதங்கள் வந்தன. அவற்றுள், அவனது ஆருயிர்க் காதலியான ஷண்முகவடிவினால் எழுதி அனுப்பப்பட்டிருந்த கடிதம் ஒன்று இருந்தது. அந்தக் கடிதத்தில் அவள் தனது க்ஷேமத்தையும், தனது அத்தை, சிவபாக்கியம் முதலிய மற்றவரது க்ஷேமத்தையும் எழுதியிருந்ததன்றி, தான் இராப்பகல் அவனது நினைவாகவே இருந்து வருவதாகவும், கலியாண சுந்தரம் எண்ணிப்போகும் காரியம் தெய்வத்தின் அருளால் பலித்து அவன் அதிசீக்கிரத்தில் திரும்பி ஊருக்கு வர வேண்டும் என்று தான் சதாகாலமும் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பதாகவும் எழுதப்பட்டிருந்தன. நமது யௌவனப் புருஷன் ஷண்முகவடிவை நேரில் கண்டவன்போல கரைகடந்த மகிழ்ச்சியும் குதூகலமும் அடைந்து அந்தக் கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் பன்முறை படித்தது அன்றி அன்றையதினம் இரவில் நெடுநேரம் வரையில் கண்விழித்து அவளுக்கு அனுப்புவதற்காக நீண்ட மறுமொழி எழுதினான். தான் அப்போதும் முத்துலக்ஷ்மி முதலியோருடன் இருப்பதாகவும் விஷயத்தைத் தான்

அவர்களிடம் பிரஸ்தாபித்து விட்டதாகவும், அவர்கள் யோசித்து முடிவு சொல்வதாக வாக்கு அளித்திருப்பதாகவும் தனது அலுவலைத் திருப்திகரமாக முடித்துக்கொண்டு தான் வெகு சீக்கிரத்தில் திரும்பி ஊருக்கு வந்து விடுவதாகவும் அவன் கடிதம் எழுதி முடித்து அதை மறுநாளைய தபாலில் அனுப்பி வைத்தான்.

அதன்பிறகு வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் கழிந்தன. அப்போதும் அம்மாளு தங்களது முடிவைத் தெரிவிக்காமல் மௌனம் சாதித்து வந்தாள். தான் அவளோடு பேசியபின் பலநாட்கள் கழிந்துவிட்டன ஆகையால், தான் அதற்குமேலும் சும்மா இராமல் அவளிடம் பேசி அவளது முடிவைக்கேட்க வேண்டும் என்று கலியாணசுந்தரம் எண்ணிக் கொண்டான். அதற்குத் தகுந்த சந்தர்ப்பம் ஒன்றும் வாய்த்தது. ஆகையால், அவன் அம்மாளுவைத் தனிமையில் கண்டு கேட்க, அவள் மறுநாள் தினம் தான் தவறாமல் தங்களது முடிவைத் தெரிவித்து விடுவதாக உறுதியாக வாக்களித்தாள். அவர்கள் ஒருவேளை அன்னத்தம்மாளுக்குக் கடிதம் அனுப்பி, அவளது மறுமொழியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ என்ற சந்தேகம் அவனது மனதில் சில தினங்களாக இருந்துவந்தன. அவள் கூறிய மறுமொழியினால், அந்த சந்தேகம் பலப்பட்டது. ஆகையால், அவன் மறுநாளினது வருகையை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருந்தான்.

அன்றையதினம் சனிக்கிழமை. ஆதலால், அந்த ஊரிலிருந்து ஒரு பிரபல நாடகக் கம்பெனியில் ஒரு சிறந்த நாடகம் நடைபெற்றது. அதைப் பார்ப்பதற்காக எல்லோரும் போய்விட்டு இரவு பதினொரு மணிக்குத் திரும்பிவந்து போஜனம் செய்து தத்தம் விடுதியை அடைந்தனர். கலியாணசுந்தரம் தனது படுக்கையை விரிக்க முயன்ற சமயத்தில் அதன் மேல் இருந்த ஒரு சிறிய கடிதம் அவனது திருஷ்டியில் பட்டது. அவன் மிகுந்த வியப்போடு அதை

எடுத்து மேல் விலாசத்தைப் பார்க்க, அது ஒரு பெண் பிள்ளையினால் அழகாகவும் முத்து முத்தாகவும் எழுதப் பட்டிருந்ததையும், அதன்மேல் விலாசத்தில் தனது பெயரே இருந்ததையும் அவள் உணர்ந்தாள்.

அன்னத்தம்மாளினது புத்திரிகள் மூவருள் எவளோ ஒருத்தியே அந்தக் கடிதத்தை எழுதி அங்கே வைத்திருக்க வேண்டுமென்ற நிச்சயம் அவனது மனதில் உண்டானது. ஆகையால், அதைப் பிரிக்காமல் எறிந்துவிடலாமா என்ற எண்ணம் தோற்றியது. ஒருவேளை அம்மாளு தனது முடிவை அப்போது வெளியிட்டிருப்பாளோ என்ற சம்சயம் தோன்றியது. ஆகையால் அவன் அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரித்துப் படிக்க, அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

கனம் ஐயா அவர்களுக்கு தனம் நிரம்பவும் வணக்கமாகச் செய்து கொள்ளும் விக்ஞாபனம்.

நானும் என் அக்காளான அம்மாளுவும் கூடிய சீக்கிரத்தில் உங்களோடு சில விஷயத்தைப் பற்றித் தனியாகப் பேச வேண்டுவது அத்தியாவசியமாக இருக்கிறது. எங்களுடைய தாயாரும், மற்றும் சிலரும் சதியாலோசனை செய்து எங்களை வற்புறுத்தி இப்படிப்பட்ட பரம சங்கடமான நிலைமையில் வைத்துவிட்டதைப் பற்றி என் மனம் படும்பாடு இவ்வளவு அவ்வளவு அல்ல. இப்படிப்பட்ட அபாயகரமான நிலைமையி லிருந்து நீங்கள் எவ்வித சுயநலமும் கருதாமலும், பரோபகாரச் சிந்தையோடும் என் அக்காளுக்குச் சொல்லிய புத்திமதியின் படி நடந்துகொள்ள வேண்டுமென்று நான் அநேகமாய் முடிவு செய்து விட்டேன். இளவரசியான லலிதகுமாரி தேவியினிடம் பணிப்பெண்ணாக இருக்கும்வேலை எனக்கு வேண்டாமென்று எழுதிவிட நான் தீர்மானித்து விட்டேன். அம்மாளுவும் அப்படியே செய்யப் போகிறாள். ஆனால், எங்களுடைய மூன்றாவது சகோதரியான அபிராமி மாத்திரம் அதற்கு இணங்கிவரவில்லை. எங்கள் சின்னம்மாளோ நாங்கள் அப்படிச்

செய்யக் கூடாதென்று ஒரே மும்முரமாக தடுத்துப் பிடிவாதம் செய்துகொண்டிருக்கிறாள். நாங்கள் இருவரும் உங்களிடம் ரகசியமாக ஏதாவது சங்கதி சொல்லி விடப் போகிறோம் என்று எங்களுடைய சின்னம்மாள் வெகு ஜாக்கிரதையாக இருந்து எங்களைக் கவனித்து வருகிறாள். நாளைய தினம் காலையில் காலை போஜனம் சாப்பிட்ட பிறகு நாங்கள் இருவரும் இந்த ஊரிலுள்ள கோவிலுக்குப்போய் வருவதாகச் சொல்லி சின்னம்மாளிடத்தில் அனுமதி பெற்றிருக்கிறோம். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு நாங்கள் உங்களிடம் பேசி உங்களுடைய புத்திமதிப்படி நடந்து கொள்ளத் தீர்மானித்திருக்கிறோம். அந்தக் கோயிலுக்குப் பக்கத்திலுள்ள பூஞ்சோலையண்டை நாங்கள் வந்திருந்து உங்களுடைய வருகையை எதிர்பார்த்திருப்போம். தயைசெய்து நீங்கள் தவறாமல் அவசியம் அங்கே வந்து எங்களுடைய சந்தேகங்களை நிவர்த்தித்து எங்களுக்குச் சரியான வழி காட்டவேண்டுமாய் நான் நிரம்பவும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்: உங்கள் அடிமை,

த ன ம்

- என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்த கலியாணசுந்தரம் அது உண்மையான கருத்தோடும் முற்றிலும் நாணயத்தோடும் எழுதப்பட்ட கடிதமாக இருக்கலாம் என்று நினைத்தான். ஆனாலும், அது கூட ஏதாவது தந்திரமாக இருக்குமோ என்ற சந்தேகமும் தோன்றிக்கொண்டிருந்தது. இருந்தாலும், உண்மை இன்னதுதான் என்பது நிச்சயமாகத் தெரிகிறவரையில் தான் எப்படிப்பட்ட தவறான எண்ணமும் கொள்வது தருமமல்ல என்று தீர்மானித்துக் கொண்ட நமது யௌவனப் புருஷன், தனம் கேட்டுக் கொண்டபடி மறுநாள் காலையில் புறப்பட்டுப் போய், கோவிலுக்குப் பக்கத்திலிருந்த சோலையில் அவளைச் சந்திக்க

வேண்டுமென்று முடிவுசெய்து கொண்டவனாய் படுத்துத் தூங்கி அன்றைய இரவைக் கழித்தான். மறுநாளாகிய ஞாயிற்றுக் கிழமையின் காலைப் பொழுது நிரம்பவும் பிரகாசமாகவும், அழகாகவும், மனோரம்மியமாகவும் இருந்தது. அந்த அழகிய பட்டணத்தைச் சுற்றிலுமிருந்த பூங்காக்களில் ரமணீயமாக மலர்ந்திருந்த ரோஜா, செண்பகம், மல்லிகை, ஜாதி மல்லிகை, மனோரஞ்சிதம் முதலிய உன்னதஜாதி மலர்களின் மனமோகன நறுமணத்தை அள்ளி எங்கும் இறைத்து எல்லோரது மனத்தையும் இன்பசாகரத்தில் ஆழ்த்திய வண்ணம் மந்தமாருதம் ஆனந்தத் தாண்டவம் ஆடிக்கொண்டிருந்தது. மாதுரியமான கனிகளைத் தின்று களிவெறி கொண்டு குதூகலமாக மாமரங்களில் வீற்றிருந்த கோகிலங்கள் தங்களது தீங்குரலமுதை அள்ளி இறைத்து தெய்வகீதம் பாடிக் கொண்டிருந்தன. எங்கு பார்த்தாலும் மங்கள முழக்கங்களும் ஆடல்களும், பாடல்களும், சங்கீதப் பயிர்ச்சியுமே மயமாக இருந்த அந்த அதிசுந்தர நகரத்தின் ராஜா சத்திரத்திலிருந்து புறப்பட்ட நமது யௌவன வீரன் தனக்கு இரு புறங்களிலும் இருந்த அற்புதக் கண்காட்சிகளை எல்லாம் கண்டுகளித்த வண்ணம் உல்லாசமாக நடந்து அரைநாழிகை நேரத்தில் அந்த ஊர்த் தேவாலயத்தை அடைந்து, அதன் பக்கத்திலிருந்த அற்புத விநோதங்களமைந்த சோலைக்குள் நுழைந்தான். பல நூற்றாண்டுகளாக வளர்ந்து முதிர்ந்து பெருத்துவிரிந்து படர்ந்து ஆகாயத்தை அளாவி நின்ற எண்ணிறந்த தருக்கள் அடர்ந்திருந்த அந்த இடம் இயற்கையிலேயே அமைந்த மணிப்பந்தல்போல இருந்தது. ஆகையால், தென்றலின் சொகுசும், கனிகளின் கமழ்வும், பறவைகளின் பாடல்களும், கிளிகளின் மழலையும், நிழல்களின் குளிர்ச்சியும் ஒன்றுகூடி அது உண்மையில் சுவர்க்க லோகமோ அல்லது பூலோகமோ என்ற ஐயத்தை உண்டாக்கின.

அப்படிப்பட்ட இன்பக் களஞ்சியமான பூஞ்சோலைக்குள் கல்யாணசுந்தரம் நுழைந்த கால்நாழிகை நேரத்திற்குள், தனம்

என்னும் வடிவழகி அவ்விடத்திற்கு வந்து நாணமும் மகிழ்ச்சியும் அழகும் வடிவெடுத்து வந்ததுபோல அவனுக்கு எதிரில் தோன்றி உலகை மயக்கவந்த மோகினிதேவி போலப் புன்முறுவல் செய்து நின்றாள். அவள் வழக்கத் திற்கு அதிகமாக மகா படாடோபமாகவும் வசீகரமாகவும் அலங்கரித்துக்கொண்டு வந்திருந்ததைக் காணவே கலியாண சுந்தரத்தின் கண்கள் அவளைப் பார்க்கவும் கூசின. ஏதோ விபரீதமான கருத்தை மனதில் வைத்துக்கொண்டு அவள் அவ்வாறு வசீகரமாக அலங்கரித்துக்கொண்டு வந்திருக்கிறாள் என்ற எண்ணம் உடனே உண்டாகிவிட்டது. அதுவுமன்றி, அவளது அக்காள் இல்லாமல், அவள் மாத்திரம் தனியாக வந்திருந்ததும் சந்தேகாஸ்பதமாகத் தோன்றியது. ஆகவே, அவளிடம் அதிகமாகப் பேச்சை வளர்க்காமல், தங்களது சம்பாஷணையைச் சுருக்கமாக முடித்துக்கொண்டு போய்விட வேண்டுமென்ற உறுதி செய்து கொண்டவனாய், அந்தச் சுந்தர புருஷன் கீழே குனிந்தபடி அவளை நோக்கி, ''என்ன தனம்! எங்கே உன்னுடைய அக்காளைக் காணோமே! நீங்கள் இரண்டு பேரும் வருவதாக அல்லவா நீ கடிதத்தில் எழுதியிருந்தாய்?'' என்று நயமாக வினவினான்.

அதைக்கேட்ட தனம் முன்னிலும் அதிக இன்பமாகவும் வசீகரமாகவும் புன்னகை செய்து, நாணிக்கோணித் தனது புருவம், கண்கள், அதரம், மார்பு, கைகள் முதலிய வில்களால் ஆயிரக்கணக்கான மன்மத பாணங்களைத் தொடுத்துக் குலுக்கிப் பிலுக்கிக் கிள்ளை போல அழகாகத் தனது வாயைத் திறந்து, ''நேற்று ராத்திரி அக்காளுக்கு வெகுநேரம் வரையில் தூக்கம் பிடிக்காமல் தவித்திருந்து அகாலத்தில் தூங்கினாள். அதனால், அவள் காலையில் எழுந்திருக்காமல் தூங்கிக்கொண்டே இருந்தாள். நான் அவளை எழுப்பி எழுப்பிப் பார்த்தேன்! அவளுடைய தூக்கம் தெளியவே இல்லை; நீங்கள் இங்கே வந்து பார்த்து எங்களைக் காணாமல் ஏமாற்றமடைந்து திரும்பி

வந்துவிடப் போகிறீர்களே என்று நினைத்து நான் தனியாகவாவது வந்து உங்களைப் பார்த்து பேசிவிட்டுப் போகலாம் என்று நினைத்து வந்தேன்'' என்று கூறி இடைகுலுக்கி முகம் மினுக்கி நகைநகைத்துப் பேசினாள்.

உடனே கலியாணசுந்தரம், ''அப்படியானால் சரிதான். இப்படிப்பட்ட பூஞ்சோலைக்குள் நாம் இருவரும் தனியாக ரகசியம் பேசிக்கொண்டிருப்பதை யாராவது காண்பாரானால், நம்மைப் பற்றித் தவறான அபிப்பிராயம் கொள்ள நேரும். ஆகையால், நாம் இவ்விடத்தில் அதிக நேரம் நிற்கக் கூடாது. விஷயத்தை சுருக்கமாகப் பேசி முடித்துக்கொண்டு நாம் சீக்கிரமாகப் போய்விட வேண்டும். எல்லாவற்றிற்கும் நாம் இன்னம் கொஞ்சம் மறைவான இடத்துக்குப்போவோம்'' என்று கூறி அவளை அழைத்துக் கொண்டு சிறிது தூரம் அப்பால் போனான்.

ஞாயிற்றுக்கிழமையாகிய அன்றையதினம் அந்த ஊரில் பெருத்த சந்தை நடைபெறுவது வழக்கம். ஆதலால், வெளியூர்களிலிருந்து வரும் ஜனங்கள் அந்தச் சோலையில் வந்து தங்கிக் காலையில் கட்டுசாதம் உண்டு, பிற்பகலில் களைப்பாறியும் போவது வழக்கம். ஆதலால், ஆங்காங்கு ஜனங்கள் காணப்பட்டனர். ஆதலால், கலியாண சுந்தரம் அந்த அழகிய மடந்தையை மறைவான ஓரிடத்திற்கு அழைத்துப்போய் வைத்துக்கொண்டு சம்பாஷிக்கத் தொடங்கி, ''தனம்! நேற்று ராத்திரி நீ அனுப்பியிருந்த கடிதத்தை நான் நிரம்பவும் கவனமாகப் படித்து மிகவும் சந்தோஷம் அடைந்தேன். இந்த உத்தியோகம் வேண்டாமென்று நீ விலகிக் கொள்ளத் தீர்மானித்து விட்டதாகவும், உன் அக்காளும் அப்படியே செய்ய இணங்கிவிட்டதாகவும் நீ எழுதியிருந்ததைப் பற்றி நான் உங்களிருவரையும் நிரம்பவும் மெச்சுகிறேன். உன் சின்னம்மாள் அப்படிச் செய்யக் கூடாதென்று பிடிவாதம் செய்கிறாள். உன் தங்கை அவளுடைய புத்திமதிப்படி தான்

நடக்க எண்ணுகிறாள் போலிருக்கிறது. இந்த விஷயத்தில் நீங்கள் என்னிடம் என்ன யோசனை கேட்க விரும்புகிறீர்கள்?'' என்றான்.

அவனது சொற்களைக் கேட்ட தனம் தனது அழகிய முகத்தை இனிமையாகவும் இளக்கமாகவும் விகசித்துப் பரிதாபகரமாக அவனது முகத்தை உற்று நோக்கி, ''உங்களுடைய கருத்து எவ்வளவு தான் பரோபகாரமானதாகவும் சௌரியம் நிரம்பிய தாகவும் இருந்தாலும், நீங்கள் ஊரைவிட்டுப் புறப்பட்ட நேரம் எங்களுக்கெல்லாம் மகா கெடுதலான நேரமென்றே நான் நினைக்கிறேன்'' என்று மிக மிக உருக்கமாகவும் துக்ககரமாகவும் கூறினாள்.

தான் சொன்னதற்குச் சம்பந்தமில்லாத வார்த்தைகளை அவள் பேசியதைக் கேட்டு முற்றிலும் வியப்பும் திகைப்பும் அடைந்த அந்த வீரப்புருஷன் அவளை நோக்கி, ''ஏன் தனம்! அப்படிச் சொல்லுகிறாய்? நான் செய்வது உங்களுக்கெல்லாம் அளவற்ற நன்மையைச் செய்யத்தக்க சிரேஷ்டமான காரியமாக இருக்க, அதை நீ கெடுதலாக எண்ணவேண்டிய காரணமென்ன?'' என்றான்.

உடனே தனம் காமவிகாரத்தினால் தவிப்பவள் போலத் தத்தளித்துத் தனது கருத்தை வெளியிட நாணுகிறவள்போல நடித்து அவனை நோக்கி இறைஞ்சிய குரலாகப் பேசத் தொடங்கி, ''நான் சொல்வதைக் கடைசிவரையில் நீங்கள் பொறுமையோடு கேட்க வேண்டுகிறேன். நீங்கள் எங்களுக்குச் செய்வது நிகரற்ற பேருபகாரம் என்பதைப் பற்றி எவ்வித சந்தேகமும் இல்லை. அதைப்பற்றி நாங்கள் அளவற்ற சந்தோஷமும் நன்றியறிதலும் கொண்டிருக்கிறோம் என்பது நிச்சயம். இருந்தாலும் என் விஷயத்தில், நீங்கள் உங்களுக்குத் தெரியாமலேயே ஒரு பெருத்த தீமை செய்துவிட்டீர்கள். உங்களை நான் என்றைய தினம் கண்டேனோ, அது முதல் என்னுடைய மனசின் நல்ல நிலைமையை நீங்கள் கெடுத்து,

அதை மீளாத துயரத்தில் ஆழ்த்திப் புண்படுத்தி விட்டீர்கள்; இந்த உலகத்தில் நான் இந்த ஜென்மத்தில் சந்தோஷமாக இருப்பேன் என்ற நம்பிக்கையே போய்விடும்படி என் விஷயத்தில் பெருத்த சதி செய்து விட்டீர்கள். என் மனசிலிருந்த பழைய எண்ணங்களை எல்லாம் போக்கடித்துப் புது மாதிரியான எண்ணங்களை எல்லாம் உண்டாக்கிவிட்டீர்கள். ஒரு பெருத்த ராஜ்யத்தின் பட்டமகிஷியான லலிதகுமாரி தேவியினிடத்தில் முக்கியப் பணிப்பெண்ணாக இருக்கப் போகிறோம் என்று நான் பெருமை பாராட்டி அதை மனதில் பாவித்து மானசீகக் கோட்டை கட்டியிருந்ததை எல்லாம் ஒரு நிமிஷத்தில் நீங்கள் இடித்துத் தகர்த்தெறிந்துவிட்டு அதற்குப் பதிலாக உங்களுடைய இன்ப வடிவத்தை என் மனசில் சதாகாலமும் கொலுவீற்றிருக்கச் செய்து விட்டீர்கள். நான் சொல்வதைக் கேட்டு ஏன் அப்படித் திடுக்கிட்டு என்னை வெறித்துப் பார்க்கிறீர்கள்? உங்கள் விஷயத்தில் சொப்பனத்தில் கூட எள்ளளவேனும் அபகாரம் செய்தறியாத இந்த அடிமையின் மேல் நீங்கள் ஏன் கோபம் கொள்ளுகிறீர்கள்? நான் சொல்வது முழுதையும் நீங்கள் பொறுமையோடு கேட்டுத்தான் ஆகவேண்டும். என்னுடைய மனசின் பாதைகளையும் உடம்பின் அவஸ்தைகளையும் நான் ஒரு நொடி நேரம் பொறுப்பதுகூட அசாத்தியமானதாக இருக்கிறது. உங்களைக் கண்ட முதல் என் அறிவு கலங்கி அடியோடு குழம்பிப் போய்விட்டது. ஆகையால், அது முதல் நான் பைத்தியம் கொண்டவள் போல இருந்து சகிக்கமுடியாத சங்கடங்களுக்கு ஆளாகிவருகிறேன். இப்படிப்பட்ட அழகு வழிந்த மன்மத ரூபத்தையும், உத்தம குணங்களையும் கண்டு யார்தான் சித்தப்பிரமை அடையாமல் மிஞ்சுவார்கள்?'' என்று நிரம்பவும் நைந்து, பாகோ, தேனோ, அமிர்தமோவென மொழிந்தாள்.

மகா விந்தையான அவளது சொற்களைக் கேட்ட கலியாண சுந்தரம் முற்றிலும் பிரமிப்பும் கலக்கமும் அடைந்தவனாய்

அவளை நோக்கி, "தனம்! போதும், போதும், நிறுத்து; இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்க, என் மனம் நாணுகிறது. நீ இவ்விதமான கருத்தோடுதான் இங்கே என்னை வரும்படி எழுதினாயா? அல்லது, உண்மையில் வேறே ஏதாவது சங்கதி பேசப் போகிறாயா? நீ என்னிடத்தில் சிற்றின்ப விஷயமாகப் பேச வந்திருந்தால், அதற்கு நான் தயாராக இல்லை. என் மனசையும் ஆசையையும் முற்றிலும் கவர்ந்து கொண்ட பெண் வேறொருத்தி இருக்கிறாள். அவளை விட்டு என் மனம் வேறே எவரையும் நாடவே இல்லை. உனக்கு மாத்திரம் என்னிடம் ஆசை உண்டாகிவிட்டால், அது போதுமா? என் மனசிலும் உன் மேல் ஆசை உண்டாகவேண்டாமா? என் மனம் உன்னை நாடவே இல்லை. ஆகையால், இந்த வார்த்தையைவிட்டு, நாம் கோரிவந்த காரியத்தைப்பற்றிப் பேசு" என்றான்.

அதைக் கேட்ட தனம் நிரம்பவும் விசனித்துக் கலங்கிக் கண்ணீர் விடுத்துச் சகிக்க இயலாத சஞ்சலம் அடைந்தவள் போலவும்,காண்போர் மனம் இளகி உருகும்படியாகவும் நைந்து உருகித் தனது கைகளைப் பிசைந்துகொண்டு, "ஐயோ! தெய்வமே! இனி நான் எப்படி உயிர் வாழப் போகிறேன்! எவராலும் சகிக்கமுடியாத இப்படிப்பட்ட பரமதுக்கத்தை நான் எப்படி சகித்திருப்பேன்! இப்படிப்பட்ட உத்தம புருஷரின் மேல் சென்று லயித்த என் மனம் இனி வேறே எந்தப் புருஷரையாவது நாடுமா? ஒருநாளுமில்லை. நான் பிரமாண மாகச் சொல்லுகிறேன்-" என்று ஏதோ உறுதிகூற முயல, அதற்குள் அவளது சங்கடமான நிலைமையைக் கண்டு இரக்கமும் கண்கலக்கமும் மனவருத்தமும் அடைந்த கலியாண சுந்தரம் இடைமறித்துப் பேசி, "தனம்! என்ன இது? அறியாத பெண்ணான நீ இப்படிப்பட்ட வார்த்தைகளை வாயில் வைத்துப் பேசுவதே தகாது. நான் இதற்கு முன் கொஞ்சமும் பழக்கமில்லாத அன்னிய மனிதன். என்னுடைய ஜாதி வேறு, உன்னுடைய ஜாதி வேறு. நீ என்னிடத்தில் இப்படிப்பட்ட

பிரஸ்தாபம் செய்வது கொஞ்சமும் ஒழுங்கேயல்ல. நீ கடைசியாக ஏதோ பிரமாணம் செய்ய ஆரம்பித்தாயே. அப்படிப்பட்ட பிரமாணம் எதையும் நான் கேட்கவே இல்லை. நீ இந்தப் பைத்தியத்தை விட்டுவிடு. உன்னுடைய கடிதத்தில் எழுதப்பட்டுள்ள விஷயங்கள் நிஜமாக இருக்கும் என்று நினைத்தல்லவா நான் இங்கே வந்தேன். நீ நடந்து கொள்ளும் மாதிரியைப் பார்த்தால் என்னை இவ்விடத்துக்கு வரவழைப்பதற்காக நீ பொய்க் கடிதம் எழுதித் தந்திரம் செய்திருக்கிறாய் என்றே எண்ண வேண்டியிருக்கிறது. அதுவுமன்றி, அம்மாளு தூங்கிக் கொண்டிருக்கிறாள் என்று நீ சொன்னதையும் என் மனம் நம்பமாட்டேன் என்கிறது. நான் சுத்த அன்னியன் என்பதை உணர்ந்தும், நீ என்னிடம் இப்படி நடந்துகொள்வதைக் காண, என் அங்கமெல்லாம் அப்படியே குன்றிப் போகிறதே'' என்று உருக்கமாகவும் உறுதியாகவும் கூறினான்.

அவனது சொற்களைக் கேட்ட தனம் வெறிகொண்டவள் போல மாறி புத்திமாறாட்டம், மயக்கம், ஆவேசம் முதலிய சின்னங்களைக் காட்டி கட்டிலடங்கா உருக்கமும் வாஞ்சையும் ததும்பிய முகத்தினளாய் மெதுவாக அவனிடம் நெருங்கித் தனது வலக்கரத்தை நீட்டி அவனது மோவாயின் கீழே கொடுத்து நயமாகக் கெஞ்சிக் கொஞ்சி, ''ஐயோ! நீங்களா அன்னியர்! ஒரு நாளும் இல்லை. என்னுடைய ஜீவகாலம் முழுதும் நான் உங்களோடு பழகினால், உங்களை நான் எவ்வளவு நன்றாக அறிந்து கொள்வேனோ, அவ்வளவு நன்றாக உங்களை நான் அறிந்து கொண்டிருக்கிறேனே! உங்களுடைய வடிவழகும், குணத்தழகும் முகத்தோற்றத்திலேயே அபாரமாக ஜ்வலித்துக் கண்டோர் மனதை காந்தம்போல ஒரு நொடியில் கவர்ந்து மதிமயங்கச் செய்யும் வல்லமை வாய்ந்திருக்கின்றன. அப்படி இருக்க, இந்த இரண்டு நாட்களில் நான் உங்களை அறிந்து கொள்ளவில்லை என்று சொல்லத்

தகுமா? கொஞ்சமும் தகாது. ஆகையால், நீங்கள் என்னை அன்னியளாக எண்ணக்கூடாது. நான் இதுவரையில் செய்ததையும் இப்போது செய்வதையும் குற்றமாக எண்ணாமல் என்பேரில் தயைபாலித்து என்னை ரக்ஷித்தருள வேண்டும். உண்மையில் பார்த்தால் குற்றம் உங்களுடையது என்றே சொல்ல வேண்டும். நீங்கள் இந்த வழியாக வந்து ஏன் என் கண்ணில் பட்டீர்கள்? எங்களோடு கூட ஏன் சகப் பிரயாணியாக வர இணங்கினீர்கள்? உங்களுடைய கட்டழகும், நற் குணங்களும் ஏன் என் மனசை மயக்கி மோகிக்கச் செய்து இவ்வளவு தூரம் பாழ்படுத்தியது? இவைகளை எல்லாம் நானாகச் செய்தேனோ? நீங்கள் சாதாரணமாக வழியில் போகும் ஒரு பிரயாணியாக இருக்க, நான் திடீரென்று உங்களிடம் வந்து இப்படிப்பட்ட பிரஸ்தாபத்தைச் செய்திருந்தால், அப்போது நீங்கள் என்னைக்கேவலம் இழிந்த குணமுடையவளாக நினைக்கவும், என்னை அருவருப்போடு விலக்கவும் நியாயம் உண்டு; உண்மையில் நடந்த காரியமோ அதுவல்ல. நாங்கள் இருந்த இடத்துக்கு நீங்களே வந்தீர்கள். மன்மதனைப் போன்ற உங்களுடைய அழகையும், மகா விஷ்ணுவைப் போன்ற கலியாண குணங்களையும் கோடி சூரியப் பிரகாசம் போல ஒரே ஜோதியாக வீசி, என்னுடைய உயிரையும், மனசையும், அறிவையும் அடியோடு கொள்ளை கொண்டுவிட்டீர்கள். நீங்கள் காலக்கிரமத்தில் சிறுகச் சிறுக என்னுடைய மனசைக் கவராமல், ஒரே நொடியில் கண்பொறி தட்டுவதுபோல, என்னை மயக்கி பிரமிக்கச் செய்து விட்டீர்கள். அப்படியிருக்க, என் மனம் உங்கள் விஷயத்தில் பிரியம் கொள்ளாதிருக்கச் சாத்தியப்படுமா? உங்கள் விஷயத்தில் என் மனசில் எழுந்து கொந்தளித்துக் கொண்டிருக்கும் காதல் தீய்க்கு ஏதாவது அளவு சொல்லமுடியுமா? ஒரு நாளும் முடியாது. அழகே உருவெடுத்தவைபோல ஜ்வலிக்கும் உங்களுடைய கண்களைக் கொண்டும், தேவாமிருதம் போல இனிக்கும் உங்களுடைய

சொல்லைக் கேட்டும், நான் உங்கள் விஷயத்தில் இப்படி இளகிப்போனது என்னுடைய குற்றமாகுமா? நீங்களே காரணபூதராக இருந்து உண்டாக்கிவிட்டதான என்னுடைய பரமசங்கடமான நிலைமையை நான் உங்களிடம் வெளியிடுவதைப்பற்றி என்னை நீங்கள் கண்டிப்பது தருமமாகுமா?'' என்று மிக மிக உருக்கமாகக் கூறி நைந்து பாகுபோல இளகிச் சோர்ந்து அப்படியே வேரற்ற மரம்போலப் பொத்தென்று தரையில் விழுந்து கோவெனக் கதறி அழ ஆரம்பித்தாள். அவளது நடலத்தையும் ஸாகஸங்களையும் கண்ட கலியாணசுந்தரத்தின் எண்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குன்றியது. சகிக்கமாட்டாத வெட்கமும், சங்கடமும், மனக் குழப்பமும் எழுந்து அவனை நிரம்பவும் கலவரத்தில் ஆழ்த்த அந்த நிலைமையில் அவன் உடனே தனது பார்வையை நாற்புறங்களிலும் திருப்பி ஆராய்ந்து பார்த்து, ஜனங்கள் எவரும் தங்களைக் கவனிக்கவில்லை என்று நிச்சயித்துக் கொண்டது சிறிதளவு ஆறுதல் உண்டாகியது. அவளது நிலைமையைக் கண்டு, அவன் உண்மையிலேயே பிரமித்துக் கலகலத்துப்போய் விட்டான். அவளது உருக்கமான சொற்களும் ஆவேசமான செய்கைகளும், மோகாந்தகரமான பார்வையும், மகா பரிதாபகாரமான தோற்றமும் ஒன்றுகூடி அவனது மனதில் ஊடுருவிப் பாய்ந்து அவனது ஹிருதயத்தைப் புண்படுத்தி விட்டன. அவன் அதிக யூகமும் புத்தி நுட்பமும் வாய்ந்தவன் ஆனாலும் உலகத்தில் மோசங்களும், வேஷங்களும், சாகசக்கியங்களும், ஏமாற்றமும், தந்திரங்களும் எந்தெந்த இடத்தில் இருக்கக் கூடுமென்பதை அவன் அவ்வளவாக அனுபவத்தில் கண்டறியாதவன். ஆகையால், அந்தப் பெண் அவ்வளவு தூரம் நடித்ததெல்லாம் அநேகமாய் உண்மையாக இருக்கும் என்றே அவன் நினைத்தான். ஆனாலும் கூத்தாடிச்சியின் வகுப்பைச் சேர்ந்தவர்கள் நாடகத்தில் வேஷம் போட்டு நடித்து நடித்துப் பழகுகிறவர்கள் ஆதலால், அதே வகுப்பைச் சேர்ந்தவர்களான அந்தப் பெண்ணும்

ஒருவேளை பொய்யாக நடிக்கிறாளோ என்ற சந்தேகமும் சொற்பமாக எழுந்து எழுந்து மறைந்துபோயிற்று. மகா பரிதாபகரமான அவளது நிலைமையைக் காண, அவனது மனம் நிரம்பவும் இரக்கமும் உருக்கமும் அடைந்தது. ஆனாலும், அவைகளை வெளியில் காட்டினால், அவளது கருத்துக்குத் தான் இணங்கி விட்டதாக அவள் நினைத்துக்கொண்டு தன்னை மேன் மேலும் வற்புறுத்துவாளோ என்ற நினைவு இன்னொரு புறத்தில் எழுந்து, அவனது உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டே இருந்தது. கடைசியாக அவன் ஒருவாறு துணிவடைந்து அவளை நோக்கி அன்பாகவும் உறுதியாகவும் பேசத் தொடங்கி, ''தனம்! என்ன இது! நீ செய்யும் காரியம் கொஞ்சமும் சரியாக இல்லையே! நான்கு பக்கங்களில் ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்கள் நம்மை ஒருவேளை கவனித்தாலும் கவனிக்கலாம். நீ இவ்வளவு தூரம் மெய்மறந்து மதியீனமாக நடந்து கொள்வாய் என்று நான் கனவிலும் நினைக்கவே இல்லை. உன்னுடைய புத்திசாலித்தனம் என்ன! சமர்த்து என்ன! நீ நடந்து கொள்ளும் மாதிரியென்ன! நீ செய்வதைக் காண என் உடம்பு குன்றிப் போகிறதே. போதும்; எழுந்திரு; நாம் உடனே புறப்பட்டு நம்முடைய ஜாகைக்குப் போவோம். நீ உன்னுடைய மனசை அடக்கிக்கொண்டு இந்த எண்ணங்களை யெல்லாம் மறந்துவிட வேண்டுமேயன்றி, இப்படி அநாவசியமாக உன் மனசையும் உடம்பையும் அலட்டிக்கொள்வதில் உபயோகமே இல்லை. கிட்டாதாயின் வெட்டென மற என்ற வாக்கியத்தை நீ கடைப்பிடித்தால், நீ நிரம்பவும் சுகம் அடைவாய்; நான் உங்களோடு இருப்பதனால் இப்படிப்பட்ட அநர்த்தங்கள் எல்லாம் நேருகின்றன என்று நீ சொல்வதால், நான் இன்றைக்கே புறப்பட்டு உங்களுடைய கண்ணில் படாதபடி வேறே இடத்துக்குப் போய்விடுகிறேன். அதன்பிறகு உன்னுடைய சங்கடமெல்லாம் படிப்படியாகச் சில தினங்களில் குறைந்து மறைந்து போவது நிச்சயம்'' என்றான்.

வேடனது அம்பினால் அடிபட்டு மரண வேதனைப்பட்டுப் புரண்டு புரண்டு தவிக்கும் மணிப்புறாவைப் போல, நமது தனம் அப்போதும் தரையில் கிடந்து தனது உடம்பை முறுக்கிக் கொண்டு கல்லென்றும் முள்ளென்றும் பாராமல் விழுந்து புரண்டு தண்ணீர் சோரவிட்டு அழுது, ''ஐயோ! என் உயிர் போய்விடும்போல இருக்கிறதே! நீங்கள் சொல்வதைக் கேட்கக் கேட்க எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போல இருக்கிறதே! உங்கள் பேரில் என் மனசில் உண்டாகியிருக்கும் மையலானது, மரணதாகமாக என்னை வதைத்துக் கொன்று என் சித்தத்தைக் கட்டி இழுத்துக்கொண்டிருக்கும் இந்த நிலைமையில் நான் உங்களை மறக்கவும், பொறுமையாக இருக்கவும் நீங்கள் போதிப்பது காரியத்தில் சாதிக்கக் கூடியதா! உங்களை நான் இனி ஒரு நொடி நேரம் விட்டுப் பிரிந்து உயிரோடிருக்க முடியுமா? உங்களுடைய பிரியமெல்லாம் வேறொரு பெண்ணின் மேல் வீழ்ந்திருப்பதாக நீங்கள் சொல்லுகிறீர்கள். அப்படியே இருக்கட்டும். அதைப்பற்றி என் மனம் சகிக்க முடியாத பொறாமை அடைந்தாலும், நான் அந்த விஷயத்தில் எப்படியாவது என் மனசை அடக்கிக் கொள்ளுகிறேன். நீங்கள் அந்தப் பெண்ணையே கலியாணம் செய்துகொண்டு சந்தோஷமாக வாழுங்கள். அதில் நான் எவ்விதத்திலும் தலையிட்டு உங்களுடைய இன்பத்தைக் குலைப்பதில்லை. உங்களுடைய ஆயிசுகாலம் முழுவதும் நீங்கள் மகாபாக்கியவதியான அந்தப் பெண்ணை ஆனந்த சாகரத்தில் ஆழ்த்தப் போகிறீர்கள். நீங்கள் ஒரே தினம் என்னோடு சந்தோஷமாக இருந்தால், அதையே நான் பெருத்த மோக்ஷபதவியாக எண்ணி அவ்வளவோடு உங்களை மறந்து விடுகிறேன். அதுகூட உங்களுக்கு நீண்ட காலமாகத் தோன்றினால், கேவலம் ஒரு நாழிகை சாவகாசம் என்னை உங்களுடைய காதலுக்கு அருகமானவளாக ஏற்றுக் கொண்டால், அதையே நான் சாயுஜ்ய பதவியாக நினைத்து, என் ஆயுசுகாலத்துக்கும் போதுமானதாக எண்ணித் திருப்தி

அடைந்து விடுவேன். என்னுடைய மனசைக் கொள்ளை கொண்டு என்னை மரண அவஸ்தையில் ஆழ்த்திய நீங்கள் இந்த அற்ப உதவியையாவது செய்து, என் உயிரைக் காப்பாற்றக் கூடாதா? என் வேதனையை எல்லாம் இன்னும் விரிவாக எடுத்துச் சொல்ல நினைத்தால், வெட்கத்தினால் என் உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் குன்றிப்போகிறது. இருந்தாலும் நான் என்னுடைய மனசின் உண்மையான நிலைமையை வெளியிட்டுச் சொல்லியே தீரவேண்டி யிருக்கிறது. எனக்குப் பதினெட்டு வயதாகிறது. இதுவரையில் எத்தனையோ யௌவனப் புருஷர்கள் என் திருஷ்டியில் பட்டிருக்கிறார்கள். அப்படி இருந்தும் என் மனசில் இது வரையில் இப்படிப்பட்ட சகிக்க முடியாத விகாரம் ஏற்பட்டதையே நான் அறியேன். உங்களைப் பார்த்த க்ஷணமே, என் மனசை ஏதோ ஒரு பெருத்த சக்தி இழுத்துப் பிடித்துக் கொண்டு என் நினைவு முழுவதையும் உங்கள்மேலே லயிக்கச் செய்திருக்கிறது; என் உடம்பு முழுதும் ஒருவித அக்கினி ஜ்வாலையில் பட்டுக் கருகி வாடித் துவள்கிறது. நான் பிறந்தது முதல் இப்படிப்பட்ட விநோதமான நோயை அனுபவித்தே அறியேன். இந்த உலகத்தில் இதுவரையில் பிறந்த எந்தப் பெண்ணும் இதுபோன்ற நூதன வியாதியை அனுபவித்தே இருக்கமாட்டாள் என்று நான் துணிந்து சொல்லுவேன். இந்த மகா கொடூரமான நோய் நொடிக்குநொடி என் உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குடித்துக்கொண்டே போகிறது. எப்போதும் உங்களுடன் கூடவே இருந்து, உங்கள் அழகைப் பார்த்துக் கொண்டிருப்பதை தவிர, வேறு ஆகாரத்திலாவது தூக்கத்திலாவது என் மனம் செல்லமாட்டேன் என்கிறது. நீங்கள் என் கண்ணில் படாத நேரத்தில் இந்த உலகமே பாழடைந்து தோன்றுகிறது. ஆகையால், நீங்கள் எப்படியாவது மனது இரங்கி இந்த ஏழையின் மேல் கருணை புரிந்து ஒரே ஒருநாள், அல்லது ஒரே ஒரு நாழிகை நேரம் என்னைத் தங்களுக்குரிய காதலியாக ஏற்றுக்கொண்டால், அதுவே என் ஆயிசுக்குப்

போதுமானது. அந்த இன்பகரமான நினைவையே நான் என் உயிர்த்தாரமாக வைத்துக்கொண்டு எப்போதும் ஆனந்தமடைந்து பிழைத்துப்போகிறேன். ஆனால், நீங்கள் ஒரே பிடிவாதமாக என்னுடைய வேண்டுகோளை மறுத்து என்னைப் புறக்கணித்து விலக்கினால், அதன்பிறகு நான் இந்த உலகத்தில் இருப்பதற்கே முடியாது. இதோ பக்கத்தில் ஒரு பெருத்த திருக்குளம் இருக்கிறது. அது இரண்டு பனைமர ஆழம் இருக்கிறது என்று இந்த ஊரிலுள்ள ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அந்த ஆழம் என்னுடைய உயிரை வாங்குவதற்கு எதேஷ்டமானது'' என்று கட்டிலடங்கா ஆவேசத்தோடும் கலவரமான தோற்றத்தோடும் கூறினாள்.

அவளது அதிமூர்க்கமான அலட்டலைப் பார்த்துக் கொடூரமான வார்த்தைகளைக் கேட்ட நமது யெளவன வீரனான கலியாணசுந்தரம் கதிகலங்கிக் கலகலத்துப்போய் நிரம்பவும் உருக்கமாக அவளைப் பார்த்து நயமாகவும் அன்பாகவும் பேசத் தொடங்கி, ''தனம்! என்ன பைத்தியம் இது! போதும், இவ்வளவோடு நிறுத்து. முதலில் நீ எழுந்திரு. யாராவது பார்க்கப் போகிறார்கள். நாம் இங்கே வந்து அதிக நேரம் ஆகிவிட்டது. நீயும் வேண்டிய வரையில் பேசிவிட்டாய். நாம் இனி ஒரு நிமிஷம் கூட இங்கே இருப்பது சரியல்ல. வா! நம்முடைய ஜாகைக்குப் போகலாம்'' என்றான்.

அவனது சொற்களைக் கேட்ட தனம் ஏமாற்றமும் விரக்தியும் அடைந்தவள்போல அத்தியந்த விசனக்குறிகள் தோற்றுவித்த முகத்தினளாய் அவனை நோக்கி, ''சரி; நான் இவ்வளவு தூரம் கெஞ்சி மன்றாடியும் உங்களுடைய மனம் இரங்கவில்லை. இவ்வளவுதான் நான் கொடுத்து வைத்தது. இனி நான் இந்த உலகில் இருப்பதில் எவ்விதச் சுகமும் இல்லை. நீங்கள் போய்விட்டு வாருங்கள். நானும் ஒரே முடிவாக இந்த உலகை விட்டே போய்விடுகிறேன். நான் இந்தத் திருக்குளத்தில் விழுந்து இறந்துபோய் விட்டேன் என்று தயை செய்து

என்னுடைய சகோதரிகளிடம் சொல்லிவிடுங்கள். அதுதான் நான் கடைசியாகத் தங்களுக்குக் கொடுக்கும் பிரயாசை'' என்று கூறிய வண்ணம் சடக்கென்று எழுந்து மான்குட்டி துள்ளிக் குதித்து ஓடுவதைப் போல ஓட்டமாக ஓடி, பக்கத்தில் இருந்த திருக்குளத்திற்கு அருகில் போய்விட்டாள். அவளது விபரீதச் செய்கையைக் கண்டு பிரமித்து என்ன செய்வது என்பதை அறியாது சிறிது நேரம் அப்படியே ஸ்தம்பித்து நின்ற கலியாணசுந்தரம், ''ஓகோ! இவள் நிஜமாகவே குளத்தில் விழுந்து விடுவாள் போல் இருக்கிறதே! ஒருவேளை பொய்யாக நடித்து என்னைப் பயமுறுத்துகிறாள் என்றல்லவா நினைத்தேன். அதோ படிகளில் இறங்குகிறாளே! ''சே! இனி நான் சும்மா இருப்பது சரியல்ல'' என்று தனக்குள் யோசனை செய்தவனாய் அவ்விடத்தை விட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ஐந்து நிமிஷ நேரத்தில் அவள் இருந்த இடத்திற்குப்போய்ச் சேர்ந்து, ''நில்லு; நில்லு; என்ன காரியம் செய்யத் துணிந்தாய்!'' என்று அன்பாக அதட்டிய வண்ணம் அவளது இடுப்பைப் பிடித்து பின்னால் இழுக்க, அவள் முற்றிலும் களைத்து மூர்ச்சித்து மெய்மறந்து போய் வேரற்ற மரம்போல அவனது மார்பில் சாய்ந்து விட்டாள். அவளது உடம்பைத் தொடுவது அவனுக்கு முற்றிலும் அருவருப்பாக இருந்ததானாலும், அந்த நிலைமையில் அவளைக் கீழே விடுத்தால், அவள் படிகளில் உருண்டு தண்ணீரில் வீழ்ந்து விடுவாள் என்ற எண்ணம் உண்டானது. ஆகையால், அவளைத் தூக்கிக் கொண்டபடி படிகளின் மேல் ஏறிப் பக்கத்திலிருந்த ஒரு மரத்தின் அடியில் பதிக்கப்பட்டிருந்த சலவைக்கல் மேடை ஒன்றின்மேல் படுக்கவைத்தான். அவளது கண்கள் மூடப்பட்டிருந்தன. உடம்பும் கைகளும் கால்களும் துவண்டு செயலற்றுக் கிடந்தன. முகம் வெளிறடைந்து அவளது மன வேதனையை நன்றாக வெளிப்படுத்தியது. அந்த மகா சங்கடமான நிலைமையில் தான் என்ன செய்வது என்பதை உணராமல், தத்தளித்து நிரம்பவும் சஞ்சலம் அடைந்தவனாய்

அவளுக்குப் பக்கத்தில் சலவைக்கல் மேடையின்மீது உட்கார்ந்தபடி கலியாணசுந்தரம் மருண்டு மருண்டு நாற்புறங்களிலும் திரும்பித் திரும்பிப் பார்த்து அன்னியர் யாராவது தங்களைக் கவனிக்கிறார்களா என்பதை ஆராய்ச்சி செய்தான். எவரும் அவ்விடத்தில் தென்படவும் இல்லை. அவர்களைப் பார்த்ததாகவும் தோன்றவில்லை. அதனால் ஒருவித ஆறுதலடைந்த அந்த யௌவனப் புருஷன் மறுபடியும் தனது பார்வையை அந்த மடந்தையின் பக்கமாகத் திருப்பினான்.

அப்போது தனம் தனது அழகிய விசாலமான கண்களை மெதுவாகத் திறந்து, வாஞ்சையும் இளக்கமும் வழிந்தோடிய பார்வையாக அவனைப் பார்த்து, ''ஆகா! இப்படியே என் உயிர் போய்விடுமானால் அது பரமாநந்தமாக இருக்குமே! அடடா! நீங்கள் ஏன் என்னை வழிமறித்து நான் குளத்தில் விழுவதைத் தடுத்து இங்கே கொண்டு வந்தீர்கள்? நீங்கள் என் மனதில் மூட்டிய பெருநெருப்பும், வாதனைகளும் ஒரே நொடியில் தொலைந்து போகுமே! நான் இந்நேரம் தண்ணீரில் விழுந்து மாண்டுபோயிருப்பேனே! அநியாயமாக நீங்கள் என்னைத் தடுத்து என் துன்பங்களை வளர்த்தலாமா! இது தருமமாகுமா?'' என்றாள்.

அதைக்கேட்ட கலியாணசுந்தரம் பரமதுக்கமும் வேதனையும் அடைந்தவனாய், நிரம்பவும் இரக்கமாக அவளைப் பார்த்து, ''அம்மா தனம்! இன்னமும் அந்தப் பேச்சை எடுத்துப் பேச எனக்குப் பிரியமில்லை. உன்னுடைய வார்த்தைகளினாலும் செய்கைகளினாலும் நீ ஏற்கெனவே என் மனசைப் புண்படுத்தி என்னை விசனக்கடலில் ஆழ்த்தி விட்டதன்றி என் மனசில் பெருத்த திகிலையும் உண்டாக்கி விட்டாய். இந்த இடத்தில் இனியும் நாம் இருப்பது சுத்தத் தவறு. ஆகையால், எழுந்திரு; நாம் உடனே புறப்பட்டு நம்முடைய ஜாகைக்குப் போய்ச் சேருவோம்'' என்று மிகவும் இறைஞ்சிக் கூறினான்.

அவள் தனது முகத்தை நிரம்பவும் விகாரமாகவும் பரிதாபகரமாகவும் தோற்றுவித்து கண்ணீர் துளிகள் மளமள வென்று உதிர, நிரம்பவும் ஏமாற்றம் அடைந்தவள்போல அவனைப் பார்த்து, ''ஆகா! என்ன உங்களுடைய மனசு! எதற்கும் இளகாத இறுகிய பாறையாக இருக்கிறதே! கேவலம் ஒரு நாழிகை நேரம் உங்களுடைய காதலுக்குப் பாத்திரமாக யோக்கியமற்றவளான நான் இவ்விடத்தை விட்டு நம்முடைய ஜாகைக்குப் போய் என்ன செய்யக் கிடக்கிறது? என்னை இப்படியே விட்டுவிடுங்கள். நான் மறுபடியும் போய்க் குளத்தில் விழுந்து இறந்துபோய் விடுகிறேன். என்னுடைய அற்ப வேண்டுகோளை நீங்கள் மறுக்கிறீர்களே! இப்படிப்பட்ட இழிவை அடைந்தும், நான் உயிர் வாழவேண்டுமா?'' என்று கூறி உருகி இளகி உட்கார்ந்து போனாள்.

கலியாணசுந்தரம் தான் என்ன செய்வது என்பதை அறியாமல் சிறிது நேரம் தயங்கியபின் தனது மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு உருக்கமாகவும் உறுதியாகவும் அவளை உற்றுநோக்கி, ''என்ன தனம்! நான் சொல்வதை நீ கேட்கமாட்டாயா? என்ன பிடிவாதம் இது? நீ பிரஸ்தாபிக்கும் காரியத்தைச் செய்ய நான், என் உயிர் போவதானாலும், இணங்கக் கூடியவனல்ல. அப்படிஇருக்க, என்னால் சாத்தியமில்லாத காரியத்தைச் செய்யும்படி நீ மேன்மேலும் என்னை வற்புறுத்துவதில் என்ன உபயோகம்? இதற்காக நீ குளத்தில் விழுந்து உயிரை விட்டு விடுவேன் என்று பிடிவாதம் செய்வது மதியீனமே அன்றி வேறல்ல. தான் விரும்பிய ஒரு புருஷன் தனக்கு இணங்கி வரவில்லை என்று இந்த உலகத்தில் இப்படி யாராவது குளத்தில் விழுந்து இறந்தது உண்டா? நீ சொல்வதும் செய்வதும் விந்தையாக இருக்கின்றனவே அன்றி வேறல்ல. எல்லாவற்றிற்கும் நாம் உடனே புறப்பட்டு நம்முடைய ஜாகைக்குப் போவோம். அங்கே போய் நீ இன்று முழுதும் நன்றாக யோசனை செய்து பார்; நாளையதினம் உன்

மனம் சரியாய்ப் போகும்; எழுந்திரு. வீண் பிடிவாதம் பண்ணாதே. நாம் வந்து நிரம்பவும் அதிக நேரமாகிவிட்டது. இனிமேல் நாம் இங்கே இருப்பது ஒழுங்கல்ல'' என்று அன்பாக வற்புறுத்திக் கூறியவண்ணம், அவளது கையைப் பிடித்து மெதுவாகத் தூக்க, அவள் தனது சாகசங்களெல்லாம் பயனற்றுப் போனதைக் கண்டு, மெதுவாக எழுந்தவளாய், ''நான் ஜாகைக்குப்போய்ச் செய்வதற்கு ஒரு வேலையும் இல்லை. நான் ஒரு நாளல்ல, என் ஆயிசுகாலம் வரையில் யோசனை செய்து பார்த்தாலும், உங்களுடைய நினைவும் வடிவமும் என் மனசைவிட்டு மாறப்போகிறதே இல்லை என்பதை நீங்கள் உறுதியாக நம்பலாம். இருந்தாலும், நாம் இங்கே தனியாக இருப்பதைப் பற்றி உங்களுடைய மனம் நிரம்பவும் சங்கடப்படுகிறது ஆகையால், அப்படி உங்களை வருத்த எனக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை. ஆகையால், நான் எழுந்து வருகிறேன். உங்களுடைய பிரியப்படி நாம் நம்முடைய ஜாகைக்குப்போகலாம். நீங்கள் இன்று பகல் முழுவதும் நன்றாக ஆழ்ந்து யோசனை செய்து, எப்படியாவது என்னுடைய வேண்டுகோளைப் பூர்த்தி செய்ய வேண்டுகிறேன். நாளைக்குக் காலையில் நீங்கள் படுக்கையிலிருந்து எழுந்திருந்தவுடனே உங்களுடைய முடிவை எனக்குத் தெரிவியுங்கள். அது எனக்கு அனுகூலமாக இருந்தால், என்னைவிட பாக்கியசாலி யாரும் இருக்கமாட்டாள். அது எனக்கு விரோதமாக இருந்தால், அதன் பிறகு நான் என்னுடைய கஷ்டங்களை எல்லாம் ஒரே நொடியில் தீர்த்துக்கொள்ள வழி தேடுகிறேன். உங்களுக்கெதிரில் நான் குளத்தில் விழுந்தால்தானே நீங்கள் என்னைத் தடுப்பீர்கள். யாருக்கும் தெரியாதபடி நான் போய், அதே சத்திரத்திலுள்ள கிணற்றில் விழுந்து என்னுடைய உயிரை விட்டுவிடுகிறேன். என்னால் உங்களுக்கு எவ்விதத் துன்பமும் இல்லாமல் போய்விடும். என்ன இருந்தாலும், நான் உங்களை நினைத்து உயிர் விடுவேன். ஆனால், அந்தப் பாவமும் பழியும் உங்களை ஒருநாளும் விடப்போகிறதில்லை. நான் உயிருக்குயிராக

மதித்துள்ள உங்களை நான் அடையாமல் போகும்படி நீங்கள் செய்தால், நீங்கள் உயிருக்கு உயிராக மதித்திருக்கும் அந்தப் பெண்ணை நீங்கள் அடைவதற்குள் உங்கள் இருவருக்கும் ஏதேனும் கஷ்டங்கள் நேர்ந்தாலும் நேரலாம். ஆகையால், நீங்கள் நன்றாகச் சிந்தித்து எப்படியாவது இந்த அடிமை பிழைத்துப்போகும்படியான மார்க்கம் செய்ய வேண்டும். நான் இறப்பதும், இருப்பதும் உங்களுடைய கையிலேதான் இருக்கிறது'' என்றுநிரம்பவும் உருக்கமாகப் பேசிய வண்ணம் நடக்க ஆரம்பித்தாள்.

அவளது சொற்களுக்கு எவ்வித மறுமொழியும் தரமாட்டாமல் தவித்தவனாய் நமது யௌவன வீரன் அவளைத் தொடர்ந்து மௌனமாகவே நடக்கலானான். அவளும் அதற்குமேல் வாய் திறந்து பேச வெட்கியும், திரும்பி அவனது முகத்தைப் பார்க்க நாணியும் நடந்தாள். தான் எண்ணிவந்த காரியம் பலியாமையால், அளவற்ற ஏமாற்றமும், அவமானமும், துயரமும் எழுந்து அவளது அழகிய முகத்தை முற்றிலும் விகாரப்படுத்தின. ஆகையால், அவள் நடைப் பிணம் போல முற்றிலும் பரிதாபகரமான தோற்றத்தோடு நடந்து முன்னே சென்றாள். கலியாணசுந்தரமோ சற்று நேரத்துக்கு முன் நடந்த மகா விபரீதமான சம்பவங்களைத் தனது மனதில் பாவித்து அவைகளிலேயே தனது முழு மனத்தையும் லயிக்க விடுத்து மெய்மறந்து உயிரற்ற பாவைபோல நடந்து சென்றான்.

அரைநாழிகை சாவகாசத்தில் இருவரும் சத்திரத்தண்டை நெருங்கினர். அப்போது கலியாணசுந்தரம் உடனே நின்றவனாய் அவளை நோக்கி, ''தனம்! நீ முன்னால் போ; நான் கொஞ்ச நேரம் பொறுத்து உள்ளே வருகிறேன். கொஞ்ச நேரத்துக்கு முன் சோலையிலும் திருக்குளத்திலும் நடந்த விஷயங்களை எல்லாம் நான் யாரிடத்திலாவது வெளியிட்டுவிடப் போகிறேன் என்ற கவலையே உனக்கு வேண்டாம். ஏற்கெனவே நீ என்னை

நினைத்து அநாவசியமானதுக்கத்தையும் மனோ விகாரத்தையும் விலைக்கு வாங்கிக்கொண்டு சங்கடப்படுகிறாய். அந்த நிலைமையில் நான் இந்த ரகசியத்தை வெளிப்படுத்தி உன்னுடைய சங்கடத்தை அதிகப்படுத்துவது சரியல்ல. அதுவுமன்றி நான் இனி சாப்பிடும்போதாவது, மற்ற சமயத்திலாவது, உங்களுடைய கண்ணில் படப் போகிறதில்லை. நீங்கள் யாரும் இனி என்னுடைய விடுதிக்கு வர வேண்டாம். எனக்கு ஆகவேண்டிய விஷயங்களை இனி நானே பார்த்துக் கொள்ளுகிறேன். உங்களுக்கும் எனக்கும் இதுவரையில் இருந்து வந்த சம்பந்தமெல்லாம் இன்றோடு தீர்ந்துபோய்விட்டதாக நீங்கள் எண்ணிக்கொள்ள வேண்டும். நீ இந்த விஷயத்தை உன்னுடைய அக்காளிடமும் சின்னம்மாளிடமும் சொல்லி, அவர்களையும் எச்சரித்து வை. லலிதகுமாரி தேவியினிடம் வேலையிலிருக்கும் விஷயமாக உன் அக்காள் எனக்குத் தெரிவிப்பதாகச் சொல்லியிருந்த விஷயத்தில் எனக்கு ஏதாவது சங்கதி தெரிவிக்க வேண்டுமானால், அதை ஒரு கடிதத்தில் எழுதி இன்று ராத்திரிக்குள் எனக்கு அனுப்பி விடுங்கள். நான் நாளையதினம் காலையில் தனியாகவே பிரயாணம் புறப்பட்டுப் பூனாவுக்குப் போகத் தீர்மானித்து விட்டேன். அதற்குள் நீங்கள் எவ்வித முடிவையும் தெரிவிக்காவிட்டால், நான் போய் லலிதகுமாரி தேவியை எச்சரித்து நீங்கள் அவள் விஷயத்தில் எவ்வித மோசமும் செய்யாமல் விழிப்பாக இருந்து பார்த்துக் கொள்ளும்படி செய்துவிட்டு நான் ஊருக்குத் திரும்பப் போகிறேன். நான் சொன்னதை எல்லாம் கவனித்துக் கேட்டுக் கொண்டாயல்லவா? சரி; நீ போ; நான் பின்னால் வருகிறேன். மனிதர்கள் பார்க்கிறார்கள்'' என்று கூறிவிட்டு சிறிது தூரம் நடந்து அப்பால் போய்விட்டான்.

அவன் சொன்ன எதிர்பாராத வார்த்தைகளெல்லாம் மகா கூர்மையான ஈட்டிகள்போல அவளது செவிகளில் சுருக்கு சுருக்கென்று குத்தின. இருந்தாலும் நடுத்தெருவில்,

அவனிடத்தில் தான் மறுபடியும் வாக்குவாதம் செய்து கொண்டிருப்பது சரியல்ல என்று நினைத்த தனம் என்னும் மடந்தை வெட்கமும், துக்கமும், அழுகையும் பொங்கியெழுந்த நிலைமையில் அவ்விடத்தை விட்டுக் குனிந்தபடி நடந்து பக்கத்திலிருந்த சத்திரத்தை அடைந்து, அதற்குள் நுழைந்து தங்களது விடுதியை அடைந்தாள். அவ்வாறு அவள் சத்திரத்திற்குள் போய் மறைந்த வரையில் தெருவில் நின்று கொண்டிருந்த கலியாணசுந்தரம், உடனே அவ்விடத்தை விட்டு, சத்திரத்தை நோக்கி நடந்து அதன் வாசற்படிக்கு வந்துசேர்ந்தான். அப்போது உட்புறத்திலிருந்து வெளிப்பட்ட ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன் நமது கலியாணசுந்தரத்தைப் பார்த்து வணங்கி, ''ஐயா! நீங்கள் இந்தச் சத்திரத்தில் இறங்கி இருப்பவர்களா?'' என்றான்.

கலியாணசுந்தரம், ''ஆம்'' என்றான். உடனே போலீஸ் அதிகாரி, ''அப்படியானால், உங்களைக் கேட்டால் சங்கதி தெரியும். தஞ்சாவூரிலிருந்து கலியாணசுந்தரம் என்று பெயர் கொண்ட ஒருவர் இங்கே வந்திறங்கி இருக்கிறாரே; அவர் யாரென்பது உங்களுக்குத் தெரியுமா?'' என்றான்.

அந்த வார்த்தையைக் கேட்ட கலியாணம் திடுக்கிட்டு மிகுந்த வியப்பும் கலக்கமும் அடைந்து யாரோ போலீஸ் உத்தியோகஸ்தர்களைப் போலத்தோன்றும் அந்த மனிதன் தன் பெயரைச் சொல்லி தன்னைத் தேட வேண்டிய காரணம் என்னவாக இருக்கலாம் என்ற சிந்தனையும் கவலையும் கொண்டவனாய், ''ஏன் அவரைத் தேடுகிறீர்? என்பெயர் தான் கலியாணசுந்தரம்; நான்தான் தஞ்சாவூரிலிருந்து வந்து இருக்கிறவன்'' என்று மறுமொழி கூறினான். உடனே அந்தப் போலீஸ் அதிகாரி, ''ஐயா அப்படியானால், நீங்கள் தயை செய்து கொஞ்சதூரம் என்னோடு கூட வரவேண்டும். இந்த நகரத்தின் போலீஸ் தலைவரான கமிஷனர் உங்களோடு ஏதோ சில அவசர சங்கதியைப் பற்றிப் பேசவேண்டும் என்று விரும்பி என்னை

அனுப்பினார். ஆகையால், நான் உள்ளேபோய் உங்களைத்தேடி விட்டு வருகிறேன். தயை செய்து நீங்கள் கொஞ்சம் அவசரமாக என்னோடு வரவேண்டும். அவர் கையோடு உங்களை அழைத்துவரச் சொன்னார்'' என்று நயமாக மறுமொழி கூறினான். அதைக்கேட்டு, நிரம்பவும் ஆயாசமடைந்த கலியாணசுந்தரம், ''எனக்கும் போலீஸ் கமிஷனருக்கும் என்ன சம்பந்தம்? எதற்காக அவர் என்னை இவ்வளவு அவசரமாக அழைக்கிறார்? என் பேரில் ஏதாவது தாவாவுண்டா?'' என்று கேட்டான்.

உடனே அந்த போலீஸ் அதிகாரி, ''உங்கள் பேரில் தாவா எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை. ஏதோ சில விஷயங்களை உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்போல இருக்கிறது. ஆனால், எனக்கு நிச்சயமாக எதுவும் தெரியவில்லை; இருந்தாலும் கெடுதலான விஷயம் ஒன்றுமிருக்காது என்று நினைக்கிறேன். ஆனால், அவர் உங்களை நிரம்பவும் அவசரமாக மாத்திரம் அழைத்து வரச் சொன்னார்'' என்று பணிவாகக் கூறினான்.

உடனே கலியாணசுந்தரம், ''அப்படியானால் நான் இதோ வருகிறேன். நான் தக்க பெரிய மனிதன் என்பதை ருஜுப்படுத்தக் கூடிய சில தஸ்தாவேஜுகள் என்னிடம் இருக்கின்றன. அவைகளை இங்கே நான் இறங்கியிருக்கிற விடுதியில் வைத்திருக்கிறேன்; நான் நேராக அங்கே போய் அவைகளை யெல்லாம் எடுத்துக்கொண்டு வருகிறேன். அதுவரையில் நீர் தயைசெய்து இப்படியே இரும். நான்போய் ஐந்து நிமிஷத்தில் வந்துவிடுகிறேன்'' என்றான்.

போலீஸ் அதிகாரி, ''அந்தச் சிரமம் உங்களுக்கு வேண்டிய தில்லை. உங்களுடைய தஸ்தாவேஜுகளெல்லாம் இதோ என்னிடத்தில் இருக்கின்றன. ஆகையால், நீங்கள் இப்படியே திரும்பி என்னோடு வரலாம்'' என்று நிதானமாக மறுமொழி கூறினான்.

அதைக்கேட்ட கலியாணசுந்தரம் சகிக்கமாட்டாத கோபமும் வியப்பும் அடைந்து, ''என்ன ஆச்சரியம்! நான் இல்லாத காலத்தில் என்னுடைய விடுதியின் பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்து என்னுடைய தஸ்தாவேஜுகளை நீர் எடுத்தீரா? அப்படி எடுக்க உமக்கு அதிகாரம் யார் கொடுத்தது?'' என்றான்.

அந்தப் போலீஸ் அதிகாரி சிறிதும் தயங்காமல், ''ஐயா! கோபித்துக் கொள்ள வேண்டாம்! நான் சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவன். சட்டத்தையும் உத்தரவுகளையும் படித்தவன். ஆகையால், சரியான அதிகாரமில்லாமல் நான் அந்தக் காரியத்தைச் செய்திருக்க மாட்டேன் என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம். போலீஸ் கமிஷனர் எனக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்தே அனுப்பினார். வேண்டுமானால் காட்டுகிறேன். என்னுடைய சிப்பந்திகளான ஜவான்கள் சிலர் எனக்கு உதவியாக வந்து அதோ பக்கத்து வீட்டுத் திண்ணையில் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் அந்த உத்தரவு இருக்கிறது. நீங்கள் என்னோடு வந்தால், அதை நான் காட்டுகிறேன். அல்லது, அதைக் காட்டினால்தான் வருவேன் என்று நீங்கள் சொன்னால், அவர்களை இவ்விடத்துக்கே வரவழைத்து அதை வாங்கிக் காட்டுகிறேன்'' என்றான்.

கலியாணசுந்தரம் முற்றிலும் குழம்பிப்போய், சிறிது நேரம் சிந்தனை செய்தான். தன்னிடம் ஏதோ விஷயங்களைச் சாதாரணமாகக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு போலீஸ் கமிஷனர் அவர்களை அனுப்பி யிருந்தால், அவர்கள் தனது தஸ்தாவேஜுகளை பலவந்தமாக அபகரிக்க மாட்டார்கள். ஆதலால், தன்மீது ஏதோ தாவா இருக்கிறது என்பதை அவன் உடனே நிச்சயப் படுத்திக் கொண்டான். தான் பிறந்த முதல் அதுகாலம் வரையில் எவ்விதக் குற்றத்தையும் செய்யவில்லை என்பதை உறுதியாக உணர்ந்தவன். ஆதலால், தன்மீது யார் எப்படிப்பட்ட

தாவாவைச் செய்திருக்கக் கூடும் என்று அவன் நினைத்துப் பார்த்ததெல்லாம் பயனற்றுப் போயிற்று. முரட்டு மனிதர்களான அந்தப் போலீஸ் சிப்பந்திகளிடம் தான் வீண் வாக்குவாதம் செய்து சஞ்சலப்பட்டுக் கொண்டு இருப்பதைவிட உடனே புறப்பட்டு நேராகக் கமிஷனரது கச்சேரிக்குப்போய் விஷயத்தைத் தெரிந்து கொள்வதே உசிதமான காரியமென்று தீர்மானித்துக் கொண்ட நமது யௌவன வீரன் அதற்குமேல் எவ்வித ஆட்சேபமும் செய்யாமல், ''சரி; நான் வருகிறேன். கமிஷனரிடம் போவோம் வாரும்'' என்று கூற, அந்த அதிகாரி அவனை அழைத்துக்கொண்டு வெளியில் நடக்கலானான். பக்கத்து வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த நான்கு போலீஸ் ஜவான்களும் வந்து அவர்களோடு சேர்ந்து கொண்டனர். உடனே அவர்கள் எல்லாரும் மேலே நடந்து சென்றனர். அவர்கள் இரண்டொரு வீதிகளைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது ஆகையால், அதற்குச் சிறிது காலதாமதம் ஆயிற்று. கோடானு கோடி எண்ணங்களால் கலவரம் அடைந்தவனாய்ச் சென்ற கலியாண சுந்தரம், என்ன கருத்தோடு தன்னைப் போலீஸ் கமிஷனர் அழைக்கிறார் என்ற விஷயத்தை இன்னம் சிறிது தெளிவாக அறிந்து கொள்ள முயன்றான். அவனை அழைத்துச் சென்ற அதிகாரி நிரம்பவும் கபட குணமுள்ள மனிதனாகையால், கலியாணசுந்தரத்தின் சந்தேகம் சிறிதளவும் தீராவிதமாய் நிரம்பவும் எச்சரிப்பாகவே மறுமொழி கூறியவண்ணம் நடந்தான். ஆகவே கலியாண சுந்தரத்தின் மன இருள் அகலாமல் முன்போலவேயே இருந்தது.

அவ்வாறு அரைநாழிகை நேரம் கழிந்தது. அவர்கள் போலீஸ் கமிஷனரினது கச்சேரியை அடைந்தனர். அது பழையகாலத்துக் கருங்கல் கட்டிடம். ஆதலால், அதன் வெளித்தோற்றமே நிரம்பவும் பயங்கரமாக இருந்தது. அந்தக் கச்சேரியினது வாசலில் கத்தி துப்பாக்கிகளுடன் பாராக்காரர்கள் காவல் காத்து நின்றிருந்தனர். கலியாணசுந்தரம் அவனை அழைத்துவந்த

போலீஸ் அதிகாரியைத் தொடர்ந்து அந்தக் கச்சேரிக்குள் செல்ல, சிறிது நேரத்தில், அவன் அந்த நகரத்தின் போலீஷ் கமிஷனர் இருந்த இடத்தில் கொண்டுபோய் அவருக்கு முன்னாக நிறுத்தப்பட்டான். அந்த மனிதர் சுமார் ஐம்பது வயது அடைந்தவராகக் காணப்பட்டார். ஆனாலும், அவர் நிரம்பவும் முறுக்காகவும் அமர்த்தலாகவும் பயங்கரமாகவும் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் கலியாண சுந்தரத்தைப் பார்த்து, '' ஐயா! உம்முடைய பெயரென்ன?'' என்றார். நமது யௌவனப் புருஷன், ''என் பெயர் கலியாண சுந்தரம்'' என்றான். அதைக்கேட்ட போலீஸ் கமிஷனர், ''ஐயா! எனக்கு உம்முடைய ரகசியமெல்லாம் தெரியும். நீர் என்னிடத்தில் உண்மையை மறைப்பதில் உபயோகமில்லை. உம்முடைய உண்மையான பெயர் வேறே இருக்க, அதை மாற்றி நீர் கலியாணசுந்தரம் என்று பொய்ப் பெயர் வைத்திருப்பதும் எனக்குத் தெரியும். அதை நீர் நிஜமென்று ஒப்புக் கொள்ளப் போகிறீரா? அல்லது இல்லை என்று மறுக்கப் போகிறீரா? வளர்த்தாமல் சுருக்கமாகப் பேசும்.'' என்று அழுத்தமாகவும் நிதானமாகவும் பேசினார்.

அதைக்கேட்ட நமது வீரன், ''ஆம்; உண்மைதான். நான் என்னுடைய நிஜமான பெயரைக் கலியாணசுந்தரம் என்று மாற்றி வைத்துக்கொண்டிருப்பது மெய்தான் . ஆனால், நான் அப்படி மாற்றிக்கொண்டிருப்பதற்கு சில முகாந்தரங்கள் இருக்கின்றன. அவைகளை நான், நீங்கள் திருப்தி அடையும் படி எடுத்துச் சொல்லத்தடையில்லை'' என்றான்.

உடனே போலீஸ் கமிஷனர் சடக்கென்று இடைமறுத்துப் பேசத் தொடங்கி, ''சரி; அதுவே எங்களுக்குப் போதுமானது. உம்முடைய சமாதானமெல்லாம் எங்களுக்குத் தேவையில்லை. நீர் அன்னிய தேசத்து மனிதர்; உம்முடைய பெயரை மாற்றி வைத்துக்கொண்டு இந்த தேசத்திற்குள் வந்து ஏதோ கருத்தோடு இருந்து வருகிறீர். இந்த தேசத்து ராஜனுக்குப்

பகையரசனால் அனுப்பப்பட்ட உள்ளாளாக நீர் இருந்தாலும் இருக்கலாம். ராஜாங்க சம்பந்தமான ரகசியங்களை எல்லாம் அறிந்து வரும்படி அந்த அரசனால் நீர் அனுப்பப்பட்டவராக இருந்தாலும் இருக்கலாம். உண்மையில் நீர் யார் என்பதை நாங்கள் மற்றவர்களிடம் விசாரித்து நிஜத்தை அறிந்து கொள்ளுகிற வரையில் நீர் தயை செய்து இதோ பக்கத்திலுள்ள சிறைச்சாலையில் இருந்துவர வேண்டும். இதோ நிற்கும் போலீஸ் அதிகாரி உமக்கு வழிகாட்டி உம்மை அழைத்துக் கொண்டுபோவார். தயைசெய்து அவரோடு கூடப்போம்'' என்று அழுத்தமாகக் கூறினார்.

எதிர்பார்க்காத அந்த வார்த்தையைக் கேட்ட கலியாண சுந்தரம் மிகுந்த பிரமிப்பும் கலக்கமும் அடைந்து, ''ஐயா! நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமை யோடு கேட்க வேண்டும். நீங்கள் எண்ணுகிறபடி நான் பகை அரசனால் அனுப்பப்பட்ட ஒற்றனல்ல. நான் என் பெயரை மாற்றி வைத்துக்கொண்டதற்கு வேறே தக்க முகாந்திரம் இருக்கிறது. நீங்கள் பிரயாசைப்பட்டு வேறிடங்களில் விசாரித்து அறிந்து கொள்ளும் துன்பமில்லாமல் என்னுடைய வரலாற்றை எல்லாம் நானே சொல்லிவிடுகிறேன்; நீங்கள் சுலபமாகவே எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்ளலாம்'' என்றான். அதைக்கேட்ட போலீஸ் கமிஷனர் புரளியாக நகைத்து, ''எந்த வழக்கிலும் குற்றவாளி தனக்கு அனுகூலமாகவேதான் விஷயங்களைச் சொல்லிக் கொள்ளுவான். உம்முடைய பெயரை மாற்றி வைத்துக் கொள்ளத் தக்க சாமர்த்தியம் வாய்ந்த நீர் அதற்குத் தகுந்தபடி ஏதாவது கட்டுக்கதை சொல்லத் தெரிந்து கொள்ளாமலா இருப்பீர். கைதிகள் சொல்வதையே நியாயாதிபதிகள் முடிவாகவும் உண்மையாகவும் வைத்துக் கொண்டால் விசாரணை எதற்கு? சாட்சிகள் எதற்கு? ஒன்றும் தேவையில்லை. நீர் சொல்வது விநோதமாக இருக்கிறது. தயை செய்து நீர் போய் சிறைச்சாலையில் இரும். நாங்கள் விசாரணை

செய்து சுதாவாகவே விஷயங்களை அறிந்து கொள்ளுகிறோம். விசாரணை நடக்கும் போது, நீர் உம்முடைய வரலாற்றைச் சொல்லிக் கொள்ளும்'' என்று கூறித் தமக்கெதிரிலிருந்த போலீஸ் சிப்பந்தியை நோக்கி, ''அழைத்துக் கொண்டு போ; எனக்கு வேறே அவசர ஜோலி இருக்கிறது'' என்றார்.

உடனே அந்தப் போலீஸ் சிப்பந்தி கலியாணசுந்தரத்தண்டை நெருங்கிவந்து, தனது கையால்அவனது தோளைத் தட்டி, ''வாருங்கள் ஐயா! போவோம். நேரமாகிறது. எஜமானுக்கு வேறே அவசர ஜோலி இருக்கிறதாம்'' என்று கூறி வற்புறுத்த, அப்படிப்பட்ட முரடர்களிடத்தில் தான் அதற்குமேல் வாக்கு வாதம் செய்வதில் பயனில்லை என்று உணர்ந்த கலியாண சுந்தரம் அவ்விடத்தைவிட்டு வெளியில் நடந்தான். இருள் நிறைந்திருந்த ஒரு தாழ்வாரத்தின் வழியாக அவனை நடத்திச் சென்ற போலீஸ் சிப்பந்தி, சிறிது தூரத்திற்கு அப்பாலிருந்ததும் கனமான இரும்புக் கம்பிகளால் பாதுகாக்கப்பட்டதுமான ஒரு விடுதியிலிருந்த அறைக்குள் அவனைக் கொண்டு போய் விடுத்தான்.

அவன் உள்ளே சென்றவுடனே அறையின் வெளிக்கதவு மூடப்பட்டது. வெளிப்பக்கத்தில் பெருத்த தாழ்ப்பாள் மாட்டப்பட்டதனால் உண்டான ஓசையும், பூட்டில் திறவுகோல் சுழற்றப்பட்ட ஓசையும் உண்டாகி நமது யௌவனப் புருஷனது செவியில்படவே, அவனது மனதும் உடம்பும் கலகலத்து ஆடி உட்கார்ந்துபோய்விட்டன. இந்த உலகத்திலுள்ள சகலமான வஸ்துக்களும் அவனது திருஷ்டியில் படாமல் ஒரு நொடியில் விலகிப் போய்விட்டன. ஆனாலும், திருவாரூருக்கு அருகில் இருந்த இன்பவல்லியான அவனது அருமைக் காதலியினது மனோகர வடிவம் மாத்திரம் அவனது மனதைவிட்டு அகலாமல் அவனுடன் கூடவே வந்தது.

## 25-வது அதிகாரம்

# புதிய மோகனாஸ்திரம் - மூடுமந்திரம்

இவ்வாறு நமது யௌவன வீரனான கலியாணசுந்தரம், தனது உண்மைப் பெயரை மாற்றி வைத்துக்கொண்டு வந்த காரணம் பற்றி ஒற்றன் என்று சம்சயிக்கப்பட்டு, கோலாப்பூர் போலீஸ் கமிஷனரால், அவரது கச்சேரியிலிருந்த ரகசியமான விடுதியில் அடைபட்ட பிறகு ஒருமாத காலம் கழிந்தது. அவன் அடைபட்டிருந்த இடம் நிரம்பவும் நெருக்கமான ஒரு சிறிய அறை. அதன் ஒரு மூலையில் ஒரு விசிப்பலகையில் அவனது படுக்கைவிரிக்கப்பட்டிருந்தது. இன்னொரு பக்கத்தில் அவன் குளிப்பதற்காக ஒரு கஜ சதுரமுள்ள ஒரு சிறிய முற்றமும், துவாரமும் இருந்தன. அவனுக்குத் தேவையான ஜலம் நிரப்பி வைப்பதற்கு ஒரு பெருத்த மண்பானையும், இரண்டு தகரக் குவளைகளும் இருந்தன. இவைகளே அந்த அறையில் காணப்பட்ட பொருட்கள். இரும்புக் கம்பிகளால் அடைபட்டிருந்த இரண்டு ஜன்னல்கள் சுவரில் காணப்பட்டன. அந்த ஜன்னல்கள் அந்தக் கட்டிடத்தின் உட்புறத்தில் இருண்டிருந்த ஒரு முற்றத்தைப் பார்த்தபடி அமைக்கப்பட்டிருந்தன. அந்த ஜன்னல்களின் வழியாக முற்றத்துப் பக்கத்தைப் பார்த்தால், அதைச் சுற்றிலும் சுவர்களே தெரிந்தனவன்றி வேறெதுவும் காணப்படவில்லை. ஆகையால், அந்தப் பக்கமாக தப்பிப்போவது கூடாத காரியமாக இருந்தது. அந்த அறையின் கதவு அழுத்தமும் கனமும் ஆனதாக இருந்தது அன்றி, அதன் முழுதும் இரும்பாணிகள் நிரம்பியதாகவும் இருந்தது. அந்தக் கதவைப் பாராக்காரர்கள் மூடும்போதும் திறக்கும் போதும் உண்டான ஓசை நிரம்பவும் பயங்கரமாக இருந்தது. ஆகையால், அது சிறைச்சாலையாக இருக்க முற்றிலும் பொருத்தம் உடையதாகக் காணப்பட்டது. அவ்வாறு

உறுதியாகவும் பந்தோபஸ்தாகவும் இருந்த அந்த விடுதி அந்தக் கச்சேரியின் முதலாவது மாடத்தில் இருந்ததன்றி, அதற்கு முன்பக்கத்தில் இருளடர்ந்து சந்துபோல நீண்டிருந்த தாழ்வாரம் ஒன்று இருந்தது. ஆகையால், அப்போதைக்கு அப்போது, கலியாணசுந்தரம் அந்த அறையைவிட்டு வெளியில் வந்து தாழ்வாரத்தில் சிறிதுநேரம் உலாவிவிட்டு உள்ளே போகவும் அனுமதிக்கப் பட்டிருந்தான்.

அவன் சத்திரத்திலிருந்து போலீஸ் அதிகாரியினால் அழைத்து வரப்பட்டபோது அதன் காரணம் என்னவாக இருக்கலாம் என்று பலவாறு யோசனைகள் செய்துவந்தான் என்பது முன்னரே சொல்லப்பட்ட விஷயம். அதன்பிறகு கமிஷனர் தன்னை வெகு சுலபத்தில் சிறைச்சாலைக்கு அனுப்பியதைக் காண, இன்னாருடைய தூண்டுதலினாலேதான் காரியம் அவ்வாறு நடந்திருக்க வேண்டும் என்ற ஒரு நிச்சயம் அவனது மனதில் ஏற்பட்டுப்போனது. இருந்தாலும், தான் தனது பெயரை மாற்றி வைத்துக்கொண்ட காரணம் பற்றி, நல்ல சந்தர்ப்பத்தில் தனக்கு அப்படிப்பட்ட இடையூறு சம்பவித்து விட்டதே என்ற நினைவினால், அவன் தன்னைத்தானே தூஷித்துக் கொண்டான்.

அவன்அவ்வாறு சிறைப்படுத்தப்பட்ட தினம் முதல் அவ்விடத்தில் நேர்ந்த சம்பவங்களைக் கவனிப்போம். அவன் அவ்விடத்தில் அடைக்கப்பட்டபோது பகல் சுமார் பதினோரு மணி சமயம் இருக்கலாம். அன்றைய தினம் பகல் சுமார் ஒரு மணி நேரமானபோது ஒரு போலீஸ் ஜவான் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்து, ஒரு தட்டில் நல்ல காய்கறி பதார்த்தங்களோடு கூடிய மாதுரியமான போஜனத்தைக் கொணர்ந்து அவனுக்கு முன்னால் வைத்து, ஒரு குடத்தில் புதிய தண்ணீர் கொணர்ந்து உள்ளே இருந்த மண்பானையில் ஊற்றினான். அப்போது கலியாணசுந்தரத்தின் மனமானது விவரிக்க இயலாதபடி சஞ்சலமடைந்து குழம்பிப் போயிருந்தது.

ஆகையால், அவனது எண்ணம் ஆகாரத்திலாவது தண்ணீரி லாவது செல்லவில்லை. உள்ளே வந்த ஜவான் தோற்றத்தில் அவ்வளவு கொடுமையான மனிதனாகக் காணப்படா விட்டாலும், நிரம்பவும் கண்டிப்பாகத் தனது கடமைகளைச் செய்யும் குணமும் உடையவன் என்பது, அவனது அழுத்தமான மௌனத்திலிருந்து நன்றாக விளங்கியது. தான் சிறைப்படுத்தப் பட்டதன் ரகசியக் காரணம் இன்னது என்பது அந்த சிப்பந்திக்குத் தெரிந்திருக்கவே நியாயம் இல்லை என்றும், ஒருவேளை தெரிந்திருந்தாலும், அவன் அதை வெளியிட மாட்டான் என்றும் கலியாணசுந்தரம் எண்ணிக் கொண்டான். ஆதலால், அவனிடம் அதைப் பற்றிப் பேச விரும்பவில்லை.

ஆனால், அந்த ஜவான் வெளியில் போகுமுன் கலியாணசுந்தரத்தினிடம் நெருங்கி மரியாதையாகப் பேசத் தொடங்கி, ''ஐயா! தினம் மூன்றுவேளை உங்களுக்கு ஆகாரம் கொணர்ந்து கொடுக்கும்படியாகவும், அந்தச் சமயத்தில் உங்களுக்குத் தேவையான சட்டவிரோதமில்லாத இதர சௌகரியங்களைச் செய்து கொடுக்கும்படியாகவும் எனக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். புஸ்தகங்களோ, எழுது கருவிகளோ உங்களுக்குத் தேவையானால், சொல்லுங்கள். அவைகளை நான் உடனே கொண்டுவந்து கொடுக்கத் தடையில்லை'' என்றான்.

அதைக் கேட்ட உடனே கலியாணசுந்தரம் சிறிதளவு மகிழ்ச்சி அடைந்தான். சிறைவாசத்திலும் தனக்கு அவ்வள வாவது மரியாதையும், சௌகரியமும் கிடைக்கின்றனவே என்ற ஆறுதலும் உண்டாயிற்று. அவன் தனக்குச் சில புஸ்தகங்களும் எழுது கருவிகளும் கொண்டுவரும்படி அந்த ஜவானிடம் கேட்டுக்கொள்ள, அவன் உடனே வெளியில் சென்று மறுபடியும் திரும்பிவந்து ஒருகட்டு புஸ்தகங்களையும் எழுது கருவிகளையும் கொணர்ந்து அவனது விசிப் பலகையின் மீது வைத்துவிட்டு, ''ஐயா! நீங்கள் எவ்வளவு வேண்டு

மானாலும் படிக்கலாம், அல்லது எழுதலாம். ஆனால் நீங்கள் வெளியில் யாருக்காவது கடிதம் எழுதவேண்டுமானால், அது கமிஷனர் மூலமாகவே போகவேண்டும்'' என்று கூறிவிட்டு வாசற்கதவை மறுபடியும் மூடிப்பூட்டிக்கொண்டு வெளியில் போய்விட்டான்.

தனியாக விடப்பட்ட கலியாணசுந்தரம் தனக்கு அருகில் வைக்கப்பட்ட புஸ்தகங்களை எல்லாம் ஒவ்வொன்றாக எடுத்து ஆராய்ச்சி செய்யத் தொடங்கினான். அவற்றில் புராணங்கள், கதைகள், நாடகங்கள், கவிகள், சாஸ்திரங்கள், தேச சரித்திரங்கள் முதலிய சகலவித நூல்களிலும் வகைக்குப் பல புஸ்தகங்கள் இருந்தன. தான் ஒரு வருஷகாலம் அவ்விடத்தில் அடைபட்டிருந்தால் கூட, தான் சுலபமாகப் பொழுதுபோக்க அனுகூலமாக அவ்விடத்தில் நல்ல நல்ல புஸ்தகங்கள் இருந்ததைக் காண அவனுக்கு ஒருவித சந்தேகம் உண்டாயிற்று. தான்நெடுங்காலம், அவ்விடத்தில் இருக்க வேண்டுமென்று கமிஷனர் ஒருவேளை கட்டளை இட்டிருப்பதால் அதற்காக அவன் அத்தனை புஸ்தகங்களை யும் கொணர்ந்து வைத்திருப்பானோ என்ற ஒரு கவலை உண்டாயிற்று. அடுத்த நிமிஷத்தில் அந்தக் கவலை நீங்கியது. தான் அங்கே இருக்கப் போவது எவ்வளவு காலம் என்பதை அறிந்து கொள்ளாமல், அந்த ஜவான் தனது கையில் அகப்பட்ட புஸ்தகங்களைத்தான் கொண்டுவந்திருக்க வேண்டுமென்ற நினைவே முடிவாக நின்றது. ஆகையால், அவன் ஏதோ ஒரு புஸ்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு அதைப் படிப்பதில் தனது கவனத்தைச் செலுத்த முயன்று கொண்டிருந்தான். இருந்தாலும் அவனது மனம் கட்டிலடங்காமல் பல விஷயங்களில் சென்று சிதறிய வண்ணம் இருந்தது. அவன் தனது அப்போதைய நிலைமையைப் பற்றியும், ஷண்முகவடிவைப்பற்றியும், அம்மாளு, தனம் முதலியவர்களைப் பற்றியும் மாறி மாறி எண்ணமிடுவதிலேயே

அன்றைய பொழுதையெல்லாம் செலவிட்டான். இரவு நேரம் வந்தது. பகலில் வந்த ஜவான் மறுபடியும் வந்து, உட்புறத்திலிருந்த ஒரு விளக்கைக் கொளுத்தி வைத்துவிட்டு பகற்பொழுதில் கொண்டுவந்தது போலவே, அப்போதும் நல்ல மாதுரியமான போஜனம் கொணர்ந்து வைத்துவிட்டுக் கதவை மூடிப் பூட்டிக் கொண்டு வெளியில் போய்விட்டான். அதுபோலவே, மறுநாட்காலையிலும் அந்த ஜவான் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். ஆனால், அப்போது அவனோடு கூட ஒரு வேலைக்காரக் கிழவியும் வந்து சேர்ந்தாள். அவள் அந்த அறையை நன்றாகப் பெருக்கிச் சுத்தி செய்துவிட்டு அவனுடைய ஸ்நானத்துக்குத் தேவையான தண்ணீர் கொணர்ந்து நிரப்பிவிட்டுச் சென்றாள். அவள் அவ்விடத்தில் வேலை செய்த சொற்பகாலத்தில் கலியாண சுந்தரம் அறையைவிட்டு வெளியில் வந்து தாழ்வாரத்தில் உலாவ விடப்பட்டிருந்தான். வேலைக்காரி வெளியில் போனவுடனே ஜவான் அவனை உள்ளே அனுப்பிவிட்டு காலை நேரத்துக்குத் தேவையான பலவகைப்பட்ட சிறந்த பலகாரங்களையும் தண்ணீரையும் கொணர்ந்து வைத்தபிறகு கதவைப் பூட்டிக்கொண்டு போய்விட்டான். இவ்வாறு ஒவ்வொரு நாளும் மூன்று வேளைகள் அவனுக்கு வேண்டிய ஆகாரங்கள் வந்து சேர்ந்தன. எவ்வித மாறுபாடும் இன்றி ஒவ்வொருநாளும் முதல் நாளைப் போலவே கழிந்து கொண்டு வந்தது. ஆகையால், ஒவ்வொரு நாள் கழிவதும் கலியாண சுந்தரத்துக்கு நிரம்பவும் துன்பகரமாக இருந்தது. அவன் அவ்விடத்தில் அடைபட்டிருந்த காலத்தில், சாதாரணக் குற்றவாளி போல நிரம்பவும் கொடுமையாக நடத்தப்படாமல் முற்றிலும் மரியாதையாக நடத்தப்பட்டு வந்தான். ஆனாலும், அவன் தனது நிலைமையப் பற்றி சந்தோஷம் அடைந்திருந்தான் என்று நாம் நினைக்க முடியுமா? இல்லை இல்லை. எதிர்பார்க்காதபடி வந்து நேர்ந்த அந்தப் பெருத்த அவகேட்டை, அவன் தனது இயற்கையான மனோ

திடத்தினாலும், பெருந்தன்மையான குணத்தினாலும், வேதாந்தப் போக்கான நினைவினாலும், ஒருவாறு சகித்துக் கொண்டிருந்தான். ஆனாலும், ஒவ்வொரு சமயத்தில், அவன் தனது உயிருக்குயிரான ஷண்முகவடிவை நினைத்த காலத்தில் அவனது மனத்தில் பொங்கி எழுந்த துக்கமானது அவனால் தாங்கக் கூடிய வரம்பை மீறியதாகப் போய்விடும். இன்ன காரணத்தினால், தான் கடிதம் எழுதவில்லை என்பதையும், இன்ன இடையூறினால் அவ்வளவு காலமாகியும் ஊருக்குத் திரும்பி வரவில்லை என்பதையும் அறிந்துகொள்ள மாட்டாமல், ஷண்முகவடிவு எவ்வாறு தவிக்கிறாளோ என்றும், அவள் தன்னைப் பற்றி ஏதாவது கெடுதலான எண்ணங்கொண்டு விடுவாளோ என்றும், கலியாணசுந்தரம் அடிக்கடி நினைத்து நினைத்து நைந்து உருகி விசனமே வடிவாக உட்கார்ந்திருப்பான். அவளது விஷயத்தில் தான் செய்துகொடுத்த வாக்குறுதியைத் தான் மீறிவிட்டதாக அவள் ஒருகால் நினைத்துக் கொள்வாளோ, அல்லது தனக்கு வழியில் ஏதேனும் பெருத்த அபாயம் நேர்ந்து விட்டதென்று நினைத்து வருந்தி அழுவாளோ என்றும் அவன் சந்தேகித்துக் கலங்கிக் கண்ணீர் விடுப்பான்.

அந்த ஊரிலிருந்த ராஜா சத்திரத்திற்குத் தன் பேருக்கு ஏதாவது கடிதம் வந்தால், அதை வாங்கித் தன்னிடம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அவன் போலீஸ் கமிஷனருக்குப் பல தடவைகளில் எழுதிக் கேட்டுக்கொண்டான். ஆனால், கமிஷனர் அவைகளுக்கு எழுத்து மூலமான உத்தரவு எதையும் பிறப்பிக்க வில்லை. ஆனால், அவனுக்காக நியமிக்கப்பட்டிருந்த ஜவான் திரும்பிவந்து, அவனுக்கு ஒரு கடிதங்கூட சத்திரத்து விலாசத்துக்கு வரவில்லை என்று வாய்மொழியாகச் சொல்லுவான். அவன் சொன்னது பொய்யென்று கலியாண சுந்தரம் நிச்சயப்படுத்திக் கொண்டான். நான்கு நாட்களுக்கு ஒரு தரம் தவறாமல் கடிதம் அனுப்பிக்கொண்டிருப்பதாக,

அவள் அதற்கு முந்திய கடிதமொன்றில் எழுதித் தெரிவித்திருந்தாள். ஆகையால், அவள் கடிதம் எழுதாமல் சும்மா இருக்க நியாயமில்லை என்றும், அவர்கள் விஷயத்தை மறைக்கிறார்கள் என்றும் அவன் எண்ணிக்கொண்டதன்றி, அவர்கள் தான் சத்திரத்தில் வைத்திருந்த தஸ்தாவேஜுகளை அபகரித்துக் கொள்ளத் துணிந்ததுபோல தனக்கு வந்துள்ள கடிதங்களையும் வாங்கிப் படித்துவிட்டு பத்திரப்படுத்தி இருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டான். இவ்வாறு அவனது மனம் இரவு பகல் எப்போதும் ஓய்வின்றித் தாமரை இலைத் தண்ணீர்போலத் தத்தளித்துப் புண்பட்டு ஆறாத் துயரத்தில் ஆழ்ந்து உருகிக் கரைந்து கொண்டிருக்க, முன் சொன்னபடி ஒருமாத காலம் கழிந்தது. சகிக்க இயலாத மன வியாதியினாலும், நிரம்பவும் நெருக்கமான அந்த அறையில் அடைபட்டிருந்ததாலும், அவனது உடம்பு அசௌக்கியம் அடையத் தொடங்கியது. ஆகவே, அவன் ஒருநாள் இரவில் வழக்கத்திற்கு முன்னாகவே விளக்கை அணைத்துவிட்டு தனது படுக்கையில் படுத்துக்கொண்டான். பற்பல விஷயங்களில் சிதறியிருந்த அவனது உணர்வு படிப்படியாக மயங்கிக் கலங்கி அவனைக் கடுமையான நித்திரையில் ஆழ்த்தி இன்பகரமான ஒரு கனவை உண்டாக்கிக் கொண்டிருந்தது. ஓர் இராஜ மாளிகையில் மகா உன்னதமாக அலங்கரிக்கப்பட்டிருந்த ஒரு சயனமாளிகையில் ஒரு சப்பிரமஞ்சத்தின் மீது தான் சயனித்திருந்ததாக அவனுக்குத் தோன்றியது. மகா சிறப்பாகத் தோன்றிய அந்தச் சயனமாளிகையில், ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கத்திற்கு மெருகு கொடுத்தது போன்ற அற்புத ஜோதியானது எங்கும் பரவி மூலை முடுக்குகளில் கூட இருள் என்பதே இல்லாதபடி செய்து ஜெகஜ்ஜோதியாக நிரம்பித் தோன்றியது. அது பூலோகத்தில் வானுலகத்தில் தெய்வீகமாக உண்டாகும் ஜோதியாக இருந்தது. அந்தப் பிரகாசம் அவனது உடம்பில் படுவது சிறிதும் துன்பகரமாகத் தோன்றாமல், தேவாமிருதத்தால் அபிஷேகம் செய்வதுபோல, அவனை

இன்பசாகரத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தது. உன்னதமான புஷ்ப ஜாதிகளின் இனிய வாசனையும், அத்தர், கலவை, கஸ்தூரி முதலியவற்றின் நறுமணமும் ஒன்றுகூடியதைவிட ஆயிர மடங்கு விசேஷமான தெய்வீக மணம் நிறைந்த மந்தமாருதம் அந்த இடம் முழுதும் நிரம்பி அவனை ஆனந்தமாகத் தாலாட்டிக் கொண்டிருந்தது. அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை முதலிய எண்ணிறந்த தெய்வ தாசிகளும் கந்தருவப் பெண்பாவையரும் அவனுக்கு முன்னர் தோன்றி மாதுரியமாக தெய்வகீதம் பாடி நடனம் செய்தனர். சிலர் வீணை, புல்லாங்குழல் முதலிய வாத்தியங்களை ரமணீயமாக முழக்கினர். சிலர் புஷ்பங்களைச் சொரிந்து அவனை வாழ்த்தினர். வேறு சிலர் ஆர்த்தியெடுத்து அவனுக்குத் திருஷ்டி தோஷம் கழித்தனர். மற்றும் சிலர் அவனை நோக்கி இனிமையாகப் புன்னகை செய்து, "பயப்படாதே! உனக்கு ஒரு கெடுதலும் உண்டாகாது" என்று கூறி அவனைத் தைரியப் படுத்தினர். அப்படிப்பட்ட பரம இன்பகரமான கனவில் ஆழ்ந்துஆனந்த பரவசம் அடைந்து கிடந்த நமது கலியாண சுந்தரத்தின் கனவு சிறுகச் சிறுக விலகியது. அவனது நித்திரையும் கலைய ஆரம்பிக்கவே, அவன் படிப்படியாகத் தனது உணர்வைப் பெற்றுக் கடைசியில் நன்றாக விழித்துக் கொண்டான். உடனே அவனுக்குத் தனது உண்மையான நிலைமை இன்னது என்பதும் தான் அதுவரையில் கண்டது கனவு என்பதும் விளங்கின. அந்த அபூர்வமான சொப்பனத்தின் இன்பம் அவனது மனதில் அப்போதும் இருந்தது. ஈசுவரனே அந்தக் கனவின் மூலமாகத் தன்னை சந்தோஷிப்பித்து இருக்கிறார் என்றும், தனக்கு வெகு சீக்கிரம் நல்லகாலம் பிறக்குமென்றும், அவன் எண்ணிக் கொண்டு ஈசுவரனை நினைத்துத் தியானம் செய்த வண்ணம் நிம்மதியாகப் படுத்திருந்தான். அப்போது எங்கும் நிசப்தமே குடி கொண்டிருந்தது. அப்போது தான் படுத்தி ருந்த விசிப்பலகைக்குப் பக்கத்திலிருந்த சுவரின்

அப்புறத்தில் எலி சுரண்டுவது போன்ற புதுமையான ஓர் ஓசை உண்டானதைக் கேட்டு அவன் திடுக்கிட்டு அதை உற்றுக் கவனித்தான். உடனே அந்த ஓசை நின்றுபோயிற்று. அவன் அதை அலட்சியம் செய்து, மறுபடியும் தூங்க எத்தனித்தான். அவனது இமைகள் மறுபடியும் மூடிக்கொண்டன. அவன் அரை நித்திரையாக இருந்த சமயத்தில் முன்னே உண்டான அந்த விபரீத ஓசை மறுபடியும் உண்டாயிற்று. அவன் மறுபடியும் திடுக்கிட்டு விழித்துக்கொண்டு தனது மூச்சை அடக்கிய வண்ணம், முன்னிலும் அதிக கவனமாக உற்றுக் கேட்கலானான். அந்த ஓசை எலி அறுப்பதனால் உண்டாகும் ஓசையல்ல என்பதும் நிச்சயமாகத் தெரிந்தது. யாரோ மனிதர் கன்னக்கோல் கொண்டு அந்தச் சுவரில் துளை செய்வது போலத் தோன்றியது. பக்கத்து அறையில் அடைபட்டிருக்கும் யாரோ ஒரு கைதி தப்பி ஓடிப்போகும் எண்ணத்துடன் சுவரில் துளை செய்கிறான் என்ற எண்ணம் உண்டாகவே, கலியாணசுந்தரம் ஒருவாறு மகிழ்ச்சி அடைந்தான். ஏனென்றால், அந்த அக்கிரமச் சிறையிலிருந்து தானும் தப்பித்து அதேவழியாகப் போய்விடலாம் என்ற நினைவினால் அவன் அவ்வாறு மகிழ்ச்சி அடைந்தான்.

அந்த ஓசை தொடர்ச்சியாக வந்துகொண்டே இருந்தது. அவ்வாறு தோண்டிய மனிதன், சுவரின் முக்கால் பாகத்துக்கு மேல் பெயர்த்தெடுத்திருந்ததால், தான் பேசுவது ஒருவேளை அவனுடைய காதில் விழுமெனத் தோன்றியது. ஆகையால், தான் அவனிடம் பேச்சுக் கொடுத்துப் பார்க்கலாம் என்ற எண்ணமும் உண்டானது. ஆனாலும், அவன் பொறுமை யோடு தன்னை அடக்கிக்கொண்டு அந்த ஓசையைக் கவனித்த படியே இருந்தான். சுமார் இரண்டு மணி சாவகாசம் வரையில் அந்த ஓசை கேட்டுக்கொண்டே இருந்தது. ஆகையால், பக்கத்து அறையில் அடைபட்டிருந்த யாரோ ஒரு கைதியே அவ்வாறு முயற்சி செய்கிறானென்பது நிச்சயம் ஆயிற்று. அதுவுமன்றி, அந்தக் கைதி சுவரைப்

பெயர்த்ததில் கல்களும், சுண்ணாம்பும் விழுந்த ஓசையும், அவன் அவைகளை உடனுக்குடன் எடுத்து வேறே இடத்தில் கொண்டுபோய் வைத்துவிட்டு வந்ததும் அவனுக்குப் புலனாயின. ஒருவேளை அந்தவேலை இரவு கழிவதற்குள் பூர்த்தியடையாவிட்டால், மறுநாள் சாப்பாடு கொண்டுவரும் ஜவான் அந்தத் துளையைக் கவனிக்காமல் இருக்கும் பொருட்டே அவன் அவ்வாறு எச்சரிப்பாக நடந்து கொள்ளுகிறான் என்று கலியாணசுந்தரம் யூகித்துக் கொண்டான். அதன்பிறகு சிறிது நேரத்தில் அந்த ஓசை நின்று போய்விட்டது. அது மறுபடியும் தொடங்கும் என்ற எண்ணத்தோடு கலியாணசுந்தரம் நெடுநேரம் வரையில் விழிப்பாகவே இருந்து கவனித்துப் பார்த்தான். ஆனால், அந்த ஓசை மறுபடி உண்டாகவே இல்லை. அவ்வளவோடு தானும் தூங்கலாம் என்று நினைத்த நமது யௌவனப் புருஷன் கண்களை மூடிக்கொண்டு அயர முயற்சித்தான். ஆனால், அவனுக்குத் தூக்கம் பிடிக்காமலேயே இருந்தது. ஏனென்றால், அவன் அந்தச் சிறைச்சாலையில் ஒரே மாதிரியாக ஒரு மாதகாலம் இருந்து, அந்த அபூர்வச்சம்பவத்தை அன்றைய தினந்தான் உணர்ந்தான். ஆகையால், அதனால் ஏற்பட்ட அபாரமான மனவெழுச்சியும் உற்சாகமும் அடங்காமலேயே இருந்தன. இருந்தாலும், விடியற்காலத்தில் அவன் மறுபடியும் துயிலில் ஆழ்ந்து பொழுது விடிந்தபிறகு வழக்கம்போல விழித்துக் கொண்டு எழுந்தான். சுவரை யாரோ பெயர்த்ததாக உண்டான எண்ணமானது அதற்கு முன்னால் உண்டான சொப்பனத்தின் தொடர்ச்சியாக இருக்குமோ என்ற சந்தேகம் தோன்றியது. ஆகையால், அது பொய்யோ மெய்யோ என்பதை நிச்சயிக்க மாட்டாமல் கலியாணசுந்தரம் கலவரம் அடைந்தவனாய் எழுந்து தனது காலைக் கடன்களை முடித்துக் கொண்டான்.

அப்போது வழக்கப்படி அவனுக்குத் தேவையான காலை உணவை எடுத்துக்கொண்டு வந்த ஜவானைப் பார்த்து நமது கலியாணசுந்தரம் அவனோடு நயமாகப் பேசத் தொடங்கி, "ஏன் ஐயா! இந்தக் கட்டிடத்தில் என்னைத்தவிர இன்னம், பல கைதிகள் அடைபட்டிருக்கிறார்களா?" என்று கேட்க, உடனே, "அந்தச் சங்கதி எனக்குத் தெரியாது" என்று அந்த ஜவான் சுருக்கமான மறுமொழி கூறிவிட்டான். அதைக் கேட்ட கலியாணசுந்தரம் கொஞ்சமும் இரக்கம் என்பதே இல்லாத முரட்டு மனிதனான அந்த ஜவானிடத்தில் தான் அந்த விஷயத்தைக் கேட்டதே தவறு என்று நினைத்துத் தன்னைத் தானே கண்டித்துக்கொண்டான். அந்த ஜவானுக்குப் பின்னால், அந்த இடத்தைப் பெருக்கும் வேலைக்காரக் கிழவியும் வழக்கப்படி வந்து தரையைச் சுத்தி செய்யத் தொடங்கினாள். உடனே கலியாணசுந்தரம் ஒவ்வொரு நாளும் செய்வது போல, அந்த அறையைவிட்டு வெளியில் வந்து தாழ்வாரத்தில் உலாவத் தொடங்கினான். அந்தத் தாழ்வாரம் இருண்டிருந்தது என்பது முன்னரே சொல்லப்பட்ட விஷயம். அதற்குமுன் கலியாண சுந்தரம் தனது மனவேதனைகளில் ஆழ்ந்து மெய்மறந்திருப்பது வழக்கமாதலால், பக்கத்தில் அறைகள் இருந்ததைக் கவனித்துப் பார்க்கவே இல்லை. ஆனால், இன்றையதினம், அவன் ஓசை உண்டான பக்கத்தைக் கவனித்துப் பார்த்துக்கொண்டே நடக்க, தனது அறையைப் போலப் பல அறைகள் வரிசையாக இருந்ததையும், அவற்றின் கதவுகள் தாழ்வாரத்துப் பக்கத்தில் பூட்டப்பட்டிருந்ததையும் அவன் கண்டான். உடனே அவன் மெதுவாக நடந்து ஓசை உண்டான அறையின் கதவண்டை போய்நின்று, உட்புறத்தில் ஏதேனும் ஓசை உண்டாகிறதோ என்று கவனித்துப் பார்த்தான். உட்புறம் நிசப்தமாக இருந்தது.

அதன்பிறகு சில நிமிஷத்தில் வேலைக்காரி வெளியில் வந்த தனது வேலை முடிந்துவிட்டது என்று கூறினாள். அது கலியாண சுந்தரத்தை மறுபடியும் உள்ளே அனுப்புவதற்காகச்

சொல்லப் படும் குறிப்பு. ஆதலால், அவன் உடனே சந்தைவிட்டுத் தனது அறைக்குள் போக எத்தனித்தான். அப்போது அந்தக் கிழவி, சிறிது தூரத்திற்கு அப்பால் நின்று கொண்டிருந்த ஜவானுக்குத் தெரியாதபடி தனது கையிலிருந்த ஒரு கடிதத்தைக் கலியாண சுந்தரத்தின் கையில் சொருக, அவன் மிகுந்த ஆவலோடும் வியப்போடும் அதை வாங்கிக் கொண்டு விரைவாக நடந்து தனது அறைக்குள் போய் விட்டான். உடனே ஜவான் தனது இயற்கைப்படி அந்த அறையின் கதவை மூடி வெளியில் பூட்டிக்கொண்டு போய் விட்டான்.

தனிமையில் விடப்பட்ட கலியாணசுந்தரம் தனதுகையில் திணிக்கப்பட்ட அந்த அபூர்வமான காகிதத்தில் யார் என்ன எழுதியிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலினால் தூண்டப்பட்டவனாய், அந்தக் கடிதத்தை உடனே எடுத்துப் பிரித்துப் பார்த்தான். அது யாரோ பெண் பிள்ளையினால் முத்து முத்தாய் அழகாக எழுதப்பட்ட ஒரு கடிதமாகக் காணப்பட்டது. அவன் உடனே அதைப் படிக்கத் தொடங்கினான். அது அடியில் வருமாறு எழுதப் பெற்றிருந்தது.

ஐயா! நான் ஒரு யௌவனப் பிராயமுள்ள பெண். சில காரணங்கள் பற்றி இந்த ஊர்ப் போலீஸ் கமிஷனர் என்னை அக்கிரமமாகப் பிடித்துக் கைது செய்து, நீங்கள் இருக்கும் அறைக்குப் பக்கத்து அறையில் பலவந்தமாக அடைத்து வைத்திருக்கிறார். நான் இவ்விடத்திலிருந்து தப்பித்துப் போவதற்காக முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். நீங்கள் உயிர் தப்பிப் பிழைக்க எண்ணி இவ்விடத்திலிருந்து விடுபட்டுப் போகப் பிரியப்பட்டால், நீங்கள் எனக்கு உதவியாக இருக்கும் பட்சத்தில் நாம் இருவரும் தப்பி வெளியில் போய் விடலாம். இன்று இரவில் உங்களுக்குப் பக்கத்தில் உண்டாகும் ஓசையைக் கேட்டு நீங்கள் பயப்பட்டுக் கூச்சலிடாமல் மௌனமாகவே இருந்து நான் விரும்பும் உதவிகளைச் செய்யும்படியும், உடனே

புறப்பட்டுப்போய்விட ஆயத்தமாக இருக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் நிரம்பவும் நற்குணமுள்ளவர் என்றும், எவ்விதக் குற்றமும் செய்யாமல் அக்கிரமமாக அடைபட்டிருக்கிறீர்களென்றும் நான் கேள்வியுறுவதால், இந்தப் பயங்கரமான இடத்திலிருந்து தப்பிப்போக நீங்களும் இணங்குவீர்கள் என்ற நம்பிக்கையினால், நான் இதை எழுதியனுப்பி இருக்கிறேன். அப்படித் தந்திரம் செய்து வெளியில்போக, நீங்கள் இஷ்டப்படாவிட்டால், நான் வெளியிட்ட இந்த ரகசியத்தை ஜவானிடம் சொல்லாமலும், என்னைக் காட்டிக் கொடுக்காமலும் இருக்க நான் உங்களை நிரம்பவும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு, உதவி மறவாத,
இந்திராபாயி.

- என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்தவுடனே நமது யௌவனப் புருஷன் அடைந்த வியப்பும் பிரமிப்பும் அளவிலடங்காதனவாக இருந்தன. யௌவனப் பருவத்தினளான ஒரு பெண் அப்படிப்பட்ட மகா துணிகரமான காரியத்தைச் செய்து முடிக்க முயலுவதை உணர, அவனுக்கு அது கனவோ நினைவோவென்ற சந்தேகம் உண்டாயிற்று. கடிதத்தின் எழுத்திலிருந்து, அவள் நன்றாகப் படித்த புத்திசாலி என்பது ஒருவாறு விளங்கியது. அதுவுமன்றி, அந்தச் சிறைச் சாலையின் வேலைக்காரக் கிழவியினது உதவியைக் கொண்டே, அந்தப் பெண் அவ்வாறு தப்பிப்போக முயற்சி செய்கிறாள் என்றும் அவன் யூகித்துக் கொண்டான். ஆனால், ஒரு சந்தேகம் மாத்திரம் தீராமல் இருந்தது. அந்தப் பெண் அவளிருந்த அறையிலிருந்து தனது அறைக்குள் வந்து அதன்பிறகு எந்த வழியாக வெளிப்பட்டுபோக உத்தேசித்து இருக்கிறாள் என்பது மாத்திரம் அவனுக்கு விளங்காமலிருந்தது. இருந்தாலும் அன்றைய தினம் இரவில் அந்தப் பெண் சுவரைக் கடைசிவரையில் துளைசெய்தவுடனே எப்படியும்

தனது ஏற்பாட்டை விரிவாக வெளிப்படுத்துவாள் என்ற நம்பிக்கை உண்டாயிற்று. ஆகையால், அன்றைய இரவு வரையில் பொறுமையோடு இருக்கத் தீர்மானித்துக் கொண்டவனாய்ப் பொழுதை போக்கினான். சிறைச் சாலையில் அடைபட்டு இருப்பவருக்குப் பொழுதுபோவது நரகவேதனையாக இருப்பது இயற்கையல்லவா; அன்றைய தினம் கலியாணசுந்தரத்திற்குப் பொழுது போனது மற்ற தினங்களைவிட நூறுமடங்கு அதிக வேதனையாக இருந்தது. அன்றைய இரவு வராது என்றே அவன்பல தடவைகளில் சந்தேகப்படும்படி அன்றைய பகற்பொழுது நீண்டு கொண்டே போவதாகத் தோன்றியது. பகலிலும் சாயுங்காலத்திலும் வழக்கப்படி ஜவான் அவனுக்கு ஆகாரம் கொணர்ந்து வைத்த காலத்தில் கலியாணசுந்தரம் தனது மனவேதனையை வெளியிடாமல், ஏதோ புஸ்தகத்தை வைத்து சுவாரஸ்யமாகப் படிப்பவன் போல நடித்துக் கொண்டிருக்க ஜவான் சிறிதும் சந்தேகப்படாமல், தனது கடமைகளைச் செய்து முடித்துவிட்டுக் கதவை மூடிப் பூட்டிக்கொண்டு வெளியில் போய்விட்டான்.

எட்டுமணிக்கே தனது இராப்போஜனத்தை முடித்துக் கொண்ட கலியாணசுந்தரம் தனது விளக்கை அணையாமல் வைத்துக்கொண்டு, ஏதோ ஒரு புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருக்க எத்தனித்தான். அவனது மனம் புஸ்தகத்திலிருந்த விஷயங்களில் செல்லவில்லை. ஆகையால், அவன் புஸ்தகத்தை வைத்துவிட்டு, எழுந்து அந்த அறைக்குள் அங்கும் இங்கும் உலாவத் தொடங்கினான். அவ்வாறு சிறிது நேரம் உலாவியபின் மறுபடியும் விளக்கண்டை போய், அன்றைய காலையில் வந்த புதுமையான கடிதத்தை எடுத்து நூறாவது தடவை படித்துப் பார்த்தான்.

கடிகாரம் பதினொரு மணி அடித்தது. முதல்நாள் இரவில் உண்டானதுபோல அப்போதும் ஓசை உண்டாவதாகத் தோன்றியது. அவன் உடனே தனது விசிப்பலகையின் மீது

படுத்துக்கொண்டபடி சுவரில் தனது காதை வைத்து ஓசையை நன்றாகக் கவனிக்கத் தொடங்கினான். மகா உழைப்பாளியும் தைரியசாலியுமான அந்தப் பெண் முதல் நாளைய இரவில் செய்ததுபோல அபாரமான ஊக்கத்தோடு சுவரைக் குடைந்து பெயர்த்து வைத்துக்கொண்டிருந்தது நன்றாகத் தெரிந்தது. அவ்வாறு அந்தப் பெண் விடாமுயற்சியோடு சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டே வர, கடைசியில் ஒரு கல் பெயர்ந்து கலியாணசுந்தரத்தின் காலில் வந்து விழுந்தது. அவன் உடனே எழுந்து உட்கார்ந்து கொண்டான். கடப்பாரை அவன் இருந்த அறைக்குள் நுழைந்ததைக் கண்ட அந்தப் பெண், "துளை நெடுக வந்துவிட்டதா? அதுதான் உங்களுடைய அறையா?" என்று குயிலொலி போன்ற தனது குரலால் வினவ, உடனே கலியாணசுந்தரம் ஆமென்று மறுமொழி கூறினான்.

உடனே அந்தப் பெண், "சரி; இங்கே இருந்து அவ்வளவு தூரம் குத்துவது கடினமாக இருக்கிறது. இந்தக் கடப்பாரையை நீங்கள் வாங்கி உங்கள் பக்கத்துச் சுவரில் நன்றாகத் துளை செய்யுங்கள். நீங்கள் அதிகமாகத் தோண்ட வேண்டாம். கொஞ்சம் பெயர்த்தால், அதுவே போதுமானது" என்றாள். அதைக்கேட்ட கலியாணசுந்தரம், அவ்விடத்திலிருந்து தப்பிப்போகும் விஷயத்தில் தான் அவளுக்குத் தன்னால் இயன்ற உதவியை எல்லாம் செய்வதாக உறுதி கூறியதன்றி அவளால் நீட்டப்பட்ட கடப்பாரையை வாங்கி, விசிப் பலகையை ஒரு பக்கமாக நகர்த்தி வைத்துவிட்டு, துளை உண்டாயிருந்த இடத்தில் கடப்பாரையால் மெதுவாக இடித்து ஒரு கல் கனம் பெயர்க்க, உடனே வழி சரியாகப் போய் விட்டது. சுவரில் இரண்டடி சதுரத்திற்கு ஒரு துளை செய்யப்பட்டுப் போயிருந்தது.

அப்புறத்திலிருந்து மடந்தை உடனே அவனைநோக்கி, "இதோ இந்தச் சாமான்களையெல்லாம் வாங்கி அப்புறம் வையுங்கள்" என்று நிரம்பவும் பரபரப்பாகக் கூறியவண்ணம்

சில பொருட்களை எடுத்து துவாரத்தின்மீது வைத்தாள். கலியாணசுந்தரம் உடனே தனது கையை நீட்டி சாமான்களை எடுத்தான். பட்டுக் கயிற்றினால் ஆக்கப்பட்டிருந்த ஒரு நூலேணியும், இரும்புக் கம்பிகளை அறுக்கக்கூடிய மூன்று அரங்களும், ஒரு கொத்து நிறைந்த சாவிகளும் அவ்விடத்தில் வைக்கப்பட, கலியாணசுந்தரம் முன்பின் யோசியாமல் விரைவாக அவைகளையெல்லாம் எடுத்துத் தனது அறைக்குள் வைத்தான். உடனே அந்தப் பெண் அவனை நோக்கி நிரம்பவும் இனிமையான குரலில் பேசத்தொடங்கி, ''சரி; நான் இந்தத் துளையின் வழியாக என் கைகளை நீட்டுகிறேன். நீங்கள் என்னைப் பிடித்து மெதுவாக உங்கள் பக்கத்தில் இழுங்கள்'' என்ற நயமாகக் கூறினாள். அதே சமயத்தில் அவளது கைகளிரண்டும் அந்தத் துளைகளில் நீண்டு வந்தன. அந்தக் கைககள் உருட்சி திரட்சியாகவும் தந்தத்தில் கடைந்தெடுக்கப் பட்டவை போலவும் அழகும் யௌவனமும் மினுமினுப்பும் ஜ்வலிப்பனவாய் இருந்தன. அவ்வளவு மேன்மையும் நுட்பமும் பொருந்திய கைகளும் உடம்பும் அந்தத்துளைக்குள் இழுபட்டு வந்தால், கூரான கற்கள் குத்திக் காயம் உண்டாக்கி விடுமோ என்ற அச்சம் நமது யௌவனப் புருஷனது மனத்தில் தோன்றியது. அவன் அந்தப் பெண் பாவையினது அழகிய கரங்களைப் பிடித்து மெதுவாக அவனது பக்கத்தில் வாங்க, உடனே அவளது சிரமும் உடம்பும் துளைக்குள் நுழைந்து அவனது அறைக்குள் வந்தன. அழகே வடிவாக இருந்த அவளது மேனி அப்படி நெருங்கி ஒடுங்கி இப்பால் வருவதைக் கண்ட கலியாண சுந்தரத்தினது மனம் பதறியது. இரக்கமும் பச்சாதாபமும் தோன்றி அவனது மனதை இளக்கின. அவன் நிரம்பவும் பாடுபட்டு அதிக ஜாக்கிரதையாக அவளது உடம்பைப் பிடித்து மெதுவாகத் தனது பக்கத்தில் வாங்கி, அவளுக்கு எவ்விதக் காயமும் இல்லாமல், அவளைத் தனது அறைக்குள் கொண்டுவந்து சேர்த்தான். அவ்வாறு கொண்டு வரப்பட்ட அந்த அழகிய மடந்தை உடனே எழுந்து

நின்றாள். அப்போது, அவனது அறையில் வெளிச்சம் இருந்தது. ஆகையால், அதன் ஜோதியில் அந்தப் பெண்ணினது வடிவம் நன்றாகத் தெரிந்தது. அவளுக்குச் சுமார் பதினான்கு அல்லது பதினைந்து வயது இருக்கலாம் என்று நன்றாகத் தெரிந்தது. அவளது கைகளின் அற்புத வனப்பிற்கு ஒத்தபடி அவளது உச்சி முதல் உள்ளங்கால் வரையிலுள்ள சகலமான அங்கங்களும் மகா அழகாகவும் வசீகரமாகவும் அமைந்திருந்தது அன்றி, அவள் ஒரு மகாராஜனது புத்திரிபோல உன்னதமான தோற்றமும், செழுமையும், கொழுமையும் நிறைந்து சாமுத்திரிகா லட்சணத்துக்குச் சிறிதும் பழுதின்றி அமைந்த அங்கங்களும் வாய்ந்தவளாகக் காணப்பட்டாள். ஆனால், அவள் மகாராஷ்டிரப் பெண்கள் முகமூடி போட்டிருப்பது போலத் தனது முகத்தை ஒரு சல்லாயப் பட்டினால் ஆன முக மூடியால் மறைத்துக் கொண்டிருந்தாள். அவ்வாறு எதிர்பாராத அற்புத எழிலும் யௌவனப் பருவமும் வாய்ந்தவளாகத் தோன்றிய அந்த அணங்கை நமது கலியாணசுந்தரம் ஏற இறங்க இரண்டொரு முறை உற்று நோக்கினான். அதற்குமுன் தான் பார்த்து நிரம்பவும் நெருங்கிப் பழகிய ஒரு பெண்ணின் வடிவம்போலவே அந்தப் பெண்ணின் வடிவமும் இருந்ததைக் காண அவனது வியப்பும் சந்தேகமும் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்தன. உயரம், பருமன், நிறம், சாயல், நடை, குரல் முதலிய சகலமான அம்சங்களும், அதற்குமுன் அவனோடு பழகிய ஒரு பெண்ணினுடையவை போலவே இருந்தன. ஆகையால், அவள் யாராக இருக்கலாம் என்று நிச்சயிக்கும் பொருட்டு, அதற்குமுன் அவனோடு நெருங்கிப் பழகிய ஒவ்வொரு பெண்ணின் வடிவத்தையும் அவன் தனது மனத்தில் பாவித்துக்கொண்டு அதை அந்தக் கைதிப் பெண்ணினது வடிவத்தோடு ஒத்திட்டுப் பார்த்தான். இருந்தாலும், அவளது முகம் மாத்திரம் மூடப்பட்டு இருந்தமையால், அவன் எதையும் நிச்சயமாகக் கண்டுபிடிக்கக் கூடாமலிருந்தது.

அவ்வாறு அவன் திகைப்படைந்து அவளை உற்று நோக்கியதைக் கண்ட அந்த வடிவழகி கோகிலத்வனி போன்ற குரலால் இனிமையாகப் பேசத்தொடங்கி, ''நான் என்னுடைய முகத்தை மறைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படுகிறதாகத் தெரிகிறது. ஒரு வைராக்கியத்தினால் நான் என் முகத்தை வேண்டுமென்றே இப்படி மறைத்துக் கொண்டிருக்கிறேன். நான் சொல்வது உங்களுக்குப் பைத்தியக்கார சங்கதியாகத் தோன்றலாம். ஆனால், அதன் காரணத்தை நான் விவரித்துச் சொன்னால், அதன் பிறகு நீங்கள் நான் செய்த காரியம் சரியானது என்று ஒப்புக் கொள்வீர்கள். என்னுடைய முகத்தை நான் திறந்து விட்டிருந்ததால், எனக்கு நேரிட்ட துன்பங்களுக்கும் துயரத்துக்கும் அளவே இல்லை. என்னுடைய முகம் மகா அற்புதமான அழகுடையதாக இருக்கிறது என்று எல்லோரும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இந்த உலகத்திலுள்ள எந்தப் பெண்ணுக்கும் இப்பேர்ப்பட்ட அழகுடைய முகமே கிடையாதாம். ஆனால், ஜனங்கள் சொல்வது நிஜமோ பொய்யோ என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால், இந்த முகத்தினால், நான் பலவித கஷ்டங்களுக்கு ஆளானது மாத்திரம் உண்மை. என்னுடைய முகத்தின் அழகைப்பற்றி ஜனங்கள் புகழ்வது இந்த ஊர் முழுவதும் பரவிப்போயிருக்கிறது. எத்தனையோ பிரபுக்களும், அழகான யௌவனப் புருஷர்களும், ராஜகுமாரர்களும், உத்தியோகஸ்தர்களும் என்னை அடைய வேண்டும் என்றதுர் எண்ணங்கொண்டு பலவகையில் என்னை வருத்தி அவரவர்களால் ஆன எத்தனையோ இடைஞ்சல்களைச் செய்தனர். நான் யாருக்கும் இடம் கொடுக்கவில்லை. இதோ இந்தப்போலீஸ் கமிஷனர் கூட அதில் சேர்ந்தவர்தான். முக்கியமாக இவர்தான் என்னைப் பலவகையில் பலவந்தப் படுத்தினார். நான் இணங்காமல் ஒரே பிடிவாதமாக இருக்க அதன் பிறகு இவர் என்னைக் கொண்டுவந்து எவ்வித முகாந்திரமும் இன்றி இந்த ரகசியமான சிறைச்சாலையில்

அடைத்து வைத்துவிட்டார். நான் சுமார் இருபது நாட்களாகவே இங்கே இருந்து வருகிறேன். எனக்கு நேர்ந்த இத்தனை துன்பங்களுக்கும் என்னுடைய முகமே காரணமாக இருந்தது. ஆகையால், நான் என்னுடைய ஆத்திரத்திலும் துக்கத்திலும் என்ன செய்தேன் என்றால், இனி எந்த மனிதருக்கும் என்னுடைய முகத்தைக் காட்டக் கூடாது என்று சங்கற்பம் செய்து கொண்டு, உடனே முகமூடியால் என் முகத்தை மறைத்துக் கொண்டேன். என்னுடைய முகத்தைப் பார்த்து அதன் அழகுக்காக மாத்திரம் என்னை விரும்பாமல், என்னுடைய குணங்களை மாத்திரம் கண்டு என்மேல் பிரியம் கொள்ளும் உத்தம புருஷர் எவராகிலும் அகப்படுவாரானால், அவருக்கு மாத்திரம் என் முகத்தைத் திறந்துகாட்டி, என் பிரியத்தையும் அவர்மேல் வைக்க வேண்டும் என்பது என்னுடைய உறுதியான தீர்மானம். அவ்வளவுதான் என்னுடைய வரலாறு; அதுபோகட்டும். நமக்கு நேரமாகிறது. நாம் தப்பித்துப் போவதற்கான முயற்சியைச் செய்வோம்'' என்றாள்.

அவளது வரலாற்றைக் கேட்ட நமது கலியாணசுந்தரத்தின் மனம்கொதிப்பும் விசனமும் அடைந்தது. அந்த நகரத்தின் போலீஸ் கமிஷனர் எதற்கும் பின்வாங்காத அயோக்கிய சிகாமணி என்ற எண்ணம்கொண்ட நமது யௌவனப் புருஷன் அவளிடம் நிரம்பவும் இரக்கமடைந்து, ''பெண்ணே! உன்னுடைய வரலாற்றைக்கேட்க, என் மனம் நிரம்பவும் சங்கடப்படுகிறது. இப்படிப்பட்ட அயோக்கிய மனிதனுக்கு இந்த ராஜ்யத்தில் இவ்வளவு பெரிய பொறுப்புள்ள உத்தியோக பதவி கிடைத்திருப்பதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. உன் விஷயத்தில் நான் என்னால் ஆன உதவியைச் செய்து உன்னைத் தப்ப வைக்கிறேன். அதனால், என்னுடைய உயிர் போவதானாலும் கவலையில்லை. நீ இந்த அறைக்கு வந்த கருத்தென்ன? இதிலிருந்து நாம் எப்படித் தப்பிப் போகிறது? உன்னுடைய யோசனை என்னவென்று வெளியிடு'' என்றான்.

உடனே இந்திராபாயி, "நான் இங்கே வந்தபிறகு சில தினங்களுக்குள் இந்த வேலைக்காரியை என் வசப்படுத்திக் கொண்டு அவள் மூலமாக இந்தக் கட்டிடத்தின் அமைப்பு எப்படி இருக்கிறது என்ற விவரங்களை எல்லாம் தெரிந்து கொண்டதன்றி, எனக்கு வேண்டிய இந்தச் சாமான்களையும் வரவழைத்துக் கொண்டேன். என்னுடைய அறையில் பின் பக்கத்திலேயே ஜன்னல்கள் இருக்கின்றன. அதன் வழியாக இறங்கினால், வெளிப்பக்கத்தில் கீழே இருக்கும் முதலைகள் நிறைந்த அகழியில்போய் நான் இறங்க நேரும். அதற்காக நான் உங்களுடைய அறைக்கு வந்தேன். இந்த அறையில் ஜன்னல்கள் முன்பக்கத்தில் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். ஒரு ஜன்னலின் கம்பிகளை அறுத்துக்கொண்டு நாம் வெளியிலுள்ள தாழ்வாரத்துக்குப் போனால், அதன் வழியாக நடந்து இந்தக் கட்டிடத்தின் கடைசிக்குப் போகவேண்டும். அவ்விடத்தில் ஒரு கதவு மூடிப் பூட்டப்பட்டிருக்கிறது. இந்தத் திறவுகோல்களில் எதையாவது உபயோகித்து அந்தப் பூட்டைத் திறந்து கொண்டு அவ்விடத்தில் நூலேணியைக் கட்டிக்கொண்டு கீழே இறங்கினால், நாம் இந்தக் கட்டிடத்தின் பின்பக்கத்துக்குப் போய்ச் சேரலாம். அவ்விடத்தில் பாராக்காரர் யாரும் இல்லை. அங்கே இருந்து நாம் பக்கத்துத் தெருவுக்குள் நுழைந்து விடலாம்" என்றாள்.

அதைக்கேட்ட கலியாணசுந்தரம், "சரி; நீ சொல்வது நல்ல யோசனைதான். இப்போது சுமார் பன்னிரண்டரை மணி சமயமாயிருக்கலாம் என்று நினைக்கிறேன். நான் இந்த அரங்களை வைத்துக்கொண்டு ஜன்னல் கம்பிகளை அறுக்க எவ்வளவு காலம் பிடிக்குமோ தெரியவில்லை. கம்பி எவ்வளவு கனமிருக்கிறது என்று பார்க்கலாம்" என்று கூறியவண்ணம், தனது அறையிலிருந்த விளக்கை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு ஒரு ஜன்னலண்டை போய் அதன் கதவைத் திறந்து விட்டு கம்பியின் பருமனை ஆராய்ச்சி செய்து பார்த்துவிட்டுத்

திரும்பிவந்து, "சரி; இரண்டு கம்பிகளை நாம் அறுத்தெடுத்து விட்டால், நமக்குப் போதுமான வழி உண்டாகிவிடும். அதற்குச் சுமார் மூன்றுமணி சாவகாசம் பிடிக்குமென்று நினைக்கிறேன். அதன்பிறகு நாம் வெளியில் உள்ள இடைஞ்சல்களை எல்லாம் விலக்கிக்கொண்டு வெளியில் போனால், அநேகமாகப் பொழுது விடிந்துபோகும். ஆகையால், நான் உடனே வேலை செய்யத் துவக்குகிறேன்" என்றான்.

அதைக் கேட்ட இந்திராபாயி, "சரி; செய்யுங்கள். நான் விளக்கைப் பிடித்துக் கொள்ளுகிறேன். நீங்கள் கம்பியை அறுங்கள்" என்றாள்.

அவர்கள் அவ்வாறு சம்பாஷித்திருந்த சமயத்தில் முன்பக்கத்தில் இருந்த தாழ்வாரத்திற்கு அப்பால் இருந்த முற்றத்தின் அடியில் நின்றபடி ஒரு பாராக்காரன் கம்மலான தடித்த குரலில் பேசத்தொடங்கி, "அடே யாரப்பா அது? ஏன் ஜன்னலைத் திறந்து வைத்திருக்கிறாய்? கதவை மூடி விட்டு விளக்கை அணை. பன்னிரண்டு மணிக்குமேல் விளக்க எரியக் கூடாது என்ற உத்தரவு உனக்குத் தெரியாதா?" என்று பயங்கரமாக அதட்டிய சத்தம் உண்டாயிற்று. உடனே படிகளின் வழியாக யாரோ தடதடவென்று மேலே ஏறிவந்த ஓசையும் உண்டாயிற்று.

அதைக்கேட்ட இந்திராபாயி திடுக்கிட்டு நடுநடுங்கித் தனது கைகளைப் பிசைந்துகொண்டு, "ஐயையோ! காரியம் கெட்டுப்போய் விடும்போல் இருக்கிறதே! பாராக்காரன் மேலே ஏறி வருகிறானே! இந்தக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தால் நாம் இருவரும் அகப்பட்டுக் கொள்வோமே! என்ன செய்கிறது? எப்படியாவது நீங்கள் அவனிடம் பேச்சுக் கொடுத்து அவனை அனுப்பி விடுங்கள். நான் விசிப்பலகையில் ஒளிந்து கொள்ளுகிறேன்" என்றாள்.

உடனே கலியாணசுந்தரம் தனது கையிலிருந்த விளக்கை அணைத்துவிடவே, அந்த அறை முழுதும் இருளில் மூழ்கிப் போய் விட்டது. அடுத்த நிமிஷத்தில் பாராக்காரன் தாழ்வாரத்திற்கு வந்து, திறந்து வைக்கப்பட்டிருந்த ஜன்னலண்டை நின்று, "அடே! பதினைந்தா நம்பர்! ஏன் ஜன்னலைத் திறந்தாய்? விளக்கைக் கொளுத்திக்கொண்டு எதைப் பார்த்தாய்?" என்றான்.

உடனே கலியாணசுந்தரம் நயமாகப் பேசத் தொடங்கி, "ஐயா! கோபித்துக்கொள்ள வேண்டாம். உம்முடைய உத்தரவுப்படி இதோ விளக்கை அணைத்துவிட்டேன். ஜன்னல் கதவையும் மூடி விடுகிறேன்" என்று கூற, பாராக்காரன் சாந்தமடைந்து, "சரி; மூடிவிட்டுப் படுத்துக்கொள்" என்று அதட்டலாகக் கூறிவிட்டு அப்பால் நகர, உடனே கலியாண சுந்தரம் ஜன்னலண்டை போய், அதன் கதவை மூடித் தாளிட்டுக் கொண்டான். உடனே பாராக்காரன் படிகளின் வழியாகக் கீழே இறங்கிச் சென்ற ஓசை உண்டாகிச் சிறிது நேரத்தில் அடங்கிப் போயிற்று.

ஒரே அந்தகாரமாக இருந்த அந்த அறைக்குள், தான் அந்த யௌவனப் பெண்ணோடு தனியாக இருந்தது, கலியாண சுந்தரத்திற்கு நிரம்பவும் லஜ்ஜையாகவும் சங்கடமாகவும் இருந்தது. பெரும்பாலோரான புருஷர்கள் அப்படிப்பட்ட சந்தர்ப்பம் வாய்ந்ததைப் பற்றி ஆனந்தம் அடைவார்கள். ஆனாலும் மகா பரிசுத்த புருஷனான நமது கலியாண சுந்தரம் அதைப்பற்றி அளவற்ற வேதனை அடைந்து தத்தளித்தவனாய் அந்தப் பெண்ணை நோக்கி, "பெண்ணே! நான் என்னைப் பற்றிக் கொஞ்சமும் விசனப்படவில்லை. உன் விஷயந்தான் என் மனசை நிரம்பவும் வதைக்கிறது. இரண்டு தினங்களாக எவ்வளவோ பாடுபட்டு நீ இவ்விடத்துக்கு வந்தாய்; கடைசியில் நாம் பார்க்காத இந்த இடையூறு குறுக்கிட்டிருக்கிறதே! நாம் இப்போது என்ன செய்கிறது?" என்றான்.

உடனே இந்திராபாயி, "இதற்குள் நாம் மனத்தளர்வு அடையக் கூடாது. இன்றைக்குக் காரியம் முடியா விட்டால் நாளைய தினம் பார்த்துக்கொள்வோம்; நாம் இருளில் மெதுவாகக் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு ஓசைப்படாமல் கம்பியை அறுக்கலாம். ஆனால், அந்தப் பாராக்காரன் ஒரு வேளை விழித்துக் கொண்டிருந்து மறுபடியும் வந்தாலும் வருவான். ஆகையால், நாம் நாளையதினம் அந்த வேலையைச் செய்து முடிப்போம்" என்று கூறியவண்ணம், மெதுவாகத் தரையில் உட்கார்ந்து கொண்டாள். அதைக் கண்ட கலியாண சுந்தரம் நிரம்பவும் மகிழ்ச்சியடைந்து, "நீ பெண்ணாகப் பிறந்திருந்தாலும், நீ நிரம்பவும் தைரியசாலியாக இருக்கிறதைப் பார்க்க எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. அதிருக்கட்டும்; நீ ஏன் தரையில் உட்கார்ந்து கொள்ளுகிறாய்? அதோ விசிப்பலகை இருக்கிறதே! அதன்மேல் உட்கார்ந்து கொள்" என்றான்.

உடனே அந்தப் பெண் நிரம்பவும் தணிவான குரலில் பேசத் தொடங்கி, "நாம் இன்றையதினம் தப்பி வெளியில் போய் விடலாம் என்ற எண்ணமும் மனோதிடமும் ஒன்றுகூடி இது வரையில் எனக்குப் பலம் கொடுத்துக் கொண்டிருந்தன. இன்றைய தினம் காரியம் பலிக்கவில்லை என்பதைக் கண்டவுடனே, இப்போதுதான் களைப்புத் தோன்றுகிறது. பொறுக்கமுடியாத தாகமும், மயக்கமும் உண்டாகின்றன. அதனாலேதான் நான் கீழே உட்கார்ந்து கொண்டேன்; கொஞ்ச நேரம் இப்படியே படுத்துக்கொண்டால், சரியாகிவிடும்" என்றாள்.

அதைக்கேட்ட கலியாணசுந்தரம், "நீ தரையில் படுத்துக் கொள்ள வேண்டாம், இந்தவிசிப்பலகையில் படுத்துக் கொள். தாகத்துக்குத் தண்ணீர் கொடுக்கிறேன்; சாப்பிடு" என்றான்.

இந்திராபாயி, "முதலில் கொஞ்சம் தண்ணீர் கொடுத்தால் உங்களுக்கு நிரம்பவும் புண்ணியமுண்டு" என்று பரிதாபகரமாகக் கூறினாள்.

உடனே கலியாணசுந்தரம் அவ்விடத்தை விட்டு இருளில் தடவிக்கொண்டே தண்ணீர்ப்பானை இருந்த இடத்திற்குப் போய் ஒரு குவளையில் தண்ணீர் மொண்டு எடுத்துக்கொண்டு அவளிடம் போய், ''இதோ ஜலமிருக்கிறது; சாப்பிடு'' என்றான். அதற்கு அந்தப்பெண் மறுமொழி சொல்லவில்லை. அவன் அவளை மறுபடியும் இரண்டு மூன்று தரம் கூப்பிட்டுப் பார்க்க, அப்போதும் அவள் பேசவில்லை. அவள் மயங்கி விழுந்து விட்டாள் என்று நினைத்துக்கொண்ட அந்த யௌவனப் புருஷன் மெதுவாக அவளது உடம்பைத் தனது கையால் தட்டி அவளை எழுப்ப, அப்போதும் அவள் பேசவில்லை. அவன் உடனே அவளது தலையை எடுத்து உயர்த்தி ஒரு கையால் வாயைத் திறந்து வைத்துக்கொண்டு இன்னொரு கையிலிருந்த தண்ணீரை வாயில் வார்க்க, அவள் இரண்டு மூன்று வாய் தண்ணீர் குடித்தபிறகு, ''அப்பாடா!'' என்று சொல்லிக் கொண்டு திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து, ''நான் இப்போது எங்கே இருக்கிறேன்? நீங்கள் யார்?'' என்று கேட்ட வண்ணம் துவண்டு துவண்டு கீழே விழ, உடனே நமது கலியாணசுந்தரம் அவள் பிரக்ஞை தப்பிப் படுத்திருக்கிறாள் என்று நினைத்து, அவளை மெதுவாகத் தூக்கி எடுக்க அவள், ''ஆகா! இந்த முகமூடி மூச்சுவிட முடியாமல் மூக்கை அடைக்கிறது. இதை எடுத்து விடுகிறேன்'' என்று கூறியவண்ணம் தனது வலக்கரத்தால் அந்த முகமூடியை எடுத்துக் கீழே போட்டு விட்டாள். அடுத்த நிமிஷத்தில் அவன் அவளைத் தூக்க, அவள் அவனது மார்பில் சாய்ந்து ஆவலோடு அவனை இறுகக் கட்டிக்கொண்டு அப்படியே மயங்கித் துவள்பவள் போலப் பாசாங்கு செய்தாள். யௌவனச் சிறுவன் சகிக்க இயலாத லஜ்ஜையடைந்து அவளை விசையாக விசிப்பலகை யண்டை எடுத்துப்போக, அதற்குள் அவளது அழகிய முகம் அவனது முகத்தோடு பல தடவைகளில் உராய்ந்தது. அவளது மார்பு அவனது மார்பில் போய் அழுந்தியது. அந்தச் சங்கடங்களைச் சிறிதும் சகிக்காத கலியாணசுந்தரம் அருவருப்படைந்து

அவளை உடனே விசிப்பலகையின் மேல் படுக்க வைத்து விட்டுச் சிறிது நேரம் பொறுத்திருந்து, ''பெண்ணே! இந்திராபாயீ! உடம்பு என்ன செய்கிறது? இன்னம் கொஞ்சம் ஜலம் கொடுக்கட்டுமா?'' என்றான்.

அவள் உடனே கனிவான குரலில் பேசத் தொடங்கி, ''என் உடம்பில் தொந்திரவு ஒன்றுமில்லை. கொஞ்சம் மயக்கமாக இருக்கிறது. எழுந்திருந்தால் , கீழே தள்ளிவிடுகிறது. கொஞ்ச நேரம் படுத்திருந்தால் சரியாகிவிடும். எனக்காக நீங்கள் நிற்க வேண்டாம். என்னைத் தரையில் விட்டு நீங்கள் விசிப் பலகையில் உட்கார்ந்து கொள்ளுங்கள்'' என்றாள்.

கலியாணசுந்தரம், ''இல்லைஇல்லை. நீ கொஞ்ச நேரம் படுத்திரு. அதற்குள் என் கால் வலிக்கப் போகிறதில்லை'' என்று கூறி அவளைச் சாந்தப்படுத்தினாள்.

அதன்பிறகு கால்நாழிகை சாவகாசம் அவள் அசைவற்று ஓய்ந்து படுத்திருந்து களை தெளிந்தவளாய் மெதுவாக எழுந்து உட்கார்ந்தாள்.

உடனே கலியாணசுந்தரம், ''இப்போது உடம்பு எப்படி இருக்கிறது?''என்று பட்சமாக வினவினான்.

இந்திராபாயி, ''இப்போது சரியாய்ப் போய்விட்டது. மயக்கம் தெளிந்துவிட்டது. எனக்காக நீங்கள் எவ்வளவு பிரயாசை எடுத்துக் கொள்ளுகிறீர்கள்! என்னுடைய சொந்த அண்ணன்கூட என்னிடம் இவ்வளவு பட்சமாக நடந்து கொண்டிருக்கமாட்டான்'' என்று கூறியவண்ணம் மிகுந்த உருக்கமும் இளக்கமும் தோன்ற அவனது உடம்பைத் தடவிக் கொடுத்தாள்.

அவள் மட்டுக்கு மிஞ்சிய உருக்கம் காண்பித்ததைக் கண்ட கலியாணசுந்தரம் பலவிதமான சந்தேகம் கொள்ளத் தொடங்கி அவளை விட்டுச் சிறிது தூரம் அப்பால் நகர்ந்து நின்றான்.

உடனே அந்த மடந்தை, "சரி; இனி நான் இங்கே இருப்பது ஒழுங்கல்ல; என்னுடைய அறைக்குப் போய் விடுகிறேன். ஆனால், நீங்கள் என் உடம்பைப் பிடித்து இந்தத் துவாரத்தின் வழியாக அப்பால் தள்ளிவிட வேண்டும்'' என்று கூறிய வண்ணம் எழுந்து பக்கத்தில் இருந்த துளையண்டை போய் நின்று தனது வலுவை எல்லாம் உபயோகித்து உடம்பை ஒடுக்கிக் கொண்டு துவாரத்தில் நுழைவதற்கு இரண்டு மூன்று தரம் பிரயத்தனப்பட்டாள். உடம்பு அவளது பிரியப்படி துவாரத்தில் போகாமல் அங்கும் இங்கும் நழுவி ஓடியது. அவளது கைகால்களெல்லாம் நடுங்க ஆரம்பித்தன. அவள் உடனே திரும்பி நின்று, "ஏது! நான் இதற்குள் நுழைந்து அப்புறத்துக்குப் போகமுடியாது போலிருக்கிறது. அந்த அறையில் இருந்து நீங்கள், என்னை இந்த அறைக்குள் வலுவாக இழுத்ததை மறந்துவிட்டீர்களா! அதுபோல இப்போதும் யாராவது என்னுடைய அறையிலிருந்து என்னை இழுத்தால் அல்லது நான் அங்கே போவது சாத்தியமில்லாத காரியமாகத் தோன்றுகிறது. இந்தச் சங்கடத்துக்கு நான் என்ன செய்வேன்!'' என்று நிரம்பவும் தத்தளித்துக் கூறித் தனது கையைப் பிசைந்துகொண்டாள். அதைக்கண்ட கலியாண சுந்தரமும் அளவற்ற கலவரமடைந்து, "எப்படியாவது, பொழுது விடிவதற்குள் நீ அந்த அறைக்குப் போய்ச் சேரா விட்டால் நாளையதினம் ஜவான் இங்கே வந்து எல்லா வற்றையும் கண்டுகொள்வானே! அதன்பிறகு கமிஷனர் நம்மை எப்படிப்பட்ட தண்டனைக்கு ஆளாக்குவாரோ என்னவோ! இந்தத் தர்மசங்கடத்திலிருந்து நாம் எப்படித் தப்புகிறதென்பது தெரியவில்லையே!'' என்று கரைகடந்த சஞ்சலத்தோடு கூறினான். உடனே அந்த மடந்தை, "ஐயோ! எனக்கு மறுபடியும் மயக்கம் வருகிறதே! நான் என்ன செய்வேன்! கீழே விழுந்து விடுவேன்போல் இருக்கிறதே! சீக்கிரமாக இப்படி வந்து என்னைப் பிடித்து விசிப் பலகையின் மேல் படுக்க வையுங்கள்; சீக்கிரம் வாருங்கள்'' என்று

அவசரமாகக் கூப்பிட அதைக் கண்டு முற்றிலும் குழப்பமும் கலக்கமும் அடைந்த நமது உத்தம புருஷன் விரைவாகப் பாய்ந்து அவளைப் பிடித்து மெதுவாக நடத்தி விசிப் பலகையண்டை கொணர்ந்து, அதன்மேல் படுக்கவைக்க அவள், ''ஐயோ! என்னைப் படுக்கவைக்க வேண்டாம். என் உடம்பு பறந்துபோய்விடும் போலத் தவிக்கிறது, என்னை இப்படியே கட்டிக் கொண்டிருங்கள்'' என்று நிரம்பவும் உருக்கமாகவும் கனிவாகவும் கூறி, அவனைப் பிடித்திருந்த பிடியை விடாமல் கட்டிலடங்கா மோக ஆவேசத்தோடு அவனது உடம்பைப் பிடித்து இறுகத் தழுவி அவனது முகத்தில் தனது முகத்தை வைத்து ஆசையோடு அழுத்தினாள்.

அதைக் கண்ட கலியாண சுந்தரம் திக்பிரமை கொண்டு அது கனவோ நினைவோ என்று சந்தேகித்து, அந்தப்பெண் உண்மையில் மயக்கம் கொள்ளவில்லை என்றும், அவள் தன்மீது மோகம் கொண்டு தன்னிடம் ஸரஸலீலைகள் புரியத் தொடங்குகிறாள் என்றும் நிச்சயமாக உணர்ந்து, அந்த மகா விபரீதமான அபாய நிலைமையில் தான் என்ன செய்வது என்பதை அறியாமல் இரண்டொரு நிமிஷம் தனது உடம்பை அப்படியே விட்டிருந்தான்.

## 26-வது அதிகாரம்

# இருவரும் கெட்டால், ஏச்சுமில்லை, பேச்சுமில்லை

**தா**ம் வேறே யாரோ ஒரு பெண்ணினது வருகையை எதிர்பார்த்திருக்கத் தமது தம்பியினது மகளான லீலாவதி வந்து தோன்றியதைக் கண்ட மருங்காபுரி ஜெமீந்தார் பிரமித்துப் போய்த் தாம் என்ன செய்வது என்பதையாவது, என்ன பேசுவது என்பதையாவது அறியாதவராய்க் கல்லாய்ச் சமைந்து

போனார். அதுவரையில் மகா உத்தமிபோல நடந்து வந்த நற்குணவதியான லீலாவதி அப்படிப்பட்ட இழிந்த காரியத்தில் தலையிடுவாளா என்ற சந்தேகம் தோன்றி அவரது மனதை உலப்பியது. ஆகையால், அங்கே வந்தவள் உண்மையில் லீலாவதி தானோ, அல்லது, அவளைப் போன்ற தோற்றமுடைய வேறு பெண்ணோ என்ற ஐயமும் தோன்றியது. மருங்காபுரி ஜெமீந்தார் தமது இளம்பிராயத்திலிருந்து, அப்படிப்பட்ட துன்மார்க்கச் செய்கைகளைச் செய்து செய்து பழகிய மனிதராக இருந்தாலும், அந்தச் சமயத்தில் அவரது மனம் பட்ட பாடும் அவர் அடைந்த அவமானமும் அளவற்றன என்றே கூற வேண்டும். உலகில் மனிதர் பிறரது மனைவியரைக் கண்டு அவரது கற்பை அற்பமாக மதித்து, அவர் மீது எளிதில் துர்மோகங்கொண்டு அதனால் பெரிதும் இன்புறுவது உண்டு. ஆனால் தமது மனைவியரைக் கண்டு அன்னிய புருஷன் அவ்வாறு மோகம் கொள்கிறான் என்பதை அவர்கள் அறிவார்களாயின் அவர்களுக்கு உண்டாகும் கோபத்திற்கும், பதைப்பிற்கும் அளவு சொல்ல இயலாது. பெரும்பாலோரான மனிதருக்குத் தமது மானம் என்றால் மாத்திரம், அது மனதில் சுருக்கென்று தைக்கிறதே அன்றிப் பிறரது மானம் என்றால் சிறிதும் உறைக்கிறதில்லை. அதுபோல, நமது மருங்காபுரிக் கிழவர் தமது தம்பியினது புத்திரியான லீலாவதி விலை மகளினது தொழிலில் இறங்கியிருக்கிறாள் என்பதை உணர, அந்த அவமானமும் சங்கடமும் அவரது மனதில் பசுமரத்தாணி போலத் தைத்து ஊடுருவிச் சென்றன. ஆகையால், அவர் லீலாவதியினது முகத்தில் விழிக்கவும் வெட்கிக் கட்டிலை விட்டுக் கீழே இறங்கி, ஓர் ஆசனத்தில் உட்கார்ந்து தமது கைகளால் முகத்தை மறைத்துக்கொண்டு குழந்தை போலத் தேம்பித் தேம்பி அழத்தொடங்கினார். எப்போதும் மனிதர் நன்றாக ஆய்ந்தோய்ந்து பாராமல் அப்படி மூடுமந்திரமாக ஸ்திரீகளை வரவழைத்தால், அதனால் அப்படிப்பட்ட பலவகைப்பட்ட எதிர்பாராத எண்ணிறந்த துன்பங்களும்

துயரங்களும் வந்து நேரும் என்பது அவரது மனதில் நன்றாகப் பட்டது, அதுவுமன்றி, அதற்கு முன் அவரது மனதில் பூடகமாக இருந்த விஷயங்கள் எல்லாம் ஒரு நொடியில் வெட்டவெளிச்சமாயின. அதற்கு முந்திய திங்கட்கிழமை இரவில் தாமும் இளவரசரும் அம்மன் பேட்டையிலிருந்து வந்த காலத்தில், தங்களைப் பலவந்தமாகப் பிடித்துக்கொண்டு போவதற்குக் காரணமாக இருந்தவளும், பார்சீ ஜாதி ஸ்திரீயைப் போல வேஷம்போட்டு வந்து இளவரசரிடம் ஜெகஜால வித்தைகள் காட்டி அவரது மதியை மயக்கி வஞ்சித்தவளும் தமது தம்பியின் மகளான லீலாவதிதான் என்ற உண்மை உடனே விளங்கிவிட்டது. அதுவுமன்றி புதன்கிழமை அன்று தாம் தமது மாளிகையில் வெல்வெட்டு மாடத்திலிருந்து திருடனிடத்திலிருந்து தினசரி டைரியை எதிர்பார்த்திருந்தபோது, எவருக்கும் தெரியாமல் அந்த டைரியைக் கொணர்ந்து பூத்தொட்டிக்குள் வைத்தவளும் தமது லீலாவதியே என்பதும் சந்தேகமறத் தெரிந்தது. கடைசியில், அவள் இன்னான் என்பது தெரியாத ஓர் அன்னியனிடம், இரண்டாயிரம் ரூபாயைக் கருதித் தனது கற்பை இழக்கத் துணிந்து வந்தாள் என்ற விஷயமும், அதுபோலவே, அவள் அதற்கு முன் எத்தனை மனிதரிடத்தில் நடந்து கொண்டிருப்பாளோ என்ற எண்ணமும் எழுந்து, அவரது மனம் முறிந்து போகும்படி செய்துவிடவே, அவர் முற்றிலும் கலங்கிக் கலகலத்துத் தலையை நிமிர்த்தமாட்டாமல் அப்படியே உட்கார்ந்து போனார். மகா ரூபவதியும், நற்குணவதியுமான தமது தம்பியினது புதல்வி ஒருத்தியின் இடத்தில் மாத்திரம் அவர் உண்மையான பிரேமையும் அந்தரங்கமான வாஞ்சையும் வைத்திருந்தார். ஆதலால், தாம் கொஞ்சமும் சந்தேகியாதபடி அவள் அவ்வளவு தூரம் கெட்ட நடவடிக்கைகளில் இறங்கி இருந்தது, அவரால் தாங்க முடியாத மகா பெரிய இடியாக இருக்கவே, அவர் நிரம்பவும் தத்தளித்துப் பரம சங்கடமான நிலைமையை அடைந்தார். அதுபோலவே லீலாவதியின்

அப்போதைய நிலைமையும் தோற்றமும் உள்ளபடி எடுத்துக் கூற முற்றிலும் அசாத்தியமானதாக இருந்தன. பெருத்த திகிலும், வெட்கமும் எழுந்து அவளது உடம்பைக் குன்றச் செய்தன. அவளது மனம் பட்டபாட்டை, நரக வேதனைக்கே ஒப்பிட வேண்டும் அன்றி வேறல்ல. அவளது அழகிய மெல்லிய சரீரம் வெடவெடவென்று நடுங்குகிறது. அவள் தனது சேலைத் தலைப்பால் தனது முகத்தை மூடிக்கொண்டு மனம் நொந்து இரத்தக் கண்ணீர் விடுத்து விம்மி விம்மி அழுதவளாய், அவரது பாதத்தடியில் வீழ்ந்து அனலிடு புழுவெனத் தவித்து உருகுகிறாள். உலையில் கொதிக்கும் தண்ணீரைக் காட்டிலும் அதிகச் சூடு பொருந்திய கண்ணீர் அவளது அழகிய கன்னங்களைத் தீய்த்த வண்ணம் கீழே வழிந்து அவளது ஆடைகளையும், அவள் இருந்த தரையையும் நனைத்து ஜெமீந்தாரினது கால்களையும் சுட்டது. மகா அற்புத வனப்பு வாய்ந்த அந்தப்பெண் பாவையினது அங்கம் முழுதும் சிறிது நேரத்தில் உருகித் தண்ணீராக மாறி முற்றிலும் மறைந்து போய்விடுமோ என அஞ்சத்தக்க மகா பரிதாபகரமான நிலைமையில் அந்த அணங்கு ஆகுலித்துக் கிடந்தாள்.

அவ்வாறு அவர்கள் இருவரும் தேற்றுவார் இன்றியும் தேற்ற வொண்ணா விசன நிலைமையில் ஆழ்ந்தும் சிறிது நேரம் தத்தளித்திருக்க, அவர்களது சஞ்சலமும் சங்கடமும் ஒரு சிறிது தணிவடைந்தன. அளவற்ற விசனமும், அவமானமும் தோற்றுவித்த பார்வையாக அவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் பார்த்தனர். உடனே கிழவர் தாங்கள் இருந்த இடம் இன்னது என்பதை அப்போது நினைத்துக் கொண்டவர்போலச் சடேரென்று எழுந்துநின்று, ''லீலாவதி! இந்த இடம் இனி நாம் இருப்பதற்குத் தகுந்ததே அல்ல. ஒரு வண்டி கொண்டுவரச் செய்கிறேன். நாம் இருவரும் நம்முடைய ஜாகைக்குப் போவோம். நீ உன்னுடைய கண்ணைத் துடைத்துக்கொள். நமக்குள் ஏதோ விபரீத சங்கதி நடந்திருக்கிறதென்று ஹேமா

பாயி சந்தேகப்படுவாள். ஆகையால், நீ உன்னுடைய விசனத்தைக் காட்டாமல், சாதாரணமாக இரு'' என்று அன்பாகக் கூறியபின் அந்த அறையின் கதவண்டை போய் நின்று ஹேமாபாயியைக் கூப்பிட; அவள் உடனே வந்து ஆஜரானாள்.

அவளைக் கண்ட ஜெமீந்தார், ''ஹேமாபாயீ! எனக்கு இந்த இடம் சரிப்படவில்லை. இந்தப் பெண்ணை நான் என்னுடைய ஜாகைக்கே அழைத்துக்கொண்டுபோக உத்தேசிக்கிறேன். இவளும் அங்கே வர இணங்கிவிட்டாள். ஒரு வண்டி வேண்டும். தயார்ப்படுத்து. உனக்குச் சேரவேண்டிய சன்மானத்தை நான் நாளையதினம் உன்னிடம் சேர்த்து விடுகிறேன்'' என்றார். அதைக் கேட்ட ஹேமாபாயி ஒருவாறு திடுக்கிட்டு அவ்வளவு சீக்கிரத்தில் அவர்கள் அவ்வளவு அதிக அந்தரங்க சிநேகம் செய்து கொண்டதையும், அவ்விடத்தை விட்டுப் போகத் தீர்மானித்துக் கொண்டதையும் பற்றி, அவள் நிரம்பவும் வியப்பு அடைந்தாள். ஆனாலும், அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல் வெளியில் போய்விட்டுக் கால்நாழிகை சாவகாசத்தில் திரும்பி வந்து வண்டி ஆயத்தமாக நிற்கிறது என்று உத்தரம் கூறினாள். உடனே ஜெமீந்தாரும் லீலாவதியும் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுக் கீழே இறங்கி, வாசலில் காத்திருந்த வண்டியில் ஏறி உட்கார்ந்துகொள்ள, வண்டி புறப்பட்டு பத்து நிமிஷ நேரத்தில் ஜெமீந்தாரினது மாளிகையை அடைந்தது. அவர்கள் இருவரும் ஹேமாபாயியை விட்டுப் பிரியும் முன் அவளிடத்தில் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் மௌனமாகவே வந்ததன்றி, வண்டியில் இருந்தபோதும் அவர்கள் ஒருவரோ டொருவர் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் இருந்தனர். அப்படிப்பட்ட விபரீதமான நிலைமையில் தாங்கள் இருவரும் இருப்பதைப் பற்றி அவர்களிருவரும் சகிக்கவொண்ணாத சஞ்சலம் அடைந்ததன்றி ஒருவரையொருவர் ஏறெடுத்துப் பார்க்கவும் வெட்கி நிரம்பவும் சங்கடத்திற்கு ஆளாயிருந்தனர். தனது

முந்திய நடவடிக்கைகளை எல்லாம் அவர் அறிந்து கொண்டிருப்பாரே என்று லீலாவதி நினைத்துக் கலங்கியது போல, ஜெமீந்தாரும் தாம் காமாதுர நடத்தையுள்ளவர் என்பதைத் தமது தம்பி மகள் ஸ்பஷ்டமாக அறிந்து கொண்டிருப்பாள் என்ற நினைவினால் தவிக்க, இருவரும் அந்தச் சமயத்தில் ஒன்றாகச் சேர்ந்திருந்தது அவர்களுக்குப் பரம வேதனையாக இருந்தது.

இருந்தாலும், அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிய மாட்டாமல் இருவரும் ஜெமீந்தாரினது மாளிகையை அடைந்து நேராக மேன்மாடத்திற்குச் சென்று வெல்வெட்டு மாடத்தை அடைந்தனர். ஜெமீந்தார் தமது ஆசனத்தில் அமர்ந்த வண்ணம் லீலாவதியையும் தமக்கருகில் இருந்த ஒரு ஸோபாவின் மீது உட்காரச் செய்தார். அவர் தன்னிடத்தில் என்ன விஷயத்தைப் பற்றிப் பேசுவாரோ என்ற கவலையும் திகிலும் கொண்ட லீலாவதி குன்றிக் குறுகி நாணிக் கோணி வேறு திக்கை நோக்கிய வண்ணம் உட்கார்ந்து கொண்டாள்.

உடனே ஜெமீந்தார் நிரம்பவும் இரக்கமாகவும் வாஞ்சையோடும் பேசத்தொடங்கி, ''அம்மா லீலாவதி! இப்போது நேர்ந்த விஷயத்தைப் பற்றி நான் உன் மேல் ஆயாசப்பட்டு ஏதேனும் கடுமையான வார்த்தைகளை உபயோகிப்பேனோ என்று நீ கொஞ்சமும் பயப்பட வேண்டாம். உன்னுடைய மகா பரிதாபகரமான வரலாற்றை எல்லாம் நான் ஏற்கெனவே யூகித்துக்கொண்டேன். ஆனாலும், விவரங்களை எல்லாம் உன்னுடைய வாய்மூலமாகக் கேட்டறிந்து கொள்ள நினைக்கிறேன். உன்னுடைய புருஷன் பரம துஷ்டன் என்பது எனக்கு முன்னமேயே தெரிந்த விஷயம். ஆனாலும், அவன் உன்னை இப்படிப்பட்ட மானக்கேட்டுக்கு இலக்காக்குவான் என்று நான் கனவிலும் நினைக்கவே இல்லை. அவன் எதற்கும் பின் வாங்காப் பரமசண்டாளன் என்பது இன்றைய சங்கதியிலிருந்து எனக்கு நன்றாகத் தெரிகிறது. நான்

இப்போது உன்னுடைய வரலாற்றைக் கேட்பது, உன் மனசை அநாவசியமாகப் புண்படுத்த வேண்டுமென்ற எண்ணத் தோடு அல்ல. மகா துஷ்டனான உன் புருஷனுடைய கொடுங் கோன்மையிலிருந்து உன்னைத் தப்பவைத்து உன்னைக் காப்பாற்ற வேண்டும் என்ற கருத்தோடு நான் உன்னுடைய ரகசியங்களை அறிந்துகொள்ளப் பிரியப்படுகிறேன்'' என்று கூறினார். அவரது வாத்சல்யம் ததும்பிய சொற்களைக் கேட்ட லீலாவதி ஒருவாறு மனோதிடமும் சஞ்சலக் குறைவும் அடைந்தாள். ஆனாலும், முற்றிலும் தளர்வடைந்தவளாய், ''அப்பா! என்னுடைய வரலாற்றை நான் வாயில் வைத்து உங்களிடம் சொல்லவும் வேண்டுமா? என்னைவிட அதிகமாக அழிந்துபோனவளும், கெட்டுப்போனவளும், துன்மார்க்கத்தில் இறங்கியவளும் வேறே யாரும் இருக்க மாட்டாள் என்பதை நீங்கள் நிதர்சனமாகக் கண்டு கொண்டீர்கள். இப்படிப்பட்ட இழிவும் மானக்கேடும் அடைந்தபின் நான் உயிர்சுமந்து இனி வாழக் கூட வேண்டுமா? நீங்கள் உடனே உயிரைக் கொல்லக்கூடிய விஷம் கொஞ்சம் தருவித்துக் கொடுத்தால் நான் இப்போதே சாப்பிட்டு இவ்விடத்திலேயே உயிரை விட்டு விடுகிறேன். நான் பெண்ணாகப் பிறந்து உலகத்தி லிருந்து இதுவரையில் அனுபவித்த சுகம் போதுமானது. இனி ஒரு நொடி நேரமாவது எனக்கு இந்த உலகத்தில் இருக்கப் பிடிக்கவில்லை'' என்று நிரம்பவும் கலக்கமாகவும் பரிதாபகர மாகவும் இறைஞ்சிக் கூறித் தனது கைகளைப் பிசைந்து கொண்டாள்.

ஜெமீந்தார் முன்னிலும் பன்மடங்கு அதிக வாஞ்சையும் உருக்கமும் தோற்றுவித்தவராய் அவளை நோக்கி, ''குழந்தாய் லீலாவதி! பதறாதே; உன்னுடைய மனசைச் சமாதானப்படுத்திக் கொள். இப்போது ஒன்றும் முழுகிப் போகவில்லை. நல்லவேளையாக நீயும் நானும் தானே சந்தித்தோம்; வேறே அன்னிய புருஷனோடு உனக்குச் சந்திப்பு ஏற்பட்டிருந்தால், அது

உண்மையிலேயே இழிவும் வெட்கக் கேடுமான விஷயந்தான். அப்படி நேராமல் நாம் இருவரும் சந்தித்தது ஒருவிதத்தில் நன்மை என்றே நான் கருத வேண்டும். இப்போது ஏற்பட்ட இழிவும் மானக்கேடும் நம் இருவருக்கும் நேர்ந்ததாக எண்ணவேண்டுமேயன்றி உனக்கு மாத்திரம் உண்டானதாக எப்படி நினைக்கிறது? ஆகா! நாம் இருவரும் எப்பேர்ப்பட்ட கேவலமான இடத்தில் சந்தித்தோம்! நாம் ஒருவரை ஒருவர் கண்டபோது உன் மனம் பட்டபாடும், என் மனம் பட்டபாடும் கணக்கில் அடங்குமா? நம் இருவருக்கும் இப்படிப்பட்ட எங்குமில்லாத மானக்கேடு நேர்ந்ததற்கு முக்கியமாக நானே காரணபூதமானவனாக இருக்கிறேன். தெய்வமே என்று வீட்டில் இருந்த உன்னைக் கண்டுபிடித்து அழைத்துக்கொண்டு வருவதற்கு நான் எத்தனையோ பாடுபட்டுப் பலவகையான கண்ணிகள் வைத்தேன். ஆகையால், நான் என்னையே நொந்து கொள்ள வேண்டும். அன்றி, உன்மேல் குறை கூறுவது நியாய மாகுமா? ஆனால், இன்னாள்தான் வரப் போகிறாள் என்பது எனக்கு மாத்திரம் முன்னாகவே கொஞ்சம் தெரிந்திருக்கு மானால், ஆகா! இப்பேர்ப்பட்ட விபரீதக் காரியம் நடந்திருக்குமா? ஒரு நாளும் இல்லை'' என்றார்.

உடனே லீலாவதி நிரம்பவும் விசனத்தோடு தேம்பித் தேம்பி அழுது, ''அப்பா! எப்படி இருந்தாலும்நீங்கள் ஆண்பிள்ளை; ஆண் பிள்ளைகள் இந்த விஷயத்தில் எப்படி நடந்து கொண்டாலும் அதனால் அவர்களுக்குக் கொஞ்சமும் இழிவாவது மானக்கேடாவது உண்டாகப்போவதில்லை. எங்களுடைய நிலைமையோ அப்படிப்பட்டதல்ல. பெண் பிள்ளைகளின் நடத்தையில் கொஞ்சம் சம்சயம் ஏற்பட்டாலும், அவர்கள் உயிரோடு இருப்பதைவிட இறந்து போவதே உசிதமானது'' என்றாள்.

ஜெமீந்தார், ''குழந்தாய் லீலாவதி! நீ உன் மனசை அநாவசியமாக வதைத்துக் கொள்ளுகிறாய்; இன்றைய தினம்

ஹேமாபாயின் வீட்டுக்குவந்தது வேறே எவருக்கும் தெரியாது. ஆகையால், உன்னைப் பற்றி இழிவாகவாவது தூஷணையாக வாவது பேசக்கூடியவர்கள் யாரும் இல்லை. ஆகையால், நடந்துபோன விஷயத்தை வைத்துக் கொண்டு திரும்பத் திரும்பப் பேசி நாம் அநாவசியமான சங்கடத்தை ஏன் விலைக்கு வாங்கிக்கொள்ள வேண்டும்? போனதை யெல்லாம் விட்டு, இனி நடக்க வேண்டியதைப் பற்றி நாம் பேச வேண்டும். அதற்குமுன் நான் உன்னுடைய அந்தரங்க விஷயங்கள் எல்லாம் அறிந்துகொள்ளப் பிரியப்படுகிறேன், ஆகையால், நீ வீண் காலஹரணம் செய்யாமல் சங்கதியைச் சொல்'' என்று வற்புறுத்திக் கூறினார். உடனே லீலாவதி மறுபடியும் விரக்தியாகவே பேசத் தொடங்கி, ''அப்பா! நான் என்ன சங்கதியை எடுத்துச் சொல்லப்போகிறேன்? என் மனம் முழுதும் குழம்பிப்போய் விட்டது. ஆகையால், எதைச் சொல்வது என்பது எனக்குத் தெரியவில்லை. நீங்கள் ஒவ்வொரு விஷயமாகக் கேட்டால், நான் அதற்கு உத்தரம் சொல்லுகிறேன்'' என்றாள்.

அதைக்கேட்ட ஜெமீந்தார் சிறிது நேரம் தயங்கினார். தாம் வாயில் வைத்துப் பிரஸ்தாபிக்கத் தகாத அந்த விஷயங்களை எல்லாம் தாம் அவளிடத்தில் எப்படிக் கேட்பது என்ற ஒருவிதக் கிலேசமும் சஞ்சலமும் தோன்றியது. ஆனாலும், அவர் ஒருவாறு மறைத்துப் பேச நினைத்து, ''சரி; அப்படியே ஆகட்டும், நான் கேட்பதற்கு நீ சரியான மறுமொழி சொல்லிக் கொண்டுவா. முன்னொரு நாள் நடு இரவில் நாங்கள் அம்மன் பேட்டையிலிருந்து வந்துகொண்டிருந்த காலத்தில் சில திருடர் எங்களைப் பிடித்து பலவந்தமாக மாரியம்மன் கோயிலிலுள்ள உங்கள் ஜாகைக்குக் கொண்டு வந்தார்களே. அன்றைய தினம் பார்சீ ஜாதி ஸ்திரீ போல அலங்காரம் செய்து கொண்டு வந்தது நீதான் என்று நான் கேள்வியுற்றேன். அது உண்மைதானா? என்ன கருத்தோடு அப்படிச் செய்தது? அன்றைய தினம் நீ

செய்த காரியம் எல்லாம் உன் புருஷனுடைய கட்டாயத்தின் மேல் செய்யப்பட்டதா? அல்லது நீயாகவே செய்ததா?'' என்றார்.

அதைக்கேட்ட லீலாவதி வெட்கமும் விசனமும் அடைந்தவளாய்க் கீழே குனிந்துகொண்டு, ''ஆம்; அப்பா! என் புருஷன் என்னைப் படுத்தி வைக்கும்பாட்டை நான் என்ன வென்று வெளியிடுவேன்! அவர் என்னை மகா கொடுமையாக நடத்தி நிமிஷத்துக்கு நிமிஷம் சித்திரவதை செய்கிறார்; அவர் சொல்வதை எல்லாம் நான் செய்யாவிட்டால், என்னைக் கொன்றுவிடுவதாகப் பயமுறுத்துகிறார். அவருக்கு உண்டாகும் கோபவெறியில் அவர் எப்படிப்பட்ட கொடிய காரியத்தையும் நிறைவேற்றக் கூடிய மனிதராக இருக்கிறார். அவரோடுகூட ஒரு நிமிஷ நேரம் இருந்து காலம் தள்ளுவது எமவாதனையாக இருக்கிறது. அவருடைய மிரட்டலுக்கும், உருட்டலுக்கும் பயந்து நான் அவருடைய பிரியப்படி நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அன்றைய தினம் நடந்த விஷயமெல்லாம் அவருடைய தூண்டுதலின் மேலேதான் நடந்தது. என் மனசுக்கு முற்றிலும் விரோதமாகவே நான் அன்றையதினம் அந்தக் காரியத்தில் இறங்கினேன்'' என்றாள்.

ஜெமீந்தார், ''அது இருக்கட்டும். அன்றையதினம் நீ இளவரசரிடத்தில் ஏதோ ஒரு காகிதத்தில் கையெழுத்தும் முத்திரையையும் வாங்கிக் கொண்டாயே, அது எதற்காக?'' என்றார்.

லீலாவதி, ''அது ஒரு மோசக்கருத்தான காரியம். அந்த தஸ்தாவேஜியில் இளவரசருடைய கையெழுத்தை வாங்குவதற்காகவே அத்தனை ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. அன்றையதினம் நான் இளவரசரிடம் கையெழுத்து வாங்கின காகிதம் ஒன்றின்மேல் ஒன்றாக ஒட்டப்பட்ட இரட்டைக் காகிதம். ஆனால், மேல் பக்கத்திலிருந்த காகிதம் நீளக்குறை வானது. ஆகையால், இளவரசர் கையெழுத்துச் செய்து முத்திரை

வைத்தது அடிக் காகிதத்தில். அடிக்காகிதத்தில் எழுதப் பட்டிருந்த விஷயம்வேறு; மேல் காகிதத்தில் எழுதப்பட்டிருந்த விஷயம்வேறு. மேல் காகிதத்தில் எழுதப்பட்டிருந்த விஷயத்தைத்தான் அவர் படித்துப் பார்த்தார். அடியில் இன்னொரு காகிதம் இருந்தது என்பதையும், தாம் கையெழுத்துச் செய்தது அடிக்காகிதத்தில் என்பதையும், அவர் சந்தேகிக்கவே இல்லை. கொஞ்சகாலத்துக்கு முன் என்னுடைய புருஷர் அவருடைய சிநேகிதருள் ஒருவரான கோபண்ணா என்பவரோடு சண்டையிட்டு அவரைக் குத்திக் கொன்று விட்டார். அவருடைய மற்ற சிநேகிதர்கள் அவரை உடனே வெளியில் அனுப்பியதன்றி இந்த ராஜ்ஜியத்தைவிட்டு மைசூர் ராஜ்ஜியத்துக்கு ஓடிப்போகும் படி சொல்லியனுப்பினார்களாம். ஆகையால், அவர் என்னையும் அழைத்துக்கொண்டு மைசூருக்குப் போனார். நாங்கள் அவ்விடத்தில் கொஞ்சகாலம் இருந்தோம். இந்த ஊரைவிட்டு எப்போதும் அவ்விடத்திலேயே இருப்பது அவருடைய மனசுக்குப் பிடிக்கவில்லை. ஆகையால், அவர் நிரம்பவும் ஆழ்ந்து யோசனை செய்து, ஒருவிதமான தந்திரம் செய்யவேண்டும் என்று முடிவுகட்டிக் கொண்டு என்னையும் அழைத்துக்கொண்டு எவருக்கும் தெரியாமல் மாரியம்மன் கோவிலில் இருந்த ஒரு பங்களாவில் ஜாகை வைத்துக்கொண்டு உங்களைப் பலவந்தமாக அங்கே கொண்டு வரச் செய்தார்; என்னைப் பார்சீ ஜாதிப் பெண்போல அலங்கரித்து இளவரசரிடம் அனுப்பி அவரை மயக்கி அந்தக் காகிதத்தில் கையெழுத்து வாங்கும்படி வற்புறுத்தினார். நான் அப்படியே செய்து, அவரோடு சம்பந்தப்படாமல், தப்பித்துப் போய்விட்டேன். நாங்கள் சந்தித்த அறையிலிருந்த பீரோக்களுக்குப் பின்னால் மறைவான ஒரு வழி இருக்கிறது. அந்த வழியால் நான் வெளியில் போய்விட்டேன்'' என்றாள்.

ஜெமீந்தார் நிரம்பவும் வியப்பும் விசனமும் அடைந்து, ''ஆகா! என்ன மோசம்! என்ன வஞ்சகம்! இளவரசரிடம் மோசடியாகக் கையெழுத்து வாங்குவதற்காகவா அவன்

அவ்வளவு தந்திரம் செய்தான்! அவனுடைய புத்தி எப்படிப்பட்ட துன்மார்க்கங்களில் செல்லுகிறது பார்த்தாயா? அடடா! என்ன துர்ப்புத்தி! என்ன துர்ப்புத்தி! அதிருக்கட்டும். நீ கையெழுத்து வாங்கிய அடிக் காகிதத்தில் எழுதப்பட்டிருந்த விஷயம் என்ன?'' என்றார்.

லீலாவதி அந்த விஷயத்தை வெளியிட நிரம்பவும் கிலேசம் அடைந்தவளாய்ச் சிறிது நேரம் தயங்கியபின், ''அது முழுமோசமான சங்கதி. இளவரசர் என்னுடைய கற்பை அழித்துவிட்டதாகவும், அதை என் புருஷர் நேரில் கண்டுபிடித்ததாகவும், அந்த விஷயத்தைக் கருதி இளவரசர் என் புருஷரிடத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாகவும், அதுவுமன்றி, என் புருஷர் செய்த கொலைக்குற்றத்தின் விஷயமாக, அவருக்கு எவ்விதத் தண்டனை கிடைப்பதாக இருந்தாலும், இளவரசர் தம்முடைய முடிவான அதிகாரத்தை உபயோகப்படுத்தி அந்தத் தண்டனையை ரத்து செய்து வைப்பதற்கு இணங்குவதாகவும், இளவரசர் அப்படிச் செய்யத் தவறினால், என் புருஷர் அந்தக் கடிதத்தை வெளிப்படுத்தி இளவரசரின் மேல் தாவா தொடரலாம் என்றும் இளவரசர் எழுதிக்கொடுத்ததுபோல அந்தக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அதிலேதான் இளவரசருடைய கையெழுத்தும் முத்திரையும் வாங்கப்பட்டன,'' என்றாள். ஜெமீந்தார், ''ஓகோ! அப்படியா சங்கதி! இப்போதுதான் உண்மை இன்னதென விளங்குகிறது. அதிருக்கட்டும். இளவரசரிடத்தில் மோசடியாகக் கையெழுத்து வாங்குவதற்காக அவரைப் பலவந்தப்படுத்திக் கொண்டு போக வேண்டியிருந்தது. என்னையும் கொண்டுபோய், என்னிட மிருந்த சொத்துக்களையெல்லாம் அபகரித்துக் கொண்டதன்றி, என்னுடைய தினசரி டைரிப் புஸ்தகத்திற்கும் பணம் கேட்க வேண்டிய காரணம் என்ன? அதுவும் உன் புருஷன் செய்த காரியமா? அல்லது, அவனுக்கு உதவியாக வந்த திருடர்கள் தாங்களாகவே செய்த காரியமா?'' என்றார்.

லீலாவதி நிரம்பவும் விசனத்தோடு பேசத்தொடங்கி, ''நீங்களும் அவரோடு கொண்டுவரப்பட்டீர்கள் என்பதும், கொள்ளை அடிக்கப்பட்டீர்கள் என்பதும் எனக்கு அன்றைய தினம் இரவில் அறிவிக்கப்படவில்லை. மறுநாட் காலையிலே தான் என் புருஷர் அந்த விஷயத்தை என்னிடம் வெளியிட்டு அதைப் பற்றி நிரம்பவும் சந்தோஷப்பட்டுக் கொண்டார். அந்தச் செய்தியைக் கேட்டவுடனே, என் மனம் பட்டபாட்டை இவ்வளவு அவ்வளவென்று சொல்ல முடியாது. நீங்களும் இளவரசரோடு வந்திருப்பதாகத் திருடர் சொல்லக்கேட்டு, என் புருஷர் உங்களிடத்திலுள்ள பொருள்களை எல்லாம் அபகரித்துக் கொள்ளும்படி உத்தரவு செய்தாராம். அதைக் கேட்டபோது, என் மனமும் உடம்பும் பதறிப் போயின''என்று நிரம்பவும் உருக்கமாகக் கூறினாள்.

ஜெமீந்தார், ''ஆகா! உனக்கு எப்பேர்ப்பட்ட மேலான குணமுடைய புருஷன் வந்து வாய்த்தான் பார்த்தாயா? அன்றையதினம் காரியம் அப்படி நடந்த காலத்தில், எல்லாவற்றிற்கும் மூலாதாரமானவன் உன் புருஷன்தான் என்பதை நான் சொப்பனத்திலும் நினைக்கவே இல்லை. அதுவுமன்றி, அப்படிப் பார்சீ ஜாதி ஸ்திரீயாக நீதான் வந்திருப்பாய் என்று நான் சந்தேகப்படக் கொஞ்சமும் ஏதுவே இல்லை. அதிருக்கட்டும். அதன்பிறகு புதன்கிழமையன்று தினசரி டைரிப் புஸ்தகத்தைக் கொண்டுவந்து வைத்ததும் நீ தானே?'' என்றார்.

லீலாவதி, ''ஆம். நான்தான். என்னைத்தவிர வேறே யார் வந்து அதை உங்களிடம் கொடுத்தாலும், நீங்கள் அவனைத் தொடர்ந்து வரும்படி ஆளை அனுப்பி உண்மையைக் கண்டுபிடித்து விடுவீர்கள் என்ற எண்ணத்தினால் என் புருஷர் என்னையே அனுப்பினார். நான் அந்தக் காரியத்தைச் செய்ய என்னால் ஆகாது என்று எவ்வளவோ சொல்லிப் பிடிவாதம் செய்தும், அழுதும் பார்த்தேன். அவர் என்னைவிடவே இல்லை.

நான்தான் போக வேண்டும் என்றும், இன்னாரால் தான் அந்தக் காரியம் நடந்தது என்பது உங்களுக்குத் தெரியாதபடி டைரிப் புஸ்தகத்தை உங்களிடம் சேர்த்துவிடுவது அன்றி, உங்களிடம் எப்படியாவது இரண்டாயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு வந்தே தீரவேண்டும் என்றும் அவர் கட்டாயப் படுத்தி என்னை மிரட்டி பயமுறுத்தினார். அதைத் தடுக்க மாட்டாதவளாய் நான் புறப்பட்டுவந்து, உங்களிடம் பணவுதவி வேண்டினேன். நீங்கள் இரும்புப் பெட்டிக்குப் போன காலத்தில், உங்களுக்குத் தெரியாமல் டைரிப் புஸ்தகத்தைப் புஷ்பத்தொட்டிக்குள் வைத்துவிட்டு, ஒன்றையும் அறியாதவள் போல இருந்தேன். நீங்கள் நல்ல வேளையாக ஐயாயிரம் ரூபாய் கொண்டுவந்து கொடுத்தீர்கள். நீங்கள் இரண்டாயிரத்துக்குக் குறைவாகக் கொடுத்திருந்தால் என்பாடு திண்டாட்டமாக முடிந்திருக்கும்'' என்றாள். ஜெமீந்தார், ''ஆகா! சங்கதி யெல்லாம் எவ்வளவு புதுமையாக இருக்கின்றன! அன்றைய தினம் பூத்தொட்டிக்குள் தற்செயலாக வந்திருந்த டைரிப் புஸ்தகத்தைப் பார்த்தவுடனே எனக்கு உண்டான ஆச்சரியத்தை என்னவென்று சொல்லுவேன்! அன்றையதினம் என்னிடம் நீ வந்திருந்தும் நீதான் வைத்திருப்பாய் என்று நான் கனவிலும்கூட சந்தேகிக்க வில்லை. அந்த விஷயம் இதுவரையில் விளங்காமல் பரம ரகசியமாகவே இருந்து வந்தது. எல்லாம் நீயும் உன் புருஷனும் சேர்ந்து செய்த காரியம் என்பது இப்போதுதான் நன்றாக விளங்குகிறது'' என்றார்.

லீலாவதி, ''அப்பா! நானாகவே ஒருநாளும் இப்படிப்பட்ட காரியங்களில் இறங்கக் கூடியவளல்ல. அவருடைய உபத்திரவத்துக்குப் பயந்து கொண்டு நான் அவர்சொன்னபடி செய்துவிட்டேன். என்ன இருந்தாலும், நான் இந்தக் காரியங்களை எல்லாம் செய்தது என்பேரில் சுத்தப் பிசகுதான். நான் கேவலம் கெட்டுப்போன பரமபாதகி என்றுதான் நீங்கள் நினைப்பீர்கள். நீங்கள் மாத்திரமல்ல. இந்த வரலாற்றைக் கேட்கும் சகலமான மனிதரும் அப்படியேதான் மதிப்பார்கள்.

இவ்வளவு தூரம் மானம் அழிந்தபின் நான் இருந்து உயிர்வாழ்வதைவிட இறந்துவிடுவதே உத்தமமான காரியம். நானும் ஒரு மனிஷி என்று பெயர் வைத்துக் கொண்டு உங்களுக்கு எதிரில் எப்படி வந்து, எப்படி வாய் திறந்து பேசுவேன். நான் இனிமேல் எவ்வளவு தூரந்தான் திருந்தி நல்ல வழியில் நடந்துகொண்டாலும், என்னிடத்தில் நீங்கள் கொண்டிருக்கும் அருவருப்பும் கெட்ட அபிப்பிராயமும் மாறப் போகின்றனவா? எனக்கு உண்டாயிருக்கும் பெருத்த மானக்கேடும் இழிவும் போகப் போகின்றனவா? ஒருநாளும் இல்லை'' என்று கலங்கி உருகிக் கோவெனக் கதறி அழுதவண்ணம் கூறினாள்.

அவளது பரிதாபகரமான கலங்கிய நிலைமையைக் கண்டு இளகிய சொற்களைக் கேட்ட ஜெமீந்தார் அவளது விஷயத்தில் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த இரக்கமும் சஞ்சலமும் அடைந்து, ''அம்மா லீலாவதி! விசனப்படாதே; எனக்கு இந்த உலகத்தில் உன்னைவிட அருமையான மனிதர் யார் இருக்கிறார்கள்? உன்னைக் காட்டிலும் நெருங்கிய பந்துவும் ஆதரவான மனிதரும் எனக்கு உலகில் இல்லவே இல்லை என்பது உனக்கே தெரிந்த விஷயம். அப்படியிருக்க, நீ இதுவரையில் செய்துள்ள காரியங்களைவிட இன்னம் ஆயிரம் மடங்கு கேவலமான காரியங்களைச் செய்திருந்தால் கூட, உன்னைக் கைவிட எனக்கு மனம் வராது. உன்னுடைய அண்ணன் தான் எனக்கு உதவாமல் அதிகப்பிரசங்கியாகிப் போய்விட்டான். இப்போது இருப்பது நீ ஒருத்திதானே. உன் விஷயத்தில் நான் ஏற்கெனவே என் கடமைகளைச் செய்திருந்தால், நீ இவ்வளவு தூரம் கெட்டுப்போயிருக்கவே மாட்டாய்; எல்லாம் என்னால் விளைந்த துன்பமே அன்றி வேறல்ல. அப்படிப்பட்ட கொடிய துஷ்டனோடு இருக்க வேண்டாம் என்று நான் உன்னைக் கட்டாயப்படுத்தி இங்கேயே வந்திருக்கும்படி செய்திருந்தால், உனக்கு

இப்படிப்பட்ட இழிவெல்லாம் நேர்ந்திருக்காது. அவனுக்கு இச்சையானால் இங்கே வந்து போகட்டும் என்று நான் ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அந்த விஷயத்தில் நான் கொஞ்சம் அசிரத்தையாக இருந்து விட்டேன். அதுவே இத்தனைக்கும் காரணம்'' என்றார்.

லீலாவதி, ''இல்லையப்பா? நீங்கள் உங்கள்மேல் குறைகூறுவதற்கு நியாயமே இல்லை. அந்த மனிதனைவிட்டு இங்கேவந்து விடும்படி நீங்கள் எத்தனையோ தடவைகளில் எனக்குப் புத்திமதி சொல்லியிருக்கிறீர்கள். நான்தான் உங்களுடைய வார்த்தைகளைப் பொருட்படுத்தாமல் இருந்து வந்தேன். அந்த மனிதரிடத்தில் நான் ஆரம்பத்தில் வைத்த பிரேமை யெல்லாம் போகும்படி அவர் என்னை அவ்வளவு குரூரமாக நடத்தினாலும், ஒருவிதப் பாசமும், பயமும் ஒன்றுகூடி அவரைவிட்டு நான் பிரியாமல் இதுவரையில் தடுத்துக் கொண்டுவந்தன. அதுவுமல்லாமல், வேறொரு ரகசியமும் இருக்கிறது'' என்று கூறி, அதற்குமேல் விஷயத்தை வெளியிட மாட்டாமல் தயங்கினாள். தான் அதற்குமேல் சொல்லப்போவது தனது வாயில் வைத்துச் சொல்லக்கூட தகாத விஷயமாதலால், அவள் சிறிது நேரம் பேசாமல் மௌனியாக இருந்தாள்.

அதை உணர்ந்த ஜெமீந்தார் நயமாக வற்புறுத்தி, ''குழந்தாய் லீலாவதி! நடந்ததெல்லாம் நடந்துபோய் விட்டது. அநேகமாக உன்னுடைய முக்கியமான ரகசியங்களை எல்லாம், நீ என்னிடம் வெளியிட்டுவிட்டாய். இன்னம் மிகுதி இருக்கும் விஷயங் களையும் நீ வெளியிடுவதனால், உனக்கு ஏதேனும் கெடுதல் நேரிடுமோ என்று நீ கொஞ்சமும் கவலைப்பட வேண்டியதே இல்லை. உன்னுடைய வரலாறு முழுவதும் எனக்குத் தெரிந்திருப்பது நல்லது. எல்லாவற்றிற்கும் தகுந்தபடி நான் முன் ஜாக்கிரதையான விஷயங்களைச் செய்யலாம் அல்லவா?'' என்றார்.

லீலாவதி வெட்கிக் கீழே குனிந்துகொண்டவளாய், "அப்பா! நான் எந்தப் புதிய விஷயத்தை வெளியிட்டாலும், அதனால் என் மானக்கேடும், இழிவும் அதிகரிக்குமே அன்றி, உங்களுடைய அபிப்பிராயத்தில் எனக்கு அதிக மதிப்பு உண்டாகப் போகிறதில்லை. இருந்தாலும், இனி எதையும் உங்களிடத்தில் மறைப்பது நியாயமல்ல. ஆரம்பத்தில் நான் அந்த மனிதரைக் கண்டபோது, என் மனம் அவர் விஷயத்தில் ஒருவிதமான பைத்தியம் கொண்டது. அவர் நம்முடைய யோக்கியதைக்குத் தகாத மனிதர் என்றும், அவருடைய சம்பந்தம் கூடாது என்றும் நீங்கள் எவ்வளவோ எடுத்துச் சொன்னீர்கள். அவைகளை எல்லாம் கேளாமல் நான் அவரையே கட்டிக்கொண்டேன். ஆனாலும், கொஞ்ச காலத்தில், அவருடைய உண்மையான அயோக்கியதையும் துர்க்குணமும் துர்நடத்தையும் நன்றாக வெளிப்பட்டு விட்டன. நான் அவரிடத்தில் வைத்த அளவற்ற பிரேமையும் வாத்ஸல்யமும் கலகலத்துச் சின்னாபின்னமாகி விட்டன. ஒவ்வொரு சமயத்தில் அவர் சொன்ன சொற்களாலும் செய்த கொடுமைகளாலும் என் மனம் அடியோடு மாறிப் போனது. ஆகையால், என்னுடைய பிரியமும் நாட்டமும் வேறொரு மனிதரின்மேல் சென்றுவிட்டன. கொஞ்ச காலத்தில் அந்தப் புதிய சிநேகம் முற்றிப்போய்விட்டது. கடைசியில் நான் என் புருஷர் விஷயத்தில் துரோகமான காரியம் செய்து விட்டேன். அதை என் புருஷர் கண்டுகொண்டார். அதைக் கருதித்தான் நான் அவரிடத்தில் இவ்வளவு தூரம் பயந்து அவர் சொல்லுகிறபடி நடந்து கொண்டு வரவேண்டியதாகிவிட்டது. அவர் என்னை எவ்வளவு இழிவாகவும் தூஷணையாகவும் கேவலமாகவும் நடத்தினாலும், என்னை அடித்தாலும், வைதாலும், நான் அவரை மீறி எதையும் செய்ய முடியாமல் போய்விட்டது. அந்த முகாந்திரத்தை வைத்துக்கொண்டுதான் அவரும் என்னைக் கேவலம் ஒரு நாய்போல நடத்தி வருகிறார்" என்றாள்.

உடனே ஜெமீந்தார், ''சரி சரி; இப்போதுதான் காரணம் சரியாக விளங்குகிறது. போதும்; நீ அதிகமாக விவரித்துச் சொல்ல வேண்டாம். நடந்தது நடந்துவிட்டது. அதைப்பற்றி இனி நீயாவது நானாவது விசனப்பட்டு வருந்துவதனால் எவ்விதமான பயனும் உண்டாகப் போகிறதில்லை. இதுவரையில் அந்த மனிதனால் உனக்கு ஏற்பட்ட இழிவும் அவமானமும் கொடுமைகளும் போதுமானவை. இனி மேலும், நீ அவனிடத்தில் போய் பலவகையில் கஷ்டம் அனுபவிக்க ஆசைப்படமாட்டாய் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இனிமேல் நீ உன்னுடைய புருஷனிடம் இருக்க வேண்டாம்; இவ்விடத்திலேயே சௌக்கியமாக இருந்துவிடு. அவனால் உனக்கு ஏற்படும் சுகமும் போதும்; கஷ்டங்களும் போதுமானவை'' என்று முற்றிலும் உருக்கமாகக் கூறினார்.

லீலாவதி, ''நான் இனி உங்களுடைய இஷ்டம்போல நடந்து கொள்ளத் தடையில்லை. ஆனால், அவருடைய சம்மதம் இல்லாமல் நானே திடீரென்று அவரைவிட்டு இங்கேயே இருந்துவிட்டால், அவர் என்னைச் சும்மா விடக் கூடியவரா? அவர் பலவகையில் எனக்கு இடைஞ்சல் செய்து என்னை உபத்திரவித்துக்கொண்டுதான் இருப்பார்'' என்றாள்.

ஜெமீந்தார், ''அவன் உன் ஜோலிக்கே வராமல் இருக்கும்படி செய்ய ஏதாவது வழியுண்டானால் சொல்; அந்தப்படி ஏற்பாடு செய்துவிடுவோம்'' என்றார்.

லீலாவதி, ''அதற்கு வேறே ஒரு வழியும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர் எப்போதும் பணம் பணம் என்று அதே பைத்தியமாக அலைந்து கொண்டிருக்கிறார். பணம் கிடைக்கு மானால், அவர் எந்தக் காரியத்தையும் செய்ய இணங்கி விடுவார். என்னை அவர் இப்போது விடாமல் வைத்துக் கொண்டிருப்பதன் முக்கியக் கருத்து, என் மூலமாகப் பலவகையில் பணம் சம்பாதிக்கலாம் என்ற எண்ணந்தான்'' என்றாள்.

ஜெமீந்தார், ''அப்படியானால், நான் அவனுக்கு மாசம் ஒன்றுக்கு ரூபாய் ஐந்நூறு வீதம் வருஷம் ஒன்றுக்கு ஆறாயிரம் ரூபாய் பணம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்து விடுகிறேன். அவன் இந்த ஊரைவிட்டு மைசூர் ராஜ்ஜியத்துக்குப் போய்விட வேண்டும். அவ்விடத்தில் மாசாமாசம் அவனுக்கு இந்தத் தொகை கிடைக்கும்படி நான் ஏற்பாடு செய்கிறேன். இந்த நிபந்தனைக்கு அவன் அவசியம் இணங்குவான் என்று நான் நம்புகிறேன். ஆகையால், நீ அவனிடம் போய், எல்லா விஷயங்களையும் எடுத்துச் சொல்லி, நான் சொன்ன நிபந்தனையின்மேல் அவன் மைசூருக்குப் போக ஒப்புக் கொள்ளுகிறானா என்பதை அறிந்து கொண்டு வருகிறாயா?'' என்றார்.

லீலாவதி, ''ஓ! அப்படியே செய்கிறேன். இப்போதே நீங்கள் என்னை ஒரு பெட்டி வண்டியில் வைத்து அனுப்பி வைத்தால், நான் போய் விஷயத்தை அவரிடத்தில் பிரஸ்தாபித்து நாளைய தினம் சாயுங்காலம் திரும்பி வந்து முடிவைத் தெரிவிக்கிறேன்''என்றாள்.

அதை ஒப்புக்கொண்ட மருங்காபுரி ஜெமீந்தார், உடனே தமது காரியதரிசியை வரவழைத்து, வண்டி தயாரிக்கச் செய்து லீலாவதிக்கு அனுமதி கொடுத்து வண்டியில் வைத்து அனுப்பி வைத்தார்.

## 27-வது அதிகாரம்

## அளவுகடந்தால் அமுதமும் விஷம்

லீலாவதி இரவு ஒரு மணி சமயத்தில், மாரியம்மன் கோவிலிலுள்ள தங்களது ஜாகையை அடைந்து, வெளிக்கதவைத் தட்டினாள். அவளது புருஷரான மாசிலாமணிப்பிள்ளை அவள் விடியற்காலையிலே தான் வருவாள்

என்று நினைத்து நித்திரை செய்துகொண்டிருந்தார் ஆகையால், அந்த அகாலத்தில் அவள் திரும்பி வந்தது சிறிதும் எதிர்பார்க்காததாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. அவரது வேலைக்காரி தூரமான ஓர் அறையில் நித்திரை செய்து கொண்டிருந்தாள் ஆகையால், அவரே நேரில் வந்து வாசற் கதவைத் திறந்துவிட, லீலாவதி தடதடவென்று உள்ளே நுழைந்தாள். அவள் அவரது முகத்தை ஏறெடுத்துப் பார்க்காமலும், அதிக துக்கமும் கோபமும் நிறைந்த முகத்தோற்றத்தோடும் உள்ளே வந்ததைக் கவனித்த மாசிலாமணிப்பிள்ளை திடுக்கிட்டு வியப்படைந்து, ''என்ன லீலாவதி! ஏன் இவ்வளவு சீக்கிரமாகத் திரும்பி வந்து விட்டாய்? போன காரியம் ஜெயந்தானே?'' என்றார்.

அவர் சொன்ன சொற்களைக்கேட்டு நிரம்பவும் அருவருப் படைந்தவள்போலத் தனது முகத்தைச் சுளித்துக்கொண்டு, ''நல்ல ஆண்பிள்ளை! நல்ல கேள்வி!'' என்று வாய்க்குள்ளாகவே முணுமுணுத்துக்கொண்டு அவரது கையில் இருந்த விளக்கை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு உள்ளே போய்ப் பக்கத்தில் இருந்த சமயலறையை அடைந்து அவ்விடத்தில் பானையி லிருந்து ஒரு செம்பு தண்ணீர் எடுத்து நிரம்பவும் ஆவலோடு மடமடவென்று குடித்துவிட்டுத் தனது சயன அறையை நோக்கி நடக்கலானாள்.

அவளுடன் கூடவே தொடர்ந்து வந்த மாசிலாமணிப் பிள்ளை அவள் முணுமுணுத்துச் சொன்ன மறுமொழியை அரை குறையாகக் கேட்டவர் ஆதலால் அவள் என்ன சொன்னாள் என்பதை அறிய ஆவல் கொண்டு, ''என்ன! என்ன! என்ன சொன்னாய்? நீ என்னைப்பற்றி ஏதோ தூஷணையாகச் சொன்ன மாதிரி இருக்கிறதே. சொன்னதை நன்றாக உரக்கச் சொல்'' என்றார்.

லீலாவதி, ''நான் உங்களைத் தூஷிக்க எனக்கென்ன பைத்தியமா? உங்களை ஏன் தூஷிக்கிறது? என்னுடைய தலை

விதியையும் மூட புத்தியையும் அல்லவா தூஷித்துக் கொள்ள வேண்டும்'' என்று அருவருப்போடு மறுமொழி கூறினாள். மாசிலாமணிப் பிள்ளை, ''ஏன் ஒரு மாதிரியாகப் பேசுகிறாய்? போன இடத்தில் என்ன நடந்தது என்பதை இப்போதே சொல்லலாமா? அல்லது, காலையில் சொல்லப் போகிறாயா?'' என்றார். ''எப்போது சொன்னாலும் ஒன்றுதான். இப்போது தான் ஆகட்டுமே'' என்று எடுப்பாகவும் அலட்சியமாகவும் லீலாவதி மறுமொழி கூறினாள். இயற்கைக்கு விரோதமாகவும், தனது பணிவையும் மரியாதையையும் இழந்தும் அவள் பேசியதைக் கேட்ட புருஷர் நிரம்பவும் ஆத்திரம் அடைந்து அவளோடு சண்டைக்கு ஆயத்தமாய், ''சரி; நீ பேசும் முறைப்பைப் பார்த்தால், என்னோடு கொஞ்சம் சண்டை போட வேண்டும் என்று உனக்கு ஆசைபோல் இருக்கிறது'' என்று அதட்டலாகப் பேசினார்.

லீலாவதி முன்னிலும் அதிக முறுக்காகப் பேசத்தொடங்கி, ''சாகத் துணிந்தவளுக்குச் சமுத்திரம் முழங்கால் அளவு என்று சொல்லுவார்கள். அதைப்போல, யாருடைய சண்டைக்கும், நான் இனி பயப்படக் கூடியவளல்ல'' என்றாள்.

அவளது வீறாப்பு மொழியைக்கேட்ட மாசிலாமணிப் பிள்ளை ரௌத்திராகாரமான கோபம் கொண்டு, ''ஏது இன்றையதினம் நீ இவ்வளவு தைரியமாகப் பேச ஆரம்பித்தது? யாரிடத்தில் பேசுகிறோம் என்பதைச் சுத்தமாக மறந்து பேசுகிறாயே! எனக்காக நிரம்பவும் சிரமப்பட்டுத் தஞ்சாவூருக்குப் போய் அலுத்து வந்திருக்கிறாயே என்ற இரக்கத்தினால் நான் நீ சொல்லும் வார்த்தைகளை இதுவரையில் பொறுத்துக்கொண்டேன். இல்லையானால், இந்நேரம் உன்னுடைய பற்களெல்லாம் காற்றில் பறந்து போயிருக்கும்'' என்று மூர்க்கமாகப் பேசிய வண்ணம் தமது விரல்களை மடக்கிக் கொண்டு ஆத்திரத்தோடு அவளை நோக்கிப் பாய்ந்தார்.

அவள் சடேரென்று ஒரு பக்கமாக ஒதுங்கி நின்று, ''ஆகா!

எவ்வளவு சூரத்தனம்! என்னை அடிப்பதிலும் வைவதிலும் காட்டும் ஆண்மைத்தனம், என்னைத் தஞ்சாவூருக்கு அனுப்பும்போது எங்கே போய்விட்டதோ தெரியவில்லை. இப்போது உங்களுக்கு இருக்கும் ஆத்திரம் எல்லாம், இன்னம் பாதிப்பணமான ஆயிரம் ரூபாயை என்னிடத்திலிருந்து வாங்கிக் கொள்ள வேண்டும் என்னும் ஆத்திரம்தான். அந்த விஷயத்தில் நீங்கள் ஏமாறிப்போகப் போகிறீர்கள். நான் பணம்கொண்டு வரவில்லை'' என்று அருவருப்பாகவும் ஆத்திரமாகவும் கூறினாள்.

அதைக்கேட்ட மாசிலாமணிப் பிள்ளை, தமது பொறுமையை இழந்து முன்னிலும் அதிக ஆத்திரத்தோடு பேசத் தொடங்கி, ''அப்படியானால், நீ அந்தப் பெரிய மனிதரை சந்திக்கவே இல்லையா?'' என்றார்.

லீலாவதி, ''அவரைச் சந்திக்காமல் என்ன?'' என்று விரக்தியாக மறுமொழி கூறினாள்.

மாசிலாமணிப் பிள்ளை, ''அப்படியானால், அவர் உன்னை ஏமாற்றி விட்டாரா? அல்லது நீதான் அங்கே போனவுடன் பதிவிரதைத் தனம் கொண்டாடி அவரிடம் நெருங்காமல் இடக்குப் பண்ணிவிட்டுத் திரும்பி வந்து விட்டாயா? அல்லது, அந்த ஹேமாபாயிதான் பணத்தை அபகரித்துக்கொண்டு உன்னை ஏமாற்றி அனுப்பி விட்டாளா? நிஜத்தைச் சொல்'' என்று நிரம்பவும் ஆவலோடு வினவினார்.

லீலாவதி மனநொந்து பேசத்தொடங்கி, ''அங்கே வந்திருந்தவர் என்னுடைய பெரிய தகப்பனார்?'' என்றாள்.

அதைக்கேட்ட மாசிலாமணிப் பிள்ளை திடுக்கிட்டுத் திகைப்படைந்து, ''என்ன ஆச்சரியம்! உன்னுடைய பெரிய தகப்பனாருக்காகவா ஹேமாபாயி உன்னை அழைத்துக் கொண்டு போனாள்? காரியம் விபரீதமாக இருக்கிறதே! கடைசியில் நீ அவருக்கு என்ன சமாதானம் தான் சொன்னாய்?

ஏதாவது ஒரு பொய் சொல்லித் தப்பித்துக் கொண்டாய் அல்லவா?'' என்றார்.

லீலாவதி, ''ஆகா! அப்போது சமாதானம் சொல்லுகிறதா? கையும் களவுமாய் பிடிபட்ட திருடன் ஏதாவது பொய்ச் சமாதானம் சொன்னால் அதை யாராவது ஒப்புக் கொள்ளு வார்களா? அப்படிப்பட்ட சமாதானம் சொல்வதைவிட மௌனமாக இருப்பதே நாணயமான காரியம். நான் அவருக்கு எவ்விதச் சமாதானமும் சொல்லவில்லை. அவர் என்னை உடனே எங்களுடைய மாளிகைக்கு அழைத்துக்கொண்டு போனார். அவ்விடத்தில் அவரும் நானும் வெகுநேரம் வரையில்பேசி ஆலோசனை செய்துகொண்டிருந்தோம். கடைசியில் அவர் ஒருவித முடிவிற்கு வந்து அந்த விஷயத்தில் உங்களுடைய சம்மதியைக்கேட்டுக்கொண்டு வரும்படி என்னை அனுப்பி வைத்தார்'' என்றாள்.

மாசிலாமணிப் பிள்ளை ''எதற்கு என் சம்மதி வேண்டு மாம்?'' என்று வியப்போடு வினவினார்.

லீலாவதி, ''நீங்கள் உடனே இந்த ஊரைவிட்டுப் புறப்பட்டு மைசூருக்குப் போய்விட்டால், அவ்விடத்தில் உங்களுடைய செலவுக்காக மாதாமாதம் ஐந்நூறு ரூபாய் கொடுக்கும்படி ஏற்பாடு செய்கிறதாக அவர் ஒப்புக்கொள்ளுகிறார்'' என்றாள். அவள் அவ்வாறு பேசியபோது அவள் அவரைப் பார்த்த அன்பற்ற உறுதியான பார்வையிலிருந்து, அவளும் அந்த யோசனையை நிறைவேற்றி வைக்க உறுதி செய்து கொண்டிருக்கிறாள் என்பதை அவர் எளிதில் யூகித்துக் கொண்டார். ஆகையால், அவரது மனதில் ரௌத்திராகாரமான கோபம் பொங்கியெழுந்தது. அதை ஒருவாறு அடக்கிக் கொண்டு புரளியாகப் பேசத் தொடங்கி, ''சரி; உன்னுடைய பெரிய தகப்பனார் எப்போதும் தாராள குணம் உள்ளவர் அல்லவா; இப்போது அவர் செய்ய ஒப்புக்கொள்ளும் உதவி அபாரமானதாகவே இருக்கிறது. சரி; அவருடைய பிரியப்படியே

செய்வோம். நமக்கு வேண்டிய பணத்தொகையை எல்லாம் அவர் கொடுப்பதாக ஒப்புக்கொள்ளும்போது, இனி பணம் சம்பாதிக்கும் துன்பம் எனக்கும் இல்லை உனக்கும் இல்லை. இதைப்பற்றி நீ என்னுடைய சம்மதியைக் கேட்கவும் வேண்டுமா? நீயே சம்மதியென்று சொல்லிவிட்டு வரக் கூடாதா? எப்போது நாம் இவ்விடத்தை விட்டுப் புறப்படு கிறது? இப்போதே புறப்படுவோமா? அல்லது, நாளைக்குக் காலையில் புறப்படலாமா?'' என்றார்.

லீலாவதி, ''நானும் உங்களோடு கூட வர வேண்டுமா? எனக்குப் பதிலாகத்தான் உங்களுக்குப் பணம் வரப் போகிறது. அவர் உங்களோடு என்னையும் அனுப்பி மாதாமாதம் பணமும் ஏன் கொடுப்பார்? அதற்கு அவர் ஒருநாளும் இணங்கமாட்டார்; என்னை எங்களுடைய வீட்டிலேயே வைத்துக் கொள்ளப் போகிறார். ஆகையால், நீங்கள் மாத்திரந்தான் போகவேண்டும். உங்களுக்கு எப்போது சௌகரியமோ அப்போது புறப்பட்டுப் போகலாம்'' என்று வெறுப்போடு கூறினாள்.

மாசிலாமணிப்பிள்ளை கோப நகை நகைத்து, ''ஓகோ! உன்னை விட்டு நான் மாத்திரம் போவேனென்று நினைத்தாயா! அது ஒரு நாளும் பலியாது கண்ணே! உன் பெரியப்பன் கொடுக்கும் ஐந்நூறு ரூபாய் காசுக்காக நான் என்னுடைய பெண்டாட்டியை இழந்துவிடுகிறதா? நன்றாயிருக்கிறதே ஏற்பாடு! அவர்தான் சாகப்போகிற கிழவர்; மூளை கெட்டுப் போயிருப்பதால், இப்படிப்பட்ட பிரஸ்தாபம் செய்கிறார். நீயும் அதை ஒப்புக்கொண்டு பேசாமல் எப்படி வந்தாய்? என்னை விட்டுப் பிரிந்திருக்க உனக்குத்தான் எப்படி சகிக்கும்'' என்றார்.

அவரது சொற்களைக் கேட்ட லீலாவதி முன்னிலும் அதிக உறுதியான குரலில் பேசத்தொடங்கி, ''நீங்கள் என்ன சொன்னாலும் இனி என்னுடைய தீர்மானம் மாறப்போகிறது இல்லை. நாம் இருவரும் இனி ஒரு நிமிஷ நேரங்கூட ஒத்து வாழ முடியாது. ஆகையால், நான் எங்களுடைய வீட்டிலேயே

இருந்துவிடத் தீர்மானித்து விட்டேன். ஆதியிலிருந்து நான் உங்களின்மேல் வைத்த வாஞ்சையையும் பிரேமையையும் நாளடைவில் நீங்களே சிதற அடித்து என்னை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டீர்கள். நீங்களே எனக்கு விசேஷம் என்று நினைத்து, நான் உற்றார் உறவினர்களையும் பெரும் செல்வத்தையும், செல்வாக்கையும், சுக சௌகரியங் களையும் பொருட்படுத்தாமல் விலக்கி, உங்களையே கதியாக மதித்து உங்களையண்டி இருந்ததற்கு வெகுமதியாக நீங்கள் என்னை இதுவரையில் படுத்திவைத்த பாடுகளும், வைத வசவுகளும், அடித்த அடிகளும் கணக்கில் அடங்குமா? அவைகள் தெய்வத்துக்குத்தான் சம்மதமாகுமா? எங்களுடைய மனிதரிடத்திற்கு மறுபடி எப்படிப் போகிறது என்கிற அவமானத்தைக் கருதி நான் இதுவரையில் உங்களுடைய சித்திர வதைகளை எல்லாம் சகித்துக்கொண்டு இருந்து வந்தேன். ஆனால், உங்கள் விஷயத்தில் ஒரே ஒரு தவறு செய்திருக்கிறேன். அதுவும் உங்களால்தான் நடந்த விஷயம். நீங்கள் என்னை அளவு கடந்து வதைத்து என்னுடைய பிரியம் எல்லாம் வெறுப்பாக மாறும்படி செய்தீர்கள். ஆகையால், நான் என்னுடைய பிரியத்தையெல்லாம் வேறொருவர் மேல் மாற்ற நேர்ந்தது. அப்படி இருந்தும், நான் செய்த அந்தத் தவறுக்காக என்னை நீங்கள் தண்டித்தது ஒரு கொலைக் குற்றம் செய்தவனுக்கு ஏற்படும் தண்டனையைவிட ஆயிரம் மடங்கு அதிகமாகச் சொல்லலாம். அப்படி தண்டித்தும், அதே குற்றத்தை நான் மறுபடி செய்யும்படி நீங்களே தூண்டினீர்கள். இதற்காக இனி தண்டனை யார் அனுபவிக்கிறது என்பது தெரியவில்லை. உங்களுடைய உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்தினால் நான் அன்றைய தினம் உங்களுடைய சொல்லுக்கு இணங்கி இளவரசரிடம் போய், நான் வாயில் வைத்துப் பேசத் தகாத வார்த்தைகளை எல்லாம் பேசி, அவரை வஞ்சித்து அவருடைய கையெழுத்தை வாங்கிக்கொண்டு வந்தேன். ஆனால், நல்ல வேளையாக அன்றைய தினம் நான்

என்னுடைய தேக பரிசுத்தத்தைக் காப்பாற்றிக் கொண்டு வந்துவிட்டேன். இன்றையதினம் நான் வேறே அன்னிய புருஷனிடம் போய்ச் சேராமல் தெய்வந்தான் என்னைக் காப்பாற்றியது. நீங்கள் என் விஷயத்தில் செய்யும் அக்கிரமத்தைச் சகியாமல் தெய்வமே என்னை என் பெரிய தகப்பனாரிடம் கொண்டு போய்விட்டு, நான் சொல்லாமலே அவரே எல்லா விஷயங்களையும் எளிதில் அறிந்து கொள்ளும் படியான நிலைமையை உண்டாக்கிவிட்டது. இனி ஒரு நிமிஷங்கூட நான் உங்களோடு இருக்கமுடியாது. அதற்கு என்னுடைய பெரிய தகப்பனாரும் இடம் கொடுக்கவே மாட்டார். நீங்களும் நானும் கூடியிருக்க விதிக்கப்பட்ட காலம் இவ்வளவுதான். இனி நாம் பிரிந்திருக்க வேண்டியதைத் தவிர வேறு எந்த ஏற்பாடும் ஒத்துவரவே வராது'' என்று ஒரே முடிவாகக் கூறினாள்.

அவளது உறுதியான முடிவையும், அன்பற்ற சொற்களையும், என்றும் இல்லாத துணிவையும் சந்தேகமற உணர்ந்து கொண்ட மாசிலாமணிப்பிள்ளை நிரம்பவும் தடுமாற்றம் அடைந்தார். ஆனாலும், அவளை மறுபடி மிரட்டியே தமது காரியத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்று நினைத்து, ''ஓ! நீ இவ்வளவு தூரம் பேசத்துணிந்து விட்டாயா! இதெல்லாம் அந்தக் கிழவன் கொடுத்த தைரியம் என்பது நன்றாகத் தெரிகிறது. இந்த விஷயத்தில் தலையிடுவதற்கு அந்தக் கிழவனுக்கு என்ன அதிகாரமிருக்கிறது. என்னோடு கூட இருக்கமாட்டேன் என்று சொல்வதற்கு உனக்குத்தான் என்ன அதிகாரம் இருக்கிறது. என்னுடைய பெண்ஜாதி என்னுடைய சொத்து; அவளை நான் என்னுடைய பிரியப்படி நடத்துவேன். அதைப்பற்றிக் கேட்க, எந்த நாய்க்கும் அதிகாரம் இல்லை என்பதை நீ இதற்குமுன் தெரிந்துகொள்ளாவிட்டாலும், இப்போதாவது தெரிந்து கொள். நீ இப்போது செய்த நீண்ட பிரசங்கத்தை விட இன்னும் ஒன்றரை மயில் நீளம் பிரசங்கம் செய்தால்கூட உன்னுடைய கருத்து நிறைவேறப் போகிறதில்லை. நான் உன்னை உயிரோடு

விட்டுவிடுவேன் என்று நினைக்காதே. நாளைக்குக் காலையில் நான் அந்தக் கிழவனுக்கு ஒரு கடிதம் எழுதி அவனுக்குத் தகுந்த புத்தி கற்பித்து வைக்கிறேன். நீ ஒருவேளை எனக்குத் தெரியாமல் புறப்பட்டுப் போய் உன்னுடைய பெரியப்பன் வீட்டில் நுழைந்து கொண்டால், உன்னை நான் தொடர முடியாதென்று நினைத்துக் கொள்ளாதே. அந்த மாளிகைக்குள் நீ எப்படிப்பட்ட ரகசியமான இடத்தில் ஒளிந்து கொண்டிருந்தாலும், நான் அதற்குத் தக்க ஆளைவிட்டு, உன் கை கால்களை எல்லாம் குண்டுகட்டாகக் கட்டிக் கொண்டுவரச் செய்துவிட எனக்குச்சாமர்த்தியம் உண்டு. அன்றைய தினம் உன் பெரியப்பனும் இளவரசரும் என்னுடைய ஆள்களிடத்தில் அகப்பட்டுக் கொண்டு பட்டபாட்டை மறந்துவிட்டாயா? அவன் உன்னைக் கொண்டுபோய் பந்தோபஸ்தாக வைத்து எத்தனை ஆள்களைக் காவல் வைத்தால்கூட அத்தனை பேரையும் என்னுடைய மனிதர்கள் ஒரு நொடியில் பஞ்சு பஞ்சாகப் பறக்க அடித்துவிடுவார்கள். ஆகையால், என்னைவிட்டுப் பிரிந்திருக்க வேண்டும் என்ற ஆசையை மாத்திரம் நீ இவ்வளவோடு மறந்துவிடு; அது ஒரு நாளும் பலிக்காத எண்ணம்'' என்று அழுத்தமாகவும் அதட்டியும் கூறினார்.

லீலாவதி அவரது சொற்களைக் கேட்டுச் சிறிதும் அஞ்சாதவளாய், ''ஆரம்பத்திலிருந்து இப்படி மிரட்டி மிரட்டி நீங்கள் என்னை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டீர்கள். இன்னமும் அதே மருந்தை உபயோகிக்கிறீர்கள். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம் என்று உங்களுக்குத் தெரியாதா? இன்று நடந்த சம்பவங்கள் என் மனசை முறித்து அடியோடு மாற்றிவிட்டது. ஆகையால், நீங்கள் என்னை எவ்வளவுதான் மிரட்டினாலும், என்னை அடித்தாலும், கொன்றாலும், அல்லது என்னை அன்பாக நடத்துவதாக உறுதி செய்து கொடுத்தாலும், என் உறுதி மாறப்போகிறதில்லை.

எப்படியும் நான் உங்களை விட்டுப் பிரிந்துதான் போவேன்'' என்றாள்.

அவள் சொன்ன வார்த்தைகள் அவரால் சகிக்கக் கூடிய வரம்பை மீறிப் போயின. ஆகையால், அவர் தம்மை மீறிய ஆத்திரமும் பதைப்பும் கொண்டவராய் மூர்க்கமான தோற்றத்தோடு அவளண்டை நெருங்கி நின்று, ''என்ன சொன்னாய்? எந்த விதத்திலும் நீ என்னை விட்டுப் பிரிந்து போகவா தீர்மானித்து விட்டாய்? உன்னை முதலில் இந்த அறையிலிருந்து வெளியில் போக விட்டால் அல்லவா, நீ உன் பெரியப்பன் வீட்டுக்குப் போவாய்; அதுவுமின்றி, இப்போதே நான் வெண்ணாற்றங்கரைக்குப் போய், பூமியின் கீழ் புதைத்திருக்கும் உன் ஆசை நாயகனுடைய பிணத்தைத் தோண்டி எடுத்து வந்து உனக்கு எதிரில் போட்டால், நீ உடனே வழிக்கு வருகிறாய். அதன்பிறகு உன்னுடைய உறுதியெல்லாம் பஞ்சாகப் பறந்துபோய்விடாதா'' என்றார்.

லீலாவதி அப்போதும் மூர்க்கமாகவே பேசத்தொடங்கி, ''நான் எதற்கும் துணிந்துவிட்டேன். நீங்கள் போய் அந்தப் பிணத்தை எடுத்துக்கொண்டு வருவதற்குள் நானும் இவ்விடத்தில் தற்கொலை செய்துகொண்டு பிணமாகக் கிடக்கிறேன். இரண்டு பேரையும் கொன்றது நீங்கள்தான் என்று நாளையதினம் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் உங்களைப் பிடித்துக் கொள்ளட்டும்''என்றாள்.

உடனே மாசிலாமணிப்பிள்ளை தமது ஆத்திரத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு நயமாகவும் பயமுறுத்தலாகவும் பேசத் தொடங்கி, ''ஏ முட்டாளே! உனக்கென்ன பைத்தியம் பிடித்துப் போய்விட்டதா? இப்போதுதான் ஆகாசத்திலிருந்து நேராகக் குதித்து வந்தவள் போல மகா பரிசுத்தம் பாராட்டிப் பேசுகிறாயே! உன்னுடைய யோக்கியதை எனக்குத் தெரியாதா? உன்னுடைய நடத்தை எப்படிப்பட்டது என்பது எனக்குத் தெரியாதா? நான் ஏதோ தகாத விஷயத்தைச் செய்யும்படி

உன்னை அனுப்பிவிட்டதாகத் தாண்டிக் குதிக்கிறாய்; ஒன்றரை முழ நீளம் எனக்கு உபதேசம் பண்ணுகிறாய். நானும் இதுவரையில் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். நீ இவ்வளவு தூரம் பேசினாய். நான் அதையெல்லாம் சாவதானமாகக் கேட்டுவந்தேன். நான் சொல்லப்போவதையும் நீ கொஞ்சம் சாவதானமாகக் கேள். கிழவனுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு வீணாகக் கெட்டுப் போகாதே. அவனுடைய தைரியத்தை வைத்துக் கொண்டு நீ என் மனசுக்கு விரோதமாக என்னைவிட்டுப் பிரிந்து போவது என்றால் நீ என்னோடு வெளிப்படையான யுத்தத்திற்கு ஆரம்பிப்பது போல் ஆகும். உன்னுடைய ஆசைநாயகரான ஜெமீந்தார் இன்னார் என்பதை நான் அப்போதே அறிந்து கொண்டேன். நாம் அன்றைய தினம் இரவில் மைசூருக்குப் புறப்பட்டுப்போன காலத்தில் நான் வந்துவிட்டேன் என்று பயந்து நீ அவரை வென்னீர் அண்டாவுக்குள் ஒளிய வைத்தாய்; அப்படி வைத்தவள் அவ்வளவோடு சும்மா இருக்காமல், உன்னுடைய நகைப் பெட்டியை அந்த அண்டாவின் வாயில் வைத்து மூடினாய்; அந்த சமயத்தில் அவர் வாய்விட்டுப் பேசினால் உன்னுடைய மானம் போய்விடும் என்று நினைத்து, தம் உயிர்போனாலும் போகட்டும் என்று எண்ணி அவர் மௌனமாக இருந்து மூச்சுவிட மாட்டாமல் மரண வேதனைப்பட்டு இறந்து போயிருக்கிறார். வேறே யாராக இருந்தாலும், அந்த மரண வேதனை காலத்தில் வேறே எதையும் எண்ணாமல் பெட்டியைக் கீழே தள்ளி விட்டுத் தாம் பிழைத்துக் கொள்வதையே பார்த்திருப்பார். நீ என்ன செய்தாய்? பெட்டியை வைத்து அண்டாவின் வாயை மூடிவிட்டால், அவர் மூச்சு விடமுடியாமல் இறந்து போய் விடுவார் என்பது உனக்குத் தெரியும். ஆனாலும், உன்னுடைய மானம் தப்பவேண்டும் என்ற ஒரே நினைவைக் கொண்டு, அவர் எப்படியாவது போகட்டும் என்று நினைத்து நீ பெட்டியை வைத்தாய். உடனே அவர் இறந்துபோய் விட்டார். அவருடைய

மரணத்துக்கு நீயே உத்தரவாதி என்பதை இதற்குமுன் ஒரு தடவை நீயே ஒப்புக் கொண்டிருக்கிறாய். இறந்து போனவருடைய பிள்ளையும் சொந்தக்காரர்களும் அவர் எங்கே போயிருப்பார் என்பதை அறிந்துகொள்ள மாட்டாமல் இன்னமும் தேடி அலைந்து தவித்து மன நொந்து உருகிக் கொண்டிருக்கிறார்கள். நான் உன்னை அவர்களிடம் காட்டிக் கொடுத்திருந்தால், இந்நேரம் உன்னுடைய மானமும் போயிருக்கும், உனக்கு தீவாந்தர சிட்சையும் கிடைத்திருக்கும். நீ ஆயுசுகால பரியந்தம் எந்தக் காட்டிலிருந்து எப்படிப்பட்ட சங்கடங்களுக்கு ஆளாயிருப்பாயோ; அதுவும் அன்றி உனக்கும், உன் பெரியப்பனுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் என்றைக்கும் மாறாத ஏச்சும் இழிவும் ஏற்பட்டிருக்கும். அதற்கெல்லாம் இடம் கொடாமல் ரகசியமாக அந்தப் பிணத்தைப் புதைத்து நான் உன்னைத் தப்ப வைத்தது அன்றி, நீ செய்த அந்தக் குற்றத்தையும் அவ்வளவாகப் பாராட்டாமல் மறந்துகொண்டு வந்திருக்கி றேன். அந்த விஷயத்தில் நான் உனக்குச் செய்த பேருதவிக்கு நீ எத்தனையோ தலைமுறை ஜென்மம் எடுத்து எனக்கு ஊழியம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறாய். நீ செய்த கொலைக் குற்றத்திலிருந்து உன்னைக் காப்பாற்றியது போல நான் செய்த கொலைக்குற்றத்திலிருந்து என்னைத் தப்பவைப்பதற்காக நீ அன்று இளவரசரிடம் போய் தஸ்தாவேஜியில் கையெழுத்து வாங்கிக்கொண்டு வந்தாய். இப்போது அதற்காக நாம் இந்த ஊரைவிட்டுப் போய் விட வேண்டும் என்ற நினைவினால் நமக்குத் தேவையான பணம் சம்பாதித்துக் கொண்டு வரப் போனாய். இவ்வளவுதானே சங்கதி. நான் செய்த உதவிக்கு நீ பதில் உதவி செய்தாய். நான் மாத்திரம் உன்னை அதிகக் கொடுமையாக நடத்தி விட்டேன் என்று நீ சொல்வது எப்படிப் பொருந்தும். நாம் ஒருவருக்கொருவர் உதவியாகத்தானே இருக்கிறோம். அப்படியிருக்க, நீ திடீரென்று இப்படிப்பட்ட விபரீதமான எண்ணத்தைக் கொள்ளவே நியாயம் இல்லையே. யாதொரு முகாந்திரமும் இல்லாமல் நீ திடீரென்று

என்னைவிட்டுப் பிரிந்துபோக வேண்டும் என்று ஆசைப்பட்டால், நான் சுலபத்தில் அதற்கு இணங்கி விடக் கூடியவனா? அந்த ஐந்நூறு ரூபாய் எனக்கு ஒரு பொருட்டென்று நீ எண்ணிக்கொண்டாயா? அது ஒரு நாளும் பலியாது; நான் உன்னை விடப் போகிறதும் இல்லை. நான் எப்போதும் உன்னோடு கூடவே இருக்கிறேன். நீ எப்படித்தான் தப்பித்துப் போகிறாய் என்று நான் பார்க்கிறேன்'' என்றார்.

லீலாவதி அதற்கு எவ்வித மறுமொழியும் கூறாமல், வெறு வெளியை உற்று நோக்கிய வண்ணம் அசைவற்றுக் கற்சிலை போலச் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தாள். அவளது அழகிய முகம் முற்றிலும் மாறி விகாரமாகத் தோன்றியது. அவளது மனம் எண்ணாததை எல்லாம் எண்ணியது. இறந்துபோன தனது ஆசை நாயகரான ஜெமீந்தாரது நற்குணங்களும், அழகிய தோற்றமும், அவர் தன்னிடத்தில் வைத்திருந்த எல்லையற்ற வாஞ்சையும் அவளது மனதில் தோன்றி அதை முற்றிலும் நெகிழ்வித்தன. இறந்துபோனவருக்கும் மாசிலாமணிப் பிள்ளைக்கும் இருந்த வேறுபாடுகளை நினைக்க நினைக்க, அவளது மனம் ஏங்கித் தவித்தது. தனக்கும் மாசிலாமணிப் பிள்ளைக்கும் முடித்து போட்டிருந்த விதியை நினைத்து நிந்தித்து அவள் துயரமே வடிவாக வீற்றிருக்க, மறுபடியும் மாசிலாமணிப் பிள்ளை, ''என்ன லீலாவதி! ஒன்றும் சொல்லாமல் பேசாது இருக்கிறாய்? நான் சொன்னது நியாயம் என்பது உன் மனசில் பட்டுப்போய் விட்டது பார்த்தாயா? என்னவோ போனது போகட்டும். நீ செய்ததையும் நான் மறந்து விடுகிறேன். நான் இதுவரையில் செய்ததையும் நீ மறந்துவிடு. இனி நமக்குள் எவ்வித மனஸ்தாபமும் ஏற்படாத படி நான் பார்த்துக் கொள்ளுகிறேன். என்னைவிட்டுப் பிரிந்து போய்விட வேண்டுமென்ற அந்த மூட எண்ணத்தை இதோடு விட்டுவிடு. உன்னுடைய பெரிய தகப்பனார் எவ்வளவுதான் பணக்காரராக இருந்தாலும், அவர் உனக்கு லட்சலட்சமாகப்

பணம் கொடுப்பதானாலும், அவைகளெல்லாம் புருஷ சுகத்திற்கு ஈடாகுமா? ஏழ்மை நிலைமையிலிருந்து எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்தாலும் ஸ்திரீகள் புருஷரோடு இருப்பதுதான் ஆனந்தம்; புருஷன் ஒருவன் நீங்கலாக உனக்குச் சகல சம்பத்து இருந்தாலும், உன் மனம் திருப்தி அடையுமா? ஒரு நாளும் இல்லை. ஆகையால், இவ்வளவோடு உன் பிடிவாதத்தை விட்டுவிடு. அகாலமாகிறது. நாம் இப்போது படுத்துத் தூங்குவோம். எல்லா விஷயங் களையும் நாளையதினம் பேசிக் கொள்ளலாம். என்ன சொல்லு கிறாய்? ஏன் பேசாமல் கல்போலச் சும்மா உட்கார்ந்திருக்கிறாய்? உன் முடிவைச் சொல்'' என்றார்.

லீலாவதி அப்போதும் மனது இளகாதவளாய், ''என்ன முடிவைச் சொல்லுகிறது? என் முடிவைத்தான் நான் முன்னமேயே சொல்லிவிட்டேனே! அதை மாற்றி நான் இப்போது வேறு என்ன சொல்லப் போகிறேன்'' என்றாள்.

மாசிலாமணிப் பிள்ளை பிரமிப்படைந்து, ''என்ன ஆச்சரியம்! நான் இவ்வளவு தூரம் புத்தி சொல்லியும், அது உன் மனசில் உறைக்கவில்லையா? என்னை விட்டுப் பிரிந்து போக வேண்டும் என்ற எண்ணம் மாறவில்லையா? இது நிச்சயந்தானா? ஒரே முடிவாகச் சொல்லிவிடு. முன்பின் யோசித்து ஆய்ந்தோய்ந்து பதில் சொல். வீணாகக் கெட்டுப் போகாதே'' என்றார்.

லீலாவதி, ''நான் சொன்னதுதான் முடிவு. நீங்கள் என்னைக் கொன்றாலும் கொன்றுவிடலாம். என் உடம்பில் உயிர் இருக்கும் வரையில் நான் உங்களோடுகூட இருக்க சம மதிக்க மாட்டேன்'' என்று பிடிவாதமாகக் கூறினாள்.

மாசிலாமணிப் பிள்ளை கட்டிலடங்கா வெறியும் மூர்க்கமும் அடைந்தவராய், ''அப்படியானால், உன் இஷ்டப்படியே நீ செய்து கொள். இப்போதே போகப்

போகிறாயா? அல்லது, நாளைக்குக் காலையில் போகிறாயா?'' என்றார்.

லீலாவதி, ''நான் ஏறிவந்த வண்டியைத் திருப்பி அனுப்பி விட்டேன். அது இந்நேரம் வெகுதூரம் போயிருக்கும்; அது இருந்தால் நான் இப்போதே போகத் தடையில்லை; அதோடு என் உடம்பும், மனமும் அலுத்துத் தளர்ந்து போயிருப்பதால், இன்று ராத்திரி மாத்திரம் நான் இவ்விடத்திலேயே தனியான ஓர் அறையில் படுத்திருந்துவிட்டு விடியற்காலம் புறப்பட்டுப் போய் விடுகிறேன்'' என்ற முடுக்காகப் பேசினாள்.

மாசிலாமணிப் பிள்ளை கோப நகை நகைத்து, ''ஓகோ அப்படியா! அப்படியே செய்துகொள். நீ இன்று தனியான அறையிலேயே படுத்துக்கொள். நான் வெளிக்கதவைப் பூட்டி வைக்கிறேன். நீ பத்திரமாக உள்ளேயே இரு'' என்றார்.

லீலாவதி தனது புருஷர் அவ்வளவு தூரம் வழிக்கு வந்ததைக் கண்டு, முன்னிலும் அதிகத் துணிவும் மனோதிடமும் கொண்டவளாய், ''சரி; அப்படியே ஆகட்டும். நீங்கள் இந்த அறையைப் பூட்டியே வைக்கலாம்; நீங்கள் இனி கதவைத் திறக்காமல், என்னை இதற்குள்ளேயே வைத்துக் கொன்றுவிட்டால் கூட, அதைப்பற்றி நான் கொஞ்சமும் விசனப்படமாட்டேன்'' என்று கூறினாள்.

தாம் அவளை அதட்டியும், பயமுறுத்தியும், அன்பாக நீண்ட பிரசங்கம் செய்தும் பார்த்தது எல்லாம் அவளது மன உறுதியைத் தளரச் செய்ய மாட்டாமல் உபயோகமற்றுப் போனதைக் கண்டு ஒருவாறு பயந்து அடங்கிப்போன மாசிலாமணிப்பிள்ளை அந்த இரவு முழுதும் அவளைத் தனியாக விட்டிருந்து மறுநாள் நயமாகப் பேசினால், அவளது கோபமும் அருவருப்பும் மாறிப் போயிருக்கும் என்றும், அவளது பழைய அன்பு திரும்பிவிடும் என்றும் நினைத்துக் கொண்டவராய், அந்த அறையை விட்டு வெளியில் போய்க்

கதவை மூடி வெளிப்பக்கத்தில் தாளிட்டுக் கொண்டு வேறோர் அறைக்குப் போய்ப் படுத்துக் கொண்டார்.

தனியாக விடப்பட்ட லீலாவதி கதவின் உட்புறத்தில் தாளை மாட்டிவிட்டுத் தனது கட்டிலின் மீது ஏறி உட்கார்ந்து தாங்க வொண்ணா விசனத்தோடு தலைப்பக்கத்தில் சாய்ந்து கொண்டாள். அவளது மனம் முற்றிலும் கலவரமடைந்து போயிருந்தது. ஆகையால், தான் படுக்க வேண்டும் என்ற எண்ணமாவது, தூங்க வேண்டும் என்ற உணர்ச்சியாவது உண்டாகவில்லை. அவள் தனது பரிதாபகரமான நிலைமையைப் பற்றிப் பலவாறு எண்ணமிடத் தொடங்கினாள். அதற்குமுன் அலுத்துச் சோர்வடைந்து போனதாகத் தோன்றிய அவளது மனதும், தேகமும் மறுபடியும் உற்சாகத்தை அடைந்தன. ஒருவிதத் துணிவும் மனோதிடமும் உண்டாகிப் பெருகிக்கொண்டே இருந்தன. தன்னைத் தனது புருஷன் எவ்வளவு தூரம் வற்புறுத்தினாலும், நயந்தாலும் தான் எப்படியும் தனது கருத்தை நிறைவேற்றியே தீர வேண்டும் என்ற ஒரே முடிவு அவளது மனதில் வலுவடைந்து கொண்டிருந்தது. அன்றையதினம் தான் அவ்வளவுதூரம் துணிந்து தனது புருஷனை எதிர்த்து அவரை விட்டுப் பிரிந்து போக உறுதி கொண்டிருப்பதாகக் கொஞ்சமும் தாட்சணியம் பாராமல் அலட்சியமாகப் பேசிய பிறகு, தான் மறுபடியும் தனது உறுதியைத் தளரவிட்டு, பழையபடி அவரோடு கூட இருக்க இணங்கினால், தன் விஷயத்தில் ஒருவித இளக்காரம் உண்டாகி விடும். ஆதலால், தான் அதற்குப் பின் அவரிடத்தில் கேவலம் அடிமையிலும் அடிமையாக இருந்து முன்னிலும் ஆயிரமடங்கு அதிகப் பணிவாக அடங்கி ஒடுங்கி நடந்து கொள்ள வேண்டும் என்பது நன்றாகத் தெரிந்தது. அவரை விட்டுத் தான் பிரிந்து தனது பெரிய தகப்பனாரிடம் போய் விட்டால், அந்த மனிதர் தன்மீது தீராப்பகைமை கொண்டு பல வகையில் முயன்று தமது வன்சினத்தை எப்படியும் முடிக்க

எத்தனிப்பார் என்பதும் நன்றாக விளங்கியது. தன்னை விட்டுவிடத் தனது புருஷர் என்ன காரணத்தினால் இணங்கவில்லை என்பதும் அவளுக்கு ஒருவாறு தெரிந்தது. ஒரு வேளை மாதம் ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய் கொடுப்பது போதாது என்ற எண்ணத்தினால் தனது புருஷர் தனது கருத்திற்கு இணங்கவில்லையோ என்ற எண்ணம் உண்டாயிற்று. இருந்தாலும், தன் விஷயத்தில் பெரிதும் இரக்கம் கொண்டு தயாள மனதோடு அவ்வளவு பெருத்த தொகையைக் கொடுக்க இணங்கும் தனது பெரிய தகப்பனாரை அதிகமாகக் கசக்கி இன்னமும் அதிகத் தொகை கொடுக்கும்படி கேட்டுக் கொள்வதும் நியாயமல்ல என்று அவள் நினைத்தாள். பணத்தின் பொருட்டுத் தனது கற்பை விற்கத் துணிந்த ஆண்மையற்ற அந்த அயோக்கிய மனிதரோடு தான் இருப்பதே தகாது என்ற எண்ணமும் உண்டாயிற்று. தனது விஷயத்தில் சிறிதும் அன்பு இல்லாமல் மகா குரூரமாக நடந்து வந்த மனிதருக்குத் தன்னால் இயன்ற துன்பம் எதையேனும் செய்துவிட்டுப் போக வேண்டும் என்ற ஓர் ஆங்காரமும் மும்முரமாக எழுந்து அவளது மனதை அரித்துப் புண்படுத்திக் கொண்டிருந்தது.

கடைசியாக அவள் ஒருவித முடிவு செய்து கொண்டாள். தான் அவரைவிட்டுத் தப்பிப்போவதற்கும் தனது வன்சினத்தை முடித்துக்கொள்வதற்கும் ஒரே ஒரு வழிதான் இருந்தது. ஆனால், அது எளிதான வழியல்ல. தான் நிரம்பவும் துணிகரமாகவும், எதற்கும் பின்வாங்காமலும், நிரம்பவும் ஜாக்கிரதையாகவும் அந்தக் காரியத்தைச் செய்தாலன்றி தான் தப்ப வழியில்லை என்பது அவளுக்கு நிச்சயமாகப் பட்டது. ஆனால், தான் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்தது தனது புருஷருக்குத் தெரிந்துபோகுமானால் அவர் தன்னை இலேசில் விடமாட்டார் என்பதும், அவர் எப்படியும் பழிக்குப்பழி வாங்கித் தன்னைச் சந்தியில் இழுத்துவிட்டு வெந்நீர் அண்டா ரகசியத்தைப்

பகிரங்கப்படுத்தித் தன்னையும் மீளாத்துன்பத்தில் மாட்டி விடுவார் என்றும் அவளுக்கு நிச்சயமாகப் பட்டன. இருந்தாலும், தான் நிரம்பவும் ஜாக்கிரதையாகத் தனது எண்ணத்தை நிறைவேற்றினால், தனது புருஷர்கடைசிவரையில் தன்னை நம்பியே இருப்பார் என்றும் தன்மீது சந்தேகம் கொள்ள மாட்டார் என்றும் அவள் தீர்மானித்துக் கொண்டாள்.

அப்போது மணி இரண்டாயிற்று. ஆனாலும், அவளுக்குத் தூக்கத்திலேயே மனம்செல்லவில்லை. எப்படியாவது அந்த இரவிற்குள் முயன்று தான் தனது யோசனையை நிறைவேற்ற வேண்டும் என்ற பிடிவாதத்தோடு அவள் எழுந்து அந்த அறை முழுவதையும் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினாள். தனது புருஷர் கதவை வெளிப்புறத்தில் தாளிட்டுத் தன்னை அவ்விடத்தில் சிறை வைத்திருக்கிறார் என்பது அவளுக்குத் தெரியும். அந்த அறையைவிட்டுத் தான் அரை நாழிகை நேரம் வெளியில் போய்விட்டு வரவேண்டியது அத்தியாவசியமாக இருந்தது. அவள் எப்படியாவது பிரயாசைப் பட்டு வெளித் தாழ்ப்பாளைத் திறந்துகொண்டு வெளியில் போய் விட்டுத் திரும்பிவந்து மறுபடியும் தாழ்ப்பாளைப் போட்டுவைக்க வேண்டியிருந்தது. அப்படிச் செய்து வைத்தால், தனது புருஷர் தன்னைப் பற்றி சந்தேகிக்கவே இடமில்லாமல் போய்விடும் என்று அவள் நினைத்து எழுந்து கதவண்டைப்போய் நின்று கொண்டு வெளித் தாழ்ப்பாளின் உட்பக்கம் எப்படியிருக்கிறது என்று ஆராய்ச்சி செய்து பார்த்தாள். வெளித்தாழ்ப்பாளின் உள்பாகம் இரட்டை இரும்புத் தகடாக உள்பக்கத்தில் வந்து இருபக்கங்களிலும் மடக்கி விடப்பட்டிருந்தது. அந்த இரண்டு தகடுகளையும் நிமிர்த்தி ஒன்றாகச் சேர்த்து வெளியில் தள்ளிவிட்டால், கதவு திறந்து கொள்ளும் என்று அவள் உணர்ந்து கொண்டாள். அதற்கு வேண்டிய அனுகூலமான இரும்பு சாமான் ஏதாவது அந்த அறையில் இருக்கிறதா என்று, அவள் அங்குமிங்கும் போய்த் தேடிப் பார்த்தாள். அந்த

அறைக்குள் இருந்த அவர்களது கட்டிலை ஒன்றாகச் சேர்க்கவும் பிரிக்கவும் உபயோகப்படும் இரும்பு வில் முடுக்கி யொன்று ஒரு மாடத்தில் வைக்கப்பட்டிருந்தது. அதைக் கண்டவுடன் அவள் நிரம்பவும் சந்தோஷம் அடைந்தவளாய் அதையும் இன்னம் சில இரும்பு சாமான்களையும் எடுத்துக்கொண்டு போய் ஓசை உண்டாகாமல் மெதுவாக வேலை செய்து தாழ்ப்பாளின் இரண்டு கதவுகளையும் நிமிர்த்தி ஒன்றாகச் சேர்த்து வில்முடுக்கியை அதன் மேல் வைத்துத் தனது முழுவல்லமையையும் உபயோகப்படுத்தி வெளியில் தள்ளிவிட, அது கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து அப்பால் போய் கதவை விட்டு வேறாக விலகிவிட்டது. உடனே கதவு திறந்து கொண்டது. தனது புருஷர் மேன்மாடத்திலேதான் படுத்துக் கொண்டிருப்பார் என்பது அவளுக்கு நிச்சயமாகத் தெரியும். ஆதலால், அவள் தனது கையில் விளக்கை எடுத்துக் கொண்டு சந்தடி செய்யாமல் வெளியில் போய் கூடத்தை அடைந்து, அவ்விடத்தில் ஒரு மேஜையின் மேல் இருந்த காகிதம், மைக்கூடு, இறகு முதலியவற்றை எடுத்து வைத்துக்கொண்டு விரைவாக அடியில் வருமாறு ஒரு கடிதம் எழுதலானாள்:-

தஞ்சையிலுள்ள போலீஸ் கமிஷனர் அவர்களுக்கு:

சில மாத காலத்திற்கு முன் கோபண்ணாராவ் என்பவரைக் குத்திக் கொன்றுவிட்டு இந்த ராஜ்ஜியத்தை விட்டு ரகசியமாக மைசூருக்கு ஓடி அவ்விடத்தில் சில காலம் இருந்த கோபாலசாமிப் பிள்ளை என்பவர் இப்போது ரகசியமாக வந்து மாரியம்மன் கோவில் என்ற ஊரின் செட்டித் தெருவிலுள்ள ஒரு பங்களாவில் மறைவாக இருந்து வருகிறார். அவர் இப்போது தம்முடைய பெயரை மாசிலாமணிப் பிள்ளை என்று மாற்றி வைத்துக் கொண்டிருக்கிறார். கொலைக் குற்றத்திற்காக அவர் பேரில் வாரண்டு பிறந்திருப்பதாகத் தெரிகிறது. இந்தக் கடிதம் கண்டவுடனே எவருக்கும் தெரியாமல் போலீசார் ரகசியமாகப்

புறப்பட்டு அந்த ஜாகைக்குப் போனால், அவரைப் பிடித்துக் கொள்ளலாம். அந்த பங்களாவிலிருந்து தப்பித்துப் போவதற்கு அநேகம் வழிகள் இருக்கின்றன. ஆகையால், அநேகம் ஆட்கள் வந்து அவர் சந்தேகப்படாதபடி நாற்புறங்களையும் வளைத்துக் கொண்டால், அவரை ஒரு நொடியில் பிடித்துவிடலாம். அவர் நல்ல தந்திரி. ஆகையால் போலீசார் ஏமாறிப்போகாமல் நிரம்பவும் ஜாக்கிரதையாக நடந்து கொண்டால் அன்றி, அவர் எளிதில் தப்பி ஓடிவிடுவார். அவர் அந்த இடத்தில் இருப்பது போலீசாருக்கு எப்படித் தெரிந்தது என்ற விவரத்தை அவர் அறிந்துகொள்ளவே கூடாது. அதுவுமன்றி, இந்தக் காகிதத்தையும் போலீசார் அவருக்குக் காட்டக் கூடாது. இதன் அடியில் கையெழுத்து இல்லை. ஆனாலும், இதன் விஷயம் உண்மையாதலால் இதை அசட்டை செய்யக்கூடாது.

- என்று லீலாவதி கடிதத்தை எழுதி முடித்து அதை மடித்து ஓர் உறைக்குள் போட்டு மேல்விலாசம் எழுதிக் கையில் எடுத்துக் கொண்டு அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டாள். அப்போது கடிகாரம் மூன்று மணி அடித்தது. தான்செய்ய வேண்டிய அடுத்த காரியத்தை அப்போதே செய்வதா, அல்லது சிறிது நேரம் பொறுத்துச் செய்வதா என்று யோசனை செய்தவளாய் அவள் சிறிதுநேரம் தயங்கினாள். ஆனாலும், அவள் உடனே ஒருவித முடிவு செய்துகொண்டாள். தான் தொடங்கிய காரியத்தைத் தாமதமின்றி உடனே செய்து முடித்து விடுவதே உசிதமென்று எண்ணிக்கொண்டு அவள் கூடத்தை விட்டு வெளிப்பட்டு பங்களாவின் பின்பக்கமாகப் போய், அவ்விடத்தில் தோட்டக்கார வீரப்பனும் அவனது மனைவி யான அங்காளம்மாளும் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த அறைக்குள் நுழைந்தாள்.

அவர்கள் இருவரும் அயர்ந்து கடுமையான நித்திரையில் ஆழ்ந்து இருந்தனர். லீலாவதி அங்காளம்மாளண்டை போய் நின்று, மெதுவாக அவளைத் தட்டி அவளது பெயரைச்

சொல்லி எழுப்ப, அவர்கள் இருவரும் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தனர். அந்த அகாலத்தில் எப்போதுமில்லாமல், லீலாவதி அந்த அறைக்குள் வந்ததைப் பற்றி அவர்கள் பெரிதும் திகைப்படைந்து விஷயம் என்னவாக இருக்குமோ என்று கவலை கொண்டு அவளை வியப்போடு பார்த்தனர். கூச்சலிடாமல் சாந்தமாக இருக்கும்படி லீலாவதி அவர்களுக்குச் சைகை காட்டினாள். அவளிடத்தில் அவர்கள் பலவகையான நன்மைகள் பெற்றிருந்தவர்கள். ஆதலால், அவளது விஷயத்தில் அவர்கள் நிரம்பவும் நன்றி விசுவாசமும், அந்தரங்கமான அபிமானமும் அடைந்தவர்களாக இருந்தனர். அதுவுமன்றி மாசிலாமணிப்பிள்ளை இயற்கையிலேயே துஷ்டகுணமும் துர் நடத்தையும் உள்ளவர் ஆதலால், அவரிடத்தில் அவர்களுக்குச் சிறிதும் அபிமானமே இல்லாது இருந்தது. அவர் லீலாவதியை ஏதோ காரணம் பற்றி அடிக்கடி வருத்தி உபத்திரவம் செய்கிறார் என்பதை ஒருவாறு உணர்ந்திருந்தவர்கள் ஆதலால், அந்த அகாலத்தில் லீலாவதி சந்தடி செய்யாமல் ரகசியமாக வந்ததைக் கண்டு, புருஷனுக்கும் பெண்ஜாதிக்கும் ஏதோ விபரீதமான சச்சரவு ஏற்பட்டிருப்பதாகவும், அது சம்பந்தமாக லீலாவதி தங்களிடம் ஏதோ உதவியை நாடி வந்திருக்கிறாளென்றும் அவர்கள் யூகித்துக் கொண்டார்கள். உடனே தோட்டக்காரன் லீலாவதியைப் பார்த்து நிரம்பவும் அன்பாகவும் பணிவாகவும் பேசத் தொடங்கி, "என்ன விசேஷம் அம்மணி! எங்களால் ஏதாவது காரியம் ஆகவேண்டுமா?" என்றான்.

உடனே "ஆம். நீ அவசரமாக ஒரு காரியம் செய்ய வேண்டும். அதோடு, நீ இப்போது செய்யும் காரியம் என் புருஷனுக்காவது வேறே யாருக்காவது தெரியவே கூடாது" என்றாள். தோட்டக் காரன் பிரியமாக, "அம்மணீ! உங்களுக்கு என்ன காரியம் ஆக வேண்டும்? சொல்லுங்கள். ஒரு நொடியில் முடித்து வைக்கி றேன். அதுவுமன்றி அதை எவரும் தெரிந்து கொள்ளாதபடி பரம ரகசியமாகவே செய்து முடிக்கிறேன். நீங்கள் கொஞ்சமும் யோசிக்காமல் சங்கதியைச் சொல்லலாம்" என்றான்.

லீலாவதி, "சரி; சந்தோஷம். நீங்கள் என் விஷயத்தில் அந்த ரங்கமான விசுவாசம் உள்ளவர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகையால், இந்தக் காரியத்தை நீங்கள் செய்வீர்கள் என்று நிச்சயமாக நம்பியே நான் இங்கே வந்தேன். வேறொன்றும் இல்லை. இதோ ஒரு கடிதம் இருக்கிறது. நீ இதை எடுத்துக் கொண்டு தோட்டத்தின் பின்புறத்தில் இருக்கும் வாசலைத் திறந்து கொண்டு வெளியில் போய் ஒரே ஓட்டமாக தஞ்சாவூருக்குப் போக வேண்டும். போய்விட்டுப் பொழுது விடிவதற்குள் திரும்பி இங்கே வந்துவிடவேண்டும். என் புருஷர் காலையில் எழுந்து வெளியில் வரும்போது நீ வழக்கப்படி தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்க வேண்டும். நீ தஞ்சாவூருக்குப் போய்விட்டு வந்தாய் என்று அவர் கொஞ்சமும் சந்தேகிக்கவே இடமிருக்கக் கூடாது" என்றாள்.

தோட்டக்காரன், "இப்போது மணி எவ்வளவு இருக்கலாம்?" என்றான்.

லீலாவதி, "இப்போது தான் கடிகாரம் மூன்றுமணி அடித்தது" என்றாள்.

தோட்டக்காரன், "சரி; நல்லதாயிற்று. பொழுது விடிவதற்குள் நான் இரண்டு தரம் தஞ்சாவூருக்குப் போய்விட்டு வரலாம். கடிதத்தைத் தஞ்சாவூரில் யாரிடத்தில் கொடுக்க வேண்டும்?" என்றான்.

லீலாவதி, "உனக்குப் போலீஸ் கமிஷனருடைய கச்சேரி இருக்கும் இடம் தெரியும் அல்லவா; அந்தக் கச்சேரிக்குப்போ. அதன் வாசலில் ஒரு தபாற்பெட்டி தொங்கிக் கொண்டிருக்கும்; அந்தப் பெட்டிக்குள் இந்தக் கடிதத்தைப் போட்டுவிட்டு நேராக வந்துவிடு. அவ்வளவுதான் காரியம்! அங்கே ஒருவேளை தபால் பெட்டி இல்லாவிட்டால், வாசற் கதவின் இடுக்கின் வழியாக உள்ளே சொருகிவிட்டு வந்துவிடு" என்றாள்.

தோட்டக்காரன் வியப்பும் அச்சமும் அடைந்து, ''போலீஸ் கமிஷனர் கச்சேரிக்கா?'' என்று சந்தேகமாக வினவினான்.

லீலாவதி ''ஆமப்பா. பெரிய கோவிலுக்குப் பக்கத்தில் இருக்கிறதே, அந்தக் கச்சேரியை நீ பார்த்தது இல்லையா? அங்கே போவதைப் பற்றி நீ கொஞ்சமும் பயப்பட வேண்டாம். இதில் கெடுதலான விஷயம் ஒன்றும் இல்லை. நீ இதை ரகசியமாக மாத்திரம் செய். எல்லாம் சரியாய்ப் போகும்'' என்றாள்.

அதைக் கேட்டு ஒருவாறு துணிவடைந்த தோட்டக்காரன் அவளிடம் செலவு பெற்றுக்கொண்டு உடனே அவ்விடத்தை விட்டு வெளியில் போய் தஞ்சையை நோக்கி ஓட்டமாகச் செல்லலானான்.

அதன்பிறகு லீலாவதி தோட்டக்காரனது மனைவியை நோக்கி, ''நீ ஒரு காரியம் செய்ய வேண்டும். நாம் இருவரும் இப்போது ஒன்றாகச் சேர்ந்து போனால், சத்தத்தைக் கேட்டு ஒரு வேளை என் புருஷர் விழித்துக்கொள்வார். ஆகையால், நான் முன்னால் போய் என்னுடைய படுக்கை அறைக்குள் நுழைந்து கதவை மூடிக்கொள்ளுகிறேன். நீ இன்னம் அரைநாழிகை நேரம் பொறுத்து இவ்விடத்தைவிட்டு அங்கே வந்து, என்னுடைய படுக்கையறைக் கதவின் வெளித் தாழ்ப்பாளை மாட்டிவிட்டு வந்து படுத்துக்கொள். அவ்வளவுதான் நீ செய்ய வேண்டிய வேலை. என் புருஷர் என்னை அந்த அறைக்குள் வைத்து வெளியில் தாளிட்டுக் கொண்டுபோனார். நான் ஒரு தந்திரம் செய்து அதைத் திறந்துகொண்டு வெளியில் வந்தேன். மறுபடியும் நான் உள்ளேபோய் இருந்துகொள்ள வேண்டும். தாழ்ப்பாள் அவர் போட்டது போலவே இருக்க வேண்டும். ஆகையால், சந்தடி செய்யாமல் நீ வந்து சங்கிலியின் ஓசை உண்டாகாதபடி மெதுவாக அதை மாட்டிவிட்டு வந்துவிடு'' என்றாள்.

அதைக் கேட்ட தோட்டக்காரி, ''சரி; இதுதானா ஒரு பெரிய காரியம். அப்படியே செய்கிறேன். நீங்கள் போங்கள். நான் அரை நாழிகையில் வருகிறேன்'' என்றாள்.

லீலாவதி, ''நீ வராமல் இருந்து விடப் போகிறாய்! தாழ்ப்பாள் திறந்தபடி இருந்தால், அவர் எல்லாவற்றையும் உடனே கண்டு கொள்வார்; உன் புருஷன் தஞ்சாவூருக்குப்போனது கூட அவருக்குத் தெரிந்து போகும். ஆகையால், நீ இந்த விஷயத்தில் கொஞ்சம் ஏமாறிப் போவாயானால், என் தலைக்குக் கல் வந்துவிடும். ஜாக்கிரதை; ஜாக்கிரதை'' என்று மறுபடியும் வற்புறுத்தி அவளை எச்சரித்து அவ்விடத்தைவிட்டு மெல்ல நடக்கலானாள். நடந்து முன்பக்கத்திற்கு உள்ளே நுழைந்து கூடத்தை நோக்கிச் செல்ல, அப்போது, யாரோ மேன் மாடப்படியிலிருந்து இறங்கி வந்ததால் உண்டான காலடி ஓசை கேட்டது. அதைக் கேட்ட லீலாவதி திடுக்கிட்டு மான்போல மருண்டு சடேரென்று சித்திரப் பதுமைபோல அசைவற்று நின்றுவிட்டாள்.

''ஐயையோ! என்ன செய்வேன்! என் புருஷர் வருகிறார்போல் இருக்கிறதே! தாழ்ப்பாள் கதவை விட்டுப் பெயர்ந்து நாதாங்கியில் தொங்கிக் கொண்டிருப்பதையும், நான் இங்கே நிற்பதையும் அவர் கண்டு கொள்வாரே! கண்டு கொண்டால், அவருக்கு உண்டாகும் கோப வெறியில் அவர் என்னை மகா கொடுமையான சித்திரவதைக்கு ஆளாக்கிக் கொன்று போட்டுவிடுவாரே! ஐயோ தெய்வமே! என்ன செய்யப் போகிறேன்!'' என்று தனக்குத்தானே எண்ணமிட்டு அபாரமான திகில்கொண்டு தனது கைகளைப் பிசைந்து கொண்டாள். அவளது முகக்களை மாறி விகாரத்தோற்றமும் உண்டாகி விட்டது. சகிக்க வொண்ணாத கிலியினால் உடம்பு தத்தளிக்க, அவளது இருதயம் தடதடவென்று அடித்துக் கொள்ள மூச்சு ஒடுங்கிப்போய்விட்டது. அந்த மகா துன்பகரமான நிலையில் அவள் பேச்சு மூச்சற்று அசையாமல் நின்றவண்ணம்

அந்த ஓசையை உற்றுக் கவனித்தாள். மேலே இருந்து இறங்கி வந்த மனிதர் ஓசையை அடக்கித் திருட்டுத்தனமாக வந்தது நன்றாகத் தெரிந்தது. தான் தாழ்ப்பாளை விலக்கிக் கொண்டு வெளியில் போய் ஓசையைக் கேட்டே தனது புருஷர் அப்படி இறங்கிவந்து தன்னைக் கவனிக்கிறார் என்று அவள் நிச்சயப்படுத்திக் கொண்டாள். அவர் கூடத்திற்கு வந்து விட்டால், தான் என்ன செய்கிறது என்ற கவலையும் அச்சமும் எழுந்து அவளைக் கலக்கிவிட்டன. எப்படியும் அவர் தனது அறைக்குப் போய் தாழ்ப்பாளின் அலங்கோலத்திலிருந்து, தான் தப்பி வெளியில் போய்விட்டதாக உணர்ந்து தன்னைத் தேடுவார் என்பது சந்தேகமற விளங்கிவிட்டது. அந்தச் சமயத்தில் தான் அவரது கையில் அகப்பட்டால், அவர் தனக்கு எப்படிப்பட்ட பயங்கரமான தீங்கு இழைப்பாரோ என்ற பெரும்பீதி அவளைத் தூண்டினது. ஆகையால், அவ்விடத்தில் சுருட்டி ஒரு பக்கமாகத் தள்ளி வைக்கப்பட்டிருந்த படுதாவிற்குள் நுழைந்து அவள் மறைந்துநின்ற வண்ணம் இடுக்கின் வழியாக வெளியில் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்த மனிதர் தமது காலடி ஓசையை அடக்கி மெதுவாகவே நடந்து படிகளைவிட்டுக் கீழே இறங்கினார்; இறங்கியவர் லீலாவதி மறைந்து நின்ற திக்கிலேயே நடந்துவந்தார். அதைக் கண்ட லீலாவதி நடுநடுங்கி நெருப்பின்மேல் நிற்பவள்போலக் கலங்கிக் கிலிகொண்டு நின்றாள். அவளது உயிரில் பெரும்பாகமும் போய் விட்டது என்றே மதிக்க வேண்டும்.

அவர் படிக்கட்டில் நடந்துவந்தபோது, தான் படுதாவிற்குள் மறைந்திருக்க, அது அவருக்கு எப்படித் தெரிந்திருக்கும் என்ற சந்தேகம் உண்டாயிற்று. அவர் தன்னை நோக்கித்தான் வருகிறாரோ, அல்லது, வேறே எங்கேயாவது போகும் எண்ணத்தோடு அந்த வழியாக வருகிறாரோ என்ற ஐயம் தோன்றி அவளது மனதைக் கரைகடந்த கலவரத்தில் ஆழ்த்தி விட்டது. ஒவ்வொரு விநாடி நேரமும் ஒவ்வொரு பெருத்த

கற்பகாலம் போலப் பெருகி அவளை நரகவேதனையில் ஆழ்த்தியது. இரண்டொரு நிமிஷ நேரம் கழிந்தது. அவர் படுதாவண்டை நெருங்கி வந்துவிட்டார். அவளது கிலியும் நடுக்கமும் உச்சநிலையை அடைந்துவிட்டன. அடுத்த விநாடியில் உயிர் போய்விடும் என்ற எண்ணமும் உண்டாகி விட்டது. அவள் இடுக்கில்லாமல் படுதாவை இழுத்து மூடிக் கொண்டாள்.

ஆனால், அந்த மனிதர் படுதாவை உராய்ந்தபடி நடந்து அப்பால் சென்றார். அவரது காலடியோசை சிறிது தூரத்திலிருந்து உண்டாவதாக உணர்ந்த லீலாவதி, உண்மையை எப்படி யாவது அறிந்துகொள்ள வேண்டும் என்ற பேராவலினால் தூண்டப்பட்டவளாய் மறுபடியும் படுதாவைச் சிறிதளவு திறந்து வெளியில் பார்த்தாள். அந்த மனிதர் அவளது பக்கத்தில் முதுகைத் திருப்பிய வண்ணம் பக்கத்தில் இருந்த சமையலறையை நோக்கிச் சென்றது தெரிந்தது. அப்போதே அவளது உயிர் திரும்பியது. அவள் நன்றாக மூச்சுவிடத் தொடங்கினாள். அந்த மனிதர் தன்னைவிட்டு அப்பால் போவது மெய்யோ பொய்யோ என்ற ஐயம் அப்போதும் அவளது மனதில் உண்டானது. ஆகையால், அவள் படுதாவை இன்னமும் அதிகமாகத் திறந்து நன்றாக ஊன்றிப் பார்த்தாள். அந்த மனிதர் சமைலறைக்குள் போனது நன்றாகத் தெரியவே, அவளது நடுக்கமும் திகிலும் சிறிதளவு தணிவடைந்தன. தான் அவ்விடத்தில் இருப்பதை விட மெதுவாக அதைவிட்டுத் தனது அறைக்குள் போய்ப் படுத்துக் கொள்ளலாமா என்ற எண்ணம் தோன்றியது. ஆனால், தான் போய் தாழ்ப்பாளை மறுபடியும் கதவிற்குள் விட்டு, பின் புறத்தைச் சரிப்படுத்துவதற்குள், அவர் தமது வேலையை முடித்துக்கொண்டோ, அல்லது, அந்த ஓசையைக் கேட்டோ திரும்பி அங்கே வந்துவிடுவாரோ என்ற கவலையும் அச்சமும் உண்டாயின. எப்படியாவது தான் போய்த் தாழ்ப்பாளின் அடிப்பக்கத்தைக் கதவின் இடுக்கில் விட்டு உள்

பக்கத்தில் நீளும் கவைகளை மடக்கிவிட்டு அதை அதிக துரிதத்தில் சரிப்படுத்த வேண்டும் என்றும், அதற்குள் அவர் வந்து விட்டால், தான் உட்புறத்துத் தாழ்ப்பாளைப் போட்டுக்கொள்ள வேண்டுமென்றும் அவள் தீர்மானம் செய்துகொண்டு படுதாவை விட்டுத் தனது விரல்களைக் கீழே ஊன்றியபடி சிறிதும் ஓசை உண்டாகாதபடி வெளியில் வந்து இரண்டோரடி எடுத்துக் கூடத்தில் வைக்க, அந்தச் சமயத்தில், சமையலறைக்குள் திடீரென்று உண்டான விளக்கு வெளிச்சத்தைக் கண்டு அவள் திடுக்கிட்டுத் தனது முகத்தை அந்தப் பக்கமாகத்திருப்பி, வெளிச்சம் உண்டான இடத்தைப் பார்த்தாள். பார்க்கவே, அவ்விடத்தில் ஆஜானுபாகுவாய் பயங்கரமான விகாரத் தோற்றத்தோடு விளக்கும் கையுமாக அந்த மனிதன் நின்று கொண்டிருக்கக் கண்டாள். அங்கே நின்ற மனிதன் தனது புருஷன் அன்று என்பது அவளுக்கு உடனே தெரிந்து விட்டது. அதுவரையில் அவளை நரகவேதனைக்கு ஆளாக்கிக் கொண்டிருந்த ஒருவிதமான திகில் ஒழிந்து போனது. ஆனாலும், அவளது மனதில் வேறுவிதமான பேரச்சமும், சந்தேகங்களும், கலக்கமும் உண்டாகி அவளை மட்டுக்கடங்கா வேதனையில் ஆழ்த்தின. சமையலறைக்குள் தோன்றிய விளக்கின் பிரகாசத்தில் அவள் அந்த மனிதனை உற்றுப் பார்த்ததில், அதற்குமுன் இரண்டு தடவைகளில் தான் அந்த மனிதனைப் பார்த்திருந்தது அவளுக்குச் சந்தேகமற விளங்கியது. இளவரசரையும், தனது பெரிய தகப்பனாரையும் பலவந்தமாகப் பிடித்துக் கொணர்ந்து தஸ்தாவேஜு எழுதி வாங்கிய இரவில், தனது புருஷருக்கு உதவியாக வந்திருந்த திருடர்களோடு அந்த மனிதனும் வந்திருந்ததாக அவளுக்கு நினைப்பு உண்டாயிற்று. இன்னொரு நாள் இரவில் வெந்நீர் அண்டாவிற்குள் இருந்த பிணத்தை எடுத்து அடக்கம் செய்தகாலத்தில் தோட்டத்தில் குழி வெட்டிய மனிதனும் அவனே என்ற எண்ணமும் உண்டாயிற்று. அந்தக் காலத்தில் அவனைத் தனது புருஷர் கட்டாரி என்று கூப்பிட்டதை அவள் தனது திகிலில் கவனித்து நினைவில்

வைத்துக் கொள்ளவில்லை. ஆகையால், அவனது பெயர் என்னவென்று அவளுக்கு இப்போது நினைவு உண்டாக வில்லை. இருந்தாலும், அவன் கேவலம் திருடரைச் சேர்ந்த கீழ்ச்சாதி மனிதன் என்பது அவளுக்குச் சந்தேகமறத் தெரிந்தது. ஆகவே, அவன் அந்த அகாலவேளையில் மேன்மாடத்திலிருந்து சந்தடி செய்யாமல் திருட்டுத்தனமாக வந்ததன் முகாந்திரம் என்னவாக இருக்கலாம் என்று அவள் சிந்திக்கலானாள். அவன் ஒருவேளை தனது புருஷருக்குத் தெரியாமல் வந்து பங்களாவிலிருக்கும் பொருள்களையெல்லாம் கொள்ளை யடிக்கும் கருத்தோடு வந்திருப்பானோ என்ற சந்தேகமே முதன்முதலில் அவளது மனதில் உண்டாகியது. அந்தச் சமயத்தில் தான் கூச்சலிட்டுத் தனது புருஷரையும், வேலைக்காரர்களையும் அண்டை வீட்டுக் காரர்களையும் கூட்டலாமா என்ற நினைவு உண்டாயிற்று. தனது கூக்குரலைக்கேட்டுத் தனது புருஷர் கீழே இறங்கி வந்து என்ன விசேஷம் என்று கேட்டால், வெளியில் யாரோ திருடன் வந்து சாமான்களை உருட்டியதைக் கண்டு, தான் தனது அறைக்குள் இருந்தபடி தாழ்ப்பாளை விலக்கிக் கொண்டு வெளியில் வந்ததாகச் சமாதானம் சொல்லிவிட்டால், அது பொருத்தமாக இருப்பது பற்றித் தமது புருஷர் அதை உண்மை என்று நம்புவதோடு தான் கடிதம் எழுதி அனுப்பியதைப் பற்றியும் சிறிதும் சந்தேகம் கொள்ளமாட்டார் என்று அவள் எண்ணிக் கொண்டாள். அந்தச் சமயத்தில் அந்தத் திருடன் அங்கே வந்தது தனக்கு நிரம்பவும் அனுகூலமான சம்பவமென்று நினைத்து, அவள் கூகூவென்று கூச்சலிட வாயைத் திறக்கப் போனவள் தற்செயலாக மறுபடியும் தனது பார்வையைச்சமையலறைக்குள் செலுத்தி அவ்விடத்தில் அந்தத் திருடன் என்ன செய்கிறான் என்று கவனித்தாள். அந்த விகாரமான மனிதன் தனது கையில் விளக்கை வைத்துக் கொண்டபடி அங்கும் இங்கும் தேடி, ஒரு பாத்திரத்தை எடுத்து, அவ்விடத்தில் ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்த பானையின் மூடியைத் திறந்து அதற்குள்

இருந்து தண்ணீரை எடுத்து நிதானமாகக் குடித்துக் கொண்டிருந்தான். அதைக் கண்ட லீலாவதி தான் கூச்சலிட வேண்டும் என்ற எண்ணத்தை சடக்கென்று அடக்கிக் கொண்டாள். அவளது மனதில் பலவிதமான எண்ணங்கள் உண்டாயின. அந்த மனிதன் தனது புருஷருக்குத் தெரியாமல் திருட வந்திருந்தால், தனியாக வரவும், அப்படி வந்த இடத்தில் கொஞ்சமும் பதைப்பின்றி நிதானமாகத் தண்ணீர் குடித்துக்கொண்டிருக்கவும் ஏதுவில்லையென்ற எண்ணமும் உண்டாயிற்று. அதுவுமன்றி, அவன் தனது புருஷருக்கு அந்தரங்க மான மனிதன் ஆகையால் அவன் திருட உத்தேசித்திருந்தால், தனது புருஷர் காணாதபடி கீழேயுள்ள பொருட்களை அபகரிக்க எண்ணியிருப்பானே அன்றி, மேன் மாடத்துக்குப் போய்விட்டு வரவேண்டிய காரணமில்லை என்ற நினைவு உண்டாயிற்று. ஆகையால், அவன் தனது புருஷனோடு மேன்மாடத்திலிருந்து தாகமடைந்து தண்ணீர் குடிப்பதற்காக எழுந்து வந்திருக்க வேண்டும் என்ற நினைவு உண்டாயிற்று. உடனே அவளது மனதில் மின்னலின் ஒளி தோன்றி மறைவது போல, இன்னொரு புதிய நினைவு சடேரென்று தோன்றியது. அதற்கு முந்திய சனிக்கிழமை தினம் நடு இரவில் யாரோ ஒருவன் வந்து கதவை இடித்ததும், தனது புருஷர் அவனை அழைத்துக் கொண்டுபோய் மேன்மாடத்தில் இருக்கச் செய்வதும், அவன் அண்ணாசாமி நாய்க்கன் என்ற யாரோ ஒரு மனிதன் என்று அவர் தன்னிடம் பொய் சொல்லி அவனை இரண்டு தினங்களாக மறைத்து வைத்திருந்ததும் அவளுக்கு நினைவு உண்டாயின. ஆகவே, அந்த மனிதனே மெத்தையிலிருந்து இப்போது கீழேவந்திருக்க வேண்டும் என்ற நிச்சயம் ஏற்பட்டது. ஆகையால், தான் சிறிது நேரத்திற்குமுன் நினைத்தபடி கூச்சலிடுவது சரியல்ல என அவளுக்குத் தோன்றியது. யாரோ மனிதன் கூடத்தில் வந்ததைக் கண்டு திருடன் என்று நினைத்துத் தாழ்ப்பாளை பலவந்தமாக விலக்கிக் கொண்டு வெளியில் வந்து கூச்சலிட்டதாகத் தான் சமாதானம் சொன்னால், தனது புருஷன் உண்மை என்றே

எண்ணிக்கொண்டாலும், அவர் ஏதோ ரகசியமான காரணத்தைக் கருதி அந்த மனிதனை யாரும் பார்க்காதபடி மறைத்து வைத்திருக்க, தான் கூச்சலிட்டு வேலைக்காரரும், அண்டை வீட்டாரும் கூட்டம் கூடும்படி செய்தால், தனது புருஷருக்குப் பரம சங்கடமான நிலைமை உண்டாவதன்றி, அதுபற்றி அவர் தன்னையும் கொடுமையாக தண்டிப்பார் என்ற பயம் உண்டாகி அவளது தொண்டையை அடைத்துவிட்டது. ஆகவே, அவள் மேலே நடக்காமல் திரும்பிப் படுதாவண்டை போய் நின்று முன்போல அதற்குள் மறைந்துகொண்டு இடுக்கினால் வெளியில் பார்த்தவண்ணம் இருந்தாள். சற்றுமுன் தான் சொல்லிவிட்டு வந்ததற்கு இணங்க, தோட்டக்கார அங்காளம்மாள் அந்த அபாயகரமான சமயத்தில் அவ் விடத்திற்கு வந்துவிடப் போகிறாளே என்ற அச்சமும் கவலையும் இன்னொரு பக்கத்தில் தோன்றி அவளை வதைத்தன. அவள் அவ்வாறு தத்தளித்து அடங்கி ஒடுங்கி மிகுந்த ஆவலோடு நின்றாள். சமையலறையில் காணப்பட்ட பிரகாசம் திடீரென்று மறைந்து போயிற்று. சில விநாடி நேரத்தில் அந்த முரட்டு மனிதன் சமையலறையை விட்டுக் கூடத்தை நோக்கி வந்து படுதாவைக் கடந்து மெத்தைப்படியை நோக்கி நடந்தான். அந்தச் சமயத்தில் தான் மூச்சுவிட்டால்கூட, அவன் அந்த ஓசையிலிருந்து யாரோ ஒளிந்திருப்பதாகச் சந்தேகித்து, படுதாவை நகர்த்திப்பார்த்துத் தான் இருந்ததைக் கண்டு வேறே யாரோ வென்று நினைத்துக் கூக்குரலிட்டுத் தாறுமாறான நிலைமையை உண்டாக்கிவிடப் போகிறானே என்ற பீதியினால் தூண்டப் பட்டவளாய் லீலாவதி தனது மூச்சை நன்றாக ஒடுக்கி அசைவற்று நின்று கொண்டிருந்தாள். இரண்டொரு விநாடி நேரத்தில் அந்த மனிதன் மெத்தைப் படிக்கட்டை அடைந்து, அதன்மேல் ஏறத்தொடங்கி, முன் வந்ததுபோலவே சந்தடியின்றி மெல்ல மெல்ல அடிவைத்துப் படிகளைக் கடந்து மேலே போக ஆரம்பித்தான். அதைக் கண்ட லீலாவதி தான் நினைத்ததுபோல அந்த மனிதனையே தனது புருஷர் அண்ணாசாமி நாய்க்கன்

என்று பொய் சொல்லி மறைத்து வைத்திருக்கிறார் என்ற எண்ணம் உறுதிப்பட்டது. பெரிய பூதத்தைப் போலக் காணப்பட்ட அந்த மனிதன் தனது ஜாகைக்குள் சில தினங்களாக ஒளிந்துகொண்டிருக்கிறான் என்ற நினைவு உண்டாக உண்டாக, இன்னது என்று விவரிக்க முடியாத ஒரு வித பீதியும் நடுக்கமும் தோன்றி அவளை அளவற்ற சஞ்சலத்தில் ஆழ்த்தின. கொள்ளைக் கூட்டத்தாரைச் சேர்ந்தவனும், கேவலம் பிணத்தைப் புதைக்கக் குழிவெட்டக் கூடியவனும், அண்டாவி லிருந்து வெளிப்படுத்தப்பட்ட பரமவிகாரமான பிணத்தைச் சிறிதும் அருவருப்பின்றி அலட்சியமாக எடுத்துச் சென்றவனு மாகிய அந்த மனிதன் கேவலம் தோட்டி ஜாதியைச் சேர்ந்தவனாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டானது. ஆகையால், அப்படிப்பட்ட இழிவான மனிதனைத்தனது புருஷர் சரிசமானமாக வீட்டிற்குள் சேர்த்து வைத்துக்கொண்டு அவனுக்கு உபசரணைகள் புரிந்து வருவது, அவளால் நினைக்கவும் சகிக்காத மகா அசங்கியமான விஷயமாகவும், சிறிதும் நம்பக்கூடாத அசம்பாவிதமான காரியமாகவும் இருந்தது. ஆகையால், அவள் திகைத்துப் பிரமித்து ஸ்தம்பித்து அரைக்கால் நாழிகை நேரம் வரையில் அப்படியே நின்றுவிட்டாள்.

சிறிதுநேரத்தில், அவனது காலடியோசை ஓய்ந்து போய்விட்டது. அவன் மேன்மாடிக்குப் போய்விட்டான் என்று அவள் நிச்சயப்படுத்திக் கொண்டு மெதுவாகப் படுதாவை விட்டு வெளியில் வந்து, சந்தடி செய்யாமல் தனது சயன அறையை அடைந்து வாசலின் மேல் நிலையில் நாதாங்கியில் அதன் அடிப்பாகத்திலிருந்த இரும்புத் தகட்டைக் கதவிலிருந்த துவாரத்தில் வைத்து உள்ளே தள்ளிவிட்டு அறைக்குள் நுழைந்து கதவை மூடி உட்புறத்தில் தாளிட்டுக் கொண்டாள். உட்புறத்தில் நீட்டிக் கொண்டிருந்த இரும்பின் இரண்டு பிளவுகளையும் இருபக்கங்களிலும் மடக்கி முன்னே இருந்தபடி சுத்தமாக அழுத்திவிட்டு, தோட்டக்காரியினது வருகையை நிரம்பவும்

ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள். தோட்டக்காரி, ஒருவேளை தனது புருஷர் கண்டுகொள்வாரோ என்ற பயத்தினால் வராமல் இருந்து விடப் போகிறாளே என்ற கவலையும் பீதியும் எழுந்து நொடிக்கு நொடி பெருகி விஷம் தலைக்கேறுவது போல அபிவிருத்தியடைந்து அவளை விவரிக்க வொண்ணாத துன்பக்கடலில் ஆழ்த்திச் சித்திரவதை செய்து கொண்டிருந்தது. அவ்வாறு அவள் அதற்கு மேலும் கால்நாழிகை நேரம் பொறுத்திருக்க வெளிப்பக்கத்தில் சந்தடி செய்யாமல் யாரோ நடந்து கதவண்டை வருவதாகத் தோன்றியது. அது வேலைக்காரி தானோ, அல்லது தனது புருஷரோ என்று நினைத்து லீலாவதி சகிக்க இயலாத கலவரமடைந்து சிறிதுநேரம் தவித்திருக்க, அடுத்த நொடியில் வெளிப்பக்கத்துச் சங்கிலியை யாரோ பிடித்த ஓசை மெதுவாக உண்டாயிற்று. அடுத்த விநாடியில் சங்கிலி மேலே மாட்டப்பட்ட ஓசை நன்றாகக் கேட்டது. அப்படித் தாளிட்ட மனிதர் உடனே நடந்து அப்பால்போன ஓசையும் உண்டாயிற்று. அப்போதே லீலாவதிக்கு உயிர் திரும்பியது. தான் செய்த தந்திரம் அப்போதுதான் சரிவர நிறைவேறினதாக அவள் அப்போதே நினைத்து அளவற்ற திருப்தியும் இன்பமும் அடைந்தாள். தான் கேட்டுக்கொண்டபடி அங்காளம்மாளே வந்து தாளிட்டுக்கொண்டு போய் விட்டாள் என்ற நிச்சயம் ஏற்பட்டுப்போகவே, அவளது பெருங்கவலையும் அச்சமும் தணிவடைந்தமையால், அவள் உடனே தனது கட்டிலை அடைந்து அதற்குமேல் ஏறிப் படுத்து முற்றிலும் உலுத்துத் தளர்வடைந்திருந்த தனது மெல்லிய சரீரத்தை அதன்மேல் கிடத்தினாள். நிரம்பவும் அல்லல்பட்டுக் களைத்துத் தளர்ந்து போயிருந்த தான் சிறிது நேரமாவது துயின்று எழுந்தாலன்றி, மறுநாள் நேரப்போகும் விபரீத சம்பவத்தில் தான் யோசனையோடும் சாமர்த்தியமாகவும் நடிக்க இயலாது என்ற எண்ணம் உண்டானது. ஆகையால், தான் எப்படியாவது பிரயாசைப்பட்டு துயில வேண்டும் என்ற விருப்பம் உண்டாயிற்று. தனது மனதில் பொங்கியெழுந்து நெடுநேரமாக வதைத்து வந்த

அபாரமான மனவெழுச்சியினாலும், கோடானு கோடி எண்ணங்களி னாலும், பதை பதைத்து நின்ற அந்த விபரீதமான நிலைமையில் ஒரு வேளை துயில் உண்டாகாமல் போய் விடுமோ என்று அவள் முதன்முதலில் பயந்தாள். ஆனாலும், அரைநாழிகை சாவகாசத்தில் அவளது அங்கமெல்லாம் முற்றிலும் சோர்ந்து கனத்து உணர்வற்றுப்போக உடனே அவள் கடுமையான துயிலில் ஆழ்ந்துவிட்டாள்.

அவ்வாறு அவள் நன்றாகத் தூங்கி விழித்தபோது, பொழுது நன்றாக விடிந்துபோயிருந்தது. சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தை அவள் பார்க்க, மணி எட்டுக்குமேல் ஆகியிருந்தது. அவள் சடக்கென்று எழுந்து கட்டிலைவிட்டு விரைவில் கீழே இறங்கி அந்த அறையின் பின்புறத்தில் இருந்த ஜன்னலின் வழியாகத்தோட்டத்துப் பக்கத்தில் தனது பார்வையைச் செலுத்தினாள். அவ்விடத்தில் தோட்டக்கார வீரப்பன், வழக்கப்படி சந்தேகத்திற்கு இடமில்லாமல், வேலை செய்து கொண்டிருந்ததைக் கண்டு, அவன் கடிதத்தைக் கொண்டு போய்ப் போலீஸ் கமிஷனரினது கச்சேரியில் போட்டுவிட்டு வந்திருக்க வேண்டும் என்று நிச்சயப்படுத்திக் கொண்டாள். அந்நேரம் போலீஸ் கமிஷனர் கடிதத்தை எடுத்துப் படித்துத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பாரென்று அவள் எண்ணிக் கொண்டாள்.

அதற்கு மேலேதான், தான் தனது சாமர்த்தியத்தை வெளிப்படுத்தி நிரம்பவும் திறமையாக நடிக்க வேண்டி வரும் என்று அவள் உணர்ந்தாள். தான் ஒன்றையும் அறியாத சுத்தமான மனிஷியென்று தனது கணவன் நினைக்கும்படி நடனம் செய்வது தன் மனதுக்கு முற்றிலும் அருவருப்பாகவும் சங்கடமாகவும் இருந்தாலும், தான் அவ்வாறு நடிக்க வேண்டுவது கட்டாயமாக இருந்தது. அன்றைய இரவு அந்த அறைக்குள் அடைபட்டிருந்ததனால், தான் படிமானத்திற்கு வந்து தனது எண்ணத்தை மாற்றிக்கொண்டவள்போல, அவள்

அவரிடத்தில் நிரம்பவும் பணிவாகவும், வாஞ்சையாகவும் நடந்து கொள்ள வேண்டியதும் அத்தியாவசியமாக இருந்தது. எப்போதும்போல அவரிடத்தில் ஸரஸமாகவும் கொஞ்சலாகவும் சிறிதும் சந்தேகத்திற்கு இடமின்றியும் பேசி, அவள் அவரை விட்டுப் பிரிந்து விடுவாளோ என்ற கவலையே கொள்ளாதபடி நடந்து கொள்வது நிரம்பவும் கடினமான வேலையாக இருந்தது. ஆகையால் அவள் தனது ஆடை ஆபரணங்களைத் திருத்தி அணிந்துகொண்டு அவரது வருகையை ஆவலோடும் கவலையோடும் எதிர்பார்த்திருந்தாள். சிறிது நேரத்திற்கு எல்லாம் அவளது புருஷர் வெளித் தாழ்ப்பாளை விலக்கிக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார். முதல் நாளிரவில் அவர் அவளைவிட்டுப் பிரிந்து போனகாலத்தில் அவள் மகா மூர்க்கமாகவும் பிடிவாதமாகவும் பேசியதன்றி, அவரிடத்தில் மரியாதையின்றி அருவருப்பைத் தோற்றுவித்தாள். ஆதலால், மகாதுன்பகரமான அதே நிலைமையிலோ, அதைக் காட்டிலும் அதிக கேவலமான நிலைமையிலோ அவள் இருப்பாள் என்ற நிச்சயத்தோடு அவர் வந்தாரேயன்றி எதிர்பாராதவிதமாக அவள் மாறுதல் அடைந்திருப்பாள் என்று அவர் கனவிலும் எண்ணவில்லை. அவர் கதவைத் திறந்து அவளைப் பார்த்த ஒரே பார்வையில் அவருக்கு அவளடைந்திருந்த மாறுதல் நன்றாக விளங்கி விட்டது. அதற்குமுன் அவள் அவரைக் கண்டால் எவ்வளவு பணிவாகவும் மரியாதையாகவும் அடங்கி ஒடுங்கி பயபக்தி விநயத்தோடு நடந்து கொள்வாளோ அதைவிடப் பன்மடங்கு அதிக நற்குணம் உடையவளாகக் காணப்பட்டதன்றி முதல் நாளிரவில் தான் அவரிடத்தில் அவமரியாதையாகவும், தாறுமாறாகவும் நடந்துகொண்டது பற்றி நிரம்பவும் கிலேசம் அடைந்தவள் போலத்தோன்றினாள். அவ்வாறு அவள் முற்றிலும் மாறுபட்டிருந்ததைக் காண, தாம் காண்பது மெய்யோ பொய்யோ என்ற சந்தேகம் அவரது மனதில் தோன்றியது. அவள் ஆதியிலிருந்தே தம்மிடத்தில் அந்தரங்கமான மையலும்,

விலக்க இயலாத பிரேமையும் கொண்டிருந்தவள் ஆதலால், இடையில் அவளது மனம் சிறிதளவு முறிந்துபோனதானாலும் எப்படியும் அவள் தம்மிடத்தில் வைத்துள்ள பட்சத்தையும் வாஞ்சையையும் மறக்கமாட்டாள் என்றும், எப்படியும் அவள் பழைய மனிஷியாக மாறி வழிக்கு வருவாள் என்றும் அவர் நினைத்துக் கொண்டு வந்ததற்கு இணங்க, அவளும் மாறுபட்டிருந்தது அவருக்கு ஒரு பெருத்த ஜெயம் போலத் தோன்றியது. முதல் நாளிரவில் அவளைத் தனியான இடத்தில் சிறை வைத்தது நிரம்பவும் அனுகூலமாக முடிந்ததைக் கண்டு, அவர் நிரம்பவும் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்து, தமது அதரங்களில் அரும்பிய புன்னகையை ஒருவாறு அடக்க முயன்றவராய் அவளண்டை நெருங்கிவந்த வண்ணம், ''என்ன லீலாவதி! இன்னமும் சண்டைதானா, அல்லது சமாதானமா?'' என்று சாந்தமான குரலில் வினவினார்.

அவர் வந்ததைக் கண்டு திடுக்கிட்டு எழுந்து நாணிக் குனிந்து மரியாதையாகவும் கிலேசத்தோடும் நின்ற லீலாவதி சிறிது நேரம் தயங்கியபின், ''நேற்றுராத்திரி நாம் சண்டை போட்டது போதாதா? இன்னமும் சண்டைபோட உங்களுக்கு ஆசையா? நீங்கள் சண்டைபோட ஆரம்பித்தால் கூட, நான் சமாதானந்தான் செய்து கொள்வேன். நீங்கள்தான் ஆண்பிள்ளை சிங்கம். சண்டை போடவும், அடிக்கவும் வையவும் உங்களுக்கு அதிகாரம் உண்டு. உங்களுடைய ஒரு கை அடித்தால், இன்னொரு கை அணைக்கும். புருஷன் பெண்ஜாதி என்றால், ஏதோ விஷயத்தில் கொஞ்சம் மனஸ்தாபம் இருக்கிறது வழக்கந்தான். கோப சமயத்தில் ஏதோ ஆத்திரமான வார்த்தைகளை உபயோகிக் கிறதும் வழக்கந்தான். அதையெல்லாம் ஒரு பெருத்த சண்டை என்றா நினைக்கிறது? அப்படித்தான் நானென்ன ராத்திரி உங்களிடம் அதிக தவறாக நடந்து கொண்டது? ஒன்றுமில்லையே!'' என்று கொஞ்சலாகப் பேசினாள்.

அவளது பணிவு நிறைந்த நயமான சொற்களைக் கேட்ட மாசிலாமணிப் பிள்ளை அளவற்ற மகிழ்ச்சி அடைந்து, தாம்

*அவளைச் சிறைப்படுத்தி வைத்ததன் பலனாகவே அவள் அவ்வளவு தூரம் படிமானத்திற்கு வந்திருக்கிறாள் என்று நினைத்தவராய் அவளை நோக்கி பிரியமாக நகைத்த வண்ணம், ''ஓகோ! கடைசியில் குற்றத்தை என்மேலா சுமத்துகிறாய்? எப்போதும் பெண்பிள்ளைகள் மகா தந்திரசாலிகள் என்று சொல்வது சரியாய்ப் போய்விட்டதே! நேற்று ராத்திரியும் நான் உன்னோடு சண்டையிட ஆரம்பிக்கவில்லை. இப்போதும் நான்கேட்ட முதல் கேள்வியிலிருந்து உன்னுடைய பிரியம் எப்படி இருக்கிறது என்பதை அறிந்து அதற்குத் தகுந்தபடி நடந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம்கொண்டு தான் வந்தேன் என்பது உனக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். ஆகையால், உன்னோடு அநாவசியமாகச் சண்டைபோட நான் ஒருநாளும் பிரியப்படுகிறவனல்ல. உனக்கும் என்னைவிட்டால் வேறே திக்கில்லை. எனக்கும் உன்னைவிட அந்தரங்கமான மனிதர் வேறு எவருமில்லை. அதுவுமின்றி என்னுடைய ரகசியம் எல்லாம் உனக்குத் தெரிந்திருக்கிறது. அதுபோல உன்னுடைய ரகசியமெல்லாம் எனக்குத் தெரிந்திருக்கிறது. நாம் ஒருவருக்கொருவர் உதவியாகவும், அநுகூலமாகவும் இருந்தால், இரண்டு பேருக்கும் சுகமுண்டாகும். நாம் ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்து போவதனால், எவ்வித நன்மையும் உண்டாகப் போகிறதில்லை. ஒருவேளை கெடுதல்தான் உண்டாகலாம்'' என்று முன்னிலும் அதிக அன்பாகக் கூறியவண்ணம் அவள் நின்ற இடத்திற்குப்போய் பக்கத்தில் இருந்த கட்டிலின்மீது உட்கார்ந்த வண்ணம் தமது கையை மெதுவாக அவளது தோளின் மீது வைத்துத் தடவிக் கொடுத்தார்.*

*லீலாவதி நிரம்பவும் லஜ்ஜையடைந்தவள்போலத் தத்தளித்து ''நேற்று ராத்திரி நடந்த விஷயங்களையெல்லாம் நீங்கள் எடுத்துச் சொல்லும்போது, என் உடம்பு குன்றிப்போகிறது. அவைகளை இனி வாயில் வைத்துப் பேசுவதுகூட எனக்குப் பிடிக்கவில்லை. நீங்கள் என்னைத் தனியாக விட்டுப்போனது*

முதல் இதுவரையில் எனக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. ஏதடா ஆத்திரத்தில் நாம் தாறுமாறாகப் பேசிவிட்டோமே என்ற விசனம் உண்டாகி என்னை எவ்வளவு தூரம் வருத்தியது தெரியுமா? நான் செய்த தவறுக்கு அதுவே போதுமான தண்டனை; நீங்கள் சொன்னதுபோல, என்னுடைய ரகசியம் எல்லாம் உங்களிடத்தில் இருக்கிறது. அப்படியிருக்க, நான் உங்களை விட்டுப்போய், எப்படித் தப்புகிறது? உண்மை யிலேயே நான் உங்களைவிட்டுப் போக வேண்டும் என்ற எண்ணத்தோடு நான் பேசியவளல்ல. ஏதோ மூடத் தனத்தினால் உளறிவிட்டேன். எப்படியிருந்தாலும், உங்கள் இடத்தில் லயித்துப் போயிருக்கும் என் மனசு இவ்வளவு எளிதில் மாறிப்போய்விடுமா? அது ஒருநாளும் மாறாது. ஒரு முக்கியமான ஆபத்துச் சமயத்தில் உங்களுக்கு என்னுடைய உதவி அத்தியாவசியமாக இருக்கிறது என்பது எனக்குத் தெரியாதா? இப்பேர்ப்பட்ட அசந்தர்ப்ப வேளையில் உங்களைக் கைவிட்டுப் போக எனக்குத்தான் மனம் வருமா? ஒரு நாளுமில்லை. பிரிந்துபோக வேண்டும் என்று நான் சொன்னேன் என்பதையே மறந்துவிடுங்கள்'' என்று நயமாகவும், உருக்க மாகவும் கூறியவண்ணம் நிரம்பவும் வாஞ்சையாக அவர் மீது சாய்ந்து கொண்டாள்.

மாசிலாமணிப் பிள்ளை ஆனந்த பரவசம் அடைந்தவராய், ''ஆம்; ஆம்; உண்மைதான். உன்னுடைய மனசு எப்படிப்பட்டது என்பது எனக்குத் தெரியாதா? நேற்று ராத்திரி உன்னைத் தனியாக விட்டுப் போவதற்கு நான் ஏன் சம்மதித்தேன் தெரியுமா? நீ கொஞ்ச நேரம் தனியாக இருந்தால் உன்னுடைய கோபம் தணிந்துபோய் விடும் என்றும், உன்னுடைய பழைய பிரியம் திரும்பி விடும் என்றும் நினைத்தே நான் அப்படிச் செய்தேன். அதுவும் இல்லாமல், நீ சொன்ன கடைசி விஷயத்தைப் பற்றி நினைத்து நானும் கவலைப்பட்டேன். எனக்காக எவ்வளவோ பாடுபட்டுத் தந்திரம் செய்து இளவர

சரிடம் கையெழுத்து வாங்கின நீ கடைசி வரையில் இருந்து அந்த விஷயத்தைப் பூர்த்தி செய்யாமல் போய்விடுகிறாயே என்று நானும் எண்ணி விசனப்பட்டேன். அந்தக் கடிதத்தினாலேதான் என் உயிர் மிஞ்சப்போகிறது. அப்படிப்பட்ட விலை மதிப்பற்ற தஸ்தாவேஜியை வேறே யாரிடத்திலும் கொடுத்தனுப்ப, நான் ஒருநாளும் இணங்கவே மாட்டேன். ஆகையால், மிகுதி இருக்கும் காரியத்தையும் நீதான் தந்திரமாகவும் சாமர்த்திய மாகவும் முடித்துக்கொடுக்க வேண்டும்'' என்று வாஞ்சையாக வற்புறுத்திப் பேசினார்.

அதைக் கேட்ட லீலாவதி முன்னிலும் அதிக உருக்கமும் கலக்கமும் கொண்டவள்போல நடித்துக் கண்ணீர் விடுத்தவளாய், ''ஐயோ பாவம்! என்னைப்பற்றி நீங்கள் அப்படிப்பட்ட சந்தேகங்கூடக் கொண்டீர்களா? படாத பாடெல்லாம் பட்டு அவமானத்துக்கும் இழிவுக்கும் ஆளாகி நான் அந்த விலைமதிப்பற்ற தஸ்தாவேஜை சம்பாதித்த பின், உங்களை ஆபத்தில் விட்டு நான் போய்விடுவேனா? ஒரு நாளுமில்லை. என்னுடைய உயிர் இந்த உடம்பில் இருக்கும் வரையில் நான் உங்களைவிட்டு ஒரு நிமிஷம்கூடப் பிரிந்து போகவே மாட்டேன். அதை நீங்கள் வேத வாக்கியமாக நம்பலாம். நேற்று சாயுங்காலம் நான் ஹேமாபாயின் வீட்டுக்குப் போனது எப்படிப்பட்ட கேவலமான காரியத்தை உத்தேசித்து என்பது உங்களுக்குத் தெரியும். அந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய உண்மையை வேறே யார் தெரிந்து கொண்டாலும், அவர்கள் என்னை எப்படி மதிப்பார்கள்? நான் அடியோடு கேட்டுப்போன ஒரு வேசையென்று எல்லோரும் மதித்து என்னைப்பற்றி நிரம்பவும் தூஷணையாகவும் இழிவாகவும் பேசுவார்கள். அந்த நிலைமையில் என்னுடைய பெரிய தகப்பனார் கண்டுகொண்டால், என்னுடைய மனநிலைமை எப்படி இருந்திருக்க வேண்டும் என்பதை நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள். என்னுடைய கெட்ட நடத்தையை இந்த

உலகத்திலுள்ள மற்ற சகலமான மனிதர்களும் தெரிந்து கொண்டிருந்தால்கூட, நான் அவ்வளவாக விசனப்பட்டிருக்க மாட்டேன். என்னுடைய பெரிய தகப்பனாரிடம் போய் பங்கப்படுவது என்றால் அதை விட அதிகமாக மனிதர் அடையக்கூடிய வெட்கக்கேடு வேறே இருக்குமா? வேற யாராக இருந்தாலும் அவ்விடத்திலேயே நாக்கைப் பிடுங்கிக் கொண்டு உயிரைவிட்டிருப்பாள். நானும் அப்படியே தான் செய்ய எத்தனித்தேன். உங்களிடத்தில் நான் வைத்திருக்கும் பிரியம் குறுக்கிட்டு என்னைத் தடுத்து மறுபடியும் இங்கே இழுத்துக் கொண்டு வந்து சேர்ந்தது. அவ்விடத்தில் எனக்கு நேர்ந்த மான பங்கத்தினால் ஏற்பட்ட ஆத்திரமும் துடி துடிப்பும் இருந்து கொண்டே இருந்தன. அதனாலேதான் நான் உங்களிடத்தில் கொஞ்சம் ஆத்திரமாகப் பேசிவிட்டேன். நீங்கள் என்னைத் தனியாக விட்டுப்போன பிறகு கொஞ்ச நேரத்துக்கெல்லாம், என் மனம் மாறிவிட்டது. ஐயோ! நாம் தாறுமாறாகப் பேசி, நம்முடைய புருஷருடைய மனசைப் புண்படுத்தி விட்டோமே என்று நினைத்துப் பொழுதுவிடிகிற வரையில் நான் பட்டபாடு இவ்வளவு அவ்வளவல்ல. இன்றைய காலையில் நீங்கள் வந்தவுடனே உங்களுடைய காலில் விழுந்து நான் செய்ததை எல்லாம் பொறுத்து என்னை க்ஷமிக்கும்படி கேட்டுக்கொள்ள எண்ணியிருந்தேன். நீங்களும் வரும்போதே என்னிடத்தில் பிரியமாகப் பேசிக் கொண்டும் க்ஷமையான சொற்களை உபயோகித்துக் கொண்டும் வந்தீர்கள் ஆகையால், எனக்கு அதிகப் பிரயாசையில்லாமல், என் கோரிக்கை நிறைவேறியது'' என்று மிக மிக உருக்கமாகப்பேசி, அவரை வாஞ்சையோடு கட்டித் தழுவினாள்.

அவளது வார்த்தைகளைக் கேட்டும், அவளது கரை கடந்த பிரியத்தைக் கண்டும் மாசிலாமணிப் பிள்ளை ஆனந்தக் கண்ணீர் விடுத்தவராய், ''ஆகா! நானும் உன் விஷயத்தில் நேற்று கொஞ்சம் பதற்றமாகத்தான் நடந்துவிட்டேன். நீ தஞ்சாவூரில்

போய் சந்தித்த மனிதர் உன் பெரிய தகப்பனார் என்று நீ சொன்னபோது அது என் மனசில் சுருக்கென்று பட்டதன்றி, உனக்கு ஏற்பட்ட அவமானத்தைப் பற்றி என் மனமும் கலங்கி நிரம்பவும் சங்கடப்பட்டது. இருந்தாலும், எப்போதும் என்னிடத்தில் பணிவாகவும் மரியாதையாகவும் நடந்து கொள்ளும் குணமுடைய நீ நேற்று தாறுமாறாகப் பேசியதைப் பார்க்க, என்னால் சகிக்கமுடியவில்லை. அதுவும் அல்லாமல், உன்னைவிட்டு நான் பிரிந்திருக்க வேண்டும் என்று நீ சொன்னவுடனே, அது என்னால் கொஞ்சமும் தாளமுடியாத விசனத்தை உண்டாக்கிவிட்டது. அதனால், நானும் உன் விஷயத்தில் கடினமாக நடந்து கொண்டேன். போனது போகட்டும்; எல்லாவற்றையும் நீயும் மறந்துவிடு; நானும் மறந்துவிடுகிறேன். இனி நாம் எவ்வித மனஸ்தாபமும் சச்சரவும் இல்லாமல் தேனும் பாலும் போல இருக்க வேண்டும். இப்போது மணி ஒன்பது இருக்கலாம். வயிறு பசிக்கிறது. வேலைக்காரி பலகாரங்களையும் காப்பியையும் தயார் செய்து வைத்துக்கொண்டு நெடு நேரமாகக் காத்திருக்கிறாள். உனக்கும் பசி உண்டாகி இருக்கும். வா, போய், முதலில் வயிற்றுக் காரியத்தைப் பார்ப்போம். மற்ற சங்கதியெல்லாம் இருக்கட்டும்; பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்று அன்போடு கூறிய வண்ணம் கட்டிலைவிட்டுக் கீழே இறங்கி அவளையும் அழைத்துக்கொண்டு வெளியில் வரத்தொடங்கினார். லீலாவதி ஓர் ஆட்டுக் குட்டியைப்போல அவருக்குப் பின்னால் தலை குனிந்தபடி நிரம்பவும் மரியாதையாக நடந்துவர, இருவரும் கூடத்தை அடைந்து சமையலறையை நோக்கிச் சென்றனர்.

அவ்விடத்தில் வேலைக்காரி அவர்களுக்குத் தேவையான மாதுரியமான சிற்றுண்டி முதலியவைகளைத் தயாரித்து ஆயத்தமாக வைத்திருந்தாள். லீலாவதி தான் போய் முகம் கை கால்கள் முதலியவற்றைச் சுத்தி செய்துகொண்டு வெகு சீக்கிரத்தில் வந்துவிடுவதாகத் தனது புருஷரிடம் சொல்லி

அவரை அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு அந்த அறையை விட்டுத் தோட்டத்திலிருந்த கிணற்றண்டை போனாள். போனவள் மெதுவாக மறைந்து தோட்டக்காரி இருந்த அறைக்குப்போய், அவளிடத்தில் விரைவாக இரண்டொரு வார்த்தைகள் பேசி, தோட்டக்காரன் கடிதத்தைப் போலீஸ் கமிஷனரினது தபால் பெட்டியில் போட்டுவிட்டு விடியற் காலையிலேயே வந்து விட்டான் என்ற செய்தியை உணர்ந்து கொண்டாள். அன்றைய தினம் ஏதேனும் விபரீதமான எந்தச் சங்கதியையும் அவர்கள் இருவரும் வெளியிடாமல் ஒன்றையு மறியாதவர்கள் போல நிரம்பவும் சாமர்த்தியமாக நடந்து கொள்ள வேண்டும் என்று லீலாவதி தோட்டக்காரியிடம் சொல்லி அவளை எச்சரித்துவிட்டு அவ்விடத்தை விட்டு ஓடோடியும் வந்து, தனது காலைக்கடமைகளை ஒரு நொடியில் முடித்துக் கொண்டு சமையலறைக்குள் போய் தனது புருஷன் இருந்த இடத்திற்குப் போனாள். அதற்குள் வேலைக்காரி மாசிலாமணிப் பிள்ளைக்கு இலைபோட்டுப் பலகாரங்கள் பரிமாறி இருந்தாள். ஆகையால், அவர் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். லீலாவதி உள்ளே வந்தவுடன் தான் வழக்கமாகச் செய்வதுபோல, ஒரு தட்டில் ஏராளமான பலகாரங்களை எடுத்து வைத்து, அவை அண்ணாசாமி நாயக்கனுக்கு என்று தனது புருஷரிடம் தெரிவித்தபின், தானும் சிறிதளவு உண்டு, தனது காரியத்தையும் முடித்துக்கொண்டாள். அண்ணாசாமி நாயக்கனுக்குப் பலகாரங்கள் வைப்பதாக அவளது வாய் மாத்திரம் வெளிப்படையாகச் சொல்லியது. ஆனாலும் அந்தச் சமயத்தில் அவளது மனதில் உண்டான அருவருப்பும் சங்கடமும் அளவில் அடங்காதனவாக இருந்தன. கேவலம் திருட்டுத் தொழில் செய்யும் ஓர் இழிசாதியானுக்குத் தான் அவ்வாறு உபசரணை புரிய வேண்டியிருக்கிறதே என்ற நினைவினால் அவள் மட்டற்ற சஞ்சலம் அடைந்தாள். ஆனாலும், கடைசிவரையில் தனது புருஷன் சந்தேகியாதபடி நடித்து அவனைத் தான் அடியோடு ஏமாற்றிவிட வேண்டும்

என்ற தீர்மானத்தினால், அவள் தனது மனத் துன்பங்களை எல்லாம் வெளியில் காட்டாமல் அடக்கிக் கொண்டாள்.

சிறிது நேரத்தில் அவர்களது காலைப் போஜனம் முற்றுப் பெறுகிறது. உடனே மாசிலாமணிப்பிள்ளை லீலாவதியினால் தட்டில் வைக்கப்பட்ட பதார்த்தங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு போய் மேல் மாடத்தில் இருந்த மனிதனுக்குக் கொடுத்துவிட்டுத் திரும்பிவர, அவர்கள் இருவரும் அவ்விடத்தை விட்டுக் கூடத்திற்கு வந்து சேர்ந்தனர். உடனே மாசிலாமணிப்பிள்ளை தாம்பூலம் தரித்துக்கொண்டவராய் அவ்விடத்திலிருந்த ஏதோ ஒரு புஸ்தகத்தை எடுத்துப் படித்த வண்ணம் ஓர் ஆசனத்தில் உட்கார்ந்து சந்தோஷமாகப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தார். லீலாவதி ஏதோ வீட்டுக் காரியங்களைச் செய்கிறவள் போல அங்கே இருப்பதை இங்கே வைத்து இங்கே இருப்பதை அங்கே வைத்து, ஒன்றையும் அறியாத பேதைபோல நடித்துக் கொண்டிருந்தாள். ஆனாலும், அவளது மனது தவித்துக்கொண்டிருந்தது. கைகால்கள் எல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தன. உடம்பு அடிக்கடி திடுக்கு திடுக்கென்று தூக்கிப் போட்டது. போலீசார் இந்த நிமிஷத்தில் வருவார்களோ அடுத்த நிமிஷத்தில் வருவார்களோ என்று அவள் எதிர்பார்க்கப் பார்க்க அவளது சங்கடம் விஷம் ஏறுவது போல நிமிஷத்துக்கு நிமிஷம் பெருகி அவளை நரகவேதனைக்கு ஆளாக்கிக் கொண்டிருந்தது. போலீசார் திடீரென்று வந்து தனது புருஷரைப் பிடித்துக் கொண்டால், அவர் ஒரு வேளை தன் மீது சந்தேகம் கொள்வாரோ என்ற அச்சமே பெரிதாக எழுந்து வதைத்துக் கொண்டிருந்தது. தன்னால் எழுதப்பட்ட கடிதத்தைப் போலீசார் ஒருவேளை கொண்டுவந்து தனது புருஷரிடம் காட்டி விடுவார்களோ என்ற திகிலே மற்ற எல்லாவற்றிலும் அதிக மும்முரமாக எழுந்து அவளைக் கொன்று கொண்டிருந்தது. தனது புருஷர் தன்மீது சந்தேகம் கொள்ள இடமில்லாமல்

எல்லாக் காரியமும் நடந்துபோகும் என்ற ஓர் உறுதி அவளது மனதில் உண்டாகிக்கொண்டே இருந்தது. ஆனாலும் இன்னதென்று விவரிக்கமுடியாத ஒருவித திகிலும் நடுக்கமும் உண்டாகி அவளது குற்றமுள்ள மனதை வதைத்தவண்ணம் அதிகப்பட்டுக் கொண்டே இருந்தன. பகல் பதினோரு மணி சமயமாயிற்று. அது மாசிலாமணிப்பிள்ளை ஸ்நானத்திற்கு எழுந்திருக்கும் நேரமாதலால், லீலாவதி தனது போலி அலுவல்களை அவ்வளவோடு நிறுத்திவிட்டு அவர் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தாள். அவளைக் கண்ட மாசிலாமணிப் பிள்ளை தாம் படித்ததை அவ்வளவோடு நிறுத்திவிட்டு அவளிடத்தில் வாஞ்சையாகவும் அன்பாகவும் லோகாபிராம மாகவும் பேசத் தொடங்கினார். தாம் அவளிடத்தில் சமாதானமாகவே நடந்து கொள்ளவேண்டும் என்று அவர் உறுதி செய்து கொண்டிருந்தார் என்பது நன்றாகத் தெரிந்தது. இருந்தாலும், அவள் தான் எடுத்துக்கொண்ட ரகசிய நடவடிக்கைகளைப் பற்றி விசனப் படவே இல்லை. தன் புருஷரது குணாதிசயங்களை நினைக்க நினைக்க தான் அவரிடத்தில் வாழ்ந்த வாழ்க்கையை நினைக்க நினைக்க, எப்படியாவது தான் அவரது கொடுங் கோன்மையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு தப்பிப் போய்விட வேண்டுமென்ற தீர்மானமே முன்னிலும் அதிகமாக ஊர்ஜிதப்பட்டது. அந்தத் தீர்மானத்தினால் அவளது மனம் நிரம்பவும் துணிவும் உரமும் பெற்று, தான் எடுத்துக் கொண்ட நடவடிக்கையிலிருந்து எப்படிப்பட்ட பயங்கரமான சம்பவம் நிகழ்ந்தாலும், தான் அதற்குப் பின் வாங்காமல் மகா திறமையாக நடந்துகொள்ள வேண்டும் என்ற பிடிவாதமும் ஏற்பட்டுப் போனது. ஆகையால், அவள் நாணமும், பணிவும், பயபக்தியும், வாஞ்சையும் வடிவெடுத்து வந்த உத்தம பத்தினிபோல அவருக்கு அருகில் வந்து நின்று, தான் தூக்கு மேடைக்கு அனுப்பத் தீர்மானித்திருக்கும் அந்த மனிதரோடு நிரம்பவும் இங்கிதமாகவும் ஸரஸமாகவும் மனோரம்மிய மாகவும் சம்பாஷித்துக் கொண்டிருந்தாள்.

நடுப்பகல் வேளை வந்தது. தோட்டக்கார அங்காளம்மாள் திடீரென்று கூடத்திற்கு வந்து மைசூரிலுள்ள மாசிலாமணிப் பிள்ளையின் சிநேகிதர் ஒருவர் கடிதம் கொடுத்துத் தம்மை அனுப்பியிருப்பதாக ஒரு மனிதர் சொல்லிக்கொண்டு வெளியில் காத்திருப்பதாகவும், உள்ளே வர அவர் அனுமதி கேட்பதாகவும் கூறினாள். அந்தச் செய்தியைக் கேட்டவுடனே, லீலாவதியினது திரேகம் கிடுகிடுவென்று ஆடி நின்றது. திகில் சுருக்கென்று அவளது மனதில் பாய்ந்து கலக்கியது. தான் செய்த சூழ்ச்சி பலன் கொடுக்க ஆரம்பித்து விட்டது என்று அவள் நிச்சயப்படுத்திக் கொண்டு, நிரம்பவும் மன உரத்தோடு தன்னைச் சமாளித்துக் கொண்டாள். மைசூரில் தமக்குச் சிநேகிதர் யார் இருக்கிறார்கள் என்ற விஷயத்தில் மாசிலாமணிப் பிள்ளையின் மனம் எல்லாம் சென்று லயித்துப்போயிருந்தது. ஆகையால், அவர் தமது மனைவியினது சஞ்சலத்தையும் தத்தளிப்பையும் கவனிக்கவில்லை. மைசூரிலிருந்து ஆளிடத்தில் கடிதம் கொடுத்துத் தமக்கு அனுப்பக்கூடிய மனிதர் யாரும் இல்லை ஆகையால், அந்தச் செய்தி பொய்யான செய்தி என்றும், தமக்கு ஏதோ துன்பம் சம்பவிக்கப் போகிறதென்றும் மாசிலாமணிப் பிள்ளையின் மனதில் ஓர் எண்ணம் தோன்றி வருத்த ஆரம்பித்தது. இருந்தாலும் தமது மனைவி அதில் சம்பந்தப்பட்டிருக்கிறாள் என்று அவர் சிறிதும் சந்தேகிக்கவே இல்லை.

அவர் உடனே அங்காளம்மாளை நோக்கி, ''வந்திருக்கிற மனிதர் பார்வைக்கு எப்படி இருக்கிறார்? நான் வீட்டில் இருக்கிறேன் என்று நீ அவரிடம் சொல்லிவிட்டாயா?'' என்று அவசரமாகக் கேட்டார்.

அங்காளம்மாள், ''அவர் பார்வைக்குத் தக்க பெரிய மனிதர் போல இருக்கிறார். அவர் கேட்டவுடனே, நீங்கள் உள்ளே இருப்பதும் இல்லாததும் எனக்குத் தெரியாது என்றும், உள்ளே வந்து பார்த்துவிட்டு வருவதாகவும் சொல்லிவிட்டு நான் வந்தேன்'' என்றாள்.

அதைக் கேட்டவுடனே மாசிலாமணிப்பிள்ளை ஒருவாறு சஞ்சலமும் கலக்கமும் அடைந்தவராய் லீலாவதியை நோக்கினார். அவர்கள் இருவரும் வேலைக்காரர்களுக்கு எதிரில் ஏதாவது விஷயத்தைப் பற்றி ரகசியமாகப் பேச விரும்பினால், மகாராஷ்டிர பாஷையிலே பேசுவது வழக்கம். ஆகையால், அவர் தமது மனைவியை நோக்கி, ''என்ன லீலாவதி! இந்த மனிதன் சொல்லி அனுப்பியிருக்கிற செய்தி நிஜமாயிருக்கும் என்று நீ நினைக்கிறாயா? நான் மைசூரில் இருந்த வரையில் வீட்டைவிட்டு வெளியிலேயே போகவில்லை. எனக்கு அறிமுகமான மனிதர் ஒருவர்கூட அங்கே இல்லை. அப்படியிருக்க அங்கே இருந்து ஓர் ஆளிடத்தில் கடிதம் கொடுத்து இவ்வளவு தூரத்திலுள்ள எனக்கு அனுப்பக்கூடிய சிநேகிதர் யார் இருக்கப் போகிறார்கள்? இந்த மனிதன் சொல்லுவது ஆச்சரியமான விஷயமாக இருக்கிறது!'' என்றார்.

அதைக் கேட்டுச் சிறிதுநேரம் தத்தளித்த லீலாவதி மகாராஷ்டிர பாஷையிலேயே மறுமொழி சொல்லத் தொடங்கி, ''ஆம்; என் மனசிலும் அதே மாதிரியான சந்தேகம்தான் உண்டாகிறது. இந்தச் சமயத்தில் நாம் என்ன செய்கிறது என்பது என் புத்திக்குப் படவில்லை. இது ஏதாவது தந்திரமாக இருந்தாலும் இருக்கலாம். எதற்கும், இந்த மனிதரைப் பார்க்கலாமா? அல்லது, பார்க்கக் கூடாதா என்பதை எப்படி நிச்சயிக்கிறது?'' என்று முற்றிலும் குழப்பம் அடைந்தவள் போலப் பேசினாள்.

அதற்குள் ஒருவித முடிவிற்கு வந்த மாசிலாமணிப் பிள்ளை, ''சரி; விஷயம் அபாயகரமானதாக இருந்தாலும், நாம் அதற்குப் பின் வாங்குவதில் உபயோகமில்லை. அவன் எதற்காக வந்திருக்கிறான் என்பதையும் அறிந்துவிடுவோம்'' என்று கூறிய பிறகு அங்காளம்மாளை நோக்கி, ''சரி; அவரை இங்கே அழைத்துக் கொண்டு வா'' என்றார்.

அதைக் கேட்டுக்கொண்டு தோட்டக்காரி வெளியில் போய்விட்டாள். அப்போது நிரம்பவும் கலவரமும் கலக்கமும் அடைந்தவராகக் காணப்பட்ட மாசிலாமணிப் பிள்ளை தமது மடியில் பத்திரமாக வைத்துக்கொண்டிருந்த ஒரு திறவுகோலை எடுத்து லீலாவதியினிடத்தில் கொடுத்து, ''இந்தா, இதை நீ பத்திரமாக வைத்துக்கொள். இந்த மனிதன் என்னைப் பிடித்துக் கொண்டு போகிறதற்காக வந்தவனாக இருந்தால், நீ உடனே நம்முடைய படுக்கை அறைக்குப்போய், என்னுடைய கைப் பெட்டியைத் திற; அதற்குள் இளவரசர் கையெழுத்திட்ட தஸ்தாவேஜை நான் வைத்திருக்கிறேன். அதை நீ உடனே எடுத்து ஜாக்கிரதையாக மடியில் சொருகிக் கொள். ஏனென்றால், என்னை ஒரு வேளை சிறைப்படுத்தி அழைத்துக்கொண்டு போக நேர்ந்தால், அவர்கள் வீட்டையும் சோதனை போட்டுப் பார்ப்பார்கள். அதோ காலடியோசை கேட்கிறது. அந்த மனிதன் வந்துவிட்டான்'' என்று அவசரமாகக் கூறியவண்ணம், அவளிடம் திறவுகோலைக் கொடுத்துவிட்டார். உடனே லீலாவதி நிரம்பவும் பதைத்தவளாய், ''மெத்தையின் மேல் அண்ணாசாமி நாயக்கன் இருக்கிறானே! அவனை என்ன செய்கிறது! இதனால் அவனுக்கும் ஏதாவது கெடுதல் உண்டாகுமோ?'' என்று அளவற்ற கவலையோடு வினவினாள்.

மாசிலாமணிப் பிள்ளை, ''இவர்கள் என்னைப் பிடித்துக் கொள்வார்களானால், வீட்டைச் சோதிக்க மாட்டார்கள் என்றே நினைக்கிறேன்'' என்று தணிவான குரலில் பேசினார்.

அந்தச் சமயத்தில் அங்காளம்மாள் ஒரு மனிதரை அழைத்துக் கொண்டு கூடத்திற்கு வந்தாள். வந்தவள் அந்த மனிதரை கூடத்தில் விட்டு உடனே வெளியில் போய்விட்டாள். லீலாவதி ஒரு பக்கமாக விலகி நின்றாள்; அவளும் மாசிலாமணிப் பிள்ளையும் நிரம்பவும் ஆவலோடும், வியப்போடும் அந்த மனிதரது முகத்தை உற்று நோக்கி ஆராய்ச்சி செய்தனர். ஆனால், அந்த மனிதர் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர் என்று

சந்தேகிக்கத் தக்க எத்தகைய குறிப்பாவது கபடப் பார்வையாவது பயங்கரமான தோற்றமாவது அவரிடத்தில் காணப்படவில்லை. அப்படி இருந்தாலும் மாசிலாமணிப்பிள்ளையின் மனம் ஒருவாறு சஞ்சலம் அடைந்து கொண்டே இருந்தது. லீலாவதியோ, அந்த மனிதன் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவராகத்தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்து விட்டாள்.

கூடத்தில் வந்த மனிதர் மாசிலாமணிப் பிள்ளையைப் பார்த்து நிதானமாகவும் நயமாகவும் பேசத்தொடங்கி, ‘‘ஐயா! இப்படிக் கபடமாக வந்து என்னுடைய கடமையை நிறைவேற்ற நேர்ந்ததைப் பற்றி நான் நிரம்பவும் விசனப்படுகிறேன். நீங்கள் என்னை எதிர்ப்பதில் கொஞ்சமும் பிரயோசனமில்லை. என்னுடைய மனிதர்கள் இந்தப் பங்களாவின் நான்கு பக்கங்களிலும் வந்து சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள்’’ என்று அழுத்தமாகக் கூறினார். எதிர்பாராத அந்த வார்த்தைகளைக் கேட்கவே, மாசிலாமணிப்பிள்ளை என்ன மறுமொழி சொல்வது என்பதையாவது, என்ன செய்வது என்பதையாவது அறியாமல் அப்படியே ஸ்தம்பித்து உட்கார்ந்து போய் விட்டார். லீலாவதியோ தான் நடித்து ஸாகஸம் செய்வதற்கு அதுவே சரியான சமயம் என்று நினைத்து, சகிக்கவொண்ணாத திகில் கொண்டவள்போல மகா விபரீதமாகத் தனது முகத்தை மாற்றிக் கொண்டு தனது கைகளைப் பிசைந்துகொண்டு, ‘‘ஐயையோ! தெய்வமே என்ன செய்யப்போகிறேன்! என்னுடைய புருஷரைக் கொண்டுபோக யாரோ வந்துவிட்டார்களே! இவரை விட்டுப் பிரிந்து நான் எப்படி உயிர் வாழப் போகிறேன்! ஐயோ! என் தேகம் பதறுகிறதே! என் மனம் தவிக்கிறதே! என் உயிர் துடிக்கிறதே! என் புருஷரைக் கொண்டுபோய் இவர்கள் என்ன செய்வார்களோ தெரியவில்லையே! என் கண் காண இவரை நீங்கள் கொண்டுபோக நான் விடமாட்டேன். என்னை முதலில் வெட்டிப் போட்டுவிட்டு அதன்பிறகு உங்கள் பிரியப்படி செய்து

கொள்ளுங்கள்'' என்று பலவாறு பிரலாபித்து அழத் தொடங்கி ஆவேசம் கொண்டவள்போலத் தனது கேசத்தை விரித்துத் தாறுமாறாகத் தொங்கவிட்டபடி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து மாசிலாமணிப் பிள்ளையை இறுகப் பிடித்துக் கொண்டு அமர்க்களம் செய்கிறாள்; வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்ளுகிறாள். கண்ணீரை ஆறாகப் பெருக்கிக் கல்லும் கரையும்படி அழுது உருகுகிறாள்.

அவள் செய்யும் ஆரவாரத்தையும், அவளது பரிதாபகரமான நிலைமையையும் கண்டு நிரம்பவும் சஞ்சலம் அடைந்து கலங்கிய மாசிலாமணிப்பிள்ளை அவளது முகத்தைப் பார்த்து, கைப்பெட்டியிலுள்ள தஸ்தாவேஜுயை அவள் எடுத்து பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தாம் அதற்கு முன் அவளிடம் சொல்லி வைத்திருந்ததை நினைப்பூட்டுகிறவர் போலக் கண்ணிமைகளால் சைகை செய்து, ''லீலாவதி! நீ ஏன் இப்படி வருத்தப்படுகிறாய்? இவர்கள் என்னைப் பிடித்துக் கொண்டு போவதனாலேயே, நான் தண்டனை அடைந்து விடுவேன் என்று நினைத்துக் கொண்டாயா? மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயம்? நாம் குற்றம் செய்திருந்தால்தானே நமக்கு அச்சம்? எவ்விதத் தண்டனையும் இல்லாமல் தப்பித்துக் கொண்டுவர, நம்மிடம் போதுமான ஆதாரமிருக்கையில் நமக்கு என்ன கவலை? நீ ஏன் இப்படி அழுகிறாய்? நீ மறைவாகப் போ; இவர் என்ன சொல்லப் போகிறார் என்பதை நான் கேட்டு அறிந்து கொள்ளுகிறேன்'' என்று அன்பாக வற்புறுத்திக் கூறினார்.

அப்போது அங்கே வந்திருந்த மனிதர் இதற்குமுன் நமது கதையில் பல சந்தர்ப்பங்களில் வந்து மருங்காபுரி ஜெமீந்தாருக்கு உதவி செய்துள்ளவரும், அம்மன்பேட்டைக் கூத்தாடிச்சி அன்னத்தம்மாளினது வீட்டில் கொள்ளை நடந்ததைத் தடுத்தவருமான ரகசியப் போலீஸ் இன்ஸ்பெக்டர். அவர் உத்தியோக முறைமைப்படி உடைகள் அணியாமல்

சாதாரண மனிதர்போல ஆடைகள் தரித்து வந்திருந்தார். அவரும் லீலாவதியைப் பார்த்து, ''ஆம் அம்மா! நீங்கள் அப்பால் போவதே நல்லது'' என்று நயமாகக் கூறினார்.

அப்போதும் மாசிலாமணிப் பிள்ளையைத் தான் பிடித்த பிடியை விடாமல் கண்ணீர் சொரிந்தவண்ணம் வெகு சாமர்த்தியமாக அழுது நடித்த லீலாவதி இன்ஸ்பெக்டரைப் பார்த்து, ''ஏன் ஐயா! என்னை அப்பால் போகச் சொல்லிவிட்டு, நீங்கள் என் புருஷரை அழைத்துக்கொண்டு போகப் போகிறீர்களா?'' என்று நிரம்பவும் பரிதாபகரமாக வினவினாள். அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர், ''இல்லையம்மா இவரை நாங்கள் அழைத்துக்கொண்டு போவதற்குமுன் நீங்கள் மறுபடியும் இவரைப் பார்க்கலாம். எங்களுக்கு அவசரம் ஒன்றும் இல்லை. கொஞ்சநேரம் பொறுத்துத்தான் அழைத்துக் கொண்டு போகப் போகிறோம்'' என்று நிதானமாகப் பேசினார்.

அதைக்கேட்ட லீலாவதி நிரம்பவும் சஞ்சலம் அடைந்தவள் போலக் காணப்பட்டாள். ஆனாலும், இன்ஸ்பெக்டருடைய உத்தரவுப்படி நடந்துகொள்ள வேண்டியவள் போல நடித்து, ''சரி; அப்படியானால் உங்களுடைய பிரியப்படி நான் அப்பால் போகிறேன்; ஆனால் அங்கே அதிகநேரம் இருக்க மாட்டேன்; ஐந்து நிமிஷத்தில் திரும்பி வந்துவிடுவேன். அதற்குள் நீங்கள் பேசவேண்டியதைப் பேசுங்கள்'' என்று கூறியவண்ணம் அரை மனதோடு தனது புருஷரை விட்டுப் பிரிந்து விரைவாக தனது சயன அறைக்குள் சென்று அவ்விடத்தில் கட்டிலின் அடியில் மறைவாக வைக்கப்பட்டிருந்த மாசிலாமணிப் பிள்ளையின் கைப்பெட்டியை மெதுவாகத் திறந்து அதற்குள் இருந்த தஸ்தாவேஜியை எடுத்துத் தனது இடையில் சொருகி பத்திரப்படுத்திக்கொண்டு பெட்டியை மூடி மறுபடியும் பூட்டித் திறவுகோலைப் பெட்டியின் மேலேயே வைத்துவிட்டுக் கதவண்டை வந்து மறைவாக நின்று, கதவிலிருந்த இடுக்கின் வழியாக வெளியில் என்ன நடக்கிறது என்று பார்த்துக்

கொண்டிருந்தாள். அதுவரையில் அவள் காட்டிய விசனமும் அழுகையும் மாறிப்போக, கட்டிலடங்கா மூர்க்கமும் கொதிப்பும் தலைகாட்டத் தொடங்கின. அவள், ''இப்போது தான் என்னுடைய எண்ணம் பூர்த்தி அடைந்தது. என்னைப் படுத்திவைத்த பாடெல்லாம் வீணாய்ப் போகுமா? எல்லா வற்றிற்கும் வட்டியும் முதலுமாக நான் என் பழியைத் தீர்த்துக் கொள்ளுகிறேன். இவ்வளவு தூரம் நான் ஸாகஸம் செய்து இவருடைய நம்பிக்கையைத் திருப்பாது இருந்தால், இந்த தஸ்தாவேஜியை இவர் என்னிடத்தில் கொடுத்திருக்கவே மாட்டார். இவர் இதை இன்ன இடத்தில் வைத்திருக்கிறேன் என்று கூட இதுவரையில் சொல்ல மறுத்தவர் அல்லவா! இருக்கட்டும். இவருடைய உயிரைத் தப்ப வைக்கக்கூடிய விலை மதிப்பற்ற இந்த தஸ்தாவேஜு என் வசத்துக்கு வந்துவிட்டது. இனி இவர் தப்புவதில்லை. இன்னம் சில தினங்களில் இவர் எப்படியும் ஒரு மாதிரியாக ஒழிந்து போய்விடுவார். அதன்பிறகு நான் பிச்சை எடுத்தாவது மானமாகவும் சுயேச்சையாகவும் இருந்து பிழைக்கிறேன்'' என்று தனக்குத்தானே எண்ணமிட்டு நிரம்பவும் குதூகலமும் மனவெழுச்சியும் அடைந்தவளாய் நின்றாள்.

அவ்வாறு அவள் கால்நாழிகை நேரம் நின்றுகொண்டிருந்த பின், மறுபடியும் விசனத் தோற்றத்தையும் கண்ணீரையும் வருவித்துக் கொண்டு தனது தலைமயிரை அலங்கோலமாக விரித்துவிட்டுக் கொண்டு மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு கூடத்திற்கு வந்து சேர்ந்தாள். அப்போது இன்ஸ்பெக்டரைத் தவிர வேறு இரண்டு ஜவான்களும் வந்து நின்றுகொண்டிருந்தனர். மாசிலாமணிப் பிள்ளைக்குச் சமையற்காரி ஒரு செம்பில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனாள். அவர் அதை மடமடவென்று குடித்து, பயத்தினால் காய்ந்து போயிருந்த தமது நெஞ்சை நனைத்துக் கொண்டிருந்தார். லீலாவதி மெதுவாக நடந்து அவர் இருந்த இடத்திற்குப்போய் தாங்க இயலாத பரம விசனத்தினாலும்

சஞ்சலத்தினாலும் உயிர் போய் விடக்கூடிய நிலைமையை அடைந்து விட்டவள் போலத் துயரமே வடிவாக நின்று, கரைகடந்த பரிதாபத்தோடு அவரது முகத்தை உற்று நோக்கினாள். உடனே மாசிலாமணிப் பிள்ளை அவளை உருக்கமாகவும் வாஞ்சையோடும் பார்த்து, ''லீலாவதி! நீ தைரியமாக இருப்பாய் என்றல்லவா நான் நினைத்துக் கொண்டிருந்தேன். இதற்குள் நீ இவ்வளவு தூரம் தளர்ந்து போய் விட்டாயே! இப்போதே நீ இப்படி விழுந்துபோய் விட்டால், இனி நடக்க வேண்டிய பெரிய காரியங்களை எல்லாம் நீ எப்படிச் செய்து முடிக்கப்போகிறாய்? என்றைக்காவது ஒருநாள் இது நேரும் என்று நாம் எதிர்பார்த்ததுதானே. இதற்கு இன்றைய தினந்தான் ஏற்ற நாள் போல் இருக்கிறது. என்னை இவர்கள் பிடித்துக்கொண்டு போகட்டும். அங்கே இவர்கள் என்னைக் கடித்தா விழுங்கிவிடப் போகிறார்கள். நான் போனால், அங்கே சில தினங்கள் இருந்துவிட்டு மறுபடியும் வந்துவிடுகிறேன். நீ அநாவசியமாக ஏன் உன் மனசை வருத்தி அதைரியத்தை உண்டுபண்ணிக் கொள்ளுகிறாய்? உன்னுடைய தைரியத்தைக் கொஞ்சமும் கைவிடாதே'' என்று கூறி அவளைத் தேற்ற முயன்றார். லீலாவதி அப்போதும் ஆறுதல் அடையாத வளாய் நின்றாள். ஆனாலும், அத்தனைக்கும் தானே காரணமானவள் என்பதைப் பற்றித் தனது புருஷன் சிறிதும் சந்தேகிக்கவில்லை என்று அவள் தனக்குள்ளாகவே நிச்சயித்துக் கொண்டு முன்னிலும் அதிக மனோதிடமும் துணிவும் அடைந்தவளாக நின்றாள்.

அப்போது மாசிலாமணிப்பிள்ளை இன்ஸ்பெக்டரை நோக்கி, ''ஐயா! நான் என் சம்சாரத்தோடு தனியாகச் சில குடும்ப ரகசியங்கள் பேச வேண்டும்! அதற்கு நீங்கள் அனுமதி கொடுப்பீர்கள் அல்லவா?'' என்றார்.

இன்ஸ்பெக்டர், ''ஆகா! பேசலாம். ஆனால், வேறே அறைக்குப் போகாமல் இவ்விடத்திலேயே ஒரு பக்கமாக ஒதுங்கியிருந்து ரகசியமாகப் பேசிக்கொள்ளுங்கள்'' என்றார்.

உடனே மாசிலாமணிப்பிள்ளை லீலாவதியை அழைத்துக் கொண்டு சிறிது தூரத்தில் ஒரு மூலையிலிருந்த கம்பத்தின் மறைவிற்குப் போய் நின்று, ''தஸ்தாவேஜியை எடுத்து ஜாக்கிரதையாக வைத்துக் கொண்டாய் அல்லவா?'' என்று மகாராஷ்டிர பாஷையில் நிரம்பவும் தணிவான குரலில் வினவினார்.

லீலாவதி, ''ஓ! எடுத்து வைத்துக் கொண்டேன். எதை மறந்தாலும் அதை மறப்பேனா? அதில்தானே நம்முடைய உயிரே அடங்கியிருக்கிறது'' என்று துடியாக மறுமொழி கூறினாள்.

மாசிலாமணிப்பிள்ளை, ''சரி; நல்லதாயிற்று. ஆனால், இவர்கள் வீட்டுக்குள் நுழைந்து சோதனை போட மாட்டார்கள் போலிருக்கிறது. இங்கே சோதனை போடுவதற்கு என்ன இருக்கிறது? அவர்களுடைய எண்ணம் என்னைப் பிடித்துக் கொண்டு போக வேண்டும் என்பது; அதுதான் நிறைவேறி விட்டது. அவர்கள் வேறே எதையும் நாடவில்லை. இங்கே முதலில் வந்த மனிதர் ரகசியப் போலீஸ் இன்ஸ்பெக்டராம். நான் இங்கே இருக்கிறேன் என்பதை இவர் எப்படித் தெரிந்து கொண்டிருப்பார் என்பதைத்தான் அறிந்து கொள்ளக்கூட வில்லை. மெதுவாக நான் அதைப்பற்றி இவரிடத்திலேயே கேட்டுப் பார்த்தேன்; இவர் சொல்லமாட்டேன் என்கிறார்'' என்றார்.

லீலாவதி, ''ஒருவேளை நீங்கள் எப்போதாவது வெளியில் போனபோது, உங்களுடைய அடையாளத்தைக் கண்டுபிடித்து உங்களோடு தொடர்ந்துவந்து நீங்கள் இங்கேதான் இருக்கிறீர்கள் என்பதை இவர் கண்டுகொண்டிருப்பார். எப்படியானால் என்ன? காரியம் என்னவோ விபரீதத்துக்கு வந்துவிட்டது. அதைப்பற்றி நாம் பேசி நம்முடைய பொழுதைக் கழிப்பதில் பயனில்லை. இனி நடக்க வேண்டிய முக்கியமான காரியங்களைப் பற்றி நாம் பேசி ஒருவித ஏற்பாடு செய்து

கொள்ள வேண்டும். இப்போது இவர்கள் உங்களை அழைத்துக் கொண்டு போய்விட்டால், அதன்பிறகு நான் இங்கே தனியாக இருந்து என்ன செய்கிறது? மேலே நடக்க வேண்டிய காரியங்களைப் பற்றி எனக்கு என்ன யோசனை சொல்லுகிறீர்கள்?'' என்று பணிவாகவும் கவலையோடும் கேட்டாள்.

மாசிலாமணிப்பிள்ளை இரண்டொரு நிமிஷநேரம் சிந்தனை செய்தவராய் நிரம்பவும் பச்சாதாபத்தோடு, ''லீலாவதி! எப்போதும் நீ என்னைவிட்டுப் பிரிந்து தனியாக இருந்து அறியாதவள். நான் இப்போது போனால், திரும்பிவர, எவ்வளவு காலம் பிடிக்குமோ என்னவோ தெரியவில்லை. குறைந்தது ஒரு மாச காலமாவது ஆகும் எனத் தோன்றுகிறது. அது வரையில் நீ இந்தப் பங்களாவிலேயே தனியாக இருக்க முடியுமா? உன்னுடைய எண்ணத்தைத் தெரிவி'' என்றார்.

லீலாவதி நிரம்பவும் கலங்கிக் கண்ணீர் விடுத்தவளாய்ச் சிறிது நேரம் யோசனை செய்து, ''இவர்கள் உங்களைக் கொண்டுபோய் விசாரணை முடிகிறவரையில் தஞ்சாவூர்ப் பெரியகோவிலுக்கு அருகிலுள்ள சிறைச்சாலையில் அடைத்து வைத்திருப்பார்கள் என்று நீங்கள் முன்னொரு நாள் சொல்லியிருக்கிறீர்கள். இங்கே இருந்து அந்த இடம் சுமார் நான்கு மைல் தூரத்துக்குமேல் இருக்கும். நீங்கள் அங்கே இருக்க, நான் மாத்திரம் தனியாக இவ்வளவு தூரத்தில் இருக்க,என் மனம் எப்படி சகிக்கும்? உங்களுக்கு அங்கே என்ன நேருகிறது என்பதை அடிக்கடி பார்த்து அறிந்து கொண்டு அதற்குத் தகுந்தபடி முயற்சிகள் செய்யவேண்டும். உங்களுக்குச் சரியான ஆகாரம் முதலிய சகலமான சௌகரியங்களையும் இவர்கள் ஒழுங்காக ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள் என்று பார்த்து நீங்கள் யாதொரு குறைவும் இல்லாமல் இருக்கும்படி செய்ய வேண்டும். விசாரணை நடக்கும்போது நான் நேரிலிருந்து அதைக் கவனிக்க வேண்டும். நம்முடைய கட்சிக்கு

வேண்டிய வக்கீல்களை ஏற்படுத்தி சாட்சிகளைத் தயாரிக்க வேண்டும். இவைகளையெல்லாம் நானே நேரிலிருந்து கவனித்துச் செய்ய வேண்டுமேயன்றி வேலைக்காரர் களைக் கொண்டு செய்விப்பது என்றால், அது நிரம்பவும் பிரயாசையான காரியமாயிருக்கும். நமக்கு ஜெயம் கிடைப்பதும் கடினமாகி விடும். ஆகையால், நானும் இன்றைய தினமே தஞ்சாவூருக்கு வந்து, நீங்கள் இருக்கும் சிறைச்சாலைக்குப் பக்கத்திலுள்ள ஏதேனும் ஓரிடத்தை அமர்த்திக்கொண்டு அங்கேயே குடியிருந்து எப்போதும் சிறைச்சாலையின் வாசலிலேயே வந்து காத்துக் கொண்டிருக்கப் போகிறேன்'' என்று கூறியவண்ணம் தனது துக்கத்தைப் பொறுக்க மாட்டாதவளாய்த் தேம்பித் தேம்பி அழுதாள். அவளது அந்தரங்கமான உருக்கத்தையும் துணிகரமான மொழியையும் கேட்டு அன்பு மேலீட்டால் இளகி உருகிப்போன மாசிலாமணிப்பிள்ளை தாமும் கண்ணீர் விடுத்தவராய் அவளைக்கட்டி அணைத்து, ''ஆகா! உன்னுடைய உண்மையான குணத்தையும், மனசையும் அறியாமல், நான் உன் விஷயத்தில் எத்தனை கொடுமைகள் செய்துவிட்டேன்! எனக்கு ஆபத்து நேரும் சமயத்தில் நீ எனக்கு இவ்வளவு தூரம் உதவி செய்வாய் என்று நான் கனவிலும் நினைக்கவே இல்லை. நீ இவ்வளவு தூரம் விசனப்பட்டுக் கலங்கி அழுவது, என்னுடைய யோக்கியதைக்கு மிதமிஞ்சினதாக இருக்கிறது. நான் இருக்கப் போகும் சிறைச்சாலைக்குப் பக்கத்தில் வெகுதூரம் வரையில் வீடுகளே இல்லை. நீ இருப்பதானால், தெற்கு அலங்கத்திலே தான் ஏதாவது ஒரு வீட்டில் இருக்க வேண்டும். அவ்விடத்திலும் நீ மாத்திரம் தனியாக இருந்தால், நீ எதைத்தான் கவனிக்க முடியும்? உனக்கு அந்தந்த சமயத்துக்குத் தகுந்தபடி யோசனை சொல்ல யாராவது பெரியவர்களான ஆண்பிள்ளைகள் இருக்க வேண்டும். அதுவுமன்றி, வேலைக்காரர்களும் பலர் இருக்க வேண்டும். புதிதாகப் போகும் இடத்திலுள்ள மனிதர்களுக்கு உன்னுடைய யோக்கியதையும் மேம்பாடும் தெரியாது

ஆகையால், அவர்கள் உன்னை அவ்வளவாக மதிக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட இடத்தில் நீ ஒருத்தியாக இருந்து கொண்டு இத்தனை காரியங்களையும் எப்படி கவனிக்க முடியும்? ஆகையால், நீ உன்னுடைய பெரிய தகப்பனாருடைய ஜாகைக்கே போய்விடுவது உத்தமமாக இருக்கும். உனக்குத் தேவையான யோசனைகளை எல்லாம் அவரே சொல்வதன்றி சகலமான உதவிகளையும் அவரே செய்வார். அதுவும் அல்லாமல் உன் பெரிய தகப்பனாருடைய ஜாகைக்கு இளவரசர் அடிக்கடி வருவார். அந்தச் சமயத்தில் நீ அவரைக் கண்டு பேசி, அவரால் நமக்கு ஆகவேண்டிய கடைசிக் காரியத்தையும் சுலபத்தில் முடித்துக்கொள்ளலாம்; எல்லாவற்றையும் நீயே யோசித்து உன்னுடைய மனசுக்கு எது உசிதமாகத் தோன்றுகிறதோ, அதைச் செய்'' என்றார்.

லீலாவதி அப்போதே ஒரு புதிய சங்கதியை அறிந்து கொண்டவள்போல நடித்து, ''ஆம். நீங்கள் சொல்வதும் உண்மைதான். நான் புதிய இடத்தில் இருந்தால் எனக்கு அதிக செல்வாக்கு இருக்காது என்பது உண்மையானால், அதைப்பற்றி நான் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. இளவரசர் என் பெரிய தகப்பனாருடைய ஜாகைக்கு அடிக்கடி வருவார் என்றும், அவரை நான் கண்டு முடிவான காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்றும் நீங்கள் சொன்னதுதான் முக்கியமான விஷயம். அது என் புத்தியில் முதலில் படவில்லை. நீங்கள் சொன்ன பிறகுதான் பட்டது. எவருக்கும் தெரியாமல் நான் இளவரசரைச் சந்திப்பதற்கு எங்களுடைய ஜாகைதான் தகுதியானது. நான் புதிய இடத்தில் இருந்தால் அவர் என்னுடைய ஜாகைக்கு வரமாட்டார். நான் அவருடைய இருப்பிடத்தைத் தேடி அலைந்து அவருடைய சமூகம் பார்த்து அவரைச் சந்திக்க வேண்டும். நான் எங்கே இருந்தால் என்ன; உங்களுடைய உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்பதுதான் முக்கியமான விஷயம். ஆகையால், நீங்கள் சொல்லும் யோசனைப்படியே செய்கிறேன்'' என்றாள்.

மாசிலாமணிப்பிள்ளை, ''சரி; அப்படியே செய். அதுதான் நமக்குப் பலவகையிலும் அநுகூலமானது. உன்னுடைய பேருதவியினாலும் தெய்வச் செயலினாலும் நான் மாத்திரம் உயிர் தப்பி மறுபடியும் சுயேச்சையாக வந்து விட்டால், நீதான் எனக்கு உயிர் கொடுத்த உத்தமியென்பதை நான் என் ஆயிசுகால பரியந்தம் மறக்கவே மாட்டேன். உன்னை என்னுடைய இருதயமாகிய கோவிலில் வைத்து, சதாகாலமும் பூஜித்து வருவேன் என்பதை நீ வேத வாக்கியமாக எண்ணிக் கொள்ளலாம்'' என்று நிரம்பவும் உருக்கமாகவும், வாஞ்சை யாகவும் கூறி அவளை இன்னொரு முறை கட்டித் தழுவினார்.

லீலாவதியும் கட்டிலடங்காத சஞ்சலமும் கலக்கமும் அடைந்தவளாய்த் தோன்றி, ''என்னவோ! எல்லாவற்றிற்கும் சுவாமி இருக்கிறார். இன்னம் ஒரு மாத காலத்துக்குள் அவர் இந்தக் கஷ்டங்களை எல்லாம் அடியோடு நிவர்த்தி செய்து விடுவார் என்று நம்பியிருக்கிறேன்'' என்று கூறி, அவரைக் காட்டிலும் அதிக நெகிழ்வோடு அவரை ஆலிங்கனம் செய்து கொண்டாள்.

அந்தச் சமயத்தில் இன்ஸ்பெக்டர் மாசிலாமணிப் பிள்ளையை அழைக்க அவர்கள் இருவரும் திடுக்கிட்டு ஒருவரை யொருவர் விட்டுப் பிரிய மனமற்றவராய்க் கடைசியில் பிரிந்து போயினர். லீலாவதி அதுவரையில் நடித்ததை எல்லாம்விட நூறு மடங்கு அதிகமாக நாட்டியமாடி அலங்கோலமாக விழுந்து அழுது அடித்துக் கொண்டு பிரலாபித்துக் கண்ணீரை ஆறாக ஓடவிட்டுத் துயரக்கடலில் மிதந்துகொண்டிருந்தவளாய்த் தனது அருமை மணாளரைச் சிறைச்சாலைக்கு அனுப்பி வைத்தாள்.

## 28-வது அதிகாரம்

# பாளையக்காரருக்குப் பந்தய வெகுமதி

பூர்ணசந்திரோதயம் என்ற பெண்மானை வெல்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த அபூர்வமான பந்தயம் முடிவடைய ஆறு நாட்கள் கழிந்தன அல்லவா? அதன் பிறகும் சில தினங்கள் சென்றன. ஒருநாள் மாலை நேரத்தில், தஞ்சை சகாநாயக்கர் வீதியிலிருந்த சூரக்கோட்டை பாளையக்காரரது வீட்டில் ஒரு பெருத்த விருந்து தயாராகிக் கொண்டிருந்தது ஆகையால், அவ்விடத்தில் அதிக தடபுடலும், ஊக்கமும், ஆரவாரமும் ஏராளமாகக் காணப்பட்டன. அந்த வீடு முழுதும் தேர்ச் சீலைகள், தொங்கல்கள், வாழைமரங்கள், தோரணங்கள், ஒட்டு வேலைகள், படங்கள், பதுமைகள், பூத்தொட்டிகள் முதலியவைகளால் வெகு சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. வீட்டு வாசலிலும் உட்புறத்திலும் தொங்கவிடப்பட்டிருந்த சரவிளக்குகள் வைரக்கற்களால் ஆக்கப்பட்ட மாலைகள் போலக் காணப்பட்டு பட்டப்பகலைவிட அதிகப் பிரகாசத்தை உண்டாக்கியவண்ணம் நிரம்பவும் விநோதமாகக் காணப் பட்டன. மற்ற இடங்களைக் காட்டிலும் பன்மடங்கு சிறப்பாக வும் உன்னதமாகவும் மனோகரமாகவும் சிங்காரிக்கப் பட்டிருந்த கூடத்தில், ஆறு விருந்தினர்கள் உட்கார்ந்து போஜனம் செய்வதற்குத் தேவையான ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. அவைகளுக்கு அருகில் தங்கம் வெள்ளி முதலியவைகளினால் ஆன தலைவாழை இலைகள், தொன்னைகள், கூஜாக்கள், குவளைப் பாத்திரங்கள் முதலியவைகள் அதனதன் இடத்தில் அழகாக வைக்கப்பட்டிருந்தன. மடைப் பள்ளியில் நளபாகம் பீம பாகங்களைத் தோற்கச் செய்த மகா இனிமையான அறுசுவைப் பதார்த்தங்களும், சித்திரா அன்னங்களும், பக்ஷண பாயசங்களும், அபரிமிதமாக நிறைந்து கமகமவென்று நறுமணத்தையும் இன்சுவையையும் வெகுதூரம் வரையில்

அள்ளிவீசி, அடுத்த தெருக்களில் செல்வோரது நாவில் தண்ணீர் ஊற்றெடுக்கச் செய்தன. மாதுரியமாகக் கனிந்த உயர்ந்த ஜாதிப் பழவகைகளும், தேனும், பாலும், பாகும், புத்துருக்கு நெய்யும் பெருவெள்ளமாகச் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. போஜனம் நிறைவேறிய பிறகு வழங்குவதற்காக ரோஜா, ஜாதி மல்லிகை முதலிய உன்னத ஜாதிப் புஷ்பங்களாலான மாலைகளும், செண்டுகளும், பன்னீர், பச்சைக்கற்பூரம் குங்குமப்பூ, தங்கரேக்கு முதலியவைகள் கலந்த தாம்பூலங்களும் கலவைச் சந்தனமும் தங்கத் தட்டுகளில் நிறைந்து நறுமணத்தை அள்ளித் தூவிக் கொண்டிருந்தன. பெருத்த மகாராஜர்களுக்குத் தகுந்த படி சகலமான ஏற்பாடுகளும், முஸ்தீபுகளும் செய்யப்பட்டிருந்தன.

இரவு மணி ஏழரை ஆனது. சூரக்கோட்டைப் பாளையக்காரர் பட்டும் ஜரிகைகளும் நிறைந்த விலை உயர்ந்த ஆடைகளையும் ஆபரணங்களையும் அணிந்தவராய்ப் புதிய மணமகன்போலத் தோன்றி, ஒவ்வோர் இடமாகச் சென்று தமது சகலமான அலங்காரங்களையும் ஏற்பாடுகளையும் தயாரிப்புகளையும் கண்டுகளித்து அளவற்ற ஆனந்தமும் திருப்தியும் அடைந்த வராய் அத்தனை காரியங்களையும் செய்து வைத்த தமது முக்கிய குமாஸ்தாவைப் பார்த்து, அவனை அபாரமாகப் புகழ்ந்து கொண்டாடி, ''பலே, பேஷ்! சாமண்ணாராவ்! நான் கடன் வாங்கிக் கொடுத்த சொற்பத் தொகையை வைத்துக் கொண்டு நீ இவ்வளவு தூரம் சிறப்பாகக் காரியத்தை நடத்துவாயென்று நான் கொஞ்சம்கூட நினைக்கவேயில்லை. இளவரசரும், மற்றவர் களும் வந்துபார்த்தால் அப்படியே ஸ்தம்பித்துப்போய், மூக்கில் விரலை வைக்கும்படியாக, நீ அவ்வளவு திறமையாக எல்லா வற்றையும் செய்திருக்கிறாய். அதுபோகட்டும்; நான் உனக்கு இன்னம் எத்தனை மாசத்துச் சம்பளம் கொடுக்க வேண்டும்? சொல்; எப்படியாவது யாரிடத்திலாவது கடன் வாங்கி நான் நாளையதினம் உனக்குக் கொடுத்துவிடுகிறேன்'' என்று நன்றியறிதலும், உருக்கமும் நிறைந்தவராய்க் கூறினார்.

சாமண்ணாராவ் என்ற பெயருடைய மனிதன் தனது எஜமானர் சொன்ன புகழ்ச்சி மொழிகளைக் கேட்டு அவ்வளவாக மகிழ்ச்சியடையாதவன்போலத் தோன்றினான். ஆனாலும், அவருக்கு மரியாதையாகவும் பணிவாகவும் மறுமொழி சொல்லத் தொடங்கி, "போனமாசத்தோடு எனக்கு இரண்டரை வருஷத்துக்குச் சம்பளம் சேரவேண்டும்; அவ்வளவுதான். அதிகம் ஒன்றும் இல்லை" என்றான். அவன் மறுமொழி கூறிய மாதிரியிலிருந்து அவன் தனது சம்பளம் நெடுங்காலமாகக் கொடுக்கப்படாததைப்பற்றி அவரிடத்தில் அளவற்ற ஆத்திரமும் அருவருப்பும் கொண்டிருந்ததும்,ஆனால் அந்தச் சமயத்தில் அவரை அவமானப்படுத்த விரும்பவில்லை என்பது நன்றாகத் தெரிந்தன.

பாளையக்காரர் நிரம்பவும் குத்தலாகத் தோன்றிய அவனது மொழியைக்கேட்டு, அதன் உட்கருத்தை உணராதவர்போல நடித்து, "சரி; அவ்வளவுதானே! அது ஒரு பெரிய தொகையல்ல. நான் எவ்வளவோ பெருத்த பெருத்த தொகைகளைக் கடன்வாங்கி இருக்கிறேன். கடன்காரர்கள் என்னை எப்படியும் பிடித்துச் சிறைச்சாலையில் வைக்கப்போகிறார்கள். நாட்டுக் கோட்டைக் கதிரேசன் செட்டியார் என்னைப்பிடிக்க வாரண்டு வாங்கியிருக்கிறதாகச் சிலர் சொல்லக் கேள்வியுற்றேன். கடனோடு கடனாக இன்னம் யாராவது ஓர் ஏமாந்த மனிதனைப் பிடித்து அவனிடத்தில் கடன் வாங்கி உனக்குச் சேரவேண்டிய பாக்கியை எப்படியாவது நாளைக்குள் கொடுத்து விடுகிறேன். அதைப்பற்றி நீ கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம்" என்று சமாதானமாகக் கூறினார்.

உடனே சாமண்ணாராவ் குனிந்து தனது எஜமானரை வணங்கி, "இந்த வாக்குறுதியை எஜமானர் மறந்துவிடாமல் எப்படியாவது நிறைவேற்றிவைத்தால் உதவியாக இருக்கும். நான் நிரம்பவும் ஏழை; பிள்ளைக்குட்டிக்காரன். சோற்றுக்கு இல்லாமல் எல்லோரும் பட்டினி கிடந்து சாகிறோம்" என்று மறுமொழி கூறினான்.

அதைக்கேட்டுக்கொண்டே பாளையக்காரர் அவனுக்கு மறுபடியும் உறுதி கூறியபின் அவ்விடத்தைவிட்டு அப்பால் போய்விட்டார். உடனே சாமண்ணாராவ் தனது பற்களைக் கடித்துக்கொண்டு தனக்குள்ளாகவே அவரைப்பற்றி தூஷிக்க ஆரம்பித்து, 'அயோக்கியன். மோசக்காரன். இவனுக்கு இந்த ஊரில் இனிமேல் எந்த முட்டாள் கடன்கொடுக்கப் போகிறான். நான் இவனிடத்தில் இனி மேல் பணத்தையாவது காணுகிற தாவது. இவன் இனிமேல் தப்புகிறதாகத் தோன்றவில்லை. இன்றையதினம் காலையில் வந்து இவனைப் பற்றிய விவரங்களையெல்லாம் விசாரித்து விட்டுப்போன மனிதன் கச்சேரியைச் சேர்ந்த அதிகாரியாகத்தான் இருக்க வேண்டும். அவன் வந்துவிட்டுப்போன சங்கதியை நான் இவனிடத்தில் சொல்லவே இல்லை. என்னவோ விபரீதந்தான் நடக்கப் போகிறது. இருக்கட்டும்; நடக்க நடக்க எல்லாம் தெரிந்து போகிறது' என்ற தனக்குள் எண்ணமிட்டவனாய் ஒரு பக்கமாகப் போய் உட்கார்ந்து கொண்டான்.

அவனை விட்டுச் சென்ற சூரக்கோட்டைப் பாளையக்காரர் கூடத்தில் இருந்த அழகான ஒரு நிலைக்கண்ணாடிப் பக்கம் போய் நிற்க, அதற்குள் பிரதிபிம்பித்துத் தோன்றிய சரவிளக்குகளும், பூச்செடிகளும், படங்களும், பதுமைகளும் அற்புதமாகத் தோன்றிக் கண்ணைப் பறித்தன. ஆகையால், அவர் அவைகளையும், அவைகளினிடையில் மகா ஜாஜ்வல்லியமான ஆடையாபரணங்களை அணிந்து நின்ற தமது வடிவத்தையும் பார்த்துப் பிரமித்து நின்று, தமது அழகையும் வசீகரத்தன்மை யையும் கண்டு தம்மைத் தாமே மெச்சி ஆனந்த பரவசம் அடைந்தவராய், "ஆகா! நான் எவ்வளவு அழகாயிருக்கிறேன்! இந்த நிலைமையில் அந்தப் பூர்ணசந்திரோதயம் என்னைப் பார்த்தால், உடனே மயங்கி என்மேல் மோகம் கொள்வாள் என்பதைப் பற்றிக் கொஞ்சமும் சந்தேகமே இல்லை" என்றும் வேறு பலவாறும் எண்ணமிட்டவராய் நின்று கொண்டிருந்தார்.

அவ்வளவிலும் அவரது மனம் ஒருவித சஞ்சலத்தை அடைந்து தவித்துக்கொண்டிருந்தது. உடம்பு ஓய்வின்றித் தவித்துக் கொண்டிருந்தது. தாம் அன்றைய தினம் உன்னத ஸ்தானத்தி லுள்ள பெரிய மனிதர்களுக்கு விருந்து நடத்தப்போகும் தருணத்தில்,கேவலம் ஒரு வர்த்தகருடைய மகளான தமது மனைவி தம்மோடுகூட அந்த வீட்டில் இருப்பது தமது மேம்பாட்டுக்கு ஒருவித இழுக்கை உண்டாக்கும் என்று நினைத்த அந்தப் பாளையக்காரர் அவளை அன்றைய தினம் பிற்பகலிலேயே, அந்த ஊரிலுள்ள அவளது மாமன் வீட்டுக்கு அனுப்பிவிட்டார். அந்த விருந்திற்கு வேண்டியிருந்த பெருத்த பணத்தொகையைச் சேகரம் செய்வதற்கு, அந்த மனைவியின் கழுத்தில் கடைசியாக மிஞ்சியிருந்த வைரமணியையும் அவள் கழற்றிக் கொடுக்க நேர்ந்தது. ஆனாலும், அவள் மாத்திரம் அந்த வீட்டில் இருப்பதற்கு அருக மற்றவளாக மதிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டாள். அன்றைய தினம் அத்தனை சிறப்பான ஏற்பாடுகளோடு அந்த அபாரமான விருந்தைத் தயாரித்ததனால் உண்டான குதூகலமும் இன்பமும் ஒருபுறம் இருக்க, தமது அப்போதைய சங்கடமான நிலைமையையும், அன்றையதினம் தாம் செய்யத் தீர்மானித்தி ருந்த துணிகரமான காரியத்திலிருந்து உண்டாகக் கூடிய துன்பங் களையும் நினைக்க நினைக்க, அவரது மனதில் துன்பங்களும் சஞ்சலங்களுமே அதிகமாக மிஞ்சி நின்றன. உண்மையில் அந்த மனிதர் எப்படிப்பட்ட மோசடியான காரியத்திற்கும் இணங்கக் கூடிய மனிதராக இருந்தாலும், அதைத் தாமே நிறைவேற்றி வைப்பதற்குரிய துணிவும் மனோதிடமும் அவரிடம் இல்லை. ஆகையால், அந்த விருந்து நடக்கவேண்டிய காலம் நெருங்க நெருங்க, அவரது மனமும் உடம்பும் அதிகமாக நடுங்கித் தவிக்கலாயின.

அவர் அத்தகைய பரம சங்கடமான நிலைமையில் இருக்க மணி சரியாக எட்டு ஆயிற்று. ஒரு பீடன் வண்டி அவரது வீட்டு

வாசலில் வந்து நின்றது. உடனே சாமண்ணாராவ் உள்ளே ஓடிவந்து சேரங்குளம் இனாம்தார் வந்துவிட்டதாகக் கூறினான். அடுத்த நிமிஷத்தில் அவரும் அங்கே வந்து சேர்ந்தார்.

உடனே சூரக்கோட்டைப் பாளையக்காரர் இனாம்தாரை வரவேற்க எதிர்கொண்டு சென்று மகிழ்ச்சியாகப் புன்னகை செய்து, ''வரவேண்டும்; வரவேண்டும்; இந்த ஆசனத்தில் உட்காருங்கள்'' என்று கூறி உபசரிக்க, இனாம்தாரும் சந்தோஷமாகப் புன்னகை செய்தவராய் ஆசனத்தில் அமர்ந்து, ''பாளையக்காரரே! நீங்கள் இந்த விருந்து விஷயமாக எனக்கு அனுப்பிய கடிதத்தைப் பார்த்த உடனே என் மனசில் உண்டான ஆச்சரியம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லவே முடியாது. நான் பிறந்த முதல் இதுவரையில் எந்தக் கடிதத்தைக் கண்டும் இவ்வளவு அதிகமாக நான் ஆச்சரியப்பட்டதே இல்லை'' என்றார்.

அதைக் கேட்ட பாளையக்காரர், ''ஏன் அப்படி? நான் எழுதியதில் அவ்வளவு அபாரமான ஆச்சரியத்தை விளைக்கக்கூடிய விநோத சங்கதி என்ன இருந்தது? இதற்குமுன் இப்படிப்பட்ட விருந்தையே நான் நடத்தியது இல்லையா? அல்லது, இந்த விருந்துக்குப் பிறகு நான் இனி விருந்தே நடத்தப் போகிறதில்லையா? இதில் அப்படிப்பட்ட புதுமை என்ன இருக்கிறது?'' என்று பரம சந்தோஷம் அடைந்தவர்போல நடித்துப் புன்னகை செய்து பேசினார்.

இனாம்தார் முன்னிலும் அதிக மகிழ்ச்சியும் புன்னகையும் தோற்றுவித்து, ''இது கடைசி விருந்தாக இருக்கும் என்று நான் ஏன் நினைப்பேன்? அப்படியொன்றும் நான் நினைக்கவில்லை; வேறே எவ்விடத்துக்குப் போகவேண்டியிருந்தாலும் அதையெல்லாம் ஒத்தி வைத்துவிட்டுத் தவறாமல் இங்கே வரவேண்டும் என்றும் இது நாம் மருங்காபுரி ஜெமீந்தாருடைய மாளிகையில் ஏற்படுத்திய பந்தயத்துக்குச் சம்பந்தப்பட்டது

என்றும் நீங்கள் எழுதியிருந்ததைப் பார்க்கவே, எனக்கு அப்படிப்பட்ட ஆச்சரியம் தோன்றியது. அதைப் பார்த்தவுடனே, நான் என்ன அர்த்தம்செய்து கொண்டேன் தெரியுமா? அற்புத ரூபிணியான பூரணசந்திரோதயத்தின் பிரியத்துக்கு நீங்கள் ஒருவரே பாத்திரர் ஆனவர் என்ற எண்ணமே என் மனசில் உண்டாயிற்று?'' என்றார்.

பாளையக்காரர் தற்பெருமையும் மகிழ்ச்சியும் முகத்தில் ஜ்வலிக்கப் பெற்றவராய் இனாம்தாரரை நோக்கி, ''ஆம்! அப்படி இல்லாவிட்டால், நான் துணிந்து இந்தக் காரியத்தை நடத்துவேனா? இன்னம் கொஞ்சநேரம் போனால், விவரம் எல்லாம் நன்றாக விளங்கிப் போகிறது. முதலில் விருந்து நடக்கட்டும். மற்ற சங்கதியெல்லாம் உடனே தெரிந்து போகிறது'' என்றார்.

அப்போதும் ஆச்சரியம் அடங்காதவராகக் காணப்பட்ட இனாம்தார், ''என்ன இருந்தாலும், நீங்கள் சாமர்த்திய சாலிதான். சகலமான அம்சங்களிலும் நம் எல்லோரையும் விடப் பதினாயிரம் மடங்கு சிரேஷ்டமான இளவரசர் இருக்கிறார். அவரைக்கூட அந்தப் பூர்ணசந்திரோதயம் மதியாமல் உங்களிடம் மோகம் கொண்டதுதான் உங்களுடைய கீர்த்திப் பிரதாபத்தை நன்றாக விளக்குகிறது. உண்மையில் காரியம் இப்படி நடந்திருக்க, இதைவிட்டு ஜனங்கள் பல பல மாதிரியாகப் பேசிப் புரளி செய்கிறார்கள். இளவரசருக்கும் பூரண சந்திரோதயத்துக்கும் அந்தரங்கமான நட்பு ஏற்பட்டுப் போனதாகவும், அவர் அவளைக் கொண்டுபோய் ஏழாவது உப்பரிகையில் வைத்துக் கொள்ளப் போகிறதாகவும் சிலர் சொல்ல நான் கேள்வியுற்றேன். உங்களுக்கு அவள் ஏற்கெனவே வசப்பட்டுப் போனவள் என்பதை அறியாமல் இளவரசர் ஒருவேளை அவளை அழைத்துக் கொள்ளத் தீர்மானித்திருப்பார் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. அவரும் இப்போது இங்கே வரப்போகிறார் அல்லவா? அப்போது அவருடைய

மனசுக்கு இதெல்லாம் எப்படி இருக்குமோ பார்க்கலாம். தாம் எப்படிப்பட்ட மனிஷியை அழைத்துக் கொள்ளப் போகிறோம் என்பதை அவர் இப்போது நேரிலேயே தெரிந்து கொள்ளட்டும்'' என்றார்.

அவ்வாறு அவர் பேசி முடித்த சமயத்தில் கலியாணபுரம் ஜெமீந்தாரை சாமண்ணாராவ் அழைத்துக் கொணர்ந்து உள்ளே சேர்க்க, அவரும் உபசரிக்கப் பெற்று ஆசனத்தில் அமர்ந்தவராய்ப் பாளையக்காரரை நோக்கிப் புன்னகை செய்து, ''என்ன பாளையக்காரரே, இந்த விஷயம் உண்மையானது தானா? அல்லது ஏதாவது கருத்தை மனதில் வைத்துக்கொண்டு செய்யப்படும் தந்திரமா? நீங்கள் அனுப்பிய கடிதத்தைப் பார்த்த முதல் என் மனசில் ஒரு பெரிய சந்தேகம் எழுந்து, நீங்காமலேயே இருந்து வந்தது. இந்த விருந்து உண்மையிலேயே நடக்கப் போகிறதா, அல்லது, நீங்கள் வேடிக்கைக்காக அப்படி எழுதியிருக்கிறீர்களா என்ற சந்தேகம் இந்த நிமிஷம் வரையில் இருந்தது. இப்போது இந்த ஏற்பாடுகளை எல்லாம் நாம் பார்த்தபிறகுதான், அந்தச் சந்தேகம் தீர்ந்தது. ஏதடா நம்மைப் பற்றி இவர் இப்படிப்பட்ட சந்தேகத்தைக் கொள்கிறாரே என்று நினைத்து நம்முடைய பாளையக்காரர் என்மேல் ஆயாசப் படக்கூடாது. என் மனசு நினைத்ததை நான் மறைக்காமல் உள்ள படி வெளியிட்டுவிட்டேன்'' என்றார்.

அதைக் கேட்ட இனாம்தார், ''ஆம்; நீங்கள் சந்தேகப்பட்டது போலவே நானும் சந்தேகப்பட்டேன். இளவரசரைப் பற்றி நாம் கேள்வியுற்ற சங்கதியை இப்போதுதான் இவரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். அவர் இன்றையதினம் இங்கே வந்தால், அவருக்கு எப்படிப்பட்ட மானக்கேடு நேரும் என்பதையும் சொல்லிக் கொண்டிருந்தேன்'' என்றார்.

கலியாணபுரம் மிட்டாதார், ''இளவரசர் இந்த விருந்துக்கு வருவார் என்றே நான் நினைக்கவில்லை. தாம் தோற்றுப் போன ஓர் அவமானமே போதாதா? அதோடு, நம்முடைய

பாளையக் காரருக்கு இணங்கிக் களங்கப்பட்டுப் போன அந்தப் பெண்ணை இளவரசர் அரண்மனையில் கொண்டு போய் வைத்துக் கொள்ள நினைப்பது கேவலம், இழிவிலும் இழிவான காரியம். ஆகையால், இன்றையதினம் அவர் இங்கே வருவதற்கு அவருக்கு முகம் இருக்காது என்பது முற்றிலும் நிச்சயம். பூர்ணசந்திரோதயத்தை நான் ஆரம்பத்தில் பிரமாதமான மனிஷியாக மதித்திருந்தேன். அவள் நம்முடைய பாளையக்காரரிடத்திலும் இளவரசரிடத்திலும் நடந்து கொண்டதைக் கேட்டபிறகு அவள் கேவலம் கெட்டுப்போன மனிஷி என்ற எண்ணமே என் மனசில் உண்டாகிறது. ஆனால், எனக்கு ஒரு சந்தேகம் உண்டாகிறது. நம்முடைய பாளையக்காரர் இளவரசருக்கு அழைப்புக் கடிதம் அனுப்பி இருக்கிறாரா இல்லையா என்பது தெரிய வேண்டும்'' என்றார்.

பாளையக்காரர், ''அதைப்பற்றிச் சந்தேகம் என்ன? யாராக இருந்தாலும் எனக்கென்ன பயம்? மருங்காபுரி ஜெமீந்தாருடைய மாளிகையில் நாம் செய்துகொண்ட ஒப்பந்தப்படி, நாம் ஆறுபேரும் சேர்ந்துதானே இதை முடிவு செய்ய வேண்டும். இளவரசரை மாத்திரம் நான் அழைக்காமல் விலக்க என்ன நியாயமிருக்கிறது?'' என்றார்.

அந்தச் சமயத்தில் சாமண்ணாராவ் மருங்காபுரி ஜெமீந்தாரை உள்ளே அழைத்துக் கொண்டுவந்து சேர்க்க, அங்கே இருந்த மூவரும் எழுந்து கிழவருக்கு வந்தனம்செய்து அவரை வரவேற்றுத் தாங்களும் உட்கார, கிழவர் எல்லோருக்கும் பதில் வந்தனம் செய்தபின் பாளையக்காரரை, ஒரு பக்கமாக அழைத்துப்போய் நிற்க வைத்துக்கொண்டு, ''என்ன பாளையக் காரரே! இந்த விஷயம் ஏதாவது கலகத்தில் கொண்டு போய் விடுமோ என்ற ஒருவித பயம் என் மனசில் உண்டாகி சங்கடப் படுத்திக் கொண்டே இருக்கிறது'' என்று தணிவான குரலில் கவலைக் கொண்டவராய்க் கூறினார்.

அதைக் கேட்டு ஒருவிதக் கலக்கமும் திகிலும் கொண்ட பாளையக்காரர், ''ஏன் அப்படி சொல்லுகிறீர்கள்?'' என்றார்.

ஜெமீந்தார், "காரணத்தை நான் இப்போது எப்படித் தெரிவிக்கிறது. இருக்கும் நிதானத்திலிருந்து நான் அப்படி நினைக்கிறேன். இளவரசரும் சாமண்ணாராவும் அந்தப் பெண்ணினிடத்தில் அதிக சம்பந்தம் பாராட்டுகிறதாகத் தெரிகிறது. அவள் உண்மையில் தார்வார் தேசத்து மகாராஜ னுடைய அபிமான புத்திரி என்று இப்போது நிச்சயமாகத் தெரிந்துபோய் விட்டதாம். அவள் சாமண்ணா ராவைத் தனது முக்கியக் காரியதரிசியாக அமர்த்திக் கொண்டு விட்டாளாம். இளவரசர் அவள் இருக்க, ஏழாவது உப்பரிகையில் இடம் கொடுக்கப் போகிறாராம். உப்பரிகையில் ஓரிடம் ஒழிக்கப் படுகிறதாம்; அங்கேயுள்ள வேலைக்காரர்கள் இந்த விவரங்களை எல்லாம் சொல்லுகிறார்களாம். விஷயம் இப்படி இருக்கிறது. அவள் பெரிய இடத்து மனுஷியாக இருப்பதால், நாம் பதற்றப்படாமல் எதையும் ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும்; உங்களுடைய கட்சி உண்மையான கட்சியாக இருக்கலாம்; அவள் உங்களுக்கு இணங்கி வந்திருக்கலாம்; இருந்தாலும் இப்போதைய அவளுடைய நிலைமையைக் கருதி நாம் நம்முடைய உண்மையை வெளியிடுவது உசிதமல்ல வெனத் தோன்றுகிறது" என்றார்.

பாளையக்காரர், "அவள் யாராக இருந்தால் எனக்கென்ன? நான் சொல்லப்போவது உண்மையான விஷயம்; அதற்குத் தகுந்த சாட்சியும் இருக்கிறது. அவ்வளவுதானே நமக்குத் தேவை. மற்றது எப்படியாவது போகட்டும்; நமக்கென்ன?" என்று மறுமொழி கூறினார்.

அவ்வாறு மருங்காபுரி ஜெமீந்தாரும் பாளையக்காரரும் தனிமையில் பேசிக்கொண்டு போனதைக் கண்ட கலியாணபுரம் மிட்டாதார் தமக்கு அருகிலிருந்த இனாம்தாரை மெதுவாக இடித்து, "அதோ பார்த்தீர்களா? நமக்குத் தெரியாமல், கிழவர் பாளையக் காரரிடத்தில் ஏதோ பிரஸ்தாபம் செய்கிறார். கிழவருக்கு இதில் கொஞ்சம்கூட இஷ்டமிருக்காது. அதற்காக அவர் ஏதோ தந்திரம் செய்கிறார் என்றே நினைக்கிறேன்.

கொஞ்சநேரத்துக்கு முன்னேதான், நான் இன்னொரு புதிய சங்கதி கேள்வியுற்றேன். இளவரசர், இந்தக் கிழவர் ஆகிய இருவருக்கும் மாத்திரம் பூர்ணசந்திரோதயம் இணங்கி விட்டாள் என்று ஒரு மனிதன் எனக்குச் சொன்னார்'' என்றார்.

இனாம்தார், ''என்னிடத்தில்கூட ஒரு மனிதன் நேற்றைய தினம் அதே சங்கதியைத் தெரிவித்தான். நான் அப்படியும் இருக்குமோ என்று சந்தேகித்துக் கொண்டிருந்தேன். இப்போது நீங்கள் சொல்வதைப் பார்த்தால், அந்த வதந்தியிலும் ஏதாவது நிஜமிருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது'' என்றார்.

மிட்டாதார், ''வாஸ்தவந்தான். கொஞ்சமாவது நெருப்பில்லா விட்டால், புகை உண்டாகாது அல்லவா? அதிருக்கட்டும்; உங்களுக்கு இந்தச் சங்கதியைச் சொன்ன மனிதர் யார்? அதைச் சொல்லுங்கள்'' என்றார்.

இனாம்தார், ''வேறே யாருமில்லை. நம்முடைய பஞ்சண்ணா ராவ் இருக்கிறார் அல்லவா? அவனையும் அவனுடைய கையாளான ராமனையும் அமர்த்தி, பூர்ண சந்திரோதயத்தின் நடவடிக்கைகளை எல்லாம் கவனித்து உடனுக்குடன் என்னிடம் வந்து தெரிவிக்கும்படி ஏற்பாடு செய்திருந்தேன். அவர்கள்தான் இந்த விஷயத்தைச் சொன்னவர்கள். உங்களுக்குச் சொன்னது யார்?'' என்றார்.

மிட்டாதார், ''என்ன ஆச்சரியம்! எனக்கும் இந்த விஷயத்தை அவர்கள்தான் சொன்னார்கள். நானும் அவர்களைத்தான் அமர்த்தியிருந்தேன். அவர்கள் எல்லோருக்கும் சரியாக நடந்து கொள்ளுகிறார்கள் போல் இருக்கிறது. அதிருக்கட்டும்; இந்த விஷயமாக அவர்கள் உங்களிடம் என்ன சொன்னார்கள்? அன்றைய தினம் ராத்திரி பூர்ணசந்திரோதயமே இந்த மருங்காபுரியார் மாளிகைக்கும் இளவரசருடைய உப்பரிகைக்கும் போய்விட்டு வந்தாள் என்று தானே சொன்னார்கள்?'' என்றார்.

இனாம்தார், "ஆம் ஆம். அதே சங்கதிதான் சொன்னார்கள். அதுவும் அன்றி இந்தப் பாளையக்காரர் வம்புலாஞ் சோலையில் பூர்ணசந்திரோதயத்தைக் கண்டு பேசிய விவரத்தையும் பஞ்சண்ணாராவ் என்னிடம் தெரிவித்தான். இந்தப் பாளையக்காரர் பெருமைப்படுத்திக்கொண்டு சொல்லும் விவரத்துக்கும் அவன் சொன்ன விவரத்துக்கும் கொஞ்சம்கூட ஒற்றுமையே இல்லை" என்றார்.

மிட்டாதார், "அந்த வரலாற்றைக்கூட அவர்கள் என்னிடம் வெளியிட்டார்கள். அதைக்கேட்டேன். பிறகு இந்த விருந்தைப் பற்றிய கடிதம் வந்தது. இந்த இரண்டு விதமான விருத்தாந்தங்களையும் அறிய என் மனம் நிரம்பவும் குழம்பிப் போய்விட்டது. அவர்கள் சொல்வது நிஜமா, அல்லது இவர் சொல்வது நிஜமா என்பதுதான் தெரியவில்லை" என்றார்.

இனாம்தார், "நம்முடைய பாளையக்காரர் இவ்வளவு அபாண்டமான பொய்யைச் சொல்லி நம்மையெல்லாம் ஏமாற்ற நினைப்பாரா என்பதையும் நாம் யோசிக்க வேண்டும் அல்லவா?" என்றார்.

மிட்டாதார், "நம்முடைய பாளையக்காரர் ஒரு மாதிரியாக மனிதர்தான். சமயத்தில் இவர் எதை வேண்டுமானாலும் செய்யக் கூடியவர்தான். அதுவும்தவிர, இவருக்கு ஏராளமான கடன் ஏற்பட்டுவிட்டதாக ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். இந்தப் பந்தயத்தை ஜெயிப்பவர்களுக்கு முப்பதினாயிரம் ரூபாய் கிடைக்கும் அல்லவா? அதை உத்தேசித்து இவர் ஒருவேளை இந்த மோசத்தில் இறங்கி இருக்கக் கூடும் அல்லவா? இருந்தாலும், நாம் இன்றையதினம் நிரம்பவும் விழிப்பாக இருக்க வேண்டும். பணம் மருங்காபுரிக் கிழவரிடத்தில் இருக்கிறது. பாளையக்காரர் ஜெயம் அடைந்து விட்டார் என்பதற்குத் தகுந்த ருஜு இருந்தாலன்றி, பணத்தைக் கொடுக்க நாம் இணங்கக் கூடாது. ஒரே இரவில் இந்தக் கிழவரிடத்துக்கும் இளவரசரிடத்துக்கும் தானாகவே போய்

விட்டு வந்த அந்த மனுஷி இந்தப் பாளையக்காரரிடத்தில் மாத்திரம் வித்தியாசமாக நடந்திருப்பாள் என்று நாம் எப்படி நினைக்கிறது. இவர் சொல்லுகிறபடியே காரியம் நிறைவேறி னாலும் நிறைவேறியிருக்கலாம். அவள் எப்படியும் கெட்டுப் போனவள் தானே. அவளுக்கு நிர்ணயம் என்ன?'' என்றார்.

இனாம்தார், ''அப்படியானால் அவள் உங்களையும் என்னையும் மாத்திரம் வெறுத்து விலக்கவேண்டிய காரணம் என்ன? அவளுடைய ஆசையெல்லாம் பணத்தைப் பொருத்த தாக இருந்தால், பாளையக்காரரைவிட நீங்கள் எவ்வளவோ அதிகமாகப் பணம் கொடுப்பீர்களே; அப்படியின்றி, அவள் அழகைக் கண்டு ஆசைப்படுகிறவளாக இருந்தாலும், அப்போதும் நீங்கள் இந்தப் பாளையக்காரருக்குத் தோற்கக் கூடியவர்கள் அல்லவே'' என்றார். அந்தச் சமயத்தில் இளவரசர் உள்ளே வந்து சேர்ந்தார்.

அதை உணர்ந்த பாளையக்காரர் மருங்காபுரி ஜெமீந்தாரை விட்டு ஓடோடியும் வந்து மகிழ்ச்சியோடு புன்னகை செய்து, நிரம்பவும் வணக்கமாகவும் மரியாதையாகவும் இளவரசரை வரவேற்று உன்னதமான ஓர் ஆசனத்தில் அமரச் செய்ய இளவரசர் பாளையக்காரர்மீது கொண்டிருந்த அருவருப்பையும் ஆத்திரத்தையும் வெளியில் காட்டாமல் மறைத்து சந்தோஷமும் புன்னகையும் தோற்றுவித்தவராய் அப்பாளையக்காரரது யோக க்ஷேமங்களைப் பற்றி விசாரித்தார். ஆனால், அவர்கள் பூரண சந்திரோதயத்தைப் பற்றி பேச்சையே எடுக்காமல் இருந்தனர். அதற்குள் மருங்காபுரிக் கிழவரும் இனாம்தாரும், மிட்டாதாரும் நெருங்கி வந்து இளவரசரை வணங்கி மரியாதை செய்தனர். உடனே இளவரசர் ஜெமீந்தாரை நோக்கி, ''ஜெமீந்தார் ஐயா! நம்முடைய ராஜாங்க சம்பந்தமான சிலமுக்கிய சங்கதிகளைப் பற்றி உங்களிடம் பேசவேண்டும் என்று இன்று காலை முதல் எண்ணியிருந்தேன். நாம் இருவரும் கொஞ்ச நேரம் தனியாகப் போய்ப் பேசுவோம். இவர்கள் எல்லோரும்

இவ்விடத்தில் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருப்பதை நாம் கெடுக்கக் கூடாது'' என்றார்.

அதைக் கேட்ட பாளையக்காரர், ''தாங்கள் எல்லா இடத்திலும் எஜமானர் . ஆகையால், தங்களுடைய வாக்குக்கு எதிர் வாக்கு ஏது. தாங்கள் இவ்விடத்திலேயே இருந்து பெரியவரோடு பேசலாம். நானும் நம்முடைய மிட்டாதாரும், இனாம்தாரும் கொஞ்சம் தூரத்திலிருந்து பேசுகிறோம்'' என்று கூறியவண்ணம் மற்ற இருவரையும் அழைத்துக்கொண்டு சிறிது தூரத்திற்கு அப்பால் போய் உட்கார்ந்துகொண்டார்.

ஜெமீந்தாரோடு தனிமையில் இருந்த இளவரசர் தணிவான குரலில் பேசத் தொடங்கி, ''இது என்ன கூத்தாக இருக்கிறதே! இந்தப் பாளையக்காரருக்கு ஏதாவது பைத்தியம் பிடித்திருக்குமா?'' என்றார்.

ஜெமீந்தார், ''நாம் இப்போது எதையும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. இவர் துணிந்து இவ்வளவு தூரம் காரியங்களைச் செய்திருப்பதைப் பார்த்தால் இவர் அவளை வசப்படுத்தி இருப்பார் என்று எண்ணவேண்டியிருக்கிறது. அப்படி நடந்திருக்கும் என்றே நான் நினைக்கிறேன். ஏனென்றால், அன்றையதினம் பூர்ணசந்திரோதயம் என்னுடைய ஜாகைக்கு வந்தபோது, அவள் ஒரு சங்கதி சொன்னாள். அவளைக் குறித்து நாம் இப்படிப் பந்தயம் ஏற்படுத்தியிருக்கிறோம் என்ற சகலமான ரகசியங்களையும் அவள் இந்தப் பாளையக்காரரிடத்திலிருந்து தெரிந்து கொண்டுவிட்டதாகச் சொன்னாள். அதிலிருந்து என் மனம் ஒருவிதமாகச் சந்தேகம் கொள்கிறது'' என்றார்.

இளவரசர், ''ஆம் ஆம். அவள் என்னிடத்தில் கூட அதே சங்கதியைத் தெரிவித்தாள். ஆனால், அவள் இந்தப் பாளையக்காரரைப் பற்றி நிரம்பவும் அருவருப்பாகவும் இழிவாகவும் பேசினாள்'' என்றார்.

ஜெமீந்தார், "அதெல்லாம் ஸாகஸமாக இருக்கும். பெண் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டுமா? அதிலும் பூர்ண சந்திரோதயத்துக்குத் தெரியாத தந்திரமா? சமுத்திரத்தின் ஆழத்தைக் கண்டுபிடித்தாலும் பிடிக்கலாம், இந்தப் பெண் பிள்ளைகளுடைய மனசின் ஆழத்தை மாத்திரம் காண முடியாது என்று நம்முடைய முன்னோர்கள்தான் சொல்லி இருக்கிறார்களே! பூர்ணசந்திரோதயம் எப்படிப்பட்ட காரியத்தையும் செய்யக் கூடியவள்; பாளையக்காரர் தாம் ஜெயமடைந்து விட்டதைக் குறித்து எழுத்து மூலமான உறுதியான ஆதாரம் தம்மிடத்தில் இருப்பதாக என்னிடம் இப்போதுதான் சொன்னார். ஆனால் அந்த ஆதாரம் இன்னது என்பதை அவர் இப்போது விரிவாகச் சொல்ல மாட்டேன் என்கிறார். பூர்ணசந்திரோதயம் பார்வைக்கு எவ்வளவு பகட்டாகவும் வசீகரமாகவும் இருக்கிறாளோ, அதுபோல அவள் காரியத்திலும், கபடமும், ஏமாற்றமும் நிறைந்தவளாகத் தான் இருப்பாள்" என்றார்.

இளவரசர், "நீங்கள் சொல்வதைக் கேட்கக் கேட்க, அவள்மேல் என் மனசிலும் ஒருவித சந்தேகம் தோன்றுகிறது. அவள் சொன்னதைக்கேட்டு நான் முதலில் இந்தப் பாளையக் காரரின் மேல் நிரம்பவும் ஆத்திரமடைந்து, இவருடைய முகத்திலேயே இனி முழிப்பதில்லை என்று தீர்மானம் செய்து கொண்டேன். ஆனால் இவருடைய அழைப்புக் கடிதத்தைப் பார்க்க, நான் அடைந்த ஆச்சரியம் கொஞ்ச நஞ்சமல்ல. இருந்தாலும், இங்கே வந்து இவர் என்ன சொல்லப்போகிறார் என்பதைக் கேட்டு அதற்குமேல் இவரிடத்தில் பகைமை பாராட்டவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு புறப்பட்டு வந்தேன். இதை எல்லாம் ஆழ்ந்து யோசிக்க யோசிக்க பூர்ணசந்திரோதயம் கபடமும் வஞ்சகமும் பூர்த்தியாக நிறைந்த பெருத்த நடலக்காரி என்ற எண்ணமே தலையெடுத்து நிற்கிறது" என்றார்.

ஜெமீந்தார், ''நானும் அப்படியேதான் எண்ணுகிறேன்'' என்றார்.

இளவரசர், ''அதிருக்கட்டும்; சல்லாய்ப் பட்டு அணிந்து வந்து என் மதியை மயக்கிவிட்டுப்போன பார்சீ ஜாதிப் பெண்ணைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா?'' என்றார்.

அதைக்கேட்ட ஜெமீந்தாரினது முகம் சட்டென்று மாறுதல் அடைந்தது. ஆனாலும், அவர் அப்புறம் இப்புறம் திரும்பிக் கனைத்து ஒருவாறு தமது சங்கடத்தை மறைத்துக் கொண்டு, ''அவளைப் பற்றி ஒரு சங்கதியும் தெரியவில்லை. தெரிந்திருந்தால், அதைத் தங்களுக்குத் தெரிவிக்காமல் நான் இதுவரையில் சும்மா இருந்திருப்பேனா? ஏதாவது செய்தி கிடைத்தால், அதே க்ஷணத்தில் உங்களுக்குத் தகவல் கொடுக்கிறேன். அதிருக்கட்டும். நம்முடைய சாமளராவ் ஏன் இன்னமும் வரவில்லை. அவன் இந்த விருந்துக்கு வருவானோ மாட்டானோ தெரியவில்லையே'' என்றார்.

இளவரசர், ''பாளையக்காரரைக் கேட்டுப் பாரும். இவர் அவனுக்குக் கடிதம் அனுப்பினாரோ இல்லையோ தெரிய வில்லை'' என்றார்.

உடனே ஜெமீந்தார் பாளையக்காரரிருந்த பக்கமாகத் திரும்பி, ''என்ன பாளையக்காரரே! நம்முடைய சாமளராவுக்கும் நீங்கள் கடிதம் எழுதினீர்கள் அல்லவா? அவன் இன்னமும் வரவில்லையே! அவன் வருவானா வரமாட்டானா? நாம் அவனுக்காகக் காக்க வேண்டுமா? மேல் ஆக வேண்டிய காரியத்தை ஆரம்பிக்கலாமா?'' என்றார். உடனே பாளையக்காரர், ''நான் அவனுக்கும் கடிதம் அனுப்பி இருக்கிறேன். வந்துவிடுவான். எல்லாவற்றிற்கும் இன்னம் கால் நாழிகை நேரம் பொறுத்துப் பார்ப்போம்'' என்று சொல்லி வாய் மூடு முன், சாமளராவும் அங்கே வந்து சேர்ந்தான். அவன் ஒரு விஷயத்தையும் அறியாத விளையாட்டுப் பிள்ளையைப் போலத்

தோன்றி அங்கிருந்த எல்லோரோடும் சந்தோஷமாகப் பேசலானான்.

இரண்டொரு நிமிஷ நேரத்திற்குப் பிறகு அவர்கள் அறுவரும் விருந்து உண்ண உட்கார்ந்து கொண்டனர். அன்றைய தினம் தயாரிக்கப்பட்டிருந்த விருந்து நிகரற்றதாகவும் எவ்விதக் குற்றம் குறைகளுக்கும் இடமின்றி மகா மாதுரியமாகவும் இருந்தது. அதற்குமுன் அவர்களுக்கு மருங்காபுரி ஜெமீந்தார் நடத்தி வைத்த விருந்தைவிடப் பதின்மடங்கு இது சிரேஷ்டமாக இருந்தது என்றே சொல்ல வேண்டும். ஓயாமல் விருந்துண்டு பழகிய மனிதரான இளவரசர் கூட அன்றைய விருந்தை உண்பதில் நிரம்பவும் ஆனந்தமும் சந்தோஷமும் அடைந்த வராகக் காணப்பட்டார்.

போஜனம் நடந்தபோது பூர்ணசந்திரோதயத்தைப் பற்றிய விஷயமே குறிக்கப்படவில்லை. அவர்கள் உலக விஷயத்தைப் பற்றி விளையாட்டாகவும் வேடிக்கையாகவும் சம்பாஷித்த வண்ணம் விருந்துண்டு எழுந்தனர்.

எழுந்து கைகளைச் சுத்தம்செய்துகொண்ட பின்னர் அவர்கள் அறுவரும் மேன்மாடத்தில் இருந்த ஒரு சிங்கார மண்டபத்தை அடைந்து, ஆசனங்களில் உட்கார்ந்து கொண்டனர். உடனே எல்லோருக்கும், சந்தனம், தாம்பூலம், புஷ்பம் முதலியவை வழங்கப்பட அவர்கள் அவற்றை அணிந்து கொண்டு குதூகலமாக வார்த்தையாடிய வண்ணமிருந்தனர்.

அப்போது அந்த வீட்டு வாசலில் இன்னொரு வண்டி வந்து நின்றது. அதற்குள் வந்தது யார் என்பதை அறிய ஆவல் கொண்ட சாமண்ணாராவ், உடனே எழுந்து வண்டியண்டை போய்ப் பார்த்தான். அதன் முன்பக்கத்திலிருந்து பஞ்சண்ணா ராவும், ராமனும் உடனே கீழே குதித்தார்கள். வண்டிக்குள் ளிருந்து ஒரு ஸ்திரீ கீழே இறங்கினாள். அவள் தனது உடம்பை எல்லாம் போர்வையால் மூடிக்கொண்டிருந்தாள். ஆனாலும்,

அவளது முகத்தைப் பார்த்த சாமண்ணாராவ், அவர் பூர்ண சந்திரோதயம் என்பதைக் கண்டு மிகுந்த பயபக்தி விநயத்தோடு அவளை வரவேற்று, ''வாருங்கள் வாருங்கள், எல்லோரும் இப்போதுதான் சாப்பிட்டு எழுந்து மேலே போய்த் தாம்பூலம் போட்டுக் கொள்ளுகிறார்கள். நீங்கள் வந்திருப்பதாக உள்ளே போய்ச் சொல்லட்டுமா?'' என்றான்.

உடனே பூர்ணசந்திரோதயம், ''உன்னுடைய பெயர் என்ன?'' என்றாள்.

சாமண்ணாராவ், ''என்னை சாமண்ணாராவ் என்று சொல்லு வார்கள்; என்னைப்பற்றி சாமளராவ் உங்களிடத்தில் சொல்லி யிருப்பாரே'' என்றான்.

பூர்ணசந்திரோதயம், ''ஆம். ஆம். சொல்லியிருக்கிறார். இந்தப் பாளையக்காரர் உனக்கு இரண்டரை வருஷமாகச் சம்பளமே கொடுக்கவில்லையாம். என்னிடம் நீ வேலைக்கு வந்துவிடுவதாகச் சொன்னாயாம். அதையெல்லாம் சாமளராவ் என்னிடம் சொன்னார். நாளையதினம் நான் நம்முடைய அரண்மனைக்கே போய்விடப் போகிறேன். உன்னை உடனே அழைத்துக்கொண்டு வந்துவிடும்படி நான் அவருக்கு உத்தரவு கொடுத்திருக்கிறேன். நீ கவலைப்பட வேண்டாம். அங்கே வந்துவிடு'' என்றாள்.

அதைக்கேட்ட சாமண்ணாராவ் நன்றியறிதலும் பணிவும் பொங்கி எழுந்த மனத்தினனாய்க் குனிந்து குனிந்து அவளை மேன்மேலும் அதிகமாக வணங்கி, ''எப்படியாவது தாங்கள் இந்த ஏழையை வைத்து ஆதரிக்க வேண்டும். எனக்கு வேறே பிழைக்கும் மார்க்கமில்லை. இங்கே மாடுமாதிரி உழைத்து விட்டுப் போய் வீட்டில் பட்டினி கிடக்க வேண்டியிருக்கிறது. அதுபோகட்டும்; எஜமான் இவ்விடத்தில் நிற்பது சரியல்ல. தங்களுக்கு என்ன காரியம் ஆக வேண்டும்? சொன்னால் அதன்படி நடந்து கொள்ளுகிறேன்'' என்றான்.

பூர்ணசந்திரோதயம், "நீ வேறு எதையும் செய்ய வேண்டாம்! மேலே அவர்கள் எல்லோரும் என்ன பேசுகிறார்கள் என்பதை நாங்கள் மூவரும் மறைந்திருந்து கேட்க வேண்டும். மேன்மாடப் படியின் உச்சியில் நாங்கள் வந்து நிற்கிறோம். அதற்கு அப்பால் இருக்கும் கதவை மாத்திரம் தாளிடாமல் நீ கொஞ்சம் திறந்து வைக்க வேண்டும். அவ்வளவுதான் இப்போது நீ செய்ய வேண்டியது" என்றாள்.

அதைக் கேட்ட சாமண்ணாராவ் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு அவர்கள் மூவரையும் வீட்டிற்குள் அழைத்துச் சென்றான். மேன்மாடப் படிகளுக்கு அப்பால் இருந்த கதவு மூடப்பட்டிருந்ததாக அவனுக்குத் தோன்றியது. ஆகையால், தான்மேலே போவதற்கு ஆஸ்பதமாக ஐந்தாறு விசிறிகளைக் கையில் எடுத்துக்கொண்டு மேன்மாடப் படிகளில் ஏறி மேலே சென்று கதவை மெதுவாகத் திறந்து கொண்டுபோய் விசிறிகளை விருந்தினருக்கு எதிரில் வைத்துவிட்டுப் பின் வாங்கினான். அந்த வேலைக்காரனது வேலைப் பொறுப்பையும் பணிவையும் கண்ட பாளையக்காரர் நிரம்பவும் சந்தோஷம் அடைந்தவராய் அவனைப் புகழ்ந்து, "சாமண்ணாராவ்! நல்ல வேளையில் விசிறிகளை எடுத்து வந்தாய். இருக்கட்டும், நீ கீழே போய் இரு. மறுபடியும் நான் கூப்பிடும்போது வந்தால் போதும். அதற்குமுன் வரவேண்டாம்" என்று உத்தரவு பிறப்பித்தார்.

அப்படியே நடந்துகொள்வதாக சாமண்ணாராவ் அவருக்கு மறுமொழி கூறியபின் அவ்விடத்தைவிட்டு இப்பால் வந்தவன் கதவைச் சிறிதளவு திறந்தபடி வைத்துவிட்டுப் படிகளின் வழியாகக் கீழே இறங்கி வந்து பூர்ணசந்திரோதயத்துக்குச் சைகை காட்டினான். உடனே, பூர்ணசந்திரோதயம் மற்ற இருவரையும் அழைத்துக்கொண்டு சந்தடி செய்யாமல் மேன்மாடப் படிகளில் ஏறிக் கதவு இருந்த இடத்திற்குப்போய் மறைந்து நின்று கொண்டாள். பஞ்சண்ணாராவும், ராமனும் அவளுக்குப் பக்கத்தில் பதுங்கி ஒதுங்கிநின்று கொண்டிருந்தனர்.

உள்ளே பேசப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும் கணீர் கணீரென்று வந்து அவர்களது காதில் மோதியது.

விருந்தினர் எல்லோரும் விருந்தின் சுகத்தினால் ஆனந்த பரவசம் அடைந்து மெய்மறந்து குதூகலவசம் ஆகி இருந்தனர். பாளையக்காரர் செய்திருந்த மகா துணிகரமான சதி ஆலோசனையை நிறைவேற்றும் சந்தர்ப்பம் ஆரம்பமாயிற்று. அவர் எழுந்து பேசித் தமது ரகசியத்தை வெளியிடப் போகிறார் என்பதைக் கண்ட மற்ற ஐவரும் மிகுந்த ஆவலோடு அவரது வாயைப் பார்த்தவண்ணம் இருந்தனர். அவ்வாறு எழுந்து நின்ற பாளையக்காரர், ''மகாராஜாவே! பிரபுக்களே! நண்பர்களே! இன்றைய தினம் இந்த விருந்து எதைக்குறித்து நடத்தப்பட்டது என்பதைப் பற்றி நான் என்னுடைய அழைப்புக் கடிதத்திலேயே ஒருவாறு எழுதித் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். அது சம்பந்தமாக நாம் கிரமப்படி மிகுதியிருக்கும் சடங்குகளை நிறைவேற்ற வேண்டுவது அவசியமாக இருக்கிறது. இப்போது நடக்கப்போகும் விசாரணையில் நான் ஒரு வாதியின் ஸ்தானத்தில் இருப்பதால், என்னுடைய வாதத்தைக் கேட்டுச் சரியான தீர்மானம் சொல்ல பட்சபாதம் இல்லாமல் நடந்து கொள்ளும் ஓர் அக்கிராசனாதிபதியை நாம் முதலில் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆகையால் எல்லா அம்சங்களிலும் தகுதியுடைய வரான நமது ஜெமீந்தார் ஐயாவை அக்கிராசனராக வைக்க வேண்டும் என்று நான் பிரரேபிக்கிறேன்'' என்று கூறிவிட்டுக் கீழே உட்கார்ந்து கொண்டார்.

அதைக்கேட்ட இளவரசர், ''நிரம்பவும் தகுதியான யோசனை! இந்தப் பிரரேபணையை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஜெமீந்தார் ஐயா! எழுந்து அந்த உயர்ந்த ஆசனத்தில் உட்கார்ந்து கொள்ளுங்கள்'' என்றார்.

அதைக் கேட்ட மற்ற மூவரும் கைகொட்டி நகைத்து அதை ஆமோதிக்க, உடனே ஜெமீந்தார் எழுந்துபோய் அவ்விடத்தில்

போடப்பட்டிருந்த ஓர் உன்னத ஆசனத்தில் உட்கார்ந்தார். உட்கார்ந்தவர் உடனே தமது சட்டைப்பைக்குள் கையை விட்டு அதற்குள் சுருளாகக் கிடந்த ஒரு காகிதக்கட்டை வெளியில் இழுத்து அதைப் பிரிக்க, அவ்வளவும் ஆயிரம் ரூபாய் நோட்டுகளாக இருந்தன. அவர் அவைகளை வெளிப்படையாக வாய்விட்டு எண்ணி முப்பது ஆயிரம் நோட்டுகள் இருக்கின்றன என்று காட்டிய பின் அவைகளைத் தமக்கெதிரில் இருந்த மேஜையின்மீது வைத்தவராய் எல்லோரையும் பார்த்து, ''நண்பர்காள்! என்னிடம் ஒப்படைக்கப்பட்ட முப்பதினாயிரம் ரூபாயும் இதோ இருக்கிறது. நாம் அன்றையதினம் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின்படி, இந்தப் பணத் தொகையை அடையும் உரிமையையும் பாத்தியதையையும், தாம் சம்பாதித்துக் கொண்டதாக மெய்ப்பிக்கும் அதிர்ஷ்டசாலி எவரோ அவருக்கு நான் இந்தத் தொகையை உடனே கொடுத்து விடக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நான் உங்கள் சபாநாயகர் ஹோதாவில் ஒரு விஷயம் மாத்திரம் உங்களிடம் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போது வெளியாகப் போகும் விஷயம் எவருடைய மனசுக்காவது ஆத்திரத்தை உண்டாக்கக் கூடியதாக இருந்தாலும், கொஞ்சம் பொறுமையோடு இருந்து, நடுநிலை தவறாத நியாயம் எதுவோ, அதன்படி நாம் இந்த விஷயத்தை முடிப்பதற்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதுவுமன்றி பொதுவாக எல்லோருமே, நமக்குள் இருந்துவரும் சிநேகப்பான்மைக்கு ஒவ்வாத வார்த்தைகளுக்காவது, செய்கைகளுக்காவது இடம் கொடாமல் தமாஷாக இருந்து இந்தக் காரியத்தைப் பூர்த்தி செய்விப்பீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்'' என்றார்.

அதைக்கேட்ட பாளையக்காரர் மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைந்து, ''சரியான வார்த்தை. இப்படிப்பட்ட ஆழ்ந்த விவேகமும் உலக ஞானமும் இருப்பதனாலேதான், நான் இதற்கு நம்முடைய பெரியவரை நியமித்தது'' என்று கூறிப் புகழ்ந்தார்.

உடனே ஜெமீந்தார் மேலும் பேசத்தொடங்கி, "நான் முக்கியமான விஷயத்தைப் பற்றி விசாரிக்கத் தொடங்குமுன் நம்முடைய சாமளராவிடம் ஒரு விஷயம் கேட்க விரும்பு கிறேன். என்ன சாமளராவ்! நீ இப்போது அந்தப் பூர்ண சந்திரோதயத்தினிடம் ஏதோ அந்தரங்கக் காரியதரிசி உத்தியோகம் பெற்றுக்கொண்டிருப்பதாக ஒரு வதந்தி எனக்கு எட்டியிருக்கிறது. ஆகையால், நாம் மேலே விசாரணை நடத்துவதில், உனக்கு ஏதாவது ஆட்சேபணை இருந்தால் நீ அதை இப்போதே சொல்லிவிடலாம்" என்றார்.

சாமளராவ், "நீங்கள் சொல்லுகிறபடி நாம் உத்தியோகம் பெற்றது உண்மைதான். ஆனாலும், நம்முடைய ஒப்பந்தப்படி நாம் செய்யவேண்டிய மிகுதியுள்ள கடமைகளைச் செய்யா விட்டால் மற்றவர்கள் சும்மா விடுவார்களா? ஆகையால், நான் இந்த விஷயத்தில் ஆட்சேபணை செய்வது நியாயமாகுமா? ஆனால், நான் ஒரு விஷயம் மாத்திரம் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய எஜமானியினிடத்தில் நான் நெருங்கிப் பழகியதில், அவர்கள் தக்க பெரிய இடத்து ஸ்திரீயாகவும் சகலவிதத்திலும் மரியாதை பட்டவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை நான் தெரிந்து கொண்டதன்றி, அவர்களுடைய யோக்கியதையை நாம் உள்ளபடி அறியாமல், இப்படிப்பட்ட பந்தயம் ஏற்படுத்தியது கொஞ்சமும் தகாத காரியம் என்றும் நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். ஆனால் அவரவர்கள் நேரில் கண்டு உள் விஷயத்தைத் தெரிந்து கொண்டால்தான் நம்பிக்கை உண்டாகுமேயன்றி, நான் சொல்வதைக் கேட்பதனால், உங்களுடைய பழைய அபிப்பிராயம் உடனே மாறிப் போகும் என்று நான் நினைப்பது சரியல்ல. ஆகையால், இந்த விசாரணை நடக்கட்டும். ஆனால், என்னுடைய எஜமானியம்மாளின் மேல் அக்கிரமமான பகைமையும் குரோதமும் கொண்டு பொய்யான அவதூறுகளை யாரும் சொல்லி, அவர்களை நிந்திப்பதற்கு மாத்திரம்

நம்முடைய சபாநாயகர் அவர்கள் இடம் கொடுக்காதிருக்க வேண்டும். அது ஒன்றே என்னுடைய பணிவான வேண்டுகோள்'' என்று கூறி உட்கார்ந்து கொண்டான். உடனே ஜெமீந்தார், ''நம்முடைய சாமளராவ் சொன்னது சரியான நியாயம். ஆகையால், அதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்பதைப் பற்றிச் சந்தேகமே இல்லை. ஆகையால், அதை ஏற்றுக்கொண்டு நான் மேல் விஷயத்தைத் தொடங்குகிறேன். அன்றையதினம் நாம் திருவுளச் சீட்டு போட்டதில், நமக்கு அடியில் கண்டபடி முறை ஏற்பட்டது அல்லவா?-

திங்கட் கிழமை:- கலியாணபுரம் மிட்டாதார்.

செவ்வாய்க் கிழமை:- சேரங்குளம் இனாம்தார்.

புதன் கிழமை:- சூரக்கோட்டைப் பாளையக்காரர்.

வியாழக் கிழமை:- இளவரசர்.

வெள்ளிக் கிழமை:- என்னுடைய முறை.

சனிக் கிழமை:- சாமளராவ்.

என்று ஏற்பாடான வரிசைக் கிரமப்படி, ஒவ்வொருவருடைய ஜெய அபஜெயத்தைப்பற்றி நான் இப்போது கேட்க விரும்புகிறேன். ஆகையால், நம்முடைய மிட்டாதார் அவர்கள் தயை செய்து அவர்களுடைய வெற்றியையோ தோல்வியையோ வெளிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்'' என்றார்.

அதைக்கேட்ட மிட்டாதார் சோர்வடைந்த முகத்தோடு எழுந்து நின்று, ''இப்போது பிரஸ்தாபிக்கப்படும் விஷயத்தில் எனக்கு ஜெயம் ஏற்படவில்லை. உண்மையை வெளியிடு வதனால் எனக்குள்ள கௌரவம் குறைந்து போகப் போகிறதில்லை. இந்த விஷயத்தில் நான் பொய் சொல்வதும் நியாயமாகாது. ஆகையால், அந்த வெகுமதித் தொகைக்கும் எனக்கும் சம்பந்தமில்லை'' என்று கூறிவிட்டு உட்கார்ந்து கொண்டார்.

ஜெமீந்தார், ''சரி; இனி நம்முடைய இனாம்தார் அவர்கள் சொல்ல வேண்டும்'' என்றார்.

உடனே இனாம்தார் அசட்டுப்புன்னகையோடு எழுந்து நின்று, ''நம்முடைய மிட்டாதார் அவர்களுக்கு வெற்றி கிடைக்காதிருக்க, எனக்கு மாத்திரம் கிடைக்கப் போகிறதா? என்னுடைய கதியும் அதே கதிதான்'' என்று சுருக்கமாகக் கூறிவிட்டு உட்கார்ந்து கொண்டார். சபாநாயகர், ''சரி; மூன்றாவது நம்முடைய பாளையக்காரர் அவர்களுடைய முறை'' என்றார்.

உடனே பாளையக்காரர் வெகு ஆடம்பரமாகத் தமது மீசைகளை முறுக்கி விட்டுக்கொண்டு எழுந்து நின்று இரண்டொரு முறை கனைத்துத் தமது தொண்டையைச் சரிப்படுத்தி அப்புறம் இப்புறம் திரும்பித் திரும்பி கம்பீரமாகப் பார்த்தவராய் ஏதோ சொல்ல முயன்றார். வார்த்தைகள் தொண்டையை விட்டு வெளியில் வராமல் பின் வாங்கின. அவரது மனமும் உடம்பும் கிடுகிடென்று ஆடின. ஆனாலும் அவர் நிரம்பவும் பாடுபட்டுத் தமது சஞ்சலத்தை அடக்கிக் கொண்டவராய், ''சபாநாயகர் அவர்கள் கேட்டபிறகு நான் எப்படியும் உண்மையைச் சொல்லியே தீரவேண்டும். ஆனால் நான், சொல்லப்போவது ஒருவேளை யாருக்காவது துன்ப கரமாக இருக்கும். அப்படியிருந்தாலும் இது உண்மையான வரலாறு ஆகையால், யாரும் என்மேல் ஆயாசப்படவாவது என்னைத் தூஷிக்கவாவது கொஞ்சமும் நியாயமில்லை. இதனால் நம்முடைய சிநேகத்துக்குக் கெடுதல் ஏற்படுவதும் ஒழுங்கல்ல. நம்முடைய நண்பரான இனாம்தார், அவருக்கு முன்னால் முயற்சி செய்த மிட்டாதாருக்கு ஜெயங் கிடைக்காமல் இருக்க, தமக்கு மாத்திரம் எப்படிக் கிடைக்கும் என்று சொன்னார். நான் அப்படிச் சொல்ல முடியாது. அவர்களிருவருக்குப்பின்னால் நான் வரப் போகிறேன் என்பது அந்தப் பூர்ணசந்திரோதயத்துக்கு ஒருகால் தெரிந்து போயிற்றோ

என்னவோ. அதனாலேதான் ஜெயம் இவர்கள் இருவருக்கும் கிடைக்காமல் எனக்குக் கிடைத்தது என்று நான் எண்ணுகிறேன். மற்ற எல்லோரையும் விட நான் அவ்வளவு சிரேஷ்டமானவனோ, அல்லவோ, அதை நான் சொல்ல முடியாது. சிலருக்குக் குருட்டு அதிர்ஷ்டம் என்று ஒன்று உண்டாவது வழக்கம். அப்படிப் பட்ட அதிர்ஷ்டத்தினாலேயே நான் அந்தப் பெண்ணை என் வசப்படுத்தினேன் என்று சொல்வதைப் பற்றி யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். எவருக்கும் கிடைக்க மாட்டாத அந்தப் பெண்ணரசியை நான் வசப்படுத்தியதும் உண்மை. அவள் சுவர்க்க போகத்துக்குச் சமமான நிகரற்ற பேரானந்த சுகத்தில் என்னை ஆழ்த்தியதும் உண்மை. இங்கே இருக்கும் முப்பதினாயிரம் ரூபாய்க்கு நான் உரியவனானதும் உண்மை'' என்று நிதானமாகக் கூறிவிட்டு உட்கார்ந்து கொண்டார்.

அதைக் கேட்டவுடனே சாமளராவினது முகம் மாறுபட்டது. அடக்க இயலாக்கோபத்தினால் அவனது மனம் கொதிக்க உடம்பு பதறியது. அதுபோலவே இளவரசரது நிலைமையும் மாறுபட்டது. ஆனாலும், அவர் அதை வெளியில் காட்டாமல் அடக்கிக்கொண்டார். உடனே சாமளராவ் எழுந்து, ''இன்னம் மிச்சம் இருக்கும் பெயர்களையும் கடைசிவரையில் கூப்பிட்டு எல்லோருடைய வாக்குமூலங்களையும் கேட்டுவிடுங்கள். அதன்பிறகு சன்மானம் கொடுக்கலாம். ஏனென்றால், இன்னம் யாராவது ஜெயம் பெற்றிருந்தால், சன்மானத் தொகையை இரண்டு கூறாகப்பங்கு போட்டுக்கொடுப்பதே நியாயம் அல்லவா?'' என்றான்.

சபாநாயகர், ''அதுவும் வாஸ்தவந்தான். அப்படியானால், நம்முடைய இளவரசர் பேசவேண்டும்'' என்றார்.

உடனே இளவரசர் எழுந்துநின்று, ''இந்த விசாரணையில் கலந்துகொள்வது என் மனசுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஆனாலும் நாம் ஒருதரம் செய்துகொண்ட ஒப்பந்தத்தை

மரியாதைப்படுத்த நாம் கடமைப்பட்டிருப்பதைக் கருதி நான் இப்போது எழுந்து பேசுகிறேன். நான் இந்தத் தேசத்திலுள்ள எல்லோரிலும் சிரேஷ்டமானவன். செல்வமும், செல்வாக்கும், மேம்பாடும் உடைய இளவரசன். அப்படியிருந்தாலும், இந்த விஷயத்தில் தோல்வியடைந்து விட்டதை மறைத்து வீண் பெருமை பாராட்டிக் கொள்ள எனக்கு இஷ்டமில்லை. ஸ்திரீகளுடைய பிரியம் இன்னார் மேல்தான் ஏற்படும் என்று யாரும் நிர்ணயித்துச் சொல்லமுடியாது. அது ஓர் ஒழுங்குக்குக் கட்டுப்பட்டதல்ல. நம்முடைய பாளையக்காரர் சொல்வதுபோல, அவள் அவரிடம் காதல் கொள்ளவும் கொள்ளலாம். ஆனால், எனக்கு அப்படிப்பட்ட பாக்கியம் கிடைக்கவில்லை'' என்று கூறிவிட்டு உட்கார்ந்து கொண்டார்.

அவ்வாறு இளவரசர் சொன்ன வரலாறு மிட்டாதாரையும் இனாம் தாரையும் மட்டிலடங்கா ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டது. இளவரசர் சொன்னது உண்மையாக இருக்கும் என்றே அவர்கள் இருவரும் நம்பினார்கள்.

பூர்ணசந்திரோதயம் இளவரசரினது அரண்மனைக்குப் போனதைத் தான் கண்டதாகப் பஞ்சண்ணாராவ் தங்கள் இருவரிடத்திலும் சொன்னது பொய்யாக இருக்க வேண்டும் என்று அவர்கள் இருவரும் தீர்மானித்துக் கொண்டவர்களாய் மிகுந்த வியப்போடு தத்தம் ஆசனங்களில் சாய்ந்து கொண்டனர்.

அதன்பிறகு சபாநாயகர், ''சரி; அடுத்தாற்போல் என்னுடைய முறையல்லவா. யெளவனப் புருஷர்களான இளவரசர், மிட்டாதார், இனாம்தார் முதலியோர் கையை விரிக்கையில், குடுகுடு கிழவனான நான் எந்த மூலை. இந்தப் பந்தயத்தில் பூர்ணசந்திரோதயத்தின் மூலமாக எனக்குக் கொஞ்சமும் இன்பம் உண்டாகா விட்டாலும் அவளை வென்ற புண்ணிய புருஷருக்கு இந்தச் சன்மானத் தொகையைக் கொடுப்பதாகிய இன்பம் ஒன்றைத்தான் நான் எதிர்பார்க்கிறேன். என்னுடைய சங்கதியை இவ்வளவோடு நிறுத்தி நம்முடைய சாமளராவ், அவனுடைய

முயற்சியைப்பற்றி என்ன சொல்லுகிறான் என்பதைக் கேட்கிறேன்'' என்றார்.

உடனே சாமளராவ் எழுந்து நின்று, ''பூர்ணசந்திரோதயம் என்ற அந்த அம்மாள் இப்போது என்னுடைய எஜமானி ஆகிவிட்டார்கள். ஆகையால், நான் அவர்கள் விஷயத்தில் காதல் சம்பந்தமான வார்த்தைகளை வாயில் வைத்துப் பேசுவதே தகாத காரியம். ஆகையால், அதை வாயில் வைத்து அதிகமாக விஸ்தரித்துப் பேச நான் விரும்பவில்லை. நான் இந்தப் பந்தயத்தில் தோற்றுப் போனதாகவே நீங்கள் எண்ணிக் கொள்ளலாம். அது நிற்க, இது சம்பந்தமாக நான் இன்னொரு விஷயத்தைத் தெரிவித்துக் கொள்ளப் பிரியப்படுகிறேன். நாம் இதுவரையில் எத்தனையோ பெண்களைப் பற்றித் தாறு மாறாகப் பேசி தப்பான, அல்லது, உண்மையான பற்பல அபிப் பிராயங்களை வெளியிட்டு மனம்போனபடி பேசியிருக்கிறோம். அதாவது, நாம் எப்போதும் ஒரு தலைச் சார்பாகவே பேசியிருக் கிறோம். நாம் அவதூறாகப் பேசும் பெண்கள் இல்லாத இடத்தில் அவர்களுக்குத் தெரியாதபடி நாம் தாறுமாறாகப் பேசி இருக்கிறோம். அவர்கள் நேரில் இங்கே இருந்தால், அவர்கள் தங்களுடைய நியாயத்தை எடுத்துச் சொல்லி இருப்பார்கள் என்பது நிச்சயம். அதுபோலவே, இந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் ஒருதலைச் சார்பாகப் பேசி முடிவு கட்ட நான் இணங்க மாட்டேன். இப்போது நான் அந்த அம்மாளுடைய பிரதிநிதி ஸ்தானத்தில் இருப்பதாலும், அவர்களுடைய உண்மையான யோக்கியதையும் அந்தஸ்தும் இன்னது என நான் தெரிந்து கொண்டிருப்பதாலும், நம்முடைய பாளையக்காரர் சொல்வது உண்மையாக இருக்குமா என்ற சந்தேகம் மேலாடுகிறது. ஆகையால், அவர் சொல்வதை ஒப்புக் கொள்ளுமுன் அதை மெய்ப்பிக்கத் தகுந்த போதுமான ஆதாரம் இருக்கிறதா என்பதை நாம் பார்த்து ஆராய வேண்டும். அப்படி ஆராயாமல் இந்த விஷயத்தை முடிவு செய்ய நீங்கள் யாரும்

இணங்க மாட்டார்கள் என்றே நான் நம்புகிறேன். இந்த முப்பதினாயிரம் ரூபாய் இவருக்குக் கொடுக்கப்படுவதைப் பற்றி நான் கொஞ்சமும் கவலைப்படவில்லை. இப்படிக் கொடுப்பதனால், என்னுடைய எஜமானியின் கற்பைப்பற்றி நீங்கள்அவதூறு செய்வதாக அர்த்தமாகும். ஆகையால், எந்த முடிவையும் நன்றாக நிதானித்து ஆற அமரச் செய்யுங்கள்'' என்று கூறிவிட்டு உட்கார்ந்து கொண்டான்.

உடனே ஜெமீந்தார் பாளையக்காரரை நோக்கி, ''என்ன சொல்லுகிறீர்கள்?'' என்றார்.

பாளையக்காரர் சடக்கென்று துடியாக எழுந்துநின்று, ''இவ்வளவு பெரிய விஷயத்தை நான் ருஜுவில்லாமல் தீர்மானம் செய்யும்படி கேட்டுக் கொள்வேனா? அப்படிச் சொன்னால், என்னைப் போன்ற முட்டாள், வேறே யாராவது இருப்பானா? நான் மாத்திரம் வெறும் பேச்சுப் பேசினால் அதை நீங்கள்தான் ஒப்புக்கொள்வீர்களா? ஒருநாளும் இல்லை. என்னிடத்தில் எழுத்து மூலமான ருஜு இருக்கிறது. அதைக் காட்டுகிறேன்; பாருங்கள். நான் முயற்சி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டது புதன்கிழமை அல்லவா? அதற்கு முதல் நாள் நான் நம்முடைய ஹேமாபாயியைத் தற்செயலாகக் கண்டேன். அவள் ராணி வாய்க்கால் சந்தில் இருக்கிறாள் என்பது உங்களுக்கெல்லாம் தெரிந்த விஷயம். அவளும் நானும் பற்பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த காலத்தில், இந்தப் பூர்ணசந்திரோதயத்தைப் பற்றிய பிரஸ்தாபம் உண்டாயிற்று. அவளை எப்படியாவது என் வசப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் ஹேமாபாயியிடம் கேட்டுக் கொண்டேன். அவள் மறுநாளாகிய புதன்கிழமை அன்று சாயுங்காலம் பூர்ணசந்திரோதயம் வம்புலாம் சோலைக்கு வரும் போது தானும் அங்கே வந்து அவளிடம் பேசிக்கொண்டிருப்ப தாகவும், அந்தச் சமயத்தில் நானும் அங்கே வந்தால், என்னை அவளுக்குப் பழக்கம் செய்து வைத்து இரண்டொரு நாளில்

காரியத்தை முடித்துக் கொடுப்பதாகவும் சொன்னாள். அதுபோலவே, மறுநாள் சாயுங்காலம் வம்புலாம் சோலையில், ஹேமாபாயி, எனக்கும் அந்தப் பெண்ணுக்கும் பழக்கம் செய்து வைத்தாள். பிறகு அவள் இரண்டு நாள்கள் வரையில் ஓயாமல் முயற்சித்து போதனை செய்து பூர்ணசந்திரோதயத்தின் மனம் மாறும்படி செய்து, அவளை இணங்க வைத்தாள். அவளுடைய ஜாகையான ஜெகன்மோகன விலாசத்துக்கு நான் வந்தால், ரகசியம் வேலைக்காரருக்கு எல்லாம் தெரிந்து வெளியில் பரவிப் போகும் என்று பயந்து அவள் என்னை அங்கே வரச் சொல்லாமல், அவளே ஹேமாபாயியின் வீட்டுக்கு ரகசியமாக வந்து சேர்ந்தாள். நான் அவளை அவ்விடத்தில் கண்டேன். இருவரும் சந்தோஷமாக இருந்தோம். அப்படி அவள் வந்தது எப்போது என்று நீங்கள் கேட்கலாம். நம்முடைய சபாநாய கரின் தினமான வெள்ளிக்கிழமை ராத்திரிதான் எங்கள் இருவருக்கும் சிநேகமானது'' என்றார்.

அந்த வரலாற்றைக் கேட்ட ஜெமீந்தார் இளவரசரது முகத்தைக் கூர்ந்து பார்த்தவராய், ''என்றைக்கு? வெள்ளிக் கிழமை அன்றோ? எத்தனை மணிக்கு?'' என்றார்.

பாளையக்காரர், ''வெள்ளிக்கிழமை ராத்திரி எட்டு மணிக்கே நான் ஹேமாபாயியின் வீட்டுக்குப் போய்க் காத்திருந்தேன். அவள் சரியாக ஒன்பது மணிக்கு அங்கே வந்து சேர்ந்து விட்டாள்'' என்றார்.

ஜெமீந்தார், ''ஓகோ அப்படியா! ஒன்பது மணிக்குச் சந்தித்த நீங்கள் அவ்விடத்திலிருந்து பிரிந்து போனபோது மணி என்ன இருக்கும்?'' என்றார்.

பாளையக்காரர், ''ஒன்பது மணி முதல் பதினொன்றரை மணி வரையில் நாங்கள் அங்கே இருந்தோம். அதற்குமேல் அவள் அவ்விடத்தைவிட்டுப் போனாள்'' என்றார்.

ஜெமீந்தார், ''சரி; ஏதோ எழுத்து மூலமான ருஜு

இருப்பதாகச் சொன்னீர்களே; அது என்ன ருஜு? எடுங்கள் பார்க்கலாம்'' என்றார்.

உடனே பாளையக்காரர் தமது மடியில் இருந்த ஒரு காகிதத்தை எடுத்துச் சபா நாயகருக்கு எதிரில் வைத்து, ''இதைப் படித்துப் பாருங்கள். நான் சொன்னது எல்லாம் நிஜமாக நடந்த வரலாறு தான் என்று அந்த ஹேமாபாயியின் கைப்பட ஒரு கடிதம் எழுதி வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன். இந்த மாதிரிக் கடிதம் எழுதிக்கொடுப்பது அசம்பாவிதமான விஷயம். ஆதலால், ஹேமாபாயி ஆச்சரியம் அடைந்து முதலில் எழுதிக் கொடுக்க பயந்து மறுத்துவிட்டாள். நீங்கள் நான் சொல்வதை நம்பாமல் ருஜு வேண்டுமென்று கேட்பீர்கள் என்ற எண்ணத்தி னால், நான் அவளை நயந்து உண்மையை அவளிடம் சொல்லி, இந்தக் கடிதத்தை எழுதிக்கொடுக்கச் செய்து வாங்கிக்கொண்டு வந்தேன். இதை நீங்களும் படித்துப் பாருங்கள்; மற்றவர்களும் படித்துப் பார்க்கட்டும். தேவையானால் அந்த ஹேமாபாயி யையே அழைத்துவரச் செய்து விசாரித்துப் பாருங்கள். அவள் அந்தப் பூர்ணசந்திரோதயத்துக்கு முன்பாக இருந்து கூட இந்த விஷயத்தைச் சொல்லத் தயாராக இருக்கிறாள்'' என்று கூறியவண்ணம், முற்றிலும் நம்பிக்கையுடையவர் போலத் தமது ஆசனத்தில் நிதானமாக உட்கார்ந்து கொண்டார்.

உடனே ஜெமீந்தார் அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரித்துப் படித்துப் பார்த்தார். ஹேமாபாயியினது எழுத்து அவருக்குப் பழக்கமானது ஆகையால், அந்தக் கடிதத்தின் எழுத்து அவளுடைய தாக இருக்கக் காண, அவரது மனதில் எழுந்த வியப்பு முன்னிலும் பதின்மடங்கு பெருகியது. ஒருவேளை பாளையக்காரரே அதை எழுதி ஹேமாபாயியைப்போலப் பொய்க் கையெழுத்துச் செய்திருப்பார் என்று ஜெமீந்தார் ஆரம்பத்தில் நினைத்ததற்கு மாறாக, அந்தக் கடிதம் உண்மையாகவே ஹேமாபாயியால் எழுதப்பட்டிருந்தது. ஆனாலும், அவள் வேண்டுமென்றே கட்டுப்பாடாக அதை

எழுதிக் கொடுத்திருக்கிறாள் என்று ஜெமீந்தார் நினைத்தவராய், "சரி; இந்த எழுத்து எனக்கு நன்றாகத் தெரியும். இது ஹேமாபாயியினுடைய எழுத்துதான்" என்று கூறியவராய் அந்தக் கடிதத்தை எல்லோருக்கும் கேட்கும்படி படித்துக் காட்டினார். அதுகடிதம் போல எழுதப்படாமல் ஓர் அத்தாட்சி போல எழுதப்பட்டிருந்தது. புதன்கிழமை மாலையில் ஹேமாபாயி, பூர்ணசந்திரோதயத்துக்கும் பாளையக் காரருக்கும் வம்புலாம் சோலையில் நட்புச்செய்து வைத்த தாகவும், அதன் பிறகு வெள்ளிக்கிழமை இரவில் தனது வீட்டிற்கே பூர்ணசந்திரோதயம் வந்து ஒன்பது மணி முதல் பதினொன்றரை மணிவரையில் பாளையக்காரரோடு தனிமையில் இருந்ததாகவும் அந்த அத்தாட்சிப் பத்திரத்தில் எழுதப்பட்டு இருந்ததை ஜெமீந்தார் படித்து முடித்தார்.

அப்போது பாளையக்காரரது உற்சாகமும் மனவேதனையும் உச்சநிலைமை அடைந்திருந்தன ஆனாலும், தமது சூழ்ச்சி முற்றிலும் பலித்துவிட்டதாகவே அவர் உறுதியாக எண்ணிக் கொண்டார். எதனால் என்றால், சாமளராவ் முதலிய மற்ற எவரும் வாய்திறவாமல் ஸ்தம்பித்து மௌனியாக இருந்ததைக் காண தமது கட்டுக்கதையை அவர்கள் உண்மை என்று நம்பிவிட்டதாகவே அவர் எண்ணிக்கொண்டார்.

ஆனால், ஜெமீந்தாரும் இளவரசரும் விவரிக்க வொண்ணாத வியப்போடு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பாளையக்காரர் சொல்வது முழுப்புரட்டு என்பதை ருஜுப் பிக்கத் தகுந்த முக்கியமான சில ரகசியம் தங்களிடம் இருந்தா லும், தாங்கள் அதை எப்படி வெளிப்படுத்துவது என்பதை அறியாதவர்களாய் அவர்கள் இருவரும் சிறிது நேரம் தவிக்கலாயினர்.

அப்போது கலியாணபுரம் மிட்டாதார் இனாம்தாரினது காதில், "என்ன விநோதம் பார்த்தீர்களா? அந்த அயோக்கியன் பஞ்சண்ணாராவ் நம்மிருவரிடத்திலும் உண்மையைச்

சொல்லாமல் பொய்யான விஷயங்களையெல்லாம் சொல்லி இருக்கிறான் பார்த்தீர்களா? அவன் வேறே எங்கேயோ தூங்கிக் கொண்டிருந்துவிட்டு நம்மிடம் வந்து அப்படிப்பட்ட தப்பான வரலாற்றையெல்லாம் சொல்லியிருக்கிறானே!'' என்று தணிவான குரலில் கூறினார்.

உடனே பாளையக்காரர் கம்பீரமான தோற்றத்தோடு எழுந்து நின்று, ''பார்த்தீர்களல்லவா? இனியும் நீங்கள் என் வார்த்தையில் அவநம்பிக்கை கொள்ளமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். இங்கே இருக்கும் முப்பதினாயிரம் ரூபாயை நான் எடுத்துக்கொள்ளலாம் அல்லவா?'' என்று கூறி பணத்தை அடைய தமக்குள்ள அளவற்ற ஆவலை வெளிப்படுத்த, அப்போது சபாநாயகர் என்ன செய்வது என்பதை அறியாமல் தமது தலையைத் தடவிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தவராய் காணப்பட்டார்.

அப்போது சடேரென்று கதவை விசையாகத் திறந்து கொண்டு பூர்ணசந்திரோதயம் அவர்களுக்கு எதிரில் வந்து நிற்க, அவளுக்குப் பின்னால் பஞ்சண்ணாராவும் தொடர்ந்து எமகிங்கரன் போல வந்து நின்றான். ஆனால், ராமன் மாத்திரம் காணப்படவில்லை.

பூர்ணசந்திரோதயம் தனது உடம்பை ஒரு விலை உயர்ந்த வெல்வெட்டு அங்கியால் மறைத்துக்கொண்டிருந்தாள். ஆனாலும், அவளது வசீகரமான சுந்தர முகம் மாத்திரம் நன்றாக வெளியில் தெரிந்தது. கோபமும், ஆத்திரமுமே வடிவமாக அவள் வந்திருந்தாள் என்பது அவளது கம்பீரமான நிமிர்வி னாலும் முகத்தின் ஜ்வலிப்பினாலும் நன்றாகத் தெரிந்தது. அவள் ஒரு சக்கரவர்த்தினிபோல வந்துநின்ற வீரரசக்காட்சி ஒப்பற்ற அற்புதக் காட்சியாகவும் வசீகரம் நிறைந்ததாகவும் இருந்தது.

அந்த அழகிய பூங்கொடியும் பஞ்சண்ணாராவும் அவ்வாறு திடீரென்று அவ்விடத்தில் எதிர்பாரா விதமாகத் தோன்றியதைக்

காண, சாமளராவ் நீங்கலாக, மற்ற எல்லோரும் திடுக்கிட்டு ஸ்தம்பித்துப் போயினர். சாமளராவ் உடனே எழுந்து நின்றான். பாளையக்காரரது முகம் சடெரென்று மாறுபட்டு பயத்தினால் வெளுத்து விகாரப்பட்டுப் பிரேதக்களை அடைந்தது. தமது வார்த்தை எல்லாம் பொய்யென்று எப்படியும் ருஜுவாகி விடுமே என்ற பீதியும், பஞ்சண்ணாராவ் முதலியோர் தமக்கு எவ்விதமான தீங்கு செய்வார்களோ என்ற திகிலும் எழுந்து பாளையக்காரரை நடுக்குவித்தன. மகா விபரீதமான அந்த நிலைமையில் தாம் என்ன செய்வது என்பதை அறியாமல், பாளையக்காரர் கலங்கிக் குழம்பித் திருட்டு விழி விழித்தவராக நிற்க, அப்போது பூர்ணசந்திரோதயம் மிருதுவான குரலில் இனிமையாகப் பேசத்தொடங்கி, ''மகாராஜாவே! பிரபுக்களே! இதுவரையில் தாங்கள் எல்லோரும் வாதியின் கட்சியை மாத்திரம் கேட்டீர்கள். இப்போது கருணை புரிந்து பிரதி வாதியின் கட்சியைக் கேட்டருள வேண்டும்'' என்று நிரம்பவும் பணிவாகக் கூறினாள்.

உடனே இளவரசர் எழுந்து, ''அவசியம் கேட்கத்தான் வேண்டும். சபாநாயகர் அவர்களே! இந்த அம்மாள் சம்பந்தமாக உங்களுக்கு எவ்விதமான ஏமாற்றம் உண்டாகியிருந்தாலும், அதை எல்லாம் இப்போது பாராட்டாமல், இவர்கள் சொல்வதையும் கேட்டு எது நீதியோ அதைச் செய்தே தீரவேண்டும். இந்தக் கூட்டத்தில் நீங்கள் அக்கிராசனர் ஆகையால், உங்களுடைய சொந்த உணர்ச்சிகளையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு நடுநிலைமை வகித்து இந்த விசாரணையை முடிவுக்குக் கொண்டுவர நீங்கள் கடமைப்பட்டு இருக்கிறீர்கள்'' என்றார்.

அதைக்கேட்ட ஜெமீந்தார், ''அவசியம் நாம் அப்படித்தான் நடந்துகொள்ளவேண்டும்! எந்த விஷயத்திலும் பிரதிவாதியின் வாக்குமூலத்தைக் கேட்டுத்தான் தீர்மானம் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், ஒருதலைச் சார்பான நம்முடைய

தீர்மானத்துக்கு என்ன யோக்கியதை இருக்கப் போகிறது. இந்த விஷயத்தில் வாதியும் பயப்பட நியாயமில்லை. அவருடைய கட்சி உண்மையானதாக இருந்தால், அது எப்படியும் வெளியாகிவிடும்; அதைப் பற்றி நமது பாளையக்காரரும் கவலைப்பட வேண்டியதில்லை. முதலில் இந்த அம்மாளுக்கு மறைவான ஓரிடத்தில் ஓர் ஆசனம் போட்டு, உட்கார வையுங்கள். சாமளராவ்! உன்னுடைய எஜமானி அம்மாள் நிற்பது சரியல்ல. உன்னுடைய ஆசனத்தை எடுத்துக் கொண்டுபோய் அந்தக் கம்பத்தின் மறைவில் போடு'' என்று கூறினார். அந்தச் சமயத்தில் ஜெமீந்தார் பூர்ணசந்திரோதயத்தினது அற்புத அழகைக் கண்டு மதிமயங்கி உருகி உட்கார்ந்து போய்விட்டார் என்று சொல்வதே பொருத்தமாகும். தமது விஷயத்தில் அவள் செய்த கொடுமையையும் அவர் அப்போது மறந்து விட்டார். அவள் தம்மை வில்வைத்த நாற்காலியில் மாட்டி விட்டுத் தப்பித்துப் போனதையும் அவர் மறந்துவிட்டார். அவளது விஷயத்தில் பாளையக்காரர் அபாண்டமான பொய்யைக் கற்பித்துக்கொண்டு வந்து வாதிக்கிறார் என்ற உணர்ச்சியால் ஜெமீந்தாரினது மனம் இரங்கி அந்தப் பெண்ணரசியினது விஷயத்தில் தாம் எப்படிப்பட்ட உதவியா னாலும் செய்தே தீரவேண்டும் என்ற உறுதி செய்து கொண்டவ ராக இருந்தார்.

உடனே சாமளராவ், தனது நாற்காலியை எடுத்துக்கொண்டு போய்ப் பக்கத்தில் இருந்த ஒரு கம்பத்தின் மறைவில் போட, பூர்ணசந்திரோதயம் அவ்விடத்தில்போய் மறைவாக உட்கார்ந்து கொண்டாள்.

அதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த பாளையக்காரர் அன்றோடு தமது மானம் போய்விட்டது என்ற நிச்சயத்தை உணர்ந்தார். ஆனாலும், அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல், அவரது கட்சி நிஜமான கட்சியென்று எல்லோரும் நினைக்கும்படி முறுக்காக உட்கார்ந்து கொண்டிருந்தார்.

உடனே சபாநாயகர் பூர்ணசந்திரோதயம் இருந்த பக்கமாக திரும்பி, ''சரி; இனி பிரதிவாதி தம்முடைய கட்சியைத் தெரிவித்துக் கொள்ளலாம்'' என்று அன்போடு கூறினார்.

அதைக் கேட்ட பூர்ணசந்திரோதயம், ''இந்தப் பாளையக் காரர் என்மேல் சொன்ன அவதூறு எல்லாம் முற்றிலும் கட்டுப் பாடானது. அவர் சொன்ன வரலாற்றில் எள்ளளவும் நிஜமே கிடையாது. இப்படிப்பட்ட அபாண்டப் பழியை ஏற்படுத்தத் துணிந்த இந்த மனிதரோடு நேருக்குநேர் வாக்குவாதம் செய்ய எனக்கு இஷ்டமில்லை. நான் பேசுவதற்குப் பதிலாக என்னுடைய காரியதரிசியான சாமளராவ் என் கட்சியைப் பேசுவார். சபாநாயகர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்று நயமாகவும் பணிவாகவும் கூறினாள்.

சபாநாயகர், ''சரி; அவனே பேசட்டும். அதைப்பற்றி ஆட்சேபணை ஒன்றுமில்லை'' என்றார்.

உடனே சாமளராவ் எழுந்து, ''புதன்கிழமை தினம் சாயுங் காலம் வம்புலாஞ் சோலையில் என்னுடைய எஜமானி யம்மாளுக்கும், இந்தப் பாளையக்காரருக்கும் சந்திப்பு நேர்ந்த காலத்தில் இதோ நிற்கும் பஞ்சண்ணாராவ் அவ்விடத்திலிருந்து இவர்கள் பேசியதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார். இவர் சொல்லும் வரலாற்றைச் சபாநாயகர் முதலில் கேட்க வேண்டும்'' என்றான்.

உடனேசபாநாயகர் பஞ்சண்ணாராவினது வாக்குமூலத்தைக் கேட்க, அவன் சபாநாயகருக்கு ஒரு கும்பிடுபோட்டுக் குனிந்து பணிவாக நின்று, ''எஜமானருடைய உத்தரவுப்படி, எனக்குத் தெரிந்த சங்கதிகளையெல்லாம் நடந்தபடி சொல்லிவிடுகிறேன். இந்த அம்மாளும், நானும் என்னுடைய வேலைக்காரனான ராமனும் இதோ இருக்கும் கதவுக்குப் பக்கத்தில் கொஞ்ச காலமாக நின்று இங்கே பேசப்பட்டதையெல்லாம் கேட்டுக்

கொண்டுதான் இருந்தோம். புதன்கிழமையன்று சாயுங்காலம் நான் வம்புலாஞ் சோலைக்குப் போயிருந்தேன். என்ன காரணத்தினால் நான் அங்கே போனேன் என்பதை நான் இங்கே வெளியிட்டுச் சொல்லமுடியாது'' என்று கூறி மிட்டாதாரையும், இனாம்தாரையும் கூர்ந்து பார்த்தவனாய் மேலும் பேசத் தொடங்கி, "அப்போது அவ்விடத்தில் நம்முடைய பாளையக் காரரும் இந்த அம்மாளும் சந்தித்துப் பேசினார்கள். ஆரம்பத்தி லிருந்து நான் ஒரு புதருக்குப் பக்கத்திலிருந்து இவர்களுடைய வாக்குவாதத்தைக் கவனித்துக் கொண்டே இருந்தேன். அவ்விடத்தில் ஹேமாபாயி வரவே இல்லை. அதற்கு முன்னும் பின்னும் அவள் அவ்விடத்தில் காணப்படவே இல்லை. பாளையக்காரர் ஓர் அழகான கிளியைக் கையில் வைத்துக் கொண்டு குருவிக்காரனைப் போலக் காணப்பட்டதன்றி அதைக் காட்டும் வியாஜத்தை வைத்துக் கொண்டு இந்த அம்மாளிடத்தில் பேச்சுக்கொடுக்க, இந்த அம்மாள் அந்தக் கிளியைப் பார்த்து ஆசைப்பட்டு அதை விலைக்குக் கேட்டார்கள். இவர் அதை இனாமாகக் கொடுத்து விடுவ தாகவும், ஆனால், தாம் ஒவ்வொரு நாளும் வந்து அந்தக் கிளியைப் பார்த்துவிட்டு வர உத்தரவு கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார். இந்த அம்மாள் அதற்கு இணங்கவில்லை. அதிலிருந்து இருவருக்கும் பலமான வாக்குவாதம் நடந்தது. இவர் அம்மாளிடத்தில் கபடமான வார்த்தைகளையே பேசினார். அம்மாள் இவரைக் கொஞ்சமும் மதிக்காமல் அலட்சியமாகவும் அருவருப்பாகவுமே பதில் சொன்னார்கள். அதன்பிறகு, இவர் தம்முடைய சிநேகிதர்கள் சிலர் சேர்ந்து இந்த அம்மாளை வெல்வதாகப் பந்தயம் வைத்திருப்பதாகவும், தாம் இன்னார் என்றும் தாம் அதில் சம்பந்தப்படவில்லை என்றும், தாம் இந்த அம்மாள் பேரில் மோகம் கொண்டிருப்பதாகவும், தமக்கு இணங்கி வந்தால், மற்றவர்கள் எவ்விதக் கெடுதலும் செய்யாமல் தாம் காப்பாற்றுவதாகவும் இவர் சொன்னார். அம்மாள் உடனே ரௌத்திராகாரமான கோபம் கொண்டு

இவரை இழிவாகப் பேசிவிட்டு அவ்விடத்தைவிட்டுப் போக முயற்சித்தார்கள். இவர் வழி மறித்து அம்மாளைப் பலவிதமாக பயமுறுத்தினார். அம்மாள் தம்முடைய வழிக்கு வராவிட்டால், தாம் பலவந்தம் செய்யப்போவதாகவும் பொய்க் கடிதங்கள் தயாரித்து இந்த அம்மாளுடைய கற்பைக் களங்கப்படுத்தத் தக்க ஏற்பாடுகளைச் செய்யப் போவதாகவும் சொல்லி இவர் பலாத்காரத்தில் இறங்கப்போன சமயத்தில் நான் குரல் கொடுத்துக் கொண்டு வெளிப்பட இவர் பயந்து கொஞ்சநேரம் அயர்ந்து நின்று விட்டார். உடனே இந்த அம்மாள் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப் போய் விட்டார்கள். அதன்பிறகு நான் இவரிடத்தில் தந்திரமாகப் பேச்சுக் கொடுத்ததில், இவர் எனக்கு லஞ்சம் கொடுப்பதாகவும், இந்த அம்மாளைப் பற்றிய விவரங்களையும் அறிந்து வந்து தெரிவிக்கும்படியாகவும் சொல்லி, எனக்கு ஐந்து ரூபாய் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு நான் இவர் சொன்னபடி செய்வதாக உறுதிமொழி சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இதுதான் அன்றைய தினம் நடந்த வரலாறு; நான் சொன்னது எல்லாம் தப்பென்று பாளையக்காரர் எனக்கு எதிரில் வேண்டுமானால் சொல்லட்டும்'' என்று கூறிய வண்ணம் முறைப்பாகப் பாளையக்காரரது முகத்தை உற்றுப் பார்த்தான்.

அப்போது பாளையக்காரர் தமது ஆசனத்தைவிட்டு எழுந்திருக்கவும், பஞ்சண்ணாராவ் சொன்னது எல்லாம் பொய் என்று சொல்லவும் விரும்பினார். ஆனால், அவரது உடம்பு தடுமாறியது; வாய் குழறிப் போயிற்று. ஆகையால், அவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்ட திருடன்போல விழித்து மேலும் கீழும் பார்த்தவராய் இருக்க, உடனே சபாநாயகர், ''போதும் விசாரணை! பஞ்சண்ணா! மேல் விவரங்கள் ஒன்றும் வேண்டாம். உண்மை இன்னது என்பது நன்றாகத் தெரிந்து போய் விட்டது. நடந்துபோன இந்த அருவருப்பான விஷயங் களைத் திரும்பவும் ஒருதரம் சொல்லி, இந்த அம்மாளுடைய

மனசைப் புண்படுத்துவது மரியாதையல்ல'' என்று கூற, உடனே இளவரசர், ''ஆம். ஆம். வாஸ்தவந்தான்'' என்று கூறி ஆமோதித்தார்.

அந்தச் சமயத்தில் மெத்தைப் படியின் வழியாக யாரோ சிலர் தடதடவென்று ஏறிவந்த ஓசை உண்டாகவே, அங்கிருந்த எல்லோரது கவனமும் அந்த ஓசையில் சென்று லயித்துப் போனது. எல்லோரும் வாசற்படியைப் பார்த்தவண்ணம் இருக்க, அடுத்த நிமிஷத்தில் ஹேமாபாயி முன்னும் ராமன் பின்னுமாக அங்கே வந்து சேர்ந்தனர். அவர்களைக் கண்டவுடனே பாளையக்காரர் பெருத்த வேங்கைப்புலி சிங்கம் முதலிய கொடிய காட்டு விலங்குகளைக் கண்டு கிலி கொள்பவர் போலப் பெருந் திகில்கொண்டு ஸ்தம்பித்து அப்படியே நாற்காலியில் சாய்ந்துவிட்டார். தமது ஏற்பாடு முழுதும் தலைகீழாக மாறிக்கெட்டுப் போனதையும், தாம் எவ்விதத் திலும் வாயைத் திறக்க மாட்டாமல் பூர்ணசந்திரோதயம் செய்து விட்டதையும் கண்டு அளவற்ற வெட்கமும், துக்கமும், அவமானமும் அடைந்தவராய்த் தாம் அன்றையதினம் செய்துள்ள ஏற்பாடுகளைப் பூர்ணசந்திரோதயம் எப்படியோ தெரிந்து கொண்டு வெகு சுலபத்தில் தன்னை வென்று விட்டாளே என்ற பிரமிப்பும் கலக்கமும் அடைந்தவராய்க் கோழைத்தனத்தினால் முற்றிலும் மேற்கொள்ளப்பட்டவராய்க் குன்றிப்போய் உட்கார்ந்து விட்டார்.

ஹேமாபாயியோ அவ்விடத்தில் கூடியிருந்த மகா சிரேஷ்டமான அத்தனை மனிதர்களையும் பார்க்க நடுநடுங்கிப் போய் ஸ்தம்பித்து நின்று விட்டாள். அந்தச் சமயத்தில் ராமன் பஞ்சண்ணாராவின் காதண்டை போய்த் தணிவான குரலில், ''நான் ஒரு போலீஸ் ஜெவானை அழைத்துக்கொண்டு போய் வைத்துக்கொண்டு பயமுறுத்தாதிருந்தால், ஹேமாபாயி வந்தே இருக்கமாட்டாள்'' என்றான். அடுத்த நிமிஷத்தில் ஹேமாபாயி சபாநாயகரான தனது முக்கிய போஷகரை நோக்கி,

உங்களோடு வருவது அவர்களை அவமரியாதைப் படுத்தியது போல் ஆகும். அதுவுமன்றி, இந்த விருந்துக்காக, நான் பலரிடத்திலுமிருந்து தங்கத்தட்டுகள், வெள்ளித் தட்டுகள், பேலாக்கள், இலைகள் முதலிய விலை உயர்ந்த சாமான்களை எல்லாம் இரவல் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன். அன்னிய ருடைய சொத்துக்களை எல்லாம் நீங்கள் எடுத்துக்கொண்டு போவதற்குச் சட்டம் இடம்கொடுக்காது. ஆகையால், நீங்கள் நாளையதினம் காலையில் வந்தால், அதற்குள் நான் எங்கேயாவது பணம் சேகரித்துக் கொடுத்து விடுகிறேன். வேறுவித சிரமம் இல்லாமல் நீங்கள் பணத்தை வாங்கிக் கொண்டு போகலாம். அதுவும் அல்லாமல், இது ராத்திரிக் காலம். இப்போது ஜெப்தி செய்வதும், கைது செய்வதும் சட்ட விரோதம். ஆகையால், நீங்கள் போய்விட்டு நாளைக்கு வாருங்கள்'' என்றார்.

அதைக்கேட்ட அமீனா, ''இந்த வாரண்டு பிறந்து ஒரு மாத காலமாகிறது. பகலில் நீர் கண்ணில் படாமல் ஒளிந்து கொண்டே இருந்து வருகிறீர். ஆகையால், நியாயாதிபதி ராத்திரியில் உம்மைப் பிடிப்பதற்கு உத்தரவு கொடுத்திருக்கிறார். அந்த உத்தரவு இதோ இருக்கிறது பாரும். அதுநிற்க, இப்போது இந்த வீட்டிலுள்ள சொத்துக்களையெல்லாம் எங்கள் கடமைப்படி நாங்கள் ஜெப்தி செய்தே தீரவேண்டும். இந்தச் சொத்துக்களில் அன்னியருடைய சொத்து ஏதாவது இருக்குமானால், அவர்கள் நியாயாதிபதியினிடம் போய் அந்தச் சொத்து தங்களுடையது என்று ருஜூப்படுத்தினால், உடனே அது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுப் போகும். அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டியதில்லை. உம்மைக் கைது செய்வதிலும் இன்னொரு விஷயம் இருக்கிறது. இப்போது நாங்கள் ஜெப்தி செய்யப் போகும் சொத்துக்களில் எதெது அன்னியரிடம் இரவல் வாங்கப்பட்டதோ அவைபோக, மிகுதியிருக்கும் சொத்துக் களின் பெறுமானம் முப்பதினாயிரத்துக்கு மேலே இருக்கு மானால், நாங்கள் உம்மைக் கைது செய்யப் போகிறதில்லை. சொத்துக்களே எங்களுக்கு போதுமானவை'' என்றான்.

அதைக்கேட்ட பாளையக்காரர், அதற்குமேல் தாம் எவ்விதமான ஆட்சேபணை சொல்வது என்பதை உணராதவராய் இரண்டொரு நிமிஷம் தத்தளிக்க, அப்போது, அவருக்குப் பின்னால் வந்து நின்ற பஞ்சண்ணாராவ் முன்னால் வந்து, "அமீனா ஐயா! மெத்தையின்மேல் இளவரசரும் இன்னம் சில பெரிய மனிதர்களும் இருக்கிறார்கள். அவர்கள் இருக்கும்போது நீங்கள் ஜெப்தி செய்வதோ சிறைப்படுத்துவதோ மரியாதைப் படாது. ஆகையால், இந்த ஐயாவை இரண்டொரு நிமிஷ நேரம் விடுங்கள். இவர் மேலே வந்து விஷயத்தை ஒருவிதமாக வெளிப்படுத்தினால், அவர்கள் எல்லோரும் உடனே வெளிப் பட்டுப் போய்விடுவார்கள். அதன்பிறகு உங்களுடைய சட்டப் படி நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். இவர் ஒருவேளை பின்பக்கமாக ஓடிப்போய் விடுவாரோ என்ற பயம் இருக்கும் பட்சத்தில் உங்களில் யாராவது ஒருவர் மேலே வந்து இவரைப் பார்த்துக் கொண்டிருக்கலாம்" என்றான்.

அதைக்கேட்ட அமீனா, இளவரசர் இருப்பதைக் கருதி, அவன் சொன்னதை ஒப்புக்கொண்டு, தான் மாத்திரம் மேலே வருவதாகச் சொன்னான். உடனே பஞ்சண்ணாராவ், சாமண்ணாராவ், பாளையக்காரர், அமீனா ஆகிய நால்வரும் மேலே சென்றனர். பாளையக்காரர் இருதலைக்கொள்ளி எறும்பு போலத் தவிக்கலானார். மேலே இருந்த தமது நண்பர்களிடம் போவதற்கும் அவருக்குப் பெருத்த திகிலாக இருந்தது. கீழேயே இருந்து அமீனாக்களுக்கு உத்தரம் சொல்வதும் அபாயகரமாக இருந்தது. ஆகையால், அவர் கரைகடந்த கலவரமடைந்து மெய் மறந்தவராய்ப் பைத்தியக்காரனைப்போல விழித்துக்கொண்டு மேலே போய்ச் சேர்ந்தார். பாளையக்காரர் திடீரென்று கீழே அழைக்கப்பட்டதன் காரணம் என்ன என்பதை அறிய இளவரசர் முதலியோர் நிரம்பவும் ஆவல்கொண்டதைக் கண்ட பஞ்சண்ணாராவ் தான் கீழே இறங்கிப்போய் விஷயத்தை அறிந்து வருவதாகச் சொல்லிவிட்டு வந்தான். ஆகையால்,

அவனும் மற்ற மூவரும் மேலே வந்தவுடனே எல்லாரும் பஞ்சண்ணாராவின் முகத்தைப் பார்த்தனர்.

உடனே பஞ்சண்ணாராவ் அங்கிருந்த எல்லோரையும் பார்த்து நிரம்பவும் பணிவாகப் பேசத் தொடங்கி, ''எஜமான்களே! நம்முடைய பாளையக்காரரை யார் கூப்பிட்டார்கள், எதற்காகக் கூப்பிட்டார்கள் என்ற சங்கதியைத் தெரிந்துகொள்ள, தாங்கள் எல்லோரும் ஆசைப்படுவதாகத் தெரிகிறது. இதோ எங்களோடு வந்திருக்கும் மனிதர் கச்சேரி அமீனா. இவரும் இன்னம் ஐந்தாறு சிப்பந்திகளும் இந்த வீட்டிலுள்ள சொத்துக்களை எல்லாம் ஜெப்தி செய்து பாளையக்காரரைக் கைதுசெய்து அழைத்துக் கொண்டு போக வந்திருக்கிறார்கள். பாளையக்காரர் நாட்டுக்கோட்டைக் கதிரேசன் செட்டியாருக்கு முப்பதினாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பு ஆகியிருக்கிறதாம். பாளையக்காரர் பகலில் அகப்படாமல் ஒளிந்து கொண்டிருந்ததால், ராத்திரியில் வந்து பிடிக்கும்படி கச்சேரியில் உத்தரவு பிறப்பித்து இருக்கிறார்களாம். அதை நிறைவேற்றும் பொருட்டு, இவர்கள் இப்போது வந்தார்களாம். இவர்கள் தங்களுடைய அலுவலை நிறைவேற்றுமுன் எஜமானர்கள் இந்தக் கூட்டத்தைக் கலைத்துவிட்டு இவ்விடத்தை விட்டுப் போய்விடுவதே ஒழுங்கு. அதுவுமன்றி, இவ்வளவு பாடுபட்டு இப்படிப்பட்ட பெருத்த விருந்தைத் தயாரித்து இந்தக் கடுமையான பந்தயத்தில் நம்முடைய பாளையக்காரர் ஜெயம் பெற்றிருப்பதால், இவருக்குத் தக்க வெகுமதி கொடுத்து அனுப்ப வேண்டும். அந்த வெகுமதியை உங்களுடைய அனுமதியில்லாமல் நானே கொடுப்பதைப்பற்றி எஜமான்கள் என்மேல் கோபம்கொள்ளக் கூடாது'' என்று கூறியவண்ணம் சடேரென்று பாளையக்காரர் மீது பாய்ந்து, அவரது முகத்தில் மாட்டுக்கொம்புகள் போல நீளமாக வளர்ந்திருந்த அடர்த்தி யான மீசையைத் தனது இடது கையால் இரும்புப் பிடிபோல இறுகப் பிடித்துக் கொண்டு, வலது கையால் அவரது கன்னத்தில் பளீர்பளீரென்று பன்முறை அறைந்து, முஷ்டியால் ஏழெட்டு

உதைகள் கொடுத்து, "போதுமா வெகுமதி? போதுமா பலகாரம்? இன்னம் கொஞ்சம் சாப்பிடும். வயிறு நிறைய வில்லை. இதோ எடுத்துக் கொள்ளும் சுடச் சுடப் பலகாரம்" என்று கூறிப் புரளிசெய்தவண்ணம் பாளையக்காரரை மர்த்தனம் செய்து கீழே தள்ளி அங்குமிங்கும் போட்டுப் புரட்டி மேன்மேலும் உதைத்துத் துதைக்க, பாளையக்காரர், "ஐயோ! அப்பா! போதும், போதும்; இனிமேல் அடித்தால் உயிர் போய்விடும்; புத்தி வந்தது. போதும் விட்டுவிடு. இனி நான் பூர்ணசந்திரோதயத்தின் ஜோலிக்கே போவதில்லை. அவளைச் சொப்பனத்திலும் நினைப்பதில்லை. வேண்டாம்; வேண்டாம். ஐயோ! மயக்கம் வருகிறதே! அடிக்காதே, செத்துப் போய்விடுவேன் போலிருக்கிறது" என்று அலறிக் கூக்குரலிட்டுக் கதறிப் புலம்ப அங்கிருந்த சபாநாயகர் முதலிய எல்லோரும், பஞ்சண்ணாராவ் செய்தது தக்க காரியம் என்று ஒருவகையில் திருப்தி அடைந்தனர் ஆனாலும், பாளையக்காரர் படும் வேதனையையும் அவரது அழுகையையும் கண்டு பெரிதும் இரக்கம்கொண்டு, "பஞ்சண்ணாராவ்! போதும் போதும் விட்டுவிடு. விட்டுவிடு. பெரிய மனிதர். ஏதோ தெரியாமல் இந்தத் தவறில் இறங்கிவிட்டார். இனி புத்தி வந்துவிட்டது என்று அவரே ஒப்புக்கொள்ளுகிறார். போதும் நிறுத்து" என்று கூற, உடனே பஞ்சண்ணாராவ் கடைசியாக ஓங்கிப் பின்புறத்தில் ஓர் உதை கொடுத்து, "அமீனா ஐயா! இதோ உம்முடைய கைதியை அழைத்துக்கொண்டு கீழே போம். இங்கே இருக்கும் எஜமான்கள் எல்லோரும் இந்தக் கூட்டத்தைக் கலைத்துவிட்டுப் போன பிறகு நீங்கள் ஜெப்தி செய்து கொள்ளலாம்" என்று கூறியவண்ணம், பாளையக்காரரை விசையாகத் தூக்கி எறிய அவர், "ஐயோ! செத்தேன்!" என்று கூறியவண்ணம் நுரைதள்ளிய வாயோடு வாசற்படியண்டை போய் விழுந்தார். உடனே அமீனா அவருக்குப் பின்னால் சென்று, அவரைத் தூக்கி நிறுத்தி நடத்தி அழைத்துக்கொண்டு கீழே இறங்கிப் போய்விட்டான்.

உடனே சபாநாயகரான ஜெமீந்தார் மற்ற எல்லோரையும் பார்த்து, “சரி; இனிமேலும் நாம் இங்கே இருந்து சம்பாஷித்துக் கொண்டிருப்பது சரியல்ல. அதுவுமன்றி, நம்மைப் போன்றவர்கள் எந்த விஷயத்தையும் கிரமப்படி விசாரித்து நீதி செலுத்தக் கொஞ்சமும் திறமையற்றவர்கள்; குற்றவாளிக்குத் தக்கபடி சுருக்கமான வழியில் தண்டனை செய்வித்து சரியானபடி நற்புத்தி புகட்டுவதில் நம்முடைய பஞ்சண்ணா ராவைப் போன்ற பாமர ஜனங்களே நல்ல திறமை வாய்ந்தவர்கள். நாம் ஆடம்பரமாக நாற்காலி மேஜைகளைப் போட்டுக்கொண்டு கம்பீரமாக இருந்து வெகுவெகு நீளம் விசாரணையை நடத்தி ஏதோ ஒரு முடிவைக் காகிதத்தில் எழுதிவிடுகிறோம். நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது வழக்குகளில் அந்த முடிவு நிறைவேற முடியாமலே குற்றவாளிகள் தப்பித்துக்கொண்டு போய்விடுவார்கள். உதாரணமாக நாம் இப்போது செய்த விசாரணையில் பாளையக்காரர் செய்தது சுத்தத் தவறு என்பது நமக்குத் தெரிந்திருந்தாலும் நாம் அதை வெளியில் சொல்லமாட்டாமல் இதை எப்படித் தீர்மானிக்கிறது என்று யோசனை செய்து தவித்துக் கொண்டிருந்தோம். நம்முடைய பஞ்சண்ணாராவோ, பாளையக்காரர் செய்தது தவறு என்பதை உணர்ந்து, அவருக்கு வெகுமதி இல்லாமல் செய்ததோடு அவர் செய்த அக்கிரமக் காரியத்துக்குத் தக்கபடி கடுமையான தண்டனையும் கொடுத்து, அவர் இனி எப்போதுமே திருந்தும்படி செய்து விட்டான். படித்த மனிதர்களைக் காட்டிலும் படிக்காத பாமர ஜனங்களிடத்திலே தான், நியாயம் இன்னது அநியாயம் இன்னது என்பதைச் சூட்சுமமாகத் தெரிந்துகொண்டு அதற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளும் பகுத்தறிவும் அனுபவ ஞானமும் அதிகமாக இருக்கின்றன. வெள்ளிக்கிழமை ராத்திரி ஒன்பதுமணிக்கு மேல் பதினோரு மணிக்குள் இந்த அம்மாள் சில முக்கியமான காரணங்களைப் பற்றி என்னுடைய மாளிகைக்கும் இளவரச ருடைய அரண்மனைக்கும் வந்திருந்து விட்டுப் போயிருக்கி

றார்கள். அந்தச் சங்கதியை அறிந்து கொள்ளாமல் பாளையக்காரர் முழுமோசமாக இந்த அபாண்டப் புளுகைச் சொல்ல வந்ததுதான் என்னால் சகிக்கமுடியாததாக இருக்கிறது. இந்த அம்மாள் உண்மையிலேயே எங்களுடைய ஜாகைக்கு வந்திருந்தும், இந்தப் பாளையக்காரர் சொன்னதுபோன்ற பொய்யைச் சொல்ல, எங்களுக்கு மனம் துணியவில்லை. இவ்வளவு வயசும், உலக அனுபவமும் அடைந்த பாளையக்காரர் இந்த விஷயத்தில் இப்படி மதியீனமாக நடந்து கொள்வார் என்று நான் கனவிலும் நினைக்கவே இல்லை. அது நிற்க இந்த அம்மாள் விஷயத்தில் பாளையக் காரர் மாத்திரமல்ல; நாம் அறுவருமே பெருத்த தவறுதல் செய்துவிட்டோம். இவர்களுடைய உண்மையான யோக்கியதையை உள்ளபடி தெரிந்து கொள்ளாமல் கேவலமாக மதித்து நாம் இந்தப் பந்தயத்தை ஏற்படுத்தியதே பெருத்த குற்றம். அதனால் இந்த அம்மாளுக்குப் பலவகைப்பட்ட மனவேதனையும், தேகப் பிரயாசையும், பழிப்பும் ஏற்பட்டன. ஆகையால், நாம் எல்லாரும் நம்முடைய ஆழ்ந்த விசனத்தையும், அனுதாபத் தையும் வெளியிட்டு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோம் என்று நினைக்கிறேன். அதுவுமன்றி, இப்போது இங்கே இருக்கும் முப்பதினாயிரம் ரூபாயை நாம் வேறு எந்த வகையில் உபயோகப்படுத்துகிறது என்பது தோன்றாமல் இருப்பதால், நாம் எல்லோரும் செய்த பெருத்த தவறுக்கு ஓர் அபராதமாக இந்தத் தொகையை நாம் இந்த அம்மாளுக்கே சேர்த்துவிடலாம் என்று நினைக்கிறேன்'' என்றார்.

அதைக்கேட்ட இளவரசர் முதலிய எல்லோரும், ''ஆம்; ஆம் நீங்கள் சொல்வதே சரி; அதுதான் கிரமம்; அப்படியே செய்து விடுங்கள்'' என்று கூறி அதை ஏற்றுக்கொள்ள, உடனே சபாநாயகர் எழுந்து சாமளராவைக் கூப்பிட்டு அவனிடத்தில் முப்பதினாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள எல்லா நோட்டுக்

களையும் எடுத்துக்கொடுத்து, ''இதோ இதை நீயே எடுத்துக் கொண்டு போய், இந்த அம்மாளுடைய ஜாகையில் சேர்த்துவிடு. நான் முடிவாக இன்னொரு முறை அந்த அம்மாளிடத்தில் மன்னிப்புக்கேட்டுக்கொண்டு இந்தக் கூட்டத்தை இதோடு கலைக்கிறேன்'' என்று கூறி முடித்தார். உடனே பூர்ணசந்தி ரோதயம் எழுந்து தனது விஷயத்தில் அவர்கள் எல்லோரும் செய்த நியாயமான தீர்மானத்தைக் குறித்தும், தனது விஷயத்தில் அவர்கள் காட்டிய மரியாதைக்கும் தனது ஆழ்ந்த நன்றியறித லையும் வணக்கத்தையும் வெளிப்படுத்தியபின் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு வெளியில் செல்ல, சாமளராவ், பஞ்சண்ணாராவ், ராமன் ஆகிய மூவரும் அவளைத் தொடர்ந்து பின்னால் சென்றனர். வாசலில் ஆயத்தமாக நின்று கொண்டிருந்த வண்டியில் சாமளராவும் பூர்ணசந்திரோதயமும் ஏறிக்கொண்டு மற்ற இருவரையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டு இளவரசரது அரண்மனைக்கு வண்டியை ஓட்டிக்கொண்டு போகச் செய்தவர்களாய் மட்டுக்கடங்கா மகிழ்ச்சியோடு சம்பாஷிக்கத் தொடங்கினர்.

## 29-வது அதிகாரம்

# ஜெகஜால வித்தை

கோலாப்பூரில் கலியாணசுந்தரம் அடைபட்டிருந்த சிறைச்சாலை அறைக்குள் சுவரைக் குடைந்துகொண்டு வந்து சேர்ந்த இந்திராபாயி என்ற யௌவனப் பெண்பாவை தனக்கு மயக்கம் வருகிறது என்று கூறி அந்த வடிவழகனைப் பிடித்து இறுகக் கட்டியணைத்துக் கொள்ள, அவன் என்ன செய்வது என்பதை அறியாதவனாய் இரண்டொரு நிமிஷநேரம் ஓய்ந்து சும்மா நின்று விட்டான் என்று சொன்னோம் அல்லவா? அப்போது அந்த யௌவனப் புருஷனது மனம் பட்டபாடு சொல்லில் அடங்காததாக இருந்தது. அவனது மனதில்

பலவிதமான சந்தேகங்களும் எண்ணங்களும் தோன்றி வதைக்கலாயின. தான் அதற்குமுன் பழக்கம் இல்லாத அன்னிய புருஷன் என்ற எண்ணமும் கூச்சமும் பயிர்ப்பும் சிறிதுமின்றி அந்தப் பெண் தன்னை அவ்வளவு ஆவலோடு கட்டிக் கொண்டது, அவனுக்குச் சிறிதும் நம்பக்கூடாத கனவின் காட்சி போல இருந்தது. தன்னிடத்தில் அவள் காதல் கொண்டிருந்தா லன்றி, அவள் அவ்வாறு லஜ்ஜையில்லாமல் துணிந்து நடப்பது சாத்தியம் இல்லாத விஷயம் என்ற எண்ணம் அவனது மனதில் தோன்றிவிட்டது. ஆனாலும், இன்னொரு சந்தேகமும் உண்டாயிற்று. அவள் அரும்பாடுபட்டு அந்தச் சுவரைக் குடைந்துகொண்டு இப்பால் வந்ததனாலும், மறுபடியும் திரும்பித் தனது அறைக்குப் போய்விட முயன்றதனாலும், நிரம்பவும் தளர்வடைந்து களைத்துப் போயிருக்கக் கூடும் என்ற எண்ணமும் உண்டாயிற்று. அதுவுமன்றி, அந்த நிலைமையில் தாங்கள் இருவரும் தனியாக அதே அறையில் இருந்தால் மறுநாள் காலையில் அந்த விஷயம் போலீஸ் கமிஷனருக்குத் தெரிந்துபோகும். ஆதலால், தான் சுவரைக் குடைந்து தப்பித்துப்போக முயன்ற குற்றத்துக்குத் தனக்கு ஏதேனும் கொடிய தண்டனை கிடைக்குமோ என்ற பிரமாதமான திகில் உண்டாகி இருப்பதும் சகஜம் என்ற நினைவும் எழுந்தது. அதுவுமன்றி, அவள் உண்மையிலேயே பதிவிரதா ஸ்திரீயாக இருந்து, தான் அந்த இரவு முழுதும் ஒரு யௌவனப் புருஷனோடு தனியாக இருந்ததைக் கருதி, அன்னியர் தனது கற்பைப் பற்றி ஏதேனும் தவறான அபிப்பிராயம் கொண்டு விடப் போகிறார்களே என்று பெரிதும் அஞ்சுகிறவளாக இருந்தாலும் இருக்கலாமென்ற ஐயமும் தோன்றியது. ஆகவே, தனது தேகப்பிரயாசையோடு, மேலே கூறப்பட்டபடி மனதில் தோன்றிய திகிலும் அச்சமும் ஒன்றுகூடி, அவளை ஒரே காலத்தில் வருத்துவதால், நிரம்பவும் மெல்லிய தன்மையுடைய அந்த யௌவன ஸ்திரீ சகிக்கமாட்டாத மயக்கமும் கலக்கமும் அடைந்து, தன்னை மறந்து அவ்வாறு கட்டியணைத்துக்

கொள்வதும் சகஜமாக நேரக்கூடுமோ என்ற சந்தேகமும் நமது உத்தமகுணப் புருஷனது மனதில் பட்டது. ஆகையால், அவன் எதையும் நிச்சயமாக நிர்ணயிக்க மாட்டாதவனாய்த் தாமரை இலைத் தண்ணீர் துளி போலத் தத்தளித்து இரண்டொரு நிமிஷநேரம் ஸ்தம்பித்து ஊமை போல நின்றான். அவளது தேகம் தன்மீது உராய்வதும் அவள் தன்னை இறுகக்கட்டிக் கொள்வதும் அவனது மனதில் பலவித விகாரங்களை எழுப்பின. ஆகையால் அப்படிப்பட்ட அபாயகரமான நிலைமையில் தான் நீடித்து நிற்பது தவறாக முடியும் ஆதலால் தான் தன்னை விடுவித்துக்கொண்டு விலகி நிற்க வேண்டும் என்ற ஒருவிதமான மனவுறுதியை அவன் கொண்டான் ஆனாலும், தான் திடீரென்று அவளை விடுவதனால், அவள் மயங்கிக் கீழே விழுந்து தலையை உடைத்துக் கொள்ளப் போகிறாளோ என்ற எண்ணத்தினாலும் கவலையினாலும் மேற்கொள்ளப்பட்டவனாய், அவன் அவளது பிடிக்குள் அகப்பட்டபடியே நின்றான். அந்தப் பெண் நிரம்பவும் அபாயகரமான தேக ஸ்திதியில் இருக்கையில், தனது மனம் அவள் விஷயத்தில் அநுதாபம், இரக்கம், அவளை எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்ற ஜீவகாருண்யம் ஆகிய மூன்று பரோபகாரமான உணர்ச்சிகளைத் தவிர வேறு எவ்விதமான துர்விகாரங்களையும் கொள்ளத் தான் இடம் கொடுக்கக் கூடாது என்ற ஓர் உறுதியைக் கொண்டவனாய் அவன் சிறிது நேரம் திடமாக இருந்தான். ஆனாலும், அவள் மேன்மேலும் செய்த பலவித ஸாகஸங்களைக் காணக் காண, அந்த நிலைமை, அவனால் சிறிதும் பொறுக்க முடியாத பரம சங்கடமான நிலைமையாக இருந்தது. ஆகவே, அவன் அவளைப் பார்த்து, "அம்மா இந்திராபாயி! உன்னுடைய உடம்பு என்ன செய்கிறது? ஏன் இப்படி என்னைப் பிடித்துக் கட்டிக் கொள்ளுகிறாய்? எதற்காவது பயந்து இப்படிச் செய்கிறாயா? இன்னம் பொழுது விடிய வெகு நேரம் இருக்கிறது. அதற்குள் நீ உன்னுடைய அறைக்கு எப்படியும் போய்விடலாம். நீ கொஞ்சநேரம் இந்தப்

படுக்கையில் படுத்துக் கொள். இன்னம் கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டுக் கால்நாழிகை நேரம் படுத்துக் களைப்பாறு. அதற்குள் நான் கடப்பாறையை எடுத்து இந்தத் துளையை இன்னம் கொஞ்சம் பெரியதாகச் செய்கிறேன். அதற்குமேல் நீ அப்பால் போவது சுலபமாக இருக்கும். இப்போது பாராக்காரன் கீழே போயிருப்பான். இந்த ஆபத்துச் சமயத்தில் நாம் சட்டத்தைப் பொருட்படுத்தக் கூடாது. இருளில் இருப்பது உனக்கு பயமாக இருப்பதால், நான் விளக்கைக் கொளுத்தி, அதன் பிரகாசம் வெளியில் தெரியாமல் மறைத்து வைக்கிறேன். நீ என்னைவிட்டு மெதுவாக இந்தப் படுக்கையில் படுத்துக் கொள்'' என்று நயமாகவும் உருக்க மாகவும் கூறி அவளது பிடியிலிருந்து மெதுவாகத் தன்னை விடுவித்துக் கொள்ள முயற்சித்தான்.

அதைக்கேட்ட அந்த மடந்தை, ''ஓகோ! நான் என்னுடைய முகமூடியை எடுத்து விட்டேன் ஆகையால், விளக்கைக் கொளுத்தி, என்னுடைய முகம் எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும் என்ற ஆசைபோலிருக்கிறது? உங்களுடைய ஆசை எப்படிப்பட்டதாக இருந்தாலும், இனி நான் அதைப் பூர்த்தி செய்யாமலிருக்க முடியுமா? ஒருநாளும் முடியாது. இந்த முகத்தை நான் இனி எந்தப் புருஷருக்கும் காட்டக் கூடாது என்று உறுதி செய்து கொண்டேன். ஆனாலும் நான் உங்களுக்கு எப்படியும் இதைக் காட்டத்தான் போகிறேன். இன்னம் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். விளக்கை இப்போது கொளுத்தினால், அதன் பிரகாசம் பளிச்சென்று வீசி, என் மயக்கத்தை அதிகப்படுத்தும்; என்ன காரணத்தினாலேயோ என் மனசில் தாங்கமுடியாத ஒரு பெருத்த கிலி உண்டாகி, என்னை நடுக்குவிக்கிறது. ஆகையால், நீங்கள் என்னை விடாமல் அழுத்திப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்றாள்.

அவளது சொற்களைக் கேட்ட கலியாணசுந்தரம் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த குழப்பமும், கலவரமும் அடைந்தான்.

அதுவரையில் விளையாட்டாகப் பேசாத அந்தப் பெண் அப்படிப்பட்ட துன்பகரமான நிலைமையில் தனது முகத்தைப் பற்றிச்சொன்ன சொல், முற்றிலும் விந்தையாகத் தோன்றியது. அவள் தனது மனதில் ஏதோ கபடமான ஆழ்ந்த கருத்தை மறைத்து வைத்துக்கொண்டு அவ்வாறு பேசுகிறாள் என்று ஒருவாறு சந்தேகித்த நமது யெளவன வீரன் அவளை நோக்கி, ''பெண்ணே! இந்திராபாயீ! நீ இவ்வளவு நேரம் என்னோடு பழகியதிலிருந்து என்னுடைய மன உறுதியும் நிர்ணயமும் எப்படிப்பட்டவை என்று நீயே உணர்ந்து கொண்டிருப்பாய். அப்படி இருந்தும் நான் விளக்கைக் கொளுத்த எண்ணுவது உன் முகத்தைப் பார்க்கவேண்டும் என்ற கருத்தோடு என்று நீ சொல்வது என் மனதை நிரம்பவும் புண்படுத்துகிறது. யெளவனப் பிராயத்துப் பெண்ணான நீ இப்படி என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதே என்னால் சகிக்க முடியவில்லை. உன்னை எப்படி விலக்கி தூரத்தில் நகரச் செய்கிறது என்பதை அறியாமல் நான் தவித்துக் கொண்டிருக்கிறேன். அப்படி இருக்க, நான் உன் முகத்தைப் பார்க்க ஆசைப்படுவதாக நீ சொல்லுகிறாய். அப்படிப்பட்ட துராசைக்கு நான் ஒரு நொடியும் இடம்கொடுக்கக் கூடியவனல்ல. என் விஷயத்தில் உன் மனதில் அப்படிப்பட்ட சந்தேகமே வேண்டியதில்லை. நீ தயை செய்து என்னைவிட்டு இந்தப் படுக்கையில் உட்கார்ந்து கொள்; அல்லது, படுத்துக்கொள். உடனே என் மனம் மிகவும் நிம்மதியடையும்'' என்று நயமாகக் கூறி அவளை மெதுவாக அப்பால் நகர்த்த எத்தனித்தான்.

ஆனால், அந்த அழகிய அணங்கு அப்பால் நகராமல், அட்டை ஒட்டிக் கொள்வதுபோல அவனை முன்னிலும் அதிக வலுவாகப் பிடித்துக்கொண்டு கொஞ்சலாகப் பேசத் தொடங்கி, ''நீங்கள் சொல்வது ஆச்சரியத்திலும் பரம ஆச்சரியமாக இருக்கிறதே! யெளவனமும், கட்டழகும், முற்றிலும் நிறைந்த ஒரு பெண் நடு இரவில் ஒரு யெளவனப் புருஷர் தனியாக

இருக்கும் இடத்தில் வந்து அவரைப் பிடித்து இறுகக்கட்டிக் கொண்டு பேசுகையில், அவளது முகம் எப்படி இருக்கிறது என்பதை அறியவும், வேறு பலவிதமாகவும் அந்தப் புருஷர் ஆசைகொள்ளாமல் இருக்கிறார் என்றால், அந்தக் கட்டுக் கதையை யாராவது உண்மை என்று நம்புவார்களா? அப்படி நீங்கள் சொல்வது உண்மையாக இருந்தால், சகல ஆசைகளுக்கும் விகாரங்களுக்கும் விலக்கான ஜிதேந்திரியனாக நீங்கள் இருக்க வேண்டும்; அல்லது உங்களுடைய மனம் இளகாத பாறையினாலாவது, மரக்கட்டையினாலாவது செய்யப் பட்டதாகத்தான் இருக்க வேண்டும். என்னை ஏன் இப்படிப் பிடித்துப் பிடித்துத் தள்ளுகிறீர்கள். நான் உங்களுடைய உடம்பைப் பிடித்துக்கொண்டிருப்பதில், உங்களுக்கு ஏதாவது நஷ்டம் உண்டா? அல்லது கஷ்டந்தான் உண்டா? எதுவுமில்லை. ஆனால், அதனால் எனக்கு உண்டாகும் லாபமும் நன்மையும் ஆனந்தமும் அபரிமிதமானவையாக இருக்கின்றன. நீங்கள்தான் என் விஷயத்தில் எப்படிப்பட்ட துர்மோகமும் கொள்ளாத உலகைத் துறந்த முனீஸ்வரராயிற்றே! நான் உங்களைக் கட்டிக் கொண்டிருப்பதைப் பற்றி உங்களுக்கு ஏன் இவ்வளவு கவலை?'' என்று குழந்தை கொஞ்சுவதுபோல இனிமையான குரலில் கூறினாள். அவளது அபூர்வமான சொற்களைக் கேட்டு முற்றிலும் திக்பிரமை கொண்டு ஸ்தம்பித்துப் போன கலியாணசுந்தரம், "என்ன ஆச்சரியம் இது! இந்திராபாயீ! நீ இதுவரையில் நடந்து கொண்டதும், பேசியதும் ஒரு மாதிரியாக இருந்தன. இப்போது பேசுவதும், நடந்து கொள்வதும் வேறுமாதிரியாக இருக்கின்றன. தயவு செய்து முதலில் நீ என்னைவிட்டு நகர்ந்துகொள். அதற்குமேல், உன்னுடைய உண்மையான கருத்து இன்னது என்பதை நான் தெரிந்து கொள்ளுகிறேன். நான் எப்பேர்ப்பட்ட குணமுடைய மனிதன் என்பதை நீயும் தெரிந்துகொள்ளலாம்'' என்று கூறிய வண்ணம், முன்னிலும் அதிக பலமாக அவளைத் தூர நகர்த்த எத்தனித்தான்.

இந்திராபாயி, "ஏன் இப்படி நீங்கள் என்னை வெறுக்கிறீர்கள்? உங்கள் விஷயத்தில் நான் எள்ளளவும் தவறாக நடந்துகொள்ளவே இல்லையே. நீங்கள் என் விஷயத்தில் அபாரமான மன இரக்கம் கொண்டு இவ்வளவு நேரம் என்னிடத்தில் வித்தியாசமாவது அருவருப்பாவது காட்டாமல், என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தீர்கள். இப்போது திடீரென்று என் விஷயத்தில் ஏதோ சந்தேகம் கொண்டு, என்னை தூரத் தள்ள எத்தனிக்கிறீர்களே. நீங்கள் எனக்குச் செய்த உபகாரத்தை முழுதும் செய்ய வேண்டாமா? இதுவரையில் என்னைக்கட்டிப் பிடித்துக் கொண்டிருந்த தைப்போல நீங்கள் என்னை இன்னும் கொஞ்சநேரம் கட்டிக் கொண்டிருப்பதால் உங்களுக்கு என்ன கெடுதல் உண்டாகிவிடப் போகிறது? இது வரையில் என்னைப்பிடித்தது மாத்திரம் குற்றமில்லை. இன்னம் கொஞ்சநேரம் பிடிப்பதினால் மாத்திரம் குற்றம் உண்டாகிவிடப் போகிறதா? அப்படி உங்கள்மேல் குற்றம் சுமத்துவது யார்? நான்தானே குற்றம் சுமத்தவேண்டும்? நீங்கள் எதற்கும் இளகாத மகா பரிசுத்தமான மனசு உடையவர்கள் என்று நான்தான் உங்களுக்கு ஏற்கெனவே புகழ்ச்சிப் பத்திரம் கொடுத்துவிட்டேனே. அப்படி இருக்க, நீங்கள் யாருக்காக அஞ்சுகிறீர்கள். எனக்கு உதவி செய்ய முன் வந்தவர்கள், என் மனமும் உடம்பும் சரியான நிலைமைக்கு வருகிற வரையில் அந்த உதவியைச் செய்துவிடுங்கள். அதுவுமன்றி நான் இன்னொரு முக்கியமான கேள்வி கேட்கிறேன். அதற்கு மறுமொழி சொல்லவேண்டும். இந்த இடத்தைவிட்டுத் தப்பித்துப்போக வேண்டும் என்கிற ஆசை உங்களுக்கு உண்டா இல்லையா?" என்றாள்.

கலியாணசுந்தரம், "ஏன் அந்தக் கேள்வியை இந்தச்சமயத்தில் கேட்கிறாய்? இந்த அக்கிரமச் சிறையிலிருந்து தப்பிப்போக யார்தான் ஆசைப்படமாட்டார்கள்?" என்றான்.

இந்திராபாயி, "நீங்கள் இவ்விடத்திலிருந்து தப்பிப் போவதற்கு என்னுடைய உதவியும் துணையும் அவசியம்

வேண்டும் என்பதை மறந்துவிட்டீர்களா? நீங்கள் இவ்வளவு சீக்கிரத்தில் என் விஷயத்தில் குரோதம் பாராட்டத் தொடங்கினால், நம்முடைய எண்ணம் கடைசிவரையில் எப்படி நிறைவேறும்? என்னை நீங்கள் கடைசிவரையில் கைவிடுகிற தில்லை என்ற நிச்சயம் ஏற்படாவிட்டால் நான் இவ்வளவு பாடுபட்டு உங்களைத் தப்ப வைப்பதில் என்ன நன்மை யிருக்கிறது?'' என்றாள்.

கலியாணசுந்தரம் முன்னிலும் அதிகமாகக் குழம்பித் திகைத்து, ''என்ன ஆச்சரியம் இது! வந்த ஆரம்பத்தில் நீ புத்திசாலித்தனமாகவும் விவேகத்தோடும் பெருந்தன்மை யோடும் பேசினாய். இப்போது அறியாத குழந்தை பேசுவது போலத் தாறுமாறாகவும் அற்பத்தனமாகவும் பேசுகிறாய்? நான் உன்னைக் கடைசிவரையில் கைவிடுகிறதில்லை என்கிற நிச்சயம் ஏற்பட வேண்டும் என்கிறாயே. அதன் கருத்து இன்னது என்பது எனக்குக் கொஞ்சமும் விளங்கவில்லை. அதைக் கொஞ்சம் தெளிவாகச் சொல்'' என்றான்.

அப்போதும் அவனைப் பிடித்த பிடியை விடாமல் இருந்த அந்தப் பெண் நிரம்பவும் உருக்கமாகவும், வாத்சல்யமாகவும், கொஞ்சலாகவும், தணிவான குரலில் பேசத் தொடங்கி, ''நான் என்னுடைய கருத்தை எவ்வளவு வெளிப்படையாகச் சொல்ல முடியுமோ அவ்வளவும் சொல்லிவிட்டேன். இதைக்காட்டிலும் இன்னமும் அதிகமாக வெளியிட என் மனம் கூசுகிறது. மற்ற எல்லோரையும்விட அதிமேதாவியாக இருக்கும் நீங்கள் இந்த அற்ப சங்கதியைத் தெரிந்துகொள்ளவில்லை என்றால், இதை யார்தான் நம்புவார்கள்? உண்மையில் தூங்குகிறவர்களை எழுப்பலாம்; தூங்குவதாகப் பாசாங்கு பண்ணுகிறவர்களை எழுப்ப முடியாது என்று ஜனங்கள் சொல்லுவார்கள். அதுபோல நீங்கள் செய்கிறீர்கள் போலிருக்கிறது. நான் முகமூடியால் என் முகத்தை மறைத்துக்கொண்டிருப்பதற்குக் காரணம் இன்னது என்று நான்சொன்னது உங்களுக்கு நினைவிருக்கலாம். இந்த

ஊரிலுள்ள பெருத்த பெருத்த தனிகர்களுடைய பிள்ளைகளும், உன்னதஸ்தானத்திலுள்ள உத்தியோகஸ்தர்களும் என்னுடைய பிரியத்தைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்று என்னைப் பலவகையில் உபத்திரவித்து வருத்தினார்கள் என்றும் அவர்களை எல்லாம் நான் கொஞ்சமும் மதிக்காமல் அலட்சியம் செய்து விலக்கி விட்டேன் என்றும் நான் முன்னமேயே சொன்னேன் அல்லவா? ஒரு யௌவனப் பெண் இவ்வளவு பெரிய நகரத்திலுள்ள மகா சிரேஷ்டமான அத்தனை புருஷர்களில், ஒருவரைக்கூட மதியாமல் விலக்குவதென்றால், அதற்குத் தக்க ஒரு காரணம் இருக்க வேண்டுமே. அது என்னவென்றால், இவர்கள் எல்லோரும் என்னைத் தொடருவதற்கு முன், நான் ஒரு புருஷரைக் கண்டேன். அவர் சகலமான அம்சங்களிலும், தமக்குத் தாமே நிகரென்று சொல்லத்தகுந்த புருஷசிங்கமாக இருப்பதைக் காண, என் மனம் முழுதும் அவர்மேல் சென்று மீளாதபடி லயித்துப் போய்விட்டது. அவருடைய அழகிய இன்பவடிவம் என் மனசைவிட்டு விலகாமல், சதாகாலமும் நின்று என் அகக்கண்ணில் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. இரவு பகல், அந்த வடிவத்தையே நான் தெய்வமாகப் பாவித்து வழிபட்டு வணங்கி வருவதன்றித் தூங்கும்போது கூட அதே கனவாகக் கண்டுகொண்டிருக்கிறேன். அந்த உத்தமப் புருஷரைப் பற்றி நான் நினைக்கும்தோறும், என் மனம் இன்ப ஊற்றெடுத்து என்னை ஆனந்த பரவசத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது. வேறு எந்தப் புருஷரையும் என் மனம் விஷமென வெறுக்கிறது. எப்பாடுபட்டாவது எப்படிப்பட்ட துணிகரமான காரியங்களைச் செய்தாவது நான் என்னுடைய மனசில் குடிகொண்ட அந்த உயிர்த்தெய்வத்துக்கு அடியாளாகும் பாக்கியத்தைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்ற உறுதி, படிப்படியாக வலுத்து என்னைச் சதாகாலமும் தூண்டிக்கொண்டிருந்தது. சிலகாலமாக அந்த இன்பவடிவம் என் கண்ணில்படாமல் எங்கேயோ மறைந்து விட்டது. அவரைக் காணாமல் என் உயிரே

தள்ளாடிப் போய்விட்டதன்றி, இந்த உலகமே பாழ்த்துத் தோன்றியது. அந்த நிலைமையில் இந்த ஊர்ப் போலீஸ் கமிஷனர் என்மேல் சினங்கொண்டு என்னை இவ்விடத்தில் சிறை வைத்தார். நான் இவ்விடத்தைவிட்டு வெளியில்போக முயற்சித்து இந்த அறைக்கு வந்து பார்த்ததில், சில காலமாகக் காணாமல் போயிருந்த அந்த உத்தமபுருஷர் இவ்விடத்தில் இருக்கக் காண என் மனம் இன்னது என விவரிக்க முடியாவிதத்தில் தவித்து உருகிப்போய்விட்டது. அப்படிப் பட்ட நிலைமையில் அந்த மனோகர வடிவத்தை ஆசைதீரக் கட்டி ஆலிங்கனம் செய்யாமலும், அவருடைய பிரியமாகிய தேவாமிருதக் கடலில் ஆழ்ந்து மெய்மறந்து கிடக்காமலும் தூர விலகி நிற்க யாரால் முடியும்? நீங்களே யோசித்துச் சரியான மறுமொழி சொல்லுங்கள்; இப்படிப்பட்ட இன்பவள்ளல் இந்தச் சிறையை விட்டுப்போனாலும், என்னைக் கைவிட்டுப் போக என் மனம் இடம் கொடுக்குமா?'' என்று கரை புரண்டோடிய காதற் பெருக்கோடு மொழிந்தாள்.

அவளது விபரீதமான வார்த்தைகளைக் கேட்டு முற்றிலும் பிரமித்துப்போன கலியாணசுந்தரம் அவளுக்கு என்ன மறுமொழி சொல்வது என்பதை அறியாதவனாய்ச் சிறிதுநேரம் தவித்தான். தான் எங்கே போனாலும், பரோபகாரச் சிந்தையினால் எவருக்கு உதவிசெய்தாலும், அவ்விடத்தில், உடனே காதல் சம்பந்தமான பிரஸ்தாபமே உண்டாவது விந்தையிலும் விந்தையாகத் தோன்றியது. தனது மனதிற்கு எந்த விஷயம் அருவருப்பானதோ அந்த விஷயமே எதிர்ப்பட்டுத் தன்னை நரகவேதனைக்கு ஆளாக்குவதைக் காண, அவன் தனது துர்பாக்கியத்தை நினைத்து நினைத்துத் துக்கித்தான். தான் எங்கு காலடி வைத்தாலும், அங்கு ஸ்திரீகளின் ஸாகஸமே மயமாகக் காணப்படுவதை உணர, அந்த நற்குண தீரன் இந்த உலகத்தில் அன்னிய மாதரையே நினையாத ஏகபத்தினி விரதம் உடைய மனிதன் மருந்துக்காவது ஒருவன் இருப்பானோ என்ற சந்தேகம்

பலமாக எழுந்தது. அதுவுமன்றி, அந்தப் பெண் செய்த ஸாகஸமும், அதற்குமுன் அம்மாளு, தனம் என்ற இரண்டு பெண்களும் செய்த ஸாகஸமும் ஒன்றுபோலவே இருந்தன. அவள் ஒரு வேளை அந்த இரண்டு பெண்களுள் ஒருத்தியாக இருப்பாளோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. ஆனால், இந்தப் பெண்ணின் குரல் மாத்திரம் சிறிதளவு வேறுபட்டுத் தோன்றியது. ஆகையால், அப்படி இருக்காது என்ற எண்ணம் உண்டாயிற்று. அதுவுமன்றி தான் ஒரு மாதகாலமாக அந்தச் சிறையில் இருப்பதால், அவ்வளவு நீண்ட காலம், தனம், அம்மாளு முதலிய பெண்கள் அந்த ஊரில் தாமதித்திருக்கக் காரணமில்லை என்றும், அவர்கள் பூனாதேசத்துக்குப் போயிருக்க வேண்டும் என்றும் ஒரு நினைவு உண்டானது. ஆகையால், இந்தப் பெண் அவர்களைச் சேர்ந்தவளாக இருக்கமாட்டாள் என்ற உறுதி ஏற்பட்டது. அவ்வாறு அவன் இரண்டொரு விநாடி நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தபின் அவளை நோக்கி, "சரி; இப்போது நீ சொன்னதிலிருந்து எனக்கு ஒரு முக்கியமான விஷயம் நிச்சயமாயிற்று. நீ இதுவரையில் மயங்கிக் கீழே விழப் போனதும், நான் இறுகப் பிடித்துக் கொள்ளாவிட்டால், உடம்பு பறந்து போய்விடும் போல இருக்கிறது என்று சொன்னதும் நிஜமல்ல. என்மேல் துராசை கொண்டு நீ என்னை இப்படிக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிறாய் என்பது உன் வாக்குமூல மாகவே வெளிப்பட்டு விட்டது. அன்னிய ஸ்திரீயான உனக்கு ஏதோ அபாயம் நேர்ந்துவிட்டது என்ற எண்ணத்தினால், நான் உன்னைத் தொட்டேனே அன்றி வேறல்ல. வேறு எப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் நான் உன்னைத் தொடுவது ஒழுங்கே அல்ல. ஆகையால் இப்போது உன் உடம்பு என் உடம்பில் பட்டுக் கொண்டிருக்கும் ஒவ்வொரு விநாடியிலும் நான் பஞ்சமா பாதகத்துக்கு ஆளாகிக்கொண்டிருக்கிறேன் ஆகையால், இதே நிலைமையில் இன்னம் ஒரு நொடி நேரம் கூட இருக்க நான் சகிக்கமாட்டேன். தயைசெய்து என்னை விட்டுவிடு. நீ

அபலையான பெண் ஆகையால், உன்னிடம் பலாத்காரமாக நடப்பதற்கு என் மனம் பின் வாங்குகிறது. ஆகையால், என்னை முதலில் விட்டுவிட்டு தூர நகர்ந்து நின்று மற்ற விஷயங்களைப் பேசு. அதற்குத் தக்க சமாதானம் நான் உனக்குச் சொல்லி உன் மனசைத் திருப்தி பண்ணி அனுப்பி வைக்கிறேன்'' என்று அழுத்தமாகவும் உறுதியாகவும் கூறினான்.

அவனது சொற்களைக்கேட்ட அந்தப் பெண், ''நான் இத்தனை பாடுகள் பட்டு இந்தச் சிறைச்சாலையை விட்டு வெளிப்பட முயற்சித்ததன் கருத்து என்னவென்றால் நான் உடனே வெளியில்போய் என் மனசைக் கொள்ளைகொண்ட அந்த யௌவனப் புருஷரைக் கண்டு, அவரை அடைய வேண்டும் என்ற ஆவலினாலும், ஆசையினாலும் தூண்டப் பட்டே, நான் கட்டிலடங்கா ஆவேசம் கொண்டு இந்தச் சுவரைக் குடைந்து வழி செய்துகொண்டு இங்கே வந்தேன். வந்த இடத்தில், நான் கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டதைக் காண, என் மனம் சகிக்கமுடியாதபடி குதூகலித்து என்னை ஆனந்த பரவசத்தில் ஆழ்த்திவிட்டது. ஆகவே, நான் உங்களைக் கட்டித் தழுவிப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய ஆவல் பூர்த்தியாகத் தீராத முன், நான் உங்களை எப்படி விடமுடியும்? ஆகையால், நீங்கள் என்னைக் கொன்று போட்டுவிட்டால் கூட, அப்போதும், நான் உங்களை விடப்போகிறதில்லை. என் முழுப் பிரியத்தையும், உயிரையும் கொள்ளை கொண்ட கள்வராகிய நீங்கள் எனக்குத் தக்கவழி காட்டாமல், என்னை அசட்டை செய்தால், நான் சும்மா இருந்துவிட முடியுமா? நான் மற்ற எல்லா விஷயத்திலும் லலிதமான குணமுடைய மனிஷியானாலும், இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் பிடிவாத குணமுடையவள். ஏனென்றால் நான் இதுவரையில் என் மனசை வெளியில் சபலிக்கவிடாமல், கட்டுப்பாடாகவும், உறுதியாகவும் இருந்து என் ஆசை முழுதையும் தேக்கி வைத்திருப்பவள். ஆதலால், அது முழுதும்

இப்போது என்னால் சகிக்கமுடியாதபடி அவ்வளவு அதிக மும்முரமாக எழுந்து என்னை ஆட்டிவைக்கிறது. ஆகையால், நான் உங்களை விட முடியவில்லை. எப்படியாவது நீங்கள் என்னுடைய பிரியத்தை ஏற்றுக்கொண்டு, என்னைக் காப்பாற்ற வேண்டும். அப்படியில்லாமல், நீங்கள் என்னை வெறுத்து உங்களுடைய பிரியத்தை என்மேல் வைக்க மறுத்தால், என் மனம் முறிந்துபோய் என்னுடைய ஆழ்ந்த காதலையெல்லாம் காலகோடி விஷத்தை ஒத்த பகைமைக்குச் சமமாக மாற்றி விடும்'' என்று நிரம்பவும் உருக்கமாகவும் உறுதியாகவும் கூறிய வண்ணம் அவனை முன்னிலும் அதிக உரமாகப் பிடித்துக் கொண்டாள்.

அவளது கொடிய சொற்களைக்கேட்ட கலியாணசுந்தரம் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த கலவரமும் சஞ்சலமும் அடைந்தவனாய், ''இந்திராபாயீ! உன்னுடைய அறிவு சரியான நிலைமையில் தான் இருக்கிறதா? அல்லது, உனக்கு ஏதாவது பைத்தியம் பிடித்துப் போயிருக்கிறதா? நீ இப்போது செய்யும் காரியமும், பேசும் பேச்சுகளும் கேவலம் ஒரு ராட்சசிக்கே தகும். அன்றி, நற்குணமுள்ள சாதாரண ஸ்திரீகளுக்குத் தகுந்தவையாக இல்லையே! நீ திக்கற்ற பரிதாபகரமான நிலைமையில் இருக்கிறாய் என்று எண்ணி உன்மேல் இரங்கி நான் உன்னைப் பிடித்துக்கொண்டேனன்றி வேறல்ல. கேவலம் பெண் பிள்ளையான உன்னிடத்தில் நான் இப்போதும் பலாத்காரத்தை உபயோகிக்கப் பின்வாங்குகிறேன் ஆகையால், நீ என்னை விட்டுத் தூர நகர்ந்து கொள். அநாவசியமாக என் கோபத்தை மூட்டாதே. அதன்பிறகு நீ பெண்பிள்ளை என்பதைக் கூட மதியாமல், நான் என் முரட்டுத் தனத்தைக் காண்பித்து உனக்கு நற்புத்தி உண்டாகும்படி செய்துவிடுவேன்; ஜாக்கிரதை'' என்றான்.

அதைக்கேட்ட அந்தப் பெண் கட்டிலடங்கா ஆவேசம் கொண்டவள்போல மாறி, ''ஓகோ! அப்படியா! என்னோடு

யுத்தத்துக்கு ஆரம்பிக்கிறீர்களா! அப்படியே ஆகட்டும். இதனால் என்னுடைய உயிர் போனாலும் போய்விடட்டும். நான் உங்களை விடப் போகிறதே இல்லை. நீங்கள் உங்களால் ஆனதைச் செய்து கொள்ளலாம். குத்துங்கள். கொல்லுங்கள். எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ளுகிறேன். என்னை அடித்து இம்சிக்க மாத்திரம் நீங்கள் பின்வாங்க மாட்டீர்கள். என் மனம் சந்தோஷப்படும்படியான ஒரு காரியத்தை மாத்திரம் நீங்கள் செய்ய மாட்டீர்கள். இது சரியான நியாயந்தானா? எத்தனையோ புண்ணிய ஆத்துமாக்கள் ஜீவகாருண்யத்தினால், உலகத்தில், தங்களாலான உபகாரத்தைச் செய்து பிறரைச் சந்தோஷப்படுத்த முயல்கிறார்கள். அவர்கள் ஒரு கொசுவுக்குத் துன்பம் செய்யவும் சகித்திறார்கள். அதுதான் மனிதராகப் பிறந்தவர் அடையக்கூடிய பலன். நீங்கள் அதற்கு நேர் எதிரிடையான காரியத்தைச் செய்ய எத்தனிக்கிறீர்கள். அன்னிய ஸ்திரீயைத் தொட்டு அடிப்பதற்கு ஏற்பட்ட உரிமை அவளுக்கு உபயோகப்பட மாத்திரம் இல்லாமல் போய்விட்டதா? இருக்கட்டும்; அப்படியே செய்யலாம். நான் உங்களை விடுகிறதும் இல்லை; பொழுது விடிகிற வரையில் நான் இவ்விடத்தைவிட்டு போகப் போகிறதும் இல்லை. பொழுது விடிந்தவுடன் பாராக்காரன் வந்து பார்க்கட்டும். அதனால் வரும் கஷ்டங்களை எல்லாம் அனுபவியுங்கள்'' என்றாள்.

கலியாணசுந்தரம், ''முட்டாளே போ. இதுவரையில் நான் உன்னை நல்ல புத்திசாலியென்றும், மேலான குணம் உடையவள் என்றும் அல்லவா நினைத்தேன். சே! உன்னுடைய யோக்கியதை இவ்வளவுதானா! உன்னைத் தொட்டு அடிப்ப தாகவும் வேறுவிதமாக உன்னை வருத்துவதாகவும் நான் சொல்லவும் இல்லை. அப்படிச் செய்ய நான் எண்ணவும் இல்லை. நீ உன்னுடைய வரம்பை மீறித் தகாத காரியத்தில் பிரவேசிக்க எத்தனிக்கிறாய். ஆகையால், அதற்கு நான் இடங்கொடுக்காமல் தடுத்தே தீருவேன். அதற்கு எவ்வளவு

தூரம் நான் பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டுமோ அவ்வளவு தூரம் அதை உபயோகிப்பது குற்றமாகுமா? இது பிறர் செய்யும் குற்றத்தைத் தடுப்பதே அன்றி, ஒருநாளும் அக்கிரமமாகாது. பொழுது விடிகிற வரையில் நீ இங்கேயே இருந்தால், பாராக்காரன் வந்து விஷயங்களை எல்லாம் தெரிந்துகொண்டு உன்னைத்தான் முன்னிலும் அதிக பந்தோபஸ்தாக இன்னொரு கொடிய இடத்தில் சிறைவைத்து உனக்குத் தக்கபடி சிட்சை நடத்தி வைப்பான்'' என்றான்.

இந்திரபாயி, ''இதனால் எனக்கு எப்படிப்பட்ட கொடிய தண்டனை நேர்ந்தாலும், நான் அதைப்பற்றி விசனப்படவே மாட்டேன். தண்டனையும் மானக்கேடும் எனக்கு மாத்திரம் உண்டாகும் என்று நினைத்துக் கொண்டீர்களா? உங்களை மாத்திரம் இவர்கள் சும்மா விட்டுவிடுவார்களா? ஒருநாளும் சும்மாவிட மாட்டார்கள். நீங்கள்தான் இந்தச் சுவரைக் குடைந்து என்னை இங்கே அழைத்துப் பலாத்காரம் செய்தீர்களென்று நான் சொல்லி, உங்களுடைய யோக்கியதையே கெட்டுப் போகும்படி செய்து, உங்களைப் பற்றி ஊரார் சிரிக்கும்படி செய்து விடுவேன். அப்படிப்பட்ட காரியத்தை நான் செய்ய இடங்கொடுக்கப் போகிறீர்களா? அல்லது, நீங்கள் என்னுடைய பிரியத்தைப் பூர்த்தி செய்யப் போகிறீர்களா? உங்களுடைய ஆயிசுகால பரியந்தம் என்னை வைத்துக்கொண்டு சந்தோஷப் பட உங்களுக்கு முடியாவிட்டால், இப்போது கொஞ்ச நேரமாவது என்னோடு நீங்கள் சந்தோஷமாக இருந்தால், நான் அதோடு திருப்தியடைந்து போய்விடுவேன். இந்த நள்ளிரவில் நாம் மாத்திரம் தனியாக இருக்கும் இந்த இடத்தில் என்ன நடந்தது என்பதை யார் அறியப் போகிறார்கள்? நீங்கள் இப்போது உண்மையில் சுத்தமாக இருந்து, நாளைக்கு உலகத்தாருக்கு முன் கெட்ட பெயரெடுத்துப் பழிப்புக்கு ஆளாகப் போகிறீர்களா? அல்லது இப்போது ரகசியத்தில் என்னையும் சந்தோஷப்படுத்தி அதனால் நீங்களும் இன்பம்

அடைந்து, உலகத்தாருக்கு முன் சுத்தமான மனிதர் என்ற பெயரையும் காப்பாற்றிக்கொள்ளப் போகிறீர்களா? நான் சொல்லும் காரியமே சுலபமானது; நன்மையடையக் கூடியது; பரஸ்பரம் இன்பம் தரக்கூடியது. என்ன சொல்லுகிறீர்கள்?'' என்றாள்.

கலியாணசுந்தரம் வியப்பும் ஆத்திரமும் வடிவெடுத்தது போல மாறி, ''பெண்ணே! நான் எவ்வளவுதான் தர்ம நியாயம் எடுத்துச் சொன்னாலும் நீ அதைக் கொஞ்சமும் கவனியாமல், உன்னுடைய குதர்க்கத்தை விடாமலேயே பேசுகிறாய். காம வெறி கொண்டு, மதியிழந்து, தலைகால் தெரியாமல் பிதற்றுகிற வளான உன்னிடத்தில் நான் எவ்வளவு தான் நியாயம் பேசினாலும், அது செவிடன் காதில் சங்கை ஊதியதுபோல முடியுமேயன்றி வேறல்ல. நான் பரிசுத்தமாக நடந்துகொள்ள வேண்டும் என்பது என்னுடைய ஆத்தும திருப்தியைக் கருதியே அன்றி வேறல்ல. உலகத்தார் மெச்சிக் கொள்ள வேண்டும் என்பதை மாத்திரம் எதிர்பார்க்கிற மனிதன் தான் ரகசியத்தில் எப்படிப்பட்ட அக்கிரமத்தையும் செய்து, வெளிக்கு மாத்திரம் பரம சுத்தன்போல நடித்து வெளிவேஷம் போடுவான். நான் அப்படிப்பட்ட மனிதன் அல்ல. உண்மையான நடத்தையும் ஆத்ம திருப்தியுமே எனக்குப் பிரதானமான விஷயங்கள். நான் செய்வதைப் பிறர் பார்த்தாலும் பார்க்கா விட்டாலும், நான் ஒரே மாதிரியாகத்தான் நடந்து கொள்ள வேண்டும். இப்போது இவ்விடத்தில் வேறே எந்த மனிதரும் இருந்து நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை என்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். உன்னைப்போன்ற அகக்கண் அவிந்த எத்தனையோ மனிதர் இப்படி நினைத்துத்தான் எத்தனையோ கொடிய செய்கைகளையும் பெரிய குற்றங்களையும் செய்கிறார்கள். நம்மைப் படைத்துக் காத்து ரட்சிக்கும் கடவுள் எங்கும் வியாபித்து சகலமான விஷயங்களையும் கவனித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று என்னைப் போன்ற சிலர்

எண்ணுகிறபடியால், ஒரு குற்றத்தை மனசால் நினைப்பது கூடத் தவறு என நாங்கள் உறுதியாக எண்ணி அதற்கொத்தபடி எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்த இடத்திலும் நடந்துகொள்ளுகிறோம். ஆகையால், நீ சொல்வதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. நாளைய தினம் பாராக்காரன் வந்து விசாரணை செய்யும்போது, நீ எப்படிப்பட்ட பொய்யை வேண்டுமானாலும் சொல்லலாம். அதனால், எனக்கு எவ்விதமான துன்பமும் மானஹானியும் நேருவதானாலும் நேரட்டும். அதைப்பற்றி நான் கொஞ்சமும் கவலைப்படவில்லை. ஆனால், பொழுது விடிகிறவரையில் என்னை நீ பிடித்துக்கொண்டிருக்கவோ, அல்லது, வேறு வகையில் என்னை வற்புறுத்தவோ, நான் உன்னை விடப் போகிறதில்லை. அதை மாத்திரம் நீ உறுதியாக மனசில் வைத்துக்கொள். நீ இப்போது என்னை விட்டு அப்பால் நகரப் போகிறாயா இல்லையா? என்ன சொல்லுகிறாய்? நீ எவ்வளவு அற்புதமான அழகும் வசீகரமான யௌவனப் பருவமும் உடையவளாக இருந்தும், சுவர்க்கலோகத்தை அடைந்தவன் அனுபவிக்கக்கூடிய சகலமான சுகங்களையும் அபரிமிதமாக நீ உன்னிடத்தில் நிறைத்து வைத்துக்கொண்டு இன்பக் களஞ்சியமாக இருந்தும், உன்னிடம் ஸ்திரீகளுக்கு அவசியம் தேவையான நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் இயற்கை ஆபரணங்கள் இல்லாமலிருப்பதால், நீ கேவலம் உயிரற்ற பிணம்போல எனக்குக் காணப்படுகிறாய். நீ என்னை அணைத்துக் கொண்டிருப்பது, ஆலகால விஷத்தைக் கொண்ட பரமவிகாரமான பாம்பு என் உடம்பில் சுற்றிக்கொண்டிருப்பது போல மகா அருவருப்பாகவும், அசங்கியமாகவும், சகிக்க முடியாத துன்பமாகவும் இருக்கிறதே அன்றி வேறல்ல. கேவலம் பேய், பிசாசு, டாகினி, மோகினி, அரக்கி என்று சொல்லப்பட்ட பயங்கரமான ஜெந்துக்களுக்கும் உனக்கும் கொஞ்சமும் பேதமில்லை என்றே நான் எண்ணுகிறேன். அப்படியிருக்க, நான் உன்மேல் காதல் கொண்டு உன்னுடைய சொற்படி நடந்து, உன்னால் நான் சுகப்பட நினைப்பேன் என்று நீ எதிர்பார்ப்பது

சாத்தியமில்லாத காரியம். நான் இந்தச் சிறைச்சாலைக்குள் வருவதற்கு முன்பு வேறே இரண்டு பெண்கள் என்னிடத்தில் இதே மாதிரிதான் நடந்து கொண்டார்கள். ஆனால், அவர்களுடைய எண்ணம் கொஞ்சமும் பலியாமல் போகும்படி நான் செய்துவிட்டேன். உன்னுடைய முடிவும் அப்படித்தான் ஆகப்போகிறது'' என்று கூறியவண்ணம் ஆத்திரத்தோடு தனது உடம்பை ஆட்டிக்குலுக்கித் தன்னை விடுவித்துக் கொள்ள எத்தனித்தான்.

அதைக்கண்ட அந்தப் பெண் ரௌத்திராகாரமான மூர்க்கங் கொண்டவளாய்க் கட்டிலடங்கா ஆவேசமும் பலமும் தோற்றுவித்து, அவனை விடாமல் முன்னிலும் அதிக பலமாக அவனைப்பிடித்து இறுக்கிக்கொள்ள, அவளது பிடி இரும்புப் பிடி போல இருந்தது ஆகையால், அவனது உடம்பு நொறுங்கிப் போய்விடும்போல ஆகிவிட்டது. குண்டு குண்டாகத் திரண்டு கரணை கரணையாக இருந்த அவளது அழகிய சிவந்த சதைப் பிடிப்பான கைகளாலும் கால்களாலும், அந்தப்பெண் அவனைக் கொடிபோலச் சுற்றி வளைத்துக் கொண்டவளாய், அவனது மார்பிலும் முகத்திலும் தனது முகத்தை வைத்து அழுத்திப் புதைத்து வேறு பலவாறாகத் தனது மனோ விகாரத்தை வெளிப்படுத்தியும் துவண்டு துவண்டு திமிறுகிறாள். ஒரு புருஷன், தனக்கு இணங்கி வராத ஒரு பெண்ணை பலாத்காரப்படுத்தி அவளது கற்பை அழிக்க எவ்வாறு முயற்சிப்பானோ, அவ்வாறு அந்தப் பெண் நமது கலியாண சுந்தரத்தினிடம் நடந்து அவனிடம் பலாத்காரத்தை உபயோகித்தாள். நமது யௌவனப் புருஷன், பலசாலிகளான எத்தனையோ ஆண்பிள்ளைகள் ஒன்று சேர்ந்து ஒரே காலத்தில் எதிர்த்துச் சண்டை செய்தாலும், அத்தனை பேருக்கும் பின் வாங்காமல் எதிர்த்து நின்று வெல்லக்கூடிய சௌரியவானாக இருந்தும், அவள் அபலையான பெண்ணாயிற்றே என்ற இரக்கமும், ஒருவிதமான கோழைத்தனமும் கொண்டதன்றி,

அங்கு நடக்கும் சச்சரவைக் கேட்டுப் பாராக்காரன் வந்து விஷயங்களையெல்லாம் கண்டுகொண்டால், அநியாயமாக அந்தப் பெண்ணுக்கு ஏதேனும் பெருத்த பொல்லாங்கு நேர்ந்துவிடப் போகிறதே என்ற எண்ணத்தினால் அவன் அதுகாறும் அளவற்ற பொறுமையை வகித்து அவளிடம் க்ஷமையோடு நடந்துவந்தான். ஆனால், அவள் தனது வரம்பைக் கடந்து சகிக்கமுடியாத செய்கையில் இறங்கிய பிறகுதான் தாட்சணியம் பார்ப்பது ஒழுங்கல்ல என்று தீர்மானித்துக் கொண்டவனாய், அவளைப் பிடித்து விசையாக அப்பால் தள்ளிவிட, அவள் சடேரென்று விசிப்பலகையில் போய் விழுந்தாள். ஆனாலும், மறுபடியும் எழுந்து முன்னிலும் நூறு மடங்கு அதிகரித்த வீராவேசத்தோடும், ஆவலோடும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வந்து அவனை மறுபடியும் பிடித்துக் கொண்டு, ''சரி; என்னை நீங்கள் தள்ளிவிட்டுக் கொண்டே இருங்கள். நான் மறுபடியும் மறுபடியும் உங்களைப் பிடித்துக் கட்டிக்கொள்ளத்தான் போகிறேன். நீங்கள் தள்ளிவிடுவதால் என்னுடைய மண்டை உடைந்து சுக்கல் சுக்கலாகப் போனாலும் போகட்டும். அப்போதும் நான் உங்களை விடப் போகிற தில்லை'' என்று கூறியவண்ணம் தனது இரண்டு கைகளையும் அவனது கழுத்தைச் சுற்றிலும் கொடுத்து சங்கிலிப் பிணையல் போல் அவனைப் பிடித்துக்கொண்டாள்.

அப்போது கலியாணசுந்தரத்தின் மனதில் பொங்கியெழுந்த ஆத்திரத்தையும், வீராவேசத்தையும் அவனது உடம்பு பதறியதையும் வாசகர்கள் யூகித்துக்கொள்வதே எளிதன்றி, விவரித்துச் சொல்வது மகா கடினமான காரியம். அப்போது அவன் அவளது விஷயத்தில் அபாரமான விசனமும் இரக்கமும் கொண்டவனாய் மறுபடியும் அவளைப்பார்த்து நயமாகப் பேசத் தொடங்கி, ''இந்திராபாயீ! இது உனக்குக் கொஞ்சமும் அடுக்காது. உன்னைக் கொடுமையாக நடத்த என் மனம் இன்னமும் துணியவில்லை. நீ இப்போது விசிப்பலகையில்

போய் விழுந்ததில், உனக்குப் பலமான அடிபட்டிருக்கும் என்று நினைக்கிறேன். அவ்வளவுதூரம் உன் விஷயத்தில் கடுமை காட்ட நேர்ந்ததைப் பற்றி என் மனம் தவிக்கிறது. வீணாக என்னை உபத்திரவித்து என் மனதைப் புண்படுத்தி, நான் இன்னமும் அதிக மூர்க்கமான காரியத்தைச் செய்ய இடம் கொடுக்காதே. பேசாமல் என்னைவிட்டு விலகி நில்'' என்று அன்பாக வற்புறுத்திப் பேசினான்.

அதைக் கேட்டு, அந்தப் பெண் மெய் மறந்து ஆவேசம் கொண்டவள்போல, ''நீங்கள் என்னை விசிப்பலகையில் மோதினாலும் சரி, சுவரில் மோதினாலும் சரி, என்னைத் தலைகீழாகப் பிடித்துக்கொண்டு கீழே அடித்தாலும் சரி, அப்போதும் எனக்கு உங்கள்மேல் கோபமாவது, வெறுப்பாவது, பிரியக் குறைவாவது உண்டாகப் போகிற தில்லை. என் உயிர் போகிற வரையில் நீங்கள் என்னை மோதிக் கொண்டே இருங்கள். நான் உங்களை விடாமல் பிடித்துக் கட்டிக்கொண்டு நீங்கள் மோதும் ஒவ்வொரு மோதுக்கும் நூறு நூறு முத்தங் கொடுக்கிறேன்'' என்று கூறியவண்ணம், அவனது முகத்தோடு தனது முகத்தைச் சேர்த்து வைத்துத் தான் சொன்னதுபோலச் செய்கையில் நடத்திக் காட்டத் தொடங்கினாள்.

அந்த நிலைமை கலியாணசுந்தரம் சகித்துக் கொள்ளக்கூடிய வரம்பை முற்றிலும் மீறியதாக இருந்தமையால், அவன் ஒரு நிமிஷ நேரம் தன்னை மறந்து, அவளை உதறி மறுபடியும் தள்ளிவிட அந்த முறை அவள் வேரற்ற மரம்போலத் தரையில் படேரென்று மல்லாந்து விழுந்தாள். அவளது முதுகு தலையின் பின்பாகம் முதலிய இடங்களில் பலமான அடிபட்டதன்றி தலையிலிருந்து ரத்தம் பீறிட்டது. அப்போதும், அவள் பின் வாங்காமல், அம்பு பாய்வதுபோலச் சடேரென்று எழுந்தோடி, ''சரி; இதுபோதாது. இன்னம் பத்துத் தடவை தள்ளிவிடுங்கள். இப்போது ரத்தம் மாத்திரம் ஒழுகுகிறது. என் உடம்பிலுள்ள

கடைசித் துளி ரத்தமும் உயிரும் வெளியில் வந்துவிடுகிற வரையில், நான் உங்களை விடப் போகிறதில்லை. அப்போதுதான் நான் உங்களிடம் கொண்டுள்ள காதலின் உறுதியும் என் கற்பின் உறுதியும் உள்ளபடி வெளியாகும். நான் கண்டவர்மேல் ஆசைப்படும் பரத்தையா, அல்லது, ஒரே ஒருவரைக் காதலித்து அவர்பொருட்டு என் உயிரைக்கூட ஒரு திரணமாக மதித்து, அவருடைய காலடியிலேயே இறந்து போகக்கூடிய உத்தம ஜாதி ஸ்திரீயா என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள்'' என்று கூறியவண்ணம் அவனைக் கொடி போலத் தழுவி மறுபடியும் கொஞ்சத் தொடங்கினாள்.

முதலில் அவள் விசிப்பலகையில் போய் விழுந்து அடி பெற்றதே கலியாணசுந்தரத்தின் மனதில் சுருக்கெனத் தைத்து, அவனது மனம் இரங்கிக் கலங்கும்படி செய்தது. அதன்பிறகு அவளது விஷயத்தில் தான் பலாத்காரத்தை அதிகமாக உபயோகிக்கக் கூடாது என்ற உறுதியை அவன் கொண்டவனாக இருந்தான். ஆனாலும், அந்த உறுதி சிறிது நேரத்தில் மாறிப்போய் விட்டது. அவள் செய்த பொறுக்கவொண்ணாத சேஷ்டையினாலும், வரம்புகடந்த மோகவிகாரச் செய்கைகளி னாலும், அவன் அளவற்ற ஆத்திரமடைந்து தன்னை மறந்து அவளை மறுபடியும் தள்ளிவிட, அவள் வேரற்ற மரம்போலத் தரையில் விழுந்தாளல்லவா? அதைக் காணவே, கலியாண சுந்தரத்தின் மனதில் பெருத்த திகிலும் கலவரமும் அனுதாபமும் உண்டாகி அவனைக் கலக்கத் தொடங்கின. தான் அவளது விஷயத்தில் மகா கொடுமையாக நடந்துவிட்டதாய் அவனது மனம் குத்தத் தொடங்கியது. அவளது பிடிவாத குணமும், அவள் மேன்மேலும் செய்த சேஷ்டைகளும் சகிக்க முடியாதன வாகவும், அவனை வெகு சுலபத்தில் துன்மார்க்கத்தில் இறக்கிவிடக் கூடியவையாகவும் இருந்தன. தான் எவ்வளவு தூரம் பயந்து வேண்டிக் கொண்டாலும், அவள் தனது எண்ணத்தை மாற்றிக்கொள்ளக் கூடியவளாகத் தோன்ற

வில்லை. மெதுவாக அவளது பிடியிலிருந்து விலகிக் கொள்ளலாம் என்றால், அவள் தன்னைப் பிடித்திருந்தது இரும்புப்பிடிபோல உறுதியாக இருந்தது. வலுவாகப் பிடித்துத் தள்ள எத்தனித்தால், அவள் விசிப்பலகையிலும் தரையிலும் போய் அபாயகரமாக விழுந்து அடி பெறுகிறாள். ஆகவே, அவளை எப்படி விலக்குகிறது என்ற கவலையும், அந்தத் தர்மசங்கடத்தை எப்படி நிவர்த்தி செய்துகொள்ளுகிறது என்ற சஞ்சலமும் எழுந்து அவனது மனதை அபாரமாகக் கலக்கின. அந்த அறையை விட்டு வெளியில் போகமுடியாதபடி கதவு வெளியில் பூட்டப்பெற்றிருந்தது. தான் கூக்குரல் செய்து பாராக்காரனை அழைத்தால் தங்கள் இருவருக்குமே ஏதேனும் பெருத்த துன்பமும் முன்னிலும் பன்மடங்கு அதிகரிக்க, கஷ்டமான நிலைமையும் வந்து சம்பவிக்குமோ என்ற அச்சம் தோன்றியது. ஆகவே, அவன் அந்த மகா அபாயகரமான நிலைமையில் தான் என்ன செய்வது என்பதை அறியாமல் கலங்கிக் குழம்பி திக்பிரமை கொண்டு கோபம், இரக்கம், பரிதாபம், பயம் முதலிய ஒன்றுக்கொன்று முரண்பட்ட பல உணர்ச்சிகளால் வதைக்கப்பட்டவனாக நின்றான். அவளைத் தான் மேன்மேலும் பிடித்துத் தள்ளிவிட்டால், அவள் தாறுமாறாகக் கீழே விழுவதால் அவளது உயிருக்கு ஹானி நேர்ந்துவிடுமோ என்ற திகிலும் எழுந்து வதைக்கத் தொடங்கியது. அப்படிப்பட்ட மரணம் சம்பவித்துவிட்டால், தனது மனம்படும் வேதனையும் பாடுகளும் ஒருபுறம் இருக்க, போலீஸ் கமிஷனர் முதலியோர் அதன் பொருட்டு தன்னை மரண தண்டனை முதலிய கொடுமைகளுக்கு ஆளாக்கிவிடு வார்கள் என்ற நினைவும் தோன்றி எச்சரித்தன. தான் எவ்வளவு தூரம் வருத்தி வதைத்தாலும், அவள் அவைகளையெல்லாம் பொருட்படுத்தாமல், முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த பிரியத்தோடு தன்னைக் கட்டிக்கொள்வதையும், அவள் தனது உயிரையும் கேவலம் திரணமாக மதித்திருப்பதையும் காண,

அவன் அவளது விஷயத்தில் ஒருவிதமான பரிதாபமும் மனநெகிழ்வும் கொண்டவனாய் நெருப்பின் மீது இருப்பவன் போலத் தவிக்க, அந்தச் சமயத்தில் அவளது தலையின் பின்புறத்திலிருந்து கீழே வழிந்தோடிவந்த இரத்தம், அவனது கைகளில் பட்டது. படவே, அவனது மனம் பதற, உடம்பு கிடுகிடென்று ஆடிப்போய்விட்டது. கேவலம் அபலையான ஒரு பெண்ணைத் தான் கொஞ்சமும் இரக்கமின்றிக் கீழே தள்ளிவிட்டு, தலைஉடையும்படி செய்து விட்டதைக் குறித்து ஆராத் துயரமடைந்து குன்றிப்போய் அவளை நோக்கி உருக்கமாகவும் பட்சமாகவும் பேசத்தொடங்கி, "பெண்ணே இந்திராபாயீ! நான் சொல்வதைக் கொஞ்சமும் காதில் வாங்காமல் நீ இவ்வளவு தூரம் பிடிவாதம் செய்வது சரியானதல்ல. உன்னுடைய தலையில் பலமாக அடிபட்டி ருப்பதையும், இரத்தம் ஒழுகுவதையும் கூட நீ கொஞ்சமும் இலட்சியம் செய்யாமல், இப்படி மேன் மேலும் வந்து என்னைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வதைப்பது நிரம்பவும் ஆச்சரியமாக இருக்கிறது! இப்போதாவது நான் சொல்வதைக் கேள்; நீ என்னிடம் சொல்லிக்கொள்ள வேண்டிய சங்கதிகளை யெல்லாம் கொஞ்சநேரம் பொறுத்துச் சொல்லிக் கொள்ளலாம். இப்போது பேசாமல் இந்தப் பலகையின் மேல் உட்கார்ந்து கொள். நான் விளக்கைக் கொளுத்தி, உன்னுடைய தலையில் பட்டிருக்கும் காயம் எவ்வளவு பெரிதாக இருக்கிறது என்று பார்த்து இரத்தம் வராமல் தடுக்க வழி செய்கிறேன். அதோ ஒரு மூலையில் அடுப்புக்கரி கொஞ்சம் கிடக்கிறது. அதை எடுத்துப் பொடி செய்து அந்தப் பொடியை வைத்து அழுத்தினால், இரத்தம் வருவது நின்றுபோகும். நீ என்னோடு போராடியது போதும். முதலில் அந்த முக்கியமான காரியத்தைக் கவனிப்போம்" என்று நயமாகக் கூறினான்.

அவன் அவ்வாறு மாறுபட்டுத் தனது மூர்க்கத்தை அடக்கிக்கொண்டு. சாந்தமாகவும் நயமாகவும் பேசியதைக் கண்ட அந்த மடந்தை தனது பிடிவாதத்தை நிறைவேற்றிக்

கொள்ள அதுவே சரியான பக்குவகாலம் என்று எண்ணி, "என்னுடைய தலையில் இரத்தம் ஒழுகினால் ஒழுகட்டும். இன்னம் நீங்கள் என்னை எத்தனை தடவை வேண்டுமானாலும் கீழே தள்ளிவிட்டு என் தலை பல சுக்கல்களாக உடைந்து போகும்படி செய்தாலும், அதையும் நான் சந்தோஷமாகவே ஏற்றுக்கொள்ளுகிறேன். நீங்கள் எனக்கு ஒரு நல்ல வார்த்தையாவது சொல்லி, என் மனம் திருப்தியடையும் படியான உறுதிமொழி சொல்லாத வரையில் நான் உங்களை விடப்போகிறதில்லை. நீங்கள் என்னை அடித்தாலும், குத்தினாலும், உதைத்தாலும், கீழேபோட்டுத் துகைத்தாலும், கத்தியை எடுத்துக்கொண்டு என்னை அணுவணுவாக வெட்டிச் சித்திரவதை செய்தாலும், நான் உங்கள் மேல் வைத்திருக்கும் பிரியமும், கொண்டிருக்கும் மோகமும் மாறப்போகிறதில்லை. நான் இதுவரையில் உங்களுக்குச் சுமார் ஆயிரம் முத்தம் கொடுத்திருப்பேன். அவைகளில் ஒன்றையாவது நீங்கள் பிரியத்தோடு எனக்குத் திருப்பிக் கொடுக்கக் கூடாதா? அப்படி நீங்கள் முத்தங் கொடுக்காவிட்டாலும் என் பிரியப்படி நடக்கிறேன் என்று அன்பான ஒரு வார்த்தை சொல்வீர்களானால், என் தலையின் புண்களும், உடம்பின் புண்களும், மனதின் புண்ணும் எல்லாம் ஒரே நொடியில் ஆறிப்போய் விடுவதன்றி, நானும் தேவாமிருத சாகரத்தில் மூழ்கினவள்போல ஆனந்த பரவசம் அடைவேனே. இவ்வளவு தூரம் என் மனசின் உறுதியைக் கண்டும் நீங்கள் இன்னமும் என்மேல் வர்மம் பாராட்டுகிறீர்களா? நான் இப்போது பிடிவாதம் செய்வது போல, இனி எப்போதுமே பிடிவாத குணமுடையவளாக இருப்பேனோ என்று ஒருவேளை நீங்கள் பயப்படுகிறீர்களா? அப்படிப்பட்ட சந்தேகமே உங்களுக்குத் தேவையில்லை. என்னை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று நீங்கள் தடுக்கிறீர்கள். ஆகையால், இந்த முக்கியமான விஷயத்தில் நான்அவசியம் பிடிவாத குணமுடையவளாக இருக்க வேண்டியிருக்கிறது. என்னை நீங்கள் உங்களுடைய அடியாளாக ஏற்றுக்

கொள்ளுகிறேன் என்று நீங்கள் ஒரே ஒரு வார்த்தை சொல்லுங்கள். அதன்பிறகு நான் எப்படி மாறிப் போகிறேன் என்று பாருங்கள். அதன்பிறகு நீங்கள் காலால் இடுவதைத் தலையால் செய்து உங்களுடைய கால் செருப்புக்குச்சமானமாக நடந்து கொள்ளுவேன் என்பதை நீங்கள் உறுதியாக நம்பலாம். ஆகா! உங்களுடைய உடம்பு எவ்வளவு அழகாகவும், ஸொகுசாகவும் இருக்கிறது! உடம்பைத் தொடுவதற்கு முன், மயிர்க்காலுக்கு மயிர்க்கால் இன்பவெள்ளம் ஊற்றெடுத்துப் பரவுகிறதே. உங்களுடைய முகம் தேவாமிருதம் ததும்பும் தாமரைப் புஷ்பம்போல எவ்வளவு மனோரம்மியமாக இருக்கிறது! அந்த முகத்தைவிட்டு என் முகத்தை நகர்த்துவது என்றால், என் உயிரையே பிரித்துக் கொண்டு போவது போலல்லவா இருக்கிறது. அதற்கு என் மனம் ஒருநாளும் இணங்காது. ஆகையால், இந்த விசிப்பலகையில் நான் மாத்திரம் பிரிந்துபோய் எப்படி உட்காருகிறது? நீங்களும் என்னோடு கூடவே வந்தால், இருவரும் ஒன்றாகச் சேர்ந்து அந்தப் படுக்கையின்மேல் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் இஷ்டம்போல உட்கார்ந்திருக்கலாம். வாருங்கள் போவோம். என்ன யோசனை செய்கிறீர்கள்? என்னுடைய வார்த்தை களெல்லாம் பொய்யாக இருக்கும் என்று சந்தேகிக்கிறீர்களா? அல்லது, நான் சுத்தமான மனிஷியல்ல என்று நினைக்கி றீர்களா? அப்படிப்பட்ட சந்தேகமே உங்களுக்கு வேண்டிய தில்லை. என் வார்த்தைகளை நீங்கள் உறுதியாக நம்பலாம். நான் இதுவரையில் எந்தப் புருஷனையும் மனசால் கூட நினைத்தறி யேன்; இனியும் உறுதியோடுதான் இருப்பேன். இந்த உலகத்தையாளும் மகாராஜன் வந்து என்னை வணங்கினாலும், அல்லது, என்னைப் படைத்த பிரம்மதேவன் வந்து என்னை வேண்டினாலும், நான் அவர்களையெல்லாம் கேவலம் துரும்புபோல மதிப்பேனேயன்றி வேறல்ல. நீங்கள் ஒருவர்தான் என் மனசுக்குகந்த மன்மதன். நான் உங்கள் பொருட்டே படைக்கப்பட்டிருக்கிறேன். நீங்கள் என்னை ஆள்வதற்காகவே

பிறந்திருக்கிறீர்கள். நாம் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து வாழா விட்டால், எனக்கும் இந்த உலக வாழ்க்கை அற்றுப்போம். உங்களுக்கும் அப்படியே முடியும். நீங்கள் மாத்திரம் என்னுடைய இஷ்டப்படி இணங்கி வராவிட்டால், நான் உங்களை இலேசில் விடப்போகிறவளல்ல. நீங்கள் வேறே எந்தப் பெண்ணோடு வாழ்வதையும் கண்டு நான் ஒரு நொடி நேரம் சகிப்பேனா? ஒருநாளும் அது முடியாது. அந்தப் பெண்ணையும் கொன்று, உங்களையும் கொன்று போட்டு விட்டு நானும் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு உங்களுடைய காலடியிலேயே விழுந்து இறந்து போய் விடுவேன் என்பது மாத்திரம் உங்களுடைய மனசில் உறுதியாக இருக்கட்டும். நான் உங்களை வசப்படுத்துகிறதற்காக இப்படிப்பட்ட வெறும் வார்த்தைகளைப் பேசுகிறேன் என்று நினைக்கவேண்டாம். என்னுடைய மன உறுதியை வேண்டுமானால் நீங்கள் இப்போதே பரீட்சித்துப் பார்க்கலாம். இங்கே ஏதாவது கத்தி இருந்தால் எடுத்து மாதிரிக்காக என்னுடைய ஒரு கையை வேண்டுமானால் வெட்டி விடுங்கள். நான் கண்ணால் ஒரு துளி கண்ணீர் விட்டு அழுகிறேனா என்று பாருங்கள். உங்கள் பொருட்டு நான் எப்படிப்பட்ட மன உறுதியான காரியத்தையும், வேறு எவராலும் சாத்தியமில்லாத எந்தக் காரியத்தையும் உடனே செய்வேன். போதுமா? இன்னமும் உங்களுடைய மனம் திருப்தியடைய வில்லையா? வாருங்கள்; போய்ப் பலகையின் மேல் உட்கார்ந்து கொண்டு சந்தோஷமாக இருப்போம், அதில் உங்களுக்கு எவ்வித நஷ்டமாவது, கஷ்டமாவது, துன்பமாவது உண்டாகப் போகிறதில்லை. இனி எதைப்பற்றியும் நீங்கள் யோசிக்கவே வேண்டாம். பேசாமல் நடந்து வாருங்கள்'' என்று கிளி கொஞ்சுவதுபோல் மழலை மொழியாகப் பேசியவளாய், முன்னிலும் அதிக பலமாகவும், மோக ஆவேசத்தோடும் அவனைக் கட்டியணைத்தவளாய் விசிப்பலகை இருந்த இடத்தை நோக்கி, அவனை இழுக்கத் தொடங்கினாள். அவளது சொற்களைக் கேட்டு முற்றிலும் கலகலத்து வேர்த்து

விருவிருத்துப் போன கலியாணசுந்தரம், தரையில் வேரூன்றிப் போன மரம் போல அந்த இடத்தைவிட்டு நகராமல் உறுதியாக நின்றவனாய் அவளை நோக்கி, ''இந்திராபாயீ! நீ செய்வது முழுதும் சண்டிவழக்காக இருக்கிறதேயன்றி வேறல்ல. நீ சொல்லும் வார்த்தைகளையும், நீ நடந்துகொள்ளும் விதத்தையும் வேறே யாராவது பார்ப்பார்களானால், நீ ராட்சசியோ, அல்லது பேய் பிசாசைச் சேர்ந்தவளோ என்று நினைப்பார்களே தவிர, உன்னுடைய அபூர்வமான மன உறுதியைப் பற்றி யாரும் உன்னைப் புகழமாட்டார்கள். நீ ஒரே புருஷனிடத்தில் காதல் கொண்டிருப்பதாகவும் அவன் பொருட்டு எப்படிப்பட்ட தேக அவஸ்தையையும் பொறுத்துக் கொள்வதாகவும் உயிரையும் விட்டுவிடத் தயாராய் இருப்பதாகவும் சொல்லிப்பெருமை பாராட்டிக் கொள்ளு கிறாய். உன்னுடைய மன உறுதியும் தீரமும் ஆண்பிள்ளை களிடத்தில் கூட இருப்பது சந்தேகந்தான். அந்த விஷயத்தைப் பற்றி நான் உன்னை நிரம்பவும் மெச்சுகிறேன். ஆனால், இந்த விஷயத்தில் உன்னுடைய மன உறுதி ஒன்று மாத்திரம் போதுமா? போதாது. உனக்கு மனவுறுதி இருப்பதுபோல மற்றவருக்கும் இருக்கும் அல்லவா? நான் இதற்கு முன் ஒரு பெண்ணைப் பார்த்து அவளிடம் காதல் கொண்டிருக்கிறேன். அவளும் என்னிடம் காதல் கொண்டு ஒரே உறுதியாக இருக்கிறாள். நான் அவள் விஷயத்தில் வைத்த உறுதியான பிரியத்தை மாற்றவே முடியாது. தவறி மாற்றினாலும், அவள் நம்மைச் சும்மா விடுவாளா? நீ இப்போது பயமுறுத்தியது போல, அவளும் செய்வாள் அல்லவா? ஆகையால், நான் ஏற்கெனவே ஏற்பட்டுள்ள உறுதியான ஏற்பாட்டுக்கு விரோதமாக இப்போது எப்படி நடந்து கொள்ளுகிறது? உன்னைக் கலியாணம் செய்து கொள்வதாக ஒப்புக்கொண்ட ஒரு புருஷன் வேறு ஸ்திரீயிடம் இப்படி நடந்து கொண்டால், அதைக் கண்டு நீ சகித்திருப்பாயா? அவன் இப்படி நடந்து கொள்ள நீ இடங்கொடுப்பாயா? ஒருநாளும் இடங் கொடுக்க

மாட்டாய். ஆகையால், என்னுடைய வரலாறு, பூர்வோத்தரம் முதலியவற்றை அறிந்து கொள்ளாமலும், என்னுடைய மனப்போக்கைத் தெரிந்துகொள்ளாமலும் நீ மாத்திரம் உன் மனசில் ஒருவிதமான உறுதியைச் செய்துகொண்டு அதை ஒப்புக் கொள்ளப் பிரியப்படாத என்னிடத்தில் வந்து அடம்பிடித்து வற்புறுத்தி ஸ்திரீ ஜாதிகளுக்குத் தகாத வார்த்தைகளைச் சொல்லி, அடாத காரியங்களைச் செய்வது கொஞ்சமும் ஒழுங்காகுமா? காதல் என்பது, ஒரு மரத்தில் பழம் தானாகக் கனிவது போல ஸ்திரீ புருஷர்கள் பரஸ்பரம் இயற்கையாய்ப் பிரியங்கொண்டு ஒத்து ஒன்றுபட வேண்டுமேயன்றி இப்படித் தடியெடுத்து அடித்து உண்டாக்கிக்கொள்ளக் கூடியதல்ல. காமதூரர்களான சில துஷ்ட ஆண்பிள்ளைகள்தான் இப்படி பலாத்காரத்தில் இறங்கி, அபலைகளான ஸ்திரீகளிடத்தில் முரட்டுத் தனத்தை உபயோகப் படுத்திக் கற்பழிக்க எத்தனிப்பார்கள். ஒரு பெண்பிள்ளை, அதிலும் யௌவனப் பருவத்திலுள்ள நீ இப்படி நடந்துகொள்வது இந்த உலகத்தில் இதுவரையில் யாரும் கேள்வியுற்றிராத சம்பவமாக இருக்கிறது. யௌவனப் பருவம் இருக்கிறது, நற்குணங்களும் பல இருக்கின்றன. ஒரே புருஷனிடத்தில் கடைசிவரையில் உறுதியாக இருந்து அவன் விஷயத்தில் உயிரையுங் கொடுக்க வேண்டுமென்ற அருமையான கற்பும் இருக்கிறது. ஆனால், மனோவிகாரத்தை வெளியில் காட்டாமல் அடக்கிக்கொள்ளும் ஒரு குணம் மாத்திரம் இல்லாமல் போனதாகையால், உன்னிடத்திலுள்ள சகல சிறப்புகளும் மேம்பாடுகளும், குடத்தில் மறைத்து வைத்த விளக்குபோல, உபயோக மற்றவையாகவும் அருவருக்கத் தக்கவையாகவும் ஆகிவிட்டன. பார்த்தாயா? போதும்; இனிமேலாகிலும் நான் சொல்வதைக் கேள். நான் ஒரே முடிவாகச் சொல்லுகிறேன். உன்னுடைய பிரியப்படி நடக்கவும் உன்னைத் திருப்தி செய்யவும் நான் ஒரு நாளும் இணங்க முடியாது. என் உயிர் போவதானாலும் நான் என் உறுதியை மீறி நடக்க மாட்டேன். நீ கொஞ்சமும் நாணமாவது

வெட்கமாவது இல்லாமல் என்னைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேன் என்கிறாய். நான் என் பிடியை விலக்கிக்கொள்ள கொஞ்சம் பலத்தை உபயோகித்தால், நீ கீழே விழுந்து மண்டையை உடைத்துக்கொள்ளுகிறாய். ஆகையால், நான் இனி பாராக்காரனைக் கூப்பிடத்தான் போகிறேன். இதனால் வேறு எப்படிப்பட்ட துன்பங்களுக்கு நாம் ஆளானாலும் கவலை இல்லை. பரஸ்திரீ கவனம் கூடாது என்ற நிலையிலிருந்து நான் ஒரு நாளும் வழுவி நடக்கமாட்டேன்'' என்று அழுத்தமாகக் கூறினான்.

உடனே இந்திராபாயி, ''அப்படியானால், நான் உங்களை இதோ படுக்கைக்கு இழுத்துக்கொண்டு போகிறேன். நீங்கள் கூச்சலிட்டுப் பாராக்காரனைக் கூப்பிடுங்கள். யாருடைய கை ஓங்குகிறது என்பதைப் பார்ப்போம். இப்படிப்பட்ட அபூர்வ குணமுடைய ஆண்பிள்ளை இந்த உலகத்திலேயே இருக்க மாட்டான் என்று நினைக்கிறேன். கேவலம் ஒரு பேடிகூட இந்த மாதிரி நடந்துகொள்ள மாட்டானே. நீங்கள் மகா சௌரியவான் என்று நான் மதித்து உங்கள் மேல் பிரியம் கொண்டதற்கு இதுதானா வெகுமதி? உங்களிடத்தில் ஆண்மையில்லையா? ஒருபெண் பிள்ளையின் கையில் அகப்பட்டுக் கொண்டு, சரியான ஆண்பிள்ளை இப்படித்தானா மகா கேவலமாக நடந்துகொள்வான்? நீங்கள் என்ன சொன்னாலும் இன்று நான் உங்களை விடப்போகிறதே இல்லை''என்று கூறியவண்ணம், தலைகால் தெரியாமல் மூர்க்கமும், ஆவேசமும் கொண்டு அவனைப் பிடித்துத் தாறுமாறாகக் கட்டி உருட்டிப் படுக்கையை நோக்கி இழுக்கிறாள். அவளது வாயில் நுரை தள்ளுகிறது. மூச்சு இறைக்கிறது. கைகால்கள் தடுமாறுகின்றன. சேலை அவிழ்ந்து போகிறது. தலைமயிர் சின்னாபின்னப்பட்டு சீர்குலைந்து புரளுகிறது. ஆவேசங் கொண்டவள்போல, ஒரே மூர்க்கமாக அவனைப் பிடித்து இழுக்க, அவன் அதற்குமேல் கொஞ்சமும்

தாங்கமாட்டாதவனாய்த் தனது பொறுமையை இழந்து தனது முழு பலத்தையும் வெளிப்படுத்தி, அவளது கைகளிரண்டையும் இறுகப்பிடித்து, அவளைத் தூர நகர்த்தி விட அவள் மறுபடியும் வேண்டுமென்றே அப்பால் சாய்ந்து, ''ஐயோ செத்தேன்'' என்று பெருங் கூச்சலிட்டவளாய்த் தரையில் படேரென்று விழுந்தாள். விழுந்தவள் மறுபடியும் எழுந்திருக்காமலும், அசையாமலும், மூச்சு விடாமலும் அப்படியே கிடந்தாள்.

அவ்வாறு அவள் வீழ்ந்ததைப்பற்றி நிரம்பவும் விசனமுற்ற கலியாணசுந்தரம் அவள் பேசாமல் படுத்திருப்பது ஒருவிதமான பாசாங்கு என்று நினைத்துக் கால்நாழிகை நேரம் மெளனமாக இருந்தான். ஆனால், அவள் அப்படி சும்மா இருக்கக் கூடியவளல்ல வென்ற எண்ணம் தோன்றியதாகையால், அவன் மெதுவாக அவளண்டை நெருங்கி, ''இந்திராபாயீ! இந்திராபாயீ!'' என்று இருமுறை கூப்பிட்டுப் பார்த்தான். மறுமொழி கிடைக்கவில்லை. உடனே, அவன் மெதுவாக அவள்மீது கையை வைத்துத் தொட்டுப் பார்த்தான். உடம்பு சில்லிட்டு வியர்வை நிறைந்திருந்தது. நாடியும் அடித்துக் கொள்ளவில்லை. அவள் ஒருவேளை இறந்துபோய் விட்டாளோ என்ற திகில்கொண்டு அவன் அவளைப் பிடித்து இரண்டொரு முறை அசைத்தான். உடம்பு பிணம்போல விறைப்பாக இருந்தது. என்ன செய்வான்? அவனது மனம் விவரிக்க முடியாதபடி கலங்கித் தவித்தது. அவன் உடனே விளக்கண்டை ஓடி அதைக் கொளுத்தி எடுத்துக்கொண்டு வந்து, ஒரு குவளையில் தண்ணீரும் கொணர்ந்து வைத்துக்கொண்டு, அவளது முகத்தில் தண்ணீரைத் தடவி, ''இந்திராபாயீ! இந்திராபாயீ! விழித்துக்கொள்; கொஞ்சம் தண்ணீர் குடி. குவளையை இதோ வாயில் வைக்கிறேன்'' என்று கூறிய வண்ணம் அவளது முகத்தைத் திருப்பி விளக்கு வெளிச்சத்தில் பார்த்தான். பார்க்கவே அவள் தனம், அம்மாளு ஆகிய

இருவரோடும் கூடவந்த தங்கையான அபிராமியாக இருக்கக் கண்ட நமது கலியாணசுந்தரம் அப்படியே ஸ்தம்பித்துப்போய், ''ஆ! அபிராமீ! இந்திராபாயீ என்ற பொய்ப்பெயர் வைத்துக்கொண்டு வந்து நீ இவ்வளவு நாழிகை நேரம் என்னை ஏமாற்றி வதைத்துவிட்டாய்! உன்னுடைய பிடிவாதம் எல்லாம் என்னிடம் செல்லும் என்றா நினைத்தாய்! நானா ஏமாறுகிறவன்!'' என்று கூறியவண்ணம், அவளது வாயைத் திறந்து தண்ணீரை ஊற்ற முயன்றான்.

அந்தச் சமயத்தில் அந்த அறையின் கதவு தடாரென்று திறந்து கொண்டது. கலியாணசுந்தரம் திடுக்கிட்டுக் கிலிகொண்டு திரும்பிப் பார்க்க, முதலில் பாராக்காரனும், அவனுக்குப் பின்னால், போலீஸ் கமிஷனரும் அவரைத் தொடர்ந்து கலியாணசுந்தரத்தின் ஆருயிர்க் காதலியான ஷண்முகவடிவும் வந்ததைக் கண்ட நமது யௌவனப் புருஷன் பிரமித்து ஸ்தம்பித்து, அது கனவோ நனவோ என்று சந்தேகித்திருக்க, அப்போது பாராக்காரன் கமிஷனரை நோக்கி, ''அதோ பார்த்தீர்களா! சுவரில் தொளை செய்யப்பட்டிருக்கிறது. நானும் இவ்விடத்தில் அரை நாழிகை நேரமாக இருந்து இங்கே நடந்ததையெல்லாம் கவனித்துக்கொண்டே இருந்து கடைசியில் உங்களிடம் வந்து தெரிவித்தேன். இந்த மனிதன் அநியாயமாக இந்தப் பெண்ணைக் கொன்றுவிட்டான். இவனை நாம் அடுத்த அறையில் அடைத்து வைத்திருந்தோம். எப்படியோ தந்திரம் செய்து இந்தச் சுவரைக் குடைந்துகொண்டு இந்த அறைக்கு வந்து, இங்கே அடைபட்டிருந்த இந்தப்பெண்ணை பலாத்காரம் செய்து, கற்பழித்து அநியாயமாகக் கொன்றுவிட்டான். இப்போது கடைசியாக இவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டீர்களல்லவா? இந்தப் பெண் இவனுடைய பிரியத்துக்கு இணங்கிவராமல் பிடிவாதம் பிடித்ததாகவும் இவன் ஏமாறிப் போகாமல், இவளைக் கற்பழித்தாகவும் சொன்னதைக் கேட்டீர்களல்லவா?'' என்றான்.

அதே நிமிஷத்தில், கீழே படுத்திருந்த இந்திராபாயி என்று பொய்ப் பெயர் வைத்திருந்த அபிராமி சடேரென்று எழுந்து, "ஐயையோ! நீங்கள் எல்லோரும் இவ்வளவு நேரம் எங்கே போனீர்கள்? நான் எத்தனை தடவை கூச்சலிட்டு அழைத்தேன். இந்த மனிதன் சுவரைக் குடைந்துகொண்டு என்னுடைய அறைக்கு வந்து என்னைப் பலாத்காரம் செய்து அடித்துக் கீழே தள்ளி என்னுடைய கற்பை அழித்துவிட்டானே! இதோ பாருங்கள்; என்னுடைய மண்டை உடைந்து இரத்தம் கொட்டுகிறது" என்று கூறி இரத்தமயமாக இருந்த தனது சேலையையும் தலையையும் காட்டிப் பிரமாதமாகக் கையைப் பிசைந்துகொண்டு பிரலாபித்து ஓங்கி அழத் தொடங்கினாள்.

அதைக் கேட்ட கலியாணசுந்தரம் வாய்திறந்து பேசமாட்டாமல் சித்திரப் பதுமைபோல அசைவற்று ஓய்ந்து நின்று விட்டான். அவ்வாறு தனது காதலன் கையும் களவுமாகப் பிடிபட்டதைக் கண்ட ஷண்முகவடிவு அப்படியே மூர்ச்சித்து வேரற்ற மரம்போலவும் உயிரற்ற பிணம்போலவும் தரையில் சாய்ந்து விட்டாள்.

## 30-வது அதிகாரம்

## கபட நாடகம்

திருவாரூருக்கு அருகிலுள்ள தனது மாளிகையிலிருந்த ஷண்முகவடிவு தூரதேசமான கோலாப்பூரில் கலியாண சுந்தரம் அடைபட்டிருந்த சிறைச்சாலைக்குள் இரவில், முற்றிலும் அகால வேளையில், அவனுக்கும் அபிராமிக்கும் சச்சரவு நடந்து கொண்டிருந்த முக்கியமான சமயத்தில் எப்படி வந்து சேர்ந்தாள் என்ற கேள்வி உண்டாவது இயற்கை. ஆதலால், அந்த விஷயத்தை நாம் கவனிப்போம்.

அம்மாளு, தனம், அபிராமி, கலியாணசுந்தரம் முதலியோர் செஞ்சிக்கோட்டையிலிருந்து ஒரே வண்டியில் உட்கார்ந்து நெடுந்தூரம் பிரயாணம் செய்து கடைசியில் கோலாப்பூரை அடைந்த இரவில் நமது யௌவன வீரன் ஷண்முகவடிவிற்குக் கடிதம் எழுதியனுப்பி வைத்தான் என்பது முன்னரே சொல்லப்பட்ட விஷயம். அந்தக் கடிதத்தில் அவன் தனது மட்டற்ற வாஞ்சையையும், மனங்கொள்ளாக் காதலையும் தத்ரூபம் விவரித்து எழுதியதன்றி, தான் அந்தப் பெண்களைக் கண்டது முதல் கோலாப்பூருக்குப் போய்ச் சேர்ந்தது வரையிலுள்ள சகலமான வரலாறுகளையும் எழுதியனுப்பி யிருந்தான். அதுவுமன்றி, அம்மாளு, தனம் ஆகிய இரண்டு பெண்களும் வண்டிக்குள் இருளில் செய்த விஷமச் செய்கை களையும் அவைகளினால் தான் ஏமாறிப் போகாமல் ஜாக்கிரதையாக நடந்து கொண்டதையும் அவன் ஒருவாறாக சுருக்கமாய் எழுதியனுப்பி இருந்தான். அந்தக் கடிதத்தைப் படித்த பெண்மணியான ஷண்முகவடிவு தனது ஆருயிர்க் காதலன் தன்மீது வைத்திருந்த மாறாத பிரேமையையும், அவனது உறுதியான நல்லொழுக்கத்தையும் கண்டு கட்டிலடங்கா ஆனந்தம் எய்திப் பூரிப்படைந்தாள். ஆனாலும், அம்மாளு, தனம் ஆகிய இருவரது இழி செயல்களையும், பெண்கள் செய்யத்தகாத அதிஅக்கிரமக் காரியங்களையும் படித்தறிந்து மிகுந்த அருவருப்பும், ஆத்திரமும் அடைந்ததன்றி, அந்த விஷயங்களை மறுபடியும் மனதால் நினைக்கவும் வெட்கிக் குன்றியவளாக இருந்தாள். அந்த நிலைமையில் அவள் அந்தக் கடிதத்திற்கு உடனே மறுமொழி எழுதித் தபாலில் அனுப்பி வைத்தாள்.

அம்மாளு, தனம் முதலியோரிடம் வெகு எச்சரிக்கையாக நடந்து, தமது முக்கியக் கருத்தை மாத்திரம் முடித்துக்கொண்டு கூடிய சீக்கிரத்தில் திரும்பிவந்துவிட வேண்டும் என்று அவள் கேட்டுக்கொண்டதன்றி, அவனுக்கு வழியில் எவ்விதத் தீங்கும்

நேராமல் கடவுள் காப்பாற்றி க்ஷேமமாக ஊரில் கொண்டுவந்து சேர்க்க வேண்டும் என்று தான் தனது இஷ்ட தெய்வங்களை இரவு பகல் பிரார்த்தித்துக் கொண்டிருப்பதாகவும் எழுதி யனுப்பினாள். அதைப் பெற்ற கலியாணசுந்தரம் திரும்பவும் அந்த மாதரசிக்கு இன்னொரு கடிதம் எழுதியனுப்பினான். அது முந்திய கடிதத்தைக் காட்டிலும், பன்மடங்கு அதிக உருக்கமும் வாத்சல்யமும் நிறைந்ததாக இருந்தது. ஆனாலும், நிரம்பவும் சுருக்கமாகவும் அம்மாளு, தனம் முதலியோரைப் பற்றிய விஷயமே இல்லாததாகவும் இருந்தது. அதுவுமன்றி, அதன் பிறகு தான் மறுபடியும் சில தினங்களில் கடிதம் எழுதித் தனது விலாசத்தைத் தெரிவிக்கிற வரையில் தனக்கு மறுமொழி எழுத வேண்டாம் என்றும் அவன் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தான். ஆகவே, ஷண்முகவடிவு அவனது அடுத்த கடிதம் எப்போது வரும் வரும் என்று மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்த வண்ணம் இருந்தாள்.

அவ்வாறு சில தினங்கள் கழிந்தன. கோலாப்பூரிலிருந்து கடிதம் வரவில்லை; ஒவ்வொரு நாட் காலையிலும் தபாற் காரன் எப்போது வருவான் வருவான் என்று வழிபார்த்துப் பார்த்து, ஒவ்வொரு நாளும் ஏமாற்றமடைந்து ஏங்கித் தவிக்கலானாள். பல நாட்கள் கழிந்தன. ஒரு வாரமும் கழிய, ஒரு பக்ஷமும் ஒழிந்தது. அப்போதும் கடிதம் வரவில்லை. தனது ஆருயிர்க் காதலருக்கு இடைவழியில் ஏதேனும் அபாயம் நேர்ந்திருக்குமோ, அல்லது அம்மாளு, தனம் முதலியோர் ஏதேனும் பொல்லாங்கு இழைத்திருப்பார்களோ என்று அந்த நற்குண அணங்கு பலவாறு சிந்தித்து உருகி இரவு பகல் அதே நினைவாக இருந்து உழன்று ஆறாத்துயரத்தில் அழுந்திப் போனாள். மூன்று வார காலமும் கழிந்து, சுமார் ஒருமாத காலமாயிற்று. அவளது மனவேதனை சிறிதும் சகிக்க வொண்ணாததாகவும் அபாரமானதாகவும் பெருகிவிட்டது. அதற்கு மேல் தனக்குக் கடிதம் வராது என்ற உறுதியே மேலாடத்

தொடங்கியது. தனது காதலருக்கு எதிர்பாராத ஏதோ தீங்கு நேர்ந்துவிட்டது என்பதும் நிச்சயமாகத் தோன்றியது. அவருக்கு எவ்விதமான கெடுதல் உண்டாகியிருக்குமோ என்று அவள் பலவாறு யூகித்து யூகித்துப் பார்க்கிறாள். எதையும் அவள் நிச்சயம் செய்யமாட்டாத நிலைமையில் இருந்து தணலின்மேல் வீழ்ந்த புழுவைப் போலத் துடிதுடித்துப் பரிதபிக்கலானாள். ஒரு நிமிஷம் கழிவது ஒரு கற்ப காலம்போலத் தோன்றியது. அவளது மனம் ஆகாரம் தூக்கம் முதலிய எவ்வித தேக சௌக்கியத்தையும் நாடாமலே இருந்தமையால் தேகம் துரும்பாக மெலிய, முகம் கவலை கொண்டு வெளிறடைந்து போயிற்று. ஒருகால் அவரது உயிருக்கே ஏதேனும் ஹானி நேர்ந்திருக்குமோ என்ற நினைவே உரமாக எழுந்து அவளை அநவரதமும் சஞ்சலத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தது. அவள் தனது வேலைக்காரியைத் திருவாரூருக்கு அனுப்பிக் கலியாண சுந்தரத்தின் வீட்டிலிருந்த அவனது வேலைக்காரி, சிவ பாக்கியம் முதலியோருக்கு ஏதாவது தகவல் கிடைத்ததோ என்பதைக் கேட்டறிந்துவரச் செய்தாள். ஒருமாத காலமாகக் கடிதம் வரவில்லை என்பதைக் கேட்டவுடனே அவர்களும் மிகுந்த கலக்கமும் கவலையும் அடைந்து, அங்கிருந்து புறப்பட்டு ஷண்முகவடிவினது மாளிகைக்கு வந்து அவளுக்குப் பலவாறு தேறுதல் சொல்லிக் கொண்டிருந்தனர். சிவபாக்கியம் தனது அக்காள்மார்கள் கலியாணசுந்தரத்தினிடம் நடந்து கொண்ட விருத்தாந்தங்களைக் கேட்டு அளவற்ற வெட்கமும் அவமானமும் அடைந்து நிரம்பவும் குன்றிப்போனதன்றி, தனது சகோதரிகள் எப்படிப்பட்ட இழிவான காரியத்திற்கும் பின் வாங்காத பரத்தையர் ஆதலால், அவர்களே கலியாணசுந்தரத்தின் மனதை ஒருகால் கலைத்து, அவரது புத்தியை மாற்றி யிருப்பார்களோவென்று சந்தேகித்துத் தனது சம்சயத்தை ஒருவாறு வெளியிட்டாள். மகா பரிசுத்த குணமுடைய புண்ணிய வதியான ஷண்முகவடிவு அதை ஒப்புக் கொள்ளவில்லை. தனது ஆருயிர்க் காதலர் பரம உத்தம புருஷர் என்பது தன் மனதிற்கு

நிச்சயமாகத் தெரியும். ஆதலால், அவர் அந்தப் பெண்களினது மோக வலையில் ஒருநாளும் அகப்படக்கூடிய மனிதரே அல்ல என அவள் உறுதியாகக் கூறினாள். ஆனாலும், ஒருகால் அப்படித்தான் இருக்குமோ என்ற சந்தேகம் அடிக்கடி அவளுக்கு மிஞ்சி, அவளது மனதில் தானாக எழுந்தெழுந்து மறைந்து கொண்டிருந்தது. ஆனாலும், அவள் தனது காதலரைப் பற்றி தான் அவ்வாறு சம்சயப்படுவது முற்றிலும் தவறு என்று அவள் அடிக்கடி தனது மனதைக் கண்டித்துக் கொண்டே வந்தாள். நிமிஷத்துக்கு நிமிஷம் அவளது வியாகுலம் பாம்பின் விஷம்போலப் பெருகி அவளை உருக்குலைத்துப் பாழாக்கிக் கொண்டே இருந்தது. உலகமெல்லாம் இருண்டு சந்தோஷமற்ற அந்தகாரத்தில் மூழ்கிப் போனதுபோலத் தோன்றியது. அந்த நிலைமையில் அவள் படுத்த படுக்கையாக வீழ்ந்து விட்டாள். சிவபாக்கியம் முதலியோர் அவளுக்குரிய பணி விடைகளைச் செய்து அவளைத் தேற்ற முயன்றதோடு அவளது அத்தைக்குச் செய்யவேண்டிய சகலமான உபசரணைகளையும் கவனித்து வந்தனர். அதற்குமேல் கடிதமும் வரப் போகிறதா என்று அவர்கள் முற்றிலும் நம்பிக்கை இழந்திருந்த சந்தர்ப்பத்தில் ஒருநாள் காலையில் திடீரென்று தபால்காரன் உட்புறத்தில் வந்து ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போனான்.

அவ்வாறு எதிர்பாரா வகையில் கடிதம் வந்ததைக் கண்ட பெண்டீர் அனைவரும் அதன் விஷயம் இன்னதென்பதை அறிய நிரம்பவும் ஆவல்கொண்டு துடித்து நின்றனர். அது காறும் படுக்கையை விட்டு எழுந்திருக்கமாட்டாமல் துவண்டு தளர்ந்து கிடந்த ஷண்முகவடிவு என்னும் மின்னற்கொடியாள் சடக்கென்று எழுந்து உட்கார்ந்து கொண்டாள். தண்ணீர்க் காணாப் பயிர்போல வாடி யிருந்த அவளது மனமும் பொங்கி எழுந்தது. முகம் சந்தோஷத்தினால் மலர்ந்தது. அதற்குள் இருக்கும் செய்தி நல்லதாக இருக்குமோ கெட்டதாக இருக்குமோ என்ற சந்தேகம் பலமாக எழுந்து அவளது மனதை

மிகுந்த வேதனைக்கு ஆளாக்கியது. அவள் கடிதத்தைப் பிரிப்பதற்குள் கைகள் வெடவெடவென்று நடுங்கின. மனம் எண்ணாததை எல்லாம் எண்ணியது. அந்த ஒரு விநாடி நேரமும் ஒரு யுகம்போலத் தோன்றியது. அவள் நிரம்பவும் பாடுபட்டுத் தன் மனதை ஒருமுகப்படுத்தி அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினாள். அந்தக் கடிதம் அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

மெத்த அவசரம்

ஷண்முகவடிவு அம்மாளுக்கு,

நீ கலியாணம் செய்துகொள்ள எண்ணியிருந்த உன் ஆருயிர் நண்பரான கலியாணசுந்தரம் மகா அபாயகரமான நிலைமையில் இருக்கிறார். இந்தக் கடிதத்தைக் கண்ட அதே க்ஷணத்தில் நீ புறப்பட்டுக் கோலாப்பூருக்கு வந்து சேராவிட்டால், காரியம் முற்றிலும் விபரீதமாக முடிந்துவிடும். நீ இந்த ஊருக்கு வந்தவுடனே இங்கே உள்ள போலீஸ் கமிஷனரிடம் நேரில் போய் விசாரிப்பாயானால், கலியாண சுந்தரத்தைப் பற்றிய உண்மையை எல்லாம் நீ உடனே தெரிந்து கொள்ளலாம். யாரோ எழுதினார்கள் என்று அசட்டையாக இருந்தால், அதன்பிறகு நீ உன் ஆயிசுகால பரியந்தம் மனவேதனைக்கு இரையாக நேரிடும். தாமதம் இன்னமும் அதிக பிரதிகூலத்தை உண்டாக்குவது நிச்சயம்.

இங்ஙனம்,
உன்னிடம் பட்சமுள்ள ஒருவர்.

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படிக்க, ஷண்முகவடிவும் மற்றவர்களும் அப்படியே கலகலத்து ஸ்தம்பித்துப் போயினர். சிறிதுநேரம் வரையில் யார் என்ன பேசுவது என்பதை அறியாமல் எல்லோரும் மௌனமாக இருந்தனர் என்றாலும், ஒரு விஷயம் நிச்சயமாகப் புலப்பட்டது.

அதுவரையில் கலியாணசுந்தரம் உயிரோடு இருக்கிறார் என்ற ஒரு விஷயம் நன்றாகத் தெரிந்தது. இருந்தாலும், அவருக்கு எவ்விதமான அபாயம் நேர்ந்ததோ, தான்போய் அவரைக் காண்பதற்குள் என்னென்ன விபரீதங்கள் சம்பவிக்குமோ என்ற கோடாநுகோடி எண்ணங்கள் தோன்றின. அந்தக்கடிதம் யாரால் எழுதப்பட்டிருக்கும் என்ற சந்தேகமும் பலமாக எழுந்து வதைத்தது ஆகையால், அவ்விஷயத்தில் அவர்கள் எவ்வித மான முடிவையும் செய்யக் கூடாமல் இருந்தனர். அந்தக் கடிதம் ஏதாகிலும் கெட்ட எண்ணத்தோடு யாராவது பகைவரால் எழுதப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் உண்டானது. ஆனாலும், அதற்கிணங்க ஒருமாத காலமாய்க் கலியாணசுந்தரத்தின் இடத்திலிருந்து கடிதமே வராதிருந்தது, அவருக்கு ஏதோ அவகேடு நேர்ந்திருக்கிறது என்பது இருவகையிலும் உண்மை யாகப்பட்டது.

ஆகையால், தான் அவசியம் புறப்பட்டுப்போய் உண்மையை அறிந்துகொள்ள வேண்டும் என்ற தீர்மானம் அந்தப் பூங்கோதையினது மனதில் உடனே ஏற்பட்டு விட்டது. ஆனாலும், அநாதரவான நிலைமையில் தனது அத்தையை விட்டுப் போவது பெருத்த பாவம் என்ற நினைவு குறுக்கிட்டு வதைத்தது. இருந்தாலும், அந்த அபாய சமயத்தைப் பொருட் படுத்தாமல் தான் சும்மா இருந்துவிட்டால் தன்னால் தனது காதலர் தப்பக் கூடியதாக இருந்தால், தனது உதவி இல்லாமல் போவதனால், அவருக்கு ஏதேனும் பெருத்த பொல்லாங்கு நேர்ந்துவிடுமோ என்ற கவலையே பெரிதாக எழுந்து வதைத்தது.

ஆகையால், அவர்கள் நால்வரும் கலந்து வெகுநேரம்வரை யில் யோசனை செய்து கடைசியில் ஒருவித முடிவிற்கு வந்தனர். சிவபாக்கியமும், முத்தம்மாளும் ஊரிலிருந்து அத்தையம் மாளை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டிருப்பது என்றும், ஷண்முகவடிவும் கலியாணசுந்தரத்தின் வேலைக்காரியும்

அன்றைய தினமே ஒரு பிரத்தியேகமான வண்டி அமர்த்திக் கொண்டு கோலாப்பூருக்குப் புறப்பட்டுப் போவது என்றும் அவர்கள் தீர்மானித்துக் கொண்டனர். சிவபாக்கியம் ஷண்முக வடிவைத் தனது சொந்த சகோதரியைக் காட்டிலும் பதினாயிர மடங்கு விசேஷமாக மதித்து அவளிடத்தில் அளவற்ற வாத்சல்யமும், பாசமும் காட்டி வந்தாள். ஆதலால், அவள் தனது அத்தையை நிரம்பவும் ஜாக்கிரதையாகவும் பட்சமாகவும் பார்த்துக்கொள்வாள் என்ற தைரியம் ஷண்முக வடிவினது மனதில் ஏற்பட்டது. ஆகையாலும், தனது வேலைக்காரியான முத்தம்மாள் தங்களது மாளிகையில் சகலமான விஷயங் களையும் செய்து செய்து நன்கு பழகி இருந்தவள். ஆதலால், அவளை முற்றிலும் நம்பி எல்லாப் பொறுப்பையும் அவளிடம் விட்டுப்போகலாம் என்ற மனோதிடம் உண்டானது. ஆகையால், அவள் கலியாண சுந்தரத்தின் வேலைக்காரியைத் தனக்குத் துணையாக அழைத்துக் கொண்டு அன்றைய தினமே பிரயாணமானாள்.

அவளும் வேலைக்காரியும் வண்டியில் உட்கார்ந்தபடி விடியற்காலத்திலிருந்து காலை பத்துமணி வரையிலும் பிற்பகல் இரண்டு மணிமுதல் மாலை ஆறுமணி வரையிலும் பிரயாணம் செய்வதும், மற்றக் காலங்களில் ஆங்காங்கு குறுக்கிடும் சத்திரங்களில் இறங்கித் தங்களது ஸ்நானம் சாப்பாடு நித்திரை முதலியவற்றை முடித்துக் கொள்வதுமாகச் செய்து சில தினங்களில் கோலாப்பூர் போய்ச்சேர்ந்து அந்த ஊரில் அதற்குமுன் அம்மாளு, தனம் முதலியோர் இறங்கி இருந்த சத்திரத்தை அடைந்தனர்.

தொலைதூரத்தில் இருந்த கோலாப்பூரை நோக்கி, ஓயாமல் ஒரே மும்முரமாகப் பிரயாணம் செய்து நல்ல போஜனம் சரியான நித்திரை முதலியவை இல்லாமல் நிரம்பவும் தேகப் பிரயாசை அடைந்து அவர்கள் அந்த ஊருக்குப் போய்ச் சேர்ந்தனர். ஆதலால், அவர்களது உடம்பு முற்றிலும்

அசௌகரியப்பட்டுப் போய்விட்டது. மெல்லிய சரீரத்தை உடையவளான ஷண்முக வடிவினது தேகம் பச்சைப் புண்ணாகப் போய் அப்படி இப்படி அசைவதற்கும் இயலாத நிலைமையை அடைந்து விட்டது. ஆனாலும், தனது ஆருயிர்க் காதலரது உண்மையான நிலைமையை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலினாலும், மனோவேகத்தினாலும் தூண்டப்பட்டவளாய்த் தனது அயர்வையும் அலுப்பையும் சிறிதும் பொருட்படுத்தாமல் கருமமே கண்ணாக இருந்தாள். ஆனால், அவளோடு கூடவந்த வேலைக்காரி அவ்வளவு அதிகமான மனோதிடத்தினாலும் கவலையினாலும் ஊக்கப்பட வில்லை. ஆகையால், அவளது நிலைமை அதிக கேவலமாக இருந்தது. உடம்பில் புண்பட்டுச் சோர்ந்து ஓய்ந்து பிரக்ஞை யில்லாமல் போய்விட்டமையால், அவள் தன்னையும் உலகையும் மறந்து படுத்த படுக்கையாக இருந்துவிட்டாள். ஷண்முகவடிவினது நிலைமை நிரம்பவும் பரிதாபகரமானதாக இருந்தது. அவ்வளவு பாடுபட்டு நெடுந்தூரம் பிரயாணம் செய்துஅங்கே வந்தபிறகு அலுத்துச்சும்மாயிருந்து காலஹரணம் செய்யாமல் எப்படியும் தான் உடனே போய்த் தனது காதலரது நிலைமையை அறிந்துகொள்வதே தக்க காரியமென்ற எண்ணம் அவளைத் தூண்டியது. தான் யௌவனப் பருவ ஸ்திரீயா யிருப்பதுபற்றிப் போலீஸ் கமிஷனரிடம் வேலைக்காரியை அனுப்பி விஷயத்தைத் தெரிந்துகொண்டு போகலாமென்றால், அவள் ஸ்மரணையற்று அலங்கோலமான நிலைமையில் இருந்தாள். ஆகையால், அவள் அந்த விபரீதமான நிலைமையில் தான் எப்படி நடந்துகொள்வது என்பதை அறியாதவளாய்ச் சிறிது நேரம் தத்தளித்திருந்து அந்த வேலைக்காரிக்குரிய சௌகரியங்களைச் செய்தபிறகு தானே நேரில்போய் போலீஸ் கமிஷனரை அவரது கச்சேரியில் பார்க்கவேண்டும் என்று முடிவு செய்து கொண்டு சத்திரத்திலிருந்து புறப்பட்ட சமயத்தில், அவள் இருந்த இடத்திற்கு ஒரு ஸ்திரீ வந்து புன்னகை தவழ்ந்த இனிய முகத்தோடு இனிமையாகப் பேசத் தொடங்கி, ''அம்மா!

நீ திருவாரூரிலிருந்து வருகிறாயா? உன் பெயர் ஷண்முக வடிவு அல்லவா?'' என்றாள்.

அப்படி வந்து சம்பாஷித்த ஸ்திரீயினது வயது நாற்பதிற்குள்ளாகவே இருக்கலாம். ஆனால், அவள் சிவப்பான செழித்த உடம்பும், அழகும், கம்பீரமும், பெருந்தன்மையும் நிறைந்த தோற்றமும், உயர்வான நவரத்ன ஆபரணங்களும் பட்டாடைகளும் உடையவளாகக் காணப்பட்டாள். அவள் தக்க பெரிய மனிதரது வீட்டைச் சேர்ந்த ஒரு சீமாட்டி என்பது எளிதில் விளங்கியது. அன்னிய தேசமான அந்த தூரதேசத்தில் தனக்கு அறிமுகமான மனிதர் ஒருவர்கூட இல்லாத அந்தப்பெரிய பட்டணத்தில் எவரது உதவியும் அன்றி, தான் கோரிவந்த காரியத்தை எப்படி நிறைவேற்றிக்கொள்வது என்ற பெருத்த பீதியும் கவலையும்கொண்டு நிரம்பவும் மலைப்படைந்து, எந்தக்காரியத்தையும் செய்யத் தயங்கியிருந்த அபலைப் பெண்ணான நமது ஷண்முகவடிவு கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டதுபோல நல்ல சமயத்தில் யாரோ ஒரு ஸ்திரீ திடீரென்று தோன்றித் தனது ஊரையும் பெயரையும் வெளியிட்டுத் தன்னோடு அத்யந்தப் பிரியத்தோடு பேசியதைக் கண்டு அளவற்ற மனோதிடமும் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் அடைந்தவள் ஆனாள். அதுவுமன்றி அந்த ஊரிலிருந்து தனக்குக் கடிதம் எழுதியனுப்பிய மனிதரைத் தான் எப்படிக் கண்டுபிடிப்பது என்று அவள் நிரம்பவும் கவலையுற்றிருந்தாள். ஆதலால், அந்த ஸ்திரீ சொன்ன வார்த்தைகளிலிருந்து, அவளே தனக்குக் கடிதம் எழுதியிருக்க வேண்டும் என்ற ஓர் எண்ணமும் உண்டாயிற்று.

ஆகவே, நமது இளந்தோகையான ஷண்முகவடிவு அந்த ஸ்திரீயை மரியாதையோடு உபசரித்து விநயமாகப் பேசத் தொடங்கி, ''ஆம் அம்மா! நான் திருவாரூரிலிருந்து தான் வருகிறேன். என் பெயரும் ஷண்முகவடிவுதான். நீங்கள் யார் என்பது தெரியவில்லை. என்னுடைய பெயர் முதலிய

விவரங்களை நீங்கள் சொல்வதையும் நீங்கள் இப்போது என்னைப் பார்க்க வந்திருப்பதையும் கவனித்தால், எனக்குக் கடிதம் எழுதியனுப்பியவர்கள் நீங்கள்தான் என்று நினைக்கிறேன்'' என்றாள்.

அந்த ஸ்திரீ, ஒரு தாய் தனது சொந்த மகளிடத்தில் எவ்வளவு உருக்கமும் பாசமும் காண்பிப்பாளோ, அவ்வாறு ஷண்முக வடிவினிடத்தில் நடந்துகொண்டு, ''ஆம்; அம்மா! நான்தான் அந்தக்கடிதத்தை உனக்கு அனுப்பி வைத்தேன். அதை அசட்டை செய்து சும்மா இருந்துவிடாமல் நல்ல வேளையாக நீ உடனே புறப்பட்டு வந்தாயே! அதைப்பற்றி நான் நிரம்பவும் சந்தோஷப்படுகிறேன். என்னுடைய சொந்த ஊரும் தஞ்சாவூர்தான். இந்த ஊர்ப் போலீஸ் கமிஷனர் என்னுடைய நெருங்கிய பந்து. நான் அவருடைய வீட்டில் விருந்தாளியாக வந்திருக்கிறேன். நான் தஞ்சாவூரிலிருந்து இங்கே வந்து இரண்டு மாச காலமாகிறது. சில தினங்களுக்கு முன் ஒருநாள் ராத்திரி போலீஸ் கமிஷனர் போஜனம் செய்துவிட்டு வீட்டிலுள்ள பெண்பிள்ளைகளோடு வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்த காலத்தில் இந்தக் கலியாணசுந்தரத்தைப் பற்றிய வரலாறுகளை யெல்லாம் வெளியிட்டார். அப்போது உன்னைப்பற்றிய பிரஸ்தாபமும் வந்தது. போலீஸ் கமிஷனர் உள்பட நாங்கள் எல்லோரும் உன்னைப்பற்றித்தான் நிரம்பவும் விசனப் பட்டோம். நான் தஞ்சாவூர் மனிஷியாகையாலும், நீங்களும் அதே சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள் ஆகையால், மற்றவர்களைவிட எனக்கே உன் விஷயத்தில் நிரம்பவும் பரிதாபம் ஏற்பட்டு மனசைப் புண்படுத்தியது. நீயோ அநாதையான பெண். இந்த மனிதரை நீ கடைசி வரையில் நம்பியிருந்து மோசம் போய்விடப் போகிறாயே என்ற நினைவைக் கொண்டு நான் உனக்கு உடனே ஒரு கடிதம் எழுதினேன். நல்லவேளையாக நீ நேரில் வந்துவிட்டாய்; விஷயங்களை எல்லாம் நீ நேரிலேயே அறிந்துகொண்டு அதற்குத் தகுந்தபடி நடந்துகொள்'' என்றாள்.

அவளது சொற்களைக் கேட்ட ஷண்முகவடிவு முற்றிலும் கலங்கிக் குழப்பமடைந்து அவள் மறை பொருளாகச் சொன்ன விஷயங்களை அறிந்துகொள்ள மாட்டாதவளாய், "என்ன அம்மா! நீங்கள் சொல்வது என்றும் எனக்கு விளங்க வில்லையே! என்னுடைய புருஷர் செளக்கியமாக இருக்கிறாரா என்பதையும், அவர் எங்கே இருக்கிறார் என்பதையும் அவருக்கு எவ்விதமான அபாயம் நேர்ந்திருக்கிறது என்பதையும் முதலில் சொல்லுங்கள். மற்ற விவரங்களை நான் அப்புறம் தெரிந்து கொள்ளுகிறேன்" என்றாள்.

அதைக் கேட்டு வியப்பும், பச்சாதாபமும் அடைந்தவள் போலக் காணப்பட்ட அந்த ஸ்திரீ, "ஐயோ பாவம்! நீ அவரை இன்னமும் உன்னுடைய புருஷர் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். அப்படி நினைக்காதிருந்தால் நீ இவ்வளவு தூரம் ஏன் வரப்போகிறாய்? ஒருநாளும் வந்திருக்க மாட்டாய். அவருக்கு உடம்பில் யாதொரு கெடுதலும் இல்லை. அவர் செளக்கியமாகவே இருக்கிறார். ஆனால் அவருடைய மனசுதான் அடியோடு மாறுபட்டுக் கெட்டுப் போய்விட்டது. அதிருக்கட்டும். அவர் இப்போது எங்கே இருக்கிறார் என்பது கூட உனக்குத் தெரியாதா? அதை அவர் உனக்குக் கடிதத்தின் மூலமாகத் தெரிவிக்கவில்லையா?" என்றாள்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட ஷண்முகவடிவு தனது ஆசை நாயகர் உயிரோடு இருக்கிறார் என்பதை நிச்சயித்துக் கொண்டாள். ஆனாலும் அந்த ஸ்திரீயின் விபரீதச் சொற்களைக் கேட்டுப் பதறிப் போய், "அவர் எனக்குக் கடிதம் எழுதி சுமார் ஒருமாச காலமாகிறது. கடைசியாக எழுதிய கடிதத்தில் தாம் சில தினங்களுக்குப் பிறகு வேறு விலாசம் தெரிவிக்கிற வரையில், மறு கடிதம் அனுப்ப வேண்டாம் என்று அவர் எழுதித் தெரிவித்திருந்தார். அதன்பிறகு இதுவரையில், எனக்குக் கடிதமே கிடைக்கவில்லை. நான் நிரம்பவும் கவலைகொண்டு கலவரம் அடைந்து தவித்துக் கொண்டிருந்தேன். அந்தச்

சமயத்தில் உங்களுடைய கடிதம் வந்தது. அதைக் கண்டு பயந்து உடனே புறப்பட்டு வந்தேன். இங்கே நடந்த வரலாறு ஒன்றும் எனக்குத் தெரியாது. எல்லாவற்றையும் சொல்லுங்கள். அவர் இப்போது எங்கே இருக்கிறார்?'' என்று நிரம்பவும் ஆவலோடு வினவினாள்.

அதைக்கேட்ட அந்த ஸ்திரீ, ''அவர் இந்த ஒரு மாச காலமாக இந்த ஊர்ச் சிறைச்சாலையில் அடைபட்டிருக்கிறார்'' என்று வியப்போடு மறுமொழி கூறினாள்.

அதைக்கேட்ட ஷண்முகவடிவு கலங்கிக் கலகலத்துப்போய், ''ஹா! என்ன! என்ன! சிறைச்சாலையில் இருக்கிறாரா! என்ன ஆச்சரியம்! அவர் அற்பமான தவறையும் செய்யாத மகா உத்தமகுணமுடைய புருஷரல்லவா? அவர் எதற்காகச் சிறையில் இருக்கிறார்?'' என்று துடிதுடித்து விரைவாகக் கேட்டாள்.

அந்த ஸ்திரீ நிரம்பவும் இரக்கமாகவும் உருக்கமாகவும் பேசத் தொடங்கி, ''அம்மா! அந்த மனிதரை நான் நேரில் பார்த்தவளல்ல. அவர் எந்தக் குற்றம் செய்ததையும் நான் நேரில் பார்த்தவளல்ல. போலீஸ் கமிஷனர் பெரிய உத்தியோகஸ்தர். அவருடைய பார்வையில் எத்தனையோ கைதிகள் இருக்கிறார்கள். எல்லோரும் கீழ் அதிகாரிகளால் கைதுசெய்து அனுப்பப் பட்டவர்களே. அவர்கள் அனுப்பும் அறிக்கைகளைக் கொண்டே எல்லா வரலாறுகளையும் போலீஸ் கமிஷனர் அறிந்து கொள்ள வேண்டியவர். போலீஸ் கமிஷனர் நேரில் எதிலும் தலையிடுகிறதும் இல்லை; யாரையும் கைது செய்கிறதும் இல்லை. வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்ற காரணத்தினால், அவர் எவருக்கும் நன்மையோ தீமையோ செய்யக்கூடியவரல்ல. தங்களுடைய சிறைச்சாலையில் அடைக்கப்படும் கைதிகளுடைய வரலாற்றில் ஏதாவது வேடிக்கையாக இருந்தால், அவர் அதைத் தம்முடைய வீட்டுப் பெண்பிள்ளைகளிடம் விளையாட்டாக வெளியிடுவார். அதுபோலவே அவர் இந்த விஷயத்தையும் பிரஸ்தாபித்தவர்!

இந்தக் கலியாணசுந்தரம் என்பவருடைய பெயரே அது அல்லவாமே! அதுவாகிலும் உனக்குத் தெரியுமா?'' என்றாள்.

அதைக் கேட்ட ஷண்முகவடிவு திடுக்கிட்டு, ''என்ன ஆச்சரியம்! அவருடைய பெயரே அதுவல்லவா! அப்படி யானால் அந்தப் பெயர் பொய்யான பெயரா? அப்படியானால் உண்மையான பெயர் என்ன? ஒருவர் தம்முடைய பெயரை எதற்காக மறைத்துக் கொள்ளப் போகிறார்கள்? அதனால் என்ன லாபம் உண்டாகப் போகிறது? அவர் அப்படிப்பட்ட மோகத்தில் இறங்கக்கூடிய மனிதரே அல்லவே'' என்றாள்.

அந்த ஸ்திரீ, ''பாவம்! நீ ஒன்றையும் அறியாத சிறிய பெண் ணாக இருக்கிறாய். சகல விஷயத்திலும் அவர் உன்னை ஏமாற்றி விட்டதாகத் தெரிகிறது. கலியாணசுந்தரம் என்பது தம்முடைய பெயரல்ல என்பதையும், தாம் ஏதோ சில காரணங்களை உத்தேசித்துத் தம்முடைய சொந்தப் பெயரை மாற்றி வைத்துக் கொண்டிருப்பதாகவும் அவரே போலீஸ் கமிஷனரிடம் ஒப்புக் கொண்டிருக்கிறாரே. பிறகு வேறு சாக்ஷிகூட வேண்டுமா?'' என்றாள்.

ஷண்முகவடிவு ஸ்தம்பித்துப்போய், ''அப்படியா! அவரே ஒப்புக்கொண்டாரா? அப்படியானால் அவருடைய நிஜப்பெயர் என்னவாம்?'' என்றாள்.

அந்த ஸ்திரீ, ''அதைப் போலீஸ்கமிஷனர் எங்களிடம் சொல்லவில்லை'' என்றாள்.

ஷண்முகவடிவு, ''அப்படியானால் பெயரை மாற்றி வைத்துக் கொண்டிருக்கும் காரணத்தை முன்னிட்டே அவரைச் சிறைப் படுத்தி இருக்கிறார்களா? அப்படி மாற்றி வைத்துக்கொள்வது ஒரு பெரிய குற்றமாகுமா? ஒருவர் தம்முடைய பெயரை எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுகிறார்கள். அதனால், அவர் யாருக்காவது கெடுதலாவது மோசமாவது செய்து விட்டாரா? ஒன்றுமில்லையே'' என்றாள்.

அந்த ஸ்திரீ, ''அந்த மனிதர் உன்னிடத்தில் நிரம்பவும் அந்தரங்கமாகப் பழகி இருக்கிறார் என்பது தெரிகிறது. நீ அவரை உயிருக்குயிராக மதிக்கிறாய் என்பதும் பிரத்தியக்ஷமாகத் தெரிகிறது. அப்படியிருந்தும் அவர் தம்முடைய உண்மைப் பெயரை உன்னிடத்திலேயே சொல்லாமல் இதுவரையில் மறைத்து வைத்திருக்கிறார் என்கிறாயே. இப்படி வேறே யாராவது உலகத்தில் செய்வதுண்டோ? உன்னை அவர் கட்டிக் கொள்ளுகிறது என்று நீங்கள் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். அப்படி இருந்தும் உன்னிடத்திலேயே அவர் தமது உண்மையான பெயரைச் சொல்லாமல் மறைத்து வைத்திருக்கிறாரே. அதில் ஏதோ சூது இருக்கிறது என்பது தெரியவில்லையா? ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுதானே பதம். இந்த விஷயத்தைக் கொண்டே, அவர் இன்னமும் அநேக சூதான காரியங்களைச் செய்யத் தக்கவர் என்பது தெரியவில்லையா? அவர் தம்முடைய பெயரை மாற்றி வைத்துக்கொண்டதை ஒரு பெரிய குற்றமாக மதித்து அதற்காக மாத்திரம் இவர்கள் அவரைச் சிறைப்படுத்த வில்லை. அவர் செய்துள்ள இன்னும் மற்ற அக்கிரமங்களையும் இழிவான காரியங்களையும் நீ கேட்டால், இவர் பெயரை மாற்றி வைத்துக்கொண்டது நிரம்பவும் அற்பமான விஷயமாகத் தோன்றும். அவர் இந்த ஊருக்கு வரும்போது யாரோ சில தாதிப் பெண்களோடு சேர்ந்து வந்தாராம்; அந்தத் தாதிப் பெண்கள் தஞ்சாவூர் அரண்மனையிலிருந்து புறப்பட்டு பூனா தேசத்திலுள்ள தஞ்சாவூர் இளவரசருடைய பட்டமகிஷியிடம் வேலைக்குப் போகிறவர்களாம். அந்த மூன்று பெண்களும் மகா அற்புதமான அழகும் யௌவனப் பருவமும் வாய்ந்தவர்களாம். அவர் அவர்களை செஞ்சிக் கோட்டையில் கண்டாராம். கண்டவர் அந்த ஊரிலுள்ள சத்திரத்து மணியக்காரர் மூலமாகப் பலவகையில் தந்திரம் செய்து அந்தப்பெண்களோடு பழக்கம் செய்துகொண்டு அவர்களுக்குத் துணை வருகிற பாவனையாக அவர்களோடு ஒரே வண்டியில் வந்தாராம். அவர் அவர்கள்மேல்

மோகம் கொண்டு பலவகையில் அவர்களுடைய மனசைக் கலைத்து மயக்கிவிட்டாராம். அதுவரையில் நல்ல நடத்தை உடையவர்களாக இருந்த அந்தப் பெண்களில் மூத்த பெண்கள் இருவர் இவரைக் கண்டு மயங்கிப்போய் மதியிழந்து, இவரை அடைய வேண்டும் என்ற ஆசையோடு வண்டிக்குள் இருளில் ஏதேதோ பிரயத்தனம் செய்தார்களாம். முதலில் இவர் அவர்களுடைய பிரயத்தனத்துக்கு இணங்காதவர் போலப் பாசாங்கு செய்தாராம். அவர்கள் எல்லோரும் இந்தச் சத்திரத்தில் வந்து இறங்கினார்களாம். அதுவரையில் மன உறுதியோடு இருந்ததாகக்காட்டிக் கொண்ட இவர் அதன்பிறகு ஒருவார காலத்துக்குள் புது மனிதராக மாறிப் போய்விட்டாராம். அந்தப்பெண்கள் இருவரையும் இவர் ஆசைநாயகிகளாக்கிக் கொண்டு தம்மையும் உலகையும் மறந்து சிற்றின்பத்தில் ஆழ்த்தி குதூகல புருஷராக இருந்தாராம். அந்த இரண்டு பெண்களும் அதுபோலவே இவருடைய மையலில் ஆழ்ந்து மதிமயங்கித் தாங்கள் போகவேண்டிய வேலையையும் மறந்து இங்கேயே இருந்து விட்டார்களாம். அவர்கள் பூனாவுக்கு வரவேண்டிய காலத்தில் வரவில்லை என்பதைக் கண்ட இளவரசருடைய பட்டமகிஷி சேவகர்களை அனுப்ப, அவர்கள் இங்கே வந்து அந்த மூன்று தாதிப்பெண்களையும் அவர்களுடைய இஷ்டத்துக்கு விரோதமாக வற்புறுத்தி அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள். அதன்பிறகு இவர் அவர்கள் பிரிந்து போனதைக் குறித்து ஏக்கம் கொண்டு பைத்தியம் பிடித்தவர் போல, சில தினங்கள் வரையில் அவர்களுடைய நினைவையே தியானமாகச் செய்து கொண்டிருந்தார். அதன்பிறகு, இந்த ஊரிலுள்ள சில அயோக்கியர்களுடைய சிநேகம் எப்படியோ ஏற்பட்டுவிட்டது. அவர்களுடைய துர்போதனையின் மேல் இவர் இந்த ஊரிலுள்ள சில தாசிகளிடம் சிநேகம் செய்து கொண்டு கெட்டு அலைந்து திரிந்து கடைசியில் ஒரு பெரிய மனிதருடைய பெண்ணின்மேல் துர்மோகம் கொண்டு அவளுடைய அனுமதியில்லாமல் அவர்களுடைய மாளிகை

களுக்குள் நுழைந்து பலாத்காரம்செய்ய அவள் பயந்து நடுநடுங்கிக் கூச்சலிட, அவளுடைய சொந்தக்காரர்கள் வந்து இவரைப் பிடித்துப் போலீசாரிடம் ஒப்புவித்து விட்டனர். அவர்கள் இவரைக் கொண்டு போய்ச் சிறைச் சாலையில் அடைத்து விட்டார்கள். அதுமுதல் இவர் சிறைச்சாலையில் இருந்து வருகிறார். போலீஸ் கமிஷனர் இவரிடம் இரக்கம் கொண்டு இவரை எப்படியாவது தப்பவைத்து ஊருக்கு அனுப்பிவிட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராய் அடிக்கடி இவரிடம்போய் நல்லபுத்தி புகட்டி, உடனே இந்த ஊரைவிட்டுத் திருவாரூருக்குப் போய் முன் ஏற்பாட்டின்படி உன்னைக் கல்யாணம் செய்துகொண்டு, நல்ல வழியில் நடப்பதாக ஒப்புக்கொண்டால், தாம் இவரைத் தப்ப வைப்பதாகச் சொல்லிப் பார்த்தார். இவர் அதற்கு இணங்கவில்லை. இந்த ஊரிலுள்ள இவருடைய சிநேகிதை களை விட்டுப்போக இவருக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை யாம். உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள இவருக்குப் பிரியமில்லையாம். உன்னை இனி இவர் நினைக்கமாட்டாராம்; சிறைச்சாலையிலிருந்து வெளியில் வந்தபின் இவர் இந்த ஊரிலுள்ள முக்கியமான ஒரு தாசி வீட்டிலேயே இருந்து விடப் போகிறாராம். இதையெல்லாம் கேட்டுக்கொண்டு வந்த போலீஸ் கமிஷனர் நிரம்பவும் விசனத்தோடு இந்த விஷயங்களை எல்லாம் எங்களிடம் பிரஸ்தாபித்தார். அதுவும் அல்லாமல், கலியாணசுந்தரம் என்பவர் ஒரு பெரிய மனிதருடைய பெண்ணைப் பலாத்காரம் செய்த குற்றத்துக்காக சிறையில் இருக்கிறார் அல்லவா? அந்த வழக்கு இன்னம் இரண்டொரு தினங்களில் நியாயாதிபதிக்கு முன்பு விசாரணைக்கு வரப்போகிறது. அந்த விசாரணையில் இவர் உண்மையில் குற்றவாளிதான் என்பது நன்றாக ருஜுவாகி விடும். உடனே, இவருக்குக் குறைந்தது ஒரு வருஷ காலத்துக்காவது கடினகாவல் தண்டனையோ? அல்லது, பிரம்மாண்டமான அபராதமோ விதிக்கப்படுவது நிச்சயம். அந்த

விசாரணையில் அவருக்காகப் பரிந்து பேச வக்கீல் வைத்து எதிர்வாதம் முதலிய சகலமான நடிவடிக்கைகளையும் நடத்த அவருடைய மனிதர் யாராவது இருக்க வேண்டும் என்ற கருத்தோடுதான் நான் முக்கியமாக உனக்குக் கடிதம் எழுதி உன்னை வரவழைத்தது. அதுவும் அல்லாமல், நீபோய்ச் சிறைச் சாலையிலிருக்கும் இவரைக் கண்டு இவருக்கு நல்ல புத்திமதி சொல்லி, இவருடைய பைத்தியத்தை மாற்றி இந்த விசாரணை முடிந்தவுடனே உன்னோடு ஊருக்கு வந்துவிட இவர் இணங்கும்படி நீ செய்வதாக இருந்தால், போலீஸ் கமிஷனர் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து சாட்சிகளைக் கலைத்து இந்த வழக்கில் சரியான ருஜு ஏற்படாமல் செய்துவிடுவதாகச் சொல்லுகிறார். நான் உனக்குக் கடிதம் எழுதியிருக்கும் சங்கதி கமிஷனருக்குத் தெரியும். ஆனால், நீ இவ்வளவு தூரம் வருவோயோ மாட்டாயோ என்று நாங்கள் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்ததன்றி, இந்த ஊரிலுள்ள சத்திரங்களில் எல்லாம் சொல்லி வைத்திருந்தோம். திருவாரூரிலிருந்து யாராவது மனிதர் வந்தால், உடனே வந்து எங்களுக்குத் தகவல் கொடுக்கும்படி ஒவ்வொரு சத்திரத்திலும் நாங்கள் ஏற்பாடு செய்திருந்தோம். நேற்று இரவில் நீங்கள் இங்கே வந்து இறங்கியிருப்பதாக இந்தச் சத்திரத்து மணியக்காரர் வந்து சொன்னார். இவ்வளவு தூரம் வந்த அலுப்பினால் நீங்கள் சிரம பரிகாரஞ் செய்து கொள்வது அவசியம் என்று நினைத்து நான் நேற்று இரவில் வரவில்லை. இருந்தாலும், இந்த ஊர் உனக்குப் புது ஊர் ஆகையால், நீ அறியாத சின்னப் பெண் ஆகையால், நீ ஒன்றையும் அறிந்துகொள்ள மாட்டாமல் கஷ்டப்படுவாயே என்கிற எண்ணத்தினால், நான் பொழுது விடிந்தவுடனே புறப்பட்டு இங்க வந்து சேர்நதேன்'' என்று நிரம்பவும் பரிதாபகரமாகவும் இளக்கமாகவும் கூறினாள்.

அந்த மகா விபரீதமான வரலாற்றைக் கேட்ட ஷண்முக வடிவினது மன நிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதை

உள்ளபடி எடுத்துச் சொல்வது முற்றிலும் அசாத்தியமான காரியம். திடீரென்று பெருத்த உலக்கையைக் கொண்டு ஒரு மனிதரது சிரசின் மீது ஓங்கி அடித்தால், அப்படி அடிப்பட்டவருக்கு எப்படிப் பொறி கலங்கி மூளை குழம்பி அறிவு இருளடையுமோ, அதுபோலவே, ஷண்முகவடிவு என்னும் நமது மடமயிலாள் முற்றிலும் ஸ்மரணை தப்பி அப்படியே ஸ்தம்பித்து மயங்கிப் பக்கத்திலிருந்த சுவரில் சாய்ந்து இரண்டொரு நிமிஷநேரம் பிரமித்து மௌனமாக நின்று விட்டாள். தன்னிடத்தில் பழகிய வரையில் மகா சிரேஷ்ட குணமுடைய உத்தம புருஷர் போலக் காணப்பட்ட தனது ஆருயிர்க்காதலர் அப்படியும் மாறிப் போயிருப்பாரோ என்ற சந்தேகமும் வியப்புமே அபாரமாக எழுந்து, நிரம்பவும் உரமாக அவளது மனதை அழுத்திவிட்டன. தாயைக் காட்டிலும் பன்மடங்கு அதிக வாத்சல்யத்தோடும் உருக்கத்தோடும் அந்தரங்க அபிமானத்தோடும் அந்த ஸ்திரீ தன்னிடத்தில் விஷயங்களைச் சொல்லி நடந்து கொண்ட மாதிரியிலிருந்து, அந்த அம்மாள் சொல்வதைப் பொய்யென்று சந்தேகிக்கவும் இடமில்லாமல் இருந்தது. அதுவுமன்றி, கலியாணசுந்தரம் தனக்கு எழுதிய கடிதங்களும் அந்த அம்மாள் சொன்ன வரலாறுகளும் முற்றிலும் பொருத்தமாகவே இருந்தன. அவர்கள் கட்டுப்பாடாக அத்தனை விஷயங்களையும் கற்பித்துத் தன்னிடம் கூறவும் அவ்வளவு தூரத்திலுள்ள தன்னை வரவழைக்கவும் வேறு எந்த முகாந்திரமும் இருக்க நியாய மில்லை என்பதும் எளிதில் பட்டது. இருந்தாலும், மகா நற்குணவானான கலியாணசுந்தரம் அப்படிப்பட்ட துர்மார்க்கங் களில் இறங்கி இருக்கமாட்டார் என்ற உறுதியும் ஒரு பக்கத்திலிருந்து வதைத்தது. எவ்வித ருஜுவும் இல்லாமல் அவர் மீது கெட்ட அபிப்பிராயம் கொள்வது சரியல்ல என்றும் அவளது மனசாட்சி இடித்திடித்து மனதை வதைத்தது. உண்மையிலேயே கலியாணசுந்தரம் அப்படிப்பட்ட துர் நடத்தையில் இறங்கிக் கெட்டுப்போயிருந்தால், அவரைத் தான் அதற்குமேல் மணப்பது

ஒழுங்காகுமா என்ற கேள்வியும், அந்த அசங்கியமான வரலாறுகள் எல்லாம் தனது அக்காளுக்குத் தெரிந்தால், அவள் நிரம்பவும் சங்கடத்தில் ஆழ்வதன்றி அத்தகைய பொல்லாத மனிதரை மணக்க வேண்டாம் என்று கூறித் தடுத்து விடுவாள் என்ற எண்ணமும் உண்டாயின. ஆகவே, அந்த நிலைமையில் அவரிடம் போய்ப் பேசுவது தன்னைப் போன்ற இளங்கன்னிகைகளுக்குத் தகுந்த ஒழுக்க மாகுமா என்ற நினைவும் தோன்றித் தோன்றி மேலாடியது. அவளது மனதில் அவனது விஷயத்தில் உண்டாகி இருந்த மட்டற்ற காதலும் பிரேமையும் உரமாக வேரூன்றி எளிதில் விலக்க இயலாவகையில் வலுத்துப்போய் அவளது மனம் முழுதும் அவனது மயமாகவே நிறைந்திருந்தமையால், அவ்வளவு எளிதில் கலியாணசுந்தரத்தின் தொடர்பை விலக்கி விடுவதும் அவனை மறந்துவிடுவதும் அசாத்தியமான காரியமாக இருந்தன. ஆகவே, அவள் என்ன செய்வது என்பதை நிச்சயிக்கமாட்டாமல் தத்தளித்துப் பரிதபித்துத் துயரமே வடிவாகவும், கலக்கமே நிறைவாகவும், குழப்பமே மயமாகவும் மௌனமாய் நிற்க, அதைக் கண்ட அந்த ஸ்திரீ முன்னிலும் பன்மடங்கு அதிக நெகிழ்வாகவும் வாஞ்சையோடும் பேசத் தொடங்கி, ''அம்மா! உன் மனம் என்னவிதமாகத் தவிக்கும் என்பது எனக்குத் தெரியாது. உன்னிடம் இதுவரையில் மகாபரிசுத்தராக நடந்துகொண்ட அந்த மனிதர் திடீரென்று இப்படிப்பட்ட இழிவில் இறங்கியிருப்பாரா என்று உன் மனம் சந்தேகப்படுவதும் சகஜமே. நானோ இதற்கு முன் பழக்கமில்லாத புதிய மனிஷி. என்னுடைய வார்த்தையைக் கொண்டு உனக்கு இதுவரையில் நிரம்பவும் அந்தரங்க சிநேகராக இருந்த ஒருவரைப் பற்றி மகா இழிவான அபிப்பிராயங்கள் கொள்வது எவருக்கும் சாத்தியமான காரியமல்லதான். ஆகையால், நான் சொல்வதெல்லாம் உண்மையென்று நீ உடனே நம்பி விட வேண்டுமென்று நான் எதிர்பார்ப்பது

சரியல்ல. எல்லாவற்றிற்கும் நீ உடனே என்னோடு கூடவே எங்களுடைய வீட்டுக்கு வா; வந்து அங்கே இருக்கும் போலீஸ் கமிஷனர் என்ன சொல்லுகிறார் என்பதைக் கேள். அவர் எழுத்து மூலமான ஆதாரத்தோடு எல்லா விஷயங்களையும் திருப்திகரமாக உனக்கு மெய்ப்பிப்பார். அதற்குமேல், அவர் சொல்லும் புத்திமதிப்படி நீ நடந்து கொள்ளலாம்'' என்றாள்.

அதைக்கேட்ட ஷண்முகவடிவு இன்ன மறுமொழி சொல்வது என்பதையும், என்ன விதமாக நடந்து கொள்வது என்பதையும் அறியாதவளாய்க் கலக்கமும் குழப்பமும் நிரம்பிய மனத்தினளாய்ச் சிறிது நேரம் நின்றபின், ''சரி; இவ்வளவு தூரம் வந்து விட்டேன். வந்தபின் உண்மையைத் தெரிந்துகொள்ளப் பின் வாங்குவதில் என்ன உபயோகம்? நான் உங்களோடு கூட வருகிறேன். போலீஸ் கமிஷனர் என்ன சொல்லுகிறார் என்பதையும் கேட்டுப் பார்த்துவிடலாம். ஆனால் என்னுடன் வந்திருக்கும் வேலைக்காரியையும் என்னோடு கூட அழைத்துக்கொண்டு வர வேண்டுமென்பது என்னுடைய விருப்பம். இருந்தாலும், அவள் கடுமையாக நோய் கொண்டு படுத்திருப்பதால், அவள் சௌக்கியமடைந்த பிறகு வருவது என்றால், நாலைந்து தினங்கள் கழிந்துபோகும். ஆகையால் நான் மாத்திரம் தனியாகத்தான் வரவேண்டும். என்ன செய்கிறது, நான் ஜென்மம் எடுத்த வேளை அப்படிப்பட்டது . ஆண்பிள்ளைகளான உற்றார் உறவினர் எவரையும் நான் படைக்கவில்லை'' என்று நிரம்பவும் பரிதாபகரமாக மறுமொழி கூறினாள்.

அந்த ஸ்திரீ, ''மெய்தான். உனக்கு மேலான ஆண்பிள்ளைகள் இருந்தால், அவர்கள் இவ்வளவு தூரம் உன்னைத் தனியாக அனுப்பியிருக்க மாட்டார்கள்தான். அதுவுமன்றி, இந்த மனிதருடைய உண்மையான குணம் எப்படிப்பட்டது என்பதை அவர்கள் அப்போதே கண்டுபிடித்து, உன்னிடம் இவர் வந்து அதிகமாக நெருங்காமலும் செய்திருப்பார்கள். உலகத்தில் பெண் பிள்ளைகள் தனியாக இருந்தால், அவர்களை

ஆண்பிள்ளைகள் இப்படித்தான் அபாயங்களுக்கு ஆளாகி விடுகிறார்கள். அதுவுமன்றி, அப்படிப்பட்ட பெண்பிள்ளைகள் அழகும் யௌவனப் பருவமும் உடையவர்களாக இருந்தால், அவர்களுக்கு உண்டாகக்கூடிய துன்பங்களும் விபத்துகளும் எண்ணிறந்தவை. இப்போது என்னோடுகூட வருவதைப் பற்றி நீ கொஞ்சமும் அதைரியப்பட வேண்டியதே இல்லை. இமைகள் கண்களைக் காப்பதுபோல நான் உன்னைக் காத்து மறுபடியும் இங்கே கொண்டுவந்து சேர்க்கிறேன்; உன்னுடைய வேலைக்காரி சௌக்கியப்பட சில தினங்களாகும். ஆனால், அதற்குள் இந்த வழக்கின் விசாரணை முடிந்து போய்விடும். நீ எத்தனையோ பாடுபட்டு இவ்வளவு தூரம் வந்ததெல்லாம் உபயோகமில்லாமல் போய்விடும். ஆகையால், நீ யோசனை செய்யாமல் புறப்பட்டு வா. நான் வண்டியில் ஏறிக்கொண்டு வந்திருக்கிறேன். அது இதோ வாசலில் நிற்கிறது. அதற்குள் நாம் இருவரும் உட்கார்ந்துகொண்டு அங்கே போவோம். கமிஷனர் என்ன சொல்லுகிறார் என்பதைக் கேட்டுக்கொள். அதன்பிறகு நான் மறுபடியும் உன்னை இங்கே கொண்டுவந்து விட்டுப் போகிறேன்'' என்று கரைகடந்த அன்போடு பேச, அதைக் கேட்ட நிஷ்கபடியான ஷண்முகவடிவு அப்படியே செய்வதாக இணங்கி உடனே புறப்பட்டாள்.

அந்த ஸ்திரீ ஷண்முகவடிவை அழைத்துக்கொண்டு சத்திரத்தை விட்டு வெளிப்பட்டு, வெளியில் ஆயத்தமாக நின்று கொண்டிருந்த வண்டியை அடைந்து, அந்த மடந்தையும் தானுமாக வண்டிக்குள் உட்கார்ந்து கொள்ள வண்டி உடனே புறப்பட்டுக் கால் நாழிகை நேரத்தில் போலீஸ் கமிஷனரினது இருப்பிடத்தை அடைந்தது. ஷண்முகவடிவினது இருதயம் திடுக்திடுக்கென்று அடித்துக்கொண்டே இருந்தது. அடி வயிற்றில் சகிக்கவொண்ணாத சங்கடம் தோன்றிக் கலக்கிக் கொண்டே இருந்தது, மனம் மிகுந்த சஞ்சலமடைந்து தவித்தது.

அந்த நிலைமையில் ஷண்முகவடிவை அழைத்துக்கொண்டு அந்த ஸ்திரீ போலீஸ் கமிஷனரினது ஜாகைக்குள் நுழைந்து, தூரத்தில் நின்றபடி, அவ்விடத்தில் ஓர் அறைக்குள் நிரம்பவும் கம்பீரத் தோற்றத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்த போலீஸ் கமிஷனரை நோக்கி, ''இதோ இந்தப் பெண்தான் ஷண்முக வடிவு. நேற்று ராத்திரி வந்தவர்கள் இவர்கள்தான். இந்தப்பெண் தங்கமான குணமுடைய உத்தம ஜாதிப் பெண்ணாக இருக்கிறாள். அந்த மனிதர் இவர்களிடத்தில் கூட தம்முடைய உண்மையான பெயரைச் சொல்லாமல் மறைத்துக் கடைசி வரையில் ஏமாற்றி இருக்கிறார். அவர் இந்த ஊரில் செய்த அக்கிரமங்களை எல்லாம், நான் விவரமாகச் சொன்னேன். நான் என்னதான் சொன்னாலும், உண்மை எளிதில் மனசில் படுமா? உங்களுடைய கீழ் அதிகாரியான இன்ஸ்பெக்டர் அவரைப் பற்றி எழுதி அனுப்பியுள்ள பிராதுகளையெல்லாம் படித்துக்காட்டி, இந்தப் பெண் என்னென்ன முயற்சிகள் செய்ய வேண்டும் என்பதையும் சொல்லுங்கள்'' என்றாள்.

அதைக்கேட்ட போலீஸ் கமிஷனர் ஷண்முகவடிவை நோக்கி மரியாதையாகவும் அன்பாகவும் பேசத்தொடங்கி, ''அம்மா! நீ இப்போது கேள்வியுற்ற விஷயங்களெல்லாம் முழுதும் நிஜமானவை. அதைப்பற்றி நீ கொஞ்சமும் சந்தேகப்படத் தேவையில்லை. இந்தக் கலியாணசுந்தரம் தாதிப் பெண்களோடு கூட இந்த ஊருக்கு வந்தபிறகு அவரைப்பற்றிய சமாச்சாரங் களைப் பற்றிப் பலர் என்னிடம் வந்து புகார் சொல்லிக் கொண்டனர். நான் அதை அவ்வளவாகக் கவனிக்க வில்லை. ஆனால், அவருடைய நடத்தை வரவர நிரம்ப வும் கெட்டுப்போய்விடவே, என்னுடைய இன்ஸ்பெக்டர் அவருடைய நடத்தைகளையெல்லாம் கவனிக்கத் தொடங்கி னார். அந்தத் தாதிப் பெண்கள் இந்த ஊரைவிட்டுப் பூனா தேசத்துக்குப்போன பிறகு, அவர் இந்த ஊரிலுள்ள சில அயோக்கியர்களோடு சகவாசம் செய்துகொண்டு குல

ஸ்திரீகளில் சிலரைக்கெடுக்க யத்தனித்துப் பலவகையில் அவர்களுடைய மனசை மயக்கிப் புத்தியைக் கலைக்க முயற்சித்தார். அதைக் கண்ட இன்ஸ்பெக்டர் இவருடைய நடவடிக்கைகளை எல்லாம் முன்னிலும் அதிக விழிப்பாகக் கவனிக்கத் தொடங்கியதன்றி, ஒரு ஜவானை தஞ்சாவூர், திருவாரூர் முதலிய இடங்களுக்கு அனுப்பி, இவருடைய வரலாற்றையும் இவர் உன்னோடு பழக்கமாக இருந்த சங்கதிகளையும் உன்னுடைய குடும்ப வரலாறுகளையும் விசாரித்து அறிந்துவரச்செய்தார். அப்போதுதான் இவர் தம்முடைய சொந்தப் பெயரை மாற்றி வைத்துக் கொண்டிருக்கிறார் என்பது தெரிந்தது. ஆனால், இவருடைய சொந்தப்பெயர் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள நீ ஒருவேளை ஆசைப்படலாம்; அதை மாத்திரம் நான் இப்போது வெளியிடுவது சரியல்ல. நீ நேரில் போய்ப் பார்க்கும்போது, அவரிடத்திலேயே கேட்டுத் தெரிந்துகொள். அதுதான் நல்லது. இப்போதாவது இவர் உண்மையை உன்னிடத்தில் வெளியிடுகிறாரா என்பது தெரிந்து போகும். மற்ற விவரங்களை எல்லாம் நான் இதோ இருக்கும் பிரதியிலிருந்து உனக்குப் படித்துக் காட்டுகிறேன். நான் வாயால் சொல்வதைவிட எழுத்து மூலமான ருஜுவினால் நீ தெரிந்து கொண்டால்தான், உன் மனசுக்கு நம்பிக்கைப்படும்'' என்று கூறியவண்ணம், தமக்கு எதிரில் மேஜையின்மீது கிடந்த ஒரு பெரிய பிராதை எடுத்துக் காட்டினார். அந்தப் பிராதில் சொல்லப்பட்டிருந்த விவரங்களும், அதற்குமுன் அந்த ஸ்திரீ சொன்ன விவரங்களும் ஒன்றாகவே இருந்ததைக் கண்ட ஷண்முகவடிவு சகிக்கக் கூடாத துயரமும் சங்கடமும் அடைந்தவளாய்த் தனது கைகளைப் பிசைந்துகொண்டு பரிதவித்தவண்ணம், ''ஐயோ தெய்வமே! என்ன செய்வேன்! இது என்ன விபரீதமோ தெரியவில்லையே! அங்கே இருந்தவரையில் பரம யோக்கியராக இருந்த மனிதர் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்தார் என்றால், என் மனம் நம்பவே மாட்டேன் என்கிறது. இப்போது சிறையில்

அடைபட்டிருக்கிற மனிதர் அவர்தானோ அல்லது வேறே அன்னிய மனிதரோ என்ற சந்தேகமும் உண்டாகிறது. இத்தனை விவரங்களையும் கேட்டபிறகு நான் இப்போது அவரிடம் போய் நேரில் பார்க்கலாமோ பார்க்கக்கூடாதோ என்பதைக்கூட என்னால் நிச்சயிக்கக் கூடவில்லை. எனக்கும் அவருக்கும் சாஸ்திர முறைப்படி இன்னம் கலியாணம் நிறைவேறாது இருந்தாலும், அவர் ஒரு சமயத்தில் என்னுடைய உயிரையும் கற்பையும் காப்பாற்றியதன்றி அது முதல் இது பரியந்தம் என்னிடத்தில் மரியாதையாகவும் நிர்ணயம் தவறாமலும் பெருந்தன்மைக்கு இழுக்கில்லாமல் நடந்து வந்திருக்கிறார். என் குடும்பத்துக்குத் தலைவியான என் தமக்கை என்னை அவருக்குக் கட்டிக் கொடுப்பதாகத் தீர்மானித்துவிட்டாள். கலியாணம் முடிய இருந்த சமயத்தில் ஒரு முக்கிய சங்கதியைக் குறித்து அவர் அவசரமாகப் புறப்பட்டு இங்கே வர நேர்ந்தது. வந்த இடத்தில் இப்படிப்பட்ட விபரீத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நான் உங்களுடைய கடிதத்தைப் பார்த்த உடனே கலவரமடைந்து புறப்பட்டு நேராக இங்கே வந்துவிட்டேன். இப்போது வெளியான விவரம் எல்லாம் அப்போதே எனக்குத் தெரிந்திருந்தால், நான் உடனே தஞ்சாவூருக்குப் போய் அங்கே இருக்கும் என் அக்காளைக் கண்டு சங்கதிகளை அவளிடம் சொல்லி இதற்குத் தகுந்த வேறே மனிதர்களை அனுப்பி இருக்கலாம். இப்போது நான் இங்கே வந்துவிட்டேன். வந்த இடத்தில், என் காதால் கேட்கத் தகாத விஷயங்களை எல்லாம் நான்கேட்கிறேன். இவைகள் உண்மையாக இருக்கக்கூடாதென்றே என் மனம் விரும்புகிறது. எல்லாவற்றிற்கும் நான் நேரில் போய் அவரைக் கண்டு விவரங்களை எல்லாம் அவருடைய வாய்மூலமாகவே கேட்டுக்கொண்டால், நம்பிக்கை உண்டாகும் என்று நினைக்கிறேன். இந்த ஊருக்கு நான் புதியவள். அதுவுமன்றி நான் சிறு பெண் ஆகையால், வக்கீல் முதலிய யாரிடத்திலும் போய் இந்த விசாரணைக்குத் தகுந்த ஏற்பாடுகளை எல்லாம்

செய்யக்கூடாத நிலைமையில் இருக்கிறேன். எங்கள் விஷயத்தில் இவ்வளவு தூரம் இரங்கி அபிமானம் வைத்து உதவிசெய்யத் தொடங்கியிருக்கும் நீங்களே இன்னம் என்னென்ன அனுகூலங்கள் செய்ய முடியுமோ அவைகளை எல்லாம் செய்து அவரைக் காப்பாற்றி விடுங்கள். இப்போது நான் அவரை நேரில் பார்த்து விஷயங்களைத் தெரிந்து கொள்ளுகிறேன். அவர் தப்பி வெளியில் வருகிற வரையில் நான் இந்த ஊரிலேயே இருக்கவோ, அல்லது ஊருக்குத் திரும்பிப் போகவோ, அவர் சொன்னால், அதுபோல நடந்து கொள்ளுகிறேன்'' என்று பணிவாகவும் முற்றிலும் பரிதாபகரமாகவும் கூறினாள்.

போலீஸ் கமிஷனர், ''சரி; அப்படியே செய்யலாம். ஆனால், ஒருவிஷயம். நாங்கள் உன்னை ஊரிலிருந்து வரவழைத்ததும், நீ அவரிடம் போய்ப் பார்க்கச் செய்ததும் வேறே யாருக்காவது தெரிந்தால், நான் அவரிடத்தில் லஞ்சம் வாங்கிக் கொண்டு அவருக்கு அனுகூலம் செய்வதாக ஜனங்களும் என்னுடைய கீழ் அதிகாரிகளும் நினைத்து என்னைப் பற்றி அவதூறு சொல்லத் தொடங்குவார்கள். ஆகையால், நான் நாளைய தினம் காலைக்குள் நல்ல சந்தர்ப்பம் பார்த்து உன்னிடம் அந்த அம்மாளை அனுப்புகிறேன். நீ உடனே புறப்பட்டு வந்தால், இந்த அம்மாள் உன்னை நேராக சிறைச்சாலைக்கே அழைத்து வருவார்கள். அப்போது நீ அவரைப் பார்த்துப் பேசி, உண்மைகளை அறிந்துகொண்டு உன்னுடைய இஷ்டப்படி நடந்துகொள். அந்த மனிதர் உண்மையிலேயே நல்லகுணம் உடையவராக இருக்கலாம்; இந்த ஊருக்கு வருவதற்குமுன் நல்ல நடத்தை உடையவராக இருந்திருக்கலாம். ஆனால், அந்தத் தாதிப் பெண்களோடு நெருங்கிப் பழகிய பிறகு அவருடைய மனசு மாறிப் போயிருக்கலாம். அவருக்கும் நல்ல பருவகாலமல்லவா? அழகான பெண்களைக் கண்டால், யாருக்குத்தான் மனம் சபலிக்காது! ஒரு வேளை அவருடைய

மனம் இங்கே வந்தபிறகு மாறிப்போயிருக்கலாம். அந்தப் பெண்கள் போனபிறகு அவர் தம்முடைய புது மோகத்தில் தலைகால் தெரியாமல் கெட்டலைந்து பலவிதமான துஷ்கிருத்தியங்களைச் செய்திருக்கலாம். எல்லாவற்றிற்கும் நீ அவரை நேரில் கண்டு அவருக்குப் புத்திமதி சொல்லிப்பார். அந்த விசாரணை இன்னம் இரண்டு தினங்களில் நடக்கப்போகிறது. அந்த விசாரணை முடிந்தவுடனே அவர் விடுதலை அடையும்படி நான் என்னாலான உதவிகளையும் முயற்சிகளையும் செய்கிறேன். விடுதலை அடைந்தவுடன் அவர் உன்னோடு கூடவே ஊருக்குத் திரும்பிவந்து பழையபடி யோக்கியராக நடந்துகொள்ள ஒப்புக்கொண்டால்தான் நான் அவருக்கு உதவி செய்வேன். இந்த ஊரிலேயே இருந்து, இன்னமும் பழைய வழியிலேயே போக அவர் ஆசைப்படுவாரானால், நான் எவ்வித உதவியும் செய்யமுடியாது. ஆனால், இதில் ஒரு சந்தேகம். அவர் இந்த ஊருக்கு வருவதற்குமுன் நாணயமான மனிதராக இருந்திருந்தால், அவ்விடத்தில் தம்முடைய பெயரை மாற்றி வைத்துக் கொள்ள எவ்வித முகாந்திரமும் இல்லை. அப்படி மாற்றி வைத்துக்கொண்டு இருப்பதில்தான் ஏதோ சூதிருக்கிறது. அதையும் நீயே நேரில் அவரிடம் கேட்டுவிடு. இவ்வளவுதான் இப்போது உனக்கு நான் சொல்லவேண்டிய சங்கதி. நான் உனக்குச் செய்தி அனுப்பும்போது நீ வந்து சேர். நீ சிறு பெண்ணாக இருப்பதைக் கருதி, உன்னை எங்களுடைய ஜாகையிலேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எங்களுடைய மனதில் உண்டாகிறது. ஆனாலும், அவருக்கு நாங்கள் உதவி செய்கிறோம் என்பது எவருக்கும் தெரியக்கூடாது. ஆகையால், நீ சம்பந்தமற்றவள்போல தூரத்தில் இருப்பதே நல்லது. ஆகையால், நீ சத்திரத்திலேயே இரு. நான் அதற்குத் தகுந்த மனிதர்களைக் கொண்டு உங்களுக்கு வேண்டிய சகலமான சௌகரியங்களையும் செய்து கொடுப்பதோடு, உங்களுக்கு எவ்விதமான துன்பமும் நேராமல் பார்த்துக்கொள்ள ஏற்பாடு

செய்கிறேன். இப்போது நீ இங்கே வந்ததும், என்னோடு பேசியதும் கூட எவருக்கும் தெரியக்கூடாது. ஆகையால், உன்னை மறுபடியும் சத்திரத்தில் கொண்டுபோய்விடச் செய்கிறேன். நான் மறுபடியும் இந்த அம்மாளை அனுப்புகிற வரையில் நீ அவ்விடத்தில் சௌக்கியமாக இருக்கலாம்'' என்று மனமார்ந்த அன்போடு உருக்கமாகக் கூறினார்.

அதைக்கேட்ட ஷண்முகவடிவு அப்படியே செய்வதாக ஒப்புக்கொள்ள, அவளைச் சத்திரத்திலிருந்து அழைத்துவந்த ஸ்திரீ மறுபடியும் அவளை வண்டியில் உட்கார வைத்துக் கொணர்ந்து சத்திரத்தில் விட்டு ஜாக்கிரதையாக இருக்கும்படி சொல்லியபின் அவ்விடத்தை விட்டுப் போய்விட்டாள்.

அவ்வாறு விடப்பட்ட நமது மானிளம்பேடான ஷண்முகவடிவினது மன நிலைமை எப்படி இருந்தது என்பது விவரித்துச் சொல்வது அசாத்தியமான காரியம். தான் கோலாப்பூருக்கு வந்ததும் அவ்விடத்தில் கேள்வியுற்றவையுமான விஷயங்கள் எல்லாம் உண்மையில் நடப்பவைகளா, அல்லது அவைகள் தனது கனவில் தோன்றுகின்ற மானஸீகத் தோற்றங்களா என்ற சந்தேகம் அப்போதும் தோன்றிக் கொண்டிருந்தது. தான் கபடசன்னியாசி யினிடம் அகப்பட்டுத் தனது கற்பையும் உயிரையும் இழந்துவிடக்கூடிய மகா பயங்கரமான அபாய நிலைமையில் இருந்த காலத்தில் ஈசுவரன் போலத்தோன்றித் தன்னைக் காப்பாற்றி அதன்பிறகும் எவ்விதக் கைம்மாறும் கருதாமல் தன் விஷயத்தில் அளவற்ற இரக்கமும் பச்சாதாபமும் காண்பித்துப் பலவகையில் தனக்கு உதவி செய்து தன்னிடத்தில் வார்த்தையிலாவது செய்கையிலாவது ஓர் இம்மியளவும் அவமரியாதையாகவாவது, தவறாகவாவது நடந்து கொள்ளாமல் இருந்த உத்தம புருஷரும், அதுபோலவே, சிவபாக்கியம் என்னும் அநாதைப் பெண்ணின் விஷயத்திலும் அளவற்ற இரக்கமும், அநுதாபமும் காட்டி எவ்விதப் பிரதிப் பிரயோசனத்தையும் எதிர்பாராமல் அவளைக்

காப்பாற்ற ஏற்றுக்கொண்ட தயாள புருஷரும், தனம் அம்மாளு முதலிய கூத்தாடிப் பெண்கள் பூனாவிலிருந்து இராஜமகிஷிக்குத் தீங்கிழைக்க செல்வதைத் தடுக்க வேண்டும் என்ற பரம தயாளமான எண்ணம் கொண்டு, தமது கலியாணத்தையும் ஒத்தி வைத்துவிட்டு எண்ணிறந்த ஆபத்துகளுக்கும் துன்பங்களுக்கும் இலக்காகி தூரதேசத்துக்குப் புறப்பட்டு வந்த காருண்ய வள்ளலும், தனது உயிருக்குயிரான காதலருமான அந்த மனோகர புருஷர் அவ்வாறு மாறிப்போய் இழிவான நடத்தைகளில் இறங்கி இருக்கமாட்டார் என்ற உறுதி அவளது மனதில் எழுந்து எழுந்து மும்முரமாகப் போராடியது. ஆனாலும், உண்மையில் அவர் சிறைப்பட்டிருப்பதும், போலீஸ் இன்ஸ்பெக்டர் கமிஷனருக்குப் பிராது அனுப்பிக் கொண்டிருந்ததும் பிரத்தியக்ஷ பூர்வமாகத் தெரிந்தன ஆகையால், அவைக ளெல்லாம் கட்டுப்பாடாக இருக்கலா மென்று எளிதில் விலக்கிவிடக் கூடியனவாகவும் தோன்றவில்லை. அந்தத் தாதிப் பெண்கள் பூனாவிலுள்ள பட்ட மகிஷியின் விஷயத்தில் தீங்கு இழைக்கப் போவதற்கு இவர் இடையூறாக நிற்கிறார் என்பதைக் கருதி, அவர்கள் ஏதாவது சூழ்ச்சி செய்து போலீஸ் இன்ஸ்பெக்டரையும் கமிஷனரையும் கைவசப்படுத்திக் கொண்டு இவரைச் சிறைப்படுத்தித் தன்னை வரவழைத்து, அவர் மேன்மேலும் பூனாவுக்குப் போகாமல் ஊருக்கு அழைத்துக்கொண்டு போய்விடும்படி செய்கிறார்களோ என்ற சந்தேகமும் உண்டாயிற்று. தன்னோடு நன்றாகப் பழகிய யோக்கியமான மனிதர் அயோக்கியமாக இருப்பாரோ என்று சந்தேகிப்பதைவிட, தனக்கு அதிகமாகப் பழக்கமில்லாத புதிய மனிதர்கள் சொல்வது பொய்யாக இருக்குமோ என்று சந்தேகிப்பதே மனித இயற்கை ஆகையால், அவளது மனதும் அப்படிப்பட்ட சந்தேகத்தைக் கொண்டது. இருந்தாலும் தனது காதலர் ஊரிலிருந்தபோதே தமது பெயரை மாற்றிவைத்துக் கொண்டிருந்தார் என்பதும் அதை அவரே ஒப்புக் கொண்டிருக்கிறார் என்பதுமே அவளுக்குச் சிறிதும் விளங்காத

அதிசயமாக இருந்தது. எல்லாவற்றிற்கும் தான் நேரில் போய்த் தனது காதலரைக் கண்டு பேசியே எதையும் உண்மையென்று நிச்சயிப்பது உசிதம் என அவள் தீர்மானித்துக் கொண்டவளாய்த் தான் அவரைப் பார்க்கும் சந்தர்ப்பம் எப்போது வாய்க்குமோ என்று சகிக்கமாட்டாத ஆவல் கொண்டு வேதனைக் கடலில் ஆழ்ந்து வெதும்பிச் சோர்ந்து கிடந்தாள்.

அவளது மனம் ஸ்நானத்திலாவது ஆகாரத்திலாவது நித்திரையிலாவது செல்லாமல் துன்பமயமாக நிறைந்திருந்தது. ஆனால், அவள் அடிக்கடி தனது வேலைக்காரியண்டை போய் அவளுக்குரிய உபசரணைகளைச் செய்து அவளது தேக நிலைமையை விசாரித்து வந்ததன்றி இடையிடையில் தனது சொந்தத் துயரத்திற்கு இரையாகி சஞ்சலவாரிதியில் ஆழ்ந்திருந்தாள். அவ்வாறு அன்றைய பகற்பொழுது கழிந்தது. இரவும் வந்தது. போலீஸ் கமிஷனரது வீட்டிலிருந்து அந்த ஸ்திரீ வருவாள் வருவாள் என்று வழி பார்த்துப் பார்த்து நமது உத்தம குண சுந்தராங்கியின் விழிகள் பூத்துப் போயின. மனம் புண்பட்டது. அதற்கு மேல் அந்த அம்மாள் மறுநாள்தான் வருவாள் என்ற நிச்சயம் தோன்றியது. ஊரிலிருந்து வந்த களைப்போடு, சகிக்க முடியாத மனவேதனைகளும், அன்றைய காலை முதல் போஜனம் செய்யாததால் உண்டான சோர்வும் ஒன்றுகூடி அந்த மடமயிலைப் பரமவேதனைக்கு ஆளாக்கின ஆகையால், வேலைக்காரியின் தூண்டுதலின் மேல் அவள் சொற்பமாக ஆகாரத்தைப் பார்த்துக்கொண்டு ஒரு பக்கமாகப் படுத்தாள். படுத்தவள் வெகுநேரம் வரையில் மனம் ஆழ்கி அல்லற்பட்டிருந்து முடிவில் கடுமையான துயிலில் ஆழ்ந்தாள்.

இரவு சுமார் இரண்டு மணி சமயம் இருக்கலாம். யாரோ தன்னை அவசரமாக எழுப்புவதாக ஷண்முகவடிவு உணர்ந்தாள். ஆனாலும் அவளது அங்கங்களெல்லாம் முற்றிலும் தளர்ந்து உணர்ச்சியும் ஊக்கமும் கொள்ளச் சிறிதும் சக்தியற்று இருந்தமையால், அவள் உடனே விழித்துக்கொள்ளக்

கூடவில்லை. தான் தனது கண்களைத் திறந்துகொண்டு எழுந்திருக்க வேண்டும் என்ற எண்ணம் அவளது உணர்வில் தோன்றியது. ஆனாலும், சிறிது நேரம் வரையில் அவளது அங்கங்கள் கட்டிலடங்காமல் சோர்ந்து கிடந்தன. அவ்வாறு கால்நாழிகை சாவகாசம் கழிந்தது. ஷண்முகவடிவு மெதுவாகத் தனது கண்களைத் திறந்து பார்த்தாள். அவ்விடத்தில் வந்து தன்னை எழுப்பியது போலீஸ் கமிஷனரினது விருந்தாளியும் தனக்கு அநாமதேயக் கடிதம் எழுதியனுப்பியவளுமான அந்த ஸ்திரீயாக இருக்கக்கண்டு வியப்பும் பிரமிப்பும் அடைந்தாள். அப்போது தான் காண்பது உண்மைத் தோற்றமோ, அல்லது, கனவின் காட்சியோ என்ற ஐயம் உதித்தது. பொழுதுவிடிந்து போய் விட்டதோ என்ற எண்ணமும் தோன்றியது. எங்கும் இருள் சூழ்ந்திருந்தமையால், அது இரவு நேரம் போலவும் தோன்றியது. எதையும் நன்றாக நிச்சயிக்கமாட்டாதவளாகக் குழம்பியிருந்த ஷண்முகவடிவு அடுத்த நிமிஷத்தில் எழுந்து உட்கார்ந்து அந்த ஸ்திரீயினது முகத்தைப் பார்த்துப் பார்த்து மருண்டு விழித்தாள். அதைக் கண்ட அந்த ஸ்திரீ, ''அம்மா! பயப்படாதே. இப்போது பொழுது விடியும் சமயம் ஆகி விட்டது. கலியாணசுந்தரம் அடைபட்டி ருக்கும் சிறைச் சாலையிலிருந்து இப்போதுதான் ஒரு பாராக்காரன் ஓடிவந்து சில முக்கியமான சங்கதிகளைச் சொல்லி, போலீஸ் கமிஷனரை அழைத்தான். அவர் என்னையும் அழைத்துக்கொண்டு வந்தார். அவர் வண்டியில் இதோ வாசலில் இருக்கிறார். சிறைச் சாலையில் எவரும் எதிர்பார்க்காத மகா விநோதமான ஒரு காரியம் நடந்து கொண்டிருக்கிறது. அதைப் பார்ப்பதற்காகப் பாராக்காரன் வந்து கமிஷனரை அழைத்தான். அந்த அதிசயக் காட்சியை நீயும் வந்து பார்க்க வேண்டுமென்பது கமிஷனருடைய எண்ணம். அதற்காகவே, அவர் என்னையும் அழைத்துக்கொண்டு வந்தார். சீக்கிரமாக எழுந்து வா. சிறைச்சாலை இதோ பக்கத்திலேதான் இருக்கிறது. நாம் போய்விட்டுக் கால்நாழிகை நேரத்தில் திரும்பி வந்து விடலாம்'' என்றாள்.

அதைக்கேட்ட ஷண்முகவடிவு திடுக்கிட்டு திக்பிரமை கொண்டு, "அம்மா! சொல்வதைக் கொஞ்சம் நன்றாகத்தான் சொல்லுங்களேன். சிறைச்சாலையில் அப்படி என்ன விசேஷம் நேர்ந்தது? அதற்கும் எனக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? சிறைச்சாலைக்குள் அடைபட்டிருக்கும் எங்கள் மனிதர் அதில் சம்பந்தப்பட்டிருக்கிறாரா? விஷயத்தை நன்றாகச் சொல்லுங்கள்" என்றாள்.

உடனே அந்த ஸ்திரீ, "பாராக்காரன் ஓடிவந்த அவசரத்தில் அவன் கமிஷனரிடத்தில் ஏதோ இரண்டொரு வார்த்தைகள் தான் சொன்னான். அதைக்கேட்ட கமிஷனர் என்னை எழுப்பி இரண்டொரு வார்த்தைகள் சொன்னார். சிறைச்சாலையில் கலியாணசுந்தரம் மகா அபூர்வமான ஒரு காரியம் செய்து கொண்டிருப்பதாகவும், அதை நீ நேரில் பார்த்தால், அவருடைய உண்மையான குணம் எப்படிப்பட்டது என்பது நேருக்கு நேர் நன்றாகத் தெரிந்து போகும் என்றும், உடனே உன்னையும் அழைத்துக்கொண்டு அவசரமாய்ப் போக வேண்டும் என்றும் சொன்னார். உடனே வண்டி பூட்டப்பட்டது. இங்கே வந்து சேர்ந்தோம். நாம் போய் வண்டியில் உட்கார்ந்தவுடனே, மற்ற விவரத்தை எல்லாம் சொல்லும்படி நான் அவரிடம் கேட்கிறேன். விஷயத்தை நாம் நன்றாகத் தெரிந்து கொள்ள லாம். நீ உடனே எழுந்து வா. உன்னுடைய வேலைக்காரிக்கு உடம்பு குணப்பட்டிருந்தால், அவளை வேண்டுமானாலும் அழைத்துக் கொண்டு வா; ஆனால் ஒரு விஷயம்; அந்த மனிதர் செய்யும் காரியத்தை வேலைக்காரி நேரில் பார்த்தால், இனிமேல் அவளுக்கு நிரம்பவும் இளக்கமாகிவிடும்; அது விஷயத்தை நீ தான் யோசித்துக் கொள்ள வேண்டும்" என்றாள்.

அதைக்கேட்ட மெல்லிளந்தோகையான ஷண்முகவடிவு, முற்றிலும் கலக்கமும் குழப்பமும் அடைந்தவளாய்த் திடுக் கிட்டெழுந்து தனது உடைகளைச் சீர்திருத்திக் கொண்டவளாய்த் தனது வேலைக்காரி படுத்துக் கொண்டிருந்த இடத்திற்குப்போய்

அவளைப்பார்க்க, அவள் அலுத்துப் போய் அலங்கோலமாகப் படுத்துக் கடுமையாகத் துயின்று கொண்டிருந்தாள். ஜுரவேகம் நன்றாகத் தெரிந்தது. அந்த அகாலவேளையில் அவளை எழுப்புவது சரியல்ல என்று நினைத்த ஷண்முகவடிவு, தான் மாத்திரம் வருவதாகச் சொல்லி விட்டு அவர்கள் இருந்த விடுதியின் கதவை மூடி வெளிப்பக்கத்தில் பூட்டிக்கொண்டு அந்த ஸ்திரீயோடு புறப்பட்டு வந்தாள். இருவரும் சத்திரத்தின் வாசலை அடைந்து, ரஸ்தாவில் நின்று கொண்டிருந்த பெரிய ஸாரட்டு வண்டியண்டைப் போய்ச் சேர்ந்தனர். போலீஸ் கமிஷனர் முன் பக்கத்தில் ஓர் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தனர். அவர் இவர்களைக் கண்டவுடன், "சீக்கிரம் ஏறுங்கள் நேரமாகிறது. அவசரம்" என்றார். உடனே ஸ்திரீகள் இருவரும் வண்டியில் ஏறிப் பின் பக்கத்தில் இருந்த ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டனர். வண்டி உடனே புறப்பட்டு விசையாகச் செல்லத் தொடங்கியது. சிறைச்சாலையில் எப்படிப்பட்ட விபரீத சம்பவம் நேர்ந்ததோ என்றும் அதைத் தான் நேரில் பார்த்தால், அதிலிருந்து தன் மனதில் எப்படிப்பட்ட சங்கடம் ஏற்படுமோ என்றும் ஷண்முகவடிவு நினைத்து அல்லல்பட்டவளாயிருக்க, அவளது பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஸ்திரீ போலீஸ் கமிஷனரைப் பார்த்து, "அங்கே என்ன நடந்தது என்ற விவரத்தை இன்னம் கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்கள். அதைக் கேட்க வேண்டும் என்று எனக்கும் இந்தப் பெண்ணுக்கும் ஆவல் அதிகமாக இருக்கிறது" என்றாள்.

உடனே போலீஸ் கமிஷனர், "இதோ சிறைச்சாலை வந்துவிட்டது. இன்னம் ஐந்து நிமிஷத்தில் எல்லா விஷயத்தையும் நீங்களே நேரில் பார்க்கப் போகிறீர்கள். நான் இப்போது சொன்னால், அதை நீங்கள் நம்பவே மாட்டீர்கள். எதையும் அவரவர்கள் கண்ணால் பார்த்தால்தான் திருப்தி உண்டாகும். ஆனால், ஒரு சங்கதியை மாத்திரம் நான் உங்களுக்குத் தெரிவித்து வைக்கிறேன். ஆனால், அது இந்தக்

கலியாண சுந்தரத்தைப் பற்றிய சங்கதியல்ல; வேறொருவரைப் பற்றியது. அதை மாத்திரம் நீங்கள் இப்போது தெரிந்து கொண்டால், கலியாணசுந்தரம் செய்யும் காரியத்தின் கருத்து இன்னதென்பது பகிஷ்காரமாகத் தெரிந்து போகும். அதாவது, சில தினங்களுக்கு முன் இந்த ஊரிலுள்ள ஒரு தாசிப் பெண் சிறைச்சாலையில் அடைபட்டதாக எனக்கு அறிக்கை வந்திருந்தது. அவள் நிரம்பவும் அழகானவளாம். வயது சுமார் பதினைந்து இருக்குமாம். அவள் ஒரு குற்றம் செய்து விட்டாள். இந்த ஊர் அரண்மனையிலுள்ள ராஜாத்தியின் நகையை ஒரு வேலைக்காரி திருடிக்கொண்டுபோய் இந்தத் தாசிப் பெண்ணினிடத்தில் விற்றுவிட்டாள். அந்த நகை சுமார் இரண்டாயிரம் ரூபாய் பெறும். அதை இவள் பத்து ரூபாய்க்கு வாங்கிவிட்டாள். அந்தச்சங்கதி போலீஸ் இன்ஸ்பெக்டருக்குத் தெரிந்து போய்விட்டது. அவர் உடனே போய் இந்தத் தாசிப் பெண்ணைப் பிடித்துச் சிறைச்சாலையில் அடைத்து வைத்திருக்கிறார். அந்த வழக்கின் விசாரணை இன்னம் சில தினங்களில் நடக்கப்போகிறது. அந்தப் பெண் தாசி வகுப்பைச் சேர்ந்தவளாக இருந்தாலும், நல்ல யோக்கியமான நடத்தை யுடைய பெண், கெட்ட நடவடிக்கைக்கே போகிறவ ளல்ல; சிறு பெண்ணாகையால் அறியாத்தனத்தினால் நகையை வாங்கி விட்டாள். அந்தப் பெண்ணை இன்ஸ்பெக்டர் இந்தக் கலியாணசுந்தரம் அடைபட்டிருந்த அறைக்குப் பக்கத்து அறையில் அடைத்து வைத்திருந்தாராம். அவள் தன்னுடைய அறைக்குப் பக்கத்திலிருக்கும் அறையில் அடைபட்டிருக்கிறாள் என்பதையும், அவள் நல்ல சுந்தரமான பெண் என்பதையும் இந்தக் கலியாணசுந்தரம், அறை பெருக்கும் வேலைக்காரியினி டத்தில் எப்படியோ கேட்டுத் தெரிந்து கொண்டார் போல் இருக்கிறது. அதுவுமன்றி, இவர் அந்த வேலைக்காரியையும் கைவசப்படுத்திக் கொண்டு மகா அருமையான ஒருகாரியம் செய்திருக்கிறார். அது என்ன காரியம் என்பதை இந்தப் பெண்ணே நேரில் வந்து பார்க்கட்டும்'' என்று கூறினார்.

அந்த வரலாற்றைக் கேட்ட ஷண்முகவடிவினது மன நிலைமை மரண தண்டனை அடைந்தவன் தூக்குமேடையின் மேல் ஏறி நிற்கையில், அவனது மனம் எப்படிப் பரிதவிக்குமோ அப்படி இருந்தது. அதற்கு முன் அவர்கள் சொன்னதெல்லாம் கட்டுப்பாடாக இருக்கும் என்றும், கலியாணசுந்தரம் எவ்விதத் தவறும் செய்திருக்க மாட்டார் என்றும் அவள் உறுதியாக நினைத்திருந்தாள். ஆனாலும், இப்போது அவர் பக்கத்து அறையில் அடைபட்டிருக்கும் தாசிப் பெண்ணின் விஷயத்தில் எப்படியோ சம்பந்தப்பட்டிருப்பதாகவும், அதைத் தான் நேரில் பார்க்கலாம் என்றும் அவர்கள் சொன்னதை அவள் கட்டுப் பாடென்று நினைத்து அசட்டை செய்யக் கூடாமல் இருந்தது. தனது ஆருயிர்க் காதலரான கலியாணசுந்தரம் ஆட்சேபகரமான காரியத்தைச் செய்து கொண்டிருப்பதைத் தான் தனது கண்ணால் பார்ப்பதைவிடப் பார்க்காமல் இருப்பதே உசிதமாகத் தோன்றியது. தன்னைத் திருப்பி அழைத்துக்கொண்டு போய் சத்திரத்தில் விட்டுவிடச் சொல்லலாமா என்ற எண்ணம் அவளது மனதில் தோன்றியது. ஆனாலும், அவ்வளவு தூரம் வந்தபிறகு உண்மை இன்னதுதான் என்பதை நிச்சயமாக அறிந்து கொண்டு தன் மனதை ஒருவாறு திடப்படுத்தி ஒரு நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற விருப்பம் உண்டானது. ஆகையால், தான்போய் எப்படியும் அந்த விபரீதக் காட்சியைப் பார்த்து விட்டு வரவேண்டும் என்ற உறுதி ஏற்பட்டது. ஆகவே, அவள் கரை கடந்து தத்தளிக்கும் தன் மனத்தை ஒருவாறு திடப்படுத்திக் கொள்ள முயற்சித்தவளாய் இருக்க, அவளுக்குப் பக்கத்திலிருந்த ஸ்திரீ, போலீஸ் கமிஷனரைப் பார்த்து, ''ஏதேது! நீங்கள் சொல்வதைப் பார்த்தால், இந்தக் கலியாணசுந்தரம் எங்கே போனாலும், அவருடைய மனம் கெட்ட வழியில் இறங்கி இருப்பதற்கு அனுகூலமாக அவ்விடத்தில் ஒரு பெண்ணும் வந்து காத்துக் கொண்டி ருக்கிறாள் போலிருக்கிறதே. மற்ற இடங்களில்தான் அது சாத்தியப்படுமென்றால், பாராக்காரர்கள் பந்தோபஸ்தாக

இருக்கும் சிறைச்சாலையில் கூட இப்படிப்பட்ட காரியம் நிகழ்வதென்றால், அது இந்த மனிதருடைய ஜாதக விசேஷத்தைப் பொருத்தது என்று தான் எண்ண வேண்டி யிருக்கிறது. உங்களுடைய இன்ஸ்பெக்டர்தான் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கக் கூடாதா? இந்தக் கலியாண சுந்தரம்தான் பெண்கள் விஷயத்தில் பைத்தியம் பிடித்துக் கெட்டு அலைகிறாரே. அப்படியிருக்க, நெருப்புக்குப் பக்கத்தில் பஞ்சைக் கொண்டுபோய் வைப்பதுபோல, அவர் இருக்கும் அறைக்குப் பக்கத்தில்தானா அந்தத் தாசிப் பெண்ணை அடைத்து வைக்க வேண்டும்? அப்படி அடைத்து வைத்தால் தான் என்ன? சிறைச் சாலைக்குள் ஒருவரிடத்திலிருந்து இன்னொருவரிடம் தூதுபோகும் அயோக்கிய மனிஷியைத் தானா வேலைக்காரியாக வைக்க வேண்டும்? அப்படி வைத்தாலும், அந்த வேலைக்காரி கைதிகளோடு அதிகநேரம் பேசிக்கொண்டிருக்கும்படி விடலாமா? இந்தச் சம்பவத்தில் கலியாணசுந்தரம் செய்த தவறைக் காட்டிலும் உங்களுடைய கீழ் அதிகாரிகள் செய்ததே பெருத்த தவறாகத் தோன்றுகிறது'' என்றாள்.

அதைக்கேட்ட போலீஸ் கமிஷனர் தமது பொறுமையை இழக்காமல் நிரம்பவும் நிதானமாகவே பேசத் தொடங்கி, ''வாஸ்தவந்தான்; அந்த வேலைக்காரி இந்தச் சிறைச்சாலையில் பதினைந்து வருஷகாலமாக இருந்து வருகிறாள். அவள் இதுவரையில் இப்படிப்பட்ட அயோக்கியத்தனம் எதுவும் செய்ததே இல்லை. இதுதான் முதல்தடவை. இந்த மனிதர் அவளுடைய மனசை எப்படியோ கலைத்துத் தைரியப்படுத்தி இருக்கிறார். இருக்கட்டும், எல்லாவற்றையும் நான் நன்றாக விசாரித்து அவரவர்களுக்குத் தக்கபடி சிட்சை நடத்தி வைக்கிறேன்'' என்றார்.

அதற்குள் சிறைச்சாலையின் வாசல் வந்துவிட்டது. வண்டி அவ்விடத்தில் நின்றது. கமிஷனரும் ஸ்திரீகள் இருவரும்

உடனே கீழே இறங்கினார்கள். கமிஷனரினது மாளிகைக்கு வந்து செய்தி சொன்ன பாராக்காரனை அவர் உடனே அனுப்பி விட்டார் ஆகையால், அவன் சிறைச்சாலையின் வாசலில் ஆயத்தமாக நின்று அவரது வருகையை ஆவலோடு எதிர்பார்த்த வண்ணம் இருந்தான். வண்டியில் வந்திறங்கிய போலீஸ் கமிஷனரையும் இரண்டு ஸ்திரீகளையும் பாராக்காரன் அழைத்துக்கொண்டு சிறைச்சாலைக்குள் நுழைந்து பற்பல கூடங்களையும் தாழ்வாரங்களையும் கடந்து மேன்மாடத்திற்கு அழைத்துச் சென்றான். கலியாணசுந்தரம் அடைபட்டிருந்த அறை நெருங்கவே, ஷண்முகவடிவை அழைத்து வந்த ஸ்திரீ மெதுவாகப் பின்தங்கிப் படியிலேயே நின்றுவிட்டாள். ஷண்முகவடிவினது சஞ்சலமும் கலக்கமும் அப்போது உச்ச நிலையை அடைந்திருந்தது என்றே சொல்ல வேண்டும். ஆகாயத்தை அளாவிய ஒரு மலையின் உச்சியில் நிற்கும் ஒருவர் செங்குத்தாக இருக்கும் அதன் பக்கத்தில் நெருங்கி பாதாளத்தில் விழுவதற்கு அடி எடுத்து வைப்பது போலவும், காலடியில் கிடக்கும் பெருத்த நாகப் பாம்பின் மேல் காலை வைப்பவள் போலவும், சகிக்கமாட்டாத வேதனை அடைந்தவளாய் ஏதோ ஒரு பிரம்மாண்டமான அபாயம் இருப்பதாக நிச்சயமாக உணர்ந்தும், தடுக்க முடியாதபடி, அதனிடம் தானே செல்பவள் போல அந்த அறையண்டை சென்றாள். அறைக்குள் உண்டான கலியாணசுந்தரத்தின் குரலைக்கேட்கவே, அவளது அங்கம் எல்லாம் மயிர்ச் சிலிர்ப்படைந்தது. பெருத்த திகிலும் குழப்பமும், கலவரமும் எழுந்து அவளது மனதை வதைத்துச் சித்திரவதை செய்தன. கலியாணசுந்தரம் அன்பான குரலில் யாரோ ஒரு பெண்ணை உருக்கமாக உபசரித்து அழைத்ததும் நன்றாகத் தெரிந்தது. ''என்ன விபரீதம்! அவர்கள் சொன்னது உண்மை போல் இருக்கிறதே! இவர் இப்படியும் நடந்து கொள்வாரோ? இரவில் அகால வேளையில் தனியாக அடைபட்டிருக்கும் சிறைச்சாலையில் இவர் இப்படிப் பேசவேண்டிய முகாந்திரம் என்ன? யாரோடு பேசுகிறார்?''

என்று கோடானுகோடி எண்ணங்களும் சந்தேகங்களும் தோன்றின. தான் பூமியில் நிற்பதும் ஆகாயத்தில் பறப்பதும் தெரியாத மகா குழப்பமான சொப்பன நிலைமையில் ஷண்முக வடிவு நிரம்பவும் தத்தளித்துக் கைகளைப் பிசைந்து கொண்டு நின்ற சமயத்தில் அந்த அறையின் கதவு பாராக்காரனால் திறக்கப்பட்டது. முன்னோர் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டபடி அபிராமி என்னும் யௌவனப் பெண் கீழே வீழ்ந்து கிடக்க, கலியாணசுந்தரம் சிறைச்சாலையின் விதிகளுக்கு மாறாக விளக்கைக் கொளுத்தி வைத்துக்கொண்டு அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து அவளது முகத்தில் தண்ணீரைத் தடவி உபசரித்து, "ஆ! அபிராமீ! இந்திரபாயி என்ற பொய்ப் பெயர் வைத்துக் கொண்டு வந்து நீ எவ்வளவு நாழிகை நேரம் என்னை ஏமாற்றி வதைத்துவிட்டாய்! உன்னுடைய பிடிவாதம் எல்லாம் என்னிடம் செல்லும் என்றா நினைத்தாய்; நானா ஏமாறு கிறவன்!" என்று கூறியவண்ணம் அவளது வாயைத் திறந்து தண்ணீரை வார்க்க முயன்றான். அவன் அவ்வாறு பேசியதில் முதல் வாக்கியத்தில் பாதி பாகம், அவர்கள் கதவைத் திறந்த ஓசையில் மறைந்துபோய் விட்டது. ஆகையால், "நீ எவ்வளவு நாழிகை நேரம் என்னை ஏமாற்றி வதைத்துவிட்டாய்" என்பது முதல் முடிவுவரையில் அவர்களது செவியில் பட்டது. ஆகையால், பாராக்காரன் அந்த வார்த்தைகளுக்கு வேறு விதமான அர்த்தம் செய்து, அந்தப் பெண்ணை அவன் வற்புறுத்தியதாகவும் அவள் இணங்காமையால், அவன் அவளைப் பலாத்காரம் செய்து அவளது கற்புக்குப் பங்கம் இழைத்து விட்டதாகவும் கூறிவிட்டான். அதற்கு ஒத்தபடி அபிராமியும் உடனே எழுந்து கலியாணசுந்தரத்தின் மீது குற்றம் சுமத்தியதன்றி, தனது சிரத்திலிருந்து ஒழுகிய இரத்த வெள்ளத்தையும் காட்டினாள் ஆதலால், அதையும் கண்டு, சுவரில் செய்யப்பட்டிருந்த பெரிய துவாரத்தையும் கண்ட ஷண்முகவடிவு முற்றிலும் பிரமிப்படைந்து கலியாண சுந்தரத்தினது முகத்தை நோக்க, அவன் வாய் திறந்து பேச

மாட்டாமல் திருடனைப் போல விழித்ததைக் காணவே, ஷண்முகவடிவு உண்மையிலேயே கலியாணசுந்தரம் சுவரைக் குடைந்துகொண்டு அந்த தாசிப் பெண் இருந்த அறைக்குள் வந்து அநியாயமாகக் கெடுத்துவிட்டான் என்றே உறுதியாக எண்ணிவிட்டாள். அதுகாறும் நரக வேதனை அடைந்து புண்பட்டு மகா சங்கடமான நிலைமையில் இருந்த அந்த மடந்தையினது மனதில் அந்தப் பரம விகாரமான காட்சி பெருத்த இடிபோலப் போய்த்தாக்கவே, அவள் கிருகிருப்பும் மயக்கமும் அடைந்து ஸ்மரணை தப்பி வேரற்ற மரம்போலக் கீழே சாய்ந்துவிட்டாள். அதற்கு மேல் அவ்விடத்தில் என்ன நடந்தது என்பதை அவள் சிறிதும் உணரவே இல்லை.

## 31-வது அதிகாரம்

## பசுத்தோல் போர்த்த புலி

மறுபடியும் ஷண்முகவடிவு பிரக்ஞையடைந்து கண்களைத் திறந்து பார்த்த காலத்தில் பொழுது விடியும் சமயமாக இருந்தது. போலீஸ் கமிஷனர் வீட்டு விருந்தாளியான அந்த ஸ்திரீ, ஷண்முகவடிவு படுத்திருந்த இடத்துக்குப் பக்கத்தில் நெருங்கி உட்கார்ந்துகொண்டு நிரம்பவும் ஆவலோடும் கவலையோடும் அவளது முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். ஆகையால், கண்களை விழித்துப் பார்த்த அந்த மடந்தை, "நான் இப்போது எங்கே இருக்கிறேன்" என்று நிரம்பவும் பரிதாபகரமான குரலில் ஹீனஸ்வரமாக வினவினாள்.

அதைக்கேட்ட அந்த ஸ்திரீ, "அம்மா! இது நீங்கள் இறங்கியிருக்கும் சத்திரம் என்பது தெரியவில்லையா? நீ சிறைச்சாலையில் மூர்ச்சித்துக் கீழே விழுந்தாயல்லவா; அங்கிருந்து நான் மெதுவாக உன்னைத் தூக்கிக் கொண்டு வந்து வாசலிலிருந்த வண்டியில் வைத்து இங்கே கொண்டுவந்து

படுக்கவைத்து உன்னுடைய மூர்ச்சை தெளியும்படியான காரியங்களைச் செய்தேன். நீ இப்போதுதான் விழித்துக் கொண்டாய். இதுவரையில் இறந்து போனவள்போலக் கிடந்தாய்'' என்றாள்.

உடனே ஷண்முகவடிவு அளவற்ற துக்கமும் வெட்கமும் கொண்ட மனத்தினளாய், ''அம்மா! மகாதுர்ப்பாக்கியவதியான நான் இனி உயிரோடு இருந்தாலும் ஒன்றுதான்; இறந்து போனாலும் ஒன்றுதான். எனக்கு நீங்கள் உபசரணை செய்து என் மூர்ச்சையைத் தெளிவிக்காமல் அப்படியே இறக்க விட்டிருந்தால் அது பெருத்த உதவியாக இருந்திருக்குமே. இனி நான் செய்வதற்கு என்ன இருக்கிறது? இப்படிப்பட்ட விசனமும் வெட்கமும் உண்டான பிறகு நான் இனி இந்த உலகத்தில் உண்மையான சுகத்தையும் சந்தோஷத்தையும் அடையப் போகிறேனா? ஒருநாளும் இல்லை'' என்று நிரம்பவும் கலவரமாகவும் உருக்கமாகவும் கூறினாள்.

அதைக் கேட்ட ஸ்திரீ அவளது விஷயத்தில் அந்தரங்கமான அன்பும் பட்சமும் அனுதாபமும் கொண்டவள்போலத் தோன்றி, ''பெண்ணே! நீ சொல்வது நிஜமான விஷயந்தான். இந்த மனிதர் இப்படிப்பட்ட நடத்தையில் ஒருநாளும் இறங்கியிருக்கமாட்டார் என்று நானும் முதலில் சந்தேகப் பட்டேன். போலீஸார் கட்டுப்பாடாக இவர்மேல் இந்தக் குற்றத்தைச் சுமத்தி இருக்கிறார்கள் என்றே நான் நினைத்துப் போலீஸ் கமிஷனர் சொன்னதைக் கூட நம்பாமலேயே இருந்தேன். இப்போது எல்லா விஷயத்தையும் கண் கூடாக நேரில் பார்த்தபோதுதான் என் மனசில் நம்பிக்கை ஏற்பட்டது. இன்னமும் என் மனம் இதை உண்மையென்று நம்ப மாட்டேன் என்கிறது. விடியற்காலையில் நாம் பார்த்தது, ஏதாவது நாடகத்தின் காட்சியாக இருக்குமோ என்று என் மனம் இன்னமும் சந்தேகப்படுகிறது. இந்த மனிதர் எவ்வளவு துணிகரமான வேலை செய்திருக்கிறார் பார்த்தாயா? நினைக்க

நினைக்க ஆச்சரியம் அடங்க மாட்டேன் என்கிறது. இப்போது நாம் கண்ட காட்சியிலிருந்து இனியும் அந்த மனிதர் சுத்தமானவர் என்று நாம் சொல்லப்போனால் நமக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்றுதான் மற்றவர்கள் நினைப்பார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர் இவரைப்பற்றி இதற்கு முன் அனுப்பியுள்ள பிராது பொய்யென்று இனி நாம் எப்படிச் சொல்லுகிறது? இவ்வளவு பெருத்த அக்கிரமும் துணிகரமான காரியமும் செய்ய எத்தனித்த மனிதர் எதைத்தான் செய்ய மாட்டார்? இனி அவரைப் பற்றி நாம் எவ்வளவு தான் வருத்தப்பட்டாலும், அவர் தண்டனை அடைவது நிச்சயம். காரியம் இவ்வளவு தூரம் நடந்தபிறகு, தாம் அவரைக் காப்பாற்றுவது துர்லபம் என்று போலீஸ் கமிஷனர் சொல்லிவிட்டுப் பெண்ணையும் அவரையும் பிரித்து வெவ்வேறு அறைகளில் அடைத்துவிட்டார். நாளைய தினம் நடக்கும் விசாரணையில் எல்லா விஷயமும் வெளியாகிவிடும். பாராக்காரர்கள் எல்லோருக்கும் இந்தச் சங்கதி தெரிந்துபோய் விட்டது ஆகையால், இதைப் போலீஸ் கமிஷனர் இனி மறைக்கவே முடியாது. அவருக்கு எப்படியும் கடினமான தண்டனை கிடைப்பது நிச்சயமாகவே தோன்றுகிறது. உன் மனசில் பழைய பிரியம் இன்னம் கொஞ்சம் இருந்து ஒருவேளை போராடுமானால் நீ அவருக்கு வக்கீல் வைத்து எதிர்வாதமாடி உன்னால் இயன்ற உதவியைச் செய். அதற்கு நானும் என்னாலான உதவியைச் செய்யத் தடையில்லை. ஆனால், போலீஸ் கமிஷனர் இனி எந்த உதவியையும் செய்யமாட்டார்'' என்றாள்.

அதைக்கேட்ட ஷண்முகவடிவு, ''அம்மா! என்னுடைய புத்தி முழுதும் குழம்பிப் போய்விட்டது; பைத்தியம் கொண்ட மாதிரி இருக்கிறது. போலீஸ் கமிஷனரவர்கள் எந்த உதவியும் செய்யமுடியாவிட்டால்,என்னால்தான் என்ன காரியம் சாதிக்க முடியும்? நான் இந்த ஊருக்குப் புதுமனுஷி, எனக்கு எந்த

மனிதரும் பழக்கமில்லை. நீங்களும் என்னைப் போலவே இந்த ஊருக்குப் புதியவர்கள். உங்களுக்கும் தெரிந்த மனிதர்கள் இருக்கமாட்டார்கள். ஆகையால், நாம் இருவரும் சேர்ந்து பிரயாசைப்பட்டு போலீஸார் செய்யும் பிரயத்தனங்களுக்கு விரோதமாக வேலை செய்து அவரைத் தப்பவைக்க முடியும் என்று நான் நினைக்கவே இல்லை. இனி அவருடைய முகத்தில் விழிக்கவும் அவரோடு பேசவும் எனக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை. இனி ஒரு நிமிஷம் கூட இந்த ஊரில் இருக்க என் மனம் சம்மதிக்கவில்லை. என்னுடைய வேலைக்காரிக்கும் இப்போது உடம்பு சுமார்ப்பட்டிருக்கலாம். இன்றைய பகல் முழுவதும் நாங்கள் இந்த ஊரில் இருந்தால், அவளுக்கு உடம்பு அநேகமாய் சரிப்பட்டு விடும் என்று நினைக்கிறேன். நாளைக்கு விடியற்காலையில் இந்த ஊரைவிட்டுப் புறப்பட்டுப் போய் விட வேண்டும் என்று நினைக்கிறேன். இங்கே இருந்து செஞ்சிக்கோட்டை வரைக்கும் வரும்படி ஒரு வண்டியை அமர்த்திக்கொண்டால்,அங்கே இருந்து தஞ்சாவூர் வரையில் வேறே வண்டி வைத்துக் கொள்ளலாம். நீங்கள் நல்ல எண்ணத்தோடு எனக்கு இதுவரையில் எத்தனையோ உதவிகள் செய்திருக்கிறீர்கள். அவைகளை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன். கடைசி உதவியாக எனக்கு நீங்கள் இன்னொரு காரியம் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். என்னுடைய வேலைக்காரி எழுந்து நடமாடினால், எங்களுக்கு வேண்டிய வண்டியை அவள் அமர்த்திக்கொண்டு வருவாள். இப்போது நானே போய் அந்தக் காரியத்தைச் செய்யவேண்டியிருக்கிறது. நீங்கள் போலீஸ் கமிஷனரவர்கள் மூலமாக எனக்கு ஒரு வண்டி அமர்த்தி அது விடியற்காலையில் இங்கே வரும்படிச் செய்ய வேண்டும். அந்தச் சிரமத்தை நான் உங்களுக்குக் கொடுத்தே தீரவேண்டி இருக்கிறது'' என்று நிரம்பவும் பரிதாபகரமாகக் கூறினாள்.

அதைக் கேட்ட அந்த ஸ்திரீ சிறிதுநேரம் சிந்தனை செய்த பிறகு விசனகரமான பார்வையாக ஷண்முகவடிவை நோக்கி, ''நீ

சொல்வதும் நியாயமாகத்தான் இருக்கிறது. நாங்கள் உனக்குக் கடிதம் எழுதி உன்னை எதற்காக இங்கே வரவழைத்தோமோ, அந்தக் கருத்து நிறைவேறாமல் போனதே என்பதை நினைக்க எனக்கு நிரம்பவும் விசனம் உண்டாகிறது. அந்த மனிதர் சிறுபிள்ளைத்தனத்தினால் ஏதோ தவறைச் செய்து விட்டார் என்று நினைத்து அவரை இந்தத் தடவை தப்பவைத்து இனியும் அவர் அப்படி செய்யாதபடி புத்திமதி சொல்லி உங்கள் இருவரையும் ஊருக்கு அனுப்பிவிட வேண்டும் என்பது எங்களுடைய எண்ணம். அதற்குள் இப்படிப்பட்ட அட்டூழியம் நடந்துவிட்டது. சிறைச்சாலையிலேயே அவர் செய்திருக்கும் காரியத்தைப் பார்த்தால், அவர் வெளியில் வந்தபின் சும்மா இருப்பவராகத் தோன்றவில்லை. அவருடைய சுயபுத்தி இனி திரும்பும் என்று யாரும் நினைக்கமுடியாது. நீ சொல்வதுபோல, நீயும் நானும் இனி என்ன முயற்சி செய்தாலும் போலீஸாருடைய கட்சிதான் ஜெயிக்கும். அவருடைய தலைவிதி எப்படி இருக்குதோ, அதுபோல நடக்கட்டும். இனி அவர் தப்புவதும், அவருடைய புத்தி நல்ல வழியில் திரும்புவதும் தெய்வத்தின் அனுக்கிரகத்தால் ஏற்பட வேண்டுமேயன்றி, மனித எத்தனத்தால் முடியப் போகிறதில்லை. இந்த ஊரைவிட்டுப் புறப்பட்டுப் போக வேண்டும் என்று நீ செய்த தீர்மானம் சரியானதே. ஆனால், நீ அறியாத பெண். உன்னை மறுபடியும் தனியாக அனுப்புவது சரியல்ல. உனக்கு நான் இதுவரையில் உண்மையான எந்த அனுகூலமும் செய்ய முடியாமல் போய்விட்டது ஆகையால், நீ ஊருக்குத் திரும்பிப் போகும் விஷயத்திலாவது உனக்கு நான் துணையாக வந்து நீ பத்திரமாக ஊர்போய்ச் சேரும்படி செய்தால், அதுவாகிலும் ஓர் அனுகூலமாக இருக்கும் என்ற நினைக்கிறேன். நானும் இந்த ஊருக்கு வந்து பலநாட்கள் ஆகின்றன. சில தினங்களுக்கு முன்பே நான் இவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப் போக உத்தேசித்தேன். இந்தக் கலியாணசுந்தரத்தின் சங்கதியைக்கேட்டு நான் உனக்குக் கடிதம்

எழுதினேன். ஆகையால், இதன் முடிவைப் பார்த்துக் கொண்டு புறப்படலாம் என்றிருந்தேன். இப்போதுதான் காரியம் ஒரு மாதிரியாக முடிந்துபோய்விட்டது. இனி எனக்கும் இங்கே ஒரு வேலையும் இல்லை ஆகையால், நான் உடனே போய் போலீஸ் கமிஷனரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு பிரயாணத்துக்கு ஆயத்தமாகி வண்டியில் உட்கார்ந்துகொண்டு விடியற்காலம் இங்கே வந்து சேருகிறேன். நீங்களும் தயாராக இருங்கள். உடனே புறப்பட்டுப் போகலாம். உன்னுடைய வேலைக்காரி இன்னமும் பலஹீனமான நிலைமையில் இருக்கிறாள். அவளை அழைத்துக்கொண்டு நீ மாத்திரம் தனிவழி போனால், எல்லாப் பொறுப்பும் உனக்கே வந்துசேரும். மறுபடியும் பிரயாணம் செய்யும் பிரயாசையில், அவளுடைய உடம்பு கொஞ்சம் கெட்டுப் போகுமானால், உன்னுடைய பாடு மகா கஷ்டமாக முடியும். ஆகவே, எல்லாவற்றையும் யோசிக்க நானும் நாளைய தினமே புறப்பட்டு உன்னோடு கூடவருவதே உசிதமாகத் தோன்றுகிறது. எனக்கு இதனால் கஷ்டமாவது நஷ்டமாவது இல்லை. நானும் எப்படியும் ஊருக்குப் போகவேண்டியவளாக இருக்கிறேன். நான் தனியாக அவ்வளவு தூரம் பிரயாணம் செய்வதைவிட, உன்னோடு கூடவந்தால், எனக்கும் நீங்கள் துணையாக இருப்பீர்கள். நான் கூட இருப்பது உங்களுக்கும் தைரியமாக இருக்கும்'' என்றாள்.

அந்த ஸ்திரீ செய்த பிரரேபணையைக் கேட்ட ஷண்முகவடிவு நிரம்பவும் மனோதிடமும் மகிழ்ச்சியும் அடைந்து, ''உங்களுக்கு இந்த ஊரில் ஏதாவது முக்கியமான காரியம் இருக்குமானால், எனக்காக அதையெல்லாம் விட்டு வரவேண்டாம். மற்றபடி நீங்கள் என்னோடுகூட வருவதைப்பற்றி நான் அளவற்ற சந்தோஷம் அடைகிறேன். திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணையென்பது போல, அந்த ஈசுவரன் தான் உங்கள் மூலமாக எனக்கு உதவிசெய்கிறான் என்பது நிச்சயமாகத் தெரிகிறது.

நீங்கள் கஸ்பா தஞ்சாவூருக்கே போகிறவர்களா? அல்லது, பக்கத்திலுள்ள ஏதாவது கிராமத்துக்குப் போகிறவர்களா?'' என்றாள்.

அந்த ஸ்திரீ, ''நான் இருப்பது கஸ்பா தஞ்சாவூரே. நான் அங்கேதான் போய்ச் சேரவேண்டும். இந்த ஊரில் எனக்கு ஒரு வேலையும் இல்லை. இந்த நிமிஷத்தில்கூட நான் புறப்பட்டு விடலாம். அதிருக்கட்டும். நீ எந்த ஊருக்குப் போகப் போகிறாய்? நேராகத் திருவாரூருக்குத் தானே போக வேண்டும்?'' என்றாள்.

ஷண்முகவடிவு சிறிது யோசனை செய்து, ''நானும் உங்களோடு தஞ்சாவூருக்கே வரலாம் என்று நினைக்கிறேன். அங்கே என்னுடைய அக்காள் இருக்கிறதாக நான் ஏற்கெனவே உங்களிடம் சொல்லி இருக்கிறேன் அல்லவா? ஊரைவிட்டு நான் வந்தது தான் வந்தேன்; அக்காளையும் பார்த்துவிட்டு இந்தச் சங்கதியையெல்லாம் அவளிடம் நேரில் சொல்லிவிட்டுப் போகிறேன். அவள் என்னைவிட்டுப் பிரிந்து போயும் அதிக காலமாகிறது. அவளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அதிகமாக இருக்கிறது. நேற்று ராத்திரி அந்த சிறைச் சாலைச் சம்பவம் நேர்ந்திராவிட்டால், நான் எப்படியும் இன்னும் சில தினங்கள் வரையில் இந்த ஊரிலேயே இருக்க நேருமல்லவா? அந்தக் காலத்தைத் தஞ்சாவூருக்குப் போவதில் உபயோகப் படுத்திக் கொள்ளுகிறேன். நான் ஊருக்குப் போய், என் அத்தையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் நான் மறுபடியும் தஞ்சாவூருக்குப் போய் அக்காளைப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் வாய்க்குமோ வாய்க்காதோ. இப்போது அத்தை நல்ல பொறுப்பாளிகளான மனிதருடைய வசத்தில் இருப்பதால், நான் அந்தக் கவலையில்லாமல் தஞ்சாவூருக்குப் போய்த் திரும்பலாம் என்று நினைக்கிறேன். அதோடு நீங்கள் எனக்குத் துணை வருகிறீர்கள் ஆகையால், நான் சௌக்கியமாகத் தஞ்சாவூருக்குப் போகலாம். அங்கே உங்களுடைய ஜாகையில்

இறங்கிக்கொண்டு அக்காள் இருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டு அதிக அலைச்சல் இல்லாமல் நேராக அங்கே போய் விடலாம்'' என்றாள்.

அதைக்கேட்ட அந்த ஸ்திரீ நிரம்பவும் சந்தோஷம் அடைந்த வளாய், ''ஓ! நீ அவசியம் என்னுடைய வீட்டுக்கு வரவேண்டும். ஏதோ ஈசுவரன் கிருபையால் எனக்கு ஏராளமான செல்வம் இருக்கிறது. என்னுடைய வீடு அரண்மனைபோல விசால மாகவும் சகல சௌகரியங்களும் நிறைந்ததாகவும் இருக்கிறது. நீ வந்து அங்கே சுகமாக இரு. உன்னுடைய அக்காள் இருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டு உன்னை அவளிடம் அழைத்துக் கொண்டு போய்ச் சேர்க்கிறேன். உனக்கு எவ்வளவு காலம் தஞ்சாவூரில் இருக்கப் பிரியமானாலும் நீ என்னுடைய மாளிகையில் சம்பிரமமாக இருக்கலாம். நீ காலால் இடும் வேலையைத் தலையால் செய்யக்கூடிய எத்தனையோ வேலைக்காரிகள் என் வீட்டில் இருக்கிறார்கள். உனக்கு ஒரு குறைவும் இல்லாமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்'' என்று அந்தரங்க விசுவாசத்தோடு கூறினாள்.

மறுநாள் விடியற்காலையில் வண்டியோடு அந்த ஸ்திரீ புறப்பட்டு வருவது என்றும், ஷண்முகவடிவு வேலைக்காரி யோடு பிரயாணம் புறப்படச் சித்தமாக இருப்பது என்றும் அவர்கள் முடிவு செய்துகொண்டனர். உடனே அந்த ஸ்திரீ அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டாள்.

ஷண்முகவடிவு அன்றைய தினம் முழுதும் தனது வேலைக்காரியை நிரம்பவும் கவலையோடும் ஜாக்கிரதை யுடனும் கவனிக்க, அவள் எழுந்திருக்கவும் நடக்கவும் கூடிய நிலைமையை அடைந்தாள். அன்றைய இரவிலேயே அவர்கள் தங்களது சாமான்களை எல்லாம் பிரயாணத்துக்குச் சித்தமாக மூட்டை கட்டி வைத்து விட்டுத் தங்களது போஜனத்தை முடித்துக்கொண்டு படுத்துத் துயின்றனர்.

விடியற்காலையில், ஒரு பெரிய பெட்டிவண்டி சத்திரத்தின் வாசலில் வந்து நின்றது. அதற்குள் இருந்த போலீஸ் கமிஷனரது விருந்தாளி ஸ்திரீ உடனே கீழே இறங்கி உள்ளே போய்ப் பிரயாணம் புறப்படும்படி அழைக்க, ஷண்முகவடிவும் வேலைக்காரியும் தங்களது மூட்டைகளோடு வந்து வண்டியில் ஏறிக்கொண்டனர். வண்டியின் உட்புறம் நிரம்பவும் விசாலமானதாகவும் பல தினங்களுக்குத் தேவையான ஆகாரம் சிற்றுண்டிகள் முதலிய வஸ்துக்களும் வசதிகளும் ஏராளமாக நிறைந்ததாகவும் இருந்தது. வண்டிக்குள் மூவரும் உட்கார்ந்து கொள்ள அது உடனே பிரயாணம் புறப்பட்டது.

அவர்கள் கோலாப்பூரிலிருந்து புறப்பட்டுப் பிரயாணம் செய்து தஞ்சைக்கு வரும்வரையில் எவ்வித விசேஷ சம்பவமும் நேரவில்லை. ஆதலால், அவர்களினது வழிநடையைக் குறித்த விவரங்களை எல்லாம் விஸ்தரித்துச் சொல்வது இந்தக் கதைக்கு அவசியமில்லை. ஆதலால், அதை விடுத்து மேல் நடந்த விருத்தாந்தங்களைக் கவனிப்போம். சில தினங்களுக்குப் பிறகு அவர்கள் மூவரும் தஞ்சையிலிருந்த அந்த விருந்தாளி ஸ்திரீயினது வாசஸ்தலத்தை அடைந்து உள்ளே சென்றனர். அந்த ஸ்திரீ ஷண்முகவடிவினிடத்தில் முன்னரே சொன்னதற்கு இணங்க அந்த இடம் பெருத்த சீமானது மாளிகை போலச் செல்வமும் சீரும் சிறப்பும் சிங்காரங்களும் நிறைந்ததாகவே இருக்கவே, அதைக்கண்ட இளநங்கை, தன்னை அழைத்து வந்த ஸ்திரீ ஒரு பெரிய சீமாட்டியென்று நிச்சயித்துக்கொண்டு அவளிடத்தில் முன்னிலும் ஆயிரமடங்கு அதிகரித்த மதிப்பும் மரியாதையும் வைத்தவள் ஆனாள். அப்போது அவளது கவனம் முழுதும் நெடுங்காலமாகப் பிரிந்த தனது அக்காளைக் காண வேண்டும் என்ற விஷயத்திலேயே சென்று லயித்திருந்தது ஆகையால், கலியாணசுந்தரத்தைப் பற்றிய நினைவும், கோலாப்பூரில் நிகழ்ந்த பரம சங்கடங்களைப் பற்றிய நினைவும் சிறிது மறைந்திருந்தது. தனது அக்காளை எப்போது

காணப்போவோம் என்ற ஆவலும் ஆசையும் கட்டிலடங்காமல் எழுந்து அவளது மனதை வதைத்துக் கொண்டிருந்தது. அவள் தனது துன்பங்களை எல்லாம் பாராட்டாமல் மறைத்துக் கொள்ள வேண்டும் என்று அரும்பாடு பட்டாள். ஆனாலும், அவளது தோற்றத்தில் ஒருவித அயர்வும் துயரமும் இயற்கையிலேயே காணப்பட்டன. துக்கமென்ற கொடிய விஷமானது அவளுக்குத் தெரியாமல் அவளது மனத்தையும் ஹிருதயத்தையும் படிப்படியாக அறித்துத் தின்று அவளது உயிரைச் சிறுகச் சிறுக குடித்துக்கொண்டே இருப்பதாகத் தோன்றியது. அளவற்ற வாத்சல்யமும் பாசமும் நிறைந்த தனது ஆருயிர்ச் சகோதரியைத் தான் கண்டு ஆனந்தமடையலாம் என்ற எண்ணம் அடிக்கடி அவளது மனதில்தோன்றி அதைத் திடப்படுத்தின. ஆனாலும், அவளது முகம் சந்தோஷத்தினாலாவது புன்னகையினாலாவது மலரவே இல்லை. இந்த உலகத்திலுள்ள சகலமான வெளிச்சமும், பிரகாசமும், ஜோதியும் அவிந்துபோய், அந்தகாரமே எங்கும் வியாபித்து உலகத்தைக் கப்பிக்கொண்டது போல அவளது மனம் உணர்ந்தது. மகா பயங்கரமான கடலில் கடுமையான புயல்காற்றினாலும் மழையினாலும் அகோரமாகக் கொந்தளித்தெழுந்து ஆகாயத்தை அளாவப் பொங்கிப் பெருத்த குன்றுகளையும் பாறைகளையும் பெயர்த்து வெகுதூரம் அப்புறப்படுத்தத்தக்க உரத்தோடு வீசும் பிரளய காலத்து அலைகளின் மத்தியில் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கும் ஓர் அற்பப் படகுபோலத் தான் உய்யும் வழியின்றித் தவித்திருக்கும் நிலைமையில் தனக்கு அந்தச் சீமாட்டியின் சிநேகமும் உதவியும் கிடைத்தது நமது ஷண்முக வடிவுக்கு ஒரு பெருத்த ஆறுதலாகவும் பற்றுக்கோலாகவும் இருந்தது. கலியாணசுந்தரத்தின் நினைவையும் அவன் செய்த காரியங்களையும் அடியோடு மறந்துவிட வேண்டும் என்று அந்த மெல்லிய மங்கை எவ்வளவு அதிகமாக முயன்றும், அது பயனற்ற முயற்சியாக முடிந்தது. அவள் தனது கவனத்தை

எல்லாம் அக்காளின் மீது திருப்பவும், தனது முகத்தில் சந்தோஷக்குறியை வருவித்துக் கொள்ளவும் முயன்றதெல்லாம் அவமானமாக முடிந்தது. அவளது முகம் விகாரப்பட்டே தோன்றியதன்றி அகத்தின் சஞ்சலத்தைக் கண்ணாடிபோல வெளியில் காட்டியவண்ணம் இருந்தது. அந்த நிலைமையில் தான் தனது அக்காளைக் கண்டு நிகழ்ந்த விஷயங்களை எல்லாம் அவளிடம் வெளியிட்டால் அவள் தனக்கு உத்கிருஷ்டமான புத்திமதி சொல்லி தான் அதற்குமேல் நடந்து கொள்ளத் தக்க நல்ல யோசனை ஏதேனும் சொல்லுவாள் என்ற நினைவு உண்டாயிற்று. அதுவுமன்றி, தான் தனது அக்காளையும் எப்படியாவது ஊருக்கு அழைத்துக் கொண்டுபோக வேண்டும் என்ற ஆசையும் மும்முரமாகத் தூண்டிக் கொண்டிருந்தது.

ஆகவே, அவள் தஞ்சையை அடைந்தபின், அந்த விருந்தாளி ஸ்திரீயின் வேண்டுகோளையும் அவளது பணிமக்களினது அன்பார்ந்த உபசரணைகளையும் மறுக்கமாட்டாதவளாய் ஸ்நானம் போஜனம் முதலியவற்றை ஒருவாறு முடித்துக் கொண்டாள்; அவளோடு கூடவந்த வேலைக்காரி கோலாப்பூரி லிருந்து புறப்பட்ட காலத்திலும் தேக அசௌக்கியத்தோடேயே வந்தவள். ஆகையால், மறுபடியும் பிரயாணம் செய்த அலுப்பினால், பழைய கேவல நிலைமையை அடைந்து படுத்துவிட்டாள். அந்த மாளிகையில் இருந்த பணி மக்கள் திறமை வாய்ந்த ஒரு வைத்தியரை அழைத்து வந்து அவளுக்குத் தேவையான மருந்துகள் கொடுக்கச் செய்தனர். வைத்தியர் அவளுக்குத்தக்க ஒளஷதம் கொடுத்ததன்றி அவள் ஐந்தாறு தினங்கள் வரையில் உடம்புக்கு ஓய்வு கொடுத்து படுத்தபடியே இருந்தால், அவள் பழைய நிலைமையை அடைந்துவிடுவாள் என்று சொல்லிவிட்டுப் போனார். ஆகவே, அந்த ஐந்தாறு தினங்கள் வரையில் ஷண்முகவடிவும் தஞ்சையிலேயே இருக்கவேண்டும் என்று அந்த விருந்தாளி ஸ்திரீ கேட்டுக் கொள்ள, ஷண்முகவடிவு அதை ஒப்புக் கொள்ளாமல், ''அம்மா!

என்னிடத்தில் நீங்கள் அபாரமான பிரியம் வைத்திருக்கிறீர்கள் என்பது பரிஷ்காரமாகத் தெரிகிறது. நீங்கள் என் விஷயத்தில் ஆதியிலிருந்து செய்துவரும் அபாரமான உதவிகளுக்கும் காட்டிவரும் நிகரற்ற அன்புக்கும் நான் உங்களுக்கு என்னவிதமான கைம்மாறு செய்யப் போகிறேன். நான் என்னுடைய அக்காளை எப்படியும் இன்றைய தினம் பார்க்க வேண்டும்; பார்த்து இந்த வேலைக்காரியின் நிலைமையைப் பற்றிச் சொல்லுகிறேன். அவள் என்ன யோசனை சொல்லுகிறாளோ அதன்படி நடந்து கொள்ளுகிறேன். ஒருவேளை அவள் இந்த வேலைக்காரியைத் தன்னுடைய ஜாகையில் வைத்துக்கொண்டு உடம்பைச் சரிப்படுத்தி இவளைப் பின்னால் அனுப்புவதாகச் சொல்லி என்னை முன்னால் அனுப்பினால், நான் அவளுடைய வார்த்தைப்படி நடக்கத்தானே வேண்டும்'' என்றாள்.

அதைக் கேட்ட விருந்தாளி ஸ்திரீ, ''அப்படி நீ முன்னால் போக வேண்டியது அத்யாவசியமாக இருந்தால், உன்னுடைய வேலைக்காரி இங்கேயே இருக்கட்டுமே. அவளை நான் குணப்படுத்தி அனுப்பி வைக்கிறேன். இப்படிப்பட்ட கேவலமான நிலைமையில் இவளை இங்கே இருந்து உன்னுடைய அக்காள் ஜாகைக்குத் தூக்கிக்கொண்டு போக வேண்டிய அவசியமே இல்லை'' என்று கரைகடந்த அன்போடு பேசினாள்.

உடனே ஷண்முகவடிவு, ''ஆகா! அப்படியே செய்யலாம். அவளை இங்கே வைக்கக்கூடாது என்கிற எண்ணமாவது தங்களுக்கு இது பாரமாக இருக்கும் என்ற எண்ணமாவது எனக்கு இல்லை. என் விஷயத்தில் எத்தனையோ உதவிகளைச் செய்த உங்களுக்கு இது ஒரு பெரிய காரியமல்ல. அதை எப்படியாவது சரிப்படுத்திக்கொள்ளலாம். எல்லாவற்றிற்கும் நீங்கள் ஓர் ஆளை அனுப்பி என்னுடைய அக்காள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கச் செய்து, அவளைப் பார்த்து, நான் வந்திருக்கும் சங்கதியைச் சொல்லிவிட்டு வரும்படி செய்தால் உடனே நான் புறப்பட்டுப் போய் அவளைப் பார்க்கலாம்'' என்றாள்.

அந்த ஸ்திரீ, ''உன்னுடைய அக்காள் எந்தத் தெருவில் இருக்கிறாள்? அவளுடைய பெயர் என்ன?'' என்றாள்.

ஷண்முகவடிவு, ''சக்காநாயக்கர் தெருவில் 13வது இலக்கம் உள்ள வீட்டில் சோமசுந்தரம் பிள்ளை என்ற ஒரு பெரிய மனிதரும் அவருடைய சம்சாரமும் இருக்கிறார்கள். அவர்களோடு என் அக்காள் இருந்து வருகிறாள். அவளுடைய பெயர் கமலம்'' என்றாள்.

அதைக்கேட்ட அந்த ஸ்திரீ அளவற்ற வியப்பும் சந்தோஷமும் அடைந்தவளாய்க் காணப்பட்டு, ''அப்படியா சங்கதி! சக்கா நாயக்கன் தெருவிலுள்ள சோமசுந்தரம்பிள்ளை வீட்டிலா உன் அக்காள் இருப்பது? அந்த வீடு எங்கே இருக்கிறது என்று யாரும் போய்ப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. அவர் இந்த உலகமறிந்த பெரிய சீமானாயிற்றே. அவருடைய மாளிகை இருக்குமிடம் ஒரு குழந்தைக்குக் கூடத் தெரியும். அதுவுமன்றி, அவர் எனக்கும் நிரம்பவும் பழக்கமானவர். அவரிடத்தில் நான் வேறொரு காரியார்த்தமாகப் போக வேண்டியிருக்கிறது. ஆகையால், நானே புறப்பட்டு நேரில் போய் என் காரியத்தையும் முடித்துக்கொண்டு உன் அக்காளையும் கண்டு நீ வந்திருக்கும் வரலாற்றைச் சொல்லி உன்னை எப்போது அங்கே அழைத்துக் கொண்டு வரலாம் என்பதையும் அவளிடம் கேட்டுக்கொண்டு வருகிறேன்'' என்றாள்.

ஷண்முகவடிவு, ''சந்தோஷம்; அப்படியே செய்யுங்கள். ஆனால், நீங்கள் அந்த சோமசுந்தரம்பிள்ளையினிடத்தில் என்னுடைய வரலாறுகளை எல்லாம் வெளியிட வேண்டாம். நான் என்னுடைய அக்காளைப் பார்த்தபிறகு அவள் எதை வெளியிடச்சொல்லுகிறாளோ அதை மாத்திரம் வெளியிடலாம். கோலாப்பூரில் நடந்த விஷயமெல்லாம் அவர்களிடம் வெளியிடலாமோ வெளியிடக் கூடாதோ, எல்லாவற்றிற்கும் நான் என்னுடைய அக்காளைப் பார்த்தபிறகு மற்ற

விஷயங்களை சோமசுந்தரம்பிள்ளைக்குச் சொல்லலாம்'' என்றாள்.

அந்த ஸ்திரீ, ''இந்த சோமசுந்தரம்பிள்ளைக்கும் உங்களுக்கும் என்ன விதமான உறவு முறைமை? அவரை நீ இதற்கு முன் பார்த்திருக்கிறாயா?'' என்றாள்.

ஷண்முகவடிவு, ''அவருக்கும் எங்களுடைய தகப்பனாருக்கும் நெருங்கிய சிநேகம் என்று எங்களுடைய அத்தை சொல்லியிருக்கிறார்கள். நான் அவரை நேரில் பார்த்ததில்லை'' என்றாள்.

அந்த ஸ்திரீ, ''சரி; அப்படியானால், அவரிடம் உன்னுடைய வரலாற்றைச் சொல்வது உசிதமானதல்ல. நான் முதலில் உன்னுடைய அக்காளிடமே சங்கதிகளையெல்லாம் சொல்லி, அவள் என்ன சொல்லுகிறாள் என்பதைக் கேட்டுக்கொண்டு வருகிறேன்'' என்று கூறிய பிறகு தனது வேலைக்காரன் ஒருவனை அழைத்து ஒரு வண்டியைப் பூட்டச் செய்து அதற்குள் உட்கார்ந்துகொண்டு வண்டியை ஓட்டச் செய்தாள்.

அந்த வண்டி அவளது மாளிகையில் இருந்த தெருவை விட்டு வேறொரு தெருவிற்குள் நுழைந்து மறைந்தவுடனே, அவள் ஸாரதியை அழைத்து வண்டியை வடக்கு ராஜவீதியின் வழியாக ஓட்டிக்கொண்டு போகும்படி சொல்ல, வண்டி அவ்வாறு போகத் தொடங்கியது. அவ்விடத்தில் குறுக்கிட்ட மருங்காபுரி ஜெமீந்தாரினது மாளிகையண்டை வந்தவுடனே அந்த ஸ்திரீ வண்டியை நிறுத்தச் செய்து கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கி வாசலில் நின்ற பாராக்காரனைப் பார்த்து, ''ஏனப்பா! எஜமான் உள்ளே இருக்கிறாரா?'' என்று கேட்க, ''ஓ! இருக்கிறார்கள்; வெல்வெட்டு மாடத்தில் ஏதோ புஸ்தகம் படித்துக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களைப் பார்க்க வேண்டுமானால், நீங்கள் நேராக மேலே ஏறிப் போகலாம்'' என்று நிரம்பவும் வணக்கமாக மறுமொழி கூறினான்.

அதைக் கேட்ட அந்த ஸ்திரீ விரைவாக நடந்து உள்ளே நுழைந்து சிறிது தூரத்திற்கு அப்பால் இருந்த தாழ்வாரத்தை அடைந்து, அவ்விடத்திலிருந்து மேலே ஏறி படிகட்டின் வழியாக மேன் மாடத்திற்குச் சென்று வெல்வெட்டு மாடத்தின் வாசற்படிக்குப் போய்ச் சேர்ந்தாள். அதன் வாசற்கதவு மூடி வைக்கப்பட்டிருந்தது ஆகையால், அவள் தனது கையைக் கதவின் மீது மெதுவாக வைக்க, கதவு உடனே திறந்து கொண்டது. அந்த ஸ்திரீ, உட்புறத்தில் தனது திருஷ்டியைச் செலுத்த மருங்காபுரிக் கிழவர் பாராக்காரன் சொன்னபடி ஒரு புஸ்தகத்தைக் கையில் வைத்துப் படித்துக் கொண்டிருந்தது தெரிந்தது. அதைக்கண்ட அந்த ஸ்திரீ கதவை நன்றாகத் திறந்து கொண்டு மெதுவாக நுழைந்த வண்ணம், ''சுவாரஸ்யமாக எதையோ படிக்கும் சமயம் போலிருக்கிறது? அதற்கு இடைஞ்சலாக நான் வருகிறேன்'' என்று மாதுரியமான குரலில் நயமாகக் கூறினாள். அவளது குரலைக் கேட்டு திடுக்கிட்டு நிமிர்ந்து வாசல் பக்கத்தை நோக்கிய மருங்காபுரி ஜெமீந்தார் மகிழ்ச்சியும் புன்னகையும் அரும்பின முகத்தினராய், ''ஹா! அம்மணி பாயீ! வா வா; உன்னுடைய வருகையைத்தான் நான் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறேன். இன்றைய தினம் நிலவரி வசூல் விஷயமாக நான் வெளியூருக்குப் போக வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டு, வீட்டை விட்டு வெளியில் போகாமல் இங்கேயே இருக்கிறேன். பொழுது போவது கடினமாக இருந்தது. அதற்காக எதையோ ஒரு புஸ்தகத்தை எடுத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன், வேறொன்றும் இல்லை. இந்தப் புஸ்தகம் படிப்பதில் என்ன சுவாரஸ்யமிருக்கிறது. உன் கடிதத்தில் நீ எழுதியுள்ள சங்கதியைப் படித்தது முதல் என் மனம் முழுதும் குழம்பிப் போய்ப் பைத்தியம் கொண்டதுபோல இருக்கிறது. இந்தப் புஸ்தகத்தைப் படிப்பதும் சரி; வேறுஎதுவும் சரி; எனக்குச் சங்கடமாக இருக்கின்றன. நீ எப்போது வருவாய்,

மற்ற விவரங்களை எப்போது சொல்வாய், நீ செய்துள்ள வாக்குறுதியை எப்போது முடிப்பாய் என்ற ஆவலே இப்போது என் மனசில் நிறைந்திருக்கிறது. ஆகையால், உன்னைக் காண்பதையும் நீ சொல்லும் இன்பகரமான சங்கதிகளைக் கேட்பதையும் தவிர அதிக சுவாரஸ்யமான விஷயம் வேறே இந்த உலகத்தில் இருக்கப் போகிறதா? ஒன்றும் இருக்கவே இருக்காது. வா, இப்படி வந்து ஸோபாவின் மேல் உட்கார்ந்து கொள்'' என்று தேன் போல இனிப்பாகவும் அன்பாகவும் கூறி அவளை உபசரித்தார்.

நாம் இதுவரையில் பெயரைக் குறிக்காமல் விருந்தாளி ஸ்திரீயென்றே குறித்து வந்த பெண்பிள்ளை நமது சாமளராவின் சொந்தக் காரியும், மருங்காபுரி ஜெமீந்தார் தினசரி டைரியை எதிர்பார்த்திருந்த தினத்தன்று அவரிடம் வந்து மூவாயிரம் ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு போனவளுமான அம்மணி பாயி என்பது வெளியாவதால், இனி நாம் அவளை அம்மணி பாயி என்றே குறிப்போம்.

ஜெமீந்தார் மிகுந்த ஆவலோடும் அன்போடும் அவளை உபசரித்து அழைக்க, அம்மணிபாயி அவரண்டையிலிருந்த ஒரு சோபாவினண்டையில் போய் வணக்கமாகவும் மரியாதையாக வும் அடங்கி ஒடுங்கி அவரை நோக்கி மகிழ்ச்சியாகப் புன்னகை செய்து, ''ஏதேது! தாங்களும் இளவரசரிடத்தில் கொஞ்சம் பாடம் கற்றுக்கொண்டு விட்டீர்கள் போலிருக்கிறது. அவர் தான் காரியம் ஆகவேண்டும் என்றால், இப்படியெல்லாம் தூக்கி வைத்து முகஸ்துதியாகப் பேசுவது வழக்கம்; அந்தக் காற்று இங்கேயும் கொஞ்சம் வீசிவிட்டதுபோலிருக்கிறது'' என்று அதிமாதுரிய மாகவும் வேடிக்கையாகவும் மொழிந்தாள்.

அதைக்கேட்ட ஜெமீந்தார் குதூகலமாக நகைத்து, ''என்ன அம்மணிபாயீ! அப்படிச் சொல்லுகிறாய்? நான் அப்படி நயவஞ்சகமாக உன்னிடத்தில் எப்போதாவது பேசியதுண்டா?

ஒருநாளும் கிடையாதே. உன்னால் எனக்கு ஒரு காரியம் ஆகவேண்டியிருந்தாலும் சரி; அப்படிப்பட்ட காரியம் எதுவும் இல்லாத சாதாரண சமயத்திலும் சரி; நான் உன்னிடத்தில் எப்போதும் அந்தரங்க விசுவாசமும் பட்சமும் உடையவனாகவே நடந்து கொண்டிருக்கிறேன். கடைசியாக நீ என்னிடத்தில் வந்து மூவாயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு போனாய். அப்போது எனக்கு உன்னால் ஏதாவது காரியம் ஆக வேண்டியிருந்ததா? ஒன்றுமில்லையே! உன்னைக் கண்டால் என்னை மிஞ்சி என் மனசில் ஒருவிதமான குதூகலமும் பூரிப்பும் உண்டாகிவிடுகின்றன. இதற்கெல்லாம் காரணம் என்னவென்றால், நீ என் விஷயத்தில் ஒருநாளும் துரோகமே செய்ததில்லை. நீ எப்போதும் என் விஷயத்தில், மாறாத பிரியம் வைத்திருக்கிறாய். நல்ல பொருளை நாயகனுக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று பழமொழி சொல்லுகிறபடி ஏதாவது அபூர்வமான வஸ்து உனக்குக் கிடைக்குமானால், அதை நீ முதன் முதலில் எனக்குக் கொடுக்காமல் இருந்ததே கிடையாது. இதுவரையில் நீ என் விஷயத்தில் அப்படிப்பட்ட எத்தனையோ உதவிகளைச் செய்திருக்கிறாய். அவைகளையெல்லாம் நான் என் உயிர் உள்ளவரையில் மறக்கமுடியுமா? ஒரு நாளும் மறக்கமுடியாது. அப்படிப்பட்ட ஓர் அருமையான நற்குணம் உன்னிடம் இருப்பதால், உன்னைக் காணும் போதெல்லாம், என்னை அறியாமலேயே என் வாய் உன்னை ஸ்தோத்திரம் செய்கிறது. உண்மையில் ஸ்தோத்திரத்துக்கு அருகமானவர்களைக் கண்டு மனதாரப் புகழ்வது ஒருநாளும் குற்றமாகாது. அதுவுமன்றி, நீ இப்போது எனக்குச் செய்யப்போகும் மகா முக்கியமான உதவிக்கு நான் உனக்குக் கனகாபிஷேகம் செய்தால் கூட அது போதுமானதாக இராது. என் வாயிலிருந்து வரும் ஸ்தோத்திர மொழிகளிலும் உள்ள ஒவ்வோர் அட்சரத்துக்கும் லட்சம் லட்சம் பெறுமானமுள்ள ஒவ்வொரு வைரத்தைச் சேர்த்து ஒரு மாலையாகக் கட்டி உனக்கு மாலை சூட்டினாலும் அது உன்னுடைய யோக்கியதைக்குத் தகுதியானதே. அது

இருக்கட்டும். முதலில் உட்கார்ந்து கொள்; நிற்க வேண்டாம்'' என்று மகிழ்ச்சி ததும்பிய முகத்தோடு மொழிந்தார்.

அதைக்கேட்ட அம்மணிபாயி அளவற்ற ஆனந்தம் கொண்டவளாய்க் குலுங்கக் குலுங்க நகைத்த வண்ணம் ஸோபாவின்மீது உட்கார்ந்துகொண்டு, ''ஐசுவரியத்தில் தங்களுக்குச் சமமாகச் சொல்லக் கூடியவர்கள் இந்த உலகத்தில் எனக்குத் தெரிந்தவரை யாரும் இல்லை. தெய்வலோகத்தில் குபேரன் என்று ஒருவன் இருப்பதாக ஜனங்கள் சொல்லு கிறார்கள். ஆனால், அவனை யாரும் பார்த்தது இல்லை. அந்தக் குபேரனுடைய செல்வம் எல்லாம் ஏட்டுச் சுரக்காயாகவே இருக்கிறது. அவனுடைய செல்வத்தில் ஒரு காசுகூட யாருக்கும் கிடைத்ததாகத் தெரியவில்லை. ஆகையால், வார்த்தைகளால் புகழுவதற்குப் பதிலாக வைரஸரங்களைக் கட்டி மாலை போடும் யோக்கியதை தங்களிடம் பூர்த்தியாக இருக்கிறது. யோக்கியதை மாத்திரத்தோடு நிற்காமல், அப்படியே காரியத்தில் செய்யும் தயாளகுணமும் இருக்கிறது. ஆகையால், எஜமானருடைய மனம் சந்தோஷப்பட்டு எதைச் செய்தாலும் அதை அடியாள் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டவளாகவே இருக்கிறேன். ஆனால், முக்கியமாக ஒரு விஷயம் நான் தங்களிடம் மனுச் செய்து கொள்ளுகிறேன். எஜமானர் சொன்னது போல; இந்த உலகத்தில் சிரேஷ்டமான பொருள் எங்கேயாவது இருந்து என் கண்ணில் பட்டால், எஜமானருடைய நினைவே என் மனசில் உண்டாகிறது. எஜமானர் எந்தப் பொருளைக் கண்டால் உண்மையிலேயே ஆனந்தம் உண்டாகும் என்பது எனக்குத் தெரியும். அப்படிப்பட்ட நிகரற்ற ஆனந்தத்தை எஜமானர் அடையச் செய்ய வேண்டும் என்பதே என்னுடைய முக்கியமான ஆசை; அந்த ஆசை என் மனசைவிட்டு எப்போதும் நீங்குகிறதே இல்லை. அதனாலேதான் நான் இன்று காலையில் வந்தவுடனே கடிதம் எழுதி தங்களுக்கு அனுப்பி வைத்தேன். இதனால் எனக்குப் புகழ்ச்சியாவது, பொருளாவது வேண்டும்

என்பது நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவே இல்லை. ஆனால், நானும் பெண்ணாகப் பிறந்து இதுவரையில் எத்தனையோ கோடானு கோடி இளம்பெண்களைப் பார்த்திருக்கிறேன். இந்தப் பெண்ணினுடைய கேவலம் கால் நகத்தழகுக்கு மற்றவர்களுடைய முகத்தழகு எல்லாம் ஈடு சொல்ல முடியாது. இந்தப் பட்டணத்திலுள்ள எல்லோரும் அந்தப் பூர்ணசந்திரோதயத்தைப் பார்த்துப் பிரமித்து அவளுக்கு மிஞ்சிய அழகு வாய்ந்த பெண்ணே இல்லையென்று தீர்மானித்து அவளை ஆகாய மட்டும் புகழுகிறார்கள். தாங்களும் ஒரு காலத்தில் அவளிடம் ஆசைப்பட்டதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், இந்தப் பெண்ணைத் தாங்கள் மாத்திரம் பார்ப்பீர்களானால் தாங்கள் என்ன சொல்வீர்களோ தெரியவில்லை. இளவரசர் அந்தப் பூர்ணசந்திரோதயத்தைக் கண்டு மதிமயங்கி அவளைத் தம்முடைய குலதெய்வமாக வைத்துப் பூஜை பண்ணுகிறாரே. அவர் மாத்திரம் இந்தக் கட்டழகியைப் பார்த்து விடுவாரானால், உடனே அந்தப் பூர்ணசந்திரோதயத்தை ஒதுக்கிக் குப்பையில் தள்ளிவிடுவார். எப்பாடுபட்டாகிலும் இந்தப் பெண்ணை அவரே அடைந்துவிடுவார். அதன் பொருட்டு தம்முடைய ராஜ்ஜியம் போவதாக இருந்தால் கூட அவர் அதைப் பொருட்படுத்த மாட்டார் என்பது நிச்சயம். ஆகையால், அவருக்கு இந்த விஷயம் தெரியக்கூடாது என்பது என்னுடைய முக்கியமான கருத்து. ஆகவே, நான் அந்தப் பெண்ணை நிரம்பவும் பந்தோபஸ்தான ஓரிடத்தில் மறைத்து வைத்துவிட்டு அவசரமாகத் தங்களுக்குக் கடிதம் எழுதினேன்'' என்றாள்.

அதைக் கேட்ட ஜெமீந்தார் அப்போதே ஸாயுஜ்ய ஸாரூப ஸாமீப லோகங்களைக் கண் எதிரில் தரிசிப்பவர்போல ஆனந்த பரவசமடைந்தவரானார். தமது ஆயிசுகாலத்தில் தாம் அதுகாறும் கண்டுள்ள பெண்கள் எல்லோரிலும் பூர்ணசந்திரோதயமே சகலமான அம்சங்களிலும் நட்சத்திரச்சுடர் என்ற எண்ணமே அவரது மனதிலிருந்து வந்தது ஆகையால், அவள்

இப்போது புதிதாக வந்துள்ள பெண்ணுக்கு இணையாக மாட்டாள் என்றும், இருவரையும் ஒத்திட்டுப் பார்க்குமளவில் பூர்ணசந்திரோதயம் குப்பையில் கிடப்பதற்கே தகுந்தவளாவாள் என்றும் அம்மணிபாயி சொன்னதைக் கேட்கவே, புதிதாக வந்திருக்கும் பெண் தெய்வலோகத்திலிருந்து தோன்றியுள்ள அப்ஸர ஸ்திரீயாகத்தான் இருக்கவேண்டும் என்ற உறுதி ஏற்பட்டது. இளவரசர் பூர்ண சந்திரோதயத்தை அடைந்து விட்டாரே என்ற வயிற்றெரிச்சலும் பொறாமையும் அவரது மனதில் இருந்து அவரை வருத்தி வருந்தின ஆகையால், அவளை விடப் பன்மடங்கு சிரேஷ்டமான பெண்ணைத் தாம் அடைந்துவிட்டால், இளவரசரையும், பூர்ணசந்திரோதயத்தை யும், தாம் தோற்கடித்ததுபோல ஆகும் என்ற நினைவு உண்டானது அன்றி, அப்படிப்பட்ட நிகரற்ற பெண்ணை வேறு எவரும் அடையுமுன் தாமே அடைந்துவிட வேண்டும் என்ற மூர்க்கமான விரகதாபமும் ஏற்பட்டது. ஆகையால், அம்மணிபாயி எவ்வளவு அபாரமான பொருளைக் கேட்ப தாயினும், அதை உடனே கொடுத்து அந்தப் பெண்ணைத் தமது ஜாகைக்கு வரவழைத்துக்கொள்ள வேண்டும் என்ற உறுதி ஏற்பட்டு விட்டது. அதுவுமன்றி, அம்மணிபாயியோடு அவர் அதற்குமுன் நன்றாகப் பழகி அவளது குணத்தை அறிந்தவராதலால், ஒரு பெண்ணினிடத்தில் உண்மையான யோக்கியதை இல்லாவிட்டால் அவள் பொய்யாகப் புகழ்ச்சி செய்யக்கூடியவள் அல்லவென்பது அவருக்குத் தெரியும். ஆதலால், அவள் சொன்னதை அப்படியே வேத வாக்காக ஏற்றுக்கொண்டவராய் அந்தரங்கமான வாத்சல்யத்தோடு உருக்கமாக அவளை நோக்கி, "அம்மணிபாயீ! என் விஷயத்தில் நீ சொன்ன வார்த்தைகளை எல்லாம் கேட்க, என் மனம் நிரம்பவும் சந்தோஷம் அடைகிறது. நீ என் விஷயத்தில் வைத்திருக்கும் அந்தரங்கமான பிரியத்தையும் அபிமானத் தையும் நான் நன்றாக அறிவேன்; அதனாலேதான் நான் உன்னைக் காணும் போதெல்லாம் என் வாய் தானாகவே

உன்னைப் புகழுகிறது. அதுவுமின்றி, இப்போது நீ இளவரசர் முதல் மற்ற எல்லாரையும்விட என்னையே சிரேஷ்டமாக மதித்து இந்தச் சங்கதியை எனக்குத் தெரிவித்திருக்கிறாய். இந்த இணையற்ற உதவிக்கு நான் என்னுடைய ஆஸ்திகள் சகலத்தையும் உனக்குச் சன்மானம் செய்தாலும் அது போதாது. இப்போது எனக்குச் சொல்லியனுப்பிய ஒரு மதிப்பு இருக்கிறதல்லவா அதற்காக நான் உனக்கு இப்போது முதலில் ஒரு சன்மானம் செய்கிறேன். மற்ற காரியம் பலித்தபிறகு, இதைவிடப் பத்துப் பங்கு அதிகமான சன்மானம் செய்வேன் என்பதை நீ நிச்சயமாக நம்பலாம்'' என்று கூறியவண்ணம், தமக்கெதிரில் இருந்த மேஜையைத் திறந்து, அதற்குள் ஆயத்தமாக வைக்கப்பட்டிருந்த வைர ஹாரத்தை வெளியில் எடுத்தார். அதுகோடி சூரியப்பிரகாசம்போல ஜிலுஜிலு வென்று ஜ்வலித்தது.

அதைக் கண்ட அம்மணிபாயி, ''என்ன இது! இதை யாருக்குச் சன்மானம் செய்யப்போகிறீர்கள்! எனக்கா அந்தப் பெண்ணுக்கா? இது ஒரு சுமார் பத்து லட்சம் ரூபாய் பெறும்போல இருக்கிறதே! இது எனக்கு வேண்டாம். நான் முன்னால் காரியத்தை முடிக்கிறேன். அதன்பிறகு மற்ற சங்கதிகளையெல்லாம் பார்த்துக்கொள்வோம்'' என்றாள்.

அதைக்கேட்ட ஜெமீந்தார், ''நன்றாகச் சொல்லுகிறாய். இது அந்தப் பெண்ணுக்கல்ல; உனக்கே! இன்னம் பின்னால் உனக்கு இதைப்போல பத்துப் பங்கு அதிக சன்மானம் செய்வேன் என்பதை நீ நிச்சயமாக நம்பலாம். அந்தப் பெண்ணுக்கு நான் வைர ஹாரம் ஒன்றுதானா கொடுப்பேன். கோடிக்கணக்கிலுள்ள என்னுடைய பொக்கிஷத்தை எல்லாம் திறந்துவிட்டு எல்லாவற்றையும் அவளுடைய வசத்திலேயே ஒப்புவித்து விடுகிறேன். அதைப்பற்றி நீயாவது அந்தப் பெண்ணாவது கொஞ்சமும் யோசனை செய்ய வேண்டியதே இல்லை. இதை நீ முதலில் வாங்கிக்கொள்; பரவாயில்லை'' என்று அன்பாக

வற்புறுத்திக் கூறியவண்ணம் எழுந்துபோய், அம்மணிபாயியின் கையைப் பிடித்திழுத்து அவளது கழுத்தில் அந்த ஹாரத்தை அணிந்தார். அவள் அதைப்பெற மனமற்றவள் போல நடித்து நாணிக்கோணி நன்றியறிதலினாலும் பிரியத்தினாலும் இளகிக் கிலேசமடைந்த முகத்தினளாய்த் தனது இருகைகளையும் கூப்பி அவரை வணங்கிய வண்ணம், ''கர்ண மகாராஜன் என்றால் எஜமானருக்கே தகும். தங்களை அண்டியிருக்கும் மனிதர் அற்ப உதவி செய்தாலும் அதை மலை போல பாவித்து சப்த மேகங்கள் பொழிவதுபோல இப்படி ஐசுவரியத்தை வாரிச் சொரியும் வள்ளல் வேறே யார் இருக்கப் போகிறார்கள்! சரி; தாங்கள் மனமுவந்து சன்மானித்ததை ஏற்றுக்கொள்ளாவிட்டால்,தங்கள் மனசுக்கு வருத்தமாக இருக்கும். ஆகையால் இதை வகித்துக் கொண்டேன்'' என்று கூறினாள். மறுபடியும் ஜெமீந்தார் தமது ஆசனத்தில் அமர்ந்தவராய், ''ஏதேது நீ திரிகால ஞானமுடைய மகரிஷிபோல இருக்கிறாயே! உன்னிடம் ஞானதிருஷ்டி ஏதாவது உண்டா? இந்தப் பெண்ணை நீ கோலாப்பூரிலிருந்து அழைத்துக் கொண்டு வந்திருப்பதாக எழுதியிருக்கிறாயே! அவ்வளவு தூரத்திலுள்ள தேசத்தில் இந்தப் பெண் இருப்பது உனக்கு எப்படித் தெரிந்தது? நீ எப்போது அந்த ஊருக்குப் போனாய்? இவளை எப்படி அழைத்து வந்தாய்? எல்லா வற்றையும் விவரமாகச் சொல்'' என்றார்.

அம்மணிபாயி, ''இந்தப் பெண் கோலாப்பூரில் இருக்கிறாள் என்பதைத் தெரிந்துகொண்டு நான் அந்த ஊருக்குப் போகவில்லை. நான் சிறிய பெண்ணாக இருக்கையில் இந்த ஊருக்கு வந்துவிட்டேன். ஆனாலும், என்னுடைய சொந்த ஊர் கோலாப்பூர் என்பதை நான் ஏற்கெனவே பல தடவைகளில் தங்களிடம் தெரிவித்திருக்கிறேன். அது தங்களுக்கு நினைவு இருக்கலாம். அந்த ஊரிலுள்ள என் அத்தையின் புருஷர் போலீஸ் கமிஷனர் உத்தியோகம் பார்த்து வருகிறார். என் அத்தைக்கு உடம்பு நிரம்பவும் அசௌக்கியமாக இருந்ததால்,

அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய மனிதர்கள் அங்கே யாரும் இல்லை ஆகையால், உடனே வரும்படி அவர் எனக்குக் கடிதம் எழுதினார். சுமார் இருபது நாள்களுக்கு முன் நான் இந்த ஊரைவிட்டுப் போனேன். என் அத்தைக்கு உடம்பு சரிப்பட்டு விட்டது. நான் அங்கே இருந்து புறப்பட்டு இன்று காலையில் தான் இங்கே வந்தேன். நான் அந்த ஊரில் இருந்த காலத்தில் இந்தப் பெண்ணை நான் அந்த ஊர் அரண்மனையில் கண்டேன். நான் இதுவரையில் அபூர்வமான அழகுடைய எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறேன். ஆனாலும் இவளைக் கண்டவுடன் என் மனமே முற்றிலும் பிரமிப்படைந்துவிட்டது. இவ்வளவு சிரேஷ்டமான அழகும் சாந்தகுணமும் பணிவும் பொருந்திய பெண் இந்த உலகத்திலேயே இருக்கமாட்டாள் என்ற அபிப்பிராயம் உடனே உண்டாகிவிட்டது. இப்படிப் பட்ட மகா உத்கிருஷ்டமான பெண்மயிலைத் தாங்கள் கண்டால் எவ்வளவு அதிகமாக ஆனந்தம் அடைவீர்கள் என்ற எண்ணம் என் மனசில் உண்டாயிற்று. ஆகையால், நான் மெல்ல இவளோடு பழக்கம் செய்துகொண்டு பலவகையில் இவளுடைய மனசை மயக்கி இவ்விடத்துக்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன். இந்தப் பெண்ணினுடைய சொந்த ஊர் நம்முடைய திருவாரூருக்குப் பக்கத்தில் எங்கேயோ இருக்கிறதாம். அங்கே இருந்து இவள் ஏதோ காரியமாகக் கோலாப்பூருக்கு வந்தாளாம். இவளுடைய அக்காள் இந்த ஊரில் எங்கேயோ இருக்கிறாளாம். அவளைப் பார்க்க வேண்டும் என்று இவள் சொன்னாள். அவளிடம் கொண்டுவந்து சேர்ப்பதாக உறுதி சொல்லி நான் இந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன். தங்களிடம் கொண்டு வந்து விடுவதற்காக நான் இவளை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன் என்பது இவளுக்குத் தெரியாது. இவளுடைய அக்காளிடம் கொண்டுவந்து விட்டுவிடுவதாகச் சொல்லி நான் இவளைத் தங்களிடம் கொண்டுவந்து விட்டுவிடுகிறேன். மற்றக் காரியங்களையெல்லாம் எஜமானர்தான் சரிப்படுத்திக் கொள்ள

வேண்டும். இவள் இங்கே வருவதற்குமுன் நான் இவளிடம் கெட்ட விஷயம் ஏதாவது பிரஸ்தாபித்தால், இவள் என்னிடம் சொல்லாமல் புறப்பட்டுப் போய்விடுவாள் போலிருக்கிறது. இவள் நல்ல பரிசுத்தமான மனசையுடைய பெண்ணாக இருக்கிறாள். இவளுடைய மனசை மாற்றி இவளை வசப்படுத்திக் கொள்ள வேண்டியதெல்லாம் எஜமானரைச் சேர்ந்த பொறுப்பு. எஜமானருடைய கருத்துக்கு இசையச் செய்ய இவளுடைய சம்மதியின் மேல் நான் இவளை இங்கே கொண்டு வருவதாக இருந்தால் நான் எஜமானரிடம் சன்மானம் செய்யக் கூடவில்லை. மோசக் கருத்தாக நான் இவளை இங்கே கொண்டு வந்து விடப்போகிறேன். மற்ற சகலமான சிரமமும் பொறுப்பும் எஜமானருக்கு வந்து சேரப்போகின்றன. அப்படி இருக்க, இதில் எனக்கு அதிகப் பிரயாசைக்காவது புகழ்ச்சிக்காவது சன்மானத்துக்காவது இடமில்லை. எல்லாவற்றையும் எஜமானரே சாமர்த்தியமாக முடித்துக் கொள்ள வேண்டும். அதுவுமன்றி இந்தப் பெண் இந்த மாளிகையிலிருந்து தப்பி வெளியில் போகாமல் ஜாக்கிரதையாகவும் பார்த்துக்கொள்ள வேண்டும்'' என்றாள்.

ஜெமீந்தார், ''ஒகோ! அப்படியா சங்கதி! நீ சொல்வதைப் பார்த்தால் இந்தப் பெண் இதுவரையில் புருஷர் முகத்தையே பார்த்திருக்கமாட்டாள் எனத் தோன்றுகிறது. இப்படிப்பட்ட புத்தம் புதிய வஸ்துவை அடைய வேண்டும் என்று தான் என் மனம் நெடுங்காலமாக ஆயாசப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த ஆசை நிறைவேறும் காலம் இப்போதுதான் நேரிடுகிறது போல் இருக்கிறது. ஆசாமி இப்படித்தான் இருக்க வேண்டும். மற்றதைப்பற்றி நான் கொஞ்சமும் கவலைப்படவில்லை. மெதுவாக நீ அவளை இங்கே கொண்டு வந்து சேர்த்துவிடு. நானும் லீலாவதியும் சேர்ந்து இவளுடைய மனசைக் கலைத்து சரிப்படுத்திக் கொள்ளுகிறோம். இந்த மாளிகைக்குள் வந்தபின் அவள் தப்பித்துப் போகும்படி நாங்கள் விட்டு விடப்

போகிறோமோ? அது ஒருநாளும் இல்லை. அதைப்பற்றி நீ கொஞ்சமும் யோசனை செய்யவேண்டியதே இல்லை'' என்றார்.

அதன்பிறகு அம்மணிபாயியும் மருங்காபுரி ஜெமீந்தாரும் மேலும் அரைநாழிகை சாவகாசம் பற்பல விஷயங்களையும் பற்றி சம்பாஷித்திருந்து, ஷண்முகவடிவைத் தாங்கள் எப்படி ஏமாற்றுகிறது என்ற விவரங்களையெல்லாம் முடிவு செய்து கொண்டனர். உடனே அம்மணிபாயி கிழவரிடம் செலவு பெற்றுக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு வெளியில் சென்று ராஜபாட்டையில் நின்று கொண்டிருந்த தனது வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டு வேறு பற்பல தெருக்களின் வழியாக வண்டியை விடச் செய்து, தனது சிநேகிதைகளான சில ஸ்திரீகளினது வீடுகளில் சிறிது நேரம் இருந்து பொழுதைப் போக்கிவிட்டு மாலை நேரத்தில் தனது கிரகத்திற்குப் போய்ச் சேர்ந்தாள். தனது அக்காளினது யோக க்ஷேமங்களைக் கேட்கவும்; அவளைத் தான் எப்போது பார்க்கக் கிடைக்கும் என்ற சந்தோஷச் செய்தியை அறியவும் அளவற்ற அவாக் கொண்டு, அம்மணி பாயினது வருகையை மட்டற்ற ஆவலோடு எதிர்பார்த்திருந்த ஷண்முகவடிவு, அம்மணிபாயி புன்னகை பூத்த முகத்தோடு திரும்பி வந்ததைக் கண்டு, அவள் சந்தோஷ சங்கதி கொண்டுவந்திருக்கிறாள் என்று யூகித்துக் கொண்டு, ''ஏன் அம்மா! என் அக்காளைப் பார்த்தீர்களா? அவள் சௌக்கியமாக இருக்கிறாளா? என்னை அவளிடம் அழைத்து வரச் சொன்னாளா?'' என்று ஆசையோடு வினவ, அதைக்கேட்ட அம்மணிபாயி, ''நான் இங்கே இருந்து புறப்பட்டு நேராக சோமசுந்தரம் பிள்ளையினுடைய மாளிகைக்குப் போனேன். அவ்விடத்தில் இப்போது சோமசுந்தரம் பிள்ளையும், அவருடைய தங்கையும் தான் இருக்கிறார்கள். அவருடைய சம்சாரமும் உன்னுடைய அக்காளும் வீட்டில் இல்லை. இந்த ஊருக்குக் கிழக்கில் நாலு மைல் தூரத்தில் மாரியம்மன் கோவில் என்று ஒரு பிரபலமான ஊர் இருக்கிறது. அந்த ஊரில் அம்மன்

கோயில் ஒன்று இருக்கிறது. அங்கேயுள்ள அம்மன் பிரத்தியக்ஷமான தெய்வம்; நல்ல வரப்பரஸாதி. நொண்டி, முடம், பொட்டை முதலியோர் அங்கே போய் வேண்டுதலை செய்துகொண்டு அம்மனைச் சேவித்து வந்தால், அவர்களுடைய பிணக்குகள் எல்லாம் அற்றுப்போகின்றனவாம். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் இந்த ஊரிலிருந்து அந்த ஊருக்கு ஆயிரக் கணக்கான ஜனங்கள் போய் அம்மனைக் கும்பிட்டு விட்டு வருவது வழக்கம். இந்த சோமசுந்தரம் பிள்ளையின் சம்சாரத்தினுடைய கண்ணில் பூ விழுந்திருக்கிறதாம். அதற்காக அந்த அம்மனுக்குப் பிரார்த்தனை செய்துகொண்டு அந்த அம்மாள் இன்றைய காலையில் அந்த ஊருக்குப் போனார்களாம். உன் அக்காளும் அந்த அம்மாளோடு கூடப் போனாளாம். சாயுங்காலம் வந்துவிடுவதாகச் சொல்லிவிட்டுப் போனார்களாம். இந்நேரம் அவர்கள் திரும்பி வீட்டுக்கு வந்து சேர்ந்திருக்கலாம். கமலத்தின் தங்கையாகிய நீ வந்திருக்கிறாய் என்று நான் சோமசுந்தரம் பிள்ளையினிடம் சொன்னேன். அவர் அதைக்கேட்டு அளவற்ற மகிழ்ச்சியும் குதூகலமும் அடைந்ததன்றி, உன்னைப் பார்க்கவேண்டும் என்று நிரம்பவும் ஆசையோடு இருக்கிறார்; உன்னுடைய அக்காள் மாரியம்மன் கோவிலிலிருந்து திரும்பி வந்தவுடனே அவளிடம் உன்னுடைய வருகையைப் பற்றித் தெரிவித்து அவளையும் சந்தோஷப் படுத்துவதாகவும் அவர் சொன்னார். இந்நேரம் உன்னுடைய அக்காளும் வந்திருப்பாள். நீ வந்திருக்கிறாய் என்ற சங்கதியும் அவளுக்கு எட்டியிருக்கும். எல்லோரும் உன்னுடைய வருகையை நிரம்பவும் ஆவலோடு எதிர்பார்த்தி ருப்பார்கள். ஆனால், எங்களுடைய வீட்டிலிருந்து உன்னை அவ்விடத்துக்கு எப்படி அனுப்பிவிடுகிறது என்கிற துக்கம் தான் என் மனசை வதைக்கிறது. இருந்தாலும், நீங்கள் எல்லோரும் ஒன்று கூடுவதால் அடையும் நிகரற்ற ஆனந்தத்துக்கு இடைஞ்சலாக நான் குறுக்கே நிற்பதும் நியாயமில்லை. நான் அவருடைய மாளிகையை விட்டுப் புறப்பட்டு வேறு பல இடங்களுக்குப்

போய்விட்டு வந்தேன். அதனால் எனக்குக் கொஞ்சம் அலுப்பாக இருக்கிறது. நம்முடைய வீட்டில் சமையலும் முடிந்திருக்கும் என்று நினைக்கிறேன். இப்போது சுமார் ஆறரை மணி சமயம் இருக்கலாம். ஏழு அல்லது ஏழரைக்கு நம்முடைய சாப்பாட்டை முடித்துக்கொண்டு எட்டுமணிக்கு முன்னாகவே புறப்பட்டு அங்கேபோய்ச் சேர்ந்துவிடுவோம். இதே வண்டியில் உட்கார்ந்துகொண்டு அங்கே போகலாம். நானும் உன்னோடு கூடவே வந்து உனக்கும் உன் அக்காளுக்கும் சந்திப்புச் செய்து வைத்துவிட்டு, கொஞ்ச நேரமிருந்து வண்டியில் உட்கார்ந்துகொண்டு வீட்டுக்குத் திரும்பி வந்துவிடுகிறேன். நீ உங்களுடைய ஜாகைக்குப் போனால், அதன்பிறகு எங்களுடைய வீட்டுச் சாப்பாட்டுக்கு வரவா போகிறாய்; அது இல்லை ஆகையால், இந்த ராத்திரி போஜனத்தையாவது நீ இவ்விடத்தில் முடித்துக்கொண்டு தான் போகவேண்டும்'' என்று அளவற்ற அன்போடு வற்புறுத்திக் கூறினாள்.

தனது அக்காளை அப்போதே காணவேண்டும் என்று ஆவலும் பிரேமையும் ஷண்முக வடிவினது மனதில் மும்முரமாக எழுந்து அவளைத் தூண்டியது ஆனாலும், கைம்மாறு கருதாமல் தனக்கு எத்தனையோ பெரிய உதவிகளை எல்லாம் செய்துள்ள உபகாரியின் மனம் வருந்தும்படியாகத் தான் நடந்து கொள்ளக்கூடாது என்ற எண்ணங் கொண்டவளாய் அந்த இள நங்கை அம்மணிபாயினது விருப்பத்தின்படி நடப்பதாக ஒப்புக் கொண்டாள்.

அவ்வாறு தனது வேண்டுகோளுக்கு இணங்க ஷண்முக வடிவு இராப்போஜனத்தை அவ்விடத்திலேயே முடித்துக் கொள்ள ஒப்புக்கொண்டதைப்பற்றி நிரம்பவும் களிகொண்ட வள்போல நடித்த அம்மணிபாயி அவளது நற்குணத்தைப்பற்றி மிகவும் புகழ்ச்சியாகப் பேசி முகஸ்துதி செய்து, தனது சதியாலோசனையைப் பற்றி அவள் சிறிதும் சந்தேகியாதபடி நிரம்பவும் தந்திரமாக நடந்து கொண்டாள்.

அந்த இரவில் ஷண்முகவடிவிற்கு முதல்தரமான விருந்து ஏழு மணிக்குள் தயாரிக்கும்படி அம்மணிபாயி அன்றையதினம் மத்தியானத்திலேயே தனது வேலைக்காரிகளுக்குக் கட்டளை பிறப்பித்து விட்டுப் போயிருந்தாள். ஆகையால், மணி ஏழு அடிக்கும் முன் எல்லாக் காரியங்களும் சித்தமாக முடிந்து போயின. அம்மணிபாயும் ஷண்முகவடிவும் ஒரு பந்தியாக போஜனத்திற்கு அமர்ந்தனர்; இரண்டு பெரிய தலைவாழை இலைகள் போடப்பட்ட பிறகுதான், தனக்கு அன்றையதினம் அவர்கள் தடபுடலாக ஏதோ பெரிய விருந்து தயாரித்திருக்கி றார்கள் என்று ஷண்முகவடிவு ஊகித்துக் கொண்டாள். கோலாப்பூரில் நிகழ்ந்த மகா துக்ககரமான விபரீத சம்பவங் களுக்குப் பிறகு அவளது மனம் அடியோடு முறிந்து உலகத்திலேயே விரக்தியடைந்து போயிருந்தது ஆகையால், அவளது புத்தி தனது உயிர் நிற்பதற்கு அத்தியாவசியமான சாதாரண போஜனத்தைக்கூட நாடாமல் இருந்தது. ஆகையால், அப்படிப்பட்ட பரம சங்கடமான நிலைமையில் விருந்து என்பதை நினைக்கும்போதே குமட்டல் உண்டாயிற்று. அதுவுமன்றித் தனது ஆருயிர்ச் சகோதரியான கமலத்தின் வடிவம் அவளது அகக்கண் முழுவதிலும் நிறைந்து நின்றதாகை யாலும், அவளை எப்போது காண்போம் என்கிற ஆவலினால் மனது துடித்துக்கொண்டிருந்தது ஆகையால், அவளுக்கு அந்தச் சமயத்தில் விருந்து உண்பது நரக வேதனையாகத் தோன்றியது. இருந்தாலும், மகா உபகாரியான அம்மணிபாயினது மனப் போக்கிற்கு உகந்தபடி தான் நடந்து கொள்ள வேண்டும் என்ற மனஉறுதியைக் கொண்ட நமது யௌவன உத்தமி அரும்பாடு பட்டுத் தனது அருவருப்பையும் விரக்தியையும் அடக்கிக் கொண்டு அந்த விருந்தை உண்ணத் தொடங்கினாள்.

அவளது சங்கடத்தை அம்மணிபாயும் தெரிந்து கொள்ளாமல் இருக்கவில்லை. அவள் ஷண்முகவடிவினிடம் ஆழ்ந்த பாசமும் அருமையும் பாராட்டி நிரம்பவும் நயமாகப் பேசத்தொடங்கி,

''அம்மா! ஷண்முகவடிவு! விருந்துண்ணவும் சந்தோஷப்படவும் இது சரியான சந்தர்ப்பம் அல்ல என்பது எனக்கு நன்றாகத் தெரியும். கோலாப்பூரில் நடந்த சம்பவங்களைக் கண்டு உன் மனம் இடிந்து போய்விட்டது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதுவும் அல்லாமல் உன் அக்காளைப் பார்க்கவேண்டும் என்று நீ எவ்வளவு அதிகமான ஆவல் கொண்டிருக்கிறாய் என்பதும் நன்றாகத் தெரிகிறது. இந்த நிலைமையில் நீ எங்கள் வீட்டு சாப்பாட்டைக் கண்டு மகிழ்ந்து போவாய் என்று நான் எதிர்பார்க்க முடியாது. இருந்தாலும், உன் விஷயத்தில் என் மனசில் உண்டாகியிருக்கும் ஒருவித வாஞ்சையும் பாசமும் இவ்வளவு என்று நான் வாயினால் வெளியிட்டுச் சொல்ல முடியவில்லை. அதை ஒருவாறு வெளியிட வேண்டுமென்ற ஓர் அவா என்னைத் தூண்டி இந்த விருந்தைத் தயாரிக்கச் செய்தது. நான் உன்மேல் எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறேன் என்பதை வெளிப்படையாகக் காட்டும் குறியே இந்த விருந்து என்று நினைத்துக் கொண்டால் அதுவே போதுமானது. உன் மனசை அதிகமாக வருத்தாமல் நீ எந்தப் பதார்த்தங்களைச் சாப்பிடலாமோ அதை மாத்திரம் சாப்பிடு. உன்னை நான் அதிகமாக வற்புறுத்தவில்லை'' என்று ஒருவிதமாகச் சமாதானம் கூறினாள்.

அவளது கபடம் நிறைந்த சொற்களையெல்லாம் உண்மையானவைகள் என்றே எண்ணிக்கொண்ட சுத்த ஸ்வரூபிணியான ஷண்முகவடிவு ஒருவாறு முயன்று ஏதோ போஜனம் செய்து முடித்ததாகப் பெயர் பண்ணிக் கொண்டெழுந்தாள். உடனே அம்மணிபாயி அவளுக்குக் குங்குமப் பொட்டிட்டுத் தாம்பூலம் வழங்கி மகா உத்தம குணமுள்ள பதிவிரதா ஸ்திரீ போல நடித்து அவளை அழைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

அப்போது மணி சுமார் எட்டாயிற்று. நன்றாக மூடப்பட்டிருந்த பெட்டி வண்டிக்குள் அவர்கள் இருவரும் உட்கார்ந்து கொண்டனர். இடைவெளிகள் நிறைந்த ஜன்னல்கள் மூடப்பட்டன.

அம்மணிபாயி வண்டிக்காரனை நோக்கி, "அடேய்! வண்டியை சக்கா நாயக்கர் தெரு சோமசுந்தரம் பிள்ளை வீட்டுக்குக் கொண்டு போ" என்று அதிகாரமாகக் கூறினாள். வண்டி உடனே புறப்பட்டுச் செல்லலாயிற்று.

அம்மணி முன்னரே ரகசியத்தில் வண்டிக்காரனிடம் பேசி வண்டியை அவன் உண்மையில் எவ்விடத்திற்குக் கொண்டு போக வேண்டும் என்பதைச் சொல்லி எச்சரித்து வைத்திருந்தாள் ஆகையால், அவன் பல தெருக்களின் வழியாக அதை ஓட்டி சக்கா நாயக்கர் தெருவுக்குப் போவதாகப் போக்குக் காட்டி வடக்கு ராஜவீதியை அடைந்து, மருங்காபுரி ஜெமீந்தாரது மாளிகையின் வாசலில் வண்டியை நிறுத்தினான். தனது விருப்பப்படி வண்டி சரியான இடத்தில் நிறுத்தப்பட்டி ருக்கிறது என்பதை இடைவெளியால் நிச்சயித்துக் கொண்ட அம்மணிபாயி, "சரி; சோமசுந்தரம் பிள்ளையின் வீடு வந்து விட்டது. இறங்குவோம்" என்று கூறிய வண்ணம் ஜன்னலை விலக்கிக் கதவைத் திறந்துகொண்டு கீழே இறங்க, அவளைத் தொடர்ந்து ஷண்முகவடிவும் வண்டியைவிட்டுக் கீழே இறங்கி பக்கத்திலிருந்த பிரம்மாண்டமான மாளிகையைக் கண்ணுற்று, "இதுதானா என் அக்காள் இருக்கும் இடம்?" என்று கட்டி லடங்கா வியப்போடு வினவ, உடனே அம்மணிபாயி, "ஆம் அம்மா! சோமசுந்தரம்பிள்ளை என்றால், என்னவென்று நினைத்துக்கொண்டாய்? இந்த சமஸ்தானத்துக்கே இவர் ஒரு பெரிய கோடீசுவரரல்லவா. இவருடைய மாளிகையில் இருக்கும் செல்வம், இந்த ஊர் மகாராஜனுடைய அரண்மனை யில் கூட இருக்காது. ஆனால் இவருக்கு ஆண் பெண் முதலிய சங்கதி எதுவுமில்லை. அது ஒன்றுதான் இவர்களுக்கு ஒரு பெருத்த குறை. அதனால்தான் இவர்கள் உன்னுடைய அக்காளை விடமாட்டேன் என்கிறார்கள். உன்னுடைய அக்காளுக்கு உண்டாயிருக்கும் அபாரமான அதிர்ஷ்டம் இந்த உலகத்தில் வேறு எவருக்கும் உண்டாகாது என்று இந்த ஊர்

ஜனங்கள் எல்லோரும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். இவர்களுடைய அளவற்ற எல்லா ஐசுவரியத்தையும் தங்களுக்குப் பிறகு உன் அக்காளுக்கே கொடுத்துவிடப் போகிறார்களாம். இதோ இந்த மாளிகையை நிமிர்ந்து பார்! ஆகாயத்தை அளாவி நிற்கிற இந்த மாளிகையின் அற்புதத் தோற்றத்தை உள்ளபடி பார்த்து ஆனந்திக்க ஆயிரங்கண்கள் கூடப் போதாது என்றே நினைக்கிறேன். வெளிப் பார்வையே இப்படி மனசை மயக்குகிறதே. இதற்குள் நீ போய்ப் பார்ப்பாயானால், உட்புறத்தைச் சுவர்க்கலோகம் என்றுதான் நினைப்பாய். எங்கு பார்த்தாலும் தனலக்ஷ்மி தாண்டவமாடிக் கொஞ்சுகிறாள். இத்தனையும் உன்னுடைய அக்காளுக்குக் கிடைப்பது என்றால், அவளை மகா சிரேஷ்டமான பாக்கியவதி யென்று யார்தான் புகழமாட்டார்கள்'' என்றாள்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட ஷண்முகவடிவு அளவற்ற பிரமிப்பும் திகைப்பும் அடைந்து, அந்த மாளிகையின் கம்பீரத் தோற்றத்தையும் உற்றுநோக்கித் தனது அக்காளுக்கு அப்படிப்பட்ட அபார சம்பத்து வந்து வாய்ப்பதைப் பற்றி மனதார சந்தோஷமடைந்தவளாய் மௌனப் பேரானந்தத்தில் ஆழ்ந்தவளாய் நடந்தாள். அடுத்த நிமிஷத்தில் தான் தனது அக்காளைக் காணலாம் என்ற நினைவினால் அவளது மனம் அப்போதே நெகிழ்ந்து மலர்ந்து ஆனந்த மயமாக நிறைந்து தவித்துக் கொண்டிருந்தது. உட்புறத்திலிருந்த குபேர சம்பத்தினிடையில் அதற்கெல்லாம் வாரிசுதாரியாக இனிது வீற்றிருக்கும் தனது அக்காளைக் கண்டு, அவளது மகோன்னத தசையைக் குறித்துத் தனது உவகையை வெளியிடாமல், தான் தனது துயரத்தைவெளியிட்டு அவளது மனத்தையும் புண்படுத்தி வருத்த நேர்ந்ததே என்ற எண்ணம் அந்தப் பெண்மணியினது மனத்தில் தோன்றி அப்போதே அவளது மனதைக் கலக்கத் தொடங்கியது. அந்த நிலைமையில் அவர்கள் இருவரும் மேன்மாடப்படிகளில் ஏறிச் சென்றபோது, ஷண்முகவடிவு

அம்மாணிபாயியை நோக்கி, "ஏனம்மா! இவர்களுக்கு வாரிசு தார்கள் எவருமே இல்லையென்றீர்களே. நெருங்கிய பந்துக்கள் கூடவா ஒருவரும் இல்லை? அவருடைய தங்கை ஒருத்தி இருப்பதாகச் சொன்னீர்களே; அவளுக்கு இந்தச் சொத்தை யெல்லாம் கொடுக்காமல், அன்னிய மனுஷியான என் அக்காளுக்குக் கொடுக்க இவர்கள் தீர்மானித்த காரண மென்ன?" என்றாள்.

அம்மணிபாயி, "இவருக்குத் தங்கை ஒருத்தி இருக்கிறாள். ஆனால், அவளுடைய புருஷர் இவர்களுடைய மனசுக்குப் பிடித்த மனிதரல்ல ஆகையால், அந்தத் தங்கை இவர்களிடத்தி லேயே இருக்கிறாள்; இனி புருஷர் வீட்டுக்கே போகமாட்டாள். அந்தத் தங்கைக்கும் இவர்கள் ஏராளமான பொருள் கொடுப்பார்கள். ஆனால் அவளுக்கு இனி எவ்விதச் சந்ததியும் உண்டாக வழியில்லை அல்லவா; அதனால் இவர்கள் உன்னுடைய அக்காளை வளர்த்துக் கொண்டு நல்ல ஒரு புருஷராகப் பார்த்து அவளுக்குக் கட்டிவைக்கப் போகிறார்கள். அவர்களுக்கு ஆண் சந்ததி பிறந்து சகலமான செல்வத்தையும் அனுபவிக்கட்டும் என்பது இவர்களுடைய எண்ணம். அதுவுமன்றி உங்களுடைய தகப்பனாருக்கும் இவருக்கும் ஏதோ நெருங்கிய ரகசியமான பாந்தவ்வியமோ, அல்லது அந்தரங்க சிநேகமோ உண்டாம். அதனால்தான் இவர் உங்களுக்குப் பணம் அனுப்பி நெடுங்காலமாக உங்களுடைய குடும்பத்தைப் பாதுகாத்து வருகிறாராம்" என்றாள்.

அதைக் கேட்ட ஷண்முகவடிவு ஒருவாறு திருப்தி அடைந்தவளாய் நடக்க, வெல்வெட்டு மாடத்தின் வாசல் வந்து சேர்ந்தது. அதன் கதவு எப்போதும்போல மூடி வைக்கப்பட்டி ருந்தது. அம்மணிபாயி கதவின் மீது கையை வைக்க, அது மெதுவாகத் திறந்து கொண்டது. உடனே இருவரும் உள்ளே நுழைந்தனர். தமது ஆசனத்தில் அமர்ந்திருந்த மருங்காபுரி ஜெமீந்தார், அவர்கள் வந்ததைக் கண்டு திடுக்கிட்டெழுந்து

உவகைபூத்த சிரித்த முகத்தினராய் அவர்களை நோக்கி விரைவாக நடந்து, ''வாருங்கள், வாருங்கள்'' என்று கரைபுரண்டோடிய அன்போடு உருக்கமாக உபசரித்து வரவேற்க, அம்மணிபாயி, ''வருகிறோம்'' என்று அடக்கமாக மறுமொழி கூறியவண்ணம் பதிவிரதா ஸ்திரீபோல நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு முதலிய குணங்கள் ஜ்வலிக்க, அவரைக் கண்டு ஒடுக்கமாகவும், பணிவாகவும், மரியாதையாகவும் நடந்து கொள்ளுகிறாள் என்பது தோன்ற அன்னநடை நடந்து முன்னால் செல்லலானாள். அந்த வெல்வெட்டு மாடத்தின் அற்புதமான அமைப்பும் தேஜோமயமான அலங்காரங்களும் முன்னரே விரிவாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும், அன்றையதினம் அந்த மாடம் மன்மதனது கலியாண மண்டபம் போலக் கோடிசூரியப் பிரகாசமாகக் காணப்பட்டது. எங்கு பார்த்தாலும் சரவிளக்குகளும், வால்ஷேட், லஸ்டர், குளோப் முதலிய அபூர்வமான கண்ணாடிவிளக்குகளும் கணக்கற்றுத் தோன்றின. அவைகள் பச்சை, சிவப்பு, வெள்ளை, நீலம், ஊதா, மஞ்சள் முதலிய பல வர்ணங்களுடையவை யாகவும், கமகமவென்று வாசனை கமழும் மெழுகுவர்த்திகள் நிறைந்தவையாகவும் இருந்தமையால், அவைகள் அபரி மிதமான ஜோதியும் நறுமணமும் அழகும் கொடுத்துக் கொண்டிருந்தன. பூத் தொட்டிகளில் குலுங்கிநின்ற ரோஜா, மல்லிகை, ஜாதி மல்லிகை, மனோரஞ்சிதம் முதலியவற்றின் அரும்புகள் அப்போதே தளையவிழ்ந்து நகைத்துப் பரிமளகந்தத்தை அந்த மாடம் முழுதும் மனோரம்மியமாக நிரப்பி இருந்தமையால், அதற்குள் நுழைந்த உடனே எத்தகைய புண்பெற்ற மனதும் ஆனந்த பரவசமடைந்து ஸுகவாரியில் ஆழ்ந்து மெய்மறந்து போகத்தக்கதாக இருந்தது. சுவர்கள், மேஜைகள், நாற்காலிகள், சோபாக்கள் முதலிய எல்லா இடங்களிலும் பச்சை, சிவப்பு, கருப்பு, மஞ்சள் முதலிய நிறங்களில் தகத்தகாயமான வெல்வெட்டு பொருத்தப் பட்டிருந்ததும், அவைகள் விளக்குகளின் ஜோதியில் பதினாயிர

மடங்கு அதிக வனப்பு வாய்ந்தவையாகக் காணப்பட்டதும் ஒன்றுகூடி ஷண்முக வடிவினது மதியை மயக்கி பிரமிக்கச் செய்தன. அவளது ஐம் புலன்களும் அபரிமிதமான அந்த இன்பக் களஞ்சியத்தில் தோய்ந்து தெவிட்டி ஸ்தம்பித்து நிலைகலங்கி நின்றன. பார்க்குமிடத்திலெல்லாம் புதுமை புதுமையான வஸ்துக்களும், விநோத விநோதமான பொருள்களும், அதியற்புதமான காட்சிகளும் தென்பட்டனவாகையால் எதைப் பார்ப்பது, எங்கே பார்ப்பது என்பதை நிர்ணயிக்க மாட்டாதவளாய் அந்த இளந்தோகைமயில் குழம்பித் தவிக்க லானாள். கால் வைக்கும் இடங்களும், உடம்பு படும் இடங்களும் வழுவழுப்பாக இருந்தமையால் நடக்கும்போதே உணர்வு கலங்க, புலன் சொக்கத் தூக்கம் தலைகாட்டத் தொடங்கியது. அவ்வாறு மனிதரது ஐம்புலன்களையும், அறிவையும் போதையில் ஆழ்த்தத் தகுந்த அதிமனோக்கியமான சிங்காரங்கள் நிறைந்த அந்த மாடத்திற்குள் புகுந்த ஷண்முகவடிவுக்குத் தான் இருந்தது பூலோகத்திலோ, அல்லது, கந்தருவலோகத்திலோ, அல்லது மயன் முதலிய தெய்வ சிற்பிகளால் அமைக்கப்பட்ட மாய லோகத்திலோ, அல்லது சுவர்க்க லோகத்திலோ என்ற மலைப்புத் தோன்றியது. தான் தனது அக்காளையும் சோமசுந்தரம் பிள்ளையையும் காண வந்திருப்பதையும் தனது விசனங்களையும் அந்த மானிளம்பேடு இரண்டொரு நிமிஷ நேரம் மறந்து பொறிகலங்கி நின்றுவிட்டாள். அடுத்த நிமிஷத்தில், அம்மணிபாயி முன்னால் போய்விட்டாள் என்பதைக் காணவே, அவள் தனது சுய உணர்வை அடைந்து அவளுக்குப்பின் நடந்து சென்றாள். தங்களுக்கு எதிரில் இனிய வசனத்தோடும் சிரித்த முகத்தோடும் தோன்றித் தங்களை நிரம்பவும் பட்சமாக வரவேற்ற பெரிய மனிதரே சோமசுந்தரம் பிள்ளையென்று அந்த இளநங்கை யூகித்துக் கொண்டாள். அநாதைகளாக இருந்த தங்களது குடும்பத்தை நெடுங்காலமாக காத்து ரக்ஷிக்கும் பேருபகாரி அவர்தான் என்பதை உணரவே, அவளது மனம் பேருவகையும்,

நன்றியறிதலும் உடைய தேகம் நெக்குவிட்டு இளகியது. முகம் சந்தோஷத்தினாலும் விசுவாசத்தினாலும் விரிந்து விகஸித்துத் தோன்றியது. ஆனாலும், அவள் தனது இயற்கை லட்சணங்களான நாணம், மடம், அச்சம் முதலியவற்றால் மேற்கொள்ளப்பட்டவளாய்த் தலைகுனிந்து, கட்டைவிரலைப் பார்த்தபடி அன்னப்பட்சிபோல நடந்து சென்றாள்.

மருங்காபுரி ஜெமீந்தார் அம்மணிபாயியை நோக்கி "லக்ஷ்மி யம்மா! குழந்தை ஷண்முகவடிவை அழைத்துக்கொண்டு போய் அதோ பக்கத்திலிருக்கும் அறையில் உட்கார வையுங்கள். என்னுடைய தங்கை கண்ணம்மாள் இப்போதுதான் கீழே போனாள். மாரியம்மன் கோவிலுக்குப் போனவர்கள் இன்னமும் திரும்பி வரவில்லை; என்ன காரணத்தினால் வரவில்லையோ தெரியவில்லை. யாரையாவது வேலைக் காரரை உடனே மாரியம்மன் கோவிலுக்கு அனுப்பி உண்மையைத் தெரிந்து கொண்டுவரும்படி செய்யலாம் என்று நான் யோசனை சொன்னேன். அதற்காகவே, கண்ணம்மாள் கீழே போனாள். நான் இதோ அவளைக் கூப்பிடுகிறேன். நீங்கள் போய் உட்கார்ந்துகொள்ளுங்கள். குழந்தாய் ஷண்முகவடிவு! போ அம்மா! போய் அந்தப் பக்கத்தில் உட்கார்ந்து கொள்" என்று மாதுரியமான குரலில் உருக்கமாகக் கூறி அவர்களை உபசரிக்க, அம்மணிபாயி ஷண்முகவடிவை அழைத்துக்கொண்டு அந்த வெல்வெட்டு மாடத்தின் கடைசியில் அறைபோல மறைவாக இருந்த பாகத்தை அடைந்து அவ்விடத்தில் போடப்பட்டிருந்த ஸோபாவின் மீது ஷண்முகவடிவை உட்காரச் செய்து தானும் உட்கார்ந்து கொண்டாள். தனது அக்காளை எப்போது காண்போம் என்று கட்டிலடங்கா ஆவலோடு வந்த ஷண்முக வடிவு, அவள் மாரியம்மன் கோவிலிலிருந்து இன்னமும் திரும்பி வரவில்லை என்பதைக் கேட்கவே, கவலை கொள்ளலானாள். அவளது மனதை நிறைத்துக் கொண்டிருந்த உற்சாகமும் பூரிப்பும் சடேரென்று மாறிச் சோர்வு எய்தின.

அவளைத் தான் எப்போது பார்க்கக் கிடைக்குமோ என்ற ஏக்கமும் ஏமாற்றமும் தோன்றி அவளது மனதைக் கப்பிக் கொண்டன. இருந்தாலும் எப்படியும் தனது அக்காள் அன்றைய இரவிற்குள் திரும்பிவந்துவிடுவாள் என்ற ஓர் எண்ணம் தோன்றி மனதைத் திடப்படுத்திக் கொண்டிருந்தது.

அவர்களை அனுப்பிவிட்டு வாசற்கதவண்டை சென்ற மருங்காபுரி ஜெமீந்தார் நிலைப்படியின் மீது நின்றுகொண்டு கீழே பார்த்தபடி, "கண்ணம்மா! கண்ணம்மா!" என்று இரண்டு மூன்றுதரம் அழைக்க, கீழே இருந்து ஒரு பெண்குரல், "இதோ வந்துவிட்டேன் அண்ணா!" என்று மாதுரியமாக மறுமொழி கூறியது. பிறகு யாரோ தடதடவென்று மெத்தைப் படிகளின் வழியாக மேலே ஏறிவந்த ஓசை உண்டாயிற்று. அடுத்த நிமிஷத்தில் லீலாவதி ஜெமீந்தாரிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தாள். இவ்விடத்தில் நாம் ஒரு முக்கியமான விஷயத்தை விளக்குவது அவசியமாகத் தோன்றுகிறது. அன்றையதினம் பிற்பகலில் மருங்காபுரி ஜெமீந்தாரும் அம்மணிபாயியும் சந்தித்து ஷண்முகவடிவை வஞ்சித்து அவளைத் துராகிருதமாக அடையவேண்டுமென்று தீர்மானித்த காலத்தில், அம்மணி பாயியின் பெயரை லக்ஷ்மியம்மாள் என்றும் லீலாவதியைக் கண்ணம்மாள் என்றும் தாங்கள் மாற்றி அழைக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டனர். ஏனென்றால், ஒரு வேளை ஷண்முகவடிவு தங்களிடத்திலிருந்து தப்பிப்போக நேருமானால், தாங்கள் இன்னார் என்பதை அவள் தெரிந்து கொள்ளாமலேயே போவது நல்லது என்பது அவர்களது கருத்து. கோலாப்பூரிலிருந்த காலத்திலேயே அம்மணிபாயி தன் பெயர் லக்ஷ்மியம்மாள் என்றே ஷண்முகவடிவினிடத்தில் சொல்லி இருந்தாள். ஆகையால், அந்தப் பெயரைச் சொல்லியே தன்னை அழைக்கும்படி அவள் ஜெமீந்தாரிடம் சொல்லி வைத்தி ருந்தாள். அந்த ஏற்பாடுகளுக்கு இணங்கவே, ஜெமீந்தார் லீலாவதியைக் கண்ணம்மாள் என்று அழைக்க, அவள் முன்

கூறப்பட்டபடி அவரிடம் வந்து சேர்ந்தாள். பிற்பகலில் அம்மணிபாயி அவ்விடத்தைவிட்டுப் போனபிறகு ஜெமீந்தார் லீலாவதியை அழைத்து ஷண்முகவடிவின் விஷயத்தில் தாங்கள் செய்ய உத்தேசித்திருக்கும் சதியாலோசனையின் விவரத்தை எல்லாம் வெளியிட்டு அதற்கு அவளும் உதவியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவளது மனம் அந்த அக்கிரமத்தைச் செய்ய இணங்கவில்லை. ஆனாலும், அவ்வளவு பெரிய மனிதரான தனது பெரிய தகப்பனார் சொல்வதைத் தடுத்துப் பேசமாட்டாதவளாய், அவள் அவரது பிரியப்படி நடந்துகொள்வதாக ஒப்புக் கொண்டிருந்தாள்.

ஆகவே, லீலாவதி ஜெமீந்தார் நின்ற இடத்துக்கு வந்து உள்ளே இருந்த இருவரது காதிலும் படும்படியான குரலில் பேசத் தொடங்கி, "என்ன அண்ணா? ஷண்முகவடிவு வந்துவிட்டாளா? லக்ஷுமியம்மாளும் வந்திருக்கிறார்களா?" என்று ஆசையோடும் ஆவலோடும் வினவ, ஜெமீந்தார் அவள் பேசியதைப் போலவே குதூகலமாகவும் மகிழ்ச்சியோடும் பேசத் தொடங்கி, "ஆம்; இரண்டு பேரும் இப்போதுதான் வந்தார்கள். வந்தவர்களை உபசரிக்க யாரும் பெண் பிள்ளைகள் இல்லை. ஆகையால், உன்னை அவசரமாகக் கூப்பிட்டேன்; வா, அவர்களிடம் போகலாம்" என்ற கூறியவண்ணம் அவளையும் அழைத்துக்கொண்டு ஷண்முகவடிவும் அம்மணிபாயியும் உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கிச் சென்று,அதற்கு மூன்று நான்கு கெஜ தூரத்துக்கு இப்பால் மறைவாக நின்று கொள்ள, லீலாவதி அவர்கள் இருவரும் இருந்த இடத்துக்குப் போய் மகிழ்ச்சியும் சந்தோஷமும் ஜ்வலித்த முகத்தோடு ஷண்முக வடிவைப் பார்த்து, "வா அம்மா! வா அம்மா!" என்று அளவற்ற உவகையோடு உபசரித்ததன்றி, அபாரமான வியப்போடு ஜெமீந்தாரைப் பார்த்து, "அண்ணா! ஷண்முகவடிவை நீங்கள் நன்றாகப் பார்த்தீர்களா? கமலத்துக்கும் இவளுக்கும் கொஞ்சங்கூட வித்தியாசமே தெரியவில்லையே! இரண்டு பேரும் ஒரே அச்சில் வார்த்தெடுக்கப்பட்ட பதுமைகள்போல

ஒரே மாதிரியாக இருக்கிறார்கள் பார்த்தீர்களா! இரண்டுபேரும் ஓரிடத்தில் ஒன்றாக இருந்தால், அக்காள், தங்கை என்ற பேதமே கொஞ்சமும் தெரியாதுபோலிருக்கிறதே'' என்று மகிழ்ச்சியே வடிவாகக் கூறினாள்.

அதைக் கேட்ட கிழவர், ''ஆம்; அம்மா! வாஸ்தவந்தான். சற்றுமுன் இவர்கள் வந்தபோது நான் இந்தக் குழந்தையைப் பார்த்துவிட்டு கமலம்தான் மாரியம்மன் கோவிலிலிருந்து திரும்பி வந்துவிட்டாளோ என்று நினைத்தேன். ஆனால், லக்ஷ்மியம்மாளும் கூட வந்ததிலிருந்து இவள் கமலமல்ல என்று நிச்சயித்துக் கொண்டேன். இவள் கமலத்தைப் போலவே இருப்பதைக் கண்டு அந்த ஆனந்தத்தை அடக்கமுடியாமல் உன்னையும் கூப்பிட்டேன். நீயும் வந்து பார்த்தால் நிரம்பவும் சந்தோஷமடைவாயென்று எண்ணித்தான் உன்னை உடனே கூப்பிட்டேன்'' என்றார்.

அவ்வாறு அவர்கள் இருவரும் தன்னைப்பற்றி நிரம்பவும் புகழ்ச்சியாகவும், மகிழ்ச்சியாகவும் பேசிக்கொண்டதைக் கேட்டு மிகுந்த கிலேசமடைந்து குனிந்து தத்தளித்தவண்ணம் ஷண்முகவடிவு லீலாவதியைக் கடைக்கண்ணால் பார்க்க, அவள் சுமார் இருபது வயதிற்கு மேற்படாத வயதுடைய வளாகவும் நிகரற்ற கட்டழகும் வசீகரத் தோற்றமும் வாய்ந்து அப்ஸர ஸ்திரீ போலவும் இருக்கக் கண்டு அடக்கவொண்ணா வியப்பும் பிரமிப்பும் அடைந்தவளாய் அம்மணிபாயினது முகத்தை நோக்க, அந்தக் குறிப்பை அறிந்த அம்மணிபாயி, ''ஷண்முகவடிவு! இது யார் தெரியுமா உனக்கு? இந்த அம்மாள்தான் ஐயாவுடைய தங்கை. இந்த அம்மாளுடைய பெயர்தான் கண்ணம்மாள் என்பது'' என்று எல்லோரும் கேட்கும்படியாகக் கூறினாள். உடனே லீலாவதி நிரம்பவும் வாத்சல்யத்தோடு ஷண்முகவடிவைப்பார்த்தவண்ணம் நடந்து வந்து அவளுக்குப் பக்கத்தில் ஸோபாவின் மீது உட்கார்ந்து கொண்டு அம்மணிபாயியைப் பார்த்து, ''சாப்பாட்டுக்கு

நேரமாகிறதே! இலைகள் போடச் சொல்லலாமா? நீங்களும் இன்று இங்கேதான் சாப்பிடவேண்டும்'' என்றாள்.

அதைக் கேட்ட அம்மணிபாயி, ''சாப்பாடா? நாங்கள் இரண்டு பேரும் இப்போதுதான் சாப்பிட்டு உடனே புறப்பட்டு வந்தோம். எங்களுக்கு இனி நாளைக்குத்தான் சாப்பாடு. நீங்கள் இன்னும் சாப்பிடவில்லை போலிருக்கிறது; அப்படியானால் போய் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வந்துவிடுங்கள். ஐயாவும் இன்னும் சாப்பிடவில்லை போலிருக்கிறது'' என்றாள்.

லீலாவதி, ''நாங்கள் எல்லோரும் சாப்பிட்டு விட்டோம்; ஒரு வேளை நீங்கள் சாப்பிட்டிருக்க மாட்டீர்களென்று நினைத்து அப்படிச் சொன்னேன். கமலத்துக்கும் அண்ணிக்கும் தயாரித்த சாப்பாடு இருக்கிறது'' என்றாள்.

அதைக் கேட்ட ஜெமீந்தார், ''ஏன் கண்ணம்மா! நீ கீழே போனாயே! மாரியம்மன் கோவிலுக்கு யாரை அனுப்பினாய்?'' என்றார்.

லீலாவதி, ''நான் போய் வண்டி பூட்டச்செய்து அதில் கோவிந்தசாமியை அனுப்பலாம் என்று பார்த்தேன். அதற்குள் அங்கே இருந்து நம்முடைய வண்டிக்காரன் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்துவிட்டான். வண்டி வெற்று வண்டியாக இருந்ததைக் கண்டு நான் நிரம்பவும் கவலையடைந்து, ''அம்மாமார்கள் எங்கடா?'' என்று கேட்டேன். அவர்கள் மாரியம்மன் கோவிலிலேயே இருந்து விட்டார்களாம். இன்று காலையில் அம்மனுக்கு அர்ச்சனை செய்த காலத்தில் கோவில் குருக்கள் அண்ணியினுடைய கண்ணைப் பார்த்தாராம். அம்மனுக்கு காலையிலும் மாலையிலும் அபிஷேகம் நடக்கும்போது, கோமுகையிலிருந்து வரும் அபிஷேகஜலத்தை எடுத்து மூன்று தினங்களுக்குக் கண்ணில்விட்டு அலம்பிக் கொண்டு மூன்று ராத்திரி கோவிலிலேயே படுத்திருந்தால், கண்ணிலுள்ள பூ கரைந்து போகும் என்று அவர் சொன்னாராம்.

ஆகையால், இந்த மூன்று தினங்களும் அங்கேயே இருந்து நாலாம் நாள் வருவதாகச் சொல்லி அவர்கள் வண்டிக்காரனை அனுப்பிவிட்டார்களாம். அவன் மறுபடியும் நாலாவது நாள் போய் அழைத்துக்கொண்டு வரவேண்டுமாம். அம்மன் கோவில் நிரம்பவும் விஸ்தாரமான கோயில். உள்ளே சௌக் கண்டியென்று அழகான ஒரு சிறிய உத்யானவனம் இருக்கிறதாம். அதற்குள் இவர்கள் எத்தனை நாளைக்கு வேண்டுமானாலும் சௌகரியமாக இருக்கலாம். அங்கே தான் இவர்கள் இறங்கி இருக்கிறார்களாம்'' என்றாள்.

அதைக்கேட்ட ஜெமீந்தார், ''ஓகோ! அப்படியா சங்கதி! ஆனால் இருந்துவிட்டு வரட்டும். அவர்களுக்குத் துணையாக யார் யார் கூட இருக்கிறார்கள்?'' என்றார்.

லீலாவதி, ''நாலு தாதிகளும், ஆறு சேவகர்களும் கூடப் போயிருக்கிறார்கள். ஆனால், மூன்று தினங்களுக்கு வேண்டிய சாப்பாட்டு சாமான்கள் தான் வேண்டியிருக்கும்'' என்றாள். ஜெமீந்தார் ''அதற்கென்ன பிரமாதம்; பொழுது விடிந்தவுடனே அவர்களுக்கு வேண்டிய சாமான்கள் காய்கறி வகைகளை எல்லாம் ஒரு வண்டியில் வைத்துக்கொண்டு நானே நேரில் போய், எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு ஷண்முகவடிவு வந்திருக்கும் சமாசாரத்தை கமலத்தினிடம் சொல்லிவிட்டு வருகிறேன். கூடுமானால், அவளையும் என்னோடுகூட அழைத்துக்கொண்டு வந்துவிடுகிறேன்'' என்றார்.

உடனே அம்மணிபாயி, ''ஐயோ பாவம்! ஷண்முகவடிவு தன்னுடைய அக்காளைப் பார்க்கவேண்டும் என்று நிரம்பவும் ஆவலோடு வந்தாள்; இன்னும் மூன்று தினங்கள் வரையில் அவளைப் பார்க்காமல் இருக்கும்படி நேர்ந்துவிட்டதே! ஐயா சொல்லும்படி செய்தால்தான், ஷண்முகவடிவின் மனம் திருப்திபடும். எல்லாவற்றிற்கும் கமலத்தை மாத்திரம் நாளைய தினம் அங்கே இருந்து அழைத்துக்கொண்டு வந்துவிடுவதுதான்

உசிதமாகத் தோன்றுகிறது. அப்படியே செய்துவிடுங்கள். எனக்கு நேரமாகிறது. வீட்டில் அவசரமான சில ஜோலிகள் இருக்கின்றன. எனக்கு உத்தரவு கொடுக்கிறீர்களா? ஏன் அம்மா ஷண்முகவடிவு! நான் போய்விட்டு வருகிறேன். உன்னை நான் உன்னுடைய மனிதர்களிடம் கொண்டு வந்துசேர்த்துவிட்டேன். உன்னுடைய அக்காளை நீ உடனே பார்க்கக் கூடவில்லை என்ற ஒரு விஷயத்தைத் தவிர உனக்கு இங்கே வேறே ஒரு குறைவும் இருக்காது. ஐயா உங்கள் தகப்பனாருடைய ஸ்தானத்திலிருந்து உங்களையெல்லாம் காப்பாற்றுகிறவர்கள். அவர்கள் கண்மணியை இமைகள் காப்பதுபோல உன்னை அதிக ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்வார்கள். நானும் மறுபடியும் நாளையதினம் இங்கே வந்து உன்னைப் பார்க்கிறேன். உன்னுடைய அக்காளைப் பார்க்க வேண்டும் என்ற அவாவும் என் மனதில் பூர்த்தியாக இருக்கிறது. நான் போய்விட்டு வருகிறேன். கண்ணம்மா! இந்தக் குழந்தையை ஜாக்கிரதை யாகப் பார்த்துக் கொள்ளம்மா'' என்று கூறிய வண்ணம் ஸோபாவை விட்டு எழுந்து நின்று ஜெமீந்தாரிடம் விடை கேட்பவள்போல அவரை நோக்கி, அவர், ''ஏன் நீங்களும் இங்கே இரண்டொரு நாள் இருந்துவிட்டுப் போகிறது தானே! அங்கே என்ன அவசர வேலை இருக்கப் போகிறது?'' என்று நயமாக மொழிந்தார்.

அம்மணிபாயி, ''இல்லை இல்லை. நாளைக்குக் காலையில் நான் மறுபடியும் வருகிறேன். நான் இருபது தினங்களாக ஊரில் இல்லாதிருந்து இன்றுதானே வந்தேன். முக்கியமான சில காரியங்களைக் கவனிக்க வேண்டும். நான் உத்தரவு வாங்கிக் கொள்ளுகிறேன்'' என்று முடிவாகக் கூறியவண்ணம், ஷண்முகவடிவு, லீலாவதி ஆகிய இருவரையும் பார்த்துத் தான் போவதாகச் சைகை செய்து விட்டுப் புறப்பட்டு அந்த மாடத்தைவிட்டு வெளியில் போய்விட்டாள்.

## 32 - வது அதிகாரம்

## அற்ப சகவாசம் பிராண சங்கடம்

லீலாவதி என்னும் பெண் தந்திரம் செய்து தனது புருஷனான மாசிலாமணிப்பிள்ளையைச் சிறைச்சாலைக்கு அனுப்பிவைத்த விவரம் முன் ஓர் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டதல்லவா? அவர் அவ்வாறு தன்னைத் தனிமையில் விடுத்துச் சென்ற பிறகு அந்த மடந்தை தங்களுக்குச் சொந்தமான சகலமான பொருட் களையும் எடுத்துக்கொண்டு பங்களாவைக் காலி செய்துவிட்டு வேலைக்காரர்கள் எல்லோரையும், அவரவர்களுக்குச் சேர வேண்டிய சம்பளங்களைக் கொடுத்தனுப்பிவிட்டு தனது பெரிய தகப்பனாரினது மாளிகைக்கு வந்துசேர்ந்து கொலைக்குற்றத்தின் பொருட்டுத் தனது புருஷன் போலீசாரால் சிறைப்படுத்தப் பட்டுப் போன வரலாற்றையும் தான் அவருக்குச் செய்துள்ள வாக்குறுதியின் வரலாற்றையும் தனது பெரிய தந்தையிடம் வெளியிட்டாள். அவைகளையெல்லாம் கேட்ட மருங்காபுரி ஜெமீந்தார் பெரிதும் மகிழ்ச்சியடைந்தவராய், லீலாவதி செய்த தந்திரத்தைப் பற்றி அவளை நிரம்பவும் புகழ்ந்ததன்றி, மாசிலாமணிப் பிள்ளையைத் தப்பவைப்பதற்குத் தாம் எவ்வித முயற்சியும் செய்யாமல் சும்மா இருந்துவிட வேண்டும் என்றும், அப்படி இருந்துவிட்டால் அவர் தண்டிக்கப் பட்டுப் போவார் என்றும், அதன்பிறகு லீலாவதியினது துன்பங்கள் எல்லாம் நிவர்த்தியாகி விடும் என்றும் கூறினார்.

அதைக்கேட்ட லீலாவதி, "ஆம். நீங்கள் சொல்லும் யோசனை நல்லதுதான். ஆனால், நாம் எவ்வித முயற்சியும் செய்யாமல் சிறையில் இருப்பவரைக் கவனிக்காமல் விட்டு விட்டோம் என்று ஜனங்கள் அவதூறு சொல்லுவார்கள். அதுவுமன்றி, தெய்வச்செயலாக அவரே ஒருவேளை விடுதலை அடைந்து திரும்பி வருவாரானால், நாம் சும்மா இருந்து விட்டோம் என்ற ஆத்திரம் அவருடைய மனசை விட்டு

ஒருநாளும் போகவே போகாது. என்னுடைய ரகசியங்கள் பல அவருக்குத் தெரியும். அவர் என்னை இதுவரையில் வதைத்ததைவிடப் பதினாயிரமடங்கு அதிகமாகத் துன்புறுத்தி பழிக்குப் பழி வாங்கியே தீருவார். ஆகையால், நாம் ஒரு காரியம் செய்வோம். அவரது விஷயத்தில் நாம் பில பிரயத்தனங்கள் செய்வது போலப் பாசாங்குபண்ணி விசாரணைத் தேதியன்று வக்கீலை அமர்த்தி அவருடைய கட்சியிலிருந்து வாதாடச் செய்வோம். நானும் பற்பல சிற்றுண்டிகள் ஆகாரம் முதலியவற்றை எடுத்துக்கொண்டு அடிக்கடி சிறைச்சாலைக்குப் போய் அவரைக்கண்டு நிரம்பவும் விசனித்தழுது அவைகளை யெல்லாம் அவருக்குக் கொடுத்துவிட்டு, இளவரசரைக் காண்ப தாகவும், அவர் எழுதிக்கொடுத்த கடிதத்தின் வாக்குறுதியை நிறைவேற்றும்படி கேட்டுக் கொள்வதாகவும், விசாரணைத் தேதியன்று வக்கீல் வைத்து வாதாடச் செய்வதாகவும் அவரிடம் தெரிவித்து, தமக்கு எப்படியும் விடுதலை கிடைத்துவிடும் என்று அவர் கடைசி வரையில் நம்பியிருக்கும்படி செய்து விட்டு வருகிறேன். ஆனால், எனக்கு உண்மையில் இனி அந்த இளவரசருடைய முகத்தில் விழிக்கவும் இஷ்டமில்லை. அந்தப் புருஷரோடு வாழவும் எனக்கு மனமில்லை. கடைசி வரையில் கைம்பெண்ணாக உங்களுடைய சவரக்ஷணையி லேயே இருந்துவிடுகிறேன்'' என்றாள்.

மருங்காபுரி ஜெமீந்தாரும் மாசிலாமணிப் பிள்ளையின் மீது தீராப்பகைமையும் குரோதமும் கொண்டிருந்தவராதலால் அவர் தப்பி வருவதும் மறுபடி லீலாவதி அவரிடம் போவதும் கிழவருக்குச் சம்மதப்படவில்லை. ஆகையால், தாம் உண்மையில் அவரைத் தப்பவைக்க எவ்வித உபாயமும் தேடாமல் அவருடைய விதிப்படி நடக்கவிட்டுவிடுவதே உசிதம் என்று எண்ணி, லீலாவதி பிரஸ்தாபித்த ஏற்பாட்டை அப்படியே ஒப்புக்கொண்டார். அந்த ஏற்பாட்டின்படி லீலாவதி நல்ல நல்ல பதார்த்தங்களையும், ஆகாராதிகளையும் எடுத்துக்

கொண்டு ஒவ்வொருநாளும் சிறைச்சாலைக்குப் போய்த் தனது புருஷனைக் கண்டு உண்பித்து இடையிடையில் வாத்சல்யமும், துயரமும் காட்டி உருக்கமாகப் பேசி, தான் இளவரசரைக் கண்டதாகவும், நியாயாதிபதி விசாரணை செய்து தண்டனை விதிப்பாரானால், தாம் உடனே குறுக்கிட்டு அதை நிவர்த்தி செய்து வைப்பதாக இளவரசர் வாக்குக்கொடுத்திருப்பதாகவும் சொல்லி அவரை நிரம்பவும் தேற்றி, தாம் எப்படியும் தப்பி வெளிப்பட்டு விடுவோம் என்று அவர் நிச்சயமாக நம்பும்படி செய்து அவரோடு நெடுநேரம் இருந்து, அவரை விடுத்துப் பிரிய மனமற்றவள் போல நடலம் செய்து முடிவில் அவ்விடத்தை விட்டு மருங்காபுரி ஜெமீந்தாரினது மாளிகைக்கு வந்து விடுவாள். அவர் சிறைப்படுத்தப்பெற்ற பின் சுமார் இருபது தினங்களுக்குப் பிறகு அந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அன்றையதினம் மருங்காபுரி ஜெமீந்தாரும் லீலாவதியும் கச்சேரிக்கு வந்திருந்து வக்கீலைஅமர்த்தி வாதாடச் செய்து, மாசிலாமணிப்பிள்ளையின் விஷயத்தில் மட்டற்ற அக்கறையும் கவலையும் தோன்றுவித்தவராய்ச் சுட்டிக் கொண்டிருந்தனர். அந்த வழக்கின் விசாரணை முடிவடைந்தது. மாசிலாமணிப் பிள்ளை கொலை குற்றம் செய்தது உண்மைதான் என்று சாட்சிகள் மூலமாய் நன்றாக வெளிப்பட்டது ஆனாலும், அவர் குடித்து வெறி கொண்டிருந்த காலத்தில், திடீரென்று கோபமூட்டப்பட்டதனால், அவர் அடக்கமுடியா ஆத்திரம் கொண்டு மெய்மறந்து அந்தக் கொலையை நடத்தினார் என்பதும் வெளிப்பட்டது ஆகையால், நியாயாதிபதி அவருக்கு மரண தண்டனை விதிக்காமல், ஏழு வருஷ கடின காவல் தண்டனை விதித்தார். மாசிலாமணிப் பிள்ளை மறுபடியும் சிறைச்சாலையை அடைந்தார். லீலாவதி திரும்பவும் அவரிடம் சென்று தான் இளவரசரிடம் போய், அவருக்கு விடுதலை பெற்று வருவதாக வாக்குறுதி செய்து கொடுத்து அவரைத் தேற்றிவிட்டு வந்து சேர்ந்தாள். அடுத்த நாள் அவள் மறுபடியும் மாசிலாமணிப் பிள்ளையிடம் போய்

அளவற்ற துக்கமும், மனவேதனையும் காட்டி உண்மைபோல நடித்து, இளவரசர் தன்னை ஏமாற்றி விட்டதாகவும்,தாம் உத்தரவு பிறப்பிப்பதாகச் சொல்லி இளவரசர் தம்மால் எழுதிக் கொடுக்கப்பட்டிருந்த கடிதத்தைத் தன்னிடமிருந்து தந்திரமாக வாங்கிக் கிழித்துப் போட்டுவிட்ட தாகவும், தாம் விடுதலை செய்ய முடியாதென்று கண்டித்துக் கூறித் தன்னை அவமானப்படுத்தி அரண்மனையை விட்டு வெளிப்படுத்தியதாகவும் கூறிக் கலங்கி அழுதாள். அந்த வரலாற்றைக்கேட்ட மாசிலாமணிப் பிள்ளைக்கு இடி வீழ்ந்தது போலாகிவிட்டது. தாம் எப்படியும் தப்பி வெளியில் போய்விடலாம் என்று அவர் கொண்டிருந்த மனோதிடமும், குதூகலமும் திடீரென்று மாறிப்போக மட்டற்ற துயரமும், கலவரமும், பீதியும் அவரது மனதில் குடிகொண்டன. தாம் அதற்குமேல் தப்ப இயலாதென்ற நிச்சயமும், ஏக்கமும், ஏமாற்றமும் உண்டாகிவிட்டன. ஆனால், அவர் தமது மனைவியான லீலாவதி பொய் சொல்லுகிறாளென்று சிறிதும் சந்தேகிக்கவே இடமில்லாமல், அவள் அவ்வளவு திறமை யாகவும் தந்திரமாகவும் உருக்கமாகவும் உண்மைபோலவும் நடித்தாள் ஆகையால், அவளது கபட நினைவு கடைசிவரையில் வெற்றியடைந்தது. அழுத கண்ணும், சின்னாபின்னமாகத் தோன்றிய கேசமும் மார்பிலறைந்து கொண்ட கையுமாக அவள் விசனமே வடிவாய்க் கடைசி வரையில் இருந்து, அவரைப் பெரிய சிறைச்சாலைக்கு முடிவாக அனுப்பிவிட்டுத் தனது பெரிய தந்தையினது மாளிகைக்கு வந்து சேர்ந்தாள். அதன்பிறகு மருங்காபுரி ஜெமீந்தாரும் லீலாவதியும் அடிக்கடி அந்த விஷயத்தைப்பற்றி பேசி, தாங்கள் செய்த தந்திரத்தைப் பற்றித் தமக்குத்தாமே புகழ்ந்து திருப்தி அடைந்தும், மாசிலாமணிப் பிள்ளையைப் பலவாறு தூஷித்தும், அளவற்ற ஆறுதலடைந்த வராய் சந்தோஷமாக இருந்து வந்தனர். ஆனால், தமது உண்மையான மனப்போக்கை மற்றவர் தெரிந்துகொள்ளக் கூடாது என்ற தீர்மானம் கொண்டவர்களாய் அவர்கள்

இருவரும், அந்த விபரீத சம்பவத்தைப் பற்றி மட்டற்ற விசனமும் அவமானமும் அடைந்தவர்கள் போலக்காட்டிக் கொண்டனர்.

அவ்வாறு நாட்கள் கழிய, லீலாவதி தனது பெரிய தந்தையினது மாளிகைக்கு வந்ததிலிருந்து சுமார் ஒரு மாத காலம் கழிந்தது. மருங்காபுரி ஜெமீந்தார் தமது இயற்கைப்படி குதூகல புருஷராகவும், ஸ்திரீலோலராகவும் இருந்து வந்தார். லீலாவதியும் தனது புருஷரைப்பற்றிய நினைவையே மறந்து சுயேச்சையாக உண்பதும் உறங்குவதுமாக இருந்து, தனது பெரிய தந்தையின் மனப்போக்கின்படி நடந்து அவருடைய துர் எண்ணங்களுக்கெல்லாம் முற்றிலும் அனுசரணையாக இருந்து வந்தாள். அந்த நிலைமையிலேதான் அம்மணிபாயி என்பவள் ஷண்முகவடிவை வஞ்சித்துக் கோலாப்பூரிலிருந்து தஞ்சைக்கு அழைத்துவந்து, அவளது அக்காளான கமலத்தினிடம் கொண்டு போய் விடுவதாகச் சொல்லி, மருங்காபுரி ஜெமீந்தாரிடம் கொணர்ந்துவிட்டுப் போய்விட்டாள். அது சம்பந்தமான விவரம் முற்றிலும் இதற்கு முந்திய அதிகாரத்தில் நன்கு விவரிக்கப் பெற்றிருக்கிறது. அந்த அதிகாரத்தின் முடிவில் கூறப்பட்டபடி அம்மணிபாயி மருங்காபுரி ஜெமீந்தாரிடம் செலவு பெற்றுக் கொண்டு போனபிறகு ஷண்முகவடிவு, தனது அக்காளான கமலத்தை உடனே காண இயலாமல் போனதைக் குறித்து நிரம்பவும் விசனமும் ஏமாற்றமும் அடைந்தாள். ஆனாலும், மருங்காபுரி ஜெமீந்தார் லீலாவதி ஆகிய இருவருக்கு முன்பும் அதைக் காட்டிக்கொள்ளாமல், அவர்களிடத்தில் நிரம்பவும் பயபக்தி விநயத்தோடு நடந்து கொண்டாள். அம்மணிபாயி சொன்ன கட்டுக்கதை முழுதையும் அவள் உண்மையென்றே நம்பினதன்றி, அதற்கிணங்க, மருங்காபுரி ஜெமீந்தாரும் லீலாவதியும் நடந்ததைக் கண்டமையால், அவள் எவ்வித சந்தேகமும் கொள்ளாமல், மருங்காபுரி ஜெமீந்தாரை சோம சுந்தரம் பிள்ளை என்றும் லீலாவதியை அவரது தங்கையான

கண்ணம்மாள் என்றுமே உறுதியாக நினைத்திருந்தாள். ஆகையால் கமலம் மாரியம்மன்கோவிலில் தங்கியதைப்பற்றித் தான் வருந்தினால், அது அவர்களது மனதிற்குச் சம்மதியாக இராதென்று நினைத்து, அவள் தனது உண்மையான மனநிலைமையை வெளியில் காட்டாமல் பொறுமையே வடிவாக இருந்தாள்.

மாடப்புறாவைப் போன்ற ஒப்புயர்வற்ற மிருதுத் தன்மையும், உயர்தர வனப்பும், சகலவிதமான கலியாண குணங்களும் நிரம்பவும் ஜ்வலிக்க, உத்தமோத்தமியாக விளங்கிய மங்கையர்க்கரசியான ஷண்முகவடிவைப் பார்த்த முதல், மருங்காபுரி ஜெமீந்தாரினது மனம் உன்மத்தங் கொண்டு மயங்கிக் கலங்கித் தவித்து துர்மோக வெறிகொண்டது. தாம் எப்பாடுபட்டாயினும், அவளை வசப்படுத்தி நிரந்தரமாகத் தமக்கு உரியவளாக்கிக் கொள்ளவேண்டும் என்றும், அவள் பொருட்டு தமது உடல், பொருள், ஆவி ஆகிய எதையும் பொருட்படுத்தக் கூடாது என்றும், சாம, தான, பேத, தண்டம் என்ற சதுர்வித உபாயத்தையும் பயன்படுத்தி அவளது மனதைத் திருப்பவேண்டும் என்றும் அவள் தமது மாளிகைக்குள் இருக்கிறாள் என்பதைத் தமது வேலைக்காரர் கூட அறிந்து கொள்ளாமல் அவளை மறைவான இடத்தில் ஒளித்து வைக்க வேண்டும் என்றும் அவர் உறுதியாக தீர்மானித்துக் கொண்டு, தமது எண்ணத்தை லீலாவதியிடம் ரகசியமாக வெளியிட, அவளும் அதற்கு அனுகூலமாய் இருப்பதாக ஒப்புக் கொண்டாள். ஷண்முகவடிவு அந்த மாளிகைக்கு வந்த அந்த இரவிலேயே தாங்கள் தங்களது கருத்தை வெளியிட்டால்,அதைச் சிறிதும் எதிர்பாராத அந்த உத்தமி அதற்கு எளிதில் இணங்கமாட்டாள் என்று எண்ணி, அன்றையதினம் அவள் எவ்விதச் சம்சயமும் கொள்ளாதபடி நடந்துகொண்டதன்றி, அவளை அபாரமாகப் புகழ்ந்து, சோடசோபசாரங்களைச் சொரிந்து, அவளது மனம் நன்றி யறிதலின் பெருக்கினால் மலர்ந்து அளவற்ற மகிழ்ச்சி

கொள்ளும்படி நடந்துகொண்டனர். அவள் அன்றைய தினம் மாலையிலேயே அம்மணிபாயியினது வீட்டில் விருந்துண்டு வந்திருந்தாள் ஆகையால், அவள் தனக்கு அதற்குமேல் மறுபடியும் போஜனம் அவசியமில்லை என்று எவ்வளவோ வற்புறுத்திக் கூறினாள். ஆனாலும், லீலாவதியும் கிழவரும் அவளுக்குச் செய்த உபசரணைகளினாலும், அவர்கள் அவளை நிரம்பவும் நயந்து வேண்டிக் கொண்டமையாலும், அவள் அவர்களினது விருப்பத்தை மறுக்கமாட்டாதவளாய் அதற்கிணங்கி மறுபடியும் உண்பது கஷ்டமாகிவிட்டது. மாதுரியமான போஜனமும், இனிமையான சிற்றுண்டிகளும் தேன் ததும்பிய கனிவர்க்கங்களும் அவளுக்கு முன்னர் நிரப்பப் பட்டன ஆகையால், அவள் அவர்களது மனம் கோணாதிருக்க வேண்டுமென்ற நினைவினால் தூண்டப்பட்டு அவற்றி லெல்லாம் சிற்சில உண்டு எழுந்தாள். லீலாவதி அவளை ஒரு நொடிநேரமும் விட்டுப் பிரியாமல், வாஞ்சையான வார்த்தைகளைப்பேசி, அவள் கால் நாழிகையில் தன்மேல் பிரியங்கொள்ளும்படி செய்து அவளோடு அன்றிரவு நெடுநேரம் வரையில் குதூகலமாகப் பேசிக்கொண்டிருந்து அவளது வரலாறுகளையெல்லாம் சிறுகச் சிறுகக் கேட்டறிந்து கொண்டவளாயிருந்து கடைசியில் அவளை நிரம்பவும் ஸொகுசான ஒரு பஞ்சணையில் சயனிக்கவிடுத்துத் தானும் அவளுக்கு அருகில் இன்னொரு சயனத்தில் படுத்துக் கொண்டாள். மருங்காபுரி ஜெமீந்தார் ஷண்முகவடிவினிடத்தில் எவ்வித துர் எண்ணமும் கொள்ளாதவர்போல நடந்து தூரத்திலிருந்தபடி லீலாவதியைத் தூண்டி அவள் மூலமாக ஷண்முகவடிவுக்கு நிரம்பவும் உபசரணைகள் புரிந்து ஆறுதல் மொழிகள் கூறிவந்தார்.

கோலாப்பூரில் நடந்த மகா துக்ககரமான விபரீதச் சம்பவத்தைப் பற்றிய நினைவு ஷண்முகவடிவினது மனதில் அப்போதும் புதிதாகவே இருந்து அவளது மனதையும்

உடம்பையும் முற்றிலும் சோர்விலும் துயரத்திலும் ஆழ்த்திக் கொண்டிருந்தது. ஆனாலும் தன்னிடத்திலும் தனது அக்காளிடத்திலும் மட்டற்ற அன்பும் பட்சமும் வைத்துள்ள அந்தப் பேருபகாரிகளின் முன்னர் தான் தனது சொந்த வியாகுலங்களை எல்லாம் அதிகமாகப் பாராட்டி அவர்களுடைய மனதையும் சஞ்சலத்தில் ஆழ்த்தக் கூடாது என்று நினைத்த ஷண்முகவடிவு தன் மனதை அடக்கிக்கொண்டு உணவு விஷயத்திலும் சயன விஷயத்திலும் அவர்களது மனம் கோணாதபடி நடந்து கொள்ள வேண்டியிருந்தது. ஆகவே, அவள் தன் மனப்போக்குக்கு முற்றிலும் விரோதமாக அவர்களால் வழங்கப்பட்ட இனிய பொருட்களை உண்டு பஞ்சணையில் சயனித்துக் கொண்டாள்.

மறுநாள் காலையில் ஜெமீந்தார் தமது காலைக் கடமைகளை நிறைவேற்றிக் கொண்டபின் லீலாவதியை அழைத்து, சகல விஷயத்திலும் ஷண்முகவடிவு சிறிதும் குறைவின்றி சௌக்கியமாக இருக்கும்படி ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, தான் மாரியம்மான் கோவிலுக்குப் போவதாகவும் கூடுமானால் கமலத்தைத் தம்முடன் கூடவே அழைத்து வந்துவிடுவதாகவும் கூறிவிட்டு ஒரு பெட்டி வண்டியில் உட்கார்ந்துகொண்டு வெளியில் போய்விட்டார். அவ்வாறு போவதற்கு முன்னர், அவர் ஷண்முகவடிவிற்குத் தெரியாமல் லீலாவதியைத் தனிமையில் அழைத்து, அன்றைய தினம் தாம் திரும்பி வருவதற்குள் அவள் ஷண்முகவடிவின் மனதை மாற்றி வைக்க வேண்டும் என்றும், அன்றையதினம் இரவிற்குள் தாம் எப்படியும் அவளைத் தமது மனைவியாக்கிக் கொள்ள வேண்டும் என்றும், அவள் தானாகவே கனியாத பட்சத்தில், கமலம் வந்திருப்பதாகச் சொல்லி லீலாவதி அவளை ரதிகேளி விலாசத்திற்குள் அனுப்பிவிட வேண்டும் என்றும், தாம் அதற்கு முன்னாகவே அவ்விடத்தில் இருப்பது என்றும், அவள் வந்தவுடன் அவளைப் பலாத்காரப் படுத்துவது என்றும் சொல்லி முடிவு செய்துகொண்டு மாளிகையை விட்டுப் போய்விட்டார்.

லீலாவதி அன்றையதினம் தான் எப்பாடு பட்டாகிலும் ஷண்முகவடிவினது மனதை மாற்றி அவள் தனது பெரிய தந்தையின் கருத்துக்கு இணங்கும்படி செய்து, பெரிய தந்தையின் பிரியத்தைப் பூர்த்தியாகச் சம்பாதித்துக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தோடு ஷண்முகவடிவை ஒருக்ஷண நேரங்கூட விட்டுப் பிரியாமல் அவளிடம் அபாரமான வாஞ்சையும் கவர்ச்சியும் கொண்டுவிட்டவள்போல நடித்து விநாடிக்கு விநாடி அவளுக்குப் பலவகைப்பட்ட உபசரணைகள் புரிந்து அன்பான மொழிகளைச் சொரிந்து ஆசாபாசத்தை வெளிப்படுத்தி, அவளுக்குரிய பணிவிடைகளை எல்லாம் தானே செய்து அவள் தரையில் நடக்க ஸகியாதவள்போல நடித்து அவளுடன் கூடவே இருந்து சமயம் பார்த்து கபடமான சொற்களைப் பிரயோகம் செய்துகொண்டே வந்தாள்.

அவர்கள் இருவரும் தங்களது காலைக் கடமைகளை நிறைவேற்றிக் கொண்டபின்னர் லீலாவதி ஷண்முகவடிவோடு வெல்வெட்டு மாடத்திலிருந்து சந்தோஷமாக சம்பாஷித்துக் கொண்டிருந்தாள். லீலாவதி நிரம்பவும் குதூகலமாகப் பேசி அடிக்கடி சந்தோஷமாக நகைத்தவண்ணம் உல்லாஸமாக இருக்க, அவளது முகதாக்ஷணியத்திற்காக ஷண்முகவடிவும் நலிந்து அவளோடு சந்தோஷமான சொற்களைக் கூற முயன்றாள். ஆனாலும் கோலாப்பூரில் நிகழ்ந்த விஷயங்களின் நினைவும், கலியாணசுந்தரத்தைப் பற்றிய நினைவும், தான் எண்ணியிருந்த எண்ணங்கள் எல்லாம் வீணாகிப் போனதே என்ற ஏக்கமும் எழுந்தெழுந்து அவளது கவனத்தைக் கவர்ந்து கொண்டன ஆகையால், அடிக்கடி அந்த மின்னற் கொடியாளினது வதனம் விகாரமடைந்து வேறுபட்டுத் தோன்றியது.

அதை எளிதில் உணர்ந்து கொண்ட லீலாவதி நிரம்பவும் மகிழ்ச்சியாய்ப் பேசத்தொடங்கி, "என்ன ஷண்முகவடிவு! ஏன்

உன் முகம் அடிக்கடி ஒருவிதமாக மாறுபடுகிறது? இந்த இடத்தில் உனக்கு என்ன குறை இருக்கிறது? நீ உன்னுடைய ஊரிலிருக்கும்போது தான் நீ வேண்டிய அளவு துயரங்களை அனுபவிக்க நேர்ந்ததே; வந்த இடத்திலாவது சகலமான கவலைகளையும் மறந்து சந்தோஷமாக இருக்கக் கூடாதா? இவ்விடத்தில் நீ காலால் இடும் வேலையைத் தலையால் செய்யக்கூடிய பணிமக்கள் நூற்றுக்கணக்கில் இருக்கிறார்கள். எடுக்க எடுக்கக் குறையாத மலைபோன்ற திரவியமும், ஆடை ஆபரணங்களும் இவ்விடத்தில் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் நீயும் உன் அக்காளும் சுயேச்சையாக உபயோகப் படுத்திக் கொள்ளலாம். சகலமான சுக சௌகரியங் களையும் செய்து கொண்டு நீ தேவேந்திரலோகத்தில் இருப்பவள்போல இவ்விடத்தில் இருக்கலாம். அப்படியிருக்க, நீ ஏன் இப்படி எதையோ நினைத்து, நினைத்து துக்கத்தையும் கவலையையும் வருவித்து மனசைப் புண்படுத்திக் கொள்ளுகிறாய்'' என்று நயமாகவும் உருக்கமாகவும் கூறினாள்.

அதைக்கேட்ட ஷண்முகவடிவு மட்டற்ற மனக்கிலேசம் அடைந்தவளாய், ''ஆகா! நீங்கள் சொல்வதற்கு நான் என்னவிதமான பதில் சொல்வதென்பது தெரியவில்லை. நான் ஏற்கெனவே என்னுடைய வரலாறுகளையெல்லாம் சொல்லி இருந்தும் நீங்கள் இப்படிச் சொல்வது என் மனசுக்குச் சம்மதியாக இல்லை. எனக்கு நேரிட்ட பெருத்த அவகேட்டை நான் உங்களிடம் வெளியிட்டிருக்கிறேன். அப்படியிருக்க, இனி எனக்கு இந்த ஜென்மத்தில் சந்தோஷம் என்பது உண்டாகப் போகிறதா? அது ஒருநாளும் இல்லை. என்னை நீங்கள் குபேர சம்பத்திலும் சுவர்க்க போகத்திலும் கொண்டுபோய் வைத்தாலும்கூட என் மனம் சந்தோஷம் என்பதைக் காணப் போகிறதில்லை. கொஞ்சம் கொஞ்சமாய் என் உயிரைக் குடித்துக் கொண்டிருக்கும் என் துயரம் மாறப்போகிறதில்லை'' என்றாள்.

அதைக்கேட்ட லீலாவதி அவளது துன்பத்தைப் பொருட் படுத்தாமல் அசட்டையாகப் பேசத் தொடங்கி, "அப்படி உனக்கு அவ்வளவு பிரமாதமான துயரம் என்ன வந்து விட்டது. ஒன்றையும் காணோமே. உன்னுடைய பிரியத்துக்குக் கொஞ்சமும் அருகமற்றவனாக யாரோ ஒரு பையனைப் பற்றி நீ இனிமேலும் நினைத்து விசனப்படுவதில் என்ன உபயோகம்? அவனுடைய யோக்கியதையை நீ உள்ளபடி தெரிந்து கொள்ளாமல் அவன்மேல் நீ ஆசை வைத்ததே முதலில் தப்பு. இப்போது அவன் தன்னுடைய குணம் இப்படிப்பட்டது என்பதைக் காட்டிவிட்டான். இதோடு அவனை நீ விட்டொழிக்க வேண்டுமே அன்றி, அதை நினைத்து நினைத்து நீ உன்னுடைய வாழ்நாளை எல்லாம் ஏன் விசனத்தில் ஆழ்த்திக் கொள்ளுகிறாய்? நன்றாக எண்ணிப் பார்த்தால், நடந்து போனதைப் பற்றி இனி நீ கொஞ்சமும் விசனப்படவே நியாயமில்லை" என்றாள்.

அந்த இரக்கமற்ற வார்த்தைகளைக் கேட்ட ஷண்முகவடிவு நிரம்பவும் பிரமித்து ஸ்தம்பித்து போனாள். முதல் நாள் இரவிலிருந்து தனது நிலைமையைப் பற்றி நிரம்பவும் அனுதாபமாகவும், இரக்கமாகவும் பேசிக்கொண்டு வந்த லீலாவதி திடீரென்று புதுமனுஷியாக மாறி, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற கொள்கையை எடுத்து உபதேசித்தது அவளால் நம்பக்கூடாத பெரும் புதுமையாக இருந்தது. ஷண்முகவடிவு பொறுமையே வடிவாகத் தோன்றி லீலாவதி யின் முகத்தை நோக்கி நிதானமாகப் பேசத் தொடங்கி, "அம்மா! நீங்கள் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்வது என்னுடைய விதிவசம் என்றும் கால வித்தியாசமென்றும் நினைக்கிறேன். என்னுடைய மனசில் வேரூன்றியிருக்கும் துயரம் பிறருக்கு எளிதாகத் தோன்றினாலும் எனக்கு மாத்திரம் எளிதில் விலக்கக் கூடியதாகவும் அற்பமானதாகவும் தோன்றவில்லை. அப்படிப்பட்ட பெரிய விசனம் மனதை அழுத்திக்

கொண்டிருக்கையில் சந்தோஷமாகப் பேசவும் குதூகலமாகப் பொழுதைப் போக்கவும் என்னால் ஆகவில்லை'' என்றாள்.

உடனே லீலாவதி முன்னிலும் அதிக வாத்சல்யத்தோடு பேசத் தொடங்கி, ''நீ சொல்வது எல்லாம் உண்மைதான். இந்தப் பையனை நினைத்து நீ இதுவரையில் விசனமுற்றது குற்றம் என்று நான் சொல்ல வரவில்லை. நான் இப்போது என்ன சொல்ல எண்ணியதென்றால், கெட்டுப் போனதைப் பற்றி இனி நாம் ஆயிரங்காலம் விசனப்பட்டாலும், அது இனி நல்லதாக மாறப்போகிறதில்லை. அந்தப் பையனைக் காட்டிலும் பதினாயிர மடங்கு சிரேஷ்டமான நற்குணங்களும், அழகும், செல்வமும், செல்வாக்கும் வாய்ந்த உத்தம புருஷர்கள் இந்த உலகத்தில் எத்தனை மனிதரோ இருக்கிறார்கள். உனக்கும் அந்தப் பையனுக்கும் நெருக்கமான சம்பந்தம் எதுவும் ஏற்படவில்லை. அப்படியிருக்க, நீ அவனைப்பற்றிய நினைவை இவ்வளவோடு விட்டு உன்னுடைய மேம்பாட்டுக்குத் தகுந்தவரும், உண்மையான யோக்கியதாபட்சம் உள்ளவருமான வேறொரு புருஷரை நீ நாட வேண்டுமேயன்றி, நமக்குச் சொந்தம் இல்லையென்று நிச்சயப்பட்டுப் போனதை நீ மனசால் நினைப்பது கூட பெரும்பாவம் என்பது என்னுடைய எண்ணம்'' என்றாள்.

ஷண்முகவடிவு, ''அம்மா! நீங்கள் இந்த மாதிரி பேசுவது நிரம்பவும் ஆச்சரியமாக இருக்கிறது. நேற்று நான் இங்கே வந்த முதல் இதுவரையில் நீங்கள் எவ்வளவோ அழகாகவும் புத்திசாலித்தனமாகவும் பேசினீர்கள். இப்போது நீங்கள் புது மாதிரியாகப் பேசுவதைக்கேட்க, எனக்குக் கொஞ்சமும் சகிக்கவில்லை. எனக்கும் அவருக்கும் கலியாணச் சடங்குகள் எதுவும் நிறைவேறவில்லை ஆனாலும், ஒரு சமயத்தில் அவர் என்னுடைய மானத்தையும் உயிரையும் காப்பாற்றியதையும், அதுமுதல் நான் அவரையே என் புருஷராக மதித்து வந்ததையும் நான் என் மனசுள்ள வரையில் மறக்க முடியுமா? அது

ஒருநாளும் பலியாது என்பது நிச்சயம். ஏதோ கால வித்தியாசத்தினால், அவருடைய புத்தி மாறுபட்டு, அவர் அப்படிப்பட்ட தகாத காரியத்தில் இறங்கினாலும், அதனால் இனி எனக்கும் அவருக்கும் பாந்தவ்வியம் இல்லாமல் போனாலும், ஒரு தடவை அவரை நாடிய என் மனம் இனி வேறே எந்த மனிதரையும் நாடாது என்பது நிச்சயம். என் மனம் நிரம்பவும் புண்பட்டுப் பரிதவிக்கும் இந்தச் சமயத்தில் நீங்கள் மேற்படி சமாசாரத்தைப் பற்றிப் பேசுவதை விட்டு வேறு எதையாவது பேசினால், அது என் மனசுக்கு ஆறுதலாக இருக்கும். பெரியவர் மாரியம்மன் கோவிலிலிருந்து எப்போது திரும்பி வருவார்கள்? கமலத்தையும்கூட அழைத்துக்கொண்டு வருவார்களா? அல்லது, அவள் வர முடியாதிருந்தால், நானாவது நேரில் அங்கேபோய் அவளைப் பார்க்கலாமா?'' என்றாள்.

அதைக் கேட்ட லீலாவதி நிரம்பவும் புரளியாகவும், தான் அதிக விவேகமுடைய மேதாவி போலவும் பேசத் தொடங்கி, ''ஷண்முகவடிவு! உலகத்தில் பெண்களும் சரி, ஆண்களும் சரி; முதன்முதலாக ஆசைப்படும் மனிதர் தமக்குக் கிடைக்காமல் போனால், அவர்களுடைய மனசில் இப்படித்தான் ஒருவித விரக்தி உண்டாவது வழக்கம். இது கொஞ்சகாலத்தில் விலகிப் போவது நிச்சயம். புதிய மனிதர்களுடைய சிநேகம் ஏற்பட்டபோது பழைய மனிதர்களுடைய ஞாபகம் தானாகவே மறந்துபோகும். இதோ உன் அக்காளுடைய உதாரணத்தையே பார்த்துக்கொள். அவள் இந்த ஊருக்கு வருமுன் உன்னிடத்திலும், உங்கள் அத்தையினிடத்திலும், அவள் அளவற்ற பிரியமுள்ளவளாக இருந்து வந்தாள் அல்லவா? உங்களைவிட்டுப் பிரிந்து வரும்போது அவளுடைய மனசு நிரம்பவும் சஞ்சலமடைந்து வருந்தியது என்று நீயே சொன்னாய் அல்லவா? அவள் இந்த ஊருக்கு வந்து புது மனிதரைக் கண்டவுனே படிப்படியாக உங்களையெல்லாம் மறந்து

இவ்விடத்திலுள்ள புதுமனிதர்களிடத்தில் அன்னியோன்னியமாக இருந்து வருகிறாள் அல்லவா? அதுபோலவே நீயும் இங்கே வந்தபிறகு எங்களோடு அன்னியோன்னியமாகவும் அந்தரங்க சிநேகமாகவும் இருந்துவர ஆரம்பித்தால், பழைய நினைவு தானாகவே மாறிப்போகும். உன்னுடைய அக்காள் இவ்விடத்திலேயே இருக்கிறாள். நீ மாத்திரம் அத்தையை வைத்துக்கொண்டு இனி அந்த ஊரில் என்ன செய்யப் போகிறாய்? நீயோ யௌவனப் பருவப்பெண்; உலகம் பொல்லாதது; நீயும் சும்மா இருக்க, துஷ்டர்களும் துன்மார்க்கர்களும் விடமாட்டார்கள் ஆகையால், நீ அந்த ஊருக்குப் போவது உசிதமாகத் தோன்றவில்லை. இனிமேல் நீ உன்னுடைய அக்காளோடு இங்கேயே இருந்துவிடு. யாராவது தக்க மனிதரையும் வண்டியையும் அனுப்பி, உங்கள் அத்தையை இங்கே கொண்டுவந்து விடச் செய்வோம். அதன்பிறகு நீ உன் அக்காளுடைய பிரியப்படி நடந்துகொள்ளலாம்; இதோ என் பெரிய தகப்பனார் இருக்கிறார். இவர் உன் அக்காளை உயிருக்குயிராக மதித்து வருகிறார்; அது போலவே உன்னையும் காப்பாற்றி அளவற்ற பிரியத்தோடு வைத்திருப்பார் ஆகையால், நீ இனி அந்தக் கலியாண சுந்தரத்தின் நினைவை விட்டுவிடு; சந்தோஷமாக இரு'' என்றாள்.

அவளது சொற்களைக்கேட்ட ஷண்முகவடிவு என்ன மறுமொழி சொல்வது என்பதை அறியாமல் சிறிதுநேரம் தத்தளித்திருக்க, அப்போது ஒரு வேலைக்காரி வெல்வெட்டு மாடத்தின் கதவை மெதுவாகத் திறந்துகொண்டு உள்ளே வந்து லீலாவதியைப் பார்த்து, ''அம்மணீ! கீழே யாரோ ஒருவர் வந்திருக்கிறார். அவர் உங்களோடு ஏதோ அவசரமான சங்கதியைப் பற்றிப் பேசவேண்டுமாம்'' என்றார்.

அதைக்கேட்ட லீலாவதி திடுக்கிட்டு அது யாராக இருக்கலாம் என்று யூகித்துப் பார்த்தவளாய் வேலைக்காரியை நோக்கி, ''வந்திருக்கிறது ஆண்பிள்ளையா, பெண்பிள்ளையா?'' என்றாள்.

வேலைக்காரி, ''ஆண்பிள்ளைதான். நீங்கள் மாரியம்மன் கோவிலிலிருந்தபோது, உங்களுக்கும் உங்களுடைய புருஷருக்கும் அவர் பலவகையில் உதவி செய்தவராம். அவருடைய பெயரைக் கேட்டேன். அது அநாவசியம் என்று சொல்லிவிட்டார்'' என்றாள்.

லீலாவதி முன்னிலும் அதிக வியப்பும் கலக்கமும் அடைந்து சிறிதுநேரம் சிந்தனையில் ஆழ்ந்தபின் வேலைக்காரியைப் பார்த்து, ''சரி; நீ போய் அந்த மனிதரை நான் எப்போதும் உட்கார்ந்து படுத்துக்கொண்டிருக்கும் விடுதிக்கு அழைத்துக் கொண்டுபோய் அங்கேயே இருக்கச் சொல். இதோ நான் வருகிறேன்'' என்றாள்.

உடனே வேலைக்காரி அவ்விடத்தைவிட்டு வெளிப்பட்டுக் கீழே இறங்கிப் போய்விட்டாள்.

லீலாவதி ஷண்முகவடிவை நோக்கி, ''அம்மா! நீ இவ்விடத்திலேயே இரு, நான் போய் இந்த மனிதரைப் பார்த்து அனுப்பிவிட்டுக் கால்நாழிகை சாவகாசத்தில் வந்து விடுகிறேன்'' என்று கூறி அவளது அனுமதி பெற்று அவ் விடத்தை விட்டுக் கீழே இறங்கிப் போய்ப் பற்பல விடுதி களையும் மண்டபங்களையும் கடந்து, நடுமத்தியிலிருந்த தனது அந்தரங்க விடுதிக்குச் சென்றாள். தன்னைத் தேடிக்கொண்டு வந்திருக்கும் மனிதர் யாராயிருப்பார் என்று அவள் எவ்வளவோ யூகித்து யூகித்துப் பார்த்தது எல்லாம் பயன் அளிக்காமல் போயிற்று. அன்னிய மனிதர் தன்னிடம் சொல்லக்கூடிய அவசரமான சங்கதி என்ன இருக்கப் போகிறது என்ற கவலையும் கலக்கமும் தோன்றி, அவளது மனதை நிரம்பவும் சஞ்சலத்திலும் கலவரத்திலும் ஆழ்த்தி வதைத்துக் கொண்டிருந்தன. அவளது மேனி அடிக்கடி திடுக்கிட்டு நடுங்கியது. அந்த நிலைமையிலும் அவள் தனது அந்தரங்க விடுதிக்குள் நுழைந்து அவ்விடத்தில் ஆயத்தமாக நின்று கொண்டிருந்த மனிதர் யாரென்று உற்று நோக்கினாள். அதற்கு

முன் அவள் பார்சீ ஜாதி ஸ்திரீயாக வேஷந்தரித்து இளவரசரை வஞ்சித்த காலத்தில் அவர்களுக்கு உதவியாக இருந்து இளவரசரை வழிமறித்து பலவந்தமாகக் கொணர்ந்தவனும், வென்னீர் அண்டாவில் இறந்துபோன அவளது கள்ளப்புருஷரது பிணத்தைக் கொண்டு போய்க் குழியில் புதைத்தவனும், அதன் பிறகு கடைசியாகத் தங்களது பங்களாவில் அண்ணாசாமி நாயக்கன் என்ற பொய்ப் பெயர் வைத்துக்கொண்டு வந்து ஒளிந்துகொண்டிருந்தவனுமான கட்டாரித்தேவன் என்ற முரட்டுத் திருடன் தனது விடுதிக்குள் வந்து மதுரைவீரன் நிற்பதுபோல மகா பயங்கரமாக நின்றதை லீலாவதி கண்டாள். காணவே அவளது உடம்பு கிடுகிடென்று ஆடியது. குலை நடுக்கம் உண்டாயிற்று; ஸகிக்க வொண்ணாத பெருந்திகில் எழுந்து அவளது உச்சி மயிரைப் பிடித்து உலுக்கியது. மயிர்க்காலுக்கு மயிர்க்கால் வியர்வை வெள்ளம் குபீரென்று கிளம்பி அக்கினிக் குழம்பு போல அவளது சர்வாங்கத்தையும் தகித்தது. காலகோடி விஷத்தைக் கொண்ட பெருத்த நாகப் பாம்பின்மேல், கால் வழுக்கி விழுந்துவிட்டவள்போல, அவள் பெருங்கிலியும் நரகவேதனையும் அடைந்து பேரச்சத்தினால் நடு நடுங்கி முன்னால் போவதா பின்னால் போவதா என்பதை அறியாதவளாய் ஸ்தம்பித்து இரண்டொரு நிமிஷநேரம் நின்ற இடத்திலேயே வேரூன்றி அசைவற்று சித்திரப் பாவைபோலவே நின்றுவிட்டாள். அபாரமான திகிலினால் அவளது முகம் வெளுத்து விகாரக்களை அடைந்தது. அவனைப் பார்த்தவுடன், அதற்கு முன் அவன் சம்பந்தப்பட்டிருந்த பயங்கரமான சம்பவங்களின் நினைவுகள் அவளது மனதில் சடக்கென்று தோன்றி அவளது குடலைக் கலக்கின. திடீரென்று பெருத்த பேய் பிசாசு பூதங்களின் முன்னர் கொண்டு வந்து விடப்பட்டவள் போல அவள் பேசுவதற்கு நாவெழாதவ ளாகவும், நடப்பதற்குக் கால் எழாதவளாகவும், இரண்டொரு நிமிஷ நேரம் நின்றபிறகு ஒருவாறு துணிவடைந்த வளாய் அவனை நோக்கிப் பேசத் தொடங்கி, "என்ன ஐயா!

எங்கே வந்தீர்? உமக்கு என்ன வேண்டும்?'' என்று வினவினாள். அப்போது அவளது வாய் குழறியது. உச்சி முதல் உள்ளங்கால் வரையில் கிடுகிடென்று நடுங்கியது. அவள் விடுதிக்குள் போய் அங்கே கிடந்த ஒரு ஸோபாவின் மீது உட்கார்ந்து கொண்டாள்.

அவள் சொன்னதைக் கேட்ட கட்டாரித்தேவன் குறும்புத் தனமாகப் புன்னகை செய்த முகத்தினனாய் அவளை நோக்கி, ''ஏன் அம்மா! நான் யாரென்ற அடையாளம் தெரியவில்லையா? நான் உங்களுடைய பழைய மனிஷன் என்பது தெரிய வில்லையா? பழைய விசுவாசத்தை இதற்குள் மறந்து விட்டீர்களா? என்னைக் கண்டவுடனே ஏன் ஒரு மாதிரியாக முகத்தைச் சுளித்துக்கொண்டு கோபமாகப் பேசுகிறீர்கள்? நம்முடைய மனிதராயிற்றே என்ற பிரியத்தினால் நான் உங்களைக் கண்டு யோக க்ஷேமங்களை விசாரித்து விட்டுப் போகவந்தேன். அவ்வளவுதான் செய்தி. நான் உங்களிடத்தில் வேறே பெருத்த சன்மானம் எதையும் கேட்க வரவில்லை. நான் எப்போதும் உங்களைப் போன்ற பெரிய மனிதர்களுக்கு என்னாலான உதவியைச் செய்யக்கூடியவனே அன்றி எவ்விதமான தொந்தரவும் கொடுக்கக் கூடியவனேயல்ல. ஆகையால், நான் வந்ததைப் பற்றி நீங்கள் கொஞ்சமும் ஆயாசப்படத் தேவையில்லை'' என்றான்.

அவனது சொற்கள் பயங்கரமாக இல்லாமல் சாவதானமாக இருந்தன ஆகையால், லீலாவதியினது திகில் ஒருவாறு குறைந்தது. அவளது உடம்பின் படபடப்பும் தணிந்தது. அவள் மறுபடியும் நிதானமாகப் பேசத் தொடங்கி, ''சரி; அப்படியா சங்கதி! என்னுடைய க்ஷேமத்தைப்பற்றி விசாரிக்கத்தானே வந்தீர்? வேறொரு விசேஷமும் இல்லையே! அப்படியிருக்க, நீர் என்னுடைய வேலைக்காரியினிடத்தில் சற்றுமுன் செய்தி சொல்லியனுப்பிய காலத்தில் என்னிடம் ஏதோ அவசரமான காரியம் இருக்கிறது என்று சொல்லி அனுப்பினீராமே? அப்படி

ஏன் சொல்ல வேண்டும்? எனக்கும் உமக்கும் என்ன சம்பந்தம்? நீர் என் புருஷனுக்கு அறிமுகமான மனிதர் என்ற ஓர் ஆதாரத்தை வைத்துக்கொண்டு நீர் என்னோடு தனியாகப் பேச உத்தேசிப்பது ஒழுங்காகுமா? என்னோடு நீர் ஏதோ அவசரமான காரியத்தைப் பற்றிப் பேசுகிறீர் என்ற எண்ணம் இங்கேயுள்ள ஜனங்களின் மனிசல் படுமானால், அவர்கள் என்னைப்பற்றி எப்படிப்பட்ட எண்ணம்கொள்ள மாட்டார்கள்? இப்படி நீர் செய்தது கொஞ்சமும் தகுதியான காரியமல்ல. இந்தத் தடவை செய்ததுபோல நீர் இனி ஒருநாளும் செய்யமாட்டீர் என்று நினைக்கிறேன். எனக்கு அவசரமான வேறொரு காரியம் இருக்கிறது. நேரமாகிறது. நான் போகவேண்டும். நீர் என்னுடைய க்ஷேமத்தைப்பற்றி விசாரித்து விட்டுப்போக மாத்திரம் வந்திருக்கமாட்டீர் என்பது நிச்சயம் ஆகையால், நீர் என்ன கருத்தோடு இப்போது இங்கே வந்தீரோ அதைச் சீக்கிரமாகச் சொல்லும். அதிகமாக உம்மோடு பேச்சை வளர்த்திக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை'' என்று படபடப்பாகவும் அவசரப்படுத்தியும் பேசினாள்.

அதைக்கேட்ட கட்டாரித்தேவன் ரௌத்திராகாரமான கோபம் கொண்டான். அவனது கண்கள் கோவைப்பழங்கள் போலச் சிவந்தன. மீசைகள் படபடவென்று துடித்தன. இருந்தாலும் அவன் தனது வீராவேசத்தை அடக்கிக் கொண்டு நிரம்பவும் நிதானமாகவும் சாவதானமாகவும் பேசத்தொடங்கி, ''அம்மணீ! நான் இப்போது உங்கள் விஷயத்தில் எவ்விதமான பெரிய தவறும் செய்து விட்டதாகத் தோன்றவில்லை. நம்மிடத்தில் பலவிதமான உதவிகளைப் பெற்றுக்கொண்ட நமக்கு வேண்டிய மனிதர்களாயிற்றே என்ற நினைவினால் உங்களைப் பார்த்துவிட்டுப் போகவேண்டும் என்ற ஒருவித ஆசை உண்டாயிற்று. அதனால் வந்தேன். அப்படி நான் உங்களுடைய க்ஷேமத்தைப் பற்றி விசாரிக்கவும் உங்களைப் பார்க்கவும் வருவது என்னுடைய யோக்கியதைக்கு மிஞ்சிய

காரியமாக இருந்தால், நான் அந்தக் காரியத்துக்கு வந்ததாக நீங்கள் மதிக்க வேண்டாம். நான் உங்களிடம் ஓர் உதவியை நாடி வந்ததாகவே வைத்துக் கொள்ளுங்கள். அப்படி வைத்துக் கொண்டால் அது ஒரு பெரிய குற்றமாகும் என்று நான் நினைக்க வில்லை. நான் உங்களுக்கு எவ்வளவோ முக்கியமான விஷயங்களில் உதவி செய்திருக்கிறேன். அதற்குப் பதிலாக நான் உங்களிடம் ஓர் உதவியை எதிர்பார்ப்பது குற்றமாகாது அல்லவா? ஆகையால், நான் இனி உங்களிடம் வருவதும்; உங்களைப் பார்ப்பதும் உங்கள் மனசுக்குப் பிடிக்காவிட்டால், நான் கோரும் ஓர் உதவியை மாத்திரம் எனக்கு நீங்கள் செய்து விடுவீர்களானால் நான் இனி உங்கள் ஜோலிக்கே வருவதில்லை'' என்றான்.

**இதன் தொடர்ச்சி 4ம் பாகத்தில் தொடரும்.....**

சுதேசமித்திரன் 1.6.26–ம் தேதியில் எழுதுகிறது:–

# மதிப்புரை

## மாயா விநோதப் பரதேசி

*(சென்னை திருவல்லிக்கேணி கே. விஜயம் கம்பெனியின் சொந்தக்காரரான ஸ்ரீமான் வடுவூர் – கே. துரைஸாமி ஐயங்கார் எழுதியது; இரண்டு பாகங் களாய் பைண்டு செய்யப்பட்டது.*

**ஸ்ரீமான் வடுவூர் – கே. துரைஸாமி ஐயங்காரைத்** தமிழ் உலகம் நன்கறியும்; அவர் ஏற்கெனவே வெளியிட்டுள்ள பல அரிய நாவல்கள் தமிழ் நாட்டினரைப் பரவசப்படுத்தியிருக்கின்றன வென்பதிலையமில்லை. சென்ற ஒரு வருஷகாலமாக மனோரஞ்சனியில் வெளியாகி வந்த **மாயா விநோதப் பரதேசி**யென்னும் நாவலானது சென்ற மாதத்திய இதழுடன் சம்பூரணமடைந்து இப்பொழுது புத்தகரூபமாக விற்பனைக்குத் தயாரா யிருக்கிறது. மேனாடுகளில் பலரும் நம் நாட்டிற் சிலரும் சாசுவதமான நன்மையை விளைவிப்பதில் நாட்டமின்றி, தங்களுடைய நாவல் விலையாகிப் பணம் கைக்கு வரவேண்டுமென்ற ஒரே எண்ணத்துடன் சிதாவுசிதம், யுக்தா யுக்தம் முதலியவைகளைக் கவனியாது படிக்கும்போது மட்டில் ஒருவித இன்பத்தை விளைவிக்கக்கூடியதாகவும், சில சமயங் களிலும் தீய வழிகளிலும் பிரவர்த்தித்துவிடப் படிப்போரைத் தூண்டிவிடக் கூடிய வழியிலும் எழுதியிருப்பதைப் போலில்லாது நமது நூலாசிரியர் தற்காலம் நமது சமூகத்திலிருந்துவரும் குறைகளை உணர்ந்து அவை களைப் பரிகரிக்கும் நோக்கத்துடன் படிப்பவருடைய மனதில் நல்ல வழியான வாழ்வில் நாட்டம் கொள்ள வேண்டுமென்ற ஆவல் சுலபமாய் உதிக்கக்கூடிய விதமாய் எளிய நடையிலும் மனதை உருக்கக்கூடிய விதமாகவும் நாவல்களை எழுதி வெளியிட்டு வருவதற்குத் தமிழ் மக்கள் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நம் முன்னிருக்கும் இந்த நாவலில் மனித வாழ்வில் சுக துக்கங்கள் மாறி மாறி வருவது இயல்பென்பதையும், "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பதையும், "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதையும், மேனாட்டுக் கல்வி முறையினாலும் சகவாஸ தோஷத்தினாலும் ஏற்படக்கூடிய கேடுகள் இன்னவையென்பதையும் ஸத்சங்கத்தால் எவ்விதம், சரீரத்தில் வெகு காலமாக ஊறிப் போயுள்ள கெட்ட வழக்கங்களையும் சுலபமாக விட்டு விடக்கூடியது சாத்தியமென்பதையும், மனிதருடைய புத்தி யுக்தியால் எத்துணை விஷயங்களையும் எவ்விதம் சுலபமாகக் கண்டுபிடித்துவிடக் கூடுமென்பதையும் நூலாசிரியர் வெகு அழகாயும், தெள்ளிய நடையிலும் படிக்கப் படிக்க இன்பத்தைக் கொடுக்கக்கூடிய விதமாகவும் வர்ணித் திருக்கிறார். முன்னர் இந்நூலாசிரியர் வெளியிட்டுள்ள திகம்பர சாமியார்

என்ற கதையின் தொடர்ச்சியாக இக்கதையிருக்கிறது. அந்தக் கதையில் கண்ணப்பாவும், வடிவாம்பாளும், திகம்பர சாமியாரும் முக்கிய பாத்திரங் களாக விளங்கியதுபோல் இதில் கண்ணப்பாவின் சகோதரரான கந்தசாமியும், முடிவில் அவருடைய மனைவியான மனோன்மணியும், திகம்பர சாமியாரும் முக்கிய நடிகர்களாக இருக்கின்றனர். கல்வி அறிவில் கரை கடந்து மேனாட்டுப் பழக்க வழக்கங்களிலும் சம்பிரதாயங்களிலும் முழுகி, நமது புராதன தர்மங்களில் மிகுந்த வெறுப்படைந்திருந்த கதாநாயகியை கந்தசாமிக்கு மணமுடிக்க உபயகுலப் பெற்றோர்களும் தீர்மானம் செய்திருந்தும், பூர்விக தர்மங்களில் கண்ணுங் கருந்துமுடைய வனாயினும் தான் மணம் செய்து கொள்ளவிருக்கும் பெண்ணை நேரில் கண்டு அவளுடைய குணாதிசயங்களை அறிந்துவர விரும்பிய கந்தசாமி தமது நண்பரொருவருடன் அவருடைய மனைவிபோல் வேடம் பூண்டு பெண்ணைப் பார்க்கச் செல்லுவதும், கந்தசாமியின் பெற்றோருடைய குடும்பத்தாரிடத்தில் தீரா வைரம் வைத்திருந்த சிலர் தங்களுடைய க்ஷாத்திரத்தைத் தீர்த்துக் கொள்ளக் கருதி மணமகளைக் களவாட வருவதும், பெண்ணைப் பார்க்க வந்தவர்கள் சொல்லியபடி மணமகளின் குடும்பத்திற்கு அவர்கள் பந்துக்களல்லவென்பதை மணமகனின் பிதா உணர்ந்தும், அவர்களை அவர்களறியாமல் சிறை வைப்பதும், மணமகளைக் களவாட வந்தவர்கள் பெண் வேஷத்துடன் வந்திருந்த கந்தசாமியைக் களவாடிச் செல்லுவதும், அவனை சட்டநாத பிள்ளையின் சகோதரன், புருஷன் என்பதை அறியாமல் விவாகம் செய்து கொள்ளுவதும், அவனிடமிருந்து கந்தசாமி சாமர்த்தியமாக வெளிப்படுவதும், திகம்பர சாமியாருக்கு அவருடைய விரோதிகள் செய்யும் கேடுகளும் அவை களிலிருந்து அவர் தப்பி, சமயத்திற்குத் தகுந்த வேடந்தரித்து தமது நண்பர்களுக்கு உதவி செய்து வருவதும், காணாமற்போன கந்தசாமி திரும்பி வரவேண்டுமென்று அவனுடைய பெற்றோரும், உற்றாரும் தெய்வப் பிரார்த்தனை நடத்துவதும் அதுகாலை கந்தசாமியின் தகப்பனார் தெய்வத்தைத் தொழுத பாடல்களின் உருக்கமான தன்மையையும் அவைகளின் உட்கருத்தையும் உணர்ந்த மனோன்மணி தனது புத்தியை மாற்றிக் கொண்டு உத்தமப் பெண்மணியாக மாறிவிடுவதும், முடிவில் கந்தசாமி க்ஷேமமாகத் திரும்பி வந்தபிறகு இருவருக்கும் சுபமுகூர்த்தத் தில் விவாகம் நடைபெறுவதும் இந்த நாவலில் விவரிக்கப்பட்டிருக்கிறது. படிப்பவருடைய மனதில் நல்லெண்ணங்களும், தெய்வபக்தியும் சுதா வாகவே எழுந்து நவீன நாகரிகத்தில் வெறுப்பு ஏற்படக்கூடிய விதமாக இது எழுதப்பட்டிருக்கிறது. இத்துணை உயரிய நாவல்களை எழுதித் தமிழ் உலகிற்கு உதவிவரும் இந்நூலாசிரியருக்குத் தமிழ் மக்கள் தங்கள் பூர்ண ஆதரவைத் தந்து, மேன்மேலும் இத்துறையிலீடுபட அவருக்கு ஊக்கத்தைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

# ஆங்கிலத்தில் ஷெர்லாக்ஹோம்ஸ்
# நவீன காலத்தில் 007 ஜேம்ஸ்பாண்டு
# அன்றும் இன்றும் என்றும் தமிழகத்தில்

## திகம்பர சாமியார்

| | |
|---|---|
| 1. பூர்ண சந்திரோதயம் | பாகம் - 1 |
| 2. பூர்ண சந்திரோதயம் | பாகம் - 2 |
| 3. பூர்ண சந்திரோதயம் | பாகம் - 3 |
| 4. பூர்ண சந்திரோதயம் | பாகம் - 4 |
| 5. பூர்ண சந்திரோதயம் | பாகம் - 5 |
| 6. கும்பகோணம் வக்கீல் | பாகம் - 1 |
| 7. கும்பகோணம் வக்கீல் | பாகம் - 2 |
| 8. மாயா விநோதப் பரதேசி | பாகம் - 1 |
| 9. மாயா விநோதப் பரதேசி | பாகம் - 2 |
| 10. மாயா விநோதப் பரதேசி | பாகம் - 3 |
| 11. மேனகா | பாகம் - 1 |
| 12. மேனகா | பாகம் - 2 |
| 13. சௌந்திர கோகிலம் | பாகம் - 1 |
| 14. சௌந்திர கோகிலம் | பாகம் - 2 |
| 15. சௌந்திர கோகிலம் | பாகம் - 3 |
| 16. சௌந்திர கோகிலம் | பாகம் - 4 |
| 17. மதன கல்யாணி | பாகம் - 1 |
| 18. மதன கல்யாணி | பாகம் - 1 |
| 19. மதன கல்யாணி | பாகம் - 2 |
| 20. வித்யாசாகரம் | |
| 21. வசந்த மல்லிகா | |

. . . . . . இதற்கு மேலும் வருவார் !